Shenba-நீயெனதின்னுயிர்

அத்தியாயம்–1

"கடவுளே! எல்லாம் நல்லபடியா நடக்க நீ தான் வழி சொல்லணும்" பயபக்தியுடன் கண்களை மூடி பிரார்த்தனை செய்த வைஷு, கையிலிருந்த திருவுளச் சீட்டை கீழே போட்டாள்.

"ஜனனி, நல்ல சீட்டா எடுடி. நம்ம பிரச்சனைகள் எல்லாம் முடிவுக்கு வரணும்னா, நீ எடுக்கும் சீட்டில் தான் இருக்கு" உடனிருந்த தோழி ஜனனியின் காதில் முணுமுணுக்க, ஜனனி திரும்பி அவளை முறைத்தாள்.

"நானே எந்த நேரம் இந்த வார்டன் வருமோன்னு பீதியில் இருக்கேன். நாம இப்படி கும்பல் கூடி பேசிட்டு இருப்பதைப் பார்த்தால் அவ்வளவு தான் தொலைஞ்சோம் எல்லோரும்" என்றாள் பயத்துடன்.

"ஏய் பேசாமல் சீட்டை எடு. நல்ல சீட்டு வரலை நீ தொலைஞ்ச"

"என்னங்கடி அடியாள் ரேஞ்சுக்கு என்னை இந்த மிரட்டு மிரட்டறீங்க. வேணும்னா நீங்களே எடுங்க" என எடுத்த சீட்டைக் கீழே வீசினாள்.

"அப்படியே ஓங்கி குட்டினா எப்படி இருக்கும் தெரியுமா? நம்ம க்ரூபிலேயே நீ தான் சின்னப் பொண்ணுன்னு உன்னை எடுக்க சொன்னோம். ரொம்ப தான் பிகு பண்ற" என தோழிகள் நால்வரும் மாறிமாறிச் சண்டையிட, “போதும்டியம்மா உங்க சண்டையை நிறுத்தறீங்களா?” என கத்தினாள் வைஷு.

“ஜனனி, நீ கீழே போட்ட சீட்டை எடுத்துக் கொடு" என வாங்கிக்கொண்டாள்.

"உனக்காக இவங்க மூணு பேரையும் சும்மா விடுகிறேன் வைஷு" என்றபடி தன் கையிலிருந்த சீட்டை கொடுத்தாள் ஜனனி.

சுருட்டி இருந்த காகிதத்தை வைஷு மெல்ல பிரிக்க, பின்னால் நின்றிருந்த நால்வரும் "டொட்...டொ....டோயங்..." என பின்னணி இசை எழுப்பினர்.

“எதுக்கு இந்த பில்டப்?” என முறைத்தாள் வைஷு.

“ஒரு சுவாரசியத்துக்காக வைஷு” என்ற சீமாவை பார்வையாலேயே அடக்கினாள். சீட்டைப் பிரித்த வைஷாலியின் விழிகள் விரிந்த நிலையில் இருக்க, அனைவரும் எதிர்பார்ப்புடன் அவளை பார்த்தனர்.

"வைஷு! என்னடி வந்திருக்கு?” என ஆவலுடன் கேட்டனர்.

"ஹே சாமியே ஓகே சொல்லிட்டார்" என குதிக்க, தோழிகளும் அந்த ஆரவாரத்தில் இணைந்து ஆர்ப்பரித்து ஒருவருடன் ஒருவர் ஹை-பை கொடுத்துக்கொண்டனர்.

"என்ன சத்தம் இங்கே? இது ஹாஸ்டலா இல்லை மீன் மார்க்கெட்டா? படிக்கும் பசங்க தானே நீங்களெல்லாம். வைஷாலி நீயும் இதுங்க கூட சேர்ந்து உருப்படாம போகபோறியா? இந்த ராத்திரி நேரத்தில் ஒண்ணா சேர்ந்து கூத்தடிக்கிறீங்க. எல்லோரும் அவங்கவங்க ரூமுக்கு போங்க” என மிரட்டும் விழிகளை மேலும் உருட்டிக் காட்டிவிட்டுச் செல்ல,

ஐவரும் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டே தங்கள் அறைக்கு சென்றனர்.

“நாங்க மீன் மார்க்கெட்டா? உங்க எல்லாருக்கும் ஆப்பு ரெடி பண்ண தானே பிளான் போட்டுட்டு இருக்கோம்” என்ற ஜனனியின் முதுகில் செல்லமாக ஒரு தட்டு தட்டிவிட்டு, சிரித்துக்கொண்டே தங்கள் படுக்கையில் விழுந்தனர்.

கல்லூரி முழுதும் வண்ணவண்ண தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு விருந்தினரின் வருகைக்காக காத்திருந்தனர். கல்லூரியின் பொது செயளாலரான வைஷாலி எதிர்பார்ப்புடன் காத்திருந்தாள்.

அடுத்த சில நிமிடங்களில் பளபளவென மினுமினுப்புடன் வந்து நின்ற ஆடம்பர வெளிநாட்டுக்காரிலிருந்து, ஒரு ராஜகுமாரனைப் போல இறங்கினான் செந்தளிர் க்ரூப் ஆப் கம்பெனிசின் சேர்மனும், செந்தளிர் கலைக்கல்லூரி டிரஸ்ட்டின் தலைவனுமான விக்ரம்.

கல்லூரி சார்பில் கொடுத்த வரவேற்பை ஏற்றுக்கொண்டவன் தன் செக்ரட்டரியிடம் ஏதோ பேசிக்கொண்டே கல்லூரி அலுவலக அறைக்குள் சென்றான்.

அவர்களின் பின்னாலேயே சென்ற வைஷாலி, கல்லூரி முதல்வர், உடனிருக்க அவனை எப்படி அணுகி பேசுவது என புரியாமல் வராண்டாவிலேயே நின்றாள். சிறிது நேரத்தில் மொபைலில் பேசிக்கொண்டே வெளியே வந்த விக்ரமின் செக்ரட்டரின் பின்னாலேயே சென்றாள்.

போன் பேசிமுடித்து திரும்பியவன் தன் பின்னால் நின்றிருந்தவளைப்

பார்த்து புருவம் சுளிக்க, "என்ன வேண்டும் மிஸ்?" என்றான்.

"சார்! விக்ரம் சாரை பார்த்து ஒரு ஐந்து நிமிஷம் பேசணும். ப்ளீஸ்..." என்றாள்.

"ஐந்து நிமிஷமா! சான்சே இல்லை. எங்க விக்ரம் சார் எவ்வளவு பிசி தெரியுமா?" என்றான்.

அவனை ஏற இறங்க பார்த்தவள், "மூணு மணிநேர ப்ரோக்ராம் பார்க்க வந்தவர், எங்களுக்காக ஒரு ஐந்து நிமிடம் ஒதுக்க மாட்டாரா? நீங்க கொஞ்சம் கேட்டுப் பாருங்களேன்" என்றாள்.

பவ்யமாக சொல்வது போல இருந்தாலும் அவளது நக்கலான பதிலை கேட்டவன், முகத்தில் அடித்தார் போல, "அதெல்லாம் இப்போது நேரம் இல்லை. ப்ளீஸ் என்றவன், மொபைலில் ஏதோ ஒரு நம்பரைத் தட்டி பேசியபடியே சென்றான்.

அவனை எரிச்சலுடன் பார்த்தபடி நின்றிருந்தவளை, "என்னடி வைஷு?" என்றபடி தோழிகள் சூழ்ந்து கொண்டனர்.

"ம், சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்காதாம். அந்தக் கதைதான் இங்கே நடக்குது. என்ன ஆனாலும் சரி. இன்னைக்கு விக்ரம் சாரைப் பார்த்து பேசியே ஆகணும்" என்றவள் ஒரு பேப்பரை எடுத்து தங்களின் கோரிக்கைகளையும், பிரச்சனைகளையும் எழுதி தன் கையில் வைத்துக் கொண்டாள்.

நிகழ்ச்சி முடிந்ததும் எப்படியாவது விக்ரம் கையில் சேர்த்துவிடவேண்டும் என்ற முடிவுடன் மேடையை நோக்கி நடந்தாள்.

ஆனால், விழா முடியும் முன்பே முக்கியமான வேலை என பாதியில் கிளம்பிவிட்டான்.

நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிக் கொண்டிருந்த வைஷாலிக்கு அவனை எப்படி அணுகுவது என புரியவில்லை. இப்போது பாதியில் கிளம்பிவிட, தங்கள் பிரச்சனைகளை அவனிடம் எப்படி சொல்வது?' என புரியாமல் தவித்தாள்.

விழா முடிந்த பிறகும் அவளுக்கு அதே நினைவு தான். 'போனில் அத்தனை சீக்கிரம் அவனிடம் பேசிவிட முடியாது. இந்த செகரட்டரி மாதிரி, எத்தனை நந்தி குறுக்க நிக்குமோ! அவனோட மெயில் அட்ரஸ் கிடைத்தால் கூட போதுமே... எப்படி யாருகிட்ட வாங்குவது' என்று யோசித்தவளுக்கு, அவனது கம்பெனியின் மின்னஞ்சல் முகவரி நினைவிற்கு வந்தது. சற்றும் தாமதிக்காமல் அப்போதே அவனுக்கு விளக்கமாக ஒரு மெயிலை அனுப்பி வைத்தாள்.

"வைஷு நீ மெயில் அனுப்பி ஒரு வாரம் ஆகியாச்சு. இதுவரைக்கும் எந்த முன்னேற்றமும் இல்லையே?" என்றாள் ஜனனி.

"அதுக்குள்ளே எப்படிடீ தெரியும்? அதுல இருக்கறதெல்லாம் உண்மையா இல்லையான்னு அவங்க விசாரிச்சு தெரிஞ்சிக்கணும் இல்ல?" என்றாள் மாலினி.

"தெரிஞ்சிக்கணும் என்று நினைச்சா இந்த நேரம் என்னை அவங்க யாராவது காண்டாக்ட் பண்ணி இருக்கணுமே. என் போன் நம்பரும் கொடுத்திருந்தேனே. எனக்கென்னவோ விக்ரம் சார் இன்னும் மெயில் பார்த்திருக்கமாட்டார்ன்னு தான் தோணுது" என்ற தன் சந்தேகத்தைச் சொன்னாள் வைஷாலி.

"ஆமாம் அப்படியும் இருக்கலாம்" என தோழிகள் ஆமோதித்தனர்.

"இதுக்கு ஒரே வழி, நாம நேராக அவரோட ஆஃபீஸிலேயே போய் மீட் பண்ணுவது தான்."

"என்ன சொல்ற வைஷு? ஆஃபீஸ்ல போய் பேசணுமா? இதெல்லாம் நம்ம பிரின்சிக்கு தெரிந்தால் அவ்வளவு தான்" என்றாள் மாலினி.

"இல்லை, இது தான் சரி. நான் டிசைட் பண்ணிட்டேன். நாளைக்கே போறேன். தைரியம் இருக்கவங்க என்னோட வரலாம்" என்றாள்.

"நான் வருகிறேன் வைஷு" என உடனே பதிலளித்தாள் ஜனனி.

அத்தியாயம் - 2

“செந்தளிர் குரூப் ஆஃப் கம்பெனீஸ்…” பெயர் பலகையைப் பார்த்து உரக்க வாசித்தாள் ஜனனி. “வைஷு! எவ்வளவு பெரிய கேம்பஸ்டீ” என்றாள் வியப்புடன்.

“இடம் பெரிசா இருக்கறதும், ஆள் வசதியாக இருக்கறதும் பெரிசு இல்லை. மனசு பெரிசா இருக்கணும்” என்றாள் வைஷாலி.

“ச்சூச்சூ! தத்துவம்… வைஷாலி மாதாஜி” என பதிலுக்கு கேலி செய்தாள் ஜனனி.

“போதும் வாயை மூடிகிட்டு வாடீ” என்றவள், உள்ளே செல்ல முயன்றாள்.

வாசலில் இருந்த காவலாளி, “மேடம் யாரை பார்க்கணும்?” என கேட்டான்.

“விக்ரம் சாரை பார்க்கணும்” என்றாள்.

“விக்ரம் சார் இப்போதான் வெளியே கிளம்பினாங்க. அதோடு அவரைப் பார்க்க அப்பாயின்மெண்ட் வாங்கியாச்சா?” என கேட்டான்.

அடடா இதை எப்படி மறந்தேன்’ என நினைத்துக்கொண்டவள், “சாரி பெர்மிஷன் வாங்கலை. அவசரமாக பார்க்கணும். எப்போ அவரைப் பார்க்கலாம்?”

“அப்பாயின்மெண்ட் வாங்கிக்கிட்டு போங்க. இல்லைனா ஈவ்னிங் ஏழு மணிக்கு மேல் வாங்க” என்றான்.

ஜனனியிடம் திரும்பி இதெல்லாம் ஆகாத வேலைடீ. எட்டு மணிக்குள் ஹாஸ்டலுக்கு போய் சேரணும். பேசாம அவரோட வீட்டுக்கு போய் பார்க்கலாமா? என கேட்டாள்.

“ஐய்யையோ! வேணாம் வைஷு” என அலறினாள் ஜனனி.

“நமக்கு வேலை ஆகணும் அவ்வளவு தானே. இரு நான் கேட்கறேன்” என்றவள் காவலாளியிடம் “அவரோட வீடு ஆனந்த் தீர்த் நகரில் தானே இருக்கு அங்கே போனால் பார்க்கலாமா?” என கேட்டாள்.

“சாரி மேடம். சார் வீட்டில் யாரையும் பார்க்க வர்றதை விரும்ப மாட்டார். முக்கியமாக லேடீஸ் நாட் அலௌட்” என்றான் ஒருமாதிரி

கிண்டலாக.

‘ஏன், உங்க முதலாளி என்ன விஸ்வாமித்திரரோட மறு அவதாரமா’ என வாய்வரை வந்த வார்த்தைகளை, அப்படியே உதடுகளை இறுக மூடி உள்ளுக்குள் அடக்கினாள்.

‘இத்தனை தூரம் வந்து எதுவும் பிரயோஜனம் இல்லாமல் போய்விட்டதே’ என்ற சலிப்புடன், “ஹாஸ்டலுக்குப் போயிடலாமா ஜனனி?” என கேட்டாள்.

“காரியத்தைக் கெடுத்த போ! அங்கே போய் நாலு சுவத்தையும் எத்தனை நேரம் பார்க்கறது. அந்தக் கொடுமைக்குத் தானே உன்கூட வரேன்னு வந்தேன்” என பதறியவளை, ‘தெரியும்டீ கண்ணு உன்னைப் பத்தி’ என்பது போல பார்த்தாள் வைஷாலி.

“சரிசரி விடு. இதெல்லாம் சகஜம்” என சாமாளித்த ஜனனி, “ஒண்ணு பண்ணலாம், இப்படியே சென்ட்ரல் மாலுக்கு போய் ஒரு சுத்து சுத்திட்டு, கொஞ்சம் திங்க்ஸ் வாங்க வேண்டியது இருக்கு இல்ல, அதையும் வாங்கிக்கலாம்” என யோசனை சொன்னாள்.

வைஷாலிக்கும் அது சரியாகப்படவே இருவரும் கிளம்பி புனே ரயில் நிலையம் அருகிலிருக்கும் சென்ட்ரல் மாலுக்கு வந்தனர்.

இரண்டு மணிநேரம் மால் முழுவதையும் சுற்றி, தங்களுக்குத் தேவையானவற்றை வாங்கிக்கொண்டாள் ஜனனி. வைஷாலி தனக்குப் பிடித்த பாடகர்களின் சி.டிக்களை வாங்கிக்கொண்டு கடையிலிருந்து வெளியில் வந்தவளின் பார்வை, யாரையோ பார்த்து கையசைத்து விடைபெற்று லி∴ப்டில் ஏறிய விக்ரமின் மீது பட்டது.

“ஏய் ஜனனி...! அங்கே பாருடி...” என லி்ப்டை சுட்டிக்காட்ட, அதற்குள் மேலேறிய லி்ப்ட்டை பார்க்காத ஜனனி நிதானமாக, “யாருடி?” என எட்டிப் பார்த்தாள்.

”போடீ இவளே! விக்ரம் சாரிடீ” என்றாள் எரிச்சலுடன்.

“விக்ரம் சாரா எங்கே எங்கே?” என்றாள் அவசரமாக.

“உனக்காக அவர் இங்கேயே நின்னுட்டு இருப்பாரா? வாடி சீக்கிரம். அவரை மிஸ் பண்ணிடப் போறோம்” என கீழே வந்து நின்ற லி்ப்டில் வேகமாக ஏறினாள்.

“வெளியே வந்தா கொஞ்சம் சுத்தி நடப்பதை கவனி. கிரைண்டர் மாதிரி கால் கிலோ பாப்கார்னை ஒண்ணா சாப்பிட்டா விளங்கும்” என தலையிலடித்துக் கொண்டாள்.

மூன்று தளத்தில் அவன் எங்கே இருக்கிறான் என தெரியாமல் தேடினர்.

“வைஷு! அதோ ்புட் கோட்” என பாப்கார்னை வாயிலைடைத்தபடி சொன்ன ஜனனியை முறைத்தாள்.

“உன்னை என்ன செய்தால் தகும். நல்ல சான்சை மிஸ் பண்ணிட்டேனேன்னு தவிச்சிகிட்டு இருக்கேன். இதுல நேரம் காலம் தெரியாம விளையாடுற” என திட்டிக்கொண்டிருந்தாலும், காரியத்தில் கண்ணாக கண்கள் அந்த இடத்தை அங்குலம் அங்குலமாக அலசியது.

வாயிலிருந்த பாப்கார்னை விழுங்கியவள், “நீ என்கிட்ட அடிபட போற பாரு. விக்ரம் சார் ஃபுட் கோட் உள்ளே போறார்ன்னு சொல்ல வந்தேன்” என்றாள் கோபத்துடன்.

“அப்படியா!” என ஜனனியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, நான்காகவது தளத்திலிருந்த ஃபுட் கோட்டை நோக்கி ஓடினாள். கண்ணாடிக் கதவை திறந்து உள்ளே நுழைந்தவள் அங்கே கண்ட காட்சியில், “ஆஹ்! என விழிவிரித்து நோக்கியவள், பட்டென திரும்பி நின்று கொண்டாள்.

அதே அதிர்வுடன் நின்றிருந்த ஜனனியை வெளியே இழுத்துக் கொண்டு வந்தவளுக்கு நிதானமாக மூச்சுவிட சற்று நேரமானது. அங்கே நிற்கவே முடியாமல் வேகமாக மாலிலிருந்து வெளியே வந்தாள்.

வழியெல்லாம் பு;லம்பியபடி வந்த ஜனனியின் பேச்சை காதில் வாங்காமல் ஹாஸ்டலுக்கு வந்து சேந்தாள். என்ன ஆயிற்ரு என கேட்ட தோழிகளுக்கு ஜனனி சுவாரசியமாக பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

“ஷ்! நம்ம வைஷு பயங்கர டென்ஷன்ல இருக்கா. போன வேலை முடியலை. ஆனா, சூப்பரா ஒரு ரொமாண்டிக் லவ் சீன் பார்த்துட்டு வந்திருக்கோம்” என்றவள் கலகலவென நகைத்தாள்.

“ஏய்! என்னடி விஷயம்” என்ற தோழிகளின் ஆர்வத்தை ரசித்தபடி, “ம், எல்லாம் நம்ம விக்ரம் குமார் சௌத்ரி தான். முதல்ல எனக்கும் பக்குன்னு தான் இருந்துச்சி அப்புறம் ஹா ஹா ஹா” என்று தாங்க

முடியாமல் சிரித்தாள்.

“ஹே! என்னது என்னது?” என நச்சரித்தனர்.

“சொர்க்கம் மதுவிலே சொக்கும் அழகிலே…” என ஜனனி பாட ஆரம்பிக்க, அடுத்த வரிகளை மற்றவர்கள் சேர்ந்து பாட கொல்லென சிரிப்பொலி எழுந்தது.

கட்டிலில் கவிழ்ந்து படுத்திருந்த வைஷாலி தலையை திருப்பி, “ஏய், இல்லாததையெல்லாம் அளந்துவிடாதே” என்றாள் கடுப்புடன்.

”ஏன் ஏன் உனக்கேன் இத்தனை கோபம் வருது?” என்றாள் மாலினி.

”சில்லியாக பேசாதே” என தலையணையை தூக்கி மாலினி மீது வீசினாள்.

“ஹை ஹை விக்ரம் சாரை சைட் அடிக்கிறியா!” என்ற ராகினியை முறைத்தாள்.

“விகரமை யாருக்கும் பெர்சனலா தெரியாது. அவரை பத்தி தெரியாமல் தப்பா -பேசாதேன்னு சொன்னேன். அதோடு அவங்க எப்படி இருந்தால் நமக்கென்ன? ஒருத்தரோட சொந்த விஷயத்தைப் பற்றி பேசவோ கருத்து சொல்லவோ நமக்கு எந்த அதிகாரமும் கிடையாது, உரிமையும் கிடையாது” என்றாள்.

விஷமப் புன்னகியுடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்ட தோழிகள், “ஓகே, ஓகே. கூல் டவுன். இனி இப்படி பேசலை போதுமா” என்றனர்.

“ம்” என தலையசைத்தவள், “நான் கொஞ்சம் வெளியே போய் வரேன்” என்று அறையிலிருந்து வெளியேறினாள்.

அத்தியாயம் - 3

“இளம் தொழில் அதிபரின் காதல் அரங்கேற்றம். இளம் பெண்களின் கனவு காதலன். நான்கே ஆண்டுகளில் தொழில் சாம்ராஜியத்தில் தனக்கென தனி முத்திரை பதித்தவர். செந்தளிர் குழுமத்தின் உரிமையாளர் விக்ரம் குமார் சௌத்ரியின் காதல் லீலைகள். இது உண்மையா? அல்லது எப்போதும் தன்னை முன்னிலைப் படுத்திக் கொள்ள அவர் செய்யும் தந்திரமா?”

கல்லூரி விட்டு வரும்போதே, ஹாஸ்டல் விசிட்டர் அறையிலிருந்த செய்தித்தாளைக் கொண்டு வந்த ராகினி, முதல் பக்கத்திலிருந்த சூடான செய்தியைப் பார்த்ததும், வைஷாலியின் காதில் விழும்படி சப்தமாகப் படித்தாள்.

அடுத்த வரியை அவள் படிப்பதற்குள், அவளது கையிலிருந்த செய்தித்தாளைப் பிடுங்கிக் கொண்டாள் வைஷாலி. விக்ரமை கட்டியணைத்து ஒரு பெண் முத்தமிடும் புகைப்படத்தைக் கடமையாக முதல் பக்கத்தில் வெளியிட்டிருந்தனர்.

முன்தினம் மாலில் அவள் கண்ட அதே காட்சிதான். ‘நாட்டுல எத்தனையோ பிரச்சனைகள் இருக்கும் போது, இவங்களுக்கு இது தான் முக்கியமா படுதா!’ என எரிச்சலுடன் நினைத்துக் கொண்டாள் வைஷாலி. எதுவும் பேசாமல் யோசனையுடன் இப்படியும் அப்படியுமாக

நடந்தாள்.

ராகினியும், மற்றவர்களும் அமைதியாக கைக்கட்டி நின்று, வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவசரமாக கைப்பையில் மொபைல் போனையும், ஐடி கார்டையும் திணித்துக் கொண்டு, யாரிடமும் எதுவும் சொல்லாமல் கிளம்பினாள்.
“இத்தனை வேகமா எங்கேடீ போறா?” என்ற ஜனனி புரியாமல் விழித்தாள்.

“இதுகூடவா தெரியலை. எல்லாம் தொழில் சாம்ராஜ்ஜியத்து இளவரசரை பார்க்கத்தான்” என கேலியாக புன்னகைத்தாள் ராகினி.

விக்ரமின் அலுவலகத்திற்கு முன்பாக வண்டியை நிறுத்தியவள், காவலாளியிடம், “ஹலோ!” என்று புன்னகைத்தாள்.

அவனும் அவளைப் பார்த்துச் சிரித்து, “ஹலோ மேடம்” என்றான்.

“இன்னைக்கு இருக்காரா உங்க சேர்மன்” புன்னகையுடன் வினவியபடி, அங்கிருந்த பதிவேட்டில் கையெழுத்திட்டாள்.

“எங்க சார் கரெக்ட் டைமுக்கு இருப்பார். நீங்க அப்பாயின்மெண்ட் வாங்கிட்டீங்களா மேடம்?” என கேட்டான்.

“ஓ! ரெண்டு மணிக்கு அப்பாயின்மெண்ட். இன்னும் பத்து நிமிஷம் இருக்கு. நாங்களும் டைம் கீப்அப் பண்ணுவோமில்ல” என சிரித்துவிட்டு அலுவலகத்திற்குள் நுழைந்தாள்.

அலுவலகம் தூய்மையாக பளிச்சென இருந்தது. கதவைத்

தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தவளை, எதிரிலிருந்த ரிசப்ஷன் பெண் புன்னகையுடன் வரவேற்று, “குட் மார்னிங் மேடம். வெல்கம் டூ செந்தளிர் குரூப் ஆஃப் கம்பெனீஸ். கேன் ஐ ஹெல்ப் யூ!” என வினவினாள்.

பதிலுக்குப் புன்னகைத்தவள், “குட்மார்னிங். உங்க சேர்மனைப் பார்க்கணும்” என்றாள்.

”எக்ஸ்கியூஸ் மீ. சார் இப்போ யாரையும் பார்க்க மாட்டாங்களே…” என்றாள்.

“இல்லை அவர்தான் என்னை வரசொல்லியிருக்கார்” என்றாள்.

“இருக்காதே ரெண்டிலிருந்து ரெண்டரை வரை சார் ரிலாக்ஸ் பண்ற நேரம். அந்த நேரத்துல யாரையும் பார்க்கமாட்டாங்க” என்று பதிலளித்தாள்.

‘அப்படி என்ன வெட்டி முறித்தார் உங்க சேர்மன்!’ என்று தோன்றிய எண்ணத்தை முகபாவத்தில் வெளிக்காட்டாமல், “இல்லை அவர் சொல்லி தான் வந்திருக்கேன். என்னை உள்ளே அனுப்பலைனா நீங்க தான் உங்க பாஸுக்கு பதில் சொல்லணும்” என்றாள்.

நம்பமுடியாமல் வைஷாலியைப் பார்த்த ரிசப்ஷன் பெண், “ஒரு நிமிடம் மேடம், நான் செக்ரட்டரி சாரிடம் கேட்டுகிறேன். கொஞ்சம் வெயிட் பண்ணுங்க” என்றவள் விக்ரமின் செக்ரட்டரியை தொடர்புகொண்டாள்.

விஷயத்தை அவனிடம் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, அங்கிருந்து

மெல்ல நழுவினாள் வைஷாலி.

அவளைக் கவனித்து, “மேடம்…” என்று குரல் கொடுத்த ரிஷப்ஷன் பெண்ணை அசட்டை செய்துவிட்டு, வேக நடையுடன் ஹாலின் கண்ணாடிக் கதவைத் திறந்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

அவள் பாதி ஹாலைக் கடக்கும் போதே விக்ரமின் செகரட்ரி தன் அறையிலிருந்து வெளியே வந்து அவள் முன்பாக நின்றான்.

“ஹலோ! எங்கே வந்தீங்க? இப்படி அனுமதி இல்லாமல் வரக்கூடாதுன்னு தெரியாது உங்களுக்கு. எதுக்கு இப்படி அடாவடித்தனம் பண்றீங்க?” என கேட்டான்.

“ப்ளீஸ் சார் ஒரு பத்து நிமிடம் சாரைப் பார்த்து பேசிட்டு போயிடுறேன். இது ரொம்ப முக்கியமான விஷயம் சார்…” என்றாள் கெஞ்சலாக.

“ம்ச்சு! ஒருமுறை சொன்னால் புரியாதா உங்களுக்கு” என அவன் எரிச்சலுடன் கேட்க, வைஷாலிக்கும் கோபம் வந்தது.

“அதையே தான் நானும் சொல்றேன். ஒருமுறை சொன்னால் புரியாதா உங்களுக்கு?” என உரக்கப் பேசினாள். மொத்த அலுவலகமும் ஆர்வத்துடன் இருவரையும் பார்த்தது.

“இங்கே பாருங்க செகரட்ரி சார்! எடுத்த வேலையை ஒழுங்காக செய்யத் தெரியாத உங்க சேர்மன் அப்படி என்னத்த கிழிச்சிட்டு ரெஸ்ட் எடுத்துகிட்டு இருக்கார்” என சப்தமிட்டவள், “இர்ரெஸ்பான்சிபிலிட்டி பெர்சன்” என முணுமுணுத்தாள்.

“மேடம், மைண்ட் யுவர் வேர்ட்ஸ்…” என கோபமாக குரலுயர்த்தியவனை, “ராகவன்! அங்கே என்ன பிரச்சனை” என்று கேட்ட விக்ரமின் குரல் தடுத்தது.

தனது அறையின் வாசலருகில் நின்றிருந்த விக்ரமை பார்த்தாள் வைஷாலி. ரோஜா வண்ண சல்வாரில், கலைந்த தலைமுடி நெற்றியில் புரள, நீண்ட விழிகளின் இமைகள் கோபத்தில் விரிந்திருக்க, உதட்டைச் சுழித்து நின்றிருந்தவளை, கண்கள் இடுங்க பார்த்தான்.

விக்ரமின் செகரட்டரி ராகவன் பவ்யமாக, சார்! இவங்க நம்ம காலேஜ்…” என ஆரம்பித்தவனை, கைநீட்டி தடுத்தான்.

“வெயிட் ராகவன், நான் பேசிக்கிறேன்’ என்றவன் வைஷாலியிடம், “ப்ளீஸ் கம் இன்” என்றான்.

ஒதுங்கி நின்ற ராகவனை முறைத்துவிட்டு, விக்ரமின் அறைக்குச் சென்றாள்.

“உட்காருங்க மிஸ்…”

“வைஷாலி…” என்றாள் அழுத்தமாக.

லேசாக முறுவலித்துக் கொண்டவன், “சொல்லுங்க என்ன விஷயமாக என்னைப் பார்க்க வந்தீங்க?” என கேட்டான்.

“நான் எஸ்.எஸ்.வீ காலேஜில் எம்.எஸ்சி மேத்ஸ் ஃபைனல் இயர் படிக்கிறேன்” என்றவளின் குரலில் கோபம் சிறிதும் குறையவில்லை.

“ஓ! அந்தக் காலேஜில் படிப்பது இவ்வளவு கோபப்படும் அளவுக்கு இருக்கா என்ன?” என்றவன் தன்னை கிண்டல் செய்கிறான் என புரிந்தது.

பதிலுக்கு பேச்சை வளர்க்காமல் தன் வேலையில் கவனமானாள். “சார், உங்க தாத்தா காலத்தில் ஆரம்பித்த காலேஜ்; அவர் அதுக்கு பிறகு உங்க அப்பா, இவங்க பொறுப்பில் இருந்த வரைக்கும் எல்லாமே நல்லாவே நடந்து கொண்டு இருந்தது. ஆனால், நீங்க ஆரம்பித்த பிசினஸை மட்டும் நல்லா பார்த்து வளர்த்தா போதுமா?

ஒண்ணு இந்தக் காலேஜ் நம்ம பொறுப்பில் இருக்கே என்ற அக்கறையில் நிர்வாகம் பண்ணனும். அப்படி இல்லைனா தான் ஒப்படைத்த ஆள் தறம்பட நடத்துறாரா என்ற அளவுக்காவது அவ்வப்போது கண்காணிச்சிருக்கணும். ரெண்டும் இல்லாமல் இத்தனை பேரோட எதிர்காலத்தை ஏன் கேள்விக்குறி ஆக்கறீங்க?” என்றாள் அடக்கப்பட்ட கோபத்துடன்.

சுழல் நாற்காலியில் ஒரு பக்கமாக திரும்பி அமர்ந்து, வலது முழங்கை டேபிள் மீதும், இடது கையை முகவாயில் வைத்துக் கொண்டு, கால் மீது கால் போட்டு, அவள் சொல்வதை கவனமாக கேட்டுக் கொண்டிருந்தான். “சொல்ல வர்றதை கொஞ்சம் தெளிவாக சொன்னால் நல்லா இருக்கும்” என்றான் விக்ரம்.

“சார்! எத்தனையோ பேருக்கு இந்த படிப்பு தான் சோறு போடணும். நல்ல கிளாஸ் ரூம்ஸ், லேப் கிடையாது. புதுசாக வந்த ப்ரொஃபசர்ஸ், லெக்சரர்ஸ் சரியாக இல்லை. அடிப்படை வசதி கூட சரியாக இல்லை. ஹாஸ்டல் லட்சணம் அதுக்கு மேல... சாப்பாடு முதல் குடிக்கும்

தண்ணீர் வரைக்கும் வாயில் வைக்க முடியறதில்லை.

இவ்வளவு எதுக்கு சார்… நைட்ல எங்களுக்கு ரூம்ல இருக்கவே பயம்மா இருக்கு. திடீர்னு யாரோ காம்பவுண்ட் சுவத்து மேலா ஏறி கத்தறது, கல்லை கதவு மேல விட்டெறியறாங்க. ஹாஸ்டல் போனில் யார் பேரையாவது சொல்லி கூப்பிட்டு… சே… சொல்லவே கூசுது" என்றவளின் முகம் சுருங்கியது.

"இதையெல்லாம் வார்டனிடமோ, ப்ரின்சிபலிடமோ கம்ப்ளெயிண்ட் செய்தால், அவங்க எங்களைத்தான் குறை சொல்லி அசிங்கப்படுத்தறாங்க…" என்றாள்.

அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த விக்ரமின் முகம் கடினமாக மாறியிருந்தது. இறுகியக் குரலில் சாரி மிஸ்.வைஷாலி. இத்தனைப் பிரச்சனையையும் இந்த நான்கு வருடத்தில் ஒரு முறைகூட என் கவனத்துக்கு வரவில்லை. ரியலி சாரி" என்றான்.

அவனது வருத்தம் தோய்ந்த குரலையும் முகத்தையும் பார்த்தவளுக்கு ஆறுதலாக இருந்தது. "இதையெல்லாம் எழுதி உங்களுக்கு மெயில் கூட அனுப்பினேன்" என்றாள்.

"அப்படியா! முக்கியமான மெயில் தவிர மற்றது என் பார்வைக்கு வராது. டோண்ட் வொரி. இனி இப்படி எந்த தவறும் நடக்காமல் பார்த்துக்கறேன். தேவையான நடவடிக்கையை உடனே எடுக்கிறேன்" என்றான்.

"தேங்க்யூ சார்!" என சந்தோஷமாக சொன்னவள், "உங்களை நம்பலாமா?" என குறும்புடன் கேட்டாள்.

“நம்பித்தான் ஆகணும். வேற வழியே இல்லை” என அவனும் இலகுவாக புன்னகைத்தவன், இண்டர்காமில் தன் செகரட்டரியை அழைத்தான்.

“ராகவன், நாளைக்கு காலைல பதினோரு மணிக்கு எந்த ப்ரோக்ராம் இருந்தாலும் கேன்சல் பண்ணிடுங்க. நம்ம ட்ரஸ்ட் மெம்பர்ஸ் அத்தனை பேருக்கும் மெயில் அண்ட் போன் மூலமா மீட்டிங் இருக்குன்னு தகவல் சொல்லி வரசொல்லுங்க. அதுக்கான ஏற்பாட்டை நீங்க செய்திடுங்க” என்று தனது உத்தரவை பிறப்பித்தான்.

“மிஸ்.வைஷாலி இப்போ சந்தோஷமா?” என்றான் சிரிப்புடன்.

“ரொம்ப தேங்க்ஸ் சார்” என்றவள் கடைக்கண்ணால் ராகவனைப் பார்த்தாள். ‘உன்னை மாட்டிவிடாமல் போறதில்லை’ என மனதிற்குள் சொல்லிக்கொண்டவள், “சார் நீங்க காலேஜ் ஃபங்ஷனுக்கு வந்த போதே உங்ககிட்ட பேசணும்னு இவர்கிட்ட சொன்னேன் சார். ஆனால், இவர் முடியாதுன்னு ஒரேயடியாக மறுத்துட்டார். அநேகமா என்னோட மெயிலை கூட இவர்தான் உங்களுக்கு தெரியபடுத்தியிருக்க மாட்டார். முதல்ல நீங்க ஒரு நல்ல செகரெட்டரியை தேடி கண்டுபிடிங்க” என சொல்ல, விக்ரம் வாய்விட்டு சிரித்தான்.

காதில் புகைவராத குறையாக ராகவன் உர்ரென்ற முகத்துடன் நின்றிருக்க, விக்ரம், “ராகவன் அப்படிபட்டவர் இல்லை. அவருக்கு கீழே இருக்கவங்க வேலைதான். நான் உடனே இதைக் கவனிக்கிறேன்” என்றான்.

”ஓகே சார் நானும் உங்களோட ரிலாக்சேஷன் டைமை எடுத்துகிட்டேன்

சாரி சார். என்னை நம்பி காலேஜ் ஜெனரல் செகரட்டரியாக நியமிச்சவங்களுக்கு, நான் நல்லது பண்ணிட்டேன்னு சந்தோஷப்படுறேன் சார்.

“வெரிகுட்” என புன்னகைத்தவன், “ரெண்டு நிமிஷம் இருங்க டீ சாப்டுட்டு கிளம்புங்க” என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே மூவருக்கும் டீ வந்து சேர்ந்தது.

மூவரும் நாசுக்காக டீயை சுவைத்துக்கொண்டிருக்க, வைஷாலி தயக்கத்துடன் விக்ரமை பார்த்தாள்.

“என்னவோ கேட்கணும்னு நினைக்கிறீங்க கேளுங்க” என அவளை ஊக்கப்படுத்தினான் விக்ரம்.

“இல்ல இன்னைக்கு உங்களைப் பத்தி பேப்பரில் ஒரு விஷயம்…” என்றவள் ராகினி படித்த செய்தியை சொன்னாள்.

விட்டேத்தியாக புன்னகைத்தவன், “அதை மட்டும் தான் பார்த்தீங்களா இதை பார்க்கலையா…?” என்று தனக்கருகிலிருந்த டேபிள் மீதிருந்து ஒரு பேப்பரை பிரித்து அவளெதிரில் நீட்டினான்.

‘காதலர்களின் ஊடல் பொது இடத்தில் அரங்கேற்றம்’ என்று தலைப்பிட்டு, விக்ரம் தன்னை முத்தமிட்ட பெண்ணை தள்ளிவிடுவது போன்று இருந்த போட்டோவை பிரசுரித்திருந்தனர். என்ன சொல்வதென தெரியாமல் அவனைப் பார்த்தாள். அவனோ எதுவுமே நடக்காதது போல சிரித்துக்கொண்டு அமர்ந்திருந்தான்.

“இதுக்கு நீங்க மறுப்போ, கண்டனமோ சொல்லலியா சார்!” என

கேட்டாள்.

“எதுக்கு சொல்லணும்?” என்றவனை வியப்புடன் பார்த்தாள்.

“சார் நான் உங்களைப் பற்றி ஓரளவுக்கு கேள்விபட்டிருக்கேன். இப்படிபட்ட விஷயமெல்லாம், உங்க வாழ்க்கையை பாதிக்கத் தானே செய்யும்?”

“என்னைக் காட்சிப் பொருளாக்கி அவங்க விளம்பரம் தேடிக்கிறாங்க. போகட்டும். எனக்கு இருக்கும் வேலையில் இந்த டென்ஷனைத் தலையில் சுமக்க எனக்கு விருப்பமும் இல்லை. இதையெல்லாம் நினைத்து கவலைப்பட நேரமும் இல்லை. யாருக்காகவும் என்னை நியாயப்படுத்திக்க எனக்கு பிடிக்காது. என்னைச் சேர்ந்தவங்களுக்கு என்னைப் பற்றித் தெரியும். அது போதும் எனக்கு” என்றான்.

அவன் சொன்னதிலிருந்த உண்மை அவளுக்கும் புரிய, மௌனமாய் புன்னகைத்தாள்.

அத்தியாயம் - 4

ஒரு மாதத்திற்குப் பிறகு...

“ஹலோ சார் குட்மார்னிங்...”

“ஹாய் மிஸ்.வைஷாலி. என்ன காலையிலேயே என் ஞாபகம்”

“ஸ்டூடண்ட்ஸ் சார்பாக உங்களுக்கு, எங்களோட நன்றியை சொல்லணும். உங்க செக்கரட்டரிகிட்ட சொல்லி உங்களுக்கு எப்போ

வசதிபடும், ஒரு சின்ன ஃபங்ஷன் வைக்கலாம்னு கேட்டேன். அவர் இப்போதைக்கு நீங்க ரொம்ப பிஸி முடியாதுன்னு சொல்லிட்டார். சரி எந்த ஒரு அங்கீகாரமும் கிடைக்கும் நேரத்தில் கிடைத்தால் தான் மதிப்பு. அதே போல சொல்லவேண்டிய நன்றியை உடனே சொன்னால்தான் எங்களுக்கு சந்தோஷம்" என்றாள்.
"நன்றிதானே போனிலேயே சொல்லிடுங்க..." என்றான்.

"நான் மட்டும் இல்லை சார், என் ஃப்ரெண்ட்ஸ் எல்லோரும் சொல்லணும். அதனால்..."

"அச்சச்சோ! லஞ்சுக்கெல்லாம் கூப்பிடாதீங்க மேடம். உண்மையாகவே ரொம்ப பிஸி" என்று போலியாக அலறினான்.

"நீங்களும் பெரிசா எதையும் எதிர்பார்க்காதீங்க சார். பொக்கேவும், தேங்க்ஸும் தான் உங்களுக்கு" என சிரித்தாள்.

"கருமி கண்ணம்மா" என புன்னகைத்தான்.

"சொல்லுங்க சொல்லுங்க... இதுக்கெல்லாம் கவலைப்படும் ஆள் நான் இல்லை" என்று பதிலுக்குப் பதில் பேச, இப்படியே இருவருக்கும் சற்று பொழுது போனது.

"ஓ! மணி எட்டரை நான் காலேஜ் கிளம்பணும். உங்களை எப்போ சந்திக்க வரலாமுன்னு நீங்க ஒரு டைம் சொன்னால் நல்லா இருக்கும்" என்றாள் தன் வேலையில் கவனமாக.

"ம், இன்னைக்கு மதியம் ரெண்டு மணிக்கு. ஓகே..." என கேட்டான்.

“தாராளமா சார். தேங்க்யூ” என போனை அணைத்தாள்.

****

குறித்த நேரத்தில், புன்னகை மலர்களாக வைஷாலியும், அவளது தோழிகளும் கையில் ஆளுக்கொரு பூங்கொத்துடன், விக்ரமின் அலுவலகத்திற்குள் நுழைந்தனர். கடுகடுவென்ற முகத்துடன் ரிசப்ஷனிலேயே அவர்களை எதிர் கொண்டான், விக்ரமின் செக்கரட்டரி ராகவன்.

தன்னைக் கண்டதும் கடுகடுத்த அவனது முகத்தைப் பார்க்கவே, வைஷாலிக்கு உற்சாகம் பீறிட்டது. ‘அன்னைக்கு எனக்கு என்ன ஆட்டம் காட்டின! அது முடியாது இது முடியாதுன்னு. இன்னைக்கு பார்த்தியா என்னை வரவேற்க உன்னை வாசலுக்கே வரவச்சிட்டேன்’ என்ற எண்ணத்துடன் அவனைப் பார்த்துக் கிண்டலாகப் புன்னகைத்தாள்.

“வெல்கம் ஆல் ஆ◌ஃப் யூ! சார், உங்களை மீட்டிங் ஹாலில் சந்திப்பாங்க. ப்ளீஸ்” என்று முன்னால் செல்ல, “தேங்க்யூ” என்றபடி, தோழிகளுடன் அவனைப் பின் தொடர்ந்தாள் வைஷாலி.

பத்து பேர் அமரக்கூடிய அளவிற்கு வட்டமான பெரிய மேஜை, சுற்றிலும் நாற்காலிகள் போடப்பட்டிருந்தது. ஐவரும் அமராமல் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, “ஹாய்!” என்று புன்னகைத்தபடி, மற்றொரு வழியாக உள்ளே வந்தான் விக்ரம்.

”ஹலோ சார்!” என்று ஐவரும் புன்னகைத்தனர்.

“ப்ளீஸ் உட்காருங்க” என இருக்கையைக் காட்டினான்.

“இந்தக் குறுகிய காலத்துல எங்களுடைய தேவைகளை ரொம்பவே நிறைவாக செய்து கொடுத்திருக்கீங்க. அதுக்கு எங்க சார்பாக நன்றியை தெரிவிச்சிக்கிறோம் சார்!” என்று பூங்கொத்தை நீட்டினாள் வைஷாலி.

புன்னகையுடன், “தேங்க்யூ” என்றவன் மற்றவர்கள் கொடுத்த பூங்கொத்தையும் வாங்கிக் கொண்டான்.

அனைவரும் அமர, அவர்களுக்கு ஸ்வீட், காரம் என கொண்டுவந்து வைக்கப்பட, அவனது உபசரணையில் திக்குமுக்காடிப் போயினர்.

“எதுக்கு சார் இந்த ஃபார்மாலிட்டீஸ்?” என்றாள் வைஷாலி.

“உங்களையெல்லாம் கொஞ்சம் கூல் பண்ணத்தான்” என புன்னகைத்தான். திடீரென அவளருகில் அமர்ந்திருந்த ஜனனியின் பக்கமாக திரும்பியவன், “உங்க சொந்த ஊர் எது? பேரண்ட்ஸ் என்ன பண்றாங்க?” என விசாரித்தான்.

இப்படியே ஒவ்வொருவராக முடிந்து கடைசியாக வைஷாலியிடம் வந்து முடித்தான்.

“அப்பா பெயர் சங்கரன். அம்மா பெயர் தேவிகா” என்றவள், ஒரு புகழ்பெற்ற இருசக்கர மோட்டார் வாகன உதிரி பாகம் தயாரிக்கும் கம்பெனியின் பெயரைக் குறிப்பிட்டு, “அப்பா அதில் ஜெனரல் மேனேஜராக இருக்கார். அம்மா இல்லத்தரசி. அவங்களுக்கு நான் ஒரே பொண்ணு. போன வருஷம் ரத்னகிரியில் புது பிரான்ச் ஆரம்பிச்சாங்க. அப்பாதான் இன்சார்ஜ். அதனால் அப்பா அம்மா ரெண்டு பேரும் இப்போ ரத்னகிரியில் இருக்காங்க. நான் இங்கே ஹாஸ்டலில் சேர்ந்துட்டேன்”

என்றாள்.

“ஓ! என எல்லாவற்றையும் விளக்கமாக கேட்டுக்கொண்டான். “நீங்க எல்லோருமே வேற வேற டிபார்ட்மெண்ட். அப்புறம் எப்படி ஃப்ரெண்ட்ஸ் ஆனீங்க?” என கேட்டான்.

“தாய்மொழி தான் சார் எங்களை ஒண்ணு சேர்த்து வச்சிருக்கு. ஹாஸ்டலிலும் எங்களுக்கு பக்கத்து பக்கத்து ரூம்” என்றாள். முழுதாக ஒருமணி நேரத்தை விக்ரமின் அலுவலகத்தில் செலவழித்துவிட்டு, ஒரு வழியாக கிளம்பினர்.

****

ஹாஸ்டலுக்கு வந்தவள் குளித்துவிட்டு, கூந்தலைக் கோதியபடி கட்டிலில் சாய்ந்தாள். ஹிந்தி பாடல் ஒன்றை முணுமுணுத்தபடி அமர்ந்திருந்தவளின் மொபைல் அழைத்தது.

“ஹலோ அம்மா! எப்படியிருக்கீங்க?” என்றது தான் தாமதம்.

“ஏண்டீ நீ என்கிட்ட ஒழுங்கா பேசி ஒரு மாசத்துக்கு மேல ஆகுது. இன்னைக்காவது உனக்கு டைம் இருக்கா இல்லை பேசிட்டு இருக்கும் போதே போனைக் கட் பண்ணப் போறியா?” என கேட்டார் தேவிகா.

“இத்தனை நாள் கொஞ்சம் வேலை இருந்துச்சும்மா. இன்னைக்கு நான் ரொம்பவே ப்ரீ நீங்க ஒரு மணி நேரம் கூட பேசலாம்” என புன்னகைத்தாள்.

“சந்தோஷம்... சரி, சாப்பிட்டியா?”

“ஆச்சும்மா. நீங்க சாப்பிட்டீங்களா? அப்பா எங்கே சத்தமே இல்லை”

என கேட்டாள்.

“இதோ வழக்கம் போல அமைதியா என் பக்கத்திலேயே தான் உட்கார்ந்திருக்கார்” என்றார்.

“அட ஆமாம்! மறந்தே போயிட்டேன். நீங்க இருக்கும் போது அப்பா என்னைக்குப் பேசியிருக்காங்க. ஒரே வருஷத்தில் இதெல்லாம் மறந்து போச்சு பாருங்களேன்” என அன்னையை வம்பிழுத்தாள் ஆசையுடன்.

“இந்த வாயில ஒண்ணும் குறைச்சல் இல்லை. உனக்கு இது மட்டுமா மறந்து போச்சு. எங்களையே மறந்து தானே இந்தப் பக்கமே வராமல் இருக்க” என்று சட்டென சூடானார் தேவிகா.

வைஷாலியின் புன்னகை முகம் வாடியது. “கல்ச்சுரல் ப்ரோக்ராம், கொஞ்சம் காலேஜ் வேலைன்னு ரெண்டு மாசமா கொஞ்சம் பிஸிம்மா” என்று மெதுவாகவே சொன்னாள்.

“ஆங்! நீ சொல்றதை நான் அப்படியே நம்பறேன். நீ ஏன் அங்கேயே படிக்கிறேன்னு சொன்னதுக்கான காரணம் எனக்கொன்னும் தெரியாமலில்லை” என்றார் காட்டமாக.

பேச்சின் கோணம் திசை மாறுவதை உணர்ந்த வைஷாலி சற்று அமைதி காத்தாள்.
“ஏய் வைஷு! லைனில் இருக்கியா?”

“ம், இருக்கேன்” என்றாள் சுரத்தே இல்லாமல்.

“போன வாரம் அந்த ஜோதி வீட்டுக்குப் போயிருந்த போல.”

உதட்டை அழுந்த கடித்தவள், “ஆமாம், போனேன்” என்றாள்.

“என்கிட்ட ஏன் சொல்லலை?”

“நீங்க இப்படி கேட்பீங்கன்னு தான் சொல்லலை” என்றாள் எரிச்சலுடன்.

“நானூறு கிலோமீட்டருக்கு அந்தப் பக்கம் இருக்கவளுக்கு என்ன தெரியப் போகுதுன்னு சொல்லாம விட்டுட்டியாக்கும்” என்றார்.

வைஷாலி சற்று கடுப்பானாள். “அம்மா போதும். உனக்கு ஏன் அவளைப் பார்த்தால் பிடிக்கமாட்டேன்னுதுன்னு கேட்கமாட்டேன். ஏன்னு எனக்கே நல்லா தெரியும். ஜோதிக்கு இது ஆறாம் மாதம். வீட்டில் தனியா இருக்காளேன்னு போய் கொஞ்சம் நேரம் அவளோடு இருந்துட்டு வந்தேன்” என்றாள்.

“அதோடவா விட்ட... அவளை ஹாஸ்பிட்டல் கூட்டிக்கொண்டு போய், தாதி வேலை பார்த்துட்டு வந்ததை மட்டும் ஏன் சொல்லாமல் விட்டுட்ட?”

வைஷாலிக்கு இப்போது விஷயம் புரிந்தது. ஜோதியை செக்கப்பிற்காக ஹாஸ்பிட்டல் அழைத்துச் சென்ற இடத்தில், குல்கர்னி ஆன்ட்டியைப் பார்த்த நினைவு வந்தது. அவர்தான் அம்மாவிடம் போட்டுக் கொடுத்து விட்டார் எனவும் புரிந்தது.

"ஆமாம் போனேன். ஏம்மா நீ இப்படி இருக்க? அவள் என்னோட க்ளோஸ் ஃப்ரெண்ட். அவளுக்கு இந்த ஹெல்ப் கூட செய்யக்கூடாதா?” என்றாள் கோபத்துடன்.

“ஏண்டீ நீ யாரு உன்னோட ஸ்டேட்டஸ் என்னன்னு தெரியாமல் இருக்கியே. நீ திருந்தவேமாட்ட. இந்த மிடில் கிளாஸ் புத்தியெல்லாம் உனக்கு இப்போ தெரியாது. பட்டால் தான் உனக்கு புத்தி வரும்” என்ற அன்னையின் பேச்சைக் கேட்டவளுக்கு பொறுமை பறந்தது.

‘இதைப் பேசவா என்னைக் கூப்பிட்ட. என்னோட சந்தோஷமான நாளையே நீ ஸ்பாயில் பண்ணிட்ட’ சொல்ல நினைத்த வார்த்தைகளை சொல்லாமல் தொண்டைக் குழியிலேயே தங்கிவிட்டது.

“தேவிகா! போதும் குழந்தையை எதுக்கு வறுத்தெடுக்கற? அவளே அங்கே தனியா இருக்கா. பேச உனக்கு வேற விஷயமா இல்லை” என மனைவியின் பேச்சில் இடைப்புகுந்து, மகளைக் காப்பாற்றினார் சங்கரன்.

“இப்படி செல்லம் கொடுத்தே தான் அவளைக் குட்டிச்சுவராக்கி வச்சிருக்கீங்க. இந்தாங்க நீங்களே பேசுங்க உங்க அருமை மகளோட” என்று போனை கணவரின் கையில் திணித்தார் தேவிகா.

“என்னடா கண்ணா! எப்படியிருக்க?” ஆதூரத்துடன் கேட்டார்.

“நான் நல்லா இருக்கேன்ப்பா” என புன்னகைத்தாள்.

“அம்மா ரொம்ப காய்ச்சி எடுத்துட்டாளா?”

“அம்மா, இப்படி பேசறது ஒண்ணும் புதுசு இல்லையேப்பா” என்றாள்.

“சரிம்மா, இன்னைக்கு விக்ரமோட ஆ·ஃபீஸுக்கு போகப்போறதா

காலையில் சொன்னியே... போனியா?” என்று கேட்டது தான் தாமதம். மடைதிறந்த வெள்ளமாக சொல்ல ஆரம்பித்த மகளின் வேகத்தைக் கண்ட சங்கரன் புன்னகைத்துக் கொண்டார்.

அத்தியாயம் - 5

சனிக்கிழமை கல்லூரி விடுமுறை தினமாதலால், வைஷாலி ஹாஸ்டல் மொட்டை மாடியில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தாள். வைப்ரேஷன் மோடிலிருந்த அவளது செல்போன் சப்தமெழுப்பியது.

விகரமின் மொபைல் நம்பர். “ஹலோ சார்!” என்றாள்.

“ஹாய் வைஷாலி எப்படியிருக்க? ஸ்டடீஸ் எல்லாம் எப்படி போயிட்டிருக்கு?”

“நல்லாயிருக்கேன் சார். ஃபைனல் எக்சாம்ஸ் வருதில்லையா முழுமூச்சாக படிப்பில் இறங்கியாச்சு. சண்டே மட்டும் அரை நாள் அரட்டைக்குன்னு ஒதுக்கிட்டேன்” என சிரித்தாள்.

”வெல். அப்போ நாளைக்கு அந்த அரை நாளை எனக்காக ஒதுக்கிடுங்க” என்றான்.

“இல்ல சார், நாளைக்கு...” என இழுத்தாள்.

“நோ நோ. வேற பேச்சுக்கே இடமில்லை. நாளைக்கு மதியம் ஒருமணிக்கு நாம ரெண்டு பேரும் சேர்ந்து லஞ்ச் சாப்பிடுறோம். சரியா பன்னிரெண்டரை மணிக்கு நான் வந்து பிக்-அப் பண்ணிக்கிறேன்” என்றான் கட்டளையிடும் குரலில்.

“இல்லை சார் வேணாம். நீங்க இடம் சொல்லுங்க நானே வந்திடுவேன்” என்றாள். இயல்பாக பேசினாலும், மனத்திற்குள் ‘எதற்காக இந்த அழைப்பு’ என குழம்பினாள்.

“ஆர் யூ ஸூர்...!”

“ம், ஸூர்” என்றாள்.

“ஓகே!” என்றவன் ஊருக்குச் சற்று தள்ளியிருந்த ரிசார்ட் ஒன்றின் பெயரைச் சொலியவன், மீண்டும் அவள் வருவதை உறுதிப்படுத்திக்கொண்டு போனை அணைத்தான்.

படிக்கலாம் என வந்தமர்ந்தவளுக்கு புத்தகத்தைத் திறந்தால் படிக்கவே முடியவில்லை. எதற்காக இந்த அழைப்பு என்ற எண்ணமே அவளைச் சுற்றி வட்டமிட்டது.

ரிசாட்டின் முன்பாக நின்றிருந்த விக்ரமின் காரைக் கண்டதும் ஆட்டோவை நிறுத்தி இறங்கினாள் வைஷாலி.

அவளைக் கண்டதும், “ஹாய்!” என்றபடி புன்னகையுடன் காரிலிருந்து இறங்கினான் விக்ரம். ஜீன்ஸ், டீ-ஷர்ட்டில் படி ஸ்மார்ட்டாக இருந்தான்.

”ஹலோ! வந்து ரொம்ப நேரமாச்சா?” என்றாள்.

“ரெண்டு பேருமே ஷார்ப்பா சொன்ன நேரத்துக்கு வந்திருக்கோம். போகலாமா” என ரிசார்ட்டின் பக்கமாகக் கை காட்டினான்.

இருவரும் உள்ளே சென்று அமர்ந்ததும், மெனு கார்டைப் பார்த்து மளமளவென அவனே ஆர்டர் செய்தான். அவன் சொன்ன உணவு வகைகளைப் பார்த்து வைஷாலி மலைத்துப் போனாள்.

“சார், நாம ரெண்டு பேர் சாப்பிட இத்தனை ஐட்டமா!”

“இது என்னோட ட்ரீட். சோ நீங்க சாப்பிட மட்டும் தான் வாயைத் திறக்கணும். ஓகே” என்றான்.

“ஓகே!” என்றாள் புருவம் உயர்த்தி.

“இன்னைக்கு எதுக்கு உங்களை கூப்பிட்டிருக்கேன்னு ஒரு சின்னக் குழப்பம் இருக்குமே!”

‘சின்னதா… பெரிய குழப்பமே இருக்கு’ மனத்தில் நினைத்துக் கொண்டதை வெளியில் சொல்லாமல், “நீங்க காரணமில்லாமல் கூப்பிடமாட்டீங்கன்னு தெரியும் சார்…” என மழுப்பினாள்.

“அவ்வளவு நம்பிக்கையா என் மேல…?” என்று வியப்பது போல புருவம் உயர்த்தினான்.

“நீங்க என்னைக் கிண்டல் செய்றீங்கன்னு புரியுது… உங்க மேல நம்பிக்கை இருப்பதால் தான், நீங்க சொன்ன இடத்துக்கு மறுக்காமல் வந்திருக்கேன்” என்று உதட்டைச் சுழித்தாள்.

“சமாதானம் சமாதானம்… கோச்சிக்காதீங்க மேடம்…” என மேலும் அவளிடம் வம்பு பேசினான்.

இருவரும் பேச வேண்டியதை விட்டுவிட்டு எதையெதையோ பேசிக்கொண்டிருக்க, ஆர்டர் கொடுத்த உணவு வகைகளும் வந்து சேர்ந்தது. பரிமாற வந்த வெயிட்டரை அனுப்பிவிட்டு, விக்ரமே அவளுக்கு பரிமாறினான்.

“ஹய்யோ சார்! ப்ளீஸ் நானே பரிமாறிக்குவேன்” என தடுத்தாள் வைஷாலி.

“இன்னைக்கு வைஷாலி, விக்ரமோட ஸ்பெஷல் கெஸ்ட். அண்ட் வைஷாலியோட ஃப்ரெண்ட் மட்டுமே. அதோடு என்னுடைய மரியாதைக்குரிய ஜெனரல் செக்ரட்டரிக்கு நான் கொடுக்கும் ஒரு சின்ன கௌரவம்” என்றான்.

அதுவரை உள்ளுக்குள் தயக்கத்துடன் இருந்த வைஷாலி, வியப்பின் உச்சிக்கே சென்றாள்.

“சார்! அது என்னுடைய கடமை. என்னை நம்பி ஜி.எஸ் ஆக்கின எங்க ஸ்டூடண்ட்ஸ்காக நான் செய்யவேண்டிய நியாயமான வேலை. அதுக்கு இவ்வளவு பெரிய அங்கீகாரமா! நிச்சயமா எதிர்பார்க்கலை சார்” என்றவள் நெகிழ்ந்து போயிருந்தாள்.

“அன்னைக்கு நீங்க ஆஃபீஸுக்கு வந்த போதே இதைச் செய்திருக்கணும். ஆனால், அது பத்தோடு பதினொன்னாகியிருக்கும். வைஷாலிக்கு ஸ்பெஷலாக செய்யணும்னு நினைத்தேன். அதனால் தான் இப்படி, விஷயத்தைச் சொல்லாமல் சர்ப்ரைசாக கூப்பிட்டேன்” என்றான் புன்னகையுடன்.

நெகிழ்ச்சியில் கண்கள் கலங்க, “தேங்க்யூ சார்!” என்றாள்.

சிரித்தவன், “சாப்பிடுங்க...” என்றதும், “ம்” என்று உண்ண ஆரம்பித்தாள். சாப்பிட்டு முடித்து, பிங்கர் பௌலில் கையைக் கழுவிக்கொண்டு, டிஷ்யூ பேப்பரில் நாசுக்காக உதடுகளை ஒற்றியெடுத்து விட்டு இருவரும் எழுந்தனர்.

“வைஷாலி, இஃப் யூ டோண்ட் மைண்ட்; நீங்க ஹாஸ்டலுக்கு ஈவ்னிங் போனால் போதுமில்ல... பின்னால தோட்டம்... ரொம்ப அழகா இருக்கும். அங்கே கொஞ்ச நேரம் உட்கார்ந்திருக்கலாமா?” என்று கேட்டான்.

வைஷாலிக்கும் அப்போதிருந்த மனநிலையில் மறுக்கத் தோன்றவில்லை. “நோ பிராப்ளம் சார்” என தோளைக் குலுக்கினாள்.

இருவரும் ரிசார்ட்டின் பின்புறமிருந்த தோட்டத்திற்குச் சென்றனர். ஆங்காங்கே ஒருவர் மட்டுமே அமரக் கூடிய வகையில் மார்பிள் கல்லாலான சாய்வு இருக்கைகள் இரண்டிரண்டாக இருந்தது. ஒவ்வொரு இரு இருக்கைக்கும் இடையில் நீளமான டேபிள் போல ஒரு மேடை அமைக்கப்பட்டிருந்தது.

விசாலமான தோட்டம். வெயில் படாத அளவிற்கு மரங்கள் உயர்ந்து அடர்ந்து வளர்ந்திருந்தது. சற்று தொலைவில், குழந்தைகள் விளையாட ஊஞ்சல், சீசா, சறுக்கு மரம் என அமைக்கப்பட்டிருந்தது. கண்களைச் சுழற்றி அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்தவளை, விக்ரமின் கண்கள் ஆர்வத்துடன் வருடியது.

வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவளை, “வைஷாலி!” என மென்மையாக அழைத்தான்.

“சார்…” என்றபடி அவனைப் பார்த்தாள்.

“திஸ் இஸ் ஃபார் யூ…” என்று உள்ளங்கை அளவேயிருந்த கிஃப்ட் பார்சலை இருவருக்கு நடுவிலிருந்த மேடை மீது வைத்து அவள்புறமாக நகர்த்தினான்.

“இதெல்லாம்…’ என்று திணறினாள்.

“என்னோட ஞாபகமா இருக்கட்டும்” என்றதும் அவளது விழிகள் உயர்ந்து அவனது முகத்தில் நிலைத்தது. சிரிப்புடன் தன்னையே பார்த்தவனிடமிருந்து தவிப்புடன் பார்வையை விலக்கினாள்.

“என்ன வைஷாலி… திடீர்னு முகமெல்லாம் ஒரு மாதிரி ஆகிடுச்சி…?” அக்கறையுடன் கேட்டான்.

“ஒண்ணுமில்லை சார்… நேரமாகுது கிளம்பலாமா?” என கேட்டாள்.

“இப்போதானே ஈவ்னிங் போகலாம்னு சொன்னீங்க…!”

“இல்ல வந்து…” என்று என்ன காரணம் சொல்வது என புரியாமல் தடுமாறினாள்.

அதேநேரம், “ஹாய் விக்ரம்ம்ம்ம்…” என்ற உற்சாக கூக்குரல் ஒன்று அவர்களுக்குப் பின்னாலிருந்து வந்தது.

திரும்பிய விக்ரம், “ஹாய் சீமா!” என்று அதே உற்சாகத்துடன் குரல் கொடுத்தான்.

“என்ன திடீர்னு விக்ரம் சாரோட காத்து இந்த பக்கமா அடிக்குது… சம்திங் ஸ்பெஷல்!” என்றபடி திரும்பியவள், அப்போது தான் வைஷாலியை நன்றாகப் பார்த்தாள்.

குறுகுறுவென தன்னைப் பார்த்த சீமாவை, மலங்க மலங்க விழித்தபடி பார்த்தாள் வைஷாலி.

“வெரிவெரி ஸ்பெஷல் தான் போலயிருக்கே விக்ரம்…” என அவனிடம் கண் சிமிட்டினாள்.

”ஹே! உன்னோட கற்பனைக் குதிரையை அப்படி எங்கேயாவது ஓரமாக கட்டி வை” என்று சிரித்தவன், “மீட் மிஸ்.வைஷாலி என்னோட நல்ல ஃப்ரெண்ட்” என்றவன், “வைஷாலி, இவள் சீமா. எங்க அப்பா வழியில் சொந்தம்” என்று இருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தான்.

“ஏன், என்னோட அத்தை பொண்ணுன்னு சொன்னா சார் எங்கேயாவது குறைஞ்சிடுவாராமா?” என்று வரிந்து கட்டிக்கொண்டு வந்தாள் சீமா.

“தெரியாமல் சொல்லிட்டேன் தாயே! விட்டுடு” என்று தலைக்கு மேல் கைகளைக் கூப்பி சீமாவை வணங்கினான்.

“அந்த பயம் இருக்கட்டும்…” என்றவள் வைஷாலியின் பக்கமாகத் திரும்பினாள். “பரவாயில்லை வைஷாலி, நீங்க ரொம்ப தைரியசாலிதான். இல்லைனா இந்தப் ஃப்ராடு பையனை நம்பி இத்தனை தூரம் வந்திருப்பீங்களா?” என்றாள் குறும்புடன்.

என்ன சொல்வதென தெரியாமல் இருவரையும் பார்த்தாள் வைஷு.

அதற்கு மேல் சீமா விக்ரமிடம் இழைந்துகொண்டு, ஒருவர் மட்டுமே அமரக்கூடிய இருக்கையில் நெருக்கியடித்து அமர்ந்திருந்தது வேறு அவளுக்கு சங்கடமாக இருந்தது.

“ஹே! சீமா சும்மா இருக்கமாட்ட…” என்று அவளை அதட்டியவன், “அவள் விளையாடுறா வைஷாலி… நீங்க தப்பா எடுத்துக்காதீங்க” என்றவன். “அம்மா தாயே நீ கிளம்பு. நாங்களும் கிளம்பணும்” என்று எழுந்து கொண்டான்.

“அதெப்படி நீ சொன்னதும் உன்னை விட்டுடுவேனா? வைஷாலிகிட்ட சொல்ல வேண்டியது நிறைய இருக்கு…” என்றவள், “இவன் காலேஜ் படிக்கும் போது என்னவெல்லாம் செய்தான்னு தெரியுமா?” என ஆரம்பித்தவளின் வாயைப் பொத்தி, அவளைத் தரதரவென வேறு பக்கமாக இழுத்துச் சென்றான்.

“உனக்குப் புண்ணியமா போகட்டும்… கொஞ்சம் வாயை அடக்கு. நீ ஒண்ணு கிடக்க ஒண்ணு சொல்ல, ஷாலு பயப்பட போறா…” என்றான். அவனுமே சற்று படபடப்பாகத் தான் இருந்தான்.

சீமா அவனையே இமைக்காமல் பார்த்தாள். “விக்ரம்! நீ வைஷாலியை காதலிக்கிறியா…?” என மண்டையில் அடித்ததைப் போல பட்டென்று கேட்டாள்.

அவளது கேள்வியை சற்றும் எதிர்பார்க்காதவன், “என்ன…?” என்று சட்டென முகம் சுளித்தான். “அவள் நம்ம காலேஜில் நடந்த சில விஷயங்களை என் பார்வைக்குக் கொண்டு வந்தாள். அதுக்கு தேங்க் பண்ண இங்கே கூட்டி வந்தேன். நீ நினைப்பது போல எதுவுமே இல்லை” என்றான் அழுத்தமாக.

“நான் எல்லாத்தையும் கவனித்து தான் சொல்றேன் விக்ரம். சரி இதுக்கு பதில் சொல்லு… அந்த கிஃப்ட்கூட நீ தேங்க் பண்ண கொடுத்தது தானா?”

தோளைக் குலுக்கியவன், “ஆமாம்… அவ்வளவுதான்” என்றான்.

“சரி, என்ன கிஃப்ட் வாங்கியிருக்க?” என கேட்டாள்.

அவன் சொன்ன பதிலைக் கேட்டவள், விழுந்து விழுந்து சிரித்தாள்.

“எதுக்கு இப்படி சிரிக்கிற?” எரிச்சலுடன் கேட்டாள்.

“வேண்டாம் நான் எதுவும் சொல்லலை. நீயா புரிஞ்சிக்குற நேரம் வரும்… இப்போ கிளம்பு உன்னோட வைஷாலி தனியாக இருக்காங்க. நாம ஏதோ ரகசியம் பேசறோம்னு தப்பா நினைச்சிக்கப் போறாங்க…” என்றாள்.

“அங்கேயும் வந்து இப்படி உளாறாதே…” என்றான் எரிச்சலுடன்.

கிளம்புகிறேன் என்றவர்களை, தன்னுடன் தேனீர் அருந்திவிட்டுத்தான் செல்ல வேண்டும் என்று வற்புறுத்தி அமர வைத்தாள். பெண்கள் இருவரும் பொதுவாக தங்களைப் பற்றி பேசிக்கொண்டிருக்க, விக்ரம் சற்று தள்ளிச் சென்று போன் பேசிக்கொண்டிருந்தான்.

அந்த ரிசார்ட் சீமாவின் தந்தையுடையது என்றும், அவள் மாதம் ஒருமுறை அங்கே வருவது வாடிக்கை என்று சொன்னாள். அவள் இங்கே வரும் இரண்டு நாட்களும் விக்ரமின் ஃப்ளாட்டில்

தங்கிக்கொள்வாள் என்றும் தன் அத்தை மாமாவின் விருப்பம் என்றும் சொன்னாள்.

அவள் சொன்னதையெல்லாம் கடமையாக தலையாட்டிக் கேட்டுக் கொண்ட வைஷாலியிடம், அவளைப் பற்றியும் விசாரித்துக் கொண்டாள். விக்ரம் வந்ததும் பேச்சு கேலியும் கிண்டலுமாக போனது.

கிளம்பும் நேரம் வைஷாலியின் கைகளைப் பற்றிய சீமா, “உங்களை சந்திச்சதுல ரொம்ப சந்தோஷம். இது என்னோட கார்ட். நீங்க எப்போ ஃப்ரீயோ அப்போ என்னோடு பேசுங்க. நான் உங்ககிட்ட நிறைய விஷயங்கள் பேச வேண்டி இருக்கு” என்று குறுஞ்சிரிப்புடன் விக்ரமை பார்த்துக் கொண்டே சொன்னாள்.

“அடங்கமாட்ட நீ. வீட்டுக்கு வருவ இல்லை இருக்கு உனக்கு…” என்றவன் வைஷாலியை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

காரின் அருகில் செல்லும் போது, வைஷாலியின் மொபைல் அழைத்தது. எடுத்துப் பார்த்தாள் ஜோதி தான் அழைத்திருந்தாள். கடவுளே! என நினைத்துக் கொண்டவள், “சொல்லு ஜோ!” என்றாள் மெதுவாக.

“எங்கேடி இருக்க? உனக்காகத் தான் காத்துட்டு இருக்கோம் ஏன் இன்னும் வரலை இல்ல… மூணு மணியிலிருந்து உனக்கு போன் பண்றேன் கால் ரீச் ஆகமாட்டெனனுது” ஜோதியின் குரல் கோபத்துடன் ஒலித்தது.

“திடீர்னு வெளியே வரவேண்டியதா போச்சு ஜோ…” என்றவளுக்கு வார்த்தைகள் தடுமாறியது.

“இங்கே வர்றதை விட அப்படியென்னடி முக்கியமான விஷயம்…”

“அது… விக்ரம் சாரோடு லஞ்சுக்கு வெளியே வந்திருக்கேன்…” என்று சொன்னதும் தான் தாமதம் ஜோதி பொட்டென போனை வைத்தாள்.

வைஷாலிக்கு தவிப்பாக இருந்தது. ஜோதியின் வீட்டிற்கு போன் செய்தும் அவள் எடுக்கவேயில்லை. மீண்டும் முயற்சிக்க லைன் பிசி என்றே வர, ரிசீவரைத் தூக்கி கீழே வைத்துவிட்டாள் என்று புரிந்தது.

“வைஷாலி கிளம்பலாமா…” என்று விக்ரம் குரல் கொடுக்க, “வரேன் சார்” என்றவள் மனத்தில் சஞ்சலத்துடனேயே காரில் ஏறினாள்.

அத்தியாயம் - 6

இறங்கும் போது எடுத்துக் கொள்ளலாம் என்று எண்ணி, விக்ரம் கொடுத்த கிஃப்ட் பார்சலை, காரின் டாஷ் போர்டில் வைத்தாள். ‘இப்போ இந்த ஜோதியை எப்படி சமாளிப்பது?’ என்று புரியாமல் அதே யோசனையுடன் இருந்தவள், விக்ரமின் பேச்சைக் கவனிக்கவில்லை.

தனது கேள்விக்கு பதில் சொல்லாமல் சிந்தனையில் இருப்பவளைப் பார்த்துவிட்டு, காரை ஓரமாக நிறுத்தினான். அவளைப் பெயர் சொல்லி அழைத்தும் கவனமில்லாமல் இருந்தவளை, “வைஷாலி!” என அவளது வலது கையைப் பற்றி லேசாக உலுக்கினான்.

“ஹாங்!” என்று கனவிலிருந்து விழித்தெழுபவளைப் போல, திடுக்கிட்டுத் திரும்பினாள்.

“என்ன ஆச்சு? இப்படி தன்னை மறந்து உட்கார்ந்திருக்க?” என்று சிரித்தான்.

“ஒண்ணுமில்லை சார்...” என்று சிரித்து மழுப்பினாள்.

“என்னிடம் சொல்லக் கூடாத அளவுக்கு பர்சனலான விஷயம் போல... ஓகே!” என்று தோள்களைக் குலுக்கினான்.

அவனது பதில் அவளுக்குச் சங்கடத்தைக் கொடுக்க, “பர்சனல் தான் ஆனால் சொல்லமுடியாத அளவுக்கு இல்லை... இன்னைக்கு என் ஃப்ரெண்டுக்கு பிறந்தநாள். வருஷாவருஷம் அவங்க வீட்டில் இருப்பேன். அதான் நான் வரலைன்னதும் எனக்கு போன் செய்திருக்கா...” என்றாள்.

“அடடா! முன்னாலேயே சொல்லியிருக்கலாமே வைஷாலி, நான் இன்னொரு நாளைக்கு வந்திருக்கலாமே...” என்றான் தாங்கலுடன்.

“நான் சொல்ல வந்தேன்... நீங்கதான்...” என்று தடுமாற்றத்துடன் சொல்ல முடியாமல் நிறுத்தினாள்.

“ஓ!” என்று நெற்றியைத் தடவிக்கொண்டே, “ஆமாம் என்னவோ சொல்ல வந்தீங்க, நான் தான் பேசவேவிடலையே” என்று யோசித்தவன், “ஓகே! இன்னைக்கு உங்களை தர்மசங்கடத்தில் மாட்டி விட்டது நான் தான். சோ, நானே உங்களை அவங்க வீட்டில் கொண்டு போய் விட்டுடுறேன்” என்றான்.

அவன் அழைத்துச் செல்கிறேன் என்றதுமே வைஷாலிக்கு கதிகலங்கிவிட்டது. ‘இவன் அங்கே வந்து ஜோதியைப் பார்த்தால்,

அவ்வளவுதான் எல்லாம் கெட்டுது. இப்போதைக்கு இவனுக்கு எதுவும் தெரியவேண்டாம். அதற்கான சந்தர்ப்பம் வரும் போது தெரிந்தால் போதும்' என்று நினைத்துக் கொண்டாள்.

பதட்டத்தை மறைத்துக் கொண்டு, "ஹய்யோ! சார், உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம். நீங்க என்னை சிட்டிக்குள்ள போனதும் இறக்கிவிட்டால் போதும், நான் அங்கிருந்து ஆட்டோ பிடிச்சி போயிடுவேன்" என்றவள், 'கடவுளே! இவன் இதுக்கு சரின்னு சொல்லணுமே' என்ற வேண்டுதலுடன் அவனது பதிலுக்காக காத்திருந்தாள்.

யோசனையுடன் ஸ்டியரிங் வீலில் விரல்களால் தாளமிட்டவன், "ஓகே! உங்க விஷ் அதான்னா எனக்கு ஒண்ணும் பிரச்சனை இல்லை..." என்று தோள்களைக் குலுக்கினான்.

அதன்பிறகு அவனுடன் பேசிய எதுவும் முழுதாக அவளது மனத்தில் பதியா விட்டாலும், மேலோட்டமாக அவனுடன் உரையாடிக் கொண்டிருந்தாள்.

சிட்டிக்குள் வந்ததும் அவள் சொன்ன இடத்தில் காரை நிறுத்தினான். பரபரப்புடன் இறங்கி, "தேங்க்யூ சார்!" என்ற வார்த்தையுடன் அவனிடமிருந்து விடைபெற்றாள்.

பின்னால் வந்த ஆட்டோவைக் கைகாட்டி நிறுத்தி ஏறிக்கொண்டாள். அவளது செய்கை அவனுக்கு வித்தியாசமாக தெரிய வந்தது. சிறு தலையசைப்புடன், புன்னகைத்தபடி காரைக் கிளப்பினான்.

காரை பார்க்கிங்கில் நிறுத்திவிட்டு, வீட்டுச் சாவியை எடுக்க டாஷ் போர்டை திறந்தவனின் கைகளில் விரல்களில் மெத்தென்ற ஸ்பரிசம்

ஏற்பட என்னவென்று எடுத்துப் பார்த்தான்.

சிகப்பு வெல்வெட் ரோஜாக்களால் அலங்கரிப்பட்ட அழகான சுறுக்குப் பை. ‘வைஷாலிக்கென்று ஆசையாக கொடுத்தது இங்கே எப்படி வந்தது…?’ என யோசித்தவனுக்கு சட்டென விளங்கியது.

‘அடடா! இறங்கும் போது எடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்து டாஷ்போர்டில் வைத்திருப்பாள். அவசரத்தில் மறந்து விட்டுவிட்டுப் போய் விட்டாளே! அவளுக்காகத் தேடிப்பிடித்து எத்தனை ஆசையுடன் வாங்கி வந்தேன். அவளுக்குப் போன் செய்து, அன்பளிப்பு பிடித்திருந்ததா!’ என்று கேட்க நினைத்த நினைப்பெல்லாம் வீணாகிவிட்டதே’ என்று சலிப்பாக இருந்தது அவனுக்கு.

காரைப் பூட்டிக்கொண்டு இறங்கியவனின் மூளையில் பளீரென ஒரு யோசனை உதித்தது. ஆஹா! இப்போ இதைத் திரும்ப கொடுக்கும் சாக்கில் அவளை நேரில் சந்திக்க ஒரு வாய்ப்பு’ என்று விரைந்தோடி வந்த எண்ணத்தில் அவனது உதடுகள் புன்னகையில் மலர்ந்தது.

****

“வாம்மா வைஷு, சௌக்கியமா?” என்று விசாரித்தார் ஜோதியின் தந்தை மணிகண்டன்.

“நல்லாயிருக்கேன் அங்கிள்” என்றவள் அவரது நலனை விசாரித்துக்கொண்டு, “ஜோதி எங்கே காணோம்?” என்று விசாரித்தாள்.

“மேலே தான் இருக்காம்மா… உன் மேல கோபம் போல…” என்றார்.

“ஆமாம் அங்கிள். நான் மதியமே வரேன்னு சொல்லியிருந்தேன்… திடீர்னு வெளியே போகவேண்டி இருந்தது அதனால் லேட் ஆகிடுச்சி”

என்றாள்.

“சரிம்மா நீ போய் பாரு. நான் கொஞ்சம் வெளியே போய் வந்திடுறேன்” என்றார்.

மொட்டை மாடியில் உம்மென்ற முகத்துடன் அமர்ந்திருந்த ஜோதியை பார்த்தாள். மெல்ல அடிமேல் அடி வைத்து ஓசையெழுப்பாமல் சென்று அவளது கண்களை பொத்தினாள்.

“உன்னைக் கண்டுபிடிக்கிறது பெரிய கஷ்டமாக்கும்… முதல்ல கையை எடுடி” என்று வைஷாலியின் கைகளை தள்ளிவிட்டாள் ஜோதி.

“ஹலோ! மேடம்… ரொம்ப தான் பிகு பண்றீங்க?” என கேட்டாள்.

“பேசாதே நீ கொன்னுடுவேன். இத்தனை வருஷத்தில் ஒரு நாளாவது நீ வராமல் இருந்திருக்கியா?” என்று கோபத்துடன் கேட்டாள்.

“அதான் இப்போ வந்துட்டேனே இன்னும் என்னடி கோபம்?”

“ஆறரை மணிக்கு வந்திருக்க, ஏழு மணிக்கு காலில் சுடுதண்ணியை கொட்டினது மாதிரி கிளம்பி ஓடப் போற… இதுக்கு நீ வராமலேயே இருந்திருக்கலாம்” என்றாள் கோபத்துடன்.

“ம்… வராமலேயே இருந்திருக்கலாம்… ஏன் வரணும்… சரி உனக்கு நான் வந்தது பிடிக்கலை போல நான் கிளம்பறேன்” என்று நகர முயன்றவளை பிடித்து இழுத்தாள் ஜோதி.

“வந்தவளை வான்னு சொல்ல மாட்ட.. கிளம்பினாலும் விடமாட்ட

என்னதாண்டி உன் பிராப்ளம்… எனக்கும் ஆயிரத்தெட்டு வேலை இருக்குடியம்மா” என்று சற்று எரிச்சலுடன் சொன்னாள் வைஷாலி.

அவளைப் பிடித்திருந்த பிடியைத் தளர்த்திய ஜோதியின் கண்கள் லேசாக கலங்கியது. “தப்புதான் வைஷு. என்னோட சந்தோஷத்துக்காக உன்னை பாடாய் படுத்தறேன் இல்ல. அன்னைக்கு நான் மட்டும் ஒழுங்கா இருந்திருந்தா… இன்னைக்கு இப்படி சூழ்நிலையோட இந்த வீட்டில் வந்து உட்கார்ந்திருப்பேனா!” என்று மேடிட்டிருந்த தன் வயிற்றைப் பிடித்துக் கொண்டாள். அவளால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

“ஹே! ஜோதி, நான் இந்த அர்த்தத்தில் சொல்லலை. உன்னை வம்பிழுக்கத்தான் அப்படிச் சொன்னேன். உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா?” என அவளது முகவாய் பற்றி கண்களைத் துடைத்துவிட்டாள்.

“நீ வேணா பாரு இன்னும் மூணே மாசம்… இந்தப் பிரச்சனை எல்லாம் தீர்ந்துடும். குட்டி சிங்கம் மாதிரி உன்னோட பையன் வெளியே வந்ததும், இத்தனை நாள் என் அம்மாவை தவிக்க விட்டுட்டு ஏண்டா போனேன்னு அவனோட அப்பாவை நாலு உதை உதைக்கப் போறான். நான் அதைப் பார்க்கத்தான் போறேன்” என புன்னகைத்த வைஷாலியை அணைத்துக் கொண்டாள்.

“சாரி வைஷு! எனக்காக ஆறுதலாகவும், ஆதரவாகவும் இருக்கறது நீ மட்டும் தான். என்னோட கோபத்தையும், ஆதங்கத்தையும் பகிர்ந்துக்க எனக்குன்னு இருப்பது நீ மட்டும் தான். நீயும் வரலைன்னதும் தான் எனக்கு கோபமா வந்தது” என்றாள்.

“தெரியும்டா... என் மேலேயும் தப்பிருக்கு... சரி ஒண்ணு பண்ணலாம் இதுக்கு காம்பன்சேட் பண்ண அடுத்த வாரம் காலைல இங்கே வந்துட்டு ஈவ்னிங் போறேன் ஓகேவா” என்றதும் சந்தோஷமாக தலையசைத்தாள் ஜோதி.

“ஓகே! பிராப்ளம் சால்வுட். எங்கே உன் கையால் செய்த கேசரியை சாப்பிடணும் போல இருக்கு. எனக்கு எடுத்து வச்சிருக்கியா; இல்லை, கோபத்தில் என் பங்கையும் சேர்த்து நீயே சாப்பிட்டுட்டியா?” என்று கேட்டாள்.

“அதெல்லாம் நிறையவே இருக்கு வா” என்று தோழியை அழைத்துக்கொண்டு கீழே சென்றாள் ஜோதி.

ஜோதியின் சந்தோஷமான நாட்கள் மீண்டும் அவளது வாழ்வில் வரவேண்டும் என்று கடவுளை மனதார வேண்டிக்கொண்டாள். அதேநேரம் அவளது இத்தனை கவலைக்கும் காரணமானவனை நினைத்த போது கோபமாக வந்தது. அவன் ஜோதியை தேடி வரும் நாள் கூடிய விரைவில் வரும் என்றும் நம்பினாள் வைஷாலி.

அத்தியாயம் - 7

“ராகவன் அத்துல் கௌரவ் மோட்டார்ஸ் கம்பெனியோட ரெண்டு வருஷத்து டீடெயில்ஸ் என் டேபிளுக்கு வரணும் குயிக்” அலுவலக அறைக்குள் நுழையும் போதே, கழுத்திலிருந்த டையின் முடிச்சை தளர்த்தியபடி சொல்லிக் கொண்டே இருக்கையில் அமர்ந்தான்.

“எஸ் சார்” என்ற ராகவன் துரிதமாக செயலில் இறங்கினான்.

விக்ரம் கேட்டவற்றுடன் தான் ஏற்கெனவே குறித்து வைத்திருந்த குறிப்புகளையும் அவனது பார்வைக்கு வைத்தான்.

ராகவன் கொடுத்த குறிப்புகளை மேலோட்டமாகப் பார்த்த விக்ரமின் உதடுகள் முறுவலிக்க, மெச்சுதலாக அவனைப் பார்த்தான்.

“குட் ஜாப் மேன்” என்று பாராட்டியவன், “ஒரு அரசன் தன் குடிமக்களை வழிநடத்தணும்னா அவனுக்கு நல்லது கெட்டது எடுத்துச் சொல்ல ஒரு மந்திரி இருக்கணும். அது போல இந்த விக்ரமோட வெற்றிக்குப் பின்னால நீ இருக்க” என்று அவனது தோளில் தட்டினான்.

“தேங்க்யூ சார்!” என்றவன் ஏதோ சொல்ல வந்து தயக்கத்துடன் நின்றான்.

“என்ன மேன் ஏதோ கேட்க வந்து தயங்கி நிக்கிற… என்ன விஷயம்?” என்றான்.

“நேத்து பார்ட்டியில் என்ன பிரச்சனை சார்?”

முன்தினம் இரவு பார்ட்டியில் அத்துல் கௌரவ் மோட்டார்ஸின் ப்ரொப்பரைட்டர் தன்னிடம் நேருக்கு நேராக மோதியதைச் சொன்னான்.

“அந்த ஆளைச் சும்மாவா விட்டீங்க சார்?” என்று கோபத்துடன் கேட்டான் ராகவன்.

“ராகவன்! சிரிச்சே கழுத்தை அறுப்பதுன்னு ஒரு சொல் இருக்கு… கோபத்தை நேராக காட்டாமல் நம்ம செயல்ல காட்டணும். காட்டுவேன் யோசிக்காமல் ஒரு விஷயத்தில் இறங்கமாட்டேன்,

இறங்கிட்டா எதிராளியை தலைதூக்க விடாமல் செய்திடுவேன். இந்த விக்ரமோட தந்திரம் என்னன்னு அவனுக்கு புரியும் போது எல்லாம் முடிந்து போயிருக்கும்" நிதானமாக பேசினாலும் அவனது கண்களில் தெரிந்த வெறியை ராகவன் உணர்ந்தேயிருந்தான்.

"ஓகே ராகவன், வேலையைப் பார்ப்போம்" என்று தனது வேலையில் கவனமாக, ராகவன் நிதானமான நடையுடன் தனது இருக்கைக்குத் திரும்பினான்.

நான்கு ஆண்டுகளாக விக்ரமின் நிழலாக இருக்கும் ராகவனுக்கு, தான் நினைத்ததைச் சாதிக்க, எந்த அளவிற்கும் இறங்கும் விக்ரமின் சில நடவடிக்கைகள் கொஞ்சம் பிடித்தம் இல்லாமலும், சில விஷயங்களில் புரியாத புதிராகவும் தென்பட்டான். அவனது சுபாவம் இது தான் என்று புரிந்த போதும் இதனால் ஏற்பட்ட பிரச்சனைகள் என்றாவது மோசமான விளைவைக் கொடுக்கும் என்று தெரிந்தே இருந்தது. ஆனாலும் அவனால் எதுவும் செய்ய முடியாமல், பெருமூச்சை மட்டுமே விடமுடிந்தது.

** ********************

"வரவர உன்னோட அலம்பலுக்கு அளவே இல்லாமல் போச்சு ஜோ... இப்படி உடம்பை வருத்திகிட்டு என்னைப் பார்க்க வான்னு எந்த சாமிடீ சொல்லியிருக்காங்க? தெருவுக்குத் தெருவுல பிள்ளையார் கோயில் இருக்கு அதை விட்டுட்டு இவ்வளவு தூரம் இருக்க வரணுமா?" திட்டிக்கொண்டே, ஜோதியுடன் சதுர்ஷிரிங்கி மலைக் கோவிலின் படியிறங்கிக்கொண்டிருந்தாள் வைஷு.

"உன்னை மாதிரியே இந்த மலைமேலயிருக்கும் பார்வதி தேவியும்

எனக்கு ப்ரெண்ட். நானும், அவரும் முதன்முதலில் இந்தக் கோவிலில்தான் சந்திச்சோம். உனக்குத் தெரியும் தானே" என்ற ஜோதியின் முகம் சட்டென பொலிவிழந்து போனது.

"அடடா எனக்குத் தெரியாதா... விடு நான் சும்மா விளையாடினேன்" என்று ஆறுதலுடன் அவளது தோளை அணைத்துக் கொண்டாள். "அழுகையை முதல்ல நிறுத்து ஜோ! சியர் அப்' என்று தேற்றியவள், "நீ ஆட்டோ ஸ்டேண்டில் இரு நான் இந்தத் தட்டைக் கொடுத்துட்டு வந்திடுறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றாள்.

கடையில் தட்டைக் கொடுத்துவிட்டு எங்கோ வேடிக்கைப் பார்த்துக்கொண்டே வந்த வைஷாலியின் அருகில், "ஹலோ!" என்று குரல் கேட்டதும், திடுக்கிட்டுத் திரும்பியவள் அங்கே சிரித்தபடி நின்றுக்கொண்டிருந்தவனை சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

'இவன் எங்கே இங்கே...! ஹய்யோ... ஜோதி!' என்று நினைத்தவளின் திகைத்தப் பார்வை அவனது முகத்தில் நிலைத்திருந்தது.

"ஹலோ! வைஷாலி..." என்று அவளது முகத்திற்கு நேராக கையை ஆட்டினான்.

சுதாரித்துக்கொண்டவள், "சார், நீங்க இங்கே... எதிர்பார்க்கவேயில்லை..." என்று மழுப்பலாகச் சொன்னாள்.

"அதை உன் பார்வையே சொல்லுதே... அதிருக்கட்டும் நீ எங்கே இங்கே...?" என்று எதிர் கேள்வி கேட்டான்.

"அது சும்மா... எக்சாம் வருதில்லையா..." என்றாள்.

“ஓ! சாமிகிட்ட இவ்வளவு லஞ்சம் கொடுக்கறேன்னு பேரம் பேசிட்டு வரியா” என்று கிண்டலாகக் கேட்டான்.

“ஆமாம்…” என்றவள், “ஆஹ்! நான் ஏன் லஞ்சம் கொடுக்கணும்… சும்மா ஹாஸ்ட்டலிலேயே இருக்க போர் அடிச்சுது அதோட இன்னைக்கு சண்டே இல்லையா அதான் வந்தேன்” என்றாள்.

பேச்சு அவனிடமிருந்தாலும் கண்கள் ஜோதியைத் தேடியது. அவளது கண்கள் அலைபாய்வதைக் கண்டதும் சுற்றும் முற்றும் பார்த்தான்.

“ஹே! யாரைத் தேடுற? ஃப்ரெண்ட்ஸ்கூட வந்தியா என கேட்டான்.

“அதெல்லாம் இல்லை… உங்க கூட வரும் ஒட்டுண்ணியைக் காணோமேன்னு தேடினேன்… வரலையா” என்றாள் தழைந்த குரலில்.

“வைஷாலி, ராகவனைப் பத்தி உனக்குத் தெரியாது. அவனை மாதிரி ஒருத்தனைப் பார்ப்பது ரொம்ப கஷ்டம். நீ அவனை எப்போ பார்த்தாலும் வம்பிழுத்துட்டு இருக்க” என்றான் சற்று அழுத்தமாக.

‘ஆமாம் சரியான சிடுமூஞ்சி’ என்று சொல்ல நினைத்த வார்த்தையை அவனது முகத்தைக் கண்டதும் சொல்லாமல் நிறுத்திக் கொண்டாள்.

“ஓகே சார்! அவரைப் பத்தி எனக்கு என்ன வந்தது. என்னை மாதிரி ஒரு அழகான, ஸ்மார்ட்டான செக்கரட்டரியை நீங்க இழக்கறீங்க… எனக்கு ஒண்ணும் நஷ்டமில்லை. எனக்கு நேரமாகுது நான் கிளம்பறேன்…” என்று கிளம்பினாள்.

“ஹாஸ்ட்டலுக்குத் தானே அரைமணி நேரம் வெயிட் பண்ணு வந்திடுறேன்” என்றான்.

“நான் உங்களை மாதிரி இல்லை சார் எனக்கு நிறைய கமிட்மெண்ட் இருக்கு. பை” என்றவள் கையசைத்துவிட்டு வேகமாக ஆட்டோ ஸ்டாண்டை கடந்து அவனது பார்வையிலிருந்து மறைந்தாள்.

அவள் செல்வதை புன்னகையுடன் பார்த்துக்கொண்டே நின்றிருந்தவன், ஒர் ஆட்டோவின் பின்னால் மறைந்து தன்னை நோட்டம் விட்டுக்கொண்டிருந்த உருவத்தைப் பார்த்தான். தான் பார்ப்பதை உணர்ந்ததும் வேகமாக வேறொரு ஆட்டோவில் ஏறி சென்றவளை பார்த்துவிட்டான்.

“ஜோ…தி…!” நெற்றிச் சுருங்க, கண்கள் இடுங்க பார்த்துக்கொண்டிருக்கும் போதே ஆட்டோ வேகமெடுத்தது. யோசனையுடன் தாடையை தடவிக்கொண்டான்.

அத்தியாயம் - 8

“போனை எடுக்காமல் இந்த ராகவன் என்ன செய்றான்?” கடுப்பில் முணுமுணுத்தபடி வீட்டினுள் நுழைந்த விக்ரமின் நாசியை, கமகமவென சமையலின் மணம் தாக்கியது.
கதவைத் திறக்கும் சத்தம் கேட்டு சமையலறையிலிருந்து வெளியே வந்த சீமாவைக் கண்டதும் ஆச்சரியமடைந்தான்.

“ஹே! நீ எப்போ வந்த? வர்றதா சொல்லவேயில்லை. வந்ததும் வராததுமா சமையல்ல புகுந்திட்டியா?” என்றான் புன்னகையுடன்.

“சர்ப்ரைஸ் விசிட்… அதோடு நீ இப்படி தப்பர்த்தம் பண்ணிக்க வேண்டிய

அவசியமே இல்லை. சமைச்சி வச்சதை டேஸ்ட் பண்றது மட்டும்தான் என் வேலை” என்றாள்.

“அதானே பார்த்தேன்; நீ திருந்திட்டியோன்னு ஒரு நிமிஷம் பயந்தே போயிட்டேன்.”

“அது சரி” என்று தலையாட்டியவள், வார்த்தைக்கு வார்த்தை பேசினாலும் இன்னைக்கு உன் முகத்தில் இன்னைக்கு ஒளி குறையுதே… ஏதாவது பிராப்ளமா?” என்று விசாரித்தாள்.

திவானில் கால்நீட்டி அமர்ந்தவன், “பிராப்ளம் இல்லை ஆனால் சின்ன குழப்பம்” என்றபடி அவளது முகத்தைப் பார்த்தான்.

அவனது பதிலைக் கேட்டு நிமிர்ந்து அமர்ந்தவள், “வழக்கமா நீ தானேப்பா எல்லோரையும் குழப்புவ! உன்னையும் ஒருத்தர் குழப்பறாங்களா ஆச்சரியமா இருக்கே” என்று வியந்தாள்.

“இன்னைக்கு சதுர்ஷிரிங்கி கோவிலுக்குப் போயிருந்தேன்… எதிர்பார்க்காம வைஷாலியை மீட் பண்ணினேன்.”

“நியாயமா இதுக்கு நீ சந்தோஷப்பட்டிருக்கணும்… குழப்பம் எங்கேயிருந்து வந்தது?”

“ம், வைஷாலி கிளம்பினதும், நான் கோவிலுக்குப் போக திரும்பினேன். அங்கே ஜோதி மறைந்திருந்து என்னைப் பார்த்துட்டு இருந்தா…” என்றான்.

“ஓ!” என்று புருவத்தை உயர்த்தினாள் சீமா.

“ஜோதி, பிரெக்னண்ட்டா இருக்கா சீமா!”

வாய்விட்டு நகைத்த சீமா, “ஹே! கல்யாணமானா இதெல்லாம் சகஜம் தானே... இதுக்கா இத்தனை பில்டப்” என்றாள்.

“இல்லை சீமா, சம்திங் ராங். அவளோட அந்த பழைய சிரிப்பு, கண்களில் தெரியும் அந்த ஸ்பார்க் எல்லாம் மிஸ்ஸிங்” என்று உணர்ச்சிவயப்பட்டு சொன்னான்.

“ஏன், போய் அவளையே கேட்கறது தானே” என்று எரிச்சல்பட்டாள்.

“கேட்டிருப்பேன். ஆனால் நான் அவளை பார்த்ததும் வேகமா ஆட்டோவில் ஏறி போய்ட்டா” என்றான்.

‘ஸ்’ என்று பெருமூச்சு விட்டவள், “விக்ரம் இது உனக்குத் தேவையில்லாத விஷயம். தூக்கிப் போட்டுட்டுப் போ. ஏற்கெனவே அவளுக்கு உன்னைக் கண்டால் ஏனோ பிடிக்காது. இதை எத்தனையோ முறை உனக்கு நான் சொல்லியிருக்கேன்... இப்பவும் சொல்றேன்” என்றாள்.

“என்னால அப்படி இருக்கமுடியலையே சீமா. அதான் ராகவன்...” என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே ராகவனிடமிருந்து அழைப்பு வந்தது.

விக்ரம் அவசரமாக போனை எடுக்க, “எத்தனை தடவை சொன்னாலும் உனக்குப் புரியாது” என்ற முனகலுடன் எழுந்து சென்றாள்.

போனை எடுத்த விக்ரம் நேரடியாக்க, “ராகவன்! எத்தனை

விஷயங்களை என்னிடம் மறைச்சிருக்க…” என்று பொரிந்தான்.

“என்ன சார் சொல்றீங்க? நான் என்ன செய்தேன்?” என்று புரியாமல் கேட்டான்.

“இன்னைக்கு கோவில்ல ஜோதியைப் பார்த்தேன்” என்றாதும் மறுமுனையில் சப்தமே இல்லை.

“ராகவன்…” என்று அழைத்தான்.

‘ஹூம்!’ என்று சீறலாக மூச்சுவிட்ட ராகவன், “இதைச் சொல்ல எனக்கு சங்கடமாகத் தான் இருக்கு… ஆனாலும் சாரி சார், என் குடும்ப விஷயத்தில் நீங்க தலையிடாதீங்க” என்று முகத்திலடித்தார் போல சொன்னான்.

ராகவனின் வார்த்தைகள் விக்ரமிற்கு ஆத்திரத்தைக் கொடுக்க, மேற்கொண்டு அவன் பேச இடம் கொடுக்காமல் போனை அணைத்தான். கோபத்துடன் கார் சாவியை எடுத்துக் கொண்டு கதவை அறைந்து மூடிவிட்டு வெளியேறினான்.

சப்தம் கேட்டு ஓடிவந்த சீமா, கதவை அறைந்து சாத்திய வேகத்திலிருந்தே என்ன பேசியிருக்கக் கூடும் என்று விஷயத்தை யூகித்துக் கொண்டவளுக்கு, விக்ரமின் இந்தக் குணம் பெரும் வேதனையைக் கொடுத்தது.

****

”ஹாய் வைஷாலி” என்று ஸ்நேக பாவத்துடன் ஒலித்த புதிய குரலைக் கேட்டதும், “சாரி… நீங்க” என்று இழுத்தாள்.

“அப்போ என் நம்பரை நீ சேவ் பண்ணாலைன்னு நல்லா புரியுது. ஹும்! நாந்தான் ரொம்ப பத்திரமா உன் நம்பரை பர்சனல்ன்னு சேவ் பண்ணி வச்சிருக்கேன்” என்றதும் தான் அது சீமா என்று வைஷாலிக்குப் புரிந்தது.

நாக்கைக் கடித்துக் கொண்டவள், “ஹய்யோ! சீமா மேடம் சாரி சாரி; நீங்க சொல்றது போல எதுவும் இல்லை. உங்க பிஸ்னஸ் கார்ட் பத்திரமா என் பர்சில் இருக்கு. தேவையில்லைன்னு நினைச்சா வச்சிருப்பேனா? உங்க நம்பரை ஃபீட் பண்ணி ரிஜெக்ட் காலில் இல்ல போட்டிருப்பேன். பாருங்க உங்க குரலை வச்சே கண்டுபிடிச்சிட்டேன்” என்று சமாளித்தாள்.

“இது நல்ல கதையா இருக்கே! நான் க்ளூ கொடுத்தேன் நீ ஈசியா கண்டுபிடிச்சிட்ட” என்று மடக்கினாள் சீமா.

“அச்சச்சோ நான் சரண்டர்… ப்ளீஸ்” என்றாள்.

“அப்படி வா வழிக்கு. நீ என்னிடம் சரண்டர் ஆனதை கொண்டாட நாம இன்னைக்கு நைட் டின்னருக்கு வெளியே போறோம்” என்றாள்.

சீமாவின் அழைப்பை எதிர்பார்க்காத வைஷாலி திடுக்கிட்டாள். “டின்னருக்கா! சாரி சீமா மேடம் சான்சே இல்லை. வெளியே போனால் நைட் எட்டு மணிக்குள்ள நாங்க ஹாஸ்ட்டலுக்கு திரும்பி வந்தே ஆகணும். அதோடு ஜி.எஸ் நானே ரூல்ஸை மீறினா நல்லா இருக்காது. எல்லோருக்கும் வழிகாட்டினா மாதிரி ஆகிடும்” என்று நாசுக்காக மறுத்தாள்.

“அடடா! புல்லரிக்க வைக்கிறியே வைஷாலி!” என்று கேலியாகச் சொன்ன சீமா விடாமல், “அதைப்பத்தியெல்லாம் நீ கவலைப்படாதே பர்மிஷன் வாங்கறது என் வேலை.”

“இல்லை சீமா மேடம்...” என்று வைஷாலி ஆரம்பிக்க, “ப்ளீஸ் வைஷாலி எனக்கு உன்கிட்ட கொஞ்சம் பேசவேண்டி இருக்கு...” என்றாள் சீமா.

அவளது குரலில் இருந்த ஏஎதோ ஒன்று வைஷாலியை சம்மதம் சொல்ல வைத்தது.

“தேங்க்ஸ் வைஷாலி, நீ தயாராக இரு. இன்னும் ஒன் ஹவர்ல நானே வந்து உன்னை பிக்அப் பண்ணிக்கிறேன். பை” என்று சந்தோஷத்துடன் போனை வைத்தாள் சீமா.

‘தன்னிடம் மனம்விட்டு பேச என்ன இருக்கிறது? அப்படி என்ன விஷயத்தைப் பற்றி என்னிடம் பேசப்போகிறார்கள்?’ குழப்பத்துடனேயே சீமாவின் நம்பரை பதிவு செய்தாள்.

அத்தியாயம் - 9

பொறுத்துப் பொறுத்துப் பார்த்து முடியாமல், கோபத்துடன் ஹோம் தியேட்டர் இருந்த அறைக்குள் நுழைந்த சீமா, இரு காதுகளையும் பொத்திக்கொண்டாள்.

“விக்ரம்! சிஸ்டம் வால்யூமை குறை காது வலிக்குது. எனக்கு ஹாலில் உட்காரவே முடியலை தலைவலி வந்திடும் போல” என்று ஏறக்குறைய கத்தினாள்.

அதைச் சற்றும் காதில் வாங்கிக்கொள்ளாமல், கைகளை பின்னந்தலையில் கோர்த்துக்கொண்டு ஈசி சேரில் சாய்ந்தபடி அமர்ந்திருந்தான். ஒரு கட்டத்தில் தாளமுடியாமல், மியூசிக் சிஸ்டத்தின் பிளக்கை பிடுங்கி எறிந்தாள் சீமா.

சப்தம் நின்று போக கண்களைத் திறந்தவன், “ஏய்! பிளக்கைப் போடு” என்று கத்தினான்.

“இங்கே பாரு சும்மா கத்தாதே. உனக்கு மட்டும் தான் கோபம் வருமா எங்களுக்கு வராதா? கோபம் வந்தால் காரை எடுத்துக்கிட்டு ஊரை சுத்தணும், இல்லைனா வீட்டிலிருக்கும் எங்க காதுகளையெல்லாம் செவிடாக்கணும். கேட்க்க ஆளில்லாமல் ஓரேடியாக ஆடிக்கிட்டு இருக்க இதெல்லாம் நல்லாயில்ல சொல்லிட்டேன். உன் காதை செவிடாக்கிக்கணும்னா நீ தனியா இருக்கும் போது ஆக்கிக்க, ஏன் எங்க எல்லோர் காதையும் சேர்த்து செவிடாக்குற?” என்று இடைவெளி விடாமல் பேசினாள்.

விக்ரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“என்னடா! முறைக்கிற? ஆனா உன் கூட சண்டை போட எனக்கு இப்போ நேரம் இல்லை. சொல்ல வந்ததை சொல்லிட்டு கிளம்பறேன். அதுக்கு அப்புறம் இந்த வீடே இடிந்து தலையில் விழும் அளவுக்கு சத்தமா வச்சிகிட்டு உட்கார்ந்திரு. நான் நைட் டின்னருக்கு வைஷாலியோடு வெளியே போறேன். வர லேட் ஆகும்; தேடாதே” என்றவள் கதவை நோக்கி நடந்தாள்.

விக்ரமிற்கு எந்த ஹோட்டல் என்று கேட்க வேண்டுமென்று துடித்த

நாக்கை அடக்குவது சிரமமாக இருந்தது. எழுந்து நின்றவன் தலையைக் கோதிக் கொண்டு, 'இவளாவது வாயைத் திறந்து நீயும் வான்னு ஒரு வார்த்தை சொல்றாளான்னு பாரு ராட்சசி' என்று மனத்திற்குள் திட்டிக்கொண்டான்.

கைப்பையுடன் தன் அறையிலிருந்து வெளியே வந்தவள் ஹாலில் நின்றிருந்தவனைக் கண்டுக்கொள்ளாமல் அவனைக் கடந்து சென்று கார் சாவியை எடுத்தாள். விக்ரமின் இழுத்துப் பிடித்த பொறுமை பறந்து போனது.

'சீமா…' என்று அவளை அழைக்க நினைக்கும் போதே, "விக்ரம்" என்றபடி அவனை நோக்கி திரும்பினாள்.

'அவளது அழைப்பு அவனுக்கு உள்ளுக்குள் ஆர்ட்டீசியன் ஊற்றாக சந்தோஷம் பெருக்கெடுத்தது. இப்போதாவது கூப்பிடணும்னு தோணியிருக்கே இந்த கூமுட்டைக்கு' என்று நினைத்துக் கொண்டவன், கனகாரியமாக முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டு அவளைப் பார்த்தான்.

'என்கிட்டயேவா?' என மனத்திற்குள் சிரித்துக்கொண்ட சீமா, "நீ மத்தியானம் சாப்பிடாததால் மீந்த சாப்பாட்டை ஃப்ரிட்ஜில் வச்சிருக்கேன். சாப்பிடணும்னு தோணினா சூடு பண்ணி சாப்பிடு" என்றபடி சுவர் கடிகாரத்தைப் பார்த்தவள், "ஹய்யோ மணியாகிடுச்சி, எட்டு மணிக்கு பீனிக்ஸ்ல டேபிள் புக் பண்ணியிருக்கேன். வரேன் விக்ரம்…" என்று கிளம்பினாள்.

*** *** ****

"ம்ம், இந்த ஆலிவ் கிரீன் நல்லா இருக்கா வைஷாலி."

“இதைவிட இந்த மெட்டாலிக் புளூ உங்க நிறத்துக்கு இன்னும் சூட் ஆகும் மேடம்” என்று வேறொரு டாப்ஸை எடுத்தாள் வைஷாலி.

வைஷாலியை அழைத்துக்கொண்டு வந்த சீமா, தனக்கு சில துணிமணிகள் வாங்கவேண்டுமென அந்த மாலிற்கு அழைத்துவர, இருவரும் அரைமணி நேரமாக அந்த ரெடிமேட் கடையை தலைக்கீழாக புரட்டிப் போட்டுக் கொண்டிருந்தனர்.
“ம், நைஸ்…” என்ற சீமா அதே போன்ற மற்றொரு டாப்ஸை எடுத்து பில் போட அனுப்பினாள்.

“எதுக்கு ரெண்டும் ஒரெ மாதிரி அதுக்கு அந்த ஆலீவ் கிரீனே நீங்க எடுத்துட்டு இருந்திருக்கலாமே” என்றாள்.

கிரெடிட் கார்டை வாங்கிக்கொண்டவள், “இது நம்ம ரெண்டு பேருக்கும்” என்றாள்.

“சீமா மேடம், நீங்க என்னை கடங்காரி ஆக்கறீங்க” என்றாள் சற்று கவலையோடு.

“ஏன் நாளைக்கு இதே போல நீ எனக்கு எடுத்துக் கொடுக்க மாட்டியா வைஷூ?” என்று புன்னகைத்தாள்.

“டெ◌ஃபனட்லீ… உங்களுக்கு இல்லாததா…?” என்றாள்.

“ஆனால், உன்னை மாதிரி நான் இப்படியெல்லாம் டயலாக் பேசமாட்டேன். நீ ஆசையாக வாங்கிக்கொடுத்தா சந்தோஷமா வாங்கிக்குவேன்” என்றாள்.

“ஆஹா! சேம் சைய்ட் கோல் போட்டுட்டேனா... ஓகே கொடுங்க நானும் ரொம்ப ரொம்ப சந்தோஷமா வாங்கிக்கிறேன்” என்று கைநீட்ட, புன்னகையுடன் ஒரு கவரை அவளிடம் கொடுத்தாள் சீமா.

இருவரும் பேசிக் கொண்டே ஹோட்டலுக்குள் நுழைய, எதிர்பாராமல் ஒருவன் வைஷாலியின் மேல் இடித்துக்கொண்டு வேகமாக வெளியேறினான்.

ஒரு நொடி தடுமாறி விழ இருந்த வைஷாலியை தாங்கிப் பிடித்துக் கொண்டாள் சீமா. “ஏய்! அறிவிருக்கா உனக்கு?” என்று கத்திய சீமாவை திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றான்.

“உனக்கு ஒண்ணும் ஆகலையே வைஷூ!” என்று பரிவுடன் கேட்டாள்.

“இல்லக்கா... ஐயம் ஓகே” என்றபடி இடித்தவனின் முகத்தை நினைவில் கொண்டுவர முயன்றவளுக்கு அவனை எங்கோ பார்த்திருக்கிறோம் என்று நினைவு வந்தது.

“என்ன சொன்ன அக்காவா...!” ஆச்சரியத்துடன் சீமா கேட்டதும் தான், வைஷாலி தான் சொன்ன வார்த்தையை உணர்ந்தாள்.

புன்னகையுடன், “ஏன் அக்கான்னு சொல்லக்கூடாதா? அப்போ... ஆன்ட்டீன்னு சொல்லட்டுமா?” என்று குறும்பு பேசினாள்.

செல்லமாக முறைத்த சீமா, “அது எதுக்கு பாட்டீன்னு கூப்பிடு இன்னும் நல்லா பொறுத்தமா இருக்கும்” என்று சொல்ல, “உங்க ஆசை அதுதான்னா அப்படியே கூப்பிட்டுடுவோம்” என்று பதில் சொன்னாள்.

“உன்னை… சரியான அறுந்தவாலு” என்று முதுகில் தட்ட, சிரிப்புடன் இருவரும் உள்ளே சென்று தங்களுக்காக ரிசர்வ் செய்திருந்த டேபிளுக்குச் சென்று அமர்ந்தனர்.

ஆர்டர் எடுக்க வெயிட்டர் வர, “ஒரு பத்து நிமிடம் கழித்து வாங்க, ஒருத்தர் வரணும்” என்றாள்.

“யாருக்கா உங்க ஃப்ரெண்ட்ஸ் யாராவது வராங்களா?” என்று கேட்டாள் வைஷாலி.

“ஆமாம்… முக்கியமான வி.ஐ.பி” என்று புன்னகைத்தாள்.

உதட்டைச் சுழித்து தோளைக் குலுக்கியவள், அதற்கு மேல யார் அந்த வி.ஐ.பி என்று கேட்கவில்லை.

“போன்ல என்னிடம் ஏதோ பேசணும்னு சொன்னீங்க. ஆனால், இதுவரைக்கும் என்ன விஷயம்னு சொல்லவேயில்லை சீமாக்கா…!” என்று புன்னகைத்தாள்.

அதுவரை எப்படி பேச்சை ஆரம்பிப்பது என்ற தவிப்பை வெளிக்காட்டாதிருந்த சீமா, தனக்குச் சாதகமான அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டாள். “நீ விக்ரமை உனக்கு பிடிக்குமா?” என்று கேட்டுவிட்ட போதிலும், ‘இதை எப்படி எடுத்துக்கொள்வாளோ?’ என்று சீமாவிற்கு உள்ளுக்குள் கொஞ்சம் பயம் இருக்கத்தான் செய்தது.

சற்று அசட்டையாக அமர்ந்திருந்த வைஷாலி நிமிர்ந்து அமர்ந்தாள். கண்கள் மின்ன, “எனக்கு விக்ரம் சாரை ரொம்பவே பிடிக்கும்” என்றாள்

உற்சாகமாக.

தடுமாறி திணறுவாள், மழுப்புவாள் என்று நினைத்திருந்த சீமாவிற்கு, வைஷாலியின் வெளிப்படையான பதில் ஆச்சரியமூட்டியது. “பிடிக்கும்ன்னா ஏன் பிடிக்கும்? எதுக்குப் பிடிக்கும்?” என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

“பிடிக்கும்னா பிடிக்கும். ஏன் எதுக்குன்னு காரணமெல்லாம் சொல்லத் தெரியாது. சிலரைப் பார்த்ததும் நமக்குப் பிடிக்காமல் போயிடும். ஆனால், ஏன்னு கேட்டா, நமக்கு அதுக்கான காரணம் தெரியாது. இதுவும் அப்படித்தான்” என்று புன்னகைத்தாள்.

“இன்னைக்கு நடந்த ஒரு விஷயத்தை உனக்கு சொல்றேன்; அதுக்குப் பிறகு உனக்கு மனசுல பட்டதை சொல்லு” என்றவள், அன்று பார்ட்டியில் நடந்த விஷயம், தனக்குத் தெரிந்த சில விஷயங்களைச் சொல்லிவிட்டு, “உனக்கு விக்ரமோட செக்கரட்டரி ராகவனைத் தெரியும் தானே” என்றாள்.

“ம், தெரியும்” என்றாள்.

“இன்னைக்கு ரெண்டு பேருக்குள்ளும் ஒரு சின்ன மிஸ் அண்டர்ஸ்டாண்டிங் ஆகிப்போச்சு…” என்றவள் விக்ரம் சொன்னவற்றையும், அதன் பிறகு நடந்தவற்றையும் சொல்ல, வைஷாலி இமைக்காமல் கேட்டுக்கொண்டாள்.

“நான் ஏத்தனையோ முறை சொல்லியிருக்கேன் வைஷூ, இந்த விக்ரம் கேட்க மாட்டேன்றான். ராகவன் இவனுக்குப் பர்சனல் செக்கரட்டரி தான். அதுக்காக, அவனோட பர்சனல் லைப்ல

நுழையலாமா! ராகவனுக்கு போன் செய்து கேட்டதும் ராகவன் என்ன மூடில் இருந்தானோ அதே என் குடும்ப விஷயத்தில் தலையிடாதீங்கன்னு சொல்லிட்டான்” என்று சீமா சொன்னதைக் கேட்ட வைஷாலி திகைத்துப் போனாள்.

“யாராக இருந்தாலும் அவங்களோட சொந்த விஷயத்தைக் கேட்டா கோபம் வரத்தானே செய்யும். உடனே சாருக்கு மூக்குக்கு மேல கோபம் வந்திடுச்சி. காரை எடுத்துட்டு வெளியே போயிட்டான். போனையும் சைலண்ட்ல போட்டுட்டாச்சு. ஈவ்னிங் வீட்டுக்கு வந்தவன் மியூசிக் சிஸ்டத்தை அலறவிட்டுட்டு உட்கார்ந்திருக்கான். என்னால் தாங்க முடியலை.

கோபம், நினைச்சதைச் செய்யணும்னு பிடிவாதம்… இதெல்லாம் எங்கே போய் முடியும்னு தெரியலை. அவனோட மனசுல என்ன இருக்குன்னு சுலபத்தில் கண்டுபிடிக்க முடியாது. அவன் நல்லவன் தான்; ஆனால், இந்த மாதிரி குணம் இருந்தால் கல்யாணத்துக்குப் பிறகு, இவன் எப்படி இருப்பானோன்னு நினைச்சா, சில சமயம் ரொம்ப பயமா இருக்கு வைஷூ!” என்றாள் கவலையுடன்.

வைஷாலி சட்டென சிரித்தாள். “சொல்றேன்னு தப்பா நினைச்சிக்காதீங்க, அவரோட வாழ்க்கைல உங்களுக்கு இருக்கும் அக்கறை, நிச்சயமா பாராட்டப்பட வேண்டிய ஒண்ணு தான். ஆனால், நீங்க அனாவசியமா கவலைப்படுறீங்கன்னு நினைக்கிறேன். அவர் ராகவன் குடும்பத்தை தன் குடும்பமாக நினைத்ததால் தான் உரிமையாக கேட்டிருக்கார்…” என்றாள்.

“நீயாவது என்னைப் புரிஞ்சிட்டு இருக்கியே தேங்க்ஸ் வைஷாலி” என்றபடி அவளருகிலிருந்த இருக்கையில் விக்ரம் அமர, வரவேற்பாக

புன்னகைத்தாள் வைஷாலி.

“நீ எங்கே இங்கே வந்த...?” என்று சிடுசிடுத்தாள் சீமா.

“சாப்பிடத்தான்... ஏன்? என் இமேஜை இன்னும் டேமேஜ் பண்ணமுடியாமல் போச்சேன்னு கவலையாயிருக்கா...?” என்று கேட்டான்.

“உன்கிட்ட எனக்கென்ன பயம். நீ இருக்கும் போதே சொல்வேன்...” என்று வீம்புடன் சொன்னவள், “உனக்குத் தான் சாப்பாடு ஃப்ரிட்ஜ்ல வச்சிட்டு வந்தேனே...”

“எனக்கு ஹோட்டல்ல சாப்பிடணும் போல இருந்தது.”

“அதுக்கு இதே ஹோட்டலுக்கு வந்து நான் ரிசர்வ் பண்ணின டேபிளுக்கே வந்து உட்காரணுமா?” என்றாள்.

இருவரது செல்ல சண்டையையும் பார்த்த வைஷாலிக்கு சிரிப்பாக வந்தது. இருவரின் பேச்சிலும் மருந்துக்குக் கூட தீவிரம் இல்லை என்று புரிந்த போதும் விடாமல் வம்பிழுப்பதை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“நான் உன்னைப் பார்த்தா வந்தேன். வைஷாலியைப் பார்த்து வந்தேன்” என்றவன், “ஏன் வைஷாலி நான் உன்னோடு சேர்ந்து சாப்பிடக்கூடாதா?” என்று கேட்டான்.

வைஷாலியும் உற்சாகமாக, “அதுக்கென்ன சார் தாராளமா...” என்றவள் சீமாவைப் பார்த்து நமுட்டுச் சிரிப்பு சிரித்தாள்.

“வைஷூ நீ என்னோட பக்கமா இல்லை அவன் பக்கமா...” என்று பேச்சு வைஷாலியிடம் தாவியது.

'இது இப்போதைக்கு முடியாது போலயிருக்கே' என்று நினைத்த வைஷாலி, “நானா... நடுவுல கொஞ்சம் காணாமல் போன பக்கம்...” என்று நொந்தபடி சொன்னாள்.

விக்ரம் சிரிப்பை அடக்கியபடி, “வைஷூவை எதுக்கு வம்புக்கிழுக்கற? என்கிட்ட பேசு” என்றான்.

“டிரீட் கொடுக்கறேன்னு அவளைக் கூட்டிட்டு வந்தது நான். நான் தான் பில் பே பண்ணணும்” என்று செல்லமாக மிரட்டினாள்.

“ஏன் நான் டிரீட் கொடுக்கமாட்டேனா? இல்லை பில்லுக்கு பணாம் கொடுக்கமாட்டேனா...?” என்றான் வீராப்பாக.

“யார் சொன்னது நீ கொடுக்கமாட்டேன்னு... இப்போ மட்டும் என்ன நீ தானே பில்லுக்குப் பணம் கொடுக்கப்போற” என்றாள் சீமா.

அவளது பதிலைக் கேட்ட விக்ரம், ‘அடிப்பாவி இதுக்கா இத்தனை பில்டப் உனக்கு’ என்பது போல பார்க்க, அவனது முகம் போன போக்கைப் பார்த்து பெண்கள் இருவரும் அடக்கமட்டாமல் சிரித்தனர்.

புன்னகைத்தபடியே திரும்பிய சீமா, திகைத்தப் பார்வையுடன் தங்களையே பார்த்துக்கொண்டிருந்த ராகவனைப் பார்த்ததும், “ஹாய் ராகவன்!” என்று கையசைக்க, விக்ரமும், வைஷாலியும் ஒருசேர திரும்பிப் பார்த்தனர்.

அத்தியாயம் - 10

கடுகடுத்த முகத்துடன் ஹோட்டலின் உள்ளறையிலிருந்து வெளியே வந்த ராகவன், பெண்களின் நகையொலிக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அங்கேஅமர்ந்திருந்த மூவரையும் கண்டவன் திகைத்தான். சப்தமில்லாமல் அங்கிருந்து வெளியேறிவிடத்தான் எண்ணினான். ஆனால், அதற்குள் அவனைப் பார்த்துவிட்ட சீமா, கையசைத்து நலம் விசாரிக்க, வேறு வழியின்றி அவர்களருகில் சென்றான்.

வலிய புன்னகைத்தவன், “ஹலோ மேடம். நல்லாயிருக்கேன்” என்றவன் அவளது நலத்தையும் விசாரித்துக்கொண்டான்.

“ஹலோ சார்!” என்றவனுக்கு வெறும் தலையசைப்பை மட்டும் பதிலாக்கினான் விக்ரம்.

ராகவனின் நிலை தர்மசங்கடமாக்க இருந்தது. அங்கே நிற்கவும் முடியாமல், செல்லவும் முடியாமல் தவிப்புடன் விக்ரமையும், சீமாவையும் பார்த்தான்.

வைஷாலி அமைதியாக ராகவன், விக்ரம் இருவரின் முகங்களையும் ஆராய்ந்தாள். அவளுக்கு ஒன்றுமட்டும் புரிந்தது. ராகவன் வெளிப்படையாக காட்டும் அனைத்து உணர்ச்சிகளையும் விக்ரம் உள்ளடக்கியபடி அமர்ந்திருப்பதைப் பார்த்தவளுக்கு, அவன் மீது பரிதாபம் கூட தோன்றியது. சீமாவை நிமிர்ந்துப் பார்த்தாள் வைஷாலி.

இருவரையும் கவனித்துக்கொண்டிருந்த சீமாவும், “என்ன ராகவன் இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க?” என்று கேட்டு, அங்கே நிலவிய இறுக்கமான, மௌனத்தை மாற்ற எண்ணினாள்.

“ஃப்ரெண்ட் ஒருத்தரைப் பார்க்க வந்தேன் மேடம்” என்றவன் ஓரப்பார்வையால் விக்ரமை பார்த்தான்.

அவனோ இருகைகளையும் கோர்த்து தாடையைத் தாங்கியபடி அமர்ந்திருந்தான். பெண்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

“சரி மேடம் நான் கிளம்பறேன் நேரமாகுது” என்று கிளம்ப ஆயத்தமானான் ராகவன்.

“நீங்களும் எங்களோடு ஜாயின் பண்ணுங்களேன் மிஸ்டர். ராகவன்” என்றாள் வைஷாலி. விக்ரம் லேசாக இமைகளை உயர்த்தி அவளைப் பார்த்தான்.

அதைக் கண்டுகொண்ட ராகவன், “பரவாயில்லை… வீட்ல” என்று அவன் சொல்ல ஆரம்பிக்க, “உட்கார் ராகவன்… டின்னர் முடிச்சிட்டுப் போகலாம்” என்று தன் அருகில் இருந்த இருக்கையைச் சுட்டிக்காட்டினான் விக்ரம்.

லேசாக புன்னகைத்த ராகவனும் மேற்கொண்டு மறுக்காமல், “தேங்க்யூ சார்…” என்றபடி அவனருகில் அமர்ந்தான்.

உணவை ஆர்டர் கொடுத்துவிட்டு பெண்கள் இருவரும் மெதுவான குரலில் பேசிக்கொள்ள, விக்ரம் சற்று ஒதுக்கத்துடனும், ராகவன் ஒரு எதிர்பார்ப்புடனும் அமர்ந்திருந்தனர். வரிசையாக கொண்டுவந்து அடுக்கப்பட்ட உணவு வகைகளைப் பரிமாற வந்த வெயிட்டர்களை அனுப்பிவிட்டு, தாங்களே பரிமாறிக்கொண்டனர். சிக்கன் லாலிபாப்

இருந்த தட்டை எடுத்த விக்ரம், ராகவனின் தட்டில் பரிமாறினான்.

இதைச் சிறிதும் எதிர்பார்க்காத ராகவன், “சார்...!” என்று திகைப்புடன் அவனது கரத்தைப் பற்றினான்.

“ஹே! சாப்பிடு... மேன்” என்று புன்னகைத்தான் விக்ரம்.

பற்றிய கையை விடாமல் நெகிழ்ந்து போனவனாக, தழுதழுத்தக் குரலில், “சாரி சார்...” என்றதும், “மீ டூ... ராகவன்” என்று பதிலுரைத்த விக்ரமும் இளகியிருந்தான்.

அவர்களிருவரையும் பார்த்த வைஷாலிக்கு, விக்ரம் மீது இருந்த அபிமானம் மேலும் உயர, அவனைப் பார்த்து ஸ்நேகத்துடன் புன்னகைத்தாள். கசிந்திருந்த ஈரத்தை வெளிக்காட்டாமலிருக்க, கருமணிகளை இங்கும் அங்குமாக சுழற்றினாள். அவளது மனம் நிலைகொள்ளாமல் எங்கெங்கோ அலைந்து கொண்டிருக்க, கைகள் தட்டிலிருந்த உணவை அளைந்து கொண்டிருந்தது.

ராகவன், சீமா இருவரிடமும் பேசிக்கொண்டிருந்தாலும், விக்ரம் வைஷாலியைக் கவனிக்கத் தவறவில்லை. “வைஷாலி! எப்பவும் ராகவனை வம்பிழுப்ப, இன்னைக்கு என்ன அமைதியாக இருக்க?” என்று வேண்டுமென்றே கேட்டான்.

நிமிர்ந்து அவனைப் பார்த்தவள், “ஏன் சார் என் வாயைப் பிடுங்கறீங்க? நான் சும்மா இருந்தாலும் நீங்க இருக்கமாட்டீங்க போல இருக்கே. நான் ஏதாவது சொல்லி, உடனே நீங்க ‘வைஷாலி, ராகவனைப் பத்தி உனக்குத் தெரியாது. அவனை மாதிரி ஒருத்தனைப் பார்ப்பது ரொம்ப கஷ்டம். நீ ஏன் எப்போ பார்த்தாலும் அவனை வம்பிழுத்துட்டு இருக்க?’

அப்படின்னு கேட்கவா?” என்று அவனைப் போலவே பேசிக்காட்ட, அங்கே மீண்டும் அனைவரையும் கலகலப்பு தொற்றிக் கொண்டது.

ராகவன் அவள் சொன்னதற்கு புன்னகைத்தாலும், அவனது முகம் பரிதவிப்பையே காட்டியது. பேசிக்கொண்டே சாப்பிட்டு முடித்துக் கிளம்பினர்.

“விக்ரம், நாங்க கிளம்பட்டுமா? வைஷாலியை நான் ஹாஸ்ட்டலில் விட்டுட்டு வரேன்” என்றாள் சீமா.

“ஒரு ஐந்து நிமிஷம். ராகவனிடம் பேசிட்டு வரேன் நீங்க வெயிட் பண்ணுங்க,” என்றவன், “ராகவன், பைக்ல தானே வந்த?” என்று கேட்டபடி அவனுடன் இணைந்து நடந்தான்.

பைக் நிறுத்தத்திற்கு சற்று தள்ளி, எதிர் வரிசையில் தங்கள் கார் நிறுத்தியிருந்த இடத்தில், பெண்கள் இருவரும் நின்று பேசிக்கொண்டிருந்தனர்.

வைஷாலி நின்றிருந்த இடத்திலிருந்து இருவரையும் நன்றாக பார்க்கமுடிந்தது. விக்ரம் ஏதோ சொல்ல ராகவன் தயங்கித் தயங்கி ஏதோ சொல்ல ஆரம்பித்தான். அவனது தோளில் தட்டிய விக்ரம் பதிலுக்கு ஏதோ சொல்வதையும் பார்த்தாள்.

ராகவன் சொன்னதை ஆழ்ந்து கேட்டுக்கொண்ட விக்ரம், “இதை ஆரம்பத்திலேயே என்னிடம் சொல்லியிருக்கலாம்” என்றான்.

“நீங்க எங்க ரெண்டு பேருக்காகவும் எவ்வளவோ செய்திருக்கீங்க... ஆனாலும் ஜோதி...” என்றவனுக்கு மேற்கொண்டு பேச சங்கடமாக

இருந்தது. "ஒரு கட்டத்துக்கு மேல என்னால் முடியலை சார்… நானும் மனுஷன் தானே…" என்று வெறுப்புடன் தலையைக் கோதிக்கொண்டான்.

"புரியுது… ஓகே பிரச்சனைன்னு வந்தாச்சு சரி பண்ணுவோம்…" என்று அவனது தோளைத் தட்டிக் கொடுத்தான்.

வாட்ச்சைப் பார்ப்பதும் தங்களைப் பார்ப்பதுமாக நின்றிருந்த வைஷாலியைப் பார்த்தவன், "உங்களுக்கும் நேரமாகுது கிளம்புங்க சார்…" என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே, அவர்களுக்குப் பின்னால் கிறீச்சிட்டு வந்து இரண்டு பைக்குகள் நின்றது.

விக்ரமும், ராகவனும் வேகமாகத் திரும்பிப் பார்த்தனர். அந்தப் பைக்கின் பின்னால் அமர்ந்திருந்தவன், "எங்கேடா அவ…? இருக்கா தானே" என்று ஆத்திரத்துடன், அங்கே காத்திருந்தவனைக் கேட்டான்.

"அதோ அங்கேதான் இருக்கா… அவளைப் பார்த்ததும் அடிச்சிபிடிச்சி வந்து உனக்கு போன் பண்ணினா நீ இத்தனை லேட்டா வர்ற. இன்னும் கொஞ்சம் நேரமாகியிருந்தா அவ கிளம்பியிருப்பா" என்றவன் மற்றொருவனின் பைக்கின் பின்னால் அமர்ந்துக்கொள்ள, அங்கேயிருந்த ஆட்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் பைக்கை வேகத்துடன் கிளப்பினர்.

சீமாவிடம் பேசிக்கொண்டே சப்தம் கேட்டுத் திரும்பிய வைஷாலி, தங்களை நோக்கி வந்த பைக்குகளைப் பார்த்ததும், மனத்தில் இனம்புரியா பயம் தோன்ற, தன்னையும் அறியாமல் இரண்டடி பின்னால் நகர்ந்தாள்.

பைக்கிலிருந்தவன் தன்னை நோக்கி கை நீட்டுவது மட்டும் புரிந்தது.

‘வீல்’ என்ற அலறலுடன் கீழே விழுந்தவளுக்கு, தன்னருகில் ஓடிவந்த விக்ரமின் முகம் மங்கலாகத் தெரிய, சிறிது சிறிதாக தனது நினைவை இழந்தாள்.

அத்தியாயம் - 11

ஷவரில் நனைந்துகொண்டிருந்த விக்ரமின் மனம் முழுவதும் கோபமும், ஆத்திரமும் நிறைந்திருந்தது. ‘தான் அவளருகிலேயே இருந்தும் இத்தகைய நிலையை ஏற்பட விட்டுவிட்டோமே’ என்ற இயலாமையில் தன் மீதே அவனுக்குக் கோபம் எழுந்தது. கண்மூடி கண் திறப்பதற்குள் நடந்து முடிந்த அந்த நிகழ்வு, இப்போதும் அவனது உடலை அதிரச் செய்தது.

ராகவனுடன் பேசிக்கொண்டிருந்த விக்ரம், தங்களுக்குப் பக்கவாட்டில் வந்து நின்ற பைக்கிலிருந்தவர்கள் பேசியதைக் கேட்டான். யாரென்று புரியாமல் இருந்தவன், “அதோ!” என்று வைஷாலியிருந்த பக்கம் கைகாட்டிவிட்டு வேகமாக கிளம்பினர். சூழ்நிலையை உணர்ந்து சுதாரிப்பதற்குள், அவர்கள் வைஷாலியை நெருங்கியிருந்தனர்.

அவளது கரத்தைப் பற்ற முயற்சித்தவனின் கைகளில் அகப்படாமல், திரும்பி நகர முயன்றவளின் துப்பட்டா, அவனது கையில் சிக்கியது. துப்பட்டாவை அவளது கழுத்தைச் சுற்றிப் போட்டிருந்ததால், பைக்கின் வேகத்தோடு இழுக்கப்பட்டு தடுமாறி மூன்று, நான்கடி ஓடினாள். வழியிலிருந்த ஸ்பீட்பிரேக்கரில் தடுக்கிவிடப்பட்டு, கீழே விழுந்தவளின் வலது பக்க நெற்றி முழுவேகத்துடன் தரையில் மோத, வலியில் துடித்தவள் அப்படியே மயங்கிச் சரிந்தாள்.

வைஷாலியை இந்த நிலைக்கு ஆளாக்கியவர்கள் அதைச் சற்றும்

எதிர்பார்க்கவில்லை. சிறிது தூரம் சென்று திரும்பிப் பார்த்தவர்கள், வைஷாலி விழுந்து கிடப்பதையும், ஏய்...!' என்றபடி தங்களை நோக்கி ஓடிவந்த ஆண்கள் இருவரையும் கண்டதும் பயத்துடன் பைக்கில் பறந்தனர். அவர்களைப் பிடிக்க ராகவன் பின்னோடு ஓட, விக்ரம் தவிப்புடன் அவளருகில் குனிந்தான்.

“வைஷாலி!” என்று அழைத்த விக்ரமின் வார்த்தைகள் தொண்டைக்குழியோடு நின்று போனது. பதற்றத்துடன் குனிந்து அவளது தலையைப் பிடித்துத் தூக்கியவனின் கைகள் முழுவதும் இரத்தம். வாழ்க்கையில் முதன்முறையாக இரத்தத்தைப் பார்த்துச் செய்வதறியாமல் திகைத்தான்.

திரும்பி வந்த ராகவன், “சார்! வைஷாலியை தூக்குங்க, நான் காரை எடுக்கிறேன்” என்று சீமாவிடமிருந்து சாவியை வாங்கிக்கொண்டு ஓடினான்.

அவளை அருகிலிருந்த மருத்துவமனையில் சேர்த்தனர். அவளுக்குத் தேவையான மருத்துவ உதவியை அளித்துவிட்டு, டாக்டர் அவனிடம் பேசும் வரை, தனது உணர்வுகளை முகத்தில் பிரதிபலித்துவிடாமல் இறுக்கமாக அமர்ந்திருந்தான்.

“மிஸ்டர்.விக்ரம், நத்திங் டூ வொரி. காயம் கொஞ்சம் ஆழமாக இருப்பதால் ஆறு ஸ்டிச்சஸ் போட்டிருக்கு. டிரிப்ஸ் போட்டிருக்கு, தூங்க மருந்து கொடுத்திருக்கறதால காலையில் தான் கண்விழிப்பாங்க. நீங்க பார்த்துட்டு கிளம்புங்க, டிஸ்டர்ப் பண்ண வேணாம்” என்றார்.

“தேங்க்யூ டாக்டர்...” என்றவன் சற்று ஆசுவாசத்துடன் மூச்சுவிட்டான்.

“சீமா நீ போய் பாரு, நான் வரேன்” என்றவன், வராண்டாவில் அமைதியாக நின்றிருந்த ராகவனின் அருகில் சென்றான்.

அவனைக் கண்டதும் நிமிர்ந்து நின்றவனை, “ராகவன்… நம்பர் நோட் பண்ணியா…?” என்று கேட்டான்.

“இல்லை சார்…” என்றான் தயக்கத்துடன்.

“ம்சு! நானும் அந்த நேரத்தில் கவனிக்கலை…” என்றபடி நெற்றியைத் தடவிக் கொண்டான். “அவன் யாரு என்னன்னு எனக்குத் தெரியணும். கமிஷ்னரைக் கூப்பிட்டு நான் சொன்னேன்னு சொல்லு. நான் பிறகு பேசறேன்னும் சொல்லு” என்றான் அழுத்தமாக.

“சரி சார்” என்று நகர்ந்தவனின் தோளைப் பற்றி, “விஷயம் வெளியே தெரியக்கூடாது” என்றான் உறுதியான குரலில்.

“புரியுது சார்” என்று தலையசைத்தான் ராகவன்.

****

கட்டிலில் நலுங்கிய தோற்றத்துடன், மருந்தின் ஆதிக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்தவளைப் பார்த்த விக்ரமிற்கு, வலியில் துடித்துக் கசங்கிய அவளது முகமே கண்முன்னே தோன்றியது. டிரிப்ஸ் ஏறிக்கொண்டிருந்த அவளது கரத்தை மென்மையாகப் பற்றினான்.

“சாரி ஷாலு…! என்னால் தானே…” என்றவனின் குரல் தழுதழுக்க, வேதனையுடன் அவளது கரத்தில் முகம் பதித்துக்கொண்டான்.

“விக்ரம்! ரிலாக்ஸ். இது ஹாஸ்பிட்டல்…” என்று அவனது தோளில்

அழுத்தினாள் சீமா.

நிமிர்ந்தவனின் முகம் குற்றவுணர்வில் தவித்தது. “நான் மட்டும் கொஞ்ச நேரம் காத்திருக்கச் சொல்லாமல் இருந்திருந்தால், இந்த நிலைமை வராமல் இருந்திருக்குமே சீமா!” என்றான்.

“ஹே! என்னப்பா நீ? உன்னை இப்படி நான் பார்த்ததேயில்லை... ஆனால் நடந்ததுக்கு நீ என்ன செய்வ? இப்படி நடக்கப் போகுதுன்னு உனக்குத் தெரியுமா? தெரிஞ்சிருந்தா அவளை காத்திருக்கச் சொல்லியிருப்பியா? நீ அங்கே இருந்ததால், பிரச்சனை இதோடு முடிஞ்சிருக்குன்னு நினைச்சிக்கோயேன்” என்று பரிவுடன் சொன்னாள்.

“ஹும்! நான் என்னென்னவோ நினைத்து வந்தேன். ஆனால்...” என்று பேசிக்கொண்டிருக்கும் போது, கதவைத் தட்டி உள்ளே வர அனுமதி கேட்டான் ராகவன்.

வைஷாலியின் கரத்தை விடுவித்த விக்ரம், “உள்ளே வா ராகவன்” என்றான்.

“சார், கமிஷ்னரிடம் பேசிட்டேன். அவர் உங்ககிட்ட நாளைக்குப் பேசறேன்னு சொன்னார். நான் நீங்க நாளைக்கு பிசினஸ் விஷயமா ஃபாரின் போறதை சொன்னேன். சரி நானே பார்த்துக்கறேன்னு சொல்லிட்டார்” என்றான்.

கைக்கடிகாரத்தைப் பார்த்த சீமா, “ஆமாம் விக்ரம் அதை நான் மறந்தே போயிட்டேன். மணி இப்போவே பதினொன்னு ஆகிடுச்சி” என்றாள்.

“ம், வைஷாலிகூட...” என்று இழுத்தான் விக்ரம்.

“காலையில் தானே அவ கண்விழிப்பா. அதுவரைக்கும் நர்ஸ் பார்த்துப்பாங்க… நாம கிளம்புவோம்” என்றாள்.

திரும்பி வைஷாலியைப் பார்த்துவிட்டு, சரியென கிளம்பியவன், “ராகவன் உன்னை நானே…” என்றவனை இடைமறித்து, “நான் ஹோட்டலுக்குப் போய் என்னோட பைக் எடுத்துட்டு கிளம்பிடுவேன் சார். அப்புறம், டிரைவருக்கு போன் செய்து உங்க காரை எடுத்துக்கச் சொல்லியிருந்தேன். அதையும் பார்த்துட்டு அப்படியே கிளம்பறேன்” என்றான்.

“தேங்க்யூ..” என்று புன்னகைத்த விக்ரம், “உன் பிரச்சனையை என்னிடம் விட்டுடு. மனசை போட்டு குழப்பிக்காதே. நான் பார்த்துக்கறேன்” என்று சொல்லிவிட்டு காரைக் கிளப்பினான்.

நடந்த அனைத்தையும் நினைத்தபடியே தலையைத் துவட்டிக்கொண்டு வந்தவன், அன்று வைஷாலி காரில் மறந்து வைத்துவிட்டுச் சென்ற கிஃப்ட் பார்சலை, தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்தான்.

இன்னைக்காவது இதை உன்னிடம் சேர்த்திடணும்னு நினைச்சேன் ஷாலு… ம்ச்சு! முடியாமல் போச்சு. ஆனால் கட்டாயம் என்னோட இந்த விலைமதிப்பில்லாத அன்பு பரிசை உனக்குக் கொடுப்பேன். விலைமதிப்பில்லாததான்னு கேட்கறியா நிச்சயமா… ஏன்னா இது என்னோட காதல் பரிசு. உனக்கு கொடுக்க ஸ்பெஷலாக இருக்கணும்ன்னு பார்த்துப் பார்த்து வாங்கின போதும், எனனோட காதலை நான் உணரலை ஷாலு!

அன்னைக்கு இதை நீ மறந்து வச்சிட்டுப் போனதும் நல்லதுக்குத் தான்.

ஏன் தெரியுமா? அதனால் தானே நீ எனக்கு எவ்வளவு ஸ்பெஷல்ன்னு இன்னைக்குப் புரிஞ்சது. நீ குணமாகி நல்லபடியா உன்னோட படிப்பை முடிச்சிட்டு வா. அதுவரைக்கும் நானும் இந்த கிப்ட்டைப் போல பொறுமையா காத்திருப்பேன்" என்று வைஷாலியிடம் பேசுவது போல நிதானமாக பேசியவன், கப்போர்டைத் திறந்து கிப்ட்டை பத்திரமாக வைத்தான்.

கனவுலகில் சஞ்சரித்தபடி புன்னகையுடன் திரும்பியவன், கதவருகில் கேலிப் பார்வையுடன் நின்றிருந்த சீமாவைப் பார்த்தான்.

அவளைக் கண்டு திடுக்கிட்டவன், “என்ன?” என்று புருவம் உயர்த்தி மென்குரலில், அப்பாவியாக முகத்தை வைத்தபடிக் கேட்டவனைப் பார்த்து பகபகவெனச் சிரித்தாள்.

அவள் தன்னைக் கண்டுகொண்டாள் என்று புரிய லேசாக முகம் சிவந்தவன், சிரிப்புடன் தலையைக் கோதிக் கொண்டான்.

சிரமப்பட்டுச் சிரிப்பை அடக்கிய சீமா, அவனது செய்கையைக் கண்டதும் மீண்டும் சிரிக்க ஆரம்பித்தாள். “ விக்ரம்! நான் பாக்கறதெல்லாம் கனவில்லையே...” என்று தன்னையே கிள்ளிப் பார்த்துக்கொண்டவள், “ஆ! வலிக்குது அப்போ நிஜம் தான்” என்று சிரித்தாள்.

“சீமா போதும்...” என்று அவன் பல்லைக் கடித்தபடி சொன்னாலும், மலர்ந்திருந்த முகத்தை அவனால் மறைக்க இயலவில்லை.

“ஓகே ஓகே! சிரிக்காமல் இருக்க முயற்சி செய்யறேன்; முடியுமான்னு தெரியலை” என்றாள்.

“முடியலைன்னா உன் வாய்ல பிளாஸ்டரைப் போட்டு ஒட்டுறேன்” என்று எரிச்சலுடன் உரைத்தவன், “நீ எதுக்கு இந்த நேரத்துக்கு என் ரூமுக்கு வந்த?” என்று கேட்டான்.

ஹாஸ்பிட்டல்ல இருந்து வரும் போதே கொஞ்சம் ஒரு மாதிரி இருந்தியா… அதுல நாளைக்கு ஊருக்குக் கிளம்பறதை மறந்துடப் போறேன்னு அலாரம் வைக்கச் சொல்லலாம்னு நினைவுப்படுத்த வந்தேன்… இங்கே என்னடான்னா காதல் மன்னன் ரேஞ்சுக்கு டயலாக் பேசிட்டு இருக்க. வந்தது வந்தோம் அப்படி என்னதான் பேசறேன்னு பார்க்கலாம்னு விட்டுட்டேன்” என்றாள் குறும்புச் சிரிப்புடன்.

“கதவைத் தட்ட வேண்டியது தானே…” என்றான்.

“அப்படி மேனர்ஸ் இல்லாமல் எங்க வீட்டில் என்னை வளர்க்கலைப்பா…” என்று கண்சிமிட்டினாள்.

“ஓ!” என்றவனின் முகம் லேசாகச் சிவந்தது.

“டோண்ட் வொர்ரி ஸ்வீட் பாய்! நீ உளறியதை அத்தை, மாமா, அப்புறம் வைஷு மூணு பேரைத் தவிர வேற யார்கிட்டயும் சொல்லமாட்டேன். ஓகேவா!” என்று கர்மசிரத்தையாகக் கேட்டாள்.

“ஏய்! ஆர்வக் கோளாறு நிறுத்து. நான் வேற உன் எதிர்ல… எல்லாத்தையும் உளறி… யாருக்காவது விஷயம் தெரிஞ்சுது கொன்னுடுவேன்” என்றான் சலிப்பும், மிரட்டலுமாக.

“ஐயோ! நான் ரொம்ப பயந்துட்டேன்…” என்று நடுங்குவது போல

நடித்தவள், “நல்லா வகையா மாட்டியிருக்க விட்டுடுவேனா? இதைச் சொல்லியே என் காரியத்தையெல்லாம் சாதிச்சுக்குவேன் இல்ல…” என்று நக்கலாக சிரித்தாள்.

“என் தலையெழுத்து… சரி நீ நாளைக்கு எப்போ கிளம்பற?” என்று பேச்சை மாற்றினான்.

“எஸ்கேப்பிசமா…” என்று சிரித்தவள், விளையாட்டுத்தனத்தை விட்டு, தீவிரமான பாவத்திற்கு மாறினாள். இல்லப்பா… வைஷாலி டிஸ்சார்ஜ் ஆனதும், அவளை ஹாஸ்டலில் விட்டுட்டு தான் கிளம்புவேன். நீயும் ஊரில் இருக்கமாட்ட இல்ல” என்றாள் தோழமையுடன்.

“ரொம்ப தேங்க்ஸ் சீமா” என்றான் நெகிழ்ந்தான்.

“ரொம்ப ஃபீல் பண்ணாதப்பா இதுக்கெல்லாம் வட்டியும் முதலுமா வசூல் பண்ணிடுவேன்..”

“அதுக்கு மேலே ஏதாவது வேணும்னாலும் சொல்லு தாராளமா செய்யறேன்” என்று புன்னகைத்தான்.

“ஓகே! நீ தூங்கு நாளைக்கு கிளம்பனும்… ஹாஸ்பிட்டல் வந்துட்டு அப்புறம்தானே கிளம்புவே…”

“கண்டிப்பா… ஷாலுவை பார்த்துட்டு அப்படியே கிளம்பறேன்…”

கைகளுக்கிடையில் கொட்டாவியை வெளியேறியவள், “குட் நைட்ப்பா…” என்று கிளம்பியவளை, “சீமா நான் இல்லாதப்போ ஷாலுகிட்ட எதையும்…” என்று கெஞ்சலாக பார்த்தான்.

‘காதல் ஒரு மனுஷனை இந்த அளவுக்குப் படுத்துது. விக்ரமா இது?’ என்று மனத்திற்குள் சிரித்துக் கொண்டவள், “தைரியமா போய் வா. அது உன்னோட வாழ்க்கையை, நேசத்தை உனக்கு சொந்தமாகப் போறவளோட பகிர்ந்துக்கறது. நிச்சயமா அந்த சந்தோஷத்தை பறிக்கமாட்டேன்...போய் தூங்கு” என்றவள் புன்னகையுடன் சென்றாள்.

அத்தியாயம் - 12

அதிகாலை ஆதவனின் பொன்னிறக் கதிர்கள் ஜன்னலருகில் நின்றிருந்த வைஷாலியின் மீது பட்டு, இளமஞ்சள் நிற அழகியைப் பொன்னிறத்தில் உருமாற்ற, பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தது.

முகத்திற்கு நேராக தனது வலது கரத்தை உயர்த்திப் பார்த்தவளின் கன்னங்கள், செம்மை நிறத்தைப் பிரதிபலித்தது. உள்ளம் முன் இரவில் அவனது ஸ்பரிசத்தால் ஏற்பட்ட அதிர்வை நினைத்து மதிமயங்க, முகம் கனிவுடன் இளகியது. அவனது கையணைப்பில் இருந்த கரத்தை, மறுகையால் மெல்லத் தடவிக் கொடுத்தாள்.

இறக்கை முளைத்த காதல் மனம் கட்டுக்குள் அடங்காமல் கட்டவிழத் துவங்கிய நேரம், கதவைத் தட்டும் ஓசை கேட்டு திடுக்கெனத் திரும்பிப் பார்த்தாள்.

“ஹலோ!” என்று தலையை மட்டும் உள்ளே நீட்டி, அவளைப் பார்த்துப் புன்னகைத்தவனைக் கண்டதும், அவளது இதழ்களும் மென்னகையில் மலர்ந்தது.

“குட் மார்னிங்” என்று உற்சாகத்துடன் சொன்ன விக்ரமிடம் பதிலுக்குக்,

“குட் மார்னிங்” என்று மென்குரலில் பகன்றாள்.

“ஸ்லீப்பிங் பியூட்டியைப் பார்க்கலாம்னு அடிச்சி பிடிச்சி ஓடிவந்தேன்… இங்கே என்னடான்னா! பளிச்சுன்னு பிரெஷ்ஷா நிக்கிறீங்களே மேடம்” என்று பெருமூச்சு விட்டான்.

“மணி ஏழரை ஆகுது. இதுவரைக்கும் நான் தூங்கிட்டு இருப்பேன்னு நீங்க நினைத்தால் நான் என்ன செய்யமுடியும்?” என்றாள் புன்னகையுடன்.

“அதானே… நீ என்ன பண்ண முடியும்? நைட் நல்லா தூங்கின தானே… டிஸ்டபன்ஸ் எதுவும் இல்லையே…” என்று கேட்டான்.

“இ..ல்லையே நல்லா தூங்கினேனே…” என்று திக்கித் திணறியவள், விக்ரமின் பார்வையிலிருந்து தனது விழிகளை விலக்கிக் கொண்டாள்.

இருவரின் பேச்சையும் கேட்டபடி அறைக்குள் நுழைந்த சீமா, அவளது கள்ளத்தனத்தைக் காட்டிக் கொடுப்பது போல, அலைபாய்ந்த அவளது விழிகளைக் கண்டு கொண்டாள். ரகசிய புன்னகை ஒன்றை உதிர்த்தபடி, வைஷாலியிடம் நலம் விசாரித்தவள், மேற்கொண்டு அவர்கள் இருவரையும் பேசவிட்டு, வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சாதாரணமாக அவளிடம் பேசிக்கொண்டிருந்த விக்ரம் மெல்ல, “நேத்து பைக்கில் வந்தவனை உனக்கு முன்னமே தெரியுமா? ஐ மீன் இதுக்கு முன்னமே அவனால் உனக்கு ஏதோ பிரச்சனை இருந்ததா?” என்று கேட்டான்.

“இல்ல… தெரியாது… நான் யாரிடமும் வலிய எந்த பிரச்சனையும்

செய்வதில்லை” என்றாள்.

யோசனையுடன் பார்த்தவன், “அவங்களைத் திரும்பப் பார்த்தா அடையாளம் தெரியுமா?” எனக் கேட்டான்.

“ம்ச்சு, இல்லை’ என்பது போல உதட்டைச் சுழித்தவள், “அங்கே கொஞ்சம் மங்கலான வெளிச்சம் இருந்ததால முகம் சரியா தெரியலை” என்றதும் விக்ரமின் முகம் லேசாக இறுகியது.

“ஏன் சீமாக்கா! நீங்களும் அங்கே தானே இருந்தீங்க வெளிச்சம் சரியாக இல்லைதானே…” என்று அவசரமாக கேட்டதும், சீமா அவளை ஆராயும் பார்வை பார்த்தாள்.

இருவரது முகமாற்றத்தையும் கண்ணுற்ற வைஷாலி, பேச்சை திசை மாற்ற முயன்றாள்.

“சரி…, ஹாஸ்பிட்டல்ல இருக்கும் பேஷண்ட்டைப் பார்க்க வர்றதுக்கு இத்தனை ஸ்மார்ட்டா டிரெஸ் பண்ணிட்டு வரணுமா என்ன சீமாக்கா?” என்று விக்ரமை ஓரப்பார்வை பார்த்தபடி, சீமாவிடம் வினவினாள்.

சீமா பதில் ஏதும் சொல்லாமல் முறுவலித்தாள். அவள் தனது உடையைத் தான் சொல்கிறாள் என்று உணர்ந்த விக்ரம், “மேடம் பத்து மணிக்கு எனக்கு பிளைட். பிசினஸ் விஷயமா ஜெர்மன் போறேன்” என்றான்.

“ஓ! அப்படியா… நீங்க போகும் வேலை வெற்றிகரமாக அமைய வாழ்த்துக்கள்.”

“தேங்க்யூ…” எனப் புன்னகைத்தான்.

சீமா கையுடன் கொண்டு வந்திருந்த காலை உணவை, மூவருமாக சேர்ந்து உண்டனர். விக்ரமின் கைப்பேசியில் அழைப்பு வர, பேசிமுடித்தவன் கையைக் கழுவிக்கொண்டு வந்தான்.

“ஓகே வைஷாலி, உடம்பை பார்த்துக்கோ. எக்சாம்ஸ் நல்லா எழுது. ஏதாவது ஹெல்ப் வேணும்னா சீமாவிடம் தயங்காமல் கேளு. ராகவன் எனக்காக பார்க்கிங்கில் வெயிட் பண்றான். நான் கிளம்பறேன்” என்றான் வைஷாலியிடம்.

“ம்ம். டேக் கேர்” என்று புன்னகையுடன் அவனை வழியனுப்பி வைத்தாள் வைஷாலி.

சற்று தயங்கித் தயங்கி நின்றவன், “ஓகே…” என்று கதவை நோக்கி நடந்தான்.

“நான் ஏர்போர்ட் போய்ச் சேர்ந்ததும், காரை இங்கே அனுப்பி வைக்கிறேன். நீ யூஸ் பண்ணிக்க” என்று சீமாவிடம் பேசியபடி அறையிலிருந்து வெளியேறினான்.

அவனை வழியனுப்பி வைத்துவிட்டு திரும்பி வந்த சீமா, வைஷாலியிடம் பொதுவாக பேசிக் கொண்டிருந்தாலும், அவளது கவனமெல்லாம் வைஷாலி அவசரமாகச் சொன்ன பதிலிலேயே சுற்றி வந்தது. ‘இவள் தங்களிடம் எதையோ மறைக்கிறாள். ஆனால் ஏன்?’ என்று நினைத்துக் கொண்டாள்.

ஏர்போர்ட்டிலிருந்து விக்ரமின் கார் திரும்பி வந்ததும், ஹாஸ்டல்

வரை சென்று அவளுக்குத் தேவையானதை எடுத்துக்கொண்டு சீக்கிரம் திரும்பி வந்துவிடுவதாகச் சொல்லிவிட்டு, கிளம்பினாள் சீமா.

தனித்திருந்த வைஷாலிக்கு காலையிலிருந்த உற்சாக மனநிலை முற்றிலுமாகச் தொலைந்திருந்தது. தான் சொன்ன பதிலை சீமா நம்பவில்லை என்பதை அவளது பார்வை பரிமாற்றத்திலேயே புரிந்து கொண்டிருந்தாள். இப்போது அவள் அருகில் இல்லாதிருப்பதே சற்று நிம்மதியாக இருப்பது போல தோன்றியது.

யோசனையுடன் அமர்ந்திருந்தவள் அறைக் கதவைத் தட்டிவிட்டு கும்மிழைதி திருகும் ஓசை கேட்டதும், திரும்பிப் பார்த்தவள், உள்ளே வந்தவரைக் கண்டதும் பழைய உற்சாகம் மீண்டு வந்தது.

“அப்பா…!” என்ற கூக்குரலுடன் கட்டிலிலிருந்து இறங்கினாள்.

“வைஷும்மா! எப்படிடா கண்ணா இருக்க?” என்று தோளில் சாய்ந்துகொண்ட மகளின் தலையை, வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தார் சங்கரன்.

“ம், நல்லாயிருக்கேன்ப்பா… நீங்க எப்படி இருக்கீங்க? சொல்லாம கொள்ளாம வந்திருக்கீங்க… அ◌ஃபிசியலா வந்திருக்கீங்களா?” என்று கேட்டாள்.

“யார் சொன்னது? ஹாஸ்பிட்டல்ல இருக்கும் என் மகள் மேல எனக்கும் அக்கறை இருக்கும்மா” என்றார் சற்றுக் கவலையுடன்.

“அப்பா! ப்ளீஸ்… நீங்க வருத்தப்படுவீங்கன்னு எனக்குத் தெரியாதா? அதனால் தான் நான் உங்களுக்குப் போன் செய்யலை” என்று

கவலையுடன் சொன்னவள், “இந்த முந்திரிக் கொட்டை ஜோதி தானே உங்களிடம் போட்டுக் கொடுத்தா?” என்று எரிச்சலுடன் கேட்டாள்.

“யார் சொன்னா என்னடா? மனசு கேட்காமல் சொல்லிட்டாங்க” என்றார்.

“ஹும்!” என்று சலுகையுடன் தந்தையிடம் செல்லம் கொஞ்சியவள், “சரி போகட்டும்… நீங்க எப்படி வந்தீங்க?” என்று, சோஃபாவில் அமர்ந்த தந்தையின் அருகில் அமர்ந்தபடி கேட்டாள்.

“ப்ளைட்ல தான் கண்ணம்மா. ஆனால், நான் இங்கே வருவதே உன் அம்மாவுக்குத் தெரியாது…” என்றார் ரகசிய குரலில்.

கிளுக்கென சிரித்துக்கொண்டவள், “ம்ம், தெரிஞ்சிருந்தா நான் இத்தனை நேரம் ஹாயா இப்படி உங்ககிட்ட கதையடிக்க முடியுமா? நீங்க அறைக்குள்ள வர்றதுக்கு முன்ன, ஏண்டி உன் மனசுல என்னதான் நினைச்சிட்டு இருக்கேன்னு அம்மாவோட குரல் தானே முதல்ல வந்திருக்கும். என் மண்டை உடைஞ்சது போதாதுன்னு, திட்டு வாங்கி என் காதுல ரத்தமே வந்திருக்கும்” என்று கேலியாகச் சொன்னாள்.

மகளைச் சற்றுக் கவலையுடன் பார்த்தார். “உன் அம்மா கத்தினாலும், அதுல பாசம் இருக்குடா. எங்களோட ஒரே செல்லப் பொண்ணு நீ. உன்னை இங்கே விட்டுட்டு நாங்க தவிக்கும் தவிப்பை உன்னிடம் சொல்லலைனாலும், உனக்கு புரியும்ன்னு நினைக்கிறேன்” என்றார்.

அமைதியாக தந்தையின் முகத்தைப் பார்த்தாள். அவரும் மகளே சொல்லட்டும் என்பது போல அமைதியாக இருந்தார்.

‘க்கும்’ என தொண்டையை செருமிக் கொண்டவள், “ராகேஷ் தான் எல்லாத்துக்கும் காரணம்” என்றாள்.

“யாரு? உன்னோட ஸ்கூல் சீனியரா!” எனக் கேட்டார்.

“ஆமாம்ப்பா... காலேஜ் ஹாஸ்ட்டல்ல எங்க ரூமை பார்த்து கல்லெறியறது, காலேஜ் போனில் ரொம்ப சீப்பா பேசுவதுன்னு இவன் அட்டகாசம் தாங்க முடியலை. இதையெல்லாம் காலேஜில் சொல்லியும் எந்த நடவடிக்கையும் எடுக்கலை. அதனால் விக்ரம் சாரை நேரடியாக பார்த்து நடந்த பிரச்சனைகளைச் சொன்னேன். சாரும் உடனே நடவடிக்கை எடுத்தார். அதில் போலீஸ் இவன் மேலேயும் நடவடிக்கை எடுத்தாங்க.

கவனிச்ச கவனிப்பில் கொஞ்சம் நாள் வாலை சுருட்டிட்டு இருந்தான். இப்போ உடம்பு கொஞ்சம் தேறியதும் என்னைப் பழிவாங்க வந்திருக்கான் போல... என்னிடம் வாங்கினதெல்லாம் அவனுக்குப் போதலையாம் அதான் இன்னும் வாலாட்டிட்டு இருக்கான்” என்றவளின் முகம் கோபத்தில் ஜொலித்தது.

“எதுக்குடா கண்ணா உனக்கு இந்த வேலையெல்லாம்? காலேஜுக்கு நல்லது செய்யறேன்னு போய் இப்படிப் பிரச்சனையை இழுத்துட்டு வந்திருக்க. உன்னை இங்கே ஹாஸ்ட்டல்ல தனியா விட உன் அம்மாவிடம் நான் எத்தனைத் தூரம் பேசிச் சம்மதம் வாங்கியிருக்கேன். நீ இப்படிச் சீர்திருத்தம் பண்றேன்னு பிரச்சனையில் சிக்கிக்கவா...” என்று கவலையுடன் கேட்டார்.

“அதெல்லாம் ஒண்ணும் ஆகாதுப்பா... இன்னும் இருபது நாள்தானே எக்சாம்ஸ் முடிஞ்சிடும்... அதுக்கப்புறம் உங்க செல்ல பொண்ணு உங்க

பக்கத்திலேயே இருக்கப்போறேன். அதனால்தான் விக்ரம் ராகேஷை தெரியுமான்னு கேட்ட போது கூட தெரியாதுன்னு சொல்லிட்டேன். அவனும் இதுக்கு மேலே என்னிடம் வாலாட்ட வரமாட்டான்னு நம்பறேன்” என்ற மகளைப் பார்த்தார்.

“சொல்ல எதுவும் இல்லம்மா. உன்னைப் பார்த்துக்க உனக்குத் தெரியும். இருந்தாலும் அப்பாவோட கடமை, உனக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன்…” இதற்கு மேல் உன் புத்திசாலித்தனம் என்பது போல, பேச்சை முடித்தார் சங்கரன்.

“தேங்க்யூப்பா…” என்றவள் அவருடன் வளவளத்துக் கொண்டிருந்தாள். ஜோதிக்கு போன் செய்து அவளைக் கடுப்படித்து சிரித்துக் கொண்டாள். ஹாஸ்டலுக்குச் சென்ற சீமா திரும்பி வந்ததும் அவளைத் தந்தைக்கு அறிமுகம் செய்தாள்.

சீமாவிற்கு நன்றி தெரிவித்தவர், அன்றே தான் கிளம்ப இருப்பதால் தன் நண்பர் மணிகண்டன் வீட்டிற்குச் சென்று பார்த்துவிட்டுக் கிளம்புவதாகச் சொன்னவர், மகளை ஆதூரத்துடன் தட்டிக்கொடுத்துவிட்டு விடை பெற்றார்.

ஹாஸ்ட்டல் மொத்தமும் ஆரவாரமும், அமர்க்களமுமாக இருந்தது. தங்களது படிப்பை நல்லபடியாக முடித்த திருப்தியுடனும், தங்களது குடும்பத்தினரை பார்க்கப் போகும் சந்தோஷமும் இருந்தாலும், அனைவரின் மனத்திலும் தோழிகளைப் பிரியப் போகும் கவலையில் கண்கள் கசிந்தன.

தோழிகளிடமும், ஹாஸ்ட்டல் வாடர்ன், வேலை செய்பவர்கள் என அனைவரிடமும் பிரியா விடைபெற்று கிளம்பிய, மாணவிகள் பேருந்து

நிலையத்திற்கும், இரயில் நிலையத்திற்கும் கல்லூரி வாகனத்திலேயே அனுப்பி வைக்கப்பட்டனர்.

பொழுது மெல்லப் புலர ஆரம்பித்தது. அந்த விடியலைப் போலவே தங்களது வாழ்க்கையும் புத்துணர்ச்சியுடன் மலரும் என்ற நம்பிக்கையுடன் அவரவர் செல்ல வேண்டிய பேருந்தில் சென்று அமர்ந்தனர். புனேவிலிருந்து நான் புறப்பட்டுவிட்டதாகத் தந்தைக்குக் குறுந்தகவல் அனுப்பிவிட்டு, கைப்பேசியை அணைத்தவள் வெளியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

பேருந்து மெல்ல நகர ஆரம்பித்தது. தன் தாய்வீட்டை விட்டுப் பிரியும் மணப்பெண்ணைப் போல வைஷாலியின் இதயம் கனத்தது. விழிகளில் அரும்பிய நீரைக் கட்டுப்படுத்த இமைகளை மூடி அணையாக்கினாள். அவளது நினைவுகள் ஒவ்வொன்றாய் மேலெழுந்து குதியாட்டம் போட்டது.

நினைவு தெரிந்த நாள் முதலாய் வளர்ந்த ஊரைவிட்டுச் செல்வது சங்கடமாக இருந்தது. கூடவே இதயத்தில் ஒளிந்திருந்த காதல் உணர்வுகள் தலை தூக்கியது. ‘அவனை இனி எப்போது பார்ப்போம்’ என்ற ஏக்கம் எழ, வேதனையில் தொண்டை அடைத்தது.

மனத்தில் மலர்ந்திருந்த நேச உணர்வுகள், ‘நீ மீண்டும் இங்கே தானே வரப்போகிறாய்’ என்று எடுத்துரைத்தது. அந்த இனிய நினைவுகளில் மூழ்கியவளின் அனுமதி இல்லாமலேயே, மூடிய விழிகளுக்குள் அழையாமலேயே வந்து நின்றான்.

அவனது உருவத்தை, மெய் மறந்து ரசித்துக் கொண்டிருந்தவளின் தலை ஜன்னலில் இடித்துக் கொள்ள அவளது இன்பக் கனவு

சட்டென்று கலைந்து போனது. அடிபட்ட இடத்திலேயே மீண்டும் இடித்துக் கொண்டதில் வலி விண்ணென்று தெரித்தது.

மெள்ள நெற்றியைத் தேய்த்துக் கொண்டவள், நிமிர்ந்து பார்த்தாள். பேருந்தில் லேசான சலனம் ஏற்பட்டது. ஏசி பேருந்தின் கதவைத் திறந்துகொண்டு வந்த நடத்துனரைச் சிலர் திட்ட ஆரம்பிக்க, அவருக்குப் பின்னால் வந்த பயணியைக் கண்டதும் சிறு முணுமுணுப்புடன் சற்றுச் சமாதானம் அடைந்தனர்.

வைஷாலியின் அருகில் வந்து நின்ற நடத்துனர், “மேடம்! சார் கொஞ்ச நேரம் இங்கே உட்காரட்டும் அடுத்த நிறுத்தத்தில் அவருக்கு வேற இடம் மாத்தி கொடுத்திடுறேன்” என்றார்.

நடத்துனருக்குப் பின்னால் வந்த பெரியவரைப் பார்த்தாள். வினாடியில் அவளது கண்கள் அவரை ஸ்கேன் செய்தது. அவரைப் பார்த்ததும் தன் தந்தையின் நினைவு வரப் புன்னகையுடன், “அங்கிள் இங்கே உட்காருவதில் எனக்கு ஒண்ணும் ஆட்சேபனையில்லை” என்றாள்.

நடத்துனரும் நிம்மதியுடன் நன்றி சொல்லிவிட்டு அகல, ஸ்நேகத்துடன் புன்னகைத்தவரைப் பார்த்து, பதிலுக்குப் புன்னகைத்தாள். பின்னாலேயே அவரது கைப்பெட்டியைக் கொண்டுவந்து கொடுத்தவன் அவரது டிரைவர் போலும். தயக்கத்துடன் மன்னிப்புக் கோரியவனைத் தட்டிக்கொடுத்து அனுப்பி வைத்தார்.

வைஷாலி அவரையே பார்த்தாள். உயரமும், வளமையுமாக ஆஜானுபாகு தோற்றத்துடன் இருந்தாலும், முகத்தில் சாந்தம் தெரிந்தது. கலகல சுபாவமாக இருந்தபோதும் பயண நேரத்தில் யாருடனும் அதிகம் பேசாதவளுக்கு ஏனோ அவளுக்கு அவர் மீது

பெரிய மரியாதை உண்டாயிற்று.

வைஷாலியிடம் அவர் பேச முற்படும் போதே, அவரது கைப்பேசி ஒலித்தது. பேசினார்... பேசினார்... பேசிக்கொண்டேயிருந்தார். மெல்லிய குரலில் பேசிய போதும், வைஷாலியால் அவரது பேச்சைத் தெளிவாக கேட்க முடிந்தது. அவரது திணறலிலிருந்தே பேசுவது அவருடைய மனைவி என்று புரிந்து கொண்டாள்.

போனை அணைத்தவர் திரும்பி அவளைப் பார்த்தார். ”டிஸ்டர்ப் பண்ணிட்டேனாம்மா!” என்றார்.

“அதெல்லாம் இல்லை அங்கிள்” என்று மறுப்பாக தலையாட்டினாள். “சாரி அங்கிள் என்னோட அனுபதி இல்லாமலேயே என் காது உங்க பேச்சையெல்லாம் உள்வாங்கிடுச்சி” என்று புன்னகைத்தாள்.

அந்த பளிச்சென்ற பேச்சும், கலகல சிரிப்பும் அவள் மீது பாரம் வர போதுமாதாக இருந்தது ரவீந்தருக்கு. “அட பரவாயில்லைம்மா...” என்றவர், “ரவீந்தர் குமார். பிசினஸ் மேன்” என்று கை நீட்டினார்.

கை குலுக்கியவள், “வைஷாலி... எஸ்.எஸ்.வீ காலேஜ். அப்பாவும், அம்மாவும் ரத்னகிரியில் இருக்காங்க. பி.ஜி ஃபைனல் எக்சாம்ஸ் முடிச்சிட்டு ஊருக்குப் போயிட்டிருக்கேன்” என்றாள்.

“ஓ! நீயும் ரத்னகிரி தானா!” என்று கேட்டார்.

“நீங்களுமா...” என்று உற்சாகத்துடன் கேட்டாள்.

அதன்பிறகு சுவாரசியமாக இருவருக்கும் பேச நிறைய விஷயங்கள்

இருந்தன. தனது தந்தை சில மாதங்களுக்கு முன்பு தான் புனேவிலிருந்து, ரத்னகிரிக்கு மாற்றலாகிச் சென்றதையும், தனக்கு இன்னும் அந்த ஊர் பரிச்சயம் ஆகவில்லை என்றும் சொன்னாள்.

“ரொம்ப அற்புதமான ஊர். பார்க்க நிறைய இடங்கள் இருக்கு. கோட்டைகள், பீச், கோவில்ன்னு ரொம்ப பிரமாதமாக இருக்கும். இயற்கையை ரசிக்கறவங்களுக்கு ரொம்பவே பிடிக்கும். தெரியுமா… பாண்டவர்கள் பன்னண்டு வருட வனவாசத்துக்குப் பிறகு ரத்னகிரியில் கொஞ்ச காலம் வசித்ததாக கூட சொல்வாங்க” என்றார்.

ஆர்வத்துடன் அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டாள். பேச்சு அவளது கல்லூரி படிப்பு என்று திசை மாறியது. சமீபத்தில் அவளது கல்லூரியில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றி விசாரித்தார்.

“உங்களுக்கு எப்படித் தெரியும் அங்கிள்… பேப்பரில் படிச்சீங்களா?” என்று அவள் கேட்ட கேள்விக்குப் பதிலையும் அவளே சொல்லிக் கொண்டாள்.

நடந்த விஷயங்களைச் சொன்னவள், விக்ரமைப் பற்றி ஒற்றை வரியில், ‘ஜென்டில்மேன்’ என்று நற்சான்றிதழ் வழங்கினாள். ரவீந்தர் புன்னகையுடன் கேட்டுக் கொண்டார். பொது விஷயங்களையும் சரளமாக அலசி ஆராய்ந்தவளை வியப்புடன் பார்த்தார்.

ஐந்தரை மணிநேர பயணத்தில், ரவீந்தருக்கு இடையிடையில் போனில் சிலருடன் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்ட போதும், இருவரது பேச்சும் ஓயவில்லை.

ரத்னகிரி பேருந்து நிலையத்தில் இறங்கியதும் சுற்றிலும் பார்வையைச்

சுழலவிட்டாள். வெயில் இருந்த போதும் காற்று வெக்கையை அதிகப்படுத்தாமல் இதமாக இருந்க்கச் செய்தது.

“ஓகே அங்கிள் நான் கிளம்பறேன்…” என்றாள்.

“நீ எங்கே போகணும்னு சொல்லும்மா நம்ம காரிலேயே போயிடலாம்” என்றார்.

“இருக்கட்டும் அங்கிள் அப்பா வந்திடுவாங்க. நீங்க கிளம்புங்க பை” என்றாள்.

புன்னகையுடன் விடைபெற்ற ரவீந்தர் குமார், தன்னை நோக்கி ஓடிவந்த டிரைவரிடம் கைப்பெட்டியைக் கொடுத்துவிட்டுத் திரும்பிப் பார்த்தார். சற்றுத் தூரத்தில் வந்துகொண்டிருந்த தன் தந்தையைப் பார்த்துக் கையசைத்துக் கொண்டிருந்தாள் வைஷாலி.

புன்னகையுடன் காரில் ஏறியவரின் கைப்பேசி அழைத்தது. “வந்துட்டேம்மா. காரிலும் ஏறியாச்சு. வீட்டுக்கு வந்து பேசறேன் செந்தளிர்” என்று இணைப்பைத் துண்டித்தார் ரவீந்தர் குமார் சௌத்ரி.

‘வைஷாலி…’ என்ற பெயரை மனத்திற்குள் ஒருமுறை உச்சரித்தவருக்கு கூடவே மகனின் நினைவும் வந்தது. சிலமாதங்களுக்கு முன்பு நடந்த நிகழ்வுகள் நினைவில் வந்தது.

“ஹாய் விக்ரம் எப்படியிருக்க?” தங்களுடன் வீடியோ சாட்டிங்கில் பேசிக்கொண்டிருந்த மகனை அன்புடன் விசாரித்தார் ரவீந்தர் குமார் சௌத்ரி.

“நான் நல்லா இருக்கேன்ப்பா. நீங்க ரெண்டு பேரும் எப்படி இருக்கீங்க?”

“ரொம்ப நல்லா இருக்குக்கோம்” என்ற அன்னையிடம், “உங்களையெல்லாம் ரொம்ப மிஸ் பண்றேம்மா” என்றான் பாசத்துடன்.

செந்தளிர் அன்புடன் மகனைப் பார்த்தார். அன்னையின் உடல்நிலை பற்றி விசாரித்தவன், தந்தையிடம் கம்பெனி விஷயங்களைத் பகிர்ந்து கொண்டான்.

“நான் ஒரு விஷயம் கேள்விப்பட்டேன் உண்மையா?” ரவீந்தர் மகனை மெல்ல விசாரித்தார்.

“என்ன விஷயம்?” ஒன்றும் தெரியாதது போலக் கேட்டாலும், அவனுக்குத் தெரிந்த விஷயம் தான், என்று அவனது புன்னகை முகமே காட்டிக் கொடுத்தது.

“ம்ம்... திடீர்னு காலேஜ் பக்கமெல்லாம் போனதா கேள்விப்பட்டேன். என்ன விஷயம்?” புன்னகையுடன் வினவினார்.

லேசாகப் புன்னகைத்தவன் தலையைக் கோதியபடி, “ஆமாம்ப்பா. நான் எவ்வளவு பொறுப்பில்லாமல் நடந்துட்டு இருந்திருக்கேன்னு மிஸ்.வைஷாலி என்னிடம் பேசும் போது தான் உணர்ந்தேன். இத்தனை பெரிய நிறுவனத்தை நடத்தி என்ன பிரயோஜனம்? ஒரு சின்னப் பொண்ணு நமக்கு அட்வைஸ் பண்ற நிலைமைக்கு ஆகிடுச்சேன்னு எனக்குக் கொஞ்சம் அசிங்கமாகப் போச்சு” என்றான். அவனது முகம் சங்கடத்தை வெளிப்படுத்தியது.

“ஓ! உன்னோட ஈகோ அங்கே தலை தூக்கிடுச்சா?” என்று சிரித்தார்

ரவீந்தர். செந்தளிரோ மகனை ஆழ்ந்த பார்வை பார்த்தபடி அமர்ந்திருந்தார்.

“உண்மை அதுதான். ஆனால், சமாளிச்சிட்டேன்” என்றவன், நடந்த விஷயங்களைக் கோர்வையாக சொல்ல ஆரம்பித்தான்.

வைஷாலியின் பெயரைச் சொல்லும் போது அவனது உதடுகளில் அதீத புன்னகை மலர்ந்ததை அவர் கவனிக்க தவறவில்லை.

“பொண்ணு ரொம்ப அழகா இருப்பாளோ!” என்று ஆர்வத்துடன் அவனது பேச்சில் இடைபுகுந்தார், அவனது அன்னை செந்தளிர்.

“அம்மா! ஆரம்பிச்சிட்டீங்களா?” என்று செல்லமாக முறைத்தான்.

“இல்லடா கண்ணா! உன்னோட ஈகோவை தூக்கிப் போட்டுட்டு, அந்தப் பொண்ணு சொன்னதுக்காக செய்திருக்கியே... அதுக்காகத்தான் கேட்டேன்” என்றவரின் கண்களில் சிரிப்பு தெரிந்தது.

“வைஷாலி! சொன்னது நம்மளோட நல்லதுக்குத் தானேம்மா. அதேபோல அதில் எத்தனை பேரோட வாழ்க்கை அடங்கியிருக்கு. இதையெல்லாம் அப்பா சொன்னபோது எனக்கு பெரிசா எதுவும் தோணலை. அங்கே போய் பார்த்ததுக்கு அப்புறம் தான் புரிந்தது. நம்மளை நம்பி தன் பிள்ளைங்களை ஹாஸ்ட்டலில் விட்டுட்டு இருக்குற பேரண்ட்ஸுக்கு நாம என்ன பதில் சொல்ல முடியும்? நல்ல வேளை ஒரு பெரிய பிரச்சனை வரும் முன்னால தப்பிச்சாச்சு” என்று நிம்மதி பெருமூச்சொன்றை வெளியேற்றினான்.

“சரிம்மா” எனப் புன்னகைத்தவன், “எனக்குக் கொஞ்சம் வேலை

இருக்கும்மா மீதியை நாளைக்குப் பேசலாம். பை, குட்நைட்” என்று பெற்றவர்களிடம் விடை பெற்றான்.

ஆனால், அவனுக்கு எந்த வேலையுமில்லை, தனது கேளள்விகளிலிருந்து தப்பிக்க அவனுக்குத் தேவைப்பட்ட சாக்கைச் சொல்லிவிட்டு ஓடிவிட்டான் எனப் புரிந்தது. சாட்டிங்கை முடிட்த்துவிட்டு, திரும்பி மனைவியை ஆழப்பார்வை பார்த்தார் ரவீந்தர்.

“என்னங்க?” எனக் கேட்டார் செந்தளிர்.

“ஏம்மா விக்ரமை இப்படிக் கேட்ட! அவன் சங்கடப்படப் போறான்...” என்றார் கவலையுடன்.

“அவனோட குணம் என்னன்னு உங்களுக்குத் தெரியாதா? யாருக்காகவாவது அவன் தழைந்து போயிருக்கானா?” என்று பதில் கேள்வி எழுப்பினார்.

‘இல்லை’ என்பது போல தலையசைத்தார் ரவீந்தர்.

“அப்போ அந்த வைஷாலி சொன்னதை எப்படி உடனே செய்தான்? அதுவும் அப்பா சொன்னபோது எனக்கு எதுவும் பெரிதா தோணலைன்னு நம்மகிட்டயே சொல்றான்” என்று சிரித்தார்.

யோசித்தவர், “அவன்தான் சொல்றானே விளக்கமெல்லாம்...” என்றார்.

“விளக்கமெல்லாம் நல்லாத்தான் இருக்கு. ஆனால், அவனே விளங்கிக்காதது இன்னொன்னு இருக்கு. அது, அந்த வைஷாலியை

அவனுக்கு ரொம்பவே பிடிச்சிருக்கு” என்றவரின் முகத்தில் எதிர்பார்ப்பு தெரிந்தது.

“நீ ரொம்ப எதிர்பார்க்குற தளிர்…” என்றார் யதார்த்தத்துடன்.

“இத்தனை வருஷத்தில் அவன் எந்தப் பொண்ணையும் இப்படிப் புகழ்ந்து பேசி நான் பார்த்ததில்லை. நானும் ரெண்டு வருஷமா அவனைச் சொல்லிட்டு இருக்கேன் கல்யாணம் செய்துக்கன்னு. போன மாதம் அவன் இங்கே வந்தபோது நம்ம பிரதாப் சிங்கோட பொண்ணைப் பத்தி சொன்னப்ப பதிலே சொல்லாமல் எழுந்து போயிட்டான் இல்ல. நீங்களும் இருபத்தெட்டு வயசெல்லாம் ஒரு வயசான்னு என் வாயை அடைச்சிட்டீங்க…” என்ற மனைவியை அமைதியாக பார்த்தார்.

இதெல்லாம் நினைவில் வர அன்று மனைவி சொன்னது உண்மை தான் என்று இப்போது புரிந்தது. சீமாவும் இடையில் வைஷாலி என்று ஒருமுறை அவனைக் கிண்டல் செய்ததும் நினைவிற்கு வந்தது. குமார் சௌத்ரி குடும்பம் இன்னொரு தமிழ்நாட்டு மருமகளை வரவேற்க வேண்டிய நேரம் வந்துவிட்டது’ என்று புன்னகைத்துக் கொண்டார்.

** ********************

வாசலிலேயே காரை நிறுத்திவிட்டு, தந்தையும், மகளும் சப்தமில்லாமல் வாசலில் வந்து நின்றனர். உதட்டில் விரல் வைத்து, “ஷ்” என்று சொல்லிவிட்டு, மொபைலை எடுத்து வீட்டு எண்ணை அழுத்தினாள்.

“ஹே ருத்ரா இந்தத் துணியை அக்காவோட ரூமில் வச்சிடு” என்று வேலைக்காரப் பெண்ணிடம் சொல்லிக்கொண்டே போனை எடுத்தவர்,

“சொல்லு வைஷூ! தயாராகியாச்சா…? எல்லாத்தையும் பத்திரமா எடுத்து வச்சிட்டியா? அரைமணி நேரம் முன்னாலேயே ஸ்டேஷனுக்கு வந்திடு” என்றார்.

“அம்மா நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க… வந்து…”

“என்னடி…! ஊருக்கு வராமலிருக்க புதுசா ஏதாவது கதை சொல்லப்போறியா? ஏற்கெனவே எக்சாம் முடிஞ்சதும் ஃப்ரெண்ட்ஸ் கூட ரெண்டு நாள் இருந்துட்டு வரேன்னு சொன்ன சரின்னு விட்டா இப்போ என்ன செய்யப் போற?” என்று கோபத்துடன் கத்தினார்.

சிரிப்பை அடக்கிக்கொண்டு, “இல்லம்மா… நான் இப்போ…” என்று இழுத்தாள்.

“இப்போ என்னடி… இழுக்காமல் சொல்லித் தொலையேன்” என்று மகள் வராத ஏமாற்றம் ஆத்திரமாக அவரது பேச்சில் வெளிப்பட்டது.

“என்னம்மா நீங்க சொல்ல வர்றதை கேட்காம, வந்து கதவைத் திறங்க. எத்தனை நேரம் வாசலிலேயே நிக்கிறது…” என்று வேண்டுமென்றே கத்தினாள்.

முதலில் அவள் சொன்னதைப் புரிந்து கொள்ளாத தேவிகா புரிந்ததும், “என்னது வாசலில் நிக்கிறியா…?” என்றவர், கார்ட்லெஸ் போனை காதில் வைத்தபடியே, “உண்மையாவாடி…” என்று கேட்டபடியே ஓடோடி வந்து கதவைத் திறந்தார்.

“அம்மா…!” என்று சந்தோஷக் கூச்சலுடன் கழுத்தைக் கட்டிக்கொண்டு கன்னத்தில் முத்தமிட்டவள், அவரை வாசலுக்கு இழுத்து, தோள்களைப்

பற்றிக் குதூகலத்துடன் சுற்றினாள்.

“கடவுளே!” என்று சலித்துக்கொண்ட தேவிகா, “ஏய்! நில்லுடி... நானென்ன வயசுப் பொண்ணா? உனக்குச் சரிக்குச் சமமா ரங்கராட்டினம் சுத்த...” என்று அஸ்புஸ்சென மூச்சு வாங்கியவர், வராண்டாவிலிருந்த சோ:பாவில் ஓய்ந்து போய் அமர்ந்தார்.

“என் செல்ல அம்மா இப்போ நம்பறீங்களா நான் வந்திருக்கறது உண்மைதான்னு...” என்று அன்னையின் கன்னத்தைப் பற்றி ஆட்டினாள்.

முறைத்த தேவிகா, “ஆமாம்... இன்னைக்கு நைட் டிரெயின்ல தானே வர்றதா சொன்ன... எதுக்குக் காலையில கிளம்பி வந்த? அட்லீஸ்ட் வந்தவ எனக்குப் போன் செய்து சொல்லணும்னு அறிவாவது வேணாம். எங்கப் பார்த்தாலும் ஆக்சிடெண்ட் அது இதுன்னு நடக்குது... இதுல பஸ்ல இத்தனைத் தூரம் தனியா வந்திருக்க” எனச் சப்தமிட, அலுப்புடன் வீட்டினுள் நுழைந்தாள் வைஷாலி.

“நான் ஒருத்தி பேசிட்டு இருக்கேன் கொஞ்சமாவது மரியாதை இருக்கா இந்தப் பொண்ணுக்கு. எல்லாம் நீங்க கொடுக்கற செல்லம்” சோ:பாவில் ஓரமாக அமர்ந்து மகளின் கலாட்டாவை ரசித்துக்கொண்டிருந்த சங்கரனுக்கு ஒரு மண்டகப்படியை அளித்துவிட்டு மகளைத் தேடிச் சென்றார்.

“ஹாய் ருத் சௌக்கியமா...?” என்று விசாரித்தவள், டைனிங் டேபிள் மீதிருந்த தண்ணீரை எடுத்து அருந்தினாள்.

அந்த வேலைக்காரப் பெண் பதில் சொல்லும் முன் அங்கே வந்த தேவிகா, “நீ போய் வேலையைப் பார்” என்று அவளை

சமையலறைக்கு அனுப்பிவிட்டு, மகளிடம் திரும்பினார். "வைஷூ..." என்று ஆரம்பித்தவரை இமைக்காமல் பார்த்தாள்.

"ஹூப்ஸ்!" என்றவள், "அம்மா, நமக்கு எது நடக்கணும்னு இருக்கோ அது நடந்தே தீரும்... சும்மா புலம்பாதேம்மா..." என்று கெஞ்சலாகச் சொன்னவள், "ரொம்ப நாள் கழித்து உன் கையால் சாப்பிடப் போறேன்னு சந்தோஷமா வந்திருக்கேன்... பசிக்குதும்மா..." என்று பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு, அன்னையின் தோளில் சாய்ந்து கொஞ்சலாக பேசினாள்.

மகளது கொஞ்சலைக் கேட்டதும் தேவிகாவின் கோபமெல்லாம் பறந்தோடி விட்டது. "நீ நாளைக்குத் தான் வரேன்னு இன்னைக்கு எதுவும் ஸ்பெஷலா சமைக்கலையேடி கண்ணம்மா! ஒரு அரைமணி நேரம் பொறுத்துக்கோ... உனக்குப் பிடிச்ச தால் ஃப்ரையும், கோபி மஞ்சூரியனும் தயார் பண்ணிடுறேன்" என்றபடி சமையலறைக்கு ஓடினார்.

"அதுக்குள்ள நான் ஒரு குளியல் போட்டுட்டு வந்திடுறேம்மா..." என்று குரல் கொடுத்தவள், தனது பெட்டியை எடுத்துக்கொண்டு அறைக்குள் நுழைந்தாள்.

வெதுவெதுப்பான நீரில் குளித்துவிட்டுப் புத்துணர்ச்சியுடன் தலையைத் துடைத்துக்கொண்டே வந்தவள், போனை எடுத்து ஆராய்ந்தாள். 'அட சீமாக்கா போன் செய்திருக்காங்க...' என்று எண்ணிக்கொண்டே, சீமாவை அழைத்தாள்.

"என்னம்மா, வீட்டுக்குப் போனதும் அம்மா முந்தானையைப் பிடிச்சி சுத்திட்டு இருக்கியா? போன் செய்தால்கூட எடுக்க மாட்டேன்றீங்க..."

என்று வழக்கம் போலத் தன் பல்லவியை ஆரம்பித்தாள்.

“அதெல்லாம் ஒண்ணும் இல்லை அலுப்பு போக குளிச்சிட்டு வந்தேன். நானே போன் செய்யணும்னு தான் இருந்தேன்…” என்றாள்.

“என்னவோம்மா நம்பறேன் வேற வழி. நீ பத்திரமா போய் சேர்ந்தியான்னு கேட்கலைன்னு ஒருத்தன் போன் பண்ணி என் உயிரை எடுத்தான். அதான் இப்போவே செய்தேன். இல்லைனா ஈவ்னிங் தான் போன் செய்திருப்பேன். பொண்ணுங்களைப் பத்தி இந்த ஆண்களுக்கு என்ன தெரியும்? அவங்களை மாதிரியே கேட்கற கேள்விக்குப் பதில் சொல்றவங்களா நாம? நிறுத்தி நிதானமா காலைல எழுந்ததுல இருந்து வீடு வந்து சேர்ந்தது வரைக்கும் அம்மாவிடம் கதையளந்து முடிச்சாதானே நமக்குத் திருப்தி” என்றாள்.

”அதென்னவோ உண்மை தான்க்கா. இன்னும் நான் கதையை ஆரம்பிக்கவேயில்லை. சாப்டுட்டு நிதானமா வேலையில் இறங்கணும். நான் இல்லாமல் முழுசா ஒருவருஷம் சந்தோஷமா இருந்தாங்க. இத்தனை நாள் ஏன் வரலை வரலைன்னு என்னை துளைச்சாங்க இல்ல இன்னைக்கு அதுக்கு தண்டனை கொடுத்தே ஆகணும். நான் உங்ககிட்ட ஈவ்னிங் நிதானமா பேசறேன். உங்களை விசாரிச்சவரிடம் பத்திரமா வந்து சேர்ந்துட்டேன்னு சொல்லுங்க. நான் அப்புறமா மெயில் அனுப்பறேன்” என்றவள் போனை அணைத்தாள்.

மஞ்சள் நிற லாங் ஸ்கர்ட்டும், கறுப்பு நிற டாப்சுமாக, கையில் ஒரு கவருடன், பாடல் ஒன்றை முணுமுணுத்தபடி டைனிங் ஹாலில் வந்தமர்ந்தாள்.

“இந்தா ருத், உனக்கு சல்வார் வாங்கிட்டு வந்தேன். பிடிச்சிருக்கான்னு

சொல்லு…” என்று வேலைக்காரப் பெண்ணிடம் கவரைக் கொடுத்தாள்.

சந்தோஷத்துடன் உடையை இப்படியும் அப்படியுமாகப் பார்த்துக்கொண்டே, “தீதீ ரொம்ப நல்லா இருக்கு… தேங்க்ஸ்” என்றாள்.

புன்னவைத்தவள், “போன்ல மேத்ஸ் ஏதோ சரியா புரியலைன்னு சொன்னல்ல, அப்புறமா புக் கொண்டுவா சொல்லி தரேன். இப்போ நீ கிளம்பு நாளைக்கு வா போதும்” என்று அவளை அனுப்பி வைத்தாள். உணவைத் தானே மூவருக்குமாக பரிமாறினாள்.

தேவிகா, மகளைப் பெருமையுடன் பார்த்தார். சட்டென மகள் பெரியவளாக ஆகிவிட்டது போல ஒரு எண்ணம் எழ அவளுக்குச் செய்ய வேண்டிய கடமை நினைவில் வர மனத்திற்குள் சிறு வேதனை பரவியது.

அத்தியாயம் - 15

“வைஷாலி! ஈவ்னிங் என் ஃப்ரெண்ட் வீட்டில ஒரு விசேஷம். நாலு மணிக்கெல்லாம் தயாராகிடு, அப்பா வந்ததும் கிளம்பணும். லேட் பண்ணிடாதே” என்றார் தேவிகா.

லேப்டாப்பிலிருந்து கண்களை அகற்றாமல், “நீங்க ரெண்டு பேரும் போய் வாங்க. நான் வரலை…” என்றாள்.

“முதல்ல நேரா நிமிர்ந்து பார்த்துப் பேசு. எப்போ பாரு அந்த லேப்டாப்புக்குள்ளயே தலையை விட்டுட்டு என்ன தான் செய்வியோ!” என்றபடி அவளை நோக்கி வர, டைப் செய்துகொண்டிருந்த மெயிலை வேகமாக மூடினாள்.

“இப்போ என்னதாம்மா உங்க ப்ராப்ளம்?”- சலிப்புடன் கேட்டாள்.

“நீதானே வந்து பத்து நாள் ஆகுது..., என்னை எங்கேயும் வெளியே அனுப்ப மாட்டேன்றேன்னு புலம்பிட்டு இருக்க?”

“புது ஊர்... தனியா போகக் கூடாதுன்னு சொல்லிட்டீங்க. அதுக்காக, உங்க கூட விசேஷத்துக்கெல்லாம் என்னால் வரமுடியாது” என்றாள்.

“அதே மாதிரி உன்னை வீட்டில் தனியாக விட்டுட்டும் போக முடியாது. கிளம்பற வழியைப் பார். அன்னைக்கு இன்வைட் பண்ண வந்தவங்க, உன்னிடமும் சொல்லிட்டுத் தானே போனாங்க...” என்று மகளுக்கு நினைவு படுத்தினார்.

ஆனால், அவள் வரமாட்டேன் என்று பிடிவாதம் பிடிப்பதும் அதனால் தான் என்று அவருக்குப் புரியவில்லை. நினைவு படுத்துவதாக நினைத்து, அவளது எரிச்சலை அதிகமாக்கிவிட்டார்.

நான்கு நாட்களுக்கு முன்பு தேவிகாவின் தோழி, தன் மகளுடைய நிச்சயதார்த்தத்திற்கு அழைக்க குடும்பத்துடன் வந்திருந்தார். உடன் வந்த அவரது மகன் தன் பெயர் அக்*ஷய் என்று அறிமுகப்படுத்திக்கொண்டு அவளிடம் பேச ஆரம்பித்தான்.

முதலில் சாதாரணமாக பேசிக்கொண்டிருந்தவளுக்கு ஒரு கட்டத்திற்கு மேல் அவனது வழிசலை, வைஷாலியால் தாங்க முடியவில்லை. ‘நடுவில் எழுந்து சென்றால் மரியாதையாக இருக்காதே’ என நினைத்தவள் கடனே என்று அங்கு அமர்ந்திருந்தாள்.

ஜோக் என்ற பேரில் அவன் சொன்ன காலணாவுக்குப் பெறாத அறுவைகளைத் தாங்கிக் கொண்டு ஒப்புக்காகச் சிரித்தவளுக்கு, ‘இவர்கள் எப்போது கிளம்புவார்கள்!’ என்றாகிவிட்டது.

கிளம்பும் போதும், “கண்டிப்பாக ஃபங்க்*ஷனுக்கு வந்திடணும்… நான் எதிர்பார்த்திட்டு இருப்பேன்” என்று அவளிடம் சொல்லிவிட்டு வேறு சென்றான்.

“நிச்சயமா” என்று வேகமாகத் தலையாட்டியவள், அப்போதே முடிவு செய்து கொண்டாள்… தான் நிச்சயமாக அந்த விழாவிற்கு செல்லப் போவதில்லையென்று.

இப்போது அன்னையின் வற்புறுத்தலால் கடுப்பானவள், ‘என்ன சொல்லி இதைத் தவிர்ப்பது’ என்று புரியாமல் திணறினாள்.

“என் ஃப்ரெண்ட்ஸ் எல்லோரும் உன்னைப் பார்க்கணுமாம். கட்டாயம் கூட்டிட்டு வரச் சொல்லி இருக்காங்க…”

“என்னைப் பார்க்கணுமா அவங்களை நம்ம வீட்டுக்கு வரச் சொல்லுங்க என்னை ஷோகேஸ் பொம்மை மாதிரி நிறுத்தி, எல்லோருக்கும் காட்டப்போறீங்களா!” என்று அலற தேவிகா நிதானமாக அவளைப் பார்த்தார்.

அவரது பார்வையைக் கண்டதும், வைஷாலியின் மூளையில் அபாய மணி அடித்தது. அம்மா இத்தனை நிதானமாக இருந்தால் அடுத்து தனக்கு பெரிய மண்டகப்படி காத்திருக்கிறது என்று புரிந்து விட்டது.

மெல்ல அவளது முகம் இளக, “ப்ளீஸ்ம்மா! அங்கே நீங்க உங்க

ஃப்ரெண்ட்ஸ்கூட பேசிட்டு இருப்பீங்க… அப்பா, அவங்க ஃப்ரெண்ட்ஸ்கூட பேசிட்டு இருப்பாங்க, நடுவில் நான் வந்து எல்லார் முகத்தையும் வேடிக்கை பார்த்துட்டு இருக்கணும். சுத்த போர்ம்மா” என்று வார்த்தைகள் குழைந்து வர ஆரம்பித்தது.

“அதெல்லாம் ஒண்ணும் பிரச்சனை இல்லை… நீ கிளம்பு” என சொல்லிக்கொண்டிருக்கும் போதே, வீட்டினுள் நுழைந்தார் சங்கரன்.

“இதோ உன் அப்பாவும் வந்தாச்சு. உன் கதையை அவர்கிட்ட சொல்லு” என்றவர் கிச்சனுக்குச் சென்றார்.

“என்னடா, வழக்கம் போல உங்க ரெண்டு பேருக்கும் ஆர்கியுமெண்ட்டா?” என்று, மகளின் தோளில் தட்டியபடி அவளருகில் அமர்ந்தார்.

விஷயத்தைச் சொன்னவள், “நீங்க சொல்லுங்கப்பா… அம்மா சொன்னா கேட்க மாட்டேன்றாங்க” என்று சிணுங்கினாள்.

“அவங்க அத்தனைத் தூரம் வந்து அழைச்சிட்டு போயிருக்காங்க. நீ இங்கேயே இருந்து வராமலிருந்தால் நல்லா இருக்காதுடா. நாம சீக்கிரமே திரும்பி வந்திடலாம் சரியா” என்று மெதுவாக மகளுக்கு எடுத்துச் சொல்ல, அரைமனத்துடன் சரியென்றபடி எழுந்துச் சென்றாள்.

கையில் காஃபியுடன் வந்த தேவிகா, “இத்தனை நேரம் என் தொண்டைதண்ணி வத்தற அளவுக்குச் சொல்லியும் கேட்கலை, அப்பா வந்து ஒரு வார்த்தை சொன்னதும் மண்டையை ஆட்டிக்கிட்டு கிளம்பறதைப் பாரு” என்று தன் சொல்லக் கேட்காத ஆதங்கத்தில் புலம்பிய மனைவியை, புன்னகையுடன் பார்த்தான் சங்கரன்.

தேவிகா, பிறக்கும் போதே சீமான் வீட்டு வாரிசு. அவர் தனக்கு இது வேண்டும் என்று கேட்கும் முன்பே அனைத்தும் அவரைத் தேடி வரும். அன்பைக்கூட அவருக்கு அதிகாரமாகத் தான் வெளிப்படுத்தத் தெரியும்.

சங்கரனுக்கு எல்லாவற்றையும் யோசித்து, நிதானமாக செய்யும் குணம். பெரிதாக சொல்லிக்கொள்ளும்படி எந்த பின்ணணியும் இல்லாத சாதாரணக் குடும்பத்திலிருந்து, மிகவும் சிரமப்பட்டு, படிப்படியாக முன்னேறி வந்தவர்.

தேவிகாவின் தந்தை, தனது நண்பர் அலுவலகத்திற்குச் செல்லும் போது சங்கரனைக் கவனித்து தனது மகளுக்கு ஏற்றக் கணவன் என்று முடிவு செய்துவிட்டார். இரு குடும்பத்திலும் பேசி, ஏற்றத்தாழ்வுகளைச் சமாளித்து அனைவரின் சம்மதத்துடன், சங்கரனை மருமகனாக்கிக் கொண்டார்.

திருமணம் முடிந்ததுமே சங்கரனின் வேலைக்காக இருவரும் வட இந்தியா வந்துவிட, மாமனார்-மாமியார் இருவரும் கிராமத்திலேயே இருந்து விட்டதாலும், தேவிகாவிற்கு அவர்களிடம் பெரிதாக எந்தப் பிரச்சனையும் வந்ததில்லை. இயல்பாகவே விட்டிக்கொடுக்கும் மனப்பான்மை கொண்ட சங்கரனின் பெற்றோர், மருமகளால் தலைதூக்கும் சிறு பிரச்சனைகளை கூட, ஒன்றுமில்லாமல் நசுக்கிவிட்டனர்.

சங்கரன் - தேவிகா இருவருக்குமே மகள் என்றால் உயிர். அதிகாரமாக அன்பைக் காட்டும் அன்னையைவிட, கனிவான பார்வையாலேயே பாசத்தைப் பொழியும் தந்தையிடம் சுலபமாக ஒன்றிப் போனாள் வைஷாலி.

*** ****************************

சங்கரன் கா.ஃபியை குடித்து முடிக்கவும், வைஷாலி தயாராகி வரவும் சரியாக இருந்தது. ரோஜா வண்ணப் பட்டுச் சுடிதாரில் ஆயத்தமாகி வந்தவளைக் கண்களில் நிறைத்துக் கொண்டனர் பெற்றோர்.

'என் மகள் எத்தனை அழகு' என்று பெருமிதத்துடன் பார்த்த அந்தத் தாயின் முகம், அதைக் கண்ணாடியாகப் பிரதிபலித்தது.

"இப்படி அழகா கிளம்பி வர்றதை விட்டுட்டு இத்தனை அமர்க்களம்..." என்றபடி தொடுத்து வைத்திருந்த மல்லிச் சரத்தை, மகளின் கூந்தலில் தவழவிட்டார் தேவிகா.

விழாவிற்குச் சென்ற வைஷாலி, 'தன் அன்னைக்கு இத்தனைத் தோழிகளா!' என்று வியந்து போனாள். ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்த புன்னகையுடன் வணங்கியவள், வயதில் மூத்தவர்களின் கால்களைத் தொட்டு வணங்கியும் ஆசி பெற்றுக் கொண்டாள்.

மணப்பெண்ணைச் சந்திக்க, மகளையும் உடன் அழைத்துச் சென்று, அவளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் தேவிகா. பெண்கள் இருவரும் மெல்லிய முறுவலுடன் அமைதியாக இருந்தனர்.

எங்கும் இளமைப் பட்டாளமாக இருந்தது. அவள் கலகலப்பான சுபாவமாக இருந்த போதும் அங்கிருந்த ஆரவாரம் அவளுக்கு அதிகப்படியாகத் தோன்றியது. வைஷாலி, ஏனோ அவ்விடத்தில் ஒன்றமுடியாமல் திக்குமுக்காடிக் கொண்டிருந்தாள். அதுவரை அவளைப் பார்க்காத மணப்பெண்ணின் அண்ணன் அக்*ஷய்,

வைஷாலியை நோக்கி வேகமாக வந்தான்.

“ஹாய் வைஷாலி! நீ கட்டாயம் வருவேன்னு எனக்குத் தெரியும்” என்று அளவுக்கு அதிகமாகச் சிரித்தவனுக்கு, எரிச்சலை அடக்கிக்கொண்டு சிரமப்பட்டு புன்னகையை உதிர்த்தாள்.

“ஏதாவது சாப்டியா?” என்று குளிர்பானம் வரவழைத்துக் கொடுத்தான்.

“சாரி, நான் கூல்டிரிங்க்ஸ் குடிக்கமாட்டேன்...” என்றாள்.

“ஓ!” என்றான். அவனால் உடனே அங்கிருந்து அகலமுடியாது. ஏனெனில் அவனது நண்பர்கள் தூரத்திலிருந்து இவர்களை கவனித்துக் கொண்டிருந்தனர்.

“இந்த டிரெஸ் உனக்கு ரொம்ப நல்லாயிருக்கு” என்றான்.

அவன் கண்களை நேராகப் பார்த்தவள், “அப்படியா, தேங்க்ஸ்” என்றதும் அவனுக்கு ஏமாற்றமாக போயிற்று.

‘குழைவாள், வெட்கப்படுவாள் அதை வைத்து மேற்கொண்டு பேசி நண்பர்கள் மத்தியில் கொஞ்சம் பில்டப் கொடுத்துக்கொள்ளலாம்’ என்று நினைத்துக் கொண்டிருக்க, அவளது பதில் அவனுக்கு எரிச்சலைக் கிளப்பியது.

அவளது கண்கள் பெற்றோரைத் தேடியது. தொலைவில் அவர்கள் யாருடனோ பேசிக்கொண்டிருப்பது தெரிய வேறு வழியில்லாமல் அமர்ந்திருந்தாள்.

சிறிதுநேரம் அவளிடம் ஏதேதோ கதையளந்தான். “ம்” என்ற வார்த்தையைத் தவிர அவளிடமிருந்து பெரிதாக எந்த பிரதிபலிப்பும் இல்லை.

அதேநேரம் மாப்பிள்ளை வீட்டார் வந்துவிட, “எக்ஸ்கியூஸ்மீ” என்றவன் அங்கிருந்து அகல, நிதானமாக மூச்சை வெளியேற்றினாள்.
சடங்கு, சம்பிரதாயம் முடிய, கிண்டல் கேலி, என்று அங்கே கலகலப்பு கூடியது. அந்த ஆரவாரத்திலிருந்து நகர்ந்து விழாப் பந்தலின் மறுபக்கத்திற்கு வந்தாள்.

தோட்டத்துப் பூக்களை கவனமாக ஆராய்ந்து கொண்டிருந்தவளை, “ஒரு பூவே பூக்களை ரசிக்குதா!” என்ற குரல் அவளுக்கு பின்னாலிருந்து கேட்டதும், சடாரென திரும்பிப் பார்த்தாள்.

அங்கே சிரிப்புடன் நின்றிருந்தவனைப் பார்த்ததும், “விக்ரம்!” என்று கண்கள் மின்ன, ஆச்சரியத்துடன் அவனது பெயரை உச்சரித்தாள்.

கண்களை மூடி தலையசைத்தவன், “அட! இது நல்லாயிருக்கே” என்று அழகாக புன்னகைத்தவன், தனது பெயரை அவள் உச்சரித்ததைச் சுட்டிக் காட்டினான்.

அப்போது அவளிருந்த நிலையில் அதையெல்லாம் கவனிக்கும் மனநிலை இல்லை. சற்று முன்பு வரை இறுக்கமாகத் தெரிந்த சூழ்நிலை இப்போது அதற்கு நேர்மாறாக தெரிந்தது.

“வாட் எ சர்ப்ரைஸ்… நீங்க எப்படி இங்கே?” என்று ஆச்சரியத்துடன் வினவினாள்.

“மாப்பிள்ளை என்னோட ஃப்ரெண்ட்” என்றான்.

“ஓ! ரொம்ப ஆத்மார்த்தமான நட்போ… அவருக்காக இத்தனைத் தூரம் வந்திருக்கீங்க…” என்றதும் நகைத்தான்.

“இப்போ என்ன கேட்டுட்டேன்னு இந்த சிரிப்பு?” என்று புரியாமல் கேட்டாள்.

“உனக்கு ஒண்ணு சொல்லட்டுமா…! என் அப்பா அம்மா இதே ரத்னகிரியில் தான் இருக்காங்க…” என்றான்.

“என்னது!” என்று திகைத்தவள், “நீங்க ஏன் என்னிடம் இத்தனை நாளா இதைச் சொல்லவேயில்லை…” என்று உரிமையாக அவனிடம் கோபித்துக் கொண்டாள்.

“சொல்லக்கூடாதுன்னு இல்லை… உனக்கு சர்ப்ரைஸ் கொடுக்கலாமேன்னு சொல்லலை” என்றான்.

“ம், இந்தச் சீமாக்காகூட என்னிடம் சொல்லலை…” என்று உதட்டைச் சுழித்து, தலைசாய்த்து, விழிகளைச் சுழற்றி இமைகளை மூட, விக்ரம் அந்தக் கண்களுக்குள் சிறைபட்டுக் கொண்டான்.

“சரி உங்க ட்ரிப் எப்படி இருந்தது?” என்று அவனது வெளிநாட்டு பயணத்தைப் பற்றி விசாரித்தாள்.

இருவருக்கிடையிலான சுவாரசியமான பேச்சால் நேரம் கடந்ததே தெரியவில்லை அவர்களுக்கு.

அத்தியாயம் - 16

'வீட்டிலயிருந்து கிளம்பும் போதே சீக்கிரம் கிளம்பிடணும்னு சொல்லிட்டே இருந்தா. பேசிட்டு இருந்ததில் நேரம் போனதே தெரியலை… ரொம்ப நேரம் ஆகிடுச்சி; எங்கே மூஞ்சை தூக்கு வச்சிட்டு உட்கார்ந்திருக்காளோ!' என்று மனத்திற்குள் புலம்பிக்கொண்டே, வைஷாலியை தேடிக்கொண்டு வந்த தேவிகா திகைத்து நின்றார்.

a

'யார் இவன்? ரொம்ப நாள் பழகினது போல அவனோட பேசிட்டு இருக்கா!' என்று யோசித்துக்கொண்டிருக்கும் போதே, அவன் சொன்ன ஜோக்கிற்கு அடக்கமாட்டாமல் சிரித்த மகளை, ஆழ்ந்து பார்த்தார்.

"தேவிகா!" என்றபடி வந்த அவரது தோழி, வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த தேவிகாவின் பார்வையைத் தொடர்ந்து தன் பார்வையைச் செலுத்தினார். "ஹே! அது விக்ரம் தானே… உன் பொண்ணுக்கு, விக்ரமை தெரியுமா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் மணப்பெண்ணின் அம்மாவான மம்தா.

"ம்" என்று கேள்வியாக பார்த்த தேவிகாவின் சொல்லை, 'ஆம்' என்ற அர்த்தத்தில் எடுத்துக் கொண்டவர், விக்ரமின் அருமைப் பெருமைகளைப் பற்றிச் சொல்ல, அனைத்தையும் ஒருவிதப் பிரமிப்புடன் கேட்டுக்கொண்டார் தேவிகா.

மம்தாவின் பேச்சை வியப்பு மாறாமல் கேட்டுக்கொண்டவர், வைஷாலியின் பக்கமாகத் திரும்பினார். அங்கே அவள் தன் தந்தைக்கு விக்ரமை அறிமுகப்படுத்திக்கொண்டிருந்தாள்.

"சரி மம்தா, நாங்க கிளம்பறோம்… நாளைக்கு போன் செய்றேன்…" என்ற தேவிகாவை, "ஹே! சாப்டுட்டு போப்பா…" என்று சொல்லிவிட்டுச் செல்ல, சரியென்றபடி, கணவரை நோக்கி நடந்தார் தேவிகா.

"என் மகளுக்கு ரொம்ப பெரிய உதவி செய்திருக்கீங்க மிஸ்டர்.விக்ரம். நன்றின்னு ஒரு வார்த்தையில் முடிச்சிட முடியாது…" என்று நெகிழ்ச்சியுடன் சொன்னார் சங்கரன்.

"அது என்னோட கடமை அங்கிள்" என்று இயல்பாக சொன்னவனை ஆச்சரியத்துடன் பார்த்தவள், தன் அன்னை வருவதைக் கவனித்துவிட்டாள்.

"அப்பா, அம்மா வராங்க…" என்று எச்சரித்தவள், "விக்ரம் சார், அம்மாவுக்கு இது எதுவும் தெரியாது… மாட்டி விட்டுடாதீங்க" என்று பல்லிடுக்கில் பேசியவள், "இதோ அம்மாவே வந்துட்டாங்க" என்று அன்னையைப் பார்த்துப் புன்னகைத்தாள். "சார் இவங்க தான் என்னோட ஸ்வீட் அம்மா…" என்று தேவிகாவின் தோளைப் பற்றிக் கொண்டு சொன்னாள்.

"வணக்கம் ஆண்ட்டி" என்றவன் குனிந்து தேவிகாவின் காலைத் தொட்டு வணங்கினான்.

அதைச் சற்றும் எதிர்பார்க்காதவர், "நல்லாயிருங்க தம்பி" என்றவரின் முகத்தில் புன்னகை விரிந்தது.

விக்ரமின் அந்த ஒரு செயல், தேவிகாவின் மதிப்பில் அவனை

உயர்த்தி வைக்க போதுமானதாக இருந்தது. கலகலப்பாக பழகும் அவனது சுபாவமும், நறுக்குத் தெறித்தார் போன்ற பேச்சும் அவனது குணத்தை அவருக்குப் பறைசாற்றியது.

கிளம்பும் போது விக்ரமை கட்டாயம் வீட்டிற்கு வரவேண்டும் என்றதும், அவனும், 'நாளை மாலை வருகிறேன்' என்று சொல்லிவிட்டான்.

அப்போதே மனத்திற்குள் மாலைச் சிற்றுண்டிக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று பட்டியலிட ஆரம்பித்துவிட்டார் தேவிகா.

****

** *********************

"நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவேயில்லை. அடக்கம், பொறுமை, கொஞ்சம் கூட பந்தாவே இல்லாமல் என் காலைத் தொட்டு கும்பிட்டானே! என்ன அருமையா வளர்த்திருக்காங்க…" என்று ஸ்லாகித்துக் கொண்டார்.

தந்தையும், மகளும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர்.

"அம்மா! கார்ல ஏறினதுல இருந்து இது எட்டாவது முறை…" என்று அவர் விக்ரம் புகழ் பாடுவதைக் குறிப்பிட்டுச் சிரித்தாள்.

"அதனால என்னடீ! விக்ரம் அதுக்குத் தகுதியானவன் தான். இதே அந்த அக்ஷய்… ஒரு வருஷமா எனக்கு அவனைத் தெரியும். இன்னைக்கு வரைக்கும் 'ஹாய் ஆண்ட்டி'ன்னு வெள்ளைக்காரன் மாதிரி கையசைச்சிட்டு போவான்" என்ற அன்னையை வியப்புடன்

பார்த்தாள் வைஷாலி.

“எப்படிம்மா இதெல்லாம்” என்றவள் கலகலவென நகைத்தாள். “இந்த பங்ஷனுக்கு வர்ற வரைக்கும் அவனை ஆஹா ஓஹோனு புகழ்ந்தீங்க… இப்போ இப்படி சொல்லிட்டீங்களே…?” என்று கிண்டலாகச் சொன்னாள்.

தன்னைக் குறை சொல்வது போன்ற பேச்சை சற்றும் விரும்பாத தேவிகா, “அது இருக்கட்டும்… உன் அப்பா எதுக்கு விக்ரமுக்கு அப்படி நன்றி சொன்னார்…” என்று கண்கள் இடுங்க கேட்டார்.

‘அச்சச்சோ மாட்டினோம்’ என்று நினைத்துக்கொண்ட வைஷாலி, “எப்போம்மா!” என்று ஒன்றும் தெரியாதது போலக் கேட்டாள்.

“ம்…! நீ அம்மாவுக்கு எதுவும் தெரியாது மாட்டிவிட்டுடாதீங்கன்னு விக்ரம்கிட்ட, பல்லிடுக்குல பேசினியே… அப்போ” என்றார் கேலியாக.

“அது வந்து தேவி…” என்று ஆரம்பித்த கணவரை, “நீங்க உங்க பொண்ணுக்கு சப்போர்ட் பண்ணாம காரை ஓட்டுங்க…” என்று அவ்வரை அமைதிபடுத்திவிட்டு மகள் பக்கமாக திரும்பினார்.

“உன்னைத் தானே கேட்கறேன் சொல்லு…” என்றார் அதட்டலாக.

‘தன் வாயைக் கொடுத்து இப்படி மாட்டிக்குவோமா…! இனி தப்பிக்கவே முடியாது’ என்று நினைத்துக்கொண்டவள், மெல்ல அனைத்தையும் சொல்லி முடித்தாள்.

தேவிகாவின் கண்களில் கனல் பறந்தது.

“உனக்கு இருக்கற நெஞ்சு தைரியம் இருக்கே… காலேஜுக்குப் போனோமா… படிச்சோமான்னு இல்லாம ரௌடி மாதிரி ஊர் வம்பை இழுத்துட்டு வர்றது. வெளியே அனுப்பலைன்னு முழம் நீளத்துக்கு மூஞ்சியைத் தூக்கி வச்சிட்டு உட்கார்ந்திருக்க தெரியுது இல்ல. இப்போ புரியுதா உன்னை எதுக்கு வெளியே அனுப்பலைன்னு. வந்த அன்னைக்கே கேட்டேன் நெத்தியிலே என்ன காயம்னு கதவுல இடிச்சிகிட்டேன்னு பொய் வேற…” என்று சரமாரியாக வசை மழை பொழிய, வைஷாலி ஐயோ பாவமாக முகத்தை வைத்துக்கொண்டு அமர்ந்திருந்தாள்.

“தேவி, குழந்தையை ஏன் இப்படி படுத்தற… நம்ம வீட்டில் இருக்கும் வரைக்கும் தானே இப்படிச் சந்தோஷமா இருக்க முடியும்… கல்யாணமானா பொறுப்பு வந்திடும்மா…” என்று மகளுக்குப் பரிந்துகொண்டு வந்தார்.

“நாங்கள்ளாம் இல்லையா… இப்படியா வளர்ந்தோம்… எல்லாம் அவளைச் சொல்லித் தப்பில்லை. உங்களைச் சொல்லணும்…” என்று ஒரே வரியில் கணவரின் வாயை அடைத்தார்.

“போன் பண்ணட்டும் உன் ஃப்ரெண்ட்ஸ்… இருக்கு ஒவ்வொருத்திக்கும். ஒருத்திகூட மூச்சே விடலை என்கிட்ட. இந்த ஜனனி பொண்ணு அவளும் சொல்லல. அம்மா… அம்மான்னு குழைவா இல்ல இருக்கு அவளுக்கு…” என்று பாரபட்சம் இல்லாமல் அனைவருக்கும் தனது வசவை சரிசமமாகப் பகிர்ந்து வழங்கினார்.

வைஷாலிக்கு போதும்டா சாமி என்று இருந்தது. தனக்காக திட்டுவாங்கும் தோழிகள் மீது பரிதாபம் பொங்கியது. அதே நேரம்

தனக்காக மாய்ந்து போகும் அன்னையின் பாசமும் அவளுக்குப் புரிந்தே இருந்தது. இந்தத் திட்டுக்காகவே இன்னும் குறும்பு செய்யவேண்டும் என்றும் தோன்ற மெல்லப் புன்னகைத்துக் கொண்டாள்.

அத்தியாயம் - 17

“அம்மா, சமோசா கோல்டன் பிரவுன் வந்ததும் எடுங்க… வெள்ளையா இருந்தா அவர் சாப்பிடமாட்டார்… அம்மா, டீயில் அரைச் சர்க்கரை போட்டால் போதும்… அது தான் அவருக்குப் பிடிக்கும்” என என்றுமில்லாத திருநாளாக சமையலறையில் நின்றபடி ஒவ்வொன்றாக சொல்லிக்கொண்டிருந்த மகளைக் கவனித்துக் கொண்டே இருந்தார் தேவிகா.

மகளது செயல்கள் அவருக்குச் சற்று வியப்பாக இருந்தாலும், அது தேவிகாவிற்கு பிடித்தே இருந்தது. காலையிலிருந்து அவரது தோழிகள் மாற்றி மாற்றி போன் செய்து, “விக்ரம் குமார் சௌத்ரியை உன் மகளுக்குத் தெரியுமாமே…! மம்தா சொன்னா…” என்று ஆரம்பித்து, விக்ரம் மற்றும் அவனது பெற்றோரைப் பற்றித் தாங்கள் அறிந்த, கேட்ட விஷயங்களைச் சொல்லச் சொல்ல, தேவிகா பூரித்துப் போனார்.

ஒரே நாளில் தான் அனைவருக்கும் முக்கியமானவளாக ஆனதில் அவருக்கு மனம் கொள்ளா சந்தோஷம். ‘விக்ரம் தங்கள் வீட்டிற்கு மருமகனாக வந்துவிட்டால் போதும்’ என்று ஒருபடி மேலாகவே ஆசைப்பட்டார்.

அதே நேரம் தன் கணவர் இதற்குச் சம்மதிப்பாரா? என்ற சந்தேகமும்

சேர்ந்தே தோன்றியது. மறுகணமே அவரை எப்படியும் வழிக்குக் கொண்டுவந்துசிடலாம் என்ற நம்பிக்கையும் மனத்தில் எழுந்தது. மகளது நல்வாழ்க்கைக்கு நிச்சயம் குறுக்கே நிற்கமாட்டார் என்று சமாதானமும் சொல்லிக்கொண்டார்.

ஆனால் வைஷாலி...?

திடீரென தேவிகாவிற்கு மகளது மனத்தில் தான் நினைப்பது போலவே நினைக்க வேண்டுமே... இல்லை நான் சாதாரணமாக தான் பழகினேன் என்று சொல்லி விடக்கூடாதே!' என்ற பயம் உதயமாக அமைதியாக ஒரு இடத்தில் அமர்ந்துவிட்டார்.

முன்தினம் நடந்தது அனைத்தையும் ஒருமுறை மனத்திரையில் ஓடவிட்டு அவற்றை அலசி ஆராய்ந்தார். 'தன் சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் எதுவும் இல்லை' என்று தெளிவடைந்தார்.

மேலும், 'வைஷாலி புத்திசாலி. நிச்சயமாகத் தன் வாழ்க்கையின் முக்கியமான கட்டத்தில் தவறுச் செய்யமாட்டாள்' என்ற அபரிமிதமான நம்பிக்கை மகள் மீது எழ, மனம் சற்று ஆசுவாசமடைந்தது. டேபிள் மீதிருந்த தண்ணீரை எடுத்துக் குடித்தவர் தன் வேலையில் மூழ்கினார்.

"அம்மா...!" என்று பெரும் குரலில் அழைத்தபடி சமையலறைக்குள் நுழைந்த மகளை அன்புடன் பார்த்தார்.

"என்னடா கண்ணம்மா" என்ற அன்னையை ஆச்சரியத்துடன் பார்த்தாள் வைஷாலி.

"எதுக்கு இப்படிக் காட்டுக் கத்தல் கத்தற' என்று தான் பேசியதற்கு

மேல் உரக்கப் பேசும் அன்னையா இது? இது நிஜமா' என்று நினைக்கும் போதே, இது நிஜமே தான் என்று சொல்வது போல, தேவிகா சமோசாவை எண்ணையில் போட்டதும் ஒரு துளி எண்ணைய் தெறித்து, அவளது முழங்கையில் பட்டது.

அந்த எரிச்சலில், "ஸ்… ஆ!" என்று அலறினாள்.

"அச்சச்சோ! கைல பட்டுடுச்சா! சாரிடா" என்று சிங்க் குழாயைத் திறந்து வைஷாலியின் கரத்தில் நீர் படும்படிச் செய்தார். "இரு நான் ஆயின்மெண்ட் எடுத்துட்டு வரேன்…" என்று பதறிய அன்னையைப் பாசத்துடன் அணைத்துக் கொண்டாள்.

"சின்ன காயம்தாம்மா… நத்திங் டூ வொர்ரி…" என்று புன்னகைத்த மகளைப் பார்த்தவரின் மனம் சமாதானமாகவில்லை.

"ரிலாக்ஸ்ம்மா. நான் அப்பாவுக்கு போன் செய்து நினைவு படுத்திட்டேன். இன்னும் இருபது நிமிஷத்துல வந்திடுறேன்னு சொல்லியிருக்காங்க. விக்ரம் ரொம்ப பங்க்சுவல் ஐந்து மணிக்கு வரேன்னு சொன்னால் சரியா வந்திடுவார். நீங்க சீக்கிரம் தயாராகுங்க. நானும் தயாராகுறேன்" என்று சொல்லிவிட்டுச் செல்லும் மகளை ஆதூரத்துடன் பார்த்தார்.

'ஊர்க் கண்ணே என் குழந்தை மேலதான்… இன்னைக்கு சுத்திப் போடணும்' என்று நினைத்துக்கொண்டே வேலைகளை விரைந்து முடிக்க ஆரம்பித்தார்.

** **

சுவர்க் கடிகாரத்தில் பெரிய முள் பன்னிரெண்டை தொட்டு மணி ஐந்து

என்று அறிவிக்கவும், விக்ரமின் கார் வாசலில் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

கேட்டைத் திறக்கும் சப்த கேட்டதும், எட்டிப் பார்த்தவள், “அம்மா, அவர் வந்தாச்சு” என்று குரல் கொடுத்துவிட்டு, “வாங்க சார்” என்று சொல்லிக்கொண்டே அவனை நோக்கிச் சென்றாள்.

நிதானமான நடையுடன் வந்தவன், “ஹாய் ஷாலு! என்ன ரொம்ப தடபுடல் செய்துட்டீங்களா? வாசனை இங்கே வரைக்கும் வருதே” என்றான் புன்னகையுடன்.

“அதெல்லாம் ஒண்ணுமில்லை. சிம்பிள் தான்…” என்று புன்னகைத்தாள்.

“வாங்க தம்பி!” என்ற தேவிகாவிற்கு சொன்னபடியே வந்துவிட்டானே என்ற சந்தோஷம் வார்த்தைகளிலேயே வெளிப்பட்டது.

“உட்காருங்க…” என்றவர், “மன்னிக்கணும், வைஷூவோட அப்பாவுக்கு கிளம்பற நேரத்தில் திடீன்னு ஒரு மீட்டிங் அட்டெண்ட் பண்ணியாக வேண்டிய சூழ்நிலை… தப்பா எடுத்துக்காதீங்க” என்றார் தேவிகா.

“எனக்கும் அங்கிள் எஸ்.எம்.எஸ் அனுப்பி இருந்தாங்க. ஆனால், இதெல்லாம் சகஜம். பதவி உயர உயர பொறுப்பு அதிகம் தானே. இப்போ எனக்கே முக்கியமான வேலை வந்திருந்து நான் வரமுடியாமல் போயிருந்தால் நீங்க புரிஞ்சிக்க மாட்டீங்களா!” என்றான் இலகுவாக.

தேவிகா ஆமென்பது போலப் புன்னகையுடன் தலையசைத்தார்.

ஹாலை பார்வையால் அளந்தவன், "வீட்டை ரொம்ப அழகா வச்சிருக்கீங்க ஆண்ட்டி" என்றான் பாராட்டுதலாக.

"எங்க அம்மா சகலகலா வல்லி! சமையல், ஆர்ட் ஒர்க், பஜனைன்னு எந்த செக்மெண்ட் போனாலும் கலக்கிடுவாங்க" என்றபடி தண்ணீருடன் வந்தவள், "எடுத்துக்கோங்க" என்று அவனிடம் டிரேயை நீட்டினாள்.

"ஓ! அப்படியா, எங்க அம்மாவும் ரொம்ப நல்லா சமைப்பாங்க" என்றான்.

"வைஷூ, நீ தம்பியை பின்னால இருக்கும் லானுக்கு கூட்டிட்டுப் போ... நான் ஸ்நாக்ஸ் எடுத்துட்டு வரேன்" என்றார் தேவிகா.

"வாங்க சார்! எனக்கு எங்க வீட்டிலேயே ரொம்ப பிடிச்ச இடம் என் ரூம் பால்கனியும், இந்த லானும் தான். பெரும்பாலும் வீட்டின் முன்பக்கம் தான் லான் வைப்பாங்க. எங்க அப்பாவுக்கு கொடுத்திருக்கும் கம்பெனி வீட்டில் பின்பக்கமா வச்சிருக்காங்க" என்று சிரித்தபடி, வீட்டின் பின்புறம் அழைத்துச் சென்றாள்.

தோட்டத்தில் இறங்கியவன், "வாவ்! அருமையாக இருக்கு. முன்பக்கம் இருந்திருந்தால் நாம உட்கார்ந்திருப்பதெல்லாம் வெளியே இருக்கவங்களுக்குத் தெரியும். பட், பின்புறமா இருக்கறது ரொம்பவே நல்லா இருக்கு. நாம ரிலாக்ஸ்டாக இருக்கலாம்" என்றான்.

டைனிங் ஹாலிலிருந்து தேவிகா அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். 'விக்ரமின் தோற்றப் பொறுத்தத்திற்குச் சற்றும் சளைத்தவள் அல்ல தங்கள் மகள்' என்ற கர்வம் அவரது முகத்தில் எட்டிப்பார்த்தது.

ருத்ரா பின் தொடர புன்னகையுடன் அவர்கள் இருந்த இடத்திற்குச் சென்றார்.

“என்ன வைஷூ! தம்பியை நிற்க வச்சே பேசிட்டு இருக்க. நிதானமா உட்கார்ந்து பேசக்கூடாதா!” என்றார்.

“பரவாயில்லை ஆன்ட்டி... எப்பவும் உட்கார்ந்து பார்க்கும் வேலை தானே செய்யறேன். எனக்கு நிற்பதே நல்லாயிருக்கு” என்றவனுக்குப் பாதாம் அல்வாவும், சமோசாவும் இருந்த தட்டை எடுத்துக் கொடுத்தாள் வைஷாலி.

“விக்ரம் சார்! எங்க வீட்டில் இருக்கும் நாலாவது ஆளை உங்களுக்கு அறிமுகப்படுத்தலையே... இவள் தான் ருத்ரா. எனக்கு மட்டும் ருத். எனக்குக் குட்டித் தங்கை மாதிரி” என்று வீட்டில் வேலை செய்யும் ருத்ராவை அறிமுகப் படுத்தினாள்.

“ஹலோ!” என்று விக்ரம் இயல்பாக சொல்ல, “வணக்கம்” என்றவள் கூச்சத்துடன் உள்ளே ஓடிவிட்டாள்.

சிரித்த வைஷாலி, “ரொம்ப நல்ல பொண்ணு. படிக்கணும்னு ஆசை; ஆனால், வசதி இல்லை. டென்த் வரைக்கும் முடிச்சிருக்கா. மூணு வருஷம் ஆகுது. வேலைக்கு வந்தவளை இப்போ அப்பாதான் படிக்க வைக்கிறாங்க. இந்த வருஷம் பிளஸ் டூ எழுதறா” என்று அவளைப் பற்றிச் சிறு அறிமுகம் செய்தாள்.

“ரொம்ப நல்ல விஷயம். ஒருத்தருக்குக் கல்வி கொடுக்கறது பெரிய புண்ணியம். ருத்ரா காலேஜில் படிக்க ஆகும் செலவை நம்ம டிரஸ்ட்

மூலமா ஏற்பாடு செய்யலாம் ஷாலு…" என்றதும், அவனது பெயர்ச் சுருக்கத்தைக் கேட்ட தேவிகா மனத்திற்குள் சிரித்துக் கொண்டார்.

"ரொம்ப தேங்க்ஸ் சார்!" என்று மகிழ்ச்சியுடன் சொன்னாள்.

சிறிது நேரம் மூவரும் பொதுவாக பேசிக்கொண்டிருந்தனர்.

மொபைலை எடுத்து தனது அம்மாவை அழைத்தவன், "ஆன்ட்டி! அம்மா உங்ககிட்ட பேசணும்னு சொன்னாங்க… பேசுங்க" என்று மொபைலைக் கொடுத்தான்.

தேவிகாவிற்கு சற்றுப் படபடப்பாகிப் போனது. தயக்கத்துடனேயே போனை வாங்கியவர், "ஹலோ, வணக்கம்மா" என்றார்.

"நல்லாயிருக்கீங்களா தேவிகா…" என்று அன்பைக் கொட்டி வந்த வார்த்தையில் தன்னை மூழ்கடித்துக் கொண்டார் தேவிகா.

வைஷாலியைப் பற்றி விசாரித்த செந்தளிர் அவளையும் அழைத்து இரண்டு வார்த்தைகள் பேசினார். அவள் தன் அன்னையிடம் பேசும் அழகைக் கணகளில் நிறைத்துக் கொண்டான். இருவரையும் கவனித்த தேவிகாவிற்கு அப்படி இப்படி என்று இருந்த சந்தேகமும் சுத்தமாக தீர்ந்து போனது.

"அம்மா, ஆண்ட்டி உங்ககிட்ட பேசணுமாம்' என்று போனை தன் அம்மாவிடம் கொடுத்தாள்.

செந்தளிர் சொன்னதைக் கேட்ட தேவிகா, "வீட்டுக்குத் தானே கட்டாயம் வரோம். இந்த ஞாயிற்றுக் கிழமை முடியுமான்னு தெரியலை. இவங்க

அப்பா வந்ததும் பேசிட்டு நாளைக்குச் சொல்றேனே” என்றார் தேவிகா.

“அப்படியே செய்ங்க தேவிகா. திங்கட் கிழமை விக்ரம் பூனா கிளம்பிடுவான்… அதான் அவன் இருக்கும் போதே வந்தால் நல்லா இருக்கும்ன்னு நினைத்தேன். எனக்கும் வைஷாலியை பார்க்கணும் போல இருக்கு” என்றார் ஆசையுடன்.

தேவிகாவிற்கு சந்தோஷமாக இருந்தது. “கட்டாயம் இவங்க அப்பாவிடம் பேசி நல்ல பதிலாவே சொல்றோம்” என்று மலர்ந்த முகத்துடன் போனை வைத்தார் தேவிகா.

“சார், எங்களைப் பத்தி உங்க வீட்டில் சொல்லியிருப்பீங்கன்னு நினைக்கவேயில்லை” என்று ஆச்சரியம் விலகாமல் சொன்னாள் வைஷாலி.

“உன்னை என்னைக்கு சந்திச்சேனோ அன்னைக்கே சொல்லிட்டேன்…” என்றான்.

“ஓ! நீங்க அம்மா பையனா…” என்று கேட்டாள்.

“நான் ரெண்டு பேருக்குமே செல்லப் பையன் தான்” என்றவன், “ஓகே ஆன்ட்டி, நான் கிளம்பறேன். அங்கிள்கிட்ட பேசுங்க. அம்மா உங்களையெல்லாம் பார்க்க ரொம்ப ஆவலா இருக்காங்க” என்றவனின் பார்வைக் கடைசி வாக்கியத்திற்கு வைஷாலியை ஸ்பரிசித்துவிட்டு மீண்டது.

“நிச்சயம் சொல்றேன் தம்பி. நீங்க ரத்னகிரி வரும் போது நம்ம வீட்டுக்கும் ஒரு எட்டு வந்திட்டு போங்க” என்றவருக்குப்

புன்னகையைப் பதிலாக்கிவிட்டு, வைஷாலி பக்கமாகத் திரும்பினான்.

தேவிகா, பாத்திரங்களை எடுத்துக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தார்.

தேவிகாவின் குறிப்பறிதலை வைஷாலி உணர்ந்தாளோ இல்லையோ! விக்ரம் அறிந்து கொண்டான்.

புன்னகையுடன், “கிளம்பறேன் ஷாலு. நேரம் கிடைச்சா, ஒரு போனோ மெயிலோ பண்ணு. நீ வருவதை கன்ஃபார்ம் செய்து சொன்னால் சீமாவை வரச் சொல்றேன் அவளும் உன்னைப் பார்க்கணும்னு சொல்லிட்டு இருந்தா” என்றான்.

“சொல்றேன் சார். எங்க வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து வீட்டுக்கு வந்ததற்கு ரொம்ப தேங்க்ஸ்” என்றாள்.

“அம்மா பெரிய மனுஷி, நான் யாரோ அன்னியன் இல்லை. என்னைக்குமே…” ‘உன் விக்ரம் தான்’ என்று சொல்ல வந்த வார்த்தையைக் கட்டுப்படுத்திக் கொண்டு, “உன் வெல் விஷர் தான்” என்றான்.

மலர்ந்த முகத்துடன் தலையசைத்தவளை கண்களில் நிறைத்துக் கொண்டு, அவள் தங்கள் வீட்டிற்கு வரும் நாளுக்காக, ஆவலுடன் காத்திருந்தான்.

அத்தியாயம் - 18

“சொல்லு ராகவன்!”

“.........................”

“ஓகே! நான் நாளைக்கு ஆ்ஃபிஸ் வந்ததும் பேசிக்கலாம்...”

“.........................”

“ஓகே சீயூ” என்று பேசிக்கொண்டே மாடியிலிருந்து இறங்கி வந்தவன், அவனது அன்னையின் அருகில் அமர்ந்தான்.

“யாரு கண்ணா? ராகவனா?” என்று கேட்டார் செந்தளிர்.

“ஆமாம்மா. ஒரு வழியா அவனோட பிரச்சனையெல்லாம் முடிஞ்சிடுச்சி. விஷயத்தைச் சொல்லத்தான் போன் செய்திருக்கான். அதோட, நாம அவனுக்குக் கொடுத்திருக்கும் ஆஃபரை ஏத்துக்க ரொம்ப தயங்கறான். தன்னோட தகுதிக்கு மீறினதுன்னு நினைக்கிறான். நாளைக்கு ஆஃபிஸ் போனதும் நீ அதுக்குப் பொறுத்தமானவன் தான்னு அவனைக் கன்வின்ஸ் பண்ணணும்” என்று புன்னகைத்தான்.

“உங்க அப்பாவோட கணிப்பு என்னைக்கும் சோடை போனதில்லை. நான் கூட ஆரம்பத்தில் உங்க அப்பா அவன்கிட்ட ரொம்ப எதிர்பார்க்கறாருன்னு நினைச்சேன்....”

“அப்பா என்னோட செக்கரட்டரியா ராகவனை கொண்டு வந்தார்ன்னா அதுக்குக் காரணம் இல்லாமல் இருக்குமா!”

“ம்ம்... சாதாரண அப்ரண்டீசா வேலைக்கு வந்தவனை உங்க அப்பா உனக்கு செக்கரட்டரி ஆக்கினார். நீ அவனை ஒரு கம்பெனிக்கே எம்.டி ஆக்கப் போற! எல்லாம் நல்லபடி நடந்தால் சரி” என்றார் செந்தளிர்.

“எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது… கீதைல பகவானே சொல்லியிருக்காரே அத்தை…” என்றபடி அங்கே வந்தாள் சீமா.

ஆமென ஆமோதித்த செந்தளிர், “லஞ்ச் தயாரா இருக்கா சீமா…” என்று விசாரித்தார்.

“ஆல்மோஸ்ட் முடிஞ்சது. கீர் மட்டும் தயாராகிட்டு இருக்கு… அத்தை” என்று பதிலளித்தாள்.

பேசிக்கொண்டிருக்கும் போதே வாசலில் கார் வந்து நிற்க, ரவீந்தருடன், சீமாவும் வாசலுக்கு விரைந்தாள்.

“வாங்க நமஸ்காரம்” என்று அழகான தமிழில் விக்ரமின் தந்தை ரவீந்தர் வரவேற்க, சங்கரனும், தேவிகாவும் வியப்புடன் பார்த்தவர்கள், “நமஸ்காரம்” என்றனர்.

“வைஷாலி…” என்றபடி தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டாள் சீமா.

“சீமாக்கா!” என்று சிரித்தவள், ரவீந்தர் குமார் சௌத்ரியைக் கண்டதும் விழிகள் விரிய திகைப்புடன் பார்த்தாள்.

அதற்குள் வாசலுக்கு வந்த செந்தளிர், “வாங்க வாங்க…” என்றழைத்தவர் சக்கர நாற்காலியில் அமர்ந்திருப்பதைப் பார்த்தவள் திகைப்புடன், அதிர்ச்சியும் சேர நின்றாள்.

சக்கர நாற்காலியைப் பிடித்துக் கொண்டிருந்த விக்ரமை

செய்வதறியாதவள் போலப் பார்த்தாள். அவனோ எப்போதும் போல பளீர் புன்னகையுடன் நின்றிருந்தான்.

சங்கரனும், தேவிகாவும் கூட இதை எதிர்பார்க்கவில்லை. என்றாலும் சுதாரித்துக்கொண்ட தேவிகா, மகளின் கையை யாரும் அறியா வண்ணம் தட்ட, சுதாரித்துக்கொண்டவள், பெரியவர்களின் காலைத் தொட்டு வணங்கினாள்.

“என்னம்மா வைஷாலி! எப்படியிருக்க? என்னை அடையாளம் தெரியுதா” என்று சிரிப்புடன் கேட்டார் ரவீந்தர்.

“அங்கிள்!” என்று சிரித்தவள், “அன்னைக்கே சொல்லியிருக்கலாமே...” என்றாள்.

“எல்லாம் காரணமா தாம்மா... நான்னு தெரிஞ்சிருந்தா என்னிடம் சரளமா பேசியிருப்பியா?” என்று பதில் கேள்வி கேட்டார்.

அனைவரும் உள்ளே வந்து அமர, வேலையாள் கொண்டுவந்த பழச்சாறை அனைவருக்கும் கொடுத்தாள் சீமா.

“இவ என் நாத்தனார் பொண்ணு சீமா” என்று செந்தளிர் அறிமுகப்படுத்த, “வணக்கம்” என்றவள், விக்ரமின் அருகில் சென்று அமர்ந்தாள்.

அறிமுகப்படுத்தியதும் அவளைப் பார்த்துச் சிரித்த தேவிகா, விக்ரமின் அருகில் அவள் அமர்வதைக் கண்டதும் அவரது முகம் அஷ்டகோணலாகியது.

அவரது மாற்றத்தைக் கண்டுவிட்ட சீமாவிற்கு சட்டெனக் காரணம் புரிந்துவிட, இவரை கடுப்பேத்தாமல் விடுவதில்லை என்று நினைத்துக்கொண்டாள். விக்ரமிடம் ரகசியம் பேசுவது போல அவனருகில் சென்று ஏதோ சொல்ல தேவிகாவிற்கு எரிச்சல் மண்டியது.

"நம்ம ஊர்க்காரங்களை சந்திச்சு பேசறதே அலாதிச் சந்தோஷம்தான்" என்றார் செந்தளிர்.

“உண்மைதாங்க. விக்ரம் தம்பிகூட தமிழ்ல பேசினப்போ எனக்கு ஆச்சரியமா இருந்தது. அப்போதான் வைஷு, விஷயத்தைச் சொன்னா…” என்று பெண்கள் இருவரும் மென்குரலில் பேச ஆரம்பிக்க, ஆண்கள் மூவரும் பேசிக்கொண்டிருந்தனர்.

வைஷாலி கையிலிருந்த பழச்சாற்றைப் பருகுவதும், வீட்டைக் கண்களால் அளப்பதுமாக இருக்க, “சீமா, வைஷாலியை கூட்டிட்டுப் போய் நம்ம வீடு, தோட்டமெல்லாம் சுத்திக்காட்டும்மா” என்றார் ரவீந்தர்.

“ஜுஸை குடிச்சிட்டு வா வைஷாலி” என்று சீமா அழைத்ததும், அனுமதிக்காகத் தன் அன்னையைப் பார்த்தாள் வைஷாலி.

தேவிகாவும் சம்மதமாக ‘போய்வா’ என்பது போல தலையசைக்க, ஒரே மடக்கில் ஜூஸை காலி செய்தவள், சீமாவுடன் சென்றாள். அனைத்தையும் செந்தளிர் அமைதியாக கவனித்துக் கொண்டிருந்தார்.

“வைஷாலி ரொம்ப நல்லா பழகுவான்னு விக்ரம் சொல்லியிருக்கான். இங்கே என்னடான்னா பேசவேமாட்டேன்றாளே” என்று கேட்டர்

செந்தளிர்.

லொடலொடன்னு அங்கேல்லாம் போய் பேசக்கூடாதுன்னு அதட்டி அழைத்து வந்திருப்பதை எப்படிச் சொல்வார் தேவிகா. சிரித்து மழுப்பியவர், “முதல் முறை இல்லையா கொஞ்சம் பழகினா சரியாகிடுவா” என்று உண்மையைச் சமாளிப்பாகச் சொன்னார்.

சங்கரனுடன் பேசிக்கொண்டிருந்த விக்ரமின் மொபைல் அழைத்தது.

“டேய், என்னை இங்கே விட்டுட்டு அங்கே என்னடா செய்துட்டு இருக்க. அவங்கக்கூட எப்போ வேணாலும் பேசிக்கலாம். ஒழுங்கு மரியாதையா எழுந்து வா…” என்று ரகசியக் குரலில் பேசினாள்.

பேசிக்கொண்டிருந்தவர்களை ஒரு பார்வை பார்த்தவன், “எக்ஸ்கியூஸ் மீ அங்கிள்” என்று அனுமதிக் கேட்டுக்கொண்டு சற்றுத் தள்ளி வந்தவன், “ஹே! நான் எப்படி வரமுடியும்? இதுக்குத் தான் நீ வராதேள உனக்கு ஷாலு வருவது வெறும் இன்ஃபர்மேஷன் தான்னு சொன்னேன். கேட்டியா… குதிச்சிகிட்டு வந்த… இப்போ பாரு என்னாச்சுன்னு. நீ வராமல் இருந்திருந்தா நானே ஷாலுவை அழைச்சிட்டுப் போயிருப்பேன்” என்றான் அப்பாவியாக.

“இதாண்டா வரம் கொடுத்தவன் தலையிலேயே கை வைக்கிறது” என்று பல்லைக் கடித்தவள், “ஒண்ணு மட்டும் மனசுல வச்சிக்க தம்பி! இன்னைக்கு இல்லைனாலும், ஒரு நாளைக்கு இந்த சீமாவோட உதவி உனக்குக் கட்டாயம் தேவைப்படும். என்னைப் பகைச்சிக்காதே சொல்லிட்டேன். சரி, வைஷாலி வர்றா நீ அங்கிருந்து வர்ற வழியப் பாரு போனை வைக்கிறேன்” என்று அவசரமாக போனை அணைத்தாள்.

மீண்டும் தந்தையின் அருகில் வந்தமர்ந்தவனுக்கு என்ன சொல்லிவிட்டு இங்கிருந்து செல்வது என யோசித்துக்கொண்டிருக்க, “விக்ரம்...” என்று அழைத்தபடி வைஷாலியுடன் வீட்டினுள் நுழைந்தாள் சீமா.

“விக்ரம், நீ இவளுக்கு வீட்டைச் சுத்திக் காட்டு... நான் லஞ்ச் தயாராகிடுச்சான்னு பார்த்துட்டு வரேன்” என்றவள் மற்றவர் பேச ஆரம்பிப்பதற்குள் வேகமாக அங்கிருந்து அகன்றாள் சீமா.

“இல்லை பரவாயில்லை” என்று வைஷாலி மறுக்கும் போதே, “அழைச்சிட்டுப் போ விக்ரம்” என்ற ரவீந்தரின் பார்வையில் குறும்புடன் மகனைப் பார்த்தார்.

தந்தையின் பார்வையைக் கவனித்துவிட்டவன் பின்னந்தலையைக் கோதியபடி அவரைப் பார்க்காமல், “வா ஷாலு!” என்றபடி முன்னால் செல்ல, வைஷாலி அவனைப் பின் தொடர்ந்தாள்.

சங்கரன் யோசனையுடன் மனைவியைப் பார்த்தார். அவரோ, ஆனந்தத்துடன் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டவருக்கு, விளக்க முடியா கவலை ஒன்று புதிதாக முளைத்தது.

*** **

மாடியிலிருந்த விசாலமான காரிடாரில் இருவரும் அமைதியாக நடந்து கொண்டிருந்தனர். விக்ரமிற்கு பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் தவிப்புடன் வைஷாலியைப் பார்க்க, அவளும் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர்.

“இந்தப் புடவை உனக்கு ரொம்ப நல்லாயிருக்கு ஷாலு!” என்றான்.

குனிந்து தன்னைப் பார்த்துக்கொண்டவள், “தேங்க்ஸ். அம்மாவோட வற்புறுத்தல்” என்று புன்னகைத்தாள்.

“ஓ!” என்றவனுக்கு ஏனோ பேச வார்த்தைகளே கிடைக்காதது போலத் தவித்தான். ‘வீட்டைச் சுற்றிக் காட்டுகிறேன் பேர்வழி என்று அவளை அழைத்து வந்துவிட்டு, அப்படியே இருந்தால் எப்படி?’ என்று நினைத்தவன், அவளிடம் பேசவேண்டுமே என்பதற்காகவே அங்கே மாட்டியிருந்த ஆளுயர புகைப்படங்களை அவளுக்கு விளக்கிக் கொண்டிருந்தான்.

ஒருகட்டத்தில் அதுவும் முடிந்துவிட, அடுத்து என்ன என்பது போல அவன் முகத்தைப் பார்த்தாள். அய்யோ பாவமாக இருந்த அவளாது முகத்தைப் பார்த்தவனுக்குச் சிரிப்பாக வந்தது.
“ஹே! ஷாலு, ரொம்ப போரடிச்சிட்டேனா… இப்படிக் கண்ணெல்லாம் சொருகிப் பாதித் தூக்கத்தில் எழுப்பி உட்கார வச்சது போல இருக்க” என்று சொல்லிச் சிரிக்க, பாவமாக முகத்தை வைத்துக்கொண்டு அவனைப் பார்த்தாள்.

“டெண்ட்த் ஸ்டாண்டர்ட்ல எங்க ஹிஸ்ட்டரி டீச்சருக்குப் பிறகு இப்படி எனக்குக் கதை சொல்லித் தூக்கம் வர வச்ச புண்ணியம் உங்களைத் தான் சார் சேரும்” என்றாள்.

“வெயிட் வெயிட்… அன்னைக்கு யாரோ என்னை விக்ரம்ன்னு அழகா பேர் சொல்லிக் கூப்பிட்டாங்க… அவங்க யாருன்னு தெரியுமா உனக்கு…?” என்றான்.

“அப்படியா…?” என்று யோசித்தாள்.

“ஹேய்! என்ன உண்மையா தெரியலையா இல்லை வேணும்னே சொல்றியா?” என்று கேட்டான்.

“ஒரு ஃப்ளோவில் வந்திருக்கும் சார். நீங்க என்னைவிட ஏழு வருஷம் பெரியவர்…” என்று கண்களை விரித்தவள், “அது சரி நீங்க ஏன் என்னை ஷாலுன்னு கூப்பிடுறீங்க?” என்றாள்.

‘நீ எனக்கு ஸ்பெஷல்’ என்று வாய் வரை வந்த வார்த்தைகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு, “அதுவும் உன் பெயரொட ஷார்ட் ஃபார்ம் தானே…! அதோடு எல்லோரும் கூப்பிடுவது போலக் கூப்பிட்டால் எப்படி? நான் கூப்பிட தனியா ஒரு பெயர் இருக்கட்டுமே” என்றான்.

“ஓ! நீங்க கூப்பிட தனிப் பெயரா…? அப்போ எல்லோரும் கண்ணை கண்-ன்னும் மூக்கை மூக்கு-ன்னும் தான் சொல்றாங்க. அதை மத்தவங்க மாதிரித் தான் சொல்வீங்களா இல்லை அதுக்கு ஏதாவது ஸ்பெஷல் பெயர் வச்சிருக்கீங்களா?” என்று அப்பாவியாக கேட்க, விக்ரம் புரையேறும் அளவிற்குச் சிரித்தான்.

“என்ன சார் எது சொன்னாலும் சிரிக்கிறீங்க? நியாயமா உங்களுக்குக் கோபம் வரணும்” என்ற போதும் சிரித்தவனைப் பார்த்து அசடு வழிந்தாள்.

அறையைச் சுற்றிப் பார்த்தவள், “சிரிக்காதீங்க விக்ரம்… இத்தனை பெரிய ரூமில் நீங்க சிரிக்கறது எனக்குப் பயமா இருக்கு” என்று சொல்ல, சிரிப்பை அடக்கியவன், “நைஸ்… ஷாலு! இன்னையிலிருந்து

என்னை சார்ன்னு கூப்பிடுவதை விட்டுடு. விக்ரம்னே கூப்பிடு சரியா!" என்றான் எதிர்பார்ப்புடன்.

"ஓகே" என்றவள் அழகாகத் தோள்களைக் குலுக்கி, கண்களைச் சிமிட்டினாள்.

** ***

ஹாலில் பேசிக்கொண்டிருந்தவர்களுக்கு இருவரது சிரிப்புச் சப்தமும் கேட்க, அன்னையர் இருவரும் அர்த்தமாக சிரித்துக்கொள்ள, ஆண்கள் அதைக் கண்டும் காணாமல் இருந்து கொண்டனர்.

"நீங்க பிறந்து வளர்ந்ததே பூனாவா?" தேவிகாவிடம் விசாரித்தார் செந்தளிர்.

"ரெண்டு பேருக்கும் திருநெல்வேலி... எங்க அப்பா சென்னையில் பிசினஸ் செய்துட்டு இருந்தார். இவரும் சென்னையில் தான் வேலை செய்துட்டிருந்தார். கல்யாணத்துக்குப் பிறகு இங்கே வேலைக்காகப் பூனா வந்து இருபத்தி மூணு வருஷம் ஆகிடுச்சி" என்று தங்களைப் பற்றிச் சுருக்கமாகச் சொன்னார் தேவிகா.

"திருநெல்வேலியில் எங்கே...?" செந்தளிரின் குரலில் ஒரு பரவசம்.

"ஆலங்குளம்..."

"அட! எங்கப்பாவும் ஆலங்குளம் தான். அப்பா மிலிட்டரியில் இருந்ததால் நாங்க நார்த்லயே இருந்துட்டோம். ஊருக்குப் போவதும் ஒரு கட்டத்துக்கு மேல நின்னு போச்சு. ஆனால் எங்க

சொந்தமெல்லாம் இன்னும் அங்கே இருக்காங்க” என்றார் செந்தளிர்.

”மிலிட்டரிலேயா…! எங்க அம்மாவோட ஒண்ணுவிட்ட அண்ணன் கூட மிலிட்டரியில் தான் இருந்தாங்க. பேரு கூட ம்ம்…, ஆ! சபாபதி…” என்று நினைவுபடுத்திச் சொன்னார்.

“சபாபதியா…!” செந்தளிரின் முகத்தில் ஆச்சரியம். ரவீந்தர் கூட இவர்களின் பேச்சில் ஆர்வமானார்.

“அப்போ நீ ரத்னாவதி அத்தையோட பொண்ணு தேவியா…!”

“ஆமாம்…” என்றபடி கணவரின் முகத்தைப் பார்த்த தேவிகாவிற்கும் விஷயம் புரிந்துவிட, குதூகலமாகிவிட்டார்.

“ஹய்யோ! கடைசியில் நாம சொந்தக்காரங்க ஆகிட்டோமா!” என்று உற்காகமாக பேசினார் தேவிகா.

“பார்த்தியா தேவி… சின்ன வயசுல பார்த்தது. இத்தனை வருஷம் பக்கத்திலேயே இருந்தும் தெரியாமலேயே இருந்திருக்கு” பிரிந்த உறவை அறிந்துகொண்டதில் செந்தளிருக்கு சந்தோஷமாகிவிட்டது.

“எங்க அத்தை அவங்க பசங்களைப் பத்தியெல்லாம் சொல்லிட்டு இருப்பேன் இல்ல… இப்போ பாருங்க எப்படியெப்படியோ போய் விட்ட குறை தொட்ட குறையா வந்து சேர்ந்தாச்சு” என்றவருக்கு,

“ஆமாம் அண்ணி கடைசியில் நம்ம பிள்ளைங்க மூலமா நாம ஒண்ணு சேர்ந்திருக்கோம்” என்று ஆமோதித்து, தங்களது உறவை மேலும் நெருக்கமாக பிணைத்துக் கொண்டார் தேவிகா.

அத்தியாயம் - 19

“தேவி! ஸ்ட்ராங்கா ஒரு கா∴பி கொண்டுவாம்மா” என்றபடி டையை தளர்த்திவிட்டுக்கொண்டே சோ∴பாவில் சாய்ந்து அமர்ந்து, சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டார் சங்கரன்.

“என்னப்பா, அம்மா ஊருக்குப் போயிருக்காங்களே மறந்துட்டீங்களா?” என்று கேட்டுக்கொண்டே தலைவலி மாத்திரையையும், தைலத்தையும் எடுத்துக் கொண்டு வந்தாள் வைஷாலி.

“பழக்கதோஷம்டா...” என்ற தந்தையைப் புன்னகையுடன் பார்த்தவள், மாத்திரையைப் பிரித்துக்கொடுத்தவள், தைலத்தைத் தேய்த்துவிட்டு வலிக்கு இதமாகத் தலையைப் பிடித்துவிட்டாள்.

அன்னை, தந்தை இருவருக்குள்ளும் எத்தனை மனக்கசப்பு வந்தாலுமே அந்தக் கோபம் அவர்களுக்கிடையில் சிறிது நேரத்திற்கு மட்டுமே நிலைக்கும். அடுத்த நிமிடமே ‘தேவி’ என்று சங்கரன் குரல் கொடுத்தால், “வந்துட்டேங்க” என்று தேவிகா ஓடுவதும்; “என்னங்க” என்று அழைத்தால், “சொல்லும்மா” என்று தந்தை ஓடுவதையும் பார்த்து வளர்ந்தவளுக்கு, தானும் தன் கணவனிடம் இப்படி அன்னியோன்யமாக கடைசி வரை இருக்கவேண்டும் என்று நினைத்துக் கொள்வாள்.

“ரொம்ப டயர்டா தெரியறீங்களேப்பா! ஏதாவது பிரச்சனையா...?” என்று பரிவுடன் விசாரித்தாள்.

“லேபர்ஸ் மீட்டிங்டா... பிரச்சனை மேல் பிரச்சனை. நாம கொஞ்சம் முகம் கொடுத்துப் பேசினால் நம்மைக் கீழே தள்ளி மேலே ஏறி

நிற்பாங்க போல… நாம அவங்களுக்குச் செய்யும் நல்லதை புரிஞ்சிக்க புத்தியும் இல்லை, எடுத்துச் சொன்னா கேட்டுக்க நிதானமும் இல்லை” என்று சலித்துக்கொண்டார்.

“விடுங்கப்பா… கொட்டுறது தேளோட குணம்… அதுக்காக வருத்தப்பட்டு ஆகப்போறது எதுவும் இல்லைப்பா… ஒண்ணு, அது கொட்ட வருதுன்னு தெரிஞ்சா அதோட பாதையிலிருந்து விலகிப் போறதும், இல்லைனா கொடுக்கைத் தூக்க முடியாமல் அடிச்சிப் போடுவதும் நம்ம கையில் தான் இருக்கு… இதுக்கெல்லாம் கவலைப்பட்டு நீங்க உடம்பைப் கெடுத்துக்காதீங்க. நல்லதைச் சொல்லி கேட்கலைனா, எக்கேடோ கெட்டு ஒழின்னு விட்டுட்டு நம்ம வழியில் போவோம்ப்பா… ரெண்டு நிமிஷம் ஸ்ட்ராங்கா கா∴பியோடு வரேன்” என்று சொல்லிவிட்டுச் செல்லும் மகளையே பார்த்தார்.

தான் அவளிடம் சில விஷயங்களைப் பேசித் தெளிவுபடுத்த வேண்டும் என்று நினைத்திருக்க, இங்கே விஷயம் தலைகீழாக இருப்பது போலத் தோன்றியது. இருதினங்களுக்கு முன்பு மனைவியுடன் ஏற்பட்ட வாக்குவாதம் நினைவிற்கு வந்தது.

“நான் இன்னைக்கு அண்ணியைப் போய் பார்த்துட்டு வரேன். வரச்சொல்லி போன் பண்ணாங்க. நீங்க என்னை அவங்க வீட்டில் டிராப் பண்ணிட்டு, நீங்க ஆ∴பிஸ் போய்ச் சேர்ந்ததும் காரை எனக்கு அனுப்பிடுங்க. வைஷூவும் வரலைன்னு சொல்லிட்டா. தனியாதான் போறேன்… திரும்பி வரும்போது ஆட்டோவில் வந்திடுவேன். இருந்தாலும் காரில் போய் வந்தால் நமக்குத் தானே மரியாதை. நம்ம பிரஸ்டீஜை யாருக்காகவும் விட்டுக்கொடுக்க முடியாதில்ல” கழுத்திலிருந்த அட்டிகையைச் சரி செய்தபடி சொல்லிக்கொண்டிருக்க, சங்கரன் அமைதியாக மனைவியைப் பார்த்தார்.

“வைஷூ ஏன் வரலையாம்?” என்று முகம் இறுக கேட்டார்.

“ரெண்டு நாளைக்கு முன்னால தானே போனோம்… நீங்க வேணா போயிட்டு வாங்கன்னு சொல்லிட்டா, அவளுக்கு விக்ரம் இருந்தா பொழுது போகும்… அவன்தான் இல்லையே” என்று சிரித்த மனைவியைப் பார்த்து எரிச்சலாக வந்தது சங்கரனுக்கு.

“சின்னப் பொண்ணு அவளுக்குத் தெரியற விஷயம்கூட உனக்குப் புரியமாட்டேன்னுது” என்று சிடுசிடுத்தார் சங்கரன்.

திரும்பிக் கணவரைப் பார்த்த தேவிகாவின் முகத்தில் கோபம் தெரிந்தது. “என்ன புரியலை எனக்கு?” என்று வேகமாக கேட்டார்.

“ம், அவங்க நமக்கு உறவுன்னு தெரிஞ்ச இந்தப் பதினைந்து நாள்ள, நாம மூணு பேரும் சேர்ந்து அவங்க வீட்டுக்குப் போய் வந்ததைத் தவிர்த்து இது நாலாவது முறையா அங்கே போற… இதெல்லாம் நல்லாவா இருக்கு” என்றார்.

‘தானும் பதிலுக்குப் பதில் பேசினால் ஒன்றுக்கும் உதவாது’ என்று நன்றாக புரிந்து வைத்திருந்த தேவிகா தனது நெஞ்சக் குமுறலை உள்ளுக்குள்ளேயே மறைத்துக் கொண்டு, கணவரைப் பார்த்துப் புன்னகைத்தார்.

“தூரத்து சொந்தமுன்னு தானே யோசிக்கிறீங்க… அதைப் பத்தி நீங்க சங்கடப்படவே வேணாம். அண்ணன், அண்ணி ரெண்டு பேருமே நம்மை நெருங்கிய சொந்தமாக்கிக்கணும்னு தான் விரும்பறாங்க…” என்று நிறுத்தியவர், கணவரை ஆழ்ந்து பார்த்தார்.

“நம்ம வைஷூவை அவங்க வீட்டு மருமகளாக்கிக்க விரும்பறாங்க…” என்றதும் சங்கரன் இதை எதிர்பார்த்தேன் என்பது போன்ற பார்வையை மனைவி மீது வீச, “விக்ரமுக்கும் அந்த நோக்கம் இருக்கும் போல…” என்றதும், சங்கரன் ஓய்ந்து போனவராக அமைதியாக அங்கிருந்த சோஃபாவில் அமர்ந்தார்.

“நம்ம பொண்ணுக்குக் கிடைக்கப் போற வசதியான, ஆடம்பரமான வாழ்க்கை. அதனால் நமக்குக் கிடைக்கப் போற கௌரவம்… நினைச்சிப் பாருங்க…” என்று கண்கள் மின்ன, ஆவலுடன் கணவரின் முகத்தைப் பார்த்தார்.

“ஒரு அம்மாவா உன்னுடைய ஆசை நியாயமானதுதான். ஆனால், வைஷூக்கு இதில் சம்மதமான்னு கேட்டியா? உன்னோட ஆசைக்காக நம்ம பொண்ணை பகடைக் காயா ஆக்கிடாதே…” என்றார்.

அவரது அருகில் வந்த தேவிகா, “இங்கே பாருங்க, என் பொண்ணு அதி புத்திசாலி இல்லைனாலும் முட்டாள் இல்லை….” என்ற மனைவியை என்ன சொல்வதென தெரியாமல் பார்த்தார்.

‘தேவிகாவிடம் இந்த விஷயத்தைப் பேசிப் பேசிப் பெரிதாக்குவதை விட, சம்மந்தப்பட்ட வைஷாலியின் மனத்தில் என்ன இருக்கிறது என்று நேரடியாக பேசித் தெரிந்து கொள்வது தான் நல்லது’ என்று நினைத்தவர் மீண்டும் அதைப் பற்றி தேவிகாவிடம் விவாதிக்கவில்லை.

“அப்பா!” என்று தோளை உலுக்கி மகள் அழைத்த சப்தம் கேட்டு, பழைய நினைவுகளைக் கலைந்து கண்களைத் திறந்தார் சங்கரன்.

“காஃபியைக் குடிச்சிட்டு கொஞ்ச நேரம் தூங்கி எழுந்திரிங்கப்பா…” என்றாள்.

“ம்… சரிடா” என்றவர் காஃபி கப்பை வைத்துவிட்டு தனது அறைக்குச் சென்றார்.

கப்பைக் கழுவித் துடைத்து அதனிடத்தில் வைத்தாள். தான் வீட்டிற்கு வந்து கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆகிவிட்டது. அப்போதெல்லாம் இல்லாத மாற்றத்தைக் கடந்த பதினைந்து நாட்களாக அவரிடம் உணர்ந்தாள்.

‘இயல்புக்கு மாறாக ஏதோ யோசனையிலேயே இருந்தது போலத் தெரிந்ததை அவரிடம் முதலிலேயே கேட்டிருக்கலாமோ! கம்பெனியில் ஏதேனும் பிரச்சனையாக இருக்குமோ!’ என்று நினைத்தவளுக்கு மனம் எதிலும் ஒன்றவில்லை.

தந்தையின் அறைக் கதவை மெல்லத் திறந்து எட்டிப் பார்த்தாள்.

“வைஷும்மா!” என்று அழைத்தார் சங்கரன்.

”சொல்லுங்கப்பா… ஏதாவது வேணுமா” என்று அவசரமாக அறைக்குள் நுழைந்தாள்.

சிரித்தவர், “ஒண்ணுமில்லைடா… இன்னைக்கு மணிகண்டன் அங்கிள் போன் செய்திருந்தான். நம்ம ஜோதியோட பிரச்சனை எல்லாம் சரியாகிடுச்சி… வளைகாப்பு வச்சிருக்காங்களாம்” என்று விஷயத்தைச் சொன்னார்.

என்னவோ ஏதோவென்று பதறி ஓடிவந்தவள் தந்தை சொன்ன விஷயத்தைக் கேட்டதும் சந்தோஷத்துடன், “அப்படியாப்பா… இப்போவே நான் ஜோதிட்ட பேசறேன்ப்பா” என்றவள் தன் அறைக்கு ஓடினாள்.

**   ***

“வைஷூ! ஆயுசு நூறுப்பா உனக்கு…” உற்சாகப் பந்தாய் துள்ளியது ஜோதியின் குரல்.

‘இத்தனை சந்தோஷத்தோட இவ குரலைக் கேட்டு எத்தனை நாளாச்சு’ என்று மனநிறைவுடன் புன்னகைத்துக்கொண்டாள் வைஷாலி.

“நீ என்னை நினைவு வச்சிருக்கேன்னு நம்பிட்டேன்…” என்று போலியான கோபத்தை குரலில் வரவழைத்துக் கொண்டு சொன்னாள்.

“ம்ம்” என்று புன்னகைத்த ஜோதி, “எப்படியிருக்க வைஷூ!” என்றாள்.

“நல்லாயிருக்கேன். சரியான கள்ளிடீ நீ. உன் வீட்டுக்காரரோட ராசியாகி, வளைகாப்புக்கு தேதி குறிச்சது வரைக்கும் விஷயம் வந்திருக்கு… ஒரு வார்த்தை கூட சொல்லாம அமுக்குணியா இருந்திருக்க… அங்கிள் போன் செய்து சொல்லலைனா எங்களுக்கு விஷயமே தெரிஞ்சிருக்காது” என்று நீண்ட மூச்சொன்றை வெளியேற்றினாள் வைஷாலி.

“கோச்சிக்காதே வைஷூ! நான்தான் சஸ்பென்சா வச்சி சொல்லலாமுன்னு இருந்தேன்… ப்ளீஸ்டா” என்று கெஞ்சுதலாக பேசினாள்.

“என்னடி இதுக்கெல்லாம் கெஞ்சிட்டு இருக்க. நான் சும்மா விளையாட்டுக்குப் பேசினேன். ரொம்ப சந்தோஷமா இருக்கு ஜோ. உன் பக்கத்திலிருந்து உனோட சந்தோஷத்தை நேரில் பார்க்கமுடியலையேன்னு சின்ன வருத்தம் தான்” என்றாள் நெகிழ்ச்சியுடன்.

வைஷாலி பேசிக்கொண்டிருக்கும் போதே, “ஜோ! நான் கொஞ்சம் வெளியே போய் வரேன்…” என்ற ராகவனின் குரல் பின்னால் கேட்டது.

“என்னடி, சிடுமூஞ்சி சாமியார் வீட்டில் தான் இருக்காரா?” என்று சிரித்தாள் வைஷாலி.

“ஹே! யாரைப் பார்த்து சிடுமூஞ்சின்னு சொல்ற” என்று குரலை உயர்த்தினாள் ஜோதி.

“அடேங்கப்பா! சப்போர்ட் ஓவராதான் இருக்கு…” என்று சிரித்தவள், சிறிது நேரம் பேசிவிட்டுச் சந்தோஷத்துடன் போனை வைத்தாள்.

** **

“வைஷும்மா… அப்பா கிளம்பறேண்டா… பத்திரமா இரு. வீட்டைத் திறந்து வைக்காதே… அம்மாவை அழைச்சிட்டு ஈவ்னிங் வந்திடுவேன் பத்திரம்…” என்று மகளுக்குச் சொல்லிவிட்டு, மனைவி சென்றிருக்கும் உறவினர் வீட்டுத் திருமணத்தில் கலந்து கொள்ள கிளம்பினார் சங்கரன்.

தந்தையை வழியனுப்பி வைத்தவள், மீண்டும் படுக்கையில் வீழ்ந்தாள்.

உறக்கம்தான் வரவில்லை. அவளது அனுமதியில்லாமல் கண்ணுக்குள்ளேயே நின்று சிரிப்பவனைத் தவிர்க்க வழி தெரியாமல் திண்டாடினாள் வைஷாலி.

தென்றலாக அவனது நினைவுகள் உள்ளத்தில் சாமரம் வீச, மனம் இன்று அவனை அளவுக்கதிகமாக எதிர்பார்த்தது.

“சொல்லத்தான் நினைக்கிறேன், சொல்லாமல் தவிக்கிறேன், காதல் சுகமானது…”
இதழ்கள் மெல்ல முணுமுணுத்தது. காதலின் தாக்கம் விழிகளில் நீராய் பெருகி, கன்னத்தில் வழிந்தது.

இத்தனை நாளாய் இல்லாத ஏக்கம் இன்று ஏன் வந்ததென புரியாமல் கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்தாள்.

காலை உணவைக் கூட மறந்துவிட்டுப் படுத்திருந்தவள் மணியைப் பார்த்தாள். பத்தாகியிருந்தது. இத்தனை நேரம் தன்னை மறந்திருந்தவள் வேகமாகக் கட்டிலிலிருந்து இறங்கினாள். குளித்துமுடித்து புதுமலராக கீழே இறங்கி வந்தாள்.

ப்ரெட் பாக்கெட்டைப் பிரித்து டோஸ்டரில் வாட்டி எடுத்து, வெண்ணை தடவிச் சாப்பிட்டாள். ருத்ரா வந்ததும் அவளுடன் சேர்ந்து வீட்டைத் துடைத்து, மதியச் சமையல் செய்து இருவரும் சேர்ந்து சாப்பிட்டனர். அவளுக்குச் சிறிது நேரம் கணக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தாள்.

மூன்று மணி வாக்கில் ருத்ரா கிளம்பிவிட, வைஷாலிக்கு லேசாகக் கண்களை உறக்கம் தழுவ, ஹால் சோஃபாவிலேயே படுத்துவிட்டாள். இரவு சரிய்யாக உறக்கம் இல்லாததால் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தவள்

அழைப்புமணி ஓசை கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள்.

‘இந்த நேரத்தில் யாராக இருக்கும்?’ யோசனை ஓடிச் சென்று முகத்தை அலம்பி, துடைத்துக்கொண்டே சென்று கதவைத் திறந்தாள்.

அப்படியே திகைத்துப் போனவள், இமைக்க மறந்து அசையாமல் நின்றாள். அவளது புலன்கள் தங்களது செயலை மறந்துவிட்டதைப் போல என்ன செய்வதென தெரியாமல் நின்றாள்.

“ஹலோ!” என்று கிண்டலாகத் தன்னைப் பார்த்துச் சிரித்தபடி நின்றிருந்தவனைக் கண்டு சுயநினைவிற்கு வந்தவள், கதவை மூட முற்பட, அவளை முந்திக்கொண்டு கதவை மூடும் முன்பாக தள்ளிக் கொண்டு வீட்டினுள் நுழைந்தான்.

அவன் தள்ளியதில் இரண்டடி பின்னால் தள்ளப்பட்டுச் சுவரில் முட்டி நின்றவள், அவனைச் சுட்டெரிப்பதைப் போலப் பார்த்தாள்.

அவளது பார்வையைக் கண்டவன், கிண்டலாகச் சிரித்தபடி அவளை நோக்கி முன்னேறினான்.

“கிட்ட வராதே… அங்கேயே நில்லு… கத்தி ஊரைக் கூட்டிடுவேன்” என்றவளின் குரல் ஞங்ணநமன போட்டது.

“அப்படியா, செய் . இதுக்கெல்லாம் நான் பயப்படமாட்டேன். எத்தனை நாள் எனக்கு ஆட்டம் காட்டின! இன்னைக்கு வசமா மாட்டியிருக்க. வீட்ல யாரும் இல்லைன்னு தெரிஞ்சி தான் வந்திருக்கேன். எல்லாம் அமைந்து வந்திருக்கு அத்தனைச் சுலபமா விட்டுடுவேனா!” என்று அவளது கரத்தை எட்டிப் பிடிக்க முயன்றான்.

அவனது கரங்களில் சிக்காமல் நழுவி ஓடியவள், சோஃபா மீதிருந்த குஷனைத் தூக்கி அவன் மீது எரிந்தாள்.

இலாவகமாக அதிலிருந்து தப்பி அவன், அவளது கரத்தைப் பற்றிச் சுண்டியிழுக்க, தனது நெஞ்சில் விழுந்தவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

“ஹே! விடுடா என்னை… ஃப்ராடு… சீட்டர்…” என்று அவளது வார்த்தைகள் சூடேற, அவனது அணைப்பு மேலும் இறுகியது.

“ஹய்யோ! என் டிரெஸ்செல்லாம் கசங்குதுடா… இடியட் ராகவ்…” என்று சிணுங்கியவள், தன்னிடமிருந்து அவனை பலம் கொண்ட மட்டும் விலக்க முயல, இருவரும் தடுமாறி அங்கிருந்த திவானில் விழுந்தனர்.

அவளைப் பார்த்து உல்லாசமாகச் சிரித்தவனை சரமாரியாகத் தாக்கினாள். அவளது கரங்களைப் பற்றியவன், “ஐ லவ் யூ கண்ணம்மா!” என்றான் காதலுடன்.

இரண்டு ஆண்டுகளாக அடக்கி வைத்திருந்த காதல், கரைபுரண்டு பேரலையாக உருமாற, அவனது கழுத்தை இறுக கட்டிக்கொண்டவளுக்குக் கண்ணீர் கரையுடைத்தது.

அத்தியாயம் - 20

“வைஷூ! அழாதே…” என்று ஆறுதலாக அவளது தோளைத் தட்டிக் கொடுத்தவனின் கரத்தை, பட்டென்று தட்டிவிட்டாள்.

சில வினாடிகள் கைகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுதவள், நிமிர்ந்து ராகவனை பார்த்தாள். கால் மேல் கால் போட்டுக்கொண்டு அமைதியாக அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தவனைக் கண்டு ஆத்திரத்தில் பல்லைக் கடித்தாள். பக்கத்திலிருந்த திண்டைத் தூக்கி அவன் மீது வீசினாள்.

“ஏய்! எதுக்கு அடிக்கற...?” என்று முறைத்தான்.

“என்னடா, இங்க ஒருத்தி அழுதிட்டு இருக்காளே அவளைச் சமாதானப் படுத்துவோம்னு இல்லாமல், என்னவோ சர்க்கஸ் பார்க்கறா மாதிரி வேடிக்கை பார்த்துட்டு உட்கார்ந்திருந்தா அடிக்காமல் என்ன செய்வாங்க...?” என்று கத்தினாள்.

“இதென்ன வம்பா இருக்கே... சமாதானம் செய்தா தள்ளிவிடுற... எப்படியும் அழுகையை நிறுத்தித்தானே ஆகணும்னு பேசாமல் இருந்துட்டேன்” என்றான் சாதாரணமாக.

“அதுக்காக அப்படியே விட்டுடுவியா...? இவ்வளவு தான் உன் ரெண்டு வருஷத்து லவ்வா...” என்றாள் கோபத்துடன்.

“அதுசரி, அதுக்காக உனக்குக் கூஜாவா தூக்க முடியும்...” என்றான் கிண்டலாக.

“கூஜாவெல்லாம் தூக்க வேணாம். நல்லதா ஒரு கா்ஃபி போட்டுக் கொடுத்தால் போதும்” என்று குறும்பாகச் சிரித்தாள்.

அவளது சிரிப்பிற்கு அர்த்தம் புரிந்தவனாக, “ஆமாமாம் அழுதழுது டயர்டாகிட்ட கா்ஃபி குடிச்சிட்டு தெம்பா பேசு” என்றவன் எழுந்து

சமையலறைக்குச் சென்றான்.

அடுத்த சில நிமிடங்களில் இருவருக்குமாக கமகமவென்று மணக்கும் கா..பியுடன் வந்தான்.

“தேங்க்ஸ்…” என்று புன்னகையுடன் வாங்கிக் கொண்டாள்.

“ஊரிலிருந்து வந்து, உனக்கும் சேர்த்து நான் கா..பி போட்டுக் கொடுக்கறேன். இப்போதாவது என் அக்கறையை புரிஞ்சிகிட்டா சரி…” என்று பெருமூச்சு விட்டபடி சோ..பாவில் அமர்ந்தான்.

“எங்களுக்கும் தெரியும்… அக்கறை இருப்பதால் தான், அன்னைக்கு ஹாஸ்பிட்டல்ல ராத்திரியெல்லாம் என் கையைப் பிடிச்சிகிட்டு அய்யோ பாவமா ஒருத்தர் உட்கார்ந்திருந்தாரு…” என்று சொல்லிவிட்டு ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தாள்.

வியப்புடன் அவளைப் பார்த்தவன், “ஹே! இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்…?” என்று அவளருகில் நெருங்கி அமர்ந்தான்.

ஆசையுடன் அவனது தோளில் சாய்ந்து கொண்டவள், “எல்லாம் தெரியும்… அன்னைக்கு நீங்க வரும் கொஞ்ச நேரம் முன்னாலேயே எனக்கு லேசா மயக்கம் தெளிஞ்சிடுச்சி. ஆனால், கண்ணைத் திறக்க முடியலை. நீங்க என்னிடம் நடந்ததையெல்லாம் சொல்லிக் கையைப் பிடிச்சிகிட்டு கண் கலங்கியதெல்லாம் கனவு போல தெரிஞ்சது. காலையில் நான் விழிச்சி எழுந்தப்போ கட்டில் மேல தலைசாய்த்து படுத்திருந்த உங்களைப் பார்த்ததும் எல்லாம் கனவில்லை நிஜம்னு புரிஞ்சது” என்றாள்.

அவளது முகவாயைப் பற்றி உயர்த்தினான். இருவரின் பார்வைச் சங்கமத்தில் சொல்லப்படாத எத்தனையோ செய்திகள் இருவருக்கும் இருந்தன. அவளது செய்கையில் வருந்தி வரவழைத்த போலித்தனத்தை, புன்னகைக்க துடித்த அவளது இதழ்கள் காட்டிக்கொடுத்தன. இத்தனை நாட்களாகத் தனக்காக காத்திருந்தவளின் ஆதங்கம் அவனுக்கும் புரிந்தது.

அந்த நொடி அவள் மீதான காதல் பொங்கி வழிய, கனிவும், தாபமும் பொங்க அவளைப் பார்த்தான். அவனது பார்வையால், அவளது உள்ளமெங்கும் பட்டாம்பூச்சி சிறகடிக்க, கன்னங்கள் சூடானது. மெல்ல அவனிடமிருந்து விலக முயன்றவளின் தோளை வளைத்து, தன்னருகில் இழுத்துக்கொண்டான்.

அவளது விழிகளைத் தனது பார்வையால் ஊடுருவினான். ஆசையும், தாபமும் இருவரிடமும் நிறைந்திருந்த போதும்; தனிமையும், நெருக்கமும் அவர்களுக்கு ஒருவித அச்சத்தையும் கொடுத்தது.

‘தன் மீதிருக்கும் நம்பிக்கையில் யாரும் இல்லாத போதும் அவரது மகளைப் பார்க்க அனுமதித்த தனது வருங்கால மாமனாரின் நம்பிக்கையை பொய்யாக்க அவன் விரும்பவில்லை.’

மெல்ல அவளை விடுவித்தவன், எழுந்து சற்றுத் தள்ளிச் சென்று தலையைக் கோதியபடி நின்றான். வைஷாலி அமைதியாக கைவளையல்களை ஆராய்ந்தபடி அமர்ந்திருந்தாள்.

திடீரென, “வைஷூ! அத்தையும், மாமாவும் வர நேரமிருக்கு… நாம் ரெண்டு பேரும் கிளம்பி வெளியே போயிட்டு அப்படியே டின்னர் முடிச்சிட்டு வந்திடலாமா?” என்று கேட்டான்.

“அப்பா, அம்மாவுக்கு தெரியாமலா…? நான் மாட்டேன்” என்றாள் வேகமாக.

“நான் ஏற்கெனவே மாமாவிடம் பேசிட்டேன்” என்றவனை, அவள் நம்பாமல் பார்ப்பது புரிய, “நம்பலையா… அப்போ நீயே போன் செய்து மாமாகிட்ட கேளு…” என்றான் சாதாரணமாக.

அவள் கிண்டலாக சிரித்தபடி நிற்க, “அப்போ நானே போன் செய்றேன்..” என்று தனது மொபைலை எடுத்தான்.

அவனது மொபைலை வேகமாக பிடுங்கியவள், “சாருக்கு ரொம்ப தைரியம் தான்…” என்று சிரித்தாள்.

“எனக்கென்ன பயம்?” என்று அவளது மூக்கைப் பிடித்து இழுத்தான்.

“ஸ்… ஆ!” என்றபடி அவனது கரத்தை தட்டிவிட்டவள், “எங்க அம்மாவை பார்த்து பம்மின ஆளை நாங்களும் பார்த்திருக்கோமாக்கும்…” என்று சொல்லிவிட்டு நாக்கைத் துருத்திக் காட்டிச் சிரித்தாள்.

எதுவும் பேசாமல் அழுத்தமாக அவளைப் பார்த்தான். அதிலிருந்தே அவனை சீண்டிவிட்டோம் என்று புரிய, “சாரி ராகவ்…” என்றாள்.

ஆனாலும் அவனது முகம் சற்று இறுக்கமாகவே இருக்க, வைஷாலிக்கு தர்மசங்கடமாக ஆகிவிட்டது. ‘ஆரம்பத்திலிருந்தே அனைத்தும் அறிந்த தானே இப்படி பேசியிருக்கக் கூடாது’ என்று தன்னையே நொந்துகொண்டாள்.

“ராகவ்...” என்று அவனது கரத்தைப் பற்றினாள். அவளது முகத்திலிருந்த வருத்தத்தைக் கண்ட ராகவன், “இட்ஸ் ஓகேமா” என்று முறுவலித்தான்.

அவனது முகத்தில் தெரிந்த முறுவலிப்பின் பிரதிபிம்பமாக, அவளது முகமும் மலர்ந்தது.

“வைஷு! அன்னைக்கு நான் இருந்த நிலை வேற... இன்னைக்கு என்னோட நிலை வேற. நான் முடிக்க வேண்டிய சில கடமைகள் இருந்தது. உங்க அம்மா கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியாத நிலையில் இருந்தேன். ஆனால், இன்னைக்கு எனக்கு வரப்போகும் மனைவியை சந்தோஷமா ஒரு குறையும் இல்லாமல் சந்தோஷமாக வச்சிக்க தேவையான அத்தனை தகுதியும், திறமையும் அதிகமாகவே இருக்கு. அவங்க கேட்கும் அத்தனை கேள்விகளுக்கும் தேவையான பதிலை நிமிர்ந்து நின்னு சொல்லும் தைரியம் இருக்கு” என்றவனின் குரலில் தன்னம்பிக்கையும், தைரியமும் நிரம்பியிருந்தது.

வைஷாலியின் முகம் பெருமிதத்தில் மிளிர்ந்தது. அனைத்துமே அவள் அறிந்த விஷயங்கள் தானே. ஆங்காங்கே படித்து முடித்து பெற்றோரின் கஷ்டநஷ்டம் புரியாமல் ஊதாரித்தனமாக சுற்றிக்கொண்டிருக்கும் இளைய தலைமுறையினருக்கு மத்தியில், ராகவன் வித்தியாசமாக இருந்தான்.

சிறுவயதிலேயே தாயை இழந்து, தந்தையின் வளர்ப்பில் வளர்ந்தவன். தந்தையின் கஷ்டம் புரிந்து கல்லூரி கடைசி வருடம் முடித்த கையோடு ரவீந்தர் குமார் சௌத்ரியிடம் சாதாரண கிளர்க்காக வேலைக்குச் சேர்ந்தான். வேலை செய்து கொண்டே அதில் வந்த

பணத்தில் எம்.பி.ஏ முடித்தான். அவனது சுறுசுறுப்பையும், உழைப்பையும் கண்ட ரவீந்தர் புதிதாக பொறுப்பெடுத்துக் கொண்ட தன் மகன் விக்ரமிடம் நேரடி செயலாளராக சேர்த்துவிட்டார். இன்று விக்ரமே அவனை தனது புதிய கம்பெனிக்கு அவனை பங்குதாரனாக்க இருப்பது வரை அவள் அறிந்திருந்தது தான்.

“ஹலோ மேடம்! லைன்ல மாமா இருக்காங்க பேசுங்க...” என்று மொபைலை அவளிடம் கொடுத்தான்.

புன்கையுடன் மொபைலை வாங்கியவள், “ஹலோ அப்பா!” என்றாள்.

“என்னம்மா மாப்பிள்ளை வந்தாச்சா... சந்தோஷமா...” என்ற தந்தையின் குரலில் கேலி தெரிந்தது.

“ம்ம், ஆனால் நீங்க என்னிடம் சொல்லவேயில்லை...” என்றாள்.

சிரித்தவர், “கா.ஃபி நல்லா இருந்ததா...?” என்று கேட்டதும், திரும்பி ராகவனைப் பார்த்து முறைத்தாள்.

“அதுப்பா...” என்று இழுக்க, “சரிம்மா இது இருக்கட்டும் விடு. மாப்பிள்ளை கூட வெளியே போயிட்டு அப்படியே டின்னரை முடிச்சிட்டு வந்திடுங்க. நானும் அம்மாவும் வர எப்படியும் ஒன்பது மணியாகிடும்...” என்றார்.

தயக்கத்துடன், “ஆனா அம்மா...” என்று இழுத்தாள்.

“இன்னைக்கு உனக்கு ஒரு சர்ப்ரைஸ் மாதிரி உங்க அம்மாவுக்கு ஒரு வெடிகுண்டு...” என்றார்.

‘தந்தை சிரித்தபடி சொன்னாலும் அவருக்கும் உள்ளுக்குள் என்ன நடக்குமோ என்ற பயம் இருக்கத்தான் செய்கிறது’ என்று அவளுக்கும் விளங்கியது.

மகளின் மௌனத்தைக் கண்ட சங்கரன், “அம்மாடி விஷயம் எப்படியும் வெளியே வந்து தான் ஆகணும். அது இன்னைக்கே வரட்டுமே...” என்று மகளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு போனை வைத்தார்.

ராகவனிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டு தயாராகி வருவதாக சொல்லிவிட்டு தன் அறைக்குச் சென்றாள்.

சில நிமிடங்கள் கழித்து, வைஷாலி மாடிப்படியில் இறங்கிவரும் ஓசை கேட்டு கையிலிருந்த புத்தகத்திலிருந்து பார்வையை அகற்றி அவளைப் பார்த்தவன் தன்னையுமறியாமல் எழுந்து நின்றான்.

மஞ்சள் நிறத்தில் பச்சையும், சிகப்புமாக பூக்களை அள்ளி தெளித்தது போன்ற சுடிதாரில் அணிந்து கொண்டு இறங்கி வந்தவளை இமைக்காமல் பார்த்தான்.

பாடல் ஒன்றை முணுமுணுத்தபடி டைனிங் டேபிள் மீதிருந்த தண்ணீர் பாட்டிலை பிளாஸ்டிக் கவரில் போட்டு தனது கைப் பையில் வைத்துக்கொண்டு திரும்பியனாள்.

தன் பின்னால் நின்றிருந்தவனை சற்றும் எதிர்பாராததில் திகைத்து தடுமாறியவள் டேபிளை பிடித்துக் கொண்டு சமாளித்து நின்றாள். வேகமாக துடித்த இதயத்தைக் கட்டுப்படுத்த பெருமூச்சு விட்டு ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

“ஒரு நிமிஷம் பயந்தே போயிட்டேன்” என்று புன்னகைத்தவளை அவனது விழிகள் ரசனையுடன் உள்வாங்கியது.

அவனது பார்வையின் வீச்சில் அவளது கன்னக் கதுப்புக்கள் வெட்கத்தில் சிவக்க, விழிகள் அவன் முகம் பார்க்கும் துணிவில்லாமல் நிலம் நோக்கியது. அவள் மீது கரைபுரண்ட காதலில், அவனது மனக்கட்டுப்பாடு ஆட்டம் கண்டது.

அவனது அருகாமை அவளுக்குள் தகிப்பை ஏற்படுத்தியது. அங்கிருந்து நகர முயன்றவளது இரு கைகளையும் பிடித்து தன்னருகில் இழுத்தான். அவனது மூச்சுக் காற்றின் வெப்பம் அவளது மேனியைத் தாக்க, அதைத் தாளாத அவளது பூ உடல் மெல்ல நடுங்கியது.

இருவரிடையிலும் ஒரு எதிர்பார்ப்பும், ஏக்கமும் எழுந்தது. அவனது செயல் அவளுக்கு பயத்தைக் கொடுத்தாலும் அதை மறுக்கும் எண்ணமும் இல்லை. இமைகள் தானாக மூடிக்கொள்ள, தனது உதடுகளை பற்களால் அழுந்த கடித்தாள்.
முகத்தை இருகைகளாலும் ஏந்தியவன், “வைஷூ! வித் யுவர் பர்மிஷன்…” என்று குழைந்த குரலில் இறைஞ்சினான்.

மூடிய விழிகளுக்குள் அலைபாய்ந்த கருவிழிகளை, இமைகளை மேலும் இறுக்கிக் கொள்ள, அதுவே அவனுக்கு தேவையான சம்மதத்தைக் கொடுத்துவிட, ஒற்றை விரலால் அவளது உதடுகளை தடவி விடுவித்தவன், சற்றும் தாமதியாமல் தன் உதடுகளுக்கு இலக்காக்கிக் கொண்டான்.

மனத்திற்குப் பிடித்தவனின் முதல் இதழ் ஸ்பரிசம் அவளது உயிரின்

அடி ஆழம் வரைச் சென்று தாக்கியது. மெல்ல தன்னை விடுவித்தவனின் நெஞ்சில் தன் முகம் மறைத்துக் கொண்டாள்.

ஒரே நேரத்தில் அவளை துக்கமும், மகிழ்ச்சியும் ஒரு சேர ஆட்கொண்டது. ‘தங்கள் வாழ்க்கையின் முக்கியமான கட்டத்தில் பாதி கிணற்றை மட்டுமே தாண்டியிருக்கிறோம். மீதிக் கிணற்றையும் பத்திரமாக கடக்க வேண்டுமே’ என்ற பயம் நெஞ்சில் எழ, அவளது கண்களில் ஈரம் கசிந்தது.

அவளது கண்ணீரை உணர்ந்தவன், முகத்தைப் பிடித்து உயர்த்தினான். கண்ணீரைத் துடைத்துவிட்டு, முகத்தில் விழுந்திருந்த முடிக் கற்றைகளை ஒதுக்கிவிட்டான்.

அவளது மனத்தைப் படித்தவன் போல, “வைஷூ! ரிலாக்ஸ். எனக்காகவே காத்திருந்த தேவதை நீ. உன்னை யாருக்காகவும், எதுக்காகவும் விட்டுக்கொடுத்திட மாட்டேன்” என்று உறுதியான குரலில் சொன்னான்.

“ராகவ்” என்று தழுதழுத்தவள், அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

அவனது கரங்கள் அவளை அணைத்து ஆசுவாசப்படுத்திய போதும், தன் அன்னையை நினைத்துக் கொண்டவளது மனத்தில் லேசான கலக்கம் எழத்தான் செய்தது.

அத்தியாயம் - 21

“நம்ம வைஷூ கல்யாணத்தை இந்த மீனாட்சி வீட்டுக் கல்யாணத்தை

விட பிரமாதமா நடத்தி, அவளோட மூக்கு மேல விரல் வைக்கிறா மாதிரி செய்யணும். ஆனாலும், இத்தனை அலட்டல் ஆகாது. தெரிஞ்சவளாச்சேன்னு அவ பொண்ணு கல்யாணத்துக்குப் போனா... என்னமோ ஊரில் இல்லாத மாப்பிள்ளையைப் பிடிச்சிட்டாளாம். விக்ரமை பத்தி சொல்லியிருந்தா அவ்வளவு தான்... அவளுக்கு நெஞ்சே வெடிச்சிருக்கும்" என்று சொல்லிவிட்டு சிரித்தார் தேவிகா.

'நல்லவேளை சொல்லாமல் வந்தியே' என்று மனத்திற்குள் நினைத்துக்கொண்ட சங்கரன், திரும்பி மனைவியைப் பார்த்துவிட்டு, அமைதியாக வெளியே வேடிக்கை பார்க்கலானார்.

"நான் எவ்வளவு முக்கியமான விஷயம் சொல்லிட்டு இருக்கேன்... கூட சேர்ந்து அதைப் பத்தி பேசலைனாலும் அட்லீஸ்ட் அப்படியா... ஆமாம், சரின்னு ஏதாவது ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா? எது சொன்னாலும் ஒண்ணும் தெரியாத மாதிரி ஒரு பார்வை..." என்று சலித்துக் கொண்டார்.

"கிட்டதட்ட ரெண்டு மணி நேரமா இதையே தானே சொல்லிட்டு இருக்க தேவி" என்ற சங்கரனின் குரலில் எந்த வித்தியாசமும் இல்லை.

"எப்பவும் ஒரே மாதிரி ரியாக்*ஷன்... இருபத்து மூணு வருஷமா இதையே தான் பார்த்துட்டு இருக்கேன்... சலிச்சி போச்சு" என்று சப்தமாகவே முணுமுணுத்தார்.

ஒரு பெருமூச்சுடன் சாலையில் தனது கவனத்தைத் திசைத் திருப்பினார் சங்கரன். தங்கள் வீடு இருக்கும் தெரு வந்ததும், டிரைவரிடம் வீட்டின் அடையாளம் சொன்னார்.

கால் டாக்சியிலிருந்து இறங்கிய தேவிகா குனிந்து உள்ளேயிருந்து டிராவல் பேகை எடுத்துக்கொண்டு திரும்பியவரின் பார்வை அதிர்ச்சியில் நிலைகுத்தி நின்றது.

வாசலில் பைக்கை நிறுத்திய ராகவனையும், அவனது தோளைப் பற்றியிருந்த வைஷாலியையும் பார்த்தவருக்கு மனம் கொதித்தது. 'கடவுளே! இதெல்லாம் பொய்யாக இருக்கவேண்டும்' என்று அவரது உள்ளம் துடித்தது.

பெற்றோரைக் கண்டதும் பைக்கிலிருந்து வேகமாக இறங்கிய வைஷாலி அன்னையின் திகைத்த பார்வையில் தவிப்புடன் திரும்பி ராகவனை பார்த்தாள். பைக்கிலிருந்து இறங்கியவன், உரிமையுடன் அவளது வலது கரத்தை தனது கரத்துடன் பிணைத்துக் கொண்டு நிற்பதை கையாலாகாத்தனத்துடன் பார்த்தார் தேவிகா.

"வணக்கம் அத்தை! சௌக்கியமா இருக்கீங்களா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் ராகவன்.

'அத்தை' என்ற அழைப்பு, சுத்தியலால் ஓங்கி தன் மண்டையில் யாரோ அடித்ததைப் போல துடித்துப் போனார் தேவிகா. மகளின் கரத்தை உரிமையுடன் பற்றிக்கொண்டு தன்னெதிரில் நிற்பது, அவனது பார்வையில் இருந்த வெற்றிக் களிப்பு, நான் சொன்னதைச் சாதிச்சிட்டேன் இனி என்ன? என்று கேட்பது போன்ற அவனது சிரிப்பு என அனைத்தையும் பார்த்த தேவிகாவிற்கு மயக்கம் வரும் போல இருந்தது.

டாக்சியை அனுப்பிவிட்டு வந்த சங்கரன், "வாப்பா ராகவன்... உள்ளே

வா” என்று அழைத்தபடி வீட்டினுள் செல்ல, ராகவன் அவரை பின் தொடர்ந்தான்.

அசையாமல் நின்ற அன்னையைக் கண்ட வைஷாலிக்கு, என்ன செய்வதென்று புரியவில்லை.

“நீங்க உள்ளே போங்க...” என்று ராகவனிடம் சொன்னவள், தனது கரத்தை விடுவித்துக்கொண்டு, அன்னையின் அருகில் சென்றாள்.

ராகவனும் அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சென்றான்.

“அம்மா, பேகைக் கொடுங்க” என்று அவரிடமிருந்து வாங்க முயன்றாள்.

சடாரென நிமிர்ந்து அவளை முறைத்த தேவிகா, விறுவிறுவென உள்ளே செல்ல, தவிப்புடன் அவரைத் தொடர்ந்தாள் வைஷாலி.

சங்கரனும், ராகவனும் பேசிய எதுவும் தேவிகாவின் காதில் விழவில்லை.

ஒரு தட்டில் பழங்கள், இனிப்பு, தங்கையின் வளைகாப்பு அழைப்பிதழ் என்று அடுக்கியவன், “தங்கச்சிக்கு வளைகாப்பு. முதல் அழைப்பு உங்களுக்குத் தான் மாமா. நீங்களும் அத்தையும் முன்னால் நின்னு நல்லபடியா நடத்திக் கொடுக்கணும்” என்று உரிய மரியாதையுடன் அழைத்தான்.

‘தேவிகா, அழைப்பை பெற்றுக் கொள்ள நிச்சயம் வரமாட்டார்’ என்று தெரிந்த போதும், ஒரு எதிர்பார்ப்புடன் அவரைப் பார்த்தான் ராகவன். ஆனால், தேவிகாவோ இறுகிய முகத்துடன் டைனிங் ஹாலில்

அமர்ந்திருக்க, ஏமாற்றத்துடன் சங்கரனை பார்த்தான்.

சங்கரனும், வைஷாலியும் தர்ம சங்கடமான நிலையில் இருந்தனர்.

“நீ கொடுப்பா” என்று வாங்கிக்கொண்ட சங்கரன், “பொறுப்பான ஒரு மனுஷனா உன்னைப் பார்க்க ரொம்ப சந்தோஷமா இருக்கு ராகவன்...” என்றவர் அழைப்பிதழை பிரித்துப் படித்தார்.

சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு ராகவன் கிளம்ப, தந்தையும், மகளும் வாசல்வரை சென்றனர்.

“நாளைக்குத் தானே கிளம்பற ராகவன்.”

“ஆமாம் மாமா. ஃப்ரெண்ட் வீட்டில் தங்கி இருக்கேன். நாளைக்கு விக்ரம் சார் வரார். அவங்க வீட்டுக்கும் பத்திரிகை கொடுத்துட்டு மதியம் கிளம்பிடுவேன்” என்றான்.

“நல்லதுப்பா... நீ வீட்டுக்குப் போய் சேர்ந்ததும் என் மகளுக்கு ஒரு போன் செய்து பேசிடு. அப்போதான் அவளுக்கு நிம்மதியாக இருக்கும். அதுவரை தூங்காமல் உட்கார்ந்திருப்பா...” என்று சங்கரன் சிரிக்க, ராகவன் புன்னகையுடன், “கட்டாயம் மாமா...” என்று சொல்லிவிட்டு இருவரிடமும் விடைபெற்றுக் கிளம்பினான்.

அதுவரை புன்னகைத்தபடி நின்றிருந்த இருவரின் முகமும் உணர்ச்சியற்ற பாவனையை வெளிப்படுத்தியது. ஒரு பெரிய புயலை எதிர்பார்த்தபடி தந்தையும், மகளும் வீட்டினுள் நுழைந்தனர். ஆனால், அங்கே தேவிகா இல்லாததைக் கண்ட இருவருக்குள்ளும் இப்போது

லேசான பயம் தோன்றியது.

வெறும் புயல் அல்ல பெரிய சுனாமியே வரப்போவதற்கான அறிகுறியாக இருவருக்கும் பட்டது.

கலக்கத்துடன் பார்த்த மகளை, “நீ உன் ரூமுக்குப் போடா” என்றார்.

“இல்லப்பா, நான் எதிர்பார்த்ததை விட அம்மா ரொம்ப அப்செட்டாகி இருக்காங்க போலப்பா. அவங்க ஏதாவது கேட்டுட்டாலும் பரவாயில்லப்பா... ஆனால், இது என்னவோ எனக்கு பயம்மா இருக்கு...!” என்றாள் அச்சத்துடன்.

”நடக்கறது நடந்தே தீரும்... அப்பா இருக்கேன் இல்ல. நீ மனசை உழட்டிக்காம போம்மா” என்று மகளை அனுப்பி வைத்தார்.

அரைமனத்துடன் தலையாட்டிவிட்டுத் தன் அறைக்குச் சென்றாள் வைஷாலி.

ராகவன் தங்கை வளைக்காப்பிற்கு அழைத்ததோ, அவன் பேசியதோ எதுவுமே தேவிகாவின் மனத்தில் பதியவில்லை. மகளும், கணவரும் திட்டமிட்டு தன்னை ஏமாற்றிவிட்டனர். அவர்கல் ஏமாற்றும் அளவிற்கு தான் முட்டாளாக இருந்துவிட்டோமே என்றா சுயபச்சாதாபத்திலும், அவமானத்திலும் மனத்திற்குள் குமுறிக்கொண்டு அமர்ந்திருந்தார்.

‘கூடாது... இவர்கள் நினைப்பது எதுவும் நடக்கக்கூடாது. தன் தோழிகள் மத்தியிலும், உறவினர்கள் மத்தியிலும் தான் தோற்றுப் போகக் கூடாது... அவர்களை ஜெயிக்கவிடக் கூடாது’ என்று நினைத்தவர், தனது எண்ணத்தை எப்படி ஈடேற்றுவது என்றும் முடிவெடுத்துக்

கொண்டு தங்கள் அறைக்குச் சென்றார்.

இருண்டிருந்த அறையின் விளக்கைப் போட்ட சங்கரன், இழுத்துப் போர்த்தியபடி படுத்திருந்த மனைவியைப் பார்த்தார்.

கணவர் வந்திருப்பதை அறிந்த போதும், தேவிகா அசையாமல் படுத்திருந்தார்.

உடையை மாற்றிக்கொண்டு வந்த சங்கரன், “தேவி!” என்று மெல்ல அழைத்தார்.

ஆனால், அவரது அழைப்பிற்கு எந்த எதிரொலியும் இல்லை.

மீண்டும் அவர் அழைத்ததும், “என்னை எதுவும் பேச வைக்காதீங்க... அதோட விளைவு ரொம்ப ரொம்ப மோசமாக இருக்கும்..” என்று போர்வையை விலக்காமல், அழுத்தம் திருத்தமாகச் சொன்ன தேவிகாவின் குரலில் அடக்கப்பட்ட கோபம் அப்பட்டமாக தெரிந்தது.

“தேவி, உன் கோபம் தப்புன்னு சொல்லமாட்டேன். ஆனால், நியாயமும் இல்லை. எல்லாமே நம்ம வைஷாலிக்காகன்னு புரிஞ்சிக்க...” என்றார்.

கோபத்துடன் எழுந்து அமர்ந்த தேவிகா, “அவ எனக்கும் மகள்தான். ஒரு அம்மாவை விட மகளோட வாழ்க்கையில் அடுத்தவங்களுக்கு அத்தனை அக்கறையும், உரிமையும் இருக்கா... அது பெத்த அப்பாவாக இருந்தாலும் கூட...” என்று கத்திய மனைவியை உணர்ச்சியைத் துடைத்த முகத்துடன் பார்த்தார்.

இருபத்தி மூன்று வருட தாம்பத்தியத்தில் சங்கரன் தன் மனைவியை

நன்கு புரிந்து வைத்திருந்தார். மனைவியின் மனத்தில் இருக்கும் அத்தனை உணர்வுகளையும் படித்துவிட்டவராக, மேற்கொண்டு எதுவும் பேசாமல் எழுந்து தோட்டத்திற்குச் சென்றார்.

மாடியில் வைஷாலியின் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருக்க, பால்கனியில் நின்று ஜோதியிடம் மொபைலில் பேசிக்கொண்டிருந்தாள்.

மகளின் மலர்ந்த முகமும், உற்சாகம் ததும்பிய பேச்சும் அவரது கவலையை சற்று மறக்கச் செய்தது. பாதி வாழ்க்கையை வாழ்ந்து முடித்துவிட்ட தான், வாழ்க்கையைத் துவங்கப்போகும் மகளுக்கு எந்தவித சேதாரமும் இல்லாமல் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று திடமான முடிவெடுத்துக் கொண்டார்.

மகளுக்கு நல்ல வசதியான வாழ்க்கை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்திலிருந்த தேவிகா; மகளின் விருப்பபடி விரும்பியவனையே அவள் கைப்பிடிக்க வகை செய்யும் விதத்தில் யோசித்துக் கொண்டிருந்த சங்கரன்; தனது வருத்தத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ஜோதியிடம் பேசிமுடித்த வைஷாலி மூவரின் மனமும் அப்போது ஒரே விஷயத்தைத் தான் நினைத்துக் கொண்டிருந்தது.

அது...

<u>அத்தியாயம் - 22</u>

நாளுக்கு நாள் வைஷாலியின் மீதிருந்த காதல் விக்ரமின் மனத்தில் பெருகிக்கொண்டே தான் இருந்தது. ‘இனி தாள முடியாது வைஷாலியிடம் தன் காதலை உறுதிப்படுத்தி விரைவாக அவளை

மணந்து, எப்போதும் தன் அருகிலேயே வைத்துக் கொள்ளவேண்டும்' என்று ஏங்கிய மனத்தை அடக்க முடியாமல் தவித்தவன், ரத்னகிரிக்கு கிளம்பிவிட்டான். இன்னும் சற்று நேரத்தில் தன் தேவதையைச் சந்தித்து தனது காதலைச் சொல்லப்போகும் தருணத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தவனை மொபைலில் அழைத்தாள் சீமா.

“விக்ரம் ரத்னகிரி வந்தாச்சா?”

“ம்ம், இன்னும் அரைமணி நேரத்தில் போய்ச் சேர்ந்திடுவேன். என் தேவதையைப் பார்க்க” என்றான் காதலுடன்.

“அப்போ எனக்கு ஒரு வேலை செய்யேன் விக்ரம்” என்றவள், ஒரு ரிசாட்டின் பெயரைக் குறிப்பிட்டு, “நம்ம ரிசார்ட் சம்மந்தமான ஃபைல் ஒண்ணு மிஸ்டர். மல்ஹோத்ரா கொண்டு வருவார். அதை அவரிடமிருந்து வாங்கிக்கணும். எனக்காக அந்த ஃபைலை வாங்கிக்கிட்டு அப்புறம் போய் உன் தேவதையை பாரேன்” என்றாள் கெஞ்சலாக.

“ஏய்! விளையாடுறியா?” என்றான் எரிச்சலுடன்.

“ப்ளீஸ் விக்ரம்! முக்கியமான ஃபைல். எனக்கு டைரக்ட் ஃப்ளைட் கிடைக்காததால இங்கிருந்து காரில் டெல்லி வந்து அங்கிருந்து ரத்னகிரி வர்றதா இருந்தேன். பார்த்தால் ப்ளைட் ஒன் ஹவர் லேட்பா. நான் அங்கே வந்து சேர்ந்து, அவர்கிட்டயிருந்து ஃபைலை வாங்கிக்கறதுக்குள்ள அவர் கிளம்பிடுவார். அப்புறம் ஒரு மாசம் அவரைப் பார்க்க முடியாது. வேற எதுவாக இருந்தாலும் பரவாயில்லை... இது பிசினஸ் விஷயம் உனக்குத் தெரியாதது இல்லை...” என்று கெஞ்சுதலாகச் சொன்னாள்.

முணுமுணுப்புடன் அவளை மனத்திற்குள் திட்டிக்கொண்டாலும், அவளது வார்த்தைகளை மறுக்க மனமில்லை. சரியென ஒப்புக்கொள்ள, சீமா நிம்மதியானாள்.

“இதே சந்தோஷத்தோடு போய் அம்மா, அப்பாகிட்ட நான் ரத்னகிரி வந்திருப்பதை போட்டுக்கொடுத்திடாதே. நான் ஷாலுவை பார்த்துட்டு லேட்டாதான் வீட்டுக்கு வருவேன்னு. வந்து நான் மெதுவா விஷயத்தை அவங்ககிட்ட சொல்லிக்குவேன். புரிஞ்சிதா” என்றான் கறாரான குரலில்.

“இதில் ஒண்ணும் குறைச்சல் இல்லை. வைஷாலியா உன்கிட்ட லவ்வை சொல்றதுக்கு முன்ன நீயா சொல்றதுக்கு உனக்கு தைரியம் வந்திருக்கேன் இதுக்காகவே உன்னை போட்டுக்கொடுக்க மாட்டேன் ஓகேவா” என்று அவனது எரிச்சலை அதிகமாக்குவது போல பேசினாள்.

“நீ அடங்கமாட்ட. நீ சொன்ன வேலையை அப்படியே விட்டுட்டு என் வேலையை மட்டும் முடிச்சிகிட்டு வரப்போறேன் பாரு” என்று கடுகடுத்தவன், போனை பட்டென அணைத்தான்.

ஆனாலும், அவன் எடுத்துக்கொண்ட வேலையில் பின்வாங்கமாட்டான் என்ற நம்பிக்கையுடன், சிரித்துக்கொண்டாள் சீமா.

****

இரவு ஒன்பதரை மணிக்குக்கு ரத்னகிரியிலிருந்த விக்ரமின் வீட்டிற்கு, அவள் வந்து சேர்ந்த போது, விக்ரம் வந்ததற்கான அடையாளமே இல்லை. அத்தை, மாமாவிடம் சிறிது நேரம் பேசிவிட்டு எழுந்து ஹாலுக்கு வந்தவள் விக்ரமின் மொபைலுக்கு முயன்றாள்.

“ஹய்யோ! போனை எடுடா ஹீரோ. எவ்வளவு நேரம் ட்ரை பண்றது? போனை எடுக்காமல் அப்படி என்னடா செய்யற?” எரிச்சலுடன் போனை அணைத்த சீமா, நிலைகொள்ளாமல் அப்படியும் இப்படியுமாக நடந்து கொண்டிருந்தாள்.

“சீமா! மணி பத்தரை ஆகுது தூங்கலையா?” அறைக்குள்ளிருந்து அவளைப் பார்த்துக்கொண்டிருந்த செந்தளிர் கேட்டார்.

அவரது அறைவாசலில் வந்து நின்ற சீமா, “தூங்கணும் அத்தை. உங்க அருமை பிள்ளைகிட்ட ஒரு வேலை சொல்லியிருந்தேன்; அது முடிஞ்சிதா என்னன்னு ஒரு போன் செய்து சொல்லியிருக்கலாம். நான் போன் பண்ணினா அதையும் எடுக்கமாட்டேன்றான்” என்றாள் சற்றே கோபத்துடன்.

“என் பிள்ளைகிட்ட சொன்ன வேலை, என்னைக்கு முடியாமல் இருந்திருக்கு. அவனுக்கு வேற ஏதாவது முக்கியமான வேலை வந்திருக்கும், அதில் மறந்திருப்பான். கவலைப்படாமல் போய்ப் படு” என்றார்.

“ம், அவனை நீங்க என்னைக்கு விட்டுக் கொடுத்திருக்கீங்க?” என்றவள், “ஆமாம், நீங்க ஏன் இன்னும் தூங்காமல் இருக்கீங்க? டேப்லெட்ஸ் போட்டீங்க தானே?”

“அதெல்லாம் ஆச்சு. தூக்கம்தான் வரலை” என்று பெருமூச்சு விட்டார் செந்தளிர்.

ஆழ்ந்த பெருமூச்சுடன் சொன்னபோதும், அவரது கண்களில் தெரிந்த

ஒளியில் ஆர்வமாக அவரருகில் சென்று அமர்ந்தாள் சீமா.

“என்ன அத்தை? ஆயாசமா சொல்றது மாதிரி சொன்னாலும், கண்ணுல தெரியற ஸ்பார்க் வேற விஷயம்ன்னு சொல்லுது” என்றாள் சிரிப்புடன்.

“உன் அத்தைக்கு மாமியாராக ஆசை வந்துடுச்சாம்” என்றபடி அங்கே வந்தார் ரவீந்தர்.

“என்னை சொல்றாரே உன் மாமாவுக்கு மாமனார் ஆக ஆசை இல்லையாமா?” என்று கணவரிடம், சரிக்குச் சரி கேலியில் இறங்கினார் செந்தளிர்.

“உன் பிள்ளைக்கே கல்யாண ஆசை வந்துடுச்சு. எனக்கு மாமனாராக ஆசை வராதா என்ன? நீயே சொல்லேன் சீமா…” என்று அமைதியாக அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தவளை, பேச்சின் நடுவில் இழுத்து விட்டார்.

‘ஆஹா! விஷயத்தை கண்டுபிடிச்சிட்டாங்க போல இருக்கே. இப்போ என் வாயைப் பிடுங்கத்தான் இத்தனை பில்டப்பா. அப்போவே ஒழுங்கா போயிருக்கலாம். இப்போ நான் எதையும் உளராமல் இருக்கணுமே. நான் சும்மா இருந்தாலும், என் வாய் சும்மா இருக்காதே. ஆண்டவா! காப்பாத்து’ மனத்திற்குள் ஆயிரம் வேண்டுதலுடன், திருதிருவென விழித்தபடி இருவரையும் பார்த்தாள்.

“என்ன சீமா எதுவும் பேசமாட்டேன்ற? நாங்க என்ன சொல்ல வர்றோம்ன்னு புரியுது இல்ல?” தீவிர முகபாவத்துடன் கேட்டார் ரவீந்தர்.

“ம், அது… வந்து மாமா! பாதி புரியுது…” என்று இழுத்தாள்.

“மீதி உனக்கு புரியலையாக்கும்” என்ற அத்தையைப் பார்த்து அசட்டுத்தனமாக புன்னகைத்தாள்.

“ரெண்டும் கூட்டுக்களவாணிங்க. இவளுக்கு எதுவும் தெரியாதாம்; அதை நாம நம்பணுமாம்” என்று அவளது காதைப் பிடித்துத் திருகினார் செந்தளிர்.

“ஆ! வலிக்குது அத்தை” என்று அலறியபடி காதை விடுவித்துக் கொண்டவள், “என்னையே டார்கெட் வச்சு பேசுங்க. உங்க செல்லப் புத்திரனை பிடிங்க. அவன் என்னமோ ஒண்ணும் தெரியாதவன் மாதிரியும்; நான்தான் எல்லாத்துக்கும் காரணம் போலவும் என்னையே சொல்லுங்க. என்னதான் ஒரு அப்பாவி பொண்ணு தனியா மாட்டிகிட்டாலும், அதுக்காக இப்படியா?”

விட்டால் அழுதுவிடுவேன் என்பது போலப் பேசுபவளைப் பார்த்து இருவரும் சிரித்துக் கொண்டனர்.

“சரிடியம்மா, உனக்கு எதுவும் தெரியாது. நீ அப்பாவி போதுமா” என்று சிரித்தார் செந்தளிர்.

“ம், அது!” என்று கலகலவென நகைத்தாள்.

“உனக்கு முதலிலேயே விஷயம் தெரியும் இல்ல. அப்புறம் ஏன் எங்ககிட்ட சொல்லலை நீ?”

“இது நல்ல கதை. உங்ககிட்ட சொல்லிட்டு, அவன்கிட்ட யாரு வாங்கிக்

கட்டிக்கிறது?” என்று படபடத்தவள், “ஆனா, இதை உங்ககிட்ட சொல்வேன்னு நீங்க ரெண்டு பேரும் எப்படி நினைக்கலாம்? இது விக்ரமோட வாழ்க்கை. நீங்க எனக்கு அத்தை, மாமாவாக இருந்தாலும், அவன் என் ஃப்ரெண்ட். அவனோட அனுமதியில்லாமல் அவனை உங்ககிட்டயே போட்டுக் கொடுப்பேனா?” என்று மல்லுக்கு நின்றாள்.

“அடேங்கப்பா! பார்த்தியா தளிர்! அவனுக்கு எத்தனை ஸ்ட்ராங் சப்போர்ட்டர் இருக்காங்கன்னு” அவளைச் சீண்டினார் ரவீந்தர்.

“நிச்சயமா. எந்த நிலையிலும், இந்த சீமா, விக்ரமுக்கு துணையாக நிற்பேன் தெரிஞ்சிக்கோங்க” என்றாள் வீராப்புடன்.

“அட அசடே! நாங்க என்ன அவனோட விருப்பத்திற்குக் குறுக்கே நிற்கவா
போறோம்? கொஞ்சம் முன்னமே தெரிஞ்சிருந்தா இந்நேரம் வைஷு இந்த வீட்டுக்கு மருமகளா வந்திருப்பாளேங்கற ஆதங்கத்தில் சொல்றேன்” என்றார்.

“ஹவ் ஸ்வீட் அத்தை!” என்று அவரது கழுத்தைக் கட்டிக்கொண்டவள், “உங்களை மாதிரி ஒரு அப்பா, அம்மா கிடைக்க அந்தப் படுபாவி எந்த ஜென்மத்தில், என்ன புண்ணியம் செய்தானோ?” என்று ஆற்றாமையில் புலம்புவது போலச் சொன்னாலும், உள்ளார்ந்த அன்போடே சொன்னாள்.

“நாளைக்கு நாள் ரொம்ப நல்லா இருக்கு. விக்ரமும் இங்கே இருப்பான். உங்க அப்பா, அம்மாவுக்கும் போன் செய்து வரச் சொல்லியாச்சு. ஈவ்னிங் எல்லோரும் வைஷூ வீட்டுக்குப் போய்ப் பேசி, கையோடு நிச்சய தட்டு மாத்திட்டு, கல்யாணத்துக்கு நாளும் குறிச்சிட்டு வந்திடலாம்” என்ற கூடுதல் தகவலையும் சொன்னார்.

“வைஷூ வீட்டுக்கு சொல்லவேணாமா?”

“நான் இன்னைக்கு காலையில் தேவிகிட்ட போனில் பேசிட்டேன். ஏதோ கல்யாணத்துக்கு போயிருக்காளாம். அதனால் நைட் வீட்டுக்குப் போய் சேர்ந்ததும், நாளைக்கு நாம வர்றதை சொல்றேன்னும் சொல்லிட்டா” என்றார்.

ஆனந்தத்தில் இமைகள் விரிய, “ஓ! இதை விக்ரமுக்கு சொல்லலையா?” என்று கேட்டாள்.

“இல்லை. அவனுக்கு சர்ப்ரைஸாக இருக்கட்டும். நீ எதுவும் உளறி வைக்காதே” என்றார் செந்தளிர்.

‘அது சரி. இன்னும் கொஞ்ச நேரத்தில் அவன் இங்கே வந்து உங்களுக்கு சர்ப்ரைஸ் கொடுக்கப் போறானே அப்போ தெரியும்’ என நினைத்துச் சிரித்துக் கொண்டவள், “சர்ப்ரைஸ் தானே கொடுங்க, கொடுங்க. எல்லாம் நல்லபடியா நடந்தா சரி” என்றவள் சந்தோஷத்துடன் தனது அறைக்குச் சென்றாள்.

****

ராகவின் அழைப்பிற்காக காத்திருந்த வைஷாலி, மொபைல் ஒலித்ததுமே வேகமாக எடுத்தாள். ஆனால், அது சீமாவின் அழைப்பு எனத் தெரிந்ததும் மனத்தில் சற்று ஏமாற்றமாக இருந்தது.

ஆனாலும் உற்சாகத்தோடே, “ஹலோ அக்கா… எப்படியிருக்கீங்க?”

“என்னம்மா ஹீரோயின், ரெண்டு ரிங்கூட முழுசா போகலை பறந்து வந்து போனை எடுத்துட்ட… யாருக்காக இந்த எதிர்பார்ப்பு?” என்று கேலியில் இறங்கினாள் சீமா.

“உங்களுக்கு இதே வேலை அக்கா. உங்க நம்பரை பார்த்துத் தான் எடுத்தேன். என்ன விஷயம் இந்த நேரத்தில் போன்?”

“சும்மாதான். ஏன் பேசக்கூடாதா? இல்ல உன்னோட ஸ்வீட் டிரீம்ஸை கலைச்சிட்டேனோ!”

“போதுமே. உங்க கற்பனைக் குதிரையை ஒரு ஓரமா கட்டிவைங்க” எனச் சிரித்தாள் வைஷாலி.

“பெரியவங்க சொல்லிட்டீங்க செய்யாமல் இருப்போமா…” என்று நீண்ட மூச்சை விடுவித்தவள், “சரி எனக்கு ஒரு ரகசியம் சொல்லு. ஏதாவது ஸ்பெஷல் நியூஸ் இருக்கா?” என கிசுகிசு குரலில் கேட்டாள்.

சீமா, விக்ரமை மனத்தில் நினைத்துக் கொண்டு கேட்க, வைஷாலி சற்று திடுக்கிட்டுப் போனாள்.

“அதெல்லாம் ஒண்ணும் இல்லையே.என்ன திடீர்ன்னு?” என்றவள் சற்று திணறினாள்.

“ஹே! உன் குரலை பார்த்தால் அப்படித் தெரியலையே… என்கிட்ட எதையோ மறைக்கிறா மாதிரி இருக்கே” என்று வேண்டுமென்றே கேட்டாள்.

“அது உங்க நினைப்பாக இருக்கும்” என்றாள் பட்டென்று.

சீமாவிற்கு குழப்பமாக இருந்தது. ஒருவேளை விக்ரமை சந்தித்ததைத் தன்னிடம் மறைக்கிறாளோ என்று எண்ணியபடி, “அப்போ...” என்று ஆரம்பித்தவள், “விக்ரம் ரத்னகிரி வந்திருக்கான் தெரியுமா?” என்றாள்.

“அவர் நாளைக்குத் தானே வர்றார்” வேகமாக பதிலளித்தவள் சட்டென நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

வைஷாலியின் படபடப்பான பேச்சில் ஏதோ சரியில்லை என்று அவளுக்குத் தோன்ற, “அவன் நாளைக்கு வர்றான்னு உனக்கு யார் சொன்னது?” என்று கேட்டாள்.

“அது, நேத்து காலைல அத்தை, அம்மாவிடம் சொன்னதா சொன்னாங்க. அதான் சொன்னேன்” என்றதும் சீமாவிற்கு இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் தளர்ந்து போனது.

மேலும் இரண்டோரு வார்த்தைகள் பேசிவிட்டு போனை அணைத்த சீமா தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்துவிட்டாள். ‘விக்ரம் வைஷாலியை பார்க்கவில்லையா? அவனைப் பார்த்திருந்தால் அதையாவது அவள் சொல்லியிருப்பாளே. ஏன் பார்க்கவில்லை? இல்லை நான் கிண்டல் செய்வேன் என்று தன்னிடம் மறைக்கிறாளா?’ என்று நினைத்தவளுக்கு, ‘முதலில் விக்ரம் ரத்னகிரி வந்தானா?’ என்ற கேள்வி புதிதாக முளைக்க, மனத்திற்குள் தவிப்பாக இருந்தது.

அப்போதுதான் நினைவு வந்தவளாக, தனது மொபைலில் வந்திருக்கும் குறுஞ்செய்திகளை ஆராய்ந்தாள். அவள் எதிர்பார்த்தபடியே மிஸ்டர். மல்ஹோத்ரா, ஃபைலை விக்ரமிடம் சேர்ப்பித்துவிட்டதாக தகவல் அனுப்பியிருந்தார்.

‘அப்படியானால் விக்ரம் ரத்னகிரி வந்திருக்கிறான். அப்படியானால் வேலையை முடித்துவிட்டு திட்டமிட்டபடி வைஷாலியை சந்திக்கவில்லையா? ஒருவேளை வைஷாலி தன்னிடம் எதையாவது மறைக்கிறாளா? இவனும் போனை எடுக்க மாட்டேங்கிறானே! விக்ரம் நீ எங்கே இருக்க?’ என்ற பயம் மனத்திற்குள் எழ, தவிப்புடன் அவனது மொபைலுக்கு முயன்றாள்.

அத்தியாயம் - 23

ஆளுயரக் கண்ணாடியில் தெரிந்த தனது பிம்பத்தையே, வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த விக்ரமின் விழிகளில் அருவருப்பும், கோபமும் ஒவ்வொரு வினாடிக்கும் ஏறிக்கொண்டிருந்தது.

சீமா சொன்னபடி மிஸ்டர்.மல்ஹோத்ராவை சந்தித்து ஃபைலை வாங்கிக் கொண்டவன், அவரது வற்புறுத்தலால் ரிசார்ட்டின் பின்புறமிருந்த பீச்சில் அமைந்திருந்த ஹோட்டலில், அவருடன் அமர்ந்து காஃபி அருந்திக் கொண்டிருந்தான்

அவனது அவசரம் புரியாமல், நச்சரித்து இழுத்துக்கொண்டு வந்தவரின் மீதெழுந்த கோபத்தை, கட்டுப்படுத்திக் கொண்டு அமர்ந்திருந்தான். அரைமணி நேர அளவளாவிற்குப் பிறகு, அவரது ப்ளைட்டிற்கு லேட்டாவதை விக்ரமே நினைவுபடுத்த, ஒருவழியாக அவனை விட்டுக் கிளம்பினார்.

நீண்ட பெருமூச்சுவிட்டவன், திரும்பிக் கடற்கரையைப் பார்த்தான். செஞ்சாந்து குழம்பாக ஜொலித்தபடி, கடலன்னையின் மடியில் துயில்கொள்ள ஆரம்பித்திருந்த செங்கதிரோனின் அழகில் சற்று

மெய்மறந்து நின்றான். இந்தச் சூழ்நிலையில் தன்னவள் அருகில் இல்லையே என்று ஏங்கிய மனத்தை அடக்க முடியாமல் தவித்தான்.

அவளைக் காணவேண்டும் என்ற உத்வேகம் மனத்தில் எழ, வேகமாக திரும்பி இரண்டடி நடந்தவன், சட்டென நின்றான். அதே வேகத்தில் தனக்கு வலதுபுறத்தில் திரும்பிப் பார்த்தவன், ஸ்தம்பித்து நின்றான்.

சற்று உள்ளடங்கியிருந்த இடத்தில், அமர்ந்திருந்த ராகவையும், அவனது தோளில் சாய்ந்து அமர்ந்திருந்த வைஷாலியையும் கண்ட விக்ரம் சிலையென நின்றான். ‘இது அவர்கள் தானா; இல்லை அவர்களில் சாயலில் வேறு யாரையும் பார்க்கிறோமா?’ என்று தன் கண்களையே நம்பாதவனாக உற்றுக் கவனித்தான்.

அவன், அவளது ஒவ்வொரு விரலாக பிடித்து ஏதோ சொல்ல, அவனது தோளில் சாய்ந்தபடி, அதை ஆமோதிப்பது போலத் தலையாட்டிச் சிரித்தவளது சிரிப்பொலி, அது வைஷாலி தான் என்று கட்டியம் கூறுவது போல ஒலித்தது.

நடந்த நிகழ்வெல்லாம் மீண்டும் கண்முன்னால் வர, அவனது கோபம் வெறியாக உருமாற, முழுவேகத்துடன் கண்ணாடியை ஓங்கிக் குத்தினான். உடைந்து சிதறிய துண்டுகள் அவனது பிம்பத்தைப் பிரதிபலித்து, ‘தோற்றுப் போனவன்’ என்று கேலி செய்வதைப் போல இருக்க, அவனது ஆக்ரோஷம் கட்டுக்கடங்காமல் போனது.

‘என்ன இல்லை தன்னிடம்? அழகு, திறமை, பணம், பதவி, அந்தஸ்து, செல்வாக்கு என்னதான் இல்லை? ஆனால், எல்லாவற்றிலும் தன்னைவிட தகுதி குறைந்த, தன்னிடம் கைகட்டிப் பணிபுரியும் ஒருவனிடம் தான் தோற்றுவிட்டதை அவனால் தாங்கிக் கொள்ள

முடியவில்லை. தன்னைவிட எந்தவிதத்தில் அவன் உயந்தவன்? எந்தவிதத்தில் அவன் வைஷாலியை கவர்ந்தான்? தன்னை ஏன் அவளுக்குப் பிடிக்காமல் போனது? என்னிடம் சிரிக்கச் சிரிக்கப் பேசிப் பழகியவளுக்கு, என் மனத்தில் இருப்பது எப்படிப் புரியாமல் போனது?' என்று குமுறினான்.

நினைவு தெரிந்து இதுவரை எதிலுமே தோற்றுப் பழக்கமில்லாதவனுக்கு, வாழ்க்கையில் விழுந்த முதல் அடியிலேயே நிலை குலைந்து போனான். அவனது ஒரு பார்வைக்காக ஏங்கி நின்ற பெண்களை தன்னருகில் நெருங்க விடாமல் பார்வையிலேயே தள்ளி வைத்தவன் அவன்.

எத்தனைத் தான் சுற்றிச் சுற்றி வந்தாலும், உங்களது வசீகரிப்பு என்னை எதுவும் செய்யாது என்று மமதையில் இருந்தவனை தனது தைரியத்தாலும், துறுதுறுப்பான செயலாலும் நிதானித்துப் பார்க்க வைத்தவள் வைஷாலி மட்டுமே.

அவளது துடுக்குத்தனமான பேச்சும், கலகலப்பான சுபாவமும் அவள் மீது எதிர்பார்ப்பையும், ஆர்வத்தையும் அவனுக்கு உண்டு பண்ணியது. ஆரம்பத்தில் இந்த நினைப்பெல்லாம் சில நாட்களில் மாறிவிடும் என்று அலட்சியமாகத் தான் இருந்தான்.

ஆனால், நாளுக்கு நாள் அவளது நினைவுகள் அவனது எண்ணங்களை மட்டுமல்ல, அவனையுமே ஆக்ரமித்துக் கொண்டிருப்பதை சற்றுத் தாமதமாகத் தான் புரிந்து கொண்டான். புரிந்து கொண்ட போது அது மனத்திற்குச் சந்தோஷமாகவே இருந்தது.

பிசினஸ், மட்டுமே தனது ஒரே குறிக்கோளாக வைத்துத் தொழில்

சாம்ராஜ்ஜியத்தில் தனக்கென ஒரு இடத்தை நிர்மாணித்துக் கொண்ட தனக்கும் காதல் வரும் என்று ஒரு போதும் அவன் நினைத்ததில்லை.

அவள் வலியில் துடித்து இரத்த வெள்ளத்தில் கிடந்த போது தனது இதயத்தில் எழுந்த வேதனைதான் காதல் என்று அவன் உணர்ந்த அந்த நொடி, தான் புதிதாக பிறந்ததைப் போல உணர்ந்தான். 'நான் காதலிக்கிறேனா?' என்று தன்னையே பலமுறை கேள்வி கேட்டுக்கொண்டவனுக்கு, அன்றுதான் தீர்மானமாக, 'ஆம்' என்று சொல்லிக் கொள்ள முடிந்தது.

இத்தனை நாட்களாக மனத்திற்குள் வைத்திருந்த அந்தக் காதல் சொல்லப் படாமலேயே மனத்திற்குள்ளேயே மரித்துப் போனதை அவனால் தாங்க முடியவில்லை. தன் காதல் தோற்றுவிட்ட நிலையில் அவளது இந்த நிராகரிப்பை ஏற்க முடியாது, அவனது மனம் பட்ட வலியும் அவமானமும் அதிகம்.

ஏகாந்த பொழுதுகளில் தன்னுடன் கனவில் பேசிச் சிரித்தவளை, இனி மறந்து விடவேண்டும் என்ற எண்ணம் ஏற்படுத்திய வலி எளிதில் ஆற்ற முடியாதது. நடக்கும் என்று நினைத்துக் கனவில் களித்த கற்பனை வாழ்க்கை, மண் மேடாக கலைந்து போனது.

காற்றில் அலைந்த அவளது கூந்தல், தனது முகத்தை ஸ்பரிசத்தைக் கண்மூடி ரசித்துக் கொண்டிருக்கும் வேளையிலேயே, அது பாசக்கயிறாக மாறி தனது கழுத்தை இறுக்குவதைப் போலத் துடித்துப் போனான்.

உடைந்த கண்ணாடியின் சில்லுகள் அவனது கைகளில் குத்தி வழிந்த ரத்தம் தரையில் உறைந்திருந்தது. அவனது மனக் காயத்தின் முன்பு

இந்த உடற்காயம் எந்தப் பாதிப்பையும் அவனுக்கு ஏற்படுத்தவில்லை.

‘ஏன் ஷாலு என்னை உனக்குப் பிடிக்காமல் போச்சு…? ஏன்?’ என்ற கேள்விகளோடே கட்டிலில் விழுந்தான்.

****

அதிகாலை நான்கு மணிக்கு வீட்டுத் தொலைபேசி சிணுங்க, தூங்காமல் விழித்திருந்த சீமா ஓடிவந்து எடுத்தாள்.

“விக்ரம்…!” என்றவளது குரல் தவிப்புடன் வந்தது.

“மேடம்! நான் விஜய்துர்க் கெஸ்ட் ஹவுஸ் வாட்ச்மேன் பேசறேன்” என்றது மறுமுனையிலிருந்த குரல்.

“சொ…ல்லுங்க” என்றபோதே, அவளுக்குப் பாதி விஷயம் புரிந்து போயிற்று. விக்ரம் சந்தோஷமோ, கவலையோ, குழப்பமோ அனைத்தையும் தீர்த்துக்கொள்ள, விஜய்துர்க் கெஸ்ட் ஹவுசில் தான் கழிப்பான். ஆனால், வாட்ச்மேன் சொன்ன விஷயத்தைக் கேட்டவள் அதிர்ந்து போனாள்.

“நேத்து நைட் ஒரு மணி இருக்கும் மேடம், சின்ன முதலாளி இங்கே வந்தார். வரும் போதே நிதானம் இல்லாமல் தான் வந்தார். நான் ஏதாவது வேணுமான்னு கேட்டு பின்னாலேயே போனேன். என்னைத் திட்டி வெளியே தள்ளிக் கதவை பூட்டிகிட்டார். நான் பயத்தோட வெளியேவே நின்னுட்டு இருந்தேன். கொஞ்சம் நேரம் கழிச்சி கண்ணாடி சாமானெல்லாம் உடையற சத்தம் கேட்டுச்சு. எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியலை மேடம்.

பக்கத்துல இருந்த தோட்டக்காரனை எழுப்பிக் கூட்டிட்டு வந்தேன். அவன் மாடி ஜன்னல் வழியா உள்ளே போய்ச் சின்ன முதலாளியோட ரூமில் சாவித் துவாரம் வழியா பார்த்தான். ரூமே தாறுமாறா இருக்குங்கம்மா... எங்களுக்கு என்ன செய்யறதுன்னே தெரியலை. பெரியவங்க ரெண்டு பேரும் பயந்துடப் போறாங்கன்னு யோசிச்சோம். ஆனால், சின்ன முதலாளியையும் பார்க்கணுமே... அதான் துணிஞ்சி போன் செய்தோம். நல்லவேளை நீங்க இருக்கீங்க. இப்போ நான் என்னங்கம்மா செய்யட்டும்?" என்று கேட்டான்.

"நான் உடனே கிளம்பி வரேன். அதுக்கு முன்னால விக்ரம் அங்கேயிருந்து கிளம்பாமல் பார்த்துக்கோங்க" என்று போனை வைத்தவள், நெற்றியை அழுந்த துடைத்துக்கொண்டவள், விக்ரம் எங்கிருக்கிறான் என்று தெரிந்ததே சற்று நிம்மதியைக் கொடுக்க, வேகமாக கிளம்பினாள்.

அவசர வேலையாக வெளியில் செல்வதால் வந்து விஷயத்தைச் சொல்வதாக குறிப்பு எழுதி, டைனிங் டேபிள் மீது வைத்துவிட்டுக் கிளம்பினாள்.

ஒன்றரை மணி நேரப் பயணத்தைக் குழப்பத்திலேயே கழித்துவிட்டு, விக்ரமிருந்த அறைக்கதவை திறந்தவள் திகைத்து நின்றாள். அறை முழுவதும் சிதறியிருந்த கண்ணாடி சில்லுகளும், அவற்றில் தெறித்திருந்த இரத்தமும் அவளது பயத்தை அதிகரித்தது.

வேகமாக அவனருகில் சென்றவள், அவனிருந்த நிலை கண்டு அவளையுமறியாமல் கண்களில் கண்ணீர் வழிந்தது. நினைவு தெரிந்த நாளிலிருந்து அவனைச் சிரிப்பும், களிப்புமாகவே கண்டிருந்தவளால் தாங்க முடியவில்லை. எந்த நிலையிலும் தனது நிதானத்தைச் சற்றும்

இழக்காதவன், இன்று இருக்கும் நிலை கண்டு துடித்தாள்.

அவனது வலது கையில் கண்ணாடிச் சில்லுகள் குத்தியிருப்பதைப் பார்த்து, கண்ணீருடன் நடுங்கும் விரல்களால் மெல்ல ஒன்றைப் பிடித்து இழுத்தாள். அரைகுறை உறக்கத்திலிருந்தவன், கையில் திடீரென ஏற்பட்ட வலியில் பட்டெனக் கண்களைத் திறக்க, கலங்கிய விழிகளுடன் அமர்ந்திருந்தவளைக் கண்டதும் வேகமாக எழுந்தான்.

உள்ளே சென்றிருந்த மதுவின் கைங்கரியத்தால் அவனுக்குத் தலை சுற்றியது. இருந்தும் அதை ஒதுக்கித் தள்ளியவன் தள்ளாடியபடி எழுந்து நின்றான். “எதுக்கு இங்க வந்த? வெளியே போ” வார்த்தைகளில் தடுமாற்றம் இருந்த போதும் குரலில் கோபம் தெரிந்தது.

“விக்ரம்! இங்க பாரு” என்று எழுந்து அவனருகில் வந்தாள்.

“கிட்ட வராத. எதுக்கு வந்த? என்னைப் பார்த்துத் தோற்றுப் போனவன்னு பார்த்துக் கேலி செய்து சிரிக்கத் தானே” ஆத்திரத்தில் கத்தினான்.

“விக்ரம்! நான் உன்னோட ஃப்ரெண்டுடா. உன்னைப் பார்த்து நான் எதுக்கு சிரிக்கணும்? அப்படி என்ன நடந்தது? உன்னோட ஷாலுவை பார்த்துப் பேசினியா?”

வைஷாலியின் பெயரை கேட்டதும் கண்களை மூடிக் கசப்புடன் புன்னகைத்தவன், “என்னோட ஷாலுவா…? யார் சொன்னது என்னோட ஷாலுன்னு. அவ என்னோட ஷாலுவா ஆகவே முடியாது.”

“விக்ரம் என்ன சொல்ற?”

“ஏன்னா, அவ ராகவோட வைஷு! தெரியுமா உனக்கு. அவளுக்கு என்னைப் பிடிக்கலை. என்கிட்ட கைநீட்டிச் சம்பளம் வாங்கற, என்னோட வேலைக்காரனைப் பிடிச்சிருக்கு. தெரியுமா உனக்குத் தெரியுமா!” என்று ஆத்திரத்துடன் சீமாவின் தோள்களைப் பற்றிக் குலுக்கினான்.

அதிர்ச்சியில் கண்கள் விரிய, என்ன சொல்வதென தெரியாமல், “அவகிட்ட பேசினியா?” என்றாள்.

”என் ரெண்டு கண்ணாலேயும் பார்த்தேன். ரெண்டு பேரும் அந்நியோன்யமா சிரிச்சி பேசினதை என் கண்ணால பார்த்தேன்” என்று வெறி பிடித்தவன் போல அலறியவன், “ஏன் சீமா என்னை அவளுக்குப் பிடிக்கல? நான் என்ன செய்யலை அவளுக்காக? என்னைவிட அவன் எந்த விதத்தில் உசத்தி? நான் ஷாலுவை நேசிக்கிற அளவில் பாதியாவது அவன் நேசிப்பானா? உனக்குத் தெரியும் இல்ல… அவள் மேல நான் எந்த அளவுக்கு உயிரை வச்சிருக்கேன். ஆனா, அவளுக்கு மட்டும் ஏன் இது புரியாமல் போச்சு?

ராகவ் மேல எத்தனைப் பிரியம் வச்சிருந்தேன். என்னோட பிசினஸில் அவனை ஒரு பங்குதாரனாக ஆக்கணும்னு நினைச்சேன். அவன் குடும்பத்தை என் குடும்பமா பார்த்தேன். ஆனால், இப்படி எனக்குத் துரோகம் செய்வானா? அவனைப் பத்தி எவ்வளவு பெருமைபட்டிருக்கேன்! அப்படிப்பட்ட என்னை, அவனைப் பார்த்துப் பொறாமைப்பட வச்சிட்டானே.

எல்லாத்திலேயும் ஜெயிச்சே பழக்கப்பட்டவன். ஆனால், எதில்

ஜெயிக்கணுமோ அதில் தோற்றுப் போயிட்டேன். எனக்கு, இது எத்தனை பெரிய வலின்னு தெரியுமா சீமா? தாங்கமுடியலை சீமா” என்று புலம்பியவனை கலங்கிய விழிகளுடன் பார்த்தாள்.

“விக்ரம் நீ எதுக்கு கவலைப்படற? வைஷாலி ஒருத்தி தான் பொண்ணா. உன்னோட காதலை அனுபவிக்க கொடுத்துவைக்காத அவதான் துரதிர்ஷ்டசாலி. நீ இல்லை. இங்கே பார், நடந்ததை மறந்திடு விக்ரம். வைஷாலின்னு ஒருத்தியை நீ சந்திக்கவே இல்லைன்னு நினைச்சிக்க” என்று அவனது முகத்தை தனது கைகளில் ஏந்தினாள்.

“ஹும்!” என்று விரக்தியாக புன்னகைத்தவன், “அப்படி நினைக்கணுமா ஒண்ணு எனக்கு நடந்ததெல்லாம் மறந்து போகணும், இல்லை நான் ஒரேடியாக மறைந்து போகணும்” என்றவனது வாயை தனது கரத்தால் மூடினாள்.

“என்ன பேசற நீ? அத்தை, மாமாவை நினைச்சி பார்த்தியா? உன்னையே வாழ்க்கையா நினைச்சிட்டு இருக்கவங்களை காலம்பூரா கஷ்டபடுத்த போறியா? இது உனக்கு மட்டும் வருத்தம் இல்லை. உனக்காக வைஷாலியை இன்னைக்கு பெண் கேட்டு கல்யாண ஏற்பாடு செய்யறதுக்கு இருந்தாங்க. ஆனால், எல்லாமே ஆரம்பிக்கும் முன்னாலேயே முடிஞ்சி போச்சு.

பிசினஸில் நீ பார்க்காத இக்கட்டான சூழலா? அதிலெல்லாம் நீ மீண்டு வரலையா. அதைவிடவா ஒரு பொண்ணு மேல நீ வச்ச காதல் உன்னை கோழையாக்கிடுச்சி. உனக்குத் தெரியாதது இல்லை. இருந்தாலும் சொல்றேன் இன்னைக்கு பெரிய பிரச்சனையாக தெரியறதெல்லாம் நாளைக்கு ஒண்ணுமே இல்லாமல் போயிடும்.

கிளம்பு நேரமாகுது. டாக்டர்கிட்ட போயிட்டு வீட்டுக்குப் போகலாம். அத்தை மாமாவை நினைவில் வச்சிக்க. மத்ததெல்லாம் பெரிசா தெரியாது. உனக்குன்னு ஒருத்தி இனி பிறக்கப் போறதில்லை. நிச்சயம் உன்னைத் தேடி வரத்தான் போறா" என்று ஏதேதோ பேசி அவனைச் சமாதானப்படுத்தினாள்.

அவன் கையிலிருந்த காயத்தைத் துடைத்து சுத்தப்படுத்தி, அறையை தூய்மைப்படுத்தச் சொல்லிவிட்டு, விக்ரமை அழைத்துக்கொண்டு கிளம்பினாள்.

தன்னுடைய வார்த்தைகளுக்கு மதிப்பு கொடுத்து அமைதியாக வருகிறானே தவிர, அவனது மனத்திற்குள் இருக்கும் போராட்டத்தை அவளும் உணர்ந்தே இருந்தாள். ஆனால், இந்த நிலை விரைவில் மாறிவிடும் என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டாள். ஆனால், அவளது சமாதானம் வீட்டிற்குள் நுழைந்த போது முற்றிலும் மாறிப் போனது.

தன் சோகத்தையெல்லாம் உள்ளுக்குள் புதைத்துக்கொண்டு, வீட்டில் நுழைந்த போது ஹாலில் அமர்ந்திருந்தவளை இமைக்காமல் பார்த்தான் விக்ரம்.

அத்தியாயம் - 24

பெரிய பூகம்பத்தை எதிர்பார்த்து வந்த வைஷாலிக்கு, அங்கு நிலவிய அமைதி பெரும் ஆச்சரியத்தையும், எச்சரிக்கையையும் அளித்தது. அலுவலகத்திற்குச் செல்லத் தயாராகாமல், நிதானமாக பேப்பர் படித்துக்கொண்டிருந்த தந்தையின் அருகில் வந்து அமர்ந்தாள்.

“குட் மார்னிங்ப்பா!” என்றாள் புன்னகையுடன்.

“குட் மார்னிங் கண்ணம்மா” என்றவர், ஸ்போர்ட்ஸ் பேஜை எடுத்து மகளிடம் கொடுத்தார்.

“என்னப்பா, இன்னைக்கு ஆ‌ஃபிஸ் கிளம்பாம இருக்கீங்க? லீவா?” பேப்பரை புரட்டியபடி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

“இன்னைக்கு லீவ் போடச் சொல்லி, நேத்தே உங்க அம்மாவோட ஆர்டர் வந்தாச்சு” என்றார் கிசுகிசுப்பாக.

“எதுக்குப்பா? லீவ் போட்டு, சண்டை போடவா” என்று சிரித்த மகளை வாஞ்சையுடன் பார்த்தார்.

“இந்த நிலையிலும் உனக்குச் சிரிப்பு வருது...” என்று சங்கரன் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, வைஷாலிக்கு கேட்காமலேயே, ருத்ரா மூலமாக கா‌ஃபி வந்து சேர்ந்தது.

தேங்க்யூ என்று கா‌ஃபியை வாங்கிக்கொண்டவள் தழைந்த குரலில், “அப்பா! பெரிய இடி வரப்போகுது. அதான் டி‌ஃபன் கா‌ஃபியெல்லாம் கொடுத்து நம்மை தயார் படுத்தறாங்க” என்று சிரித்தாலும், மகளது மனத்தில் இருக்கும் பயம், அவருக்குப் புரியத்தான் செய்தது.

ஆதரவுடன் மகளது முதுகை தட்டிக்கொடுத்தார் சங்கரன்.

காலை உணவை ருத்ராவிற்கு கொடுத்து அனுப்பிவிட்டு, தானே இருவருக்கும் பரிமாறினார் தேவிகா. மூவரும் அமைதியாக சாப்பிட்டு எழுந்தனர். கையை கழுவிக்கொண்டு மாடிக்குச் சென்ற வைஷாலியை

அழைத்தார்.

“வைஷூ! இங்கே வா. உங்க ரெண்டு பேருக்கும் ஒரு விஷயம் சொல்லணும்” என்றார்.
தந்தையை பார்த்தவள், அமைதியாக வந்து அமர்ந்தாள்.

“நான் மீனாட்சி வீட்டுக் கல்யாணத்தில் இருந்த போது, செந்தளிர் அண்ணி போன் செய்திருந்தாங்க. விக்ரமுக்கு நம்ம வைஷாலியை பொண்ணு கேட்க, இன்னைக்கு ஈவ்னிங் வரேன்னு சொல்லியிருக்காங்க. கையோட நிச்சயத்தட்டு மாத்திக்கிறா மாதிரியும் சொன்னாங்க. நானும் சரின்னு வரச் சொல்லிட்டேன். அதனால் தான் உங்களை ஆ◌ஃபிஸூக்கு லீவ் போடச் சொன்னேன்” என்று இருவருக்கும் பொதுவாக விஷயத்தைச் சொல்லிவிட்டு மகளைப் பார்த்தார்.

ராகவை பற்றி ஏதோ பேசப்போகிறார் என்று நினைத்ததற்கு மாறாக, எதிர்பாராத இந்தச் செய்தி தந்த அதிர்ச்சியில், வைஷாலிக்கு கண்ணீரே வந்துவிட்டது. கலங்கிய விழிகளுடன் தந்தையைப் பார்த்தாள். சங்கரனோ, கோபத்தின் உச்சியில் இருந்தார். மகளது கண்ணீர் அவரது இதயத்தை உலுக்கியது.

பேப்பரை மடித்து டீபாய் மீது போட்டபடி, “கல்யாணத்துக்கு நாள் குறிச்சிட்டியா? என்னைக்குக் கல்யாணம்?” என்ற கேள்வியில், கோபத்தில் எழுந்த நிதானம் தெரிந்தது.

“என்ன பேசறீங்க நீங்க? அதெப்படி...” என்று எரிச்சலுடன் ஆரம்பித்த மனைவியை இடைமறித்து, “வாயை மூடு. மனுஷியா நீ? உன்னோட இஷ்டத்துக்கு ஆடத்தான் நான் ஒருத்தன் இருக்கேனே. அப்புறம் எதுக்கு என் மகளை இந்தப் பாடுபடுத்தற? ச்சே! உன்னையெல்லாம்

என்ன செய்தால் தகும்?” என்று கோபத்தில் கத்தினார்.

“என்ன கேட்டீங்க? மனுஷியான்னா. பின்னே, நான் என்ன தெருவில் போகும் நாயா?” கோபத்தில் வார்த்தையில் நிதானத்தை இழந்தார் தேவிகா.

வைஷாலி, காதுகள் இரண்டையும் இறுக பொத்திக்கொண்டாள்.

“என் பொண்ணு வசதியா, கௌரவமா வாழணும்னு நினைக்கறது தப்பா?”

“நீ நினைச்சது தப்பில்லை. ஆனால், ஒரு நல்ல அம்மாவா நீ என்ன செய்திருக்கணும்? அவளோட விருப்பத்தை கேட்டிருக்கணும். உன்னோட வறட்டுப் பிடிவாதத்தால, அழகா இருக்கும் குடும்பத்தில் எல்லோர் மனசிலும் விரிசலை ஏற்படுத்தற.

உனக்கு விக்ரம் இந்த வீட்டு மாப்பிள்ளை ஆகணும்ங்கற ஆசையைவிட, ராகவ் இந்த வீட்டு மாப்பிள்ளை ஆகக்கூடாதுங்கற பிடிவாதம் தான் அதிகம் தெரியுது. எங்கே நாம போட்ட சவால்ல ராகவ் ஜெயிச்சிடுவானோங்கற பயம் உன் கண்ணில் தெரியுது. அதனால் தான் கொஞ்சம் கூட வைஷுவோட வாழ்க்கையை நினைக்காமல் இப்படி ராட்சஷி மாதிரி நடந்துக்கற.

இப்போ சொல்றேன் கேட்டுக்கோ. வைஷுவுக்கும், ராகவுக்கும் கல்யாணத்தை நடத்தத்தான் போறேன். என் மகளோட சந்தோஷம், எனக்கு முக்கியம். அதை மீறி நீ ஏதாவது குட்டை கலக்கி வேலை செய்யணும்னு நினைச்ச, அவ்வளவுதான்… இதுவரைக்கும் பார்க்காத சங்கரனை நீ பார்க்க வேண்டி இருக்கும். ஜாக்கிரதை!” என்று

தேவிகாவை நடுவில் பேசவிடாமல் சொல்லவந்தவற்றை சொல்லி முடித்தார்.

எதுவும் சொல்லமுடியாமல், திகைப்புடன் தங்களைப் பார்த்துக்கொண்டிருந்த மகளிடம், "வைஷூ! நீ மேஜர். உன்னை யாரும் எதுக்காகவும் கட்டுப்படுத்த முடியாது. உன்னை மீறி எதுவும் நடக்காது. தைரியமாக இரு. யார் வந்து எப்படித் தடுக்கறாங்கன்னு நான் பார்க்கிறேன்" என்று கன்னத்தை தட்டிக்கொடுத்துவிட்டு, அலுவலகத்துக்கு கிளம்பிச் சென்றார்.

கணவரின் ருத்ரதாண்டவத்தில் சற்று நிலைகுலைந்து போன தேவிகா கோபமும், ஆத்திரமுமாக மகளைப் பார்த்தார்.

இப்போ சந்தோஷமாடி உனக்கு? நிம்மதியா இருக்கியா? உன்னை பத்து மாசம் சுமந்து பெத்த எனக்கு உன் கல்யாணத்தை முடிவு செய்யும் உரிமை கூட இல்லையா? பாக்கறேன் இது எத்தனை தூரத்துக்குப் போகுதுன்னு. பொறுமையா எடுத்துச் சொன்னா புரிஞ்சிக்கிற ஜென்மம் இல்லை நீ. அப்படி கேட்கறவளா இருந்திருந்தா எப்பவோ அவனை தலை முழுகிட்டு வந்திருப்பியே... எல்லாம் என்னைச் சொல்லணும் உனக்கு சுதந்திரம் கொடுத்து வளர்த்தேன் இல்ல. அதான், இப்போ தீட்டின மரத்துலயே எல்லோரும் கூர் பார்க்கறீங்க.

என்னைக்கு அவன் மேல ஆசைப்படுறன்னு தெரிஞ்சிதோ அன்னைக்கே உன் காலை உடைச்சிருந்தா இன்னைக்கு இந்த நிலை வந்திருக்குமா? ஒரே பொண்ணு ஏகப்பட்ட சொத்து இருக்கு வளைச்சி போட்டா காலத்துக்கும் காலாட்டிகிட்டு சாப்பிடலாம்னு அந்தக் குடும்பமே அலையிது. அது புரியாம அப்பாவும், பொண்ணும் ஆடுங்க" என்ற அன்னையை பொறுமையிழந்து பார்த்தாள்.

அம்மா! உங்களுக்குப் பிடிக்காதுங்கற ஒரு காரணத்துக்காக அவங்க மேல வீணா பழி போடாதீங்க. ராகவ் ஒண்ணும் என்னைச் சுத்திச் சுத்தி வந்து காதலிக்கல. நானாதான் முதல்ல ராகவிடம் என் காதலை சொன்னேன். இதெல்லாம் சரிவராதுன்னு அவர் ஒதுங்கித்தான் போனார். நான்தான்…” என்று மேற்கொண்டு சொல்ல வந்த வைஷாலியின் கன்னத்தில் இடியென இறங்கியது தேவிகாவின் கரம்.

“அசிங்கமா இல்லடி உனக்கு… உன்னை இப்படியா வளர்த்தேன் நான்?” என்ற அன்னையை முறைத்துப் பார்த்தாள்.

”நீதாம்மா வளர்த்த. பெத்த பொண்ணு மேல நம்பிக்கை இல்லாமல் அவன்கூட பழகாதென்னு சொல்லி சொல்லி வளர்த்த. நான் ராகவை காதலிக்க காரணமே நீதான். ஒண்ணும் தெரியாத வயசுல என்னை எச்சரிக்கை செய்யறேன்னு தினமும் ராகவைப் பத்தி என்னிடம் பேசிப் பேசி அவரை திரும்பிப் பார்க்க வச்சது நீதான்.

உனக்கு சந்தேகம். காலேஜில் ஸ்பெஷல் கிளாஸ்ன்னு சொன்னா நம்பமாட்ட. ஜோதி வீட்டுக்குப் போனியா? ராகவ் இருந்தானான்னு என்னிடமே துருவித் துருவிக் கேள்வி கேட்ப. நான் யூ.ஜி ரெண்டாம் வருஷம் கடைசி எக்சாம் எழுதிட்டு வந்தப்போ ஏதோ பிரச்சனையால் பஸ் ஓடலை. திடீர்ன்னு எதிர்பாராமல் மழை வேற, யதேச்சையா ராகவ் என்னை வழியில் பார்த்துட்டு வீட்டில் கொண்டுவந்து விட்டதை நீயும், உன் ஃப்ரெண்ட் மம்தா ஆன்ட்டியும் சேர்ந்து பேசி எப்படி ஊதிப் பெரிசாக்கினீங்க.

பையன் நல்லா இருக்கான். உன் பொண்ணும் அழகா இருக்கா… பஞ்சையும் நெருப்பையும் பக்கத்துப் பக்கத்தில் வைக்காதேன்னு

அவங்க சொன்ன போது, நீ என்ன சொல்லியிருக்கணும்? என் பொண்ணு நல்லது கெட்டது தெரிஞ்சவ. அப்படியெல்லாம் எதுவும் நடக்காதுன்னு சொல்லியிருக்கணுமில்ல. ஆனா, நீ என்ன சொன்ன? எனக்கு அதான் பயமா இருக்கு மம்தான்னு சொன்ன இல்ல.

அன்னைக்குத் தான் ராகவை நான் கவனிக்க ஆரம்பிச்சேன். அதுவரைக்கும் சரி அதுக்குப் பிறகும் கூட ராகவ் என்னிடம் நின்னு அநாவசியமா ஒரு வார்த்தை பேசியது கிடையாது தெரியுமா? அப்பா ராகவைப் பத்தி சில விஷயங்கள் சொல்லும் போதும், சின்ன வயசிலிருந்து ஒண்ணா வளர்ந்த ஒரு ஃப்ரெண்ட் மாதிரிதான் அவரை நினைச்சிட்டு இருந்தேன். என்னைக்கு என் மேல் நம்பிக்கை இல்லாமல் பேசினீங்களோ, அன்னைக்கே உங்க வார்த்தையை மீறினால் என்னன்னு தான் தோணுச்சு.

இது தப்பு, எனக்கும் ஒரு தங்கை இருக்கா. அவளுக்கு நான் தான் முன்னோடி. என்னைப் பார்த்து வளரும் அவளோட பாதை தடம் மாற நான் வழிகாட்டியா இருக்கமாட்டேன்னு என்னை மறுத்தவரை முதன்முதலா அளவுக்கதிகமா பிடிக்க ஆரம்பிச்சது.

இப்படித்தான் நான் ராகவை காதலிக்க ஆரம்பிச்சேன். ராகவை நான் காதலிக்கிறேன்னு தெரிஞ்சி அவரை என்னிடமிருந்து ஒதுங்கியிருக்கச் சொல்லி நீங்க மிரட்டினதும் எனக்குத் தெரியும். அவர் ஒரேயடியா ஒதுங்கிட்டாருன்னு நீங்க நினைச்சிட்டீங்க. ஆனா, அவரோட தகுதியை வளர்த்துக்காமல் என்னிடம் தன்னோட காதலை சொல்லமாட்டேன்னு தள்ளி நின்னார்.

கடைசி வரைக்கும் நீ அவரை மிரட்டியதை என்னிடம் சொல்லவே இல்லை தெரியுமா? இன்னைக்கு தன் உழைப்பால தங்கைக்கு

கல்யாணம் செய்து வச்சிருக்கார். அவங்க வீட்டை பெரிதா கட்டியிருக்கார். தங்கைக்கு அம்மா இல்லாத குறை தெரியாமல் எல்லாத்தையும் பார்த்துக்கறார். ஒரு நல்ல அண்ணணா, நல்ல மகனா இருக்கும் ராகவை கல்யாணம் செய்துக்க நான்தான் கொடுத்து வச்சிருக்கணும்.

ராகவுக்கும், எனக்கும் கல்யாணம் நடக்காமல் போக இந்தச் சொத்துதான் காரணம்னா, இந்தச் சொத்தில் ஒரு பைசாகூட எனக்கு வேண்டாம். கட்டின புடவையோடு போனால்கூட, என்னை ஏத்துக்க ஒரு நொடிகூட யோசிக்க மாட்டார். இந்தக் கல்யாணம் எல்லாரோட ஆசிவாதத்தோடு நடக்கத்தான் போகுது" என்று ஆவேசத்துடன் பேசி முடித்தவள், தன் அறைக்குச் சென்று கைப்பையை எடுத்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள்.

அவளைத் தடுக்கத் தோன்றாமல், திகைப்புடன் நின்றிருந்த தேவிகா, கால்கள் தள்ளாட திவானில் அமர்ந்தார். மகள் விக்ரம் வீட்டிற்குத் தான் செல்கிறாள் என்று தெரிந்தும், மனத்தை துக்கம் அழுத்த இமைகள் ஈரமாக அமர்ந்திருந்தார்.

அத்தியாயம் - 25

"இதோ, விக்ரமே வந்தாச்சே!" என்ற செந்தளிரின் குரலில், நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் வைஷாலி.

உணர்ச்சிகளைத் துடைத்த அவனது முகத்தைக் கண்டதும், தயக்கத்துடன் புன்னகைத்தபடி எழுந்தவள், "எப்படி இருக்கீங்க?" என்றாள்.

கண்கள் இடுங்க, கேள்வியுடன் அவளை அளவிட்ட விக்ரம், 'ம்' என்பது போல மெல்லத் தலையை அசைத்தான். மேற்கொண்டு அவன் ஏதும் பேசாத போதும், ஊடுறுவது போன்ற பார்வையை, தாள முடியாமல் மௌனமாக நின்றாள் வைஷாலி.

அவனது பார்வைக்கான அர்த்தம் புரியாமல், பேச வந்த விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது என்றும் தெரியாமல், தவிப்புடன் செந்தளிரைப் பார்த்தாள்.

அவளது தவிப்பையும், தனது ஏமாற்றத்தை மௌனம் எனும் திரைக்குப் பின்னால் மறைத்தபடி நின்றிருப்பவனின் ஆத்திரத்தையும் உணர்ந்திருந்த சீமா, விக்ரமின் கரத்தை ஜாடையாக இடித்தாள்.

“விக்ரம்! வைஷூ உன்னிடம் ஏதோ அவசரமா பேசணுமாம். கூட்டிட்டுப் போய்ப் பேசு” என்று புன்னகைத்த அன்னையின், இந்த இரகசிய சிரிப்பிற்கான காரணத்தை யூகித்தவனுக்கு, இதயம் வலித்தது.

விழிகளை மட்டும் வைஷாலியின் பக்கமாக செலுத்தியவன், எதுவும் சொல்லாமல், வலது கரத்தை பாண்ட் பாக்கெட்டில் விட்டபடி வேக நடையுடன் மாடிக்குச் சென்றான்.

மகனது போக்கு, பெற்றோருக்கு வேறுபாட்டை உணர்த்த, சீமாவை பார்த்தனர். சுதாரித்த சீமா, “வா வைஷூ!” என்று அவளை, அவனது அறைக்கு அழைத்துச் சென்றாள்.

”நீங்க பேசிட்டு இருங்க; நான் இதோ வந்திடுறேன்” என்றவள், விக்ரமின் கரத்தை அழுத்திக் கொடுத்துவிட்டுத் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றாள்.

ஆங்கில எடுத்து ‘டி’ வடிவில் அமைந்திருந்த அந்த அறை முன் பகுதி ஹாலாகவும், பின் பகுதி படுக்கை அறையாகவும், கண்ணாடிக் கதவுகளால் இரண்டாக பிரிக்கப்பட்டிருந்தது. அறையை ஒட்டி விசாலமான பால்கனி கடற்கரையைப் பார்த்த வண்ணம் இருந்தது.

ஏசி குளுமையில் அறையின் நிசப்தமும், விக்ரமின் இயல்பிற்கு மாறான நடவடிக்கைகளாலும் குழம்பிப் போயிருந்த வைஷாலிக்கு, பேச்சை எப்படி எப்படி ஆரம்பிப்பது என்று புரியவில்லை.

நீண்ட பெருமூச்சு எடுத்துக்கொண்டவன் திரும்பி, “உட்கார்” என்று சோஃபாவைக் காட்டினான்.

“தேங்க்ஸ்” என்றவள், அறையைச் சுற்றி நோட்டமிட்டபடி. “ரூமோட இண்டீரியர் ரொம்ப அழகா இருக்கு” சூழ்நிலையை இயல்பாக்கும் நோக்கத்துடன் சொன்னாள்.

“இதைச் சொல்லவா இத்தனைத் தூரம் வந்த?” என்ற அவனது கிண்டலான பேச்சில், அவளது இதழ்களில் படந்திருந்த இளநகையை மறையச் செய்தது.

“இல்ல… ஆனால், எப்படி ஆரம்பிப்பதுன்னு தெரியலை” என்றாள்.

“பேசணும்னு தானே இத்தனைத் தூரம் வந்திருக்க, பேசு” என்றான்.

சிறிதும் ஸ்நேகபாவம் இல்லாத அவனிடம் பேசுவதே கடினமாக இருந்தது. அவள் இப்படி ஒரு சூழ்நிலையை எதிர்பார்த்து வரவில்லை. பட்டுத்தெறித்தாற் போன்ற அவனது பேச்சில் சற்று எரிச்சலானாள்.

“நம்ம ரெண்டு வீட்டிலும் நடக்கும் பேச்சுவார்த்தைப் பற்றித் தெரியுமா?”
“எதைப் பற்றி?” அலட்டிக்கொள்ளாமல் கேட்டான்.

“க… கல்யாண விஷயம்…”

“யாருக்குக் கல்யாணம்?”

அவனது விட்டேற்றியான பேச்சில் ஆத்திரமாக வந்தது அவளுக்கு. ஆனால், ‘கோபமும், ஆத்திரமும் எதிராளியின் பலத்தை அதிகரிக்கச் செய்து, தன்னைப் பலவீனமாக்கிவிடும்’ என்று உணர்ந்தவளாக சற்று மௌனம் காத்தாள்.

“உங்களுக்கும், எனக்கும்…” என்று இழுத்தாள்.

“ம், தெரியும். கொஞ்ச நேரத்துக்கு முன்னாலதான் சீமா சொன்னா” என்றான்.

“அதைப் பத்தி உங்க முடிவு என்ன?” தவிப்புடன் கேட்டாள்.

“இது வரைக்கும் எங்க அப்பா, அம்மா எனக்குப் பொறுத்தமானதைத் தான் தேர்வு செய்வாங்கன்னு நான் நம்பறேன்” என்றான் அழுத்தமாக.

அவளுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. உதட்டை அழுந்த கடித்தபடி, விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள். அவனது கண்களில் தெரிந்த ஏதோ ஒன்று அவளுக்குப் பயத்தைக் கொடுத்தது. மேற்கொண்டு பேச வார்த்தைகள் வராமல் தவித்தாள்.

“இதைப் பத்தித்தான் பேசணும்னு வந்தியா?” என்று கேட்க, “இல்லை. இந்தக் கல்யாணத்தில் எனக்கு விருப்பமில்லைன்னு நீங்க சொல்லணும்” என்று வேகமாக சொல்லிவிட்டாள்.

கையில் பேப்பர் வெயிட்டை வைத்து உருட்டிக்கொண்டிருந்தவன், அதை நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தான். அவனது பார்வையின் உஷ்ணத்தில் வைஷாலிக்கு மூச்சுத் திணறுவது போலிருந்தது.

சட்டென எழுந்தவன், அவள் அமர்ந்திருந்த சோஃபாவின் கைப்பிடியில் இருபக்கமும் கைகளை ஊன்றி நின்றபடி, “என்னை என்னன்னு நினைச்சிட்டு இருக்க? மனசுக்குப் பிடிச்ச பொண்ணை, வேணாம்னு சொல்ல எனக்கு என்ன பைத்தியமா?” என்று வெறி பிடித்தவன் போலக் கத்தினான்.

பயத்தில் வைஷாலிக்கு கைகால்களெல்லாம் நடுங்கியது. மிரண்ட விழிகளால் அவனைப் பார்த்தாள். கண்கள் கரையுடைக்கவா என்று அனுமதி கேட்டு நின்றது.

அவளது விழிகளில் திரண்ட நீர்ப்படலத்தில், அவனது கோபமெல்லா காற்றில் கரைந்த கற்பூரமாக கரைந்து போனது. மிரண்ட அந்த விழிகளில் தெரிந்த ஏமாற்றத்தை அவனால் தாங்க முடியவில்லை. தொடர்ந்து தனது கோபத்தை அவள் மீது வலுக்கட்டாயமாக காட்டமுடியவில்லை.

அவள் விழிகளை ஊன்றிப் பார்த்தவன், “என்ன பயந்துட்டியா?” என்றபடி நிமிர்ந்து நின்றவன், அழகாக புன்னகைத்தான்.

நடப்பதெல்லாம் உண்மையா என்று புரியாமல் மலங்க மலங்க

விழித்தாள் வைஷாலி.

"ஹே, வைஷாலி! போதும் போதும் நினைவுலகுக்கு வா" என்றபடி அவளெதிரில் அமர்ந்தான். "சரி சரி சொல்லு, டாமும், ஜெர்ரியுமாக இருந்த ரெண்டு பேரும் எப்படிச் சமாதானம் ஆனீங்க? சொல்லு சொல்லு" என்றதும், வைஷாலி அதிர்ச்சியில் எழுந்தேவிட்டாள்.

"ஹே உட்கார்ந்தே சொல்லு..." என்றான் கிண்டலுடன்.

"விக்ரம்! உங்களுக்கு..." வார்த்தைகள் நர்த்தனம் ஆடின.

"நேத்து ஈவ்னிங் இதே ரெண்டு கண்ணாலேயும் பார்த்தேன். நம்பலையா" என்று யோசிப்பது போலச் செய்தவன், "ராகவ் உன் விரலைப் பிடித்து ஏதோ சொல்ல, நீ ராகவோட தோளில் சாய்ந்து தலையாட்டிச் சிரிக்க..." என்று சொல்ல வைஷாலியின் முகம் வெட்கத்தில் சிவந்தது.

"ப்ளீஸ் விக்ரம்..." என்று அழகாக நாணத்தில் மிளிர்ந்த அவளது முகத்தைப் பார்த்தவனுக்கு இதயம் கனத்து வலித்தது. ஆனால், அவளது முகத்தில் மலர்ந்திருக்கும் புன்னகைக்காக எதையும் செய்யலாம் என்று எண்ணிக்கொண்ட மறு நொடி, அவளைக் கேலியில் திக்குமுக்காட வைத்தான்.

அறைக்குள் வந்த சீமா, விக்ரமின் பேச்சையும், சீண்டலையும் பார்த்து மனத்திற்குள் எழுந்த கசப்பை புன்னகை என்னும் சர்க்கரையை தடவி விழுங்கிவிட்டாள்.

சீமாவைக் கண்டதும் வைஷாலியின் நாணம் மேலும் அதிகரிக்க,

முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு அமர்ந்துவிட்டாள்.

தன்னைப் பார்த்துக் கலங்கிய சீமாவை, பார்வையாலேயே அடக்கினான். வேகமாக கண்களைத் துடைத்துக்கொண்டு, தொண்டையை செறுமிக் கொண்டவள், “கள்ளி! நேத்து எத்தனைத் தூரம் துறுவித் துறுவிக் கேட்டேன். ஒரு வார்த்தை சொன்னியா?” என்றாள்.

“ஹய்யோ அக்கா! நீங்களுமா?” என்று குழைந்தாள் வைஷாலி.

“இன்னைக்கு உன் விஷயத்தையெல்லாம் என்னிடம் சொல்லாமல் இங்கிருந்து உன்னை அனுப்புவதாக இல்லை. எத்தனை நாளா என்னிடம் மறைச்சிருக்க?” என்று கேட்டாள்.
‘ரெண்டு’ என்று விரல்களை மட்டும் உயர்த்திக் காட்டினாள்.

“ரெண்டு மாசம்…” “ரெண்டு வாரம்” “ரெண்டு நாள்…” என்று அவள் ஒவ்வொன்றாக கேட்க, இல்லை என்று தலையாட்டியவள் வாயைத் திறந்தாளில்லை.

“அப்போ என்னடி ரெண்டு மணி நேரமா?”

“இல்லை” என்று வெட்கத்துடன் தலையசைத்தாள்.

“எனக்கு ஒண்ணுமே புரியலையே. இப்பவே கண்ணைக் கட்டுதே” என்றவள், “வாயைத் திறந்து சொல்லேன்” என்று சலிப்புடன் சொன்னாள்.

“ரெண்டு வருஷம்” என்றாள்.

விக்ரமும், சீமாவும் திகைப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

“ஏய்! ஒழுங்கா எங்களுக்கு விளங்கறா மாதிரி சொல்லு” என்றாள் சீமா.

“எங்க ரெண்டு ஃபேமலியும் எதிரெதிர் வீடு. சின்ன வயதிலிருந்து நாங்க ஒண்ணாதான் வளர்ந்தோம். ராகவோட தங்கை ஜோதியும், நானும் ஃப்ரெண்ட்ஸ். ஆனால், அம்மாவுக்கு அவங்க குடும்பத்தை ஏனோ ஆரம்பத்திலிருந்தே பிடிக்காது” என்று தொடங்கியவள், ராகவை காதலிக்க ஆரம்பித்தது, அவனது மறுப்பு, விஷயம் தெரிந்த அன்னையின் மிரட்டல், தந்தையின் இடமாற்றம், ஹாஸ்டல் வாழ்க்கை என்று அனைத்தையும் சொல்லி முடித்தாள்.

“அப்போ ராகவை பார்க்கத்தான் ஆஃபிஸுக்கு வந்தியா?” என்று கேட்டான் விக்ரம்.

“அதுவும் ஒரு காரணம். ஹாஸ்ட்டல் விஷயம் பற்றி அவரிடம் சொல்லி உங்ககிட்ட பேசச் சொல்லிக் கேட்டேன். அவர் விக்ரம் சார் காலேஜ் விஷயத்தில் தலையிடுவது இல்லை; நீ மேனேஜ்மென்ட்டில் சொல்லி நடவடிக்கை எடுக்கச் சொல்லுன்னு சொல்லிட்டார். அதனால் தான் நான் நேரடியாக உங்களைப் பார்க்க வந்தது. அன்னைக்கு நீங்க ரிசார்ட்டுக்கு அழைச்சி பார்ட்டி வச்சப்போ ஃப்ரெண்டுக்கு பிறந்தநாள்ன்னு கிளம்பிப் போனேன் இல்ல, ஆக்சுவலி அன்னைக்கு ராகவோட பிறந்த நாள்” என்றாள்.

“ஓ! ஆனா, ஜோதி கல்யாணத்தப்போ உன்னை நான் பார்க்கலையே?” என்று தன் சந்தேகத்தைக் கேட்டான்.

“ஜோதியோட கல்யாணம் அவசரஅவசரமாக நடந்தது இல்லையா? அப்போ நாங்க குடும்பத்தோடு ஃபாரின் டூர் போயிருந்தோம். அதனால் விஷயம் எனக்கு இங்கே வந்த பின் தான் தெரியும்.

அவள் பெரிய பணக்காரனை காதலிக்கிறான்னு நீங்க பார்த்து, ராகவிடம் சொன்னீங்க. அவர் அவளைக் கூப்பிட்டு கண்டிச்சார். ரெண்டு பேரும் கோயில்ல கல்யாணம் செய்துகிட்டு யாருக்கும் தெரியாமல் இருந்தபோது, அவங்களைக் கண்டுபிடிச்சி வீட்டோடு கொண்டு வந்து சேர்த்தது நீங்க. ரெண்டு குடும்பத்தையும் பேசி ஒருவழியா நீங்களும், மாமாவும் தான் சேர்த்து வச்சீங்க. அதுவும் தெரியும். அதனாலேயே அவளுக்கு உங்களைப் பார்த்தால் பிடிக்காமல் போச்சு.

இன்னைக்கு அவ தன் கணவனோட சேர்ந்து இருக்க காரணம் நீங்கதான்னும் ராகவ் சொல்லியிருக்கார். ஆனால், வாழ்க்கையில் அந்தஸ்து பேதம் பார்க்கும் வரைக்கும் இந்தப் பிரச்சனை ஓயப்போறதில்லை. ராகவும் அடுத்த வெடிகுண்டு எப்போ வருமோன்னு எதிர்பார்த்துட்டுத் தான் இருக்கார்” என்றாள்.

“ஆனால், ஏன் ரெண்டு பேரையும் ஒருத்தரை ஒருத்தர் தெரியும்னு காட்டிக்கவேயில்லை” என்று எரிச்சலை உள்ளடக்கிக்கொண்டு கேட்டான்.

”அதுக்குக் காரணம் ராகவ். அவர்தான் எங்க அம்மா சொன்னாங்கன்னு என்னிடமிருந்து விலகிவிலகிப் போனாரே. அதனால் நானும் வீம்பாக தெரியாதது போலவே இருந்துட்டேன். ஒரு கட்டத்துக்கு மேல இதை எப்படிச் சொல்வது தெரியும் போது தெரியட்டும்னு விட்டுட்டேன்” என்றாள்.

“நீ பக்காவா பிளான் போட்டுத் தான் செய்திருக்க. நான் தான் இதில் இளிச்சவாயனா இருந்திருக்கேன்” என்றவனது குரலில் அவனையும் மீறி கோபம் தென்பட்டது.

நிமிர்ந்து பார்த்தவள், “சாரி” என்றாள்.

“ம், பரவாயில்லை. அடுத்து என்ன? அத்தையை கன்வின்ஸ் பண்ணணும் அதானே?”

“ஆமாம்.”

“சரி, விஷயத்தை என்னிடம் சொல்லிட்ட இல்ல, கவலையை விடு நான் அம்மா மூலமா பேசறேன்” என்று அவளுக்கு உறுதியளித்தான்.

“ரொம்ப தேங்க்ஸ் விக்ரம்!” என்றாள் நெகிழ்ச்சியுடன்.

மூவரும் இயல்பாக பேசியபடி கீழே வர, சீமாவின் மூலமாக விஷயமறிந்த பெரியவர்கள் இருவரும் கனத்த இதயத்துடன் மகனைப் பார்த்தனர். வைஷாலி சந்தோஷத்துடன் கிளம்பிச் செல்ல, விக்ரம் வேக நடையுடன் அறையை நோக்கி நடந்தான்.

“விக்ரம்!” என்றழைத்த அன்னையின் குரலுக்குச் செவிசாய்த்து அவரருகில் சென்று முழங்காலிட்டு அமர்ந்தான்.

கட்டு போடப்பட்டிருந்த அவனது வலது கரத்தை திருப்பிப் பார்த்தார். கோபமாக அவன் சோ.ஃபாவின் கைகளை ஊன்றியதால் வெளியேறிய இரத்தம் ஆங்காங்கே திட்டுத் திட்டாக நனைத்திருந்தது.

இரு கரத்தாலும் அவனது கையைப் பிடித்துக்கொண்டு, “அம்மாவை மன்னிச்சிடு கண்ணா” என்று கண்கலங்கினார்.

“அம்மா! நீங்க என்ன செய்யமுடியும்? நடக்கறது தான் நடக்கும்.”

“நீ விரும்பியதை என்னால கொடுக்க முடியலையே?”

“ஆனால், அவளோட விருப்பம் வேற இடத்தில் இல்ல இருக்கு. விடுங்கம்மா… கொஞ்ச நாளைக்குக் கஷ்டமா இருக்கும். அப்புறம்… அது பழகிடும். நான் ஏற்கெனவே நொந்து போயிருக்கேன்ம்மா. நீங்க அழுது என்னைக் கோழையாக்கிடாதீங்க” என்றவனது கண்கள் கலங்கியது.

மகனது வார்த்தைகள், செந்தளிரை வேதனையில் தோய்த்தெடுத்தது. நடுங்கும் விரல்களால் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

”விக்ரம்! உன்னோட கவலையை மறைச்சிகிட்டு அவளுக்காக பேசினியே, உன்னை நினைச்சு பெருமையா இருக்கு” என்றாள் சீமா.

“அது என்னோட சுயநலம் சீமா. எனக்கும் கோபம், ஆத்திரம், ஏமாற்றம் எல்லாமே வந்தது. ஆனால், அவளோட கண்ணீரைப் பார்க்கும் சக்தி எனக்கு இல்லை. அவளோட சந்தோஷத்துக்குத் தடையா என் காதல் இருக்குமானால், அப்படிப்பட்ட அந்தக் காதலைத் தூக்கிப் போட நான் தயாராக இருக்கேன்” என்றவன் விடுவிடுவென தனது அறையை நோக்கி நடந்தான்.

அத்தியாயம் - 26

“ஒரே பொண்ணுன்னு எத்தனைப் பிரியமா வளர்த்தேன்? ஆனால், இப்படி என் நினைப்பில் மண்ணை அள்ளிப் போடுவாளா? நான் என்ன அண்ணி செய்வேன்?” தேவிகா, தனது மனக்குமுறலை, செந்தளிரின் தோளில் சாய்ந்து கொட்டித் தீர்த்தார்.

“தேவி! எது நடக்கணும்னு இருக்கோ அதான் நடக்கும். அவ விரும்பற வாழ்க்கையை அமைச்சிக் கொடுத்தால் தான், அவள் சந்தோஷமா இருப்பா. நம்ம குழந்தைகளுக்காகத் தானே நாம வாழறோம். அவங்களோட விருப்பு வெறுப்பை நாமதான் புரிந்து நடந்துக்கணும்.”

“அவளுக்கு என்ன அண்ணி தெரியும்? இருபத்திரெண்டு வயசாகுதே தவிர, இன்னும் எல்லோரையும் அப்படியே நம்புவா. சூதுவாது தெரியாது.”

சிரித்த செந்தளிர், “ஐம்பது வயசானாலும் நம்ம அப்பா, அம்மாவுக்கு நாம குழந்தைங்க தான். என்னைப் பத்திக் கேட்டாலும் எங்க அப்பா, அம்மாவும் இதையே தான் சொல்வாங்க. ஆனால், அந்தந்த வயசுக்குரிய பக்குவமும், வளர்ச்சியும் அவங்ககிட்ட இல்லாமலா போயிடும்? அப்படியே தெரியாதுன்னு பொத்திப் பொத்தி வச்சிக்க முடியுமா? போய்ப் பட்டு அனுபவிச்சி தெரிஞ்சிக்கட்டும். சொல்லித் தெரியறதை விட, பட்டுத் தெளியறது தான் நல்லது.”

இருவரின் பேச்சையும், வைஷாலியின் அறையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த சீமா, “இந்த அத்தை உனக்கு சப்போர்ட் பண்றாங்களா; இல்லை சித்திக்கு சப்போர்ட் பண்றாங்களான்னு புரியலை. இந்த விக்ரம் பிடிச்சி வச்சவன் மாதிரி மாத்தி மாத்தி இவங்களை வேடிக்கை பார்த்துட்டு உட்கார்ந்திருக்கான்” என்று வைஷாலியிடம் முணுமுணுத்தாள்.

“அதுக்காக, நம்ம தகுதிக்குக் கொஞ்சம் கூடப் பொருந்தாத ஒருத்தனுக்கு, என் பொண்ணை கல்யாணம் செய்து கொடுக்கச் சொல்றீங்களா?” கோபத்துடன் கேட்டார் தேவிகா.

அதுவரை அமைதியாக அமர்ந்திருந்த விக்ரம், “அத்தை! தகுதின்னு எதைச் சொல்றீங்க? பணமா? அந்தஸ்தா? எந்த மனுஷன் கட்டின மனைவியோட உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து; காலம் பூரா அவளைச் சந்தோஷமா வச்சி குடும்பம் நடத்தறானோ அவன் தான் உலகத்திலேயே மனுஷன்னு சொல்லிக்க தகுதியானவன். என்னைப் பொறுத்தவரை ராகவுக்கு அந்தத் தகுதி அளவுக்கு அதிகமாகவே இருக்கு. கல்யாணத்துக்குச் சம்மதம் சொல்லுங்க. மத்ததெல்லாம் நான் பார்த்துக்கறேன்” என்றான்.

தேவிகா எதுவும் சொல்லாமல் அமைதியாக அமர்ந்திருக்க, அறையிலிருந்து அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்த சீமா, கதவை மூடிவிட்டுக் கட்டிலில் வைஷாலியின் அருகில் சென்று அமர்ந்தாள்.

“ஹீரோ களத்தில் இறங்கிட்டான்; இனி உன் மேட்டரெல்லாம் ஈஸியா கிளியராகிடும்” என்றவளைப் பார்த்து மெல்ல புன்னகைத்தாள்.

“விக்ரம்! நீ வைஷாலியை கல்யாணம் செய்ய விரும்பலைன்னு சொல்லு; இந்தக் கல்யாணத்துக்கு நான் சம்மதிக்கிறேன்” தேவிகா கேட்டதும், விக்ரம் சில நொடிகள் கண்களை மூடி அமைதியாக அமர்ந்திருந்தான்.

அவனது துக்கத்தைத் தனக்குள் மூழ்கடித்துக் கொள்கிறான் என்று, அன்னையர் இருவருக்கும் நன்றாகவே புரிந்தது. செந்தளிர் தன்னைக்

கட்டுப்படுத்திக் கொள்ள, தேவிகா முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

மெல்லக் கண்களைத் திறந்தவன், “வைஷாலியை நான் விரும்பியது நிஜம். ஆனால், இந்த நிமிஷம் நிச்சயமா எனக்கு அந்த எண்ணம் இல்லை. எப்போ அவளோட மனசுல இன்னொருவன் இருக்கான்னு தெரிஞ்சிதோ, அப்பவே வைஷாலியை நினைக்கிற தகுதியை நான் இழந்துட்டேன். இனி அவளை அந்த நினைப்போடு பார்க்கமாட்டேனே தவிர, அவள் எனக்குள்ளே கொடுத்துட்டுப் போன நினைவுகளை மறக்கமாட்டேன் அத்தை. ப்ளீஸ்! எனக்காக சரின்னு சொல்லுங்க…” என்று கையேந்தி கேட்டவனது கைகளைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டார் தேவிகா.

“விக்ரம்! நீ இந்த வீட்டுக்கு மாப்பிள்ளையா வர நாங்க கொடுத்து வைக்கலை. என்னை மன்னிச்சிடுப்பா” என்று ஒரு மூச்சு அழுது தீர்த்தார். “சரி, இந்தக் கல்யாணத்துக்கு நான் சம்மதிக்கிறேன். ஆனால், முழுமனதோடு சம்மதிக்கலை. அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யாணம். எந்த ஆடம்பரமும் இல்லாமல் எளிமையாதான் நடக்கும். இதுக்குச் சம்மதம்னா மட்டும் அவங்க வீட்டிலிருந்து வந்து பேசட்டும்” என்று அழுத்தம் திருத்தமாக சொன்னார்.

“தேங்க்ஸ் அத்தை! என் வார்த்தைக்கு மதிப்பு கொடுத்து சம்மதிச்சதுக்கு ரொம்ப தேங்க்ஸ்” என்றவன், வைஷாலியின் அறையை நோக்கி நடந்தான்.

அலுவலகத்திலிருந்து வந்த சங்கரன் விஷயத்தைக் கேள்விப்பட்டு எதுவும் சொல்லாமல் அமைதியாக மனைவியைப் பார்த்தவர், மகளைப் பார்த்து சிறு புன்னகை மட்டும் சிந்தினார்.

அடுத்த மூன்றே நாட்களில், திருமணத்திற்கு நாள் குறித்து மூகூர்த்தப் பத்திரிகையும் வந்துவிட்டது. திருமணம் ஜோதியின் வளைகாப்பிற்கு மூன்று நாட்கள் முன்னதாகவே முடிவாகியிருந்தது.

தேவிகா எல்லாவற்றிலும் கலந்து கொண்டாலும், எதிலும் ஈடுபாடு இல்லாமலேயே இருந்தார். எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாவிட்டாலும், வைஷாலி தனிமையில் அழுது கரைந்தாள். சங்கரன் தான் மகளுக்குச் சற்று ஆறுதலாக இருந்தார்.

****

கூடியிருந்த உறவினர்களை வேனில் கோயிலுக்கு அனுப்பிவிட்டு, உள்ளே வந்த சங்கரன், ஹாலில் ஒருபக்கமாக அமர்ந்திருந்த மனைவியைப் பார்த்தார்.

“தேவிகா! முகத்தை ஏன் இப்படி முழ நீளத்துக்கு தூக்கி வச்சிட்டிருக்க? நம்ம ஒரே பொண்ணுக்கு இன்னைக்கு கல்யாணம். இப்படியிருந்தா எப்படி? கொஞ்சம் சிரிச்சாப்பல இரு” என்றார் எரிச்சலுடன்.

“என்னத்த சிரிக்கறது? ஊரே என்னைப் பார்த்து சிரிக்கிறா மாதிரி இருக்கு. விக்ரம் தான் இந்த வீட்டு மாப்பிள்ளைன்னு எத்தனைப் பெருமையும், சந்தோஷமுமாக இருந்தேன். இந்தப் பாவிப் பொண்ணு எல்லாத்திலேயும் மண்ணையள்ளி போட்டுட்டாளே! அந்த மம்தாவும், மத்தவங்களும் கேட்கற கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியலை. ஏதாவது நடந்து இந்தக் கல்யாணம் நின்னு போயிட்டாகூட நல்லாயிருக்கும்” ஆற்றாமையுடன் புலம்பியவரின் வாயிலிருந்து, அவரே எதிர்பாராமல் வார்த்தைகள் வந்து விழ, சங்கரன் ஆடிப் போனார்.

“தேவிகா! அறிவு கெட்டத்தனமா பேசாதே. இத்தனை நேரம் ஏதோ ஆதங்கத்தில் பேசறேன்னு சும்மா இருந்தேன். இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசின அவ்வளவுதான். வாயை மூடிட்டு போய்க் காரில் ஏறு” என்று உத்தரவிட்டார்.

பேசிய பின்பே, தனது வார்த்தைகளின் வீரியத்தை உணர்ந்த தேவிகாவே சற்று கலவரமாகிவிட்டார். ‘கடவுளே! என்ன இது? எனக்கு ஏன் இப்படியெல்லாம் தோணுது?’ என்று தன்னையே நிந்தித்துக் கொண்டவரை, கணவரது அதட்டல் வாயைத் திறக்கவிடாமல் செய்தது.

தேவிகா காரில் சென்று அமர, உள்ளே திரும்பிய சங்கரன், படியில் அதிர்ந்த முகத்துடன் நின்றிருந்த மகளைப் பார்த்தார். தந்தையைக் கண்டதும் தாங்க முடியாமல், அழுதபடி தனது அறைக்கு ஓடினாள்.

“அம்மாடி, நல்ல நாள் அதுவுமா அழாதேடா. அம்மா, ஏதோ வாய்தவறி சொல்லிட்டா. மனசார எதுவும் சொல்லியிருக்கமாட்டா. அவளோட செல்லப் பொண்ணுடா நீ” என்று மகளைச் சமாதானப்படுத்தினார்.

“மனசுல இருக்கறது தானேப்பா வார்த்தையாக வருது” என்றாள் அழுகையுடன்.

வாஞ்சையுடன் மகளை அணைத்துக்கொண்டு, “என் பொண்ணு ரொம்ப தைரியமானவன்னு நினைச்சிட்டு இருக்கேன். இப்படி அழுதால் எப்படிம்மா? கண்ணைத் துடை. இங்க பாரு எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான். நீயும், ராகவும் வாழப்போற சந்தோஷமான வாழ்க்கைதான், உன் அம்மாவோட மனசை மாத்தும். முகத்தைக் கழுவி லேசா பவுடர் போட்டுட்டு வா. உனக்காக உன்னோட ராகவ்

அங்கே காத்துட்டு இருப்பார்" என்றார் சிரிப்புடன்.

ராகவ், என்ற பெயரைக் கேட்டதும் அவளது முகம் மெல்ல இளகியது.

"குட். இப்படியே நீ சிரிச்சிட்டே இருக்கணும் கண்ணம்மா!" என்று மகளது உச்சியில் முத்தமிட்ட, அந்தப் பாசமிகு தந்தையின் கண்கள் பனித்தன.

****

குங்கும நிறச் சேலையில், எளிமையான அலங்காரத்தில் காரிலிருந்து இறங்கியவளைக் கண்ட விக்ரம் இமைக்காமல் சிலையென நின்றான். அவனைக் கவனித்துவிட்ட சீமா, வேகமாக அவனருகில் சென்று அவன் கரத்தைப் பற்றி ஒரு ஓரமாக இழுத்து வந்தாள்.

"விக்ரம்! என்ன இது? யாராவது பார்த்தால் என்ன நினைப்பாங்க? நீ என்னதான் உன் மனத்தைப் பூட்டி வச்சாலும், வைஷாலியை பார்க்கும் போதெல்லாம் நீ நிதானத்தை இழக்கற. இது நல்லதில்லை" என்று எச்சரித்தாள்.

அழுந்த தலையைக் கோதியவன், தன்னை நிதானித்துக் கொள்ள போராடினான்.

"அவளை மறக்கணும்னு நினைக்கும் நொடியெல்லாம், அவளோட நினைவை எனக்குள்ள அதிகப்படுத்துது சீமா. என்னால் முடியல. நான் அவசரப்பட்டுட்டேனோன்னு தோணுது" என்றவனைப் பயத்துடன் பார்த்தாள்.

"டேய், எந்த நேரத்தில் என்ன பேசற? யார் காதிலாவது விழுந்தால்

வினையாகிடும். இதுக்குத் தான் நான் நேத்தே சொன்னேன் கல்யாணத்துக்கு நீ வரவேண்டாம், ஈவ்னிங் ரிசப்ஷனுக்கு வான்னு. கேட்டால் தானே" என்று கடுகடுத்தவள், "முதல்ல என்கூட வா. இது சரிபடாது" என்று அவனைக் கையோடு அங்கிருந்து இழுத்துச் சென்றாள்.

செல்போனில் சிக்னல் கிடைக்காமல் அந்தப்பக்கம் வந்த ராகவ், இருவரின் உரையாடலையும் கேட்டுப் புருவங்கள் முடிச்சிட நின்றிருந்தான்.

"அண்ணா! இங்கே என்ன செய்யற? புரோகிதர் மாப்பிள்ளையை வரச்சொல்றார். வா" என்று அழைத்தாள் ஜோதி.

"ம்" என்றவன், தூரத்தில் சீமா, விக்ரமிடம் ரகசியமாக ஏதோ சொல்வதும், மற்றவர்களைப் பார்த்து அவசரமாக புன்னகைப்பதுமாக இருப்பதை பார்த்தபடி, மணவறைக்குச் சென்று அமர்ந்தான்.

புரோகிதர் சொன்னவற்றை செய்தபடி இருந்தாலும், மனத்தில் ஒரு குழப்பம் இருந்துகொண்டே இருந்தது. அவ்வப்போது அவனது கண்கள் விக்ரமை தேடியது. வைஷாலி மணவறையில் வந்து அமரும் வரை முன்னால் நின்றிருந்த விக்ரம், மெல்ல பின்னால் நகர்ந்துவிட்டான்.

ஆயிரம் கனவுகளை விழிகளில் சுமந்து கொண்டு, அவனருகில் அமர்ந்த வைஷாலி, ஓரவிழியால் ராகவை பார்த்தாள். ஆனால், அவனோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான்.

"அண்ணா! வைஷூ பாவம். கொஞ்சம் திரும்பி அவளை பாரு. விட்டா அழுதிடுவா போல" என்று ஜோதி இடையில் புகுந்து கேலி செய்ய,

சுதாரித்துக்கொண்ட ராகவ், வைஷாலியைப் பார்த்து புன்னகைத்தான்.

தோழியின் கேலியில் முகம்சிவக்க, மேலும் தலைகுனிந்து அமர்ந்திருந்தவளை மனத்தில் நிறைத்துக் கொண்டவன், பெரியோர்களின் ஆசியுடன், அவளது சங்கு கழுத்தில் மூன்று முடிச்சிட்டு, தன் உரிமையுள்ளவளாக ஆக்கிக் கொண்டான்.

அத்தியாயம் 27

கல்யாணச் சடங்கு, சம்பிரதாயங்கள் முடிந்ததும், வீட்டிற்குப் புறப்படத் தயாராகிக்கொண்டிருந்த வைஷாலியின் அருகில் வந்து நின்றான் அக்ஷய்.

யாரது இப்படி உரசுவது போல வந்து நிற்பது என்று திரும்பிப் பார்த்த வைஷாலி, அக்ஷயை கண்டதும் சற்று நகர்ந்து நின்றாள்.

“என்னை இப்படி ஏமாத்திட்டியே வைஷாலி. நான் எவ்வளவு அப்செட் தெரியுமா?” என்று உருக்கமாக பேச, வைஷாலி தவிப்புடன் ராகவை பார்த்தாள்.

அவனோ கண்களில் சிரிப்புடன், “ஹலோ! ஐயம் ராகவ்” என்று தானாக முன்வந்து தன்னை அறிமுகம் செய்து கொள்ள, அக்ஷய் எரிச்சலுடன் பார்த்தான்.

“எனக்கு வில்லன் சார் நீங்க. எனிவே வாழ்த்துக்கள்” என்று சம்பிரதாயத்திற்கு ராகவின் கரத்தைப் பிடித்து குலுக்கிவிட்டுச் செல்ல, வைஷாலி எரிச்சலுடனும், ராகவ் சிரிப்புடனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

“வைஷூ! நான் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலிதான்” என்று சிரித்தான்.

“என்ன திடீர்னு?”

“பின்னே, உனக்கு ஏகப்பட்ட போட்டி இருந்திருக்கே” என்று புருவத்தை உயர்த்திப் பார்த்துச் சிரித்தவனை, பல்லைக் கடித்துக் கொண்டு நறுக்கென கிள்ளினாள்.

“ஏய்! ஏன் கிள்ற?” என்றான் கையைத் தடவிக்கொண்டே.

“இதுவே வீடா இருந்திருக்கணும்… இருங்க, இருக்கு உங்களுக்கு…” என்றதும், சிரிப்புடன் ஏதோ சொல்ல வரும் போதே, ‘வீட்டிற்குக் கிளம்பலாம்’ என்றபடி சங்கரன் வந்தார்.

மாலை மயங்கி இரவும் வர, மிதமான அலங்காரத்துடன் அறைக்குள் அனுப்பி வைக்கப்பட்டாள்.

வருடக்கணக்கில் பேசிப் பழகியவர்கள் தான் என்ற போதும், ஏதோ ஒரு தயக்கம் இருவருக்கிடையிலும் இருந்தது. அவனது ஒரு பார்வைக்கே செந்தாமரையாக சிவந்தாள்.

அவளருகில் அமர்ந்தவன், மெல்ல அவளது கரம் பிடிக்க, தேகம் முழுதும் மின்சாரம் தீண்டியது போல மெல்லிய உணர்வலைகள் எழுந்தன. அவளது விரல்களில் அவனது உதடுகள் தீண்ட, சிலிர்த்தெழுந்தவள், வேகமாக அவனிடமிருந்து விலகி ஓடினாள். ஜன்னல் கம்பிகள் பற்று கோலாக மாற, தேகம் முழுதும் அனலாக

கொதிக்க, விழிகளை மூடி மூச்சிரைக்க நின்றாள்.

புன்னகையுடன் அவள் பின்னால் வந்து நின்றவனது மூச்சுக்காற்று அவளது காதுமடலை உரசியது. அவனது கரங்கள் அவளது வெற்றிடையில் பதிந்தி தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொள்ள, “ராகவ்!” என்றவள் திரும்பி அவனது நெஞ்சில் முகம் புதைத்துக் கொண்டாள்.

புதுவித உணர்வில் உடல் நடுங்க, தன்னிடம் ஒன்றியவளை முதுகைத் தடவிக்கொடுத்து ஆசுவாசப்படுத்தினான்.

“வைஷூ! என்னைப் பாரேன்” என்று ரகசிய குரலில் சொன்னவன், அவளது முகவாயைப் பற்றி உயர்த்த முயன்றான்.

“ம்ஹூம்!” என்று மேலும் முகத்தை அழுத்திக்கொண்டவள், “ப்ளீஸ் ராகவ்! எனக்கு ஒருமாதிரி இருக்கு…” என்றாள் கெஞ்சலுடன்.

“ஏன் பயமாயிருக்கா…?”

“இல்லை…”

“பின்னே…”

“ப்ளீஸ்!” என்றவளது குரல் ஞுஙணநமன போட்டது.

அவளது உணர்வுகளைப் புரிந்து கொண்டவனாக, “சரி… கொஞ்ச நேரம் பேசிட்டு இருக்கலாம்” என்றவன், தனது கையணைப்பிலேயே நடத்தி வந்து கட்டிலில் அமரவைத்தான்.

தலை கவிழ்ந்தபடியே அமர்ந்திருந்தவளிடம், “ஒரு விஷயம் மட்டும் எனக்குப் புரியவேயில்லை” என்றவனது குரலில் வியப்பு அதிகமாக தெரிந்தது.

மெல்ல விழிகளை உயர்த்தியவள், “எதைப் பத்தி?” என்றாள்.

“உன்னைப் பத்தித் தான்” என்று உரைத்தவன், தீவிரமான முகபாவத்துடன், “நீ போய் இப்படி வெட்கப்படறியே, அதைத் தான் என்னால் நம்பவே முடியலை” என்றவன் கண்களைச் சிமிட்டிச் சிரிக்க, ஆத்திரத்தில் உதட்டை அழுந்த கடித்தவள் திரும்பி அமர்ந்துகொண்டாள்.

இடுப்பில் கைவைத்துச் சிரிப்புடன் அவளைப் பார்த்தவன், கட்டிலில் சாய்ந்து அமர்ந்து கொண்டான். “என்ன சொல்லு எத்தனைக் கோபம் வந்தாலும், என் வைஷுவோட அழகு யாருக்கும் வராது” என்ற அவனது வார்த்தைகளுக்கு மதிப்பு இருக்கவே செய்தது.

மெல்ல சிரித்துக்கொண்டவள், “போதும் போதும்” என்றாள்.

“ஹப்பா கோபம் போயிடுச்சி” என்றவன், அவளை நெருங்கி அமர, அவள் விலகி அமர்ந்தாள். “ரொம்ப பிகு பண்ணாதே” என்றவன், “ஸ்வீட் சாப்பிடுறியா?” எனக் கேட்டான்.

“வேண்டாம்” என்று தலையை அசைத்தாள்.

“சரி வேணாம். வேற என்ன வேணும்?”

“தூங்கணும்” என்றாள்.

“தூங்… தூங்கணுமா!” திகைப்புடன் கேட்டவன், கடுப்புடன் அவளைப் பார்த்தான்.

பரிதாபமாக அவள் பார்த்த பார்வையைக் கண்டவன், “சரி தூங்கு போ” என்றதும் வேகமாகக் கட்டிலில் ஏறிப் படுத்துக் கொண்டாள்.

விளக்கை அணைத்துவிட்டு வந்தவன், எதுவும் பேசாமல் மறுபக்கம் படுத்துவிட்டான்.

இதயம் தடக்தடக்கென அடித்துக்கொண்டது வைஷாலிக்கு. சிறிதுநேரம் சப்தமில்லாமல் போக என்ன செய்கிறான்? தூங்கிவிட்டானோ?’ என்று எண்ணியவளுக்குத் திரும்பிப் பார்க்க பயமாக இருந்தது. விடிவிளக்கின் வெளிச்சத்தில் அறையை வெறித்துக் கொண்டே படுத்திருந்தாள்.

அவளையும் அறியாமல் கண்ணயர்ந்த நேரத்தில், காதருகில் குறுகுறுக்க, இப்படியும் அப்படியுமாக லேசாக தலையசைத்தாள். உஷ்ணக் காற்று கன்னத்தில் படவும்தான் அது அவனது மீசை என்று புரிந்தது.

அதேநேரம், “தூங்கலையா” என்ற அவனது குரலில் தூக்கிவாரிப்போட திரும்பியவளை, இருபக்கமும் கைகளை ஊன்றி சிறைசெய்தான்.

அவனிடமிருந்து விலக முடியாமல், “என்ன பண்றீங்க?” என்றாள் தவிப்புடன்.

“ம், லவ் பண்றேன்” என்று அவளது மூக்குடன் மூக்கை உரசினான்.

“ம், எனக்குத் தூங்கணும்” என்று சிணுங்கினாள்.

அதிலிருந்த போலித்தனத்தை கண்டு கொண்டவனாக, “என் கேள்விக்குப் பதில் சொல்லிட்டுத் தூங்கு” என்றான்.

“என்ன கேள்வி?”

“இதுவே வீடா இருந்திருக்கணும்… இருங்க, இருக்கு உங்களுக்குன்னு என்னமோ சொன்னியே… அது என்ன?” என்றான்.

என்ன சொல்வதென புரியாமல், “அ..அது ஒரு ஃப்ளோவில் வந்துது” என்றாள்

“ஓ! நான் என்ன நினைச்சேன்னா…” என்று அவளது முகத்தை நெருங்கினான்.

“என்ன… நினைச்சீ…க” அவளது குரல் தேய்ந்து உள்ளே போனது.

“இதைத்தான் நினைத்தேன்” என்றவன் அவளது இதழ்களை தனது இலக்காக்கிக் கொள்ள, அவனது மென்மையான ஆக்ரமிப்பில், மெல்ல மெல்லத் தன்னை இணைத்துக் கொண்டாள்.

****

மஞ்சள் பூசிய முகமும், தலையில் கட்டியிருந்த துண்டுமாக மெட்டி சப்தமிக்க, இறங்கி வந்த மகளைப் பார்த்தார் தேவிகா. முகத்திலிருந்த நாணமும், அழகின் மிளிர்வையும் கண்டவருக்கு உள்ளம் பூரித்துப்

போனது.

திருமணத்திற்குச் சம்மதம் சொன்ன நாளிலிருந்து, பெற்ற கடனுக்குச் செய்வதாக எண்ணிக்கொண்டவருக்கு, இன்று அப்படி இருக்க முடியவில்லை. மகளின் பின்னாலேயே சமையலறைக்குள் நுழைந்தவர், “வைஷும்மா! இதைக் கொண்டு போ” என்று தயாரித்து வைத்திருந்த கா..பி கெட்டிலிருந்த டிரேயை மகளிடம் கொடுத்தார்.

“அம்மா!” என்று தழுதழுத்தவளுக்கு மேற்கொண்டு பேசமுடியவில்லை.

சேச்சே… அசடு… போ கா..பி ஆறிடப் போகுது” என்று மகளது கண்ணீரைத் துடைத்துவிட்டவர், தனது கண்களையும் துடைத்துக் கொண்டார்.

டைனிங் ஹாலிலிருந்த சங்கரன் இருவரையும் பார்த்து நிறைவுடன் புன்னகைத்துக் கொண்டார்.
****

இரண்டு நாட்கள் வேகமாக ஓட, மூன்றாவது நாள் காலையிலேயே வைஷாலியை அழைத்துக் கொண்டு ராகவ் கிளம்பிவிட்டான்.

அன்னை, தந்தை இருவரிடமும் மாறி மாறிச் செல்லம் கொஞ்சி, கண்ணீர் வடித்து, அவளே இருவரையும் சமாதானம் செய்து தேற்றினாள்.

“நாளைக்குக் காலைல ரெண்டு பேரும் பூனே வந்திடணும். மதியம் வளைகாப்பு நேரத்துக்கு வந்து இறங்கக்கூடாது சொல்லிட்டேன்” என்று வீட்டின் மருமகளாக இருவரையும் அழைத்தாள்.

சந்தோஷத்துடன் சம்மதித்த தேவிகா, “என் பொண்ணை நல்லபடியா பார்த்துக்கோங்க மாப்பிள்ளை” என்ற தேவிகாவை புன்னகையுடன் பார்த்த ராகவ், “நிச்சயமா அத்தை” என்றான்.

வாழ்க்கையில் தனக்கான சோதனைகளும், வேதனைகளும் காத்திருப்பது தெரியாமல், மகிழ்ச்சியுடன் கணவனின் வீட்டில் காலடி எடுத்து வைத்தாள் வைஷாலி.

அத்தியாயம் 28

“அப்பா! மாலை, பூவெல்லாம் நாளைக்குக் காலையில் பத்து மணிக்கு வீட்டுக்கே கொண்டு வரச் சொல்லிட்டேன். நாம இங்கேயிருந்து கிளம்ப வேனுக்கும் சொல்லிட்டேன்” என்று சொல்லிக்கொண்டே தந்தையின் அறைக்குள் ராகவ், அங்கு அமர்ந்திருந்த வைஷாலியை திகைப்புடன் பார்த்தான்.
அடுத்த நொடியே கலகலவென நகைத்தவன், “ஹே! என்ன இது ஜிங்குச்சான் மாதிரி...” என்றான்.

பச்சை, சிகப்பு, மஞ்சள் என்று வண்ண வண்ணக் கண்ணாடி வளையல்களை இரு கைகளிலும் முழங்கை வரை அடுக்கிக்கொண்டு, கையை நீட்டி மடக்கி அதன் சப்தத்தை ரசித்துக் கொண்டிருந்தவளது முகம், அவனது கேலியில் சுருக்கியது.

“பாருங்க மாமா இவரை...” என்று சிணுங்கினாள் வைஷாலி.

“அவன் கிடக்கான் விடும்மா...” என்று மருமகளுக்கு பரிந்து கொண்டு வந்தார் மணிகண்டன்.

“நான் இருக்கேன். அத்தை மட்டும் இதை பார்த்திருக்கணும்… அவ்வளவுதான். தங்கத்திலேயும், வைரத்திலேயும் போட வேண்டிய கைக்கு, இந்தப் பத்து ரூபா வளையளான்னு, முதல்ல கழட்டித் தூரப் போட்டுட்டுத் தான் மறுவேலை பார்ப்பாங்க” என்றான்.

சிறுவயதில் பார்த்ததை நினைவு வைத்துச் சொல்கிறான் என்று புரிய, “ஆமாம்… உங்க அத்தைக்கு இந்தக் கண்ணாடி வளையலோட அருமை எங்கே தெரியும். இது எனக்காக, என்னோட அத்தை கொடுத்ததாக்கும்” என்று இரு கரத்தையும் சேர்த்துத் தட்டி ஒலியெழுப்பி அழகாகச் சிரித்தாள்.

“அத்தையா! இதென்ன புதுக்கதை யாரந்த அத்தை?” என்று கேட்டான்.

“வேற யாரு உன் அம்மாதாண்டா” என்றார் மணிகண்டன்.

“மாமனார், மருமக ரெண்டு பேரும் புரியறா மாதிரி பேசவே மாட்டீங்களா?”

“ஹய்யோ! உண்மைதான் ராகவ். ஒருமுறை அம்மா என்னோட கண்ணாடி வளையளை தூக்கித் தூர வீசிட்டாங்க. அப்போ அத்தை, அதை அப்படியே எடுத்து வச்சிருந்தாங்களாம். அப்புறம் ஜோதிக்கு வாங்கும் போது எனக்கும் சேர்த்து வாங்கி, தனியா வச்சிருந்தது தான் இதெல்லாம். எனக்கு என்னைக்காவது கொடுக்கணும்னு மாமாகிட்ட சொல்லிட்டே இருப்பாங்களாம். ஆனால், அதுக்கு சந்தர்ப்பமே இல்லாமல் போச்சு” என்றவளது முகம் மலர்ச்சியைத் தொலைத்து வருத்தத்தை வெளிப்படுத்தியது.

மணிகண்டனுக்கு மனைவியின் நினைவில் இதயம் கனத்துப் போக, ராகவும் அன்னையின் நினைவில் அமைதியாக நின்றான்.

இருவரது மௌனத்தையும் கண்டவளுக்கு நேரம் காலம் தெரியாமல் உளறிவைத்தது புரிய, சங்கடமாகி விட்டது. அமைதியாக தங்கள் அறைக்கு வந்து விட்டாள். ஆனால், பழைய நினைவுகள் அத்தனை எளிதில் மறந்து விடுவதில்லையே!

எப்போதும், 'லஷ்மி அத்தை' என்று அவர்களையும் இந்த வீட்டையும் சுற்றி வந்ததெல்லாம் நினைவிற்கு வந்தது. அவருக்கும், தன்னைச் சுற்றிச் சுற்றி வரும் வைஷாலி மீது கொள்ளைப் பிரியம். அவளுக்குத் தெரிந்து லஷ்மி மனம் நோக யாரையும் பேசியதில்லை. பிடிவாதமும், முன்கோபியுமான ஜோதியை கூட, அவர் திட்டியோ அடித்தோ பார்த்ததேயில்லை.

'ராகவ், குணத்தில் தனது அன்னையின் மறு வடிவம். அதனால் தான், தனக்கு அவனை மிகவும் பிடித்ததோ' என்று நினைத்தவளுக்கு, மெல்லப் புன்னகை அரும்பியது.

"ஹாய் பொண்டாட்டி! என்ன கனவா? கனவில் நான் தானே?" என்றபடி, அவள் அமர்ந்திருந்த இருக்கையின் கைப்பிடியில் வந்து அமர்ந்தான்.

"ம், ரொம்பத்தான் நினைப்பு. நான் அத்தையைப் பத்தி நினைச்சிட்டு இருந்தேன்" என்றவள், "அத்தை நம்ம கூட இருந்திருந்தா எவ்வளவு நல்லா இருந்திருக்கும் இல்ல ராகவ்" என்றபடி அவன்மீது சாய்ந்து கொண்டாள்.

அவளது கன்னத்தைத் தடவிக் கொடுத்தவன், "நானும் இதை அப்பப்போ

நினைச்சிக்குவேன் வைஷூ. அம்மா இருந்திருந்தா, இந்த வீடு இன்னும் நல்லா இருந்திருக்கும். ஜோதியோட வாழ்க்கை இப்படி பிரச்சனையோட இருந்திருக்காது. அவளை இன்னும் நல்லபடியா, பொறுப்போட வளர்த்திருப்பாங்க. ஒரு பெண்ணோட வளர்ப்புக்கும், ஆணோட வளர்ப்புக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. வளர்க்கத் தெரியாமல் வளர்த்து அவளோட வாழ்க்கை இப்படியாக, ஒருவகையில் நாங்க கூடக் காரணம்தான்" என்றவன், எழுந்து தலையைக் கோதியபடி கட்டிலில் சென்று அமர்ந்தான்.

"ராகவ்! இன்னும் நீங்க அவளோட காதல் விஷயத்தை மறக்கலையா?"

"ஹூம்!" என்று பெருமூச்சை வெளியிட்டவன், "வைஷூ! ஒருத்தர் மேல இயல்பாக வரும் காதலுக்கும், பணத்துக்காக வர்ற காதலுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு" என்றவனது குரலில் கசப்பு தெரிந்தது.

"நீங்க தப்பா புரிஞ்சிட்டு இருக்கீங்க. ஜோதிக்கு, பணத்தாசை உண்டுதான். அதுக்காக இப்படி பணத்துக்காகன்னு நினைக்காதீங்க. கேட்கவே அசிங்கமாக இருக்கு" என்றாள் சங்கடத்துடன்.

"இல்லை வைஷூ! நான் தெரிந்ததால் தான் சொல்றேன்."

"நான் நம்பமாட்டேன்" என்றாள் பிடிவாதமாக.

"நான் சொன்னால் நம்பமாட்ட; குணால் சொன்னா…" என்றவனை, அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

"எனக்கும் இப்படி அதிர்ச்சியா தான் இருந்தது. அன்னைக்கு நீ விக்ரம் சார், சீமா மேடம் எல்லோரும் ஹோட்டலுக்கு வந்திருந்த போது

நானும் குணாலை பார்த்துப் பேசத்தான் அங்கே வந்தேன். அப்போ அவர் சொல்லித்தான் தெரியும். ஜோதி தான் இப்படி. குணால், ரொம்ப நல்லவர்.

காதலித்து, வீட்டை விட்டுப் போய், யாருக்கும் தெரியாமல் கல்யாணம் செய்துகிட்டவளை, அவங்க வீட்டில் பெரிய மனசு பண்ணி ஏத்துக்கிட்டதே பெரிய விஷயம். இவ என்னடான்னா தினமும், ஷாப்பிங், மால், ஹோட்டல்ன்னு சுத்தினால் எப்படி?

ஆரம்பத்தில் குணாலுக்கு இருந்த ஆர்வம் கொஞ்சம் கொஞ்சமா குறைய ஆரம்பிச்சிடுச்சி. அதோட இல்லாமல் அப்பப்போ சொத்தைப் பிரிப்பது பத்தி வேற பேசியிருக்க. பிரச்சனை இப்படித் தான் பெரிசாச்சு."

"அதுக்காக கர்ப்பமாக இருக்கும் பொண்ணை கொண்டுவந்து வீட்டில் விட்டுட்டுப் போவாங்களா?" ஆற்றாமையுடன் கேட்டாள் வைஷாலி.

"இல்லை வைஷூ! சண்டை போட்டுட்டு வந்தது இவதான். ஆனால், நம்மகிட்ட இவளை அனுப்பிட்டதா சொன்னா. அவமேல இருந்த கோபத்தில் குணால் என்னைப் பார்த்துப் பேசவே மறுத்துட்டார். என்னோட தொல்லை தாங்காமல்தான் அன்னைக்குச் சந்திக்க ஒத்துகிட்டார். நடந்ததையெல்லாம் சொன்னார். யார்தான் இதுக்கெல்லாம் வாயைமூடிட்டு இருப்பாங்க.

ஒரு கட்டத்தில் இவர் திருப்பிக் கேட்டதுக்கு, சொல்லாமல் கொள்ளாமல் வீட்டுக்கு வந்துட்டா. வந்து கெஞ்சுவார்ன்னு நினைச்சிருக்கா. ஆனால், கோபத்தில் அவர் வரவேயில்லை. கடைசியில் விக்ரம் சாருக்குத் தெரிந்து அவர் பேசி, அவங்க அம்மா

இவளுக்கு எடுத்துச் சொல்லி... குணால் வீட்டில் பேசி எல்லாம் நல்லபடியா முடிஞ்சது. ஆனாலும், அடுத்த குண்டு எப்போ வருமோன்னு ஒரு பயம் உள்ளுக்குள்ளே இருக்கத்தான் செய்யுது" என்றான்.

"இவ்வளவு விஷயம் நடந்திருக்கா? இது தெரியாமல், குணால் அண்ணா என்னிடம் எவ்வளவு திட்டு வாங்கியிருக்கார் தெரியுமா?" என்றாள் பரிதாபமாக. "முதல்ல எப்படியோ ராகவ்... இப்போ அவள் அவரை புரிஞ்சிகிட்டிருப்பான்னு நினைக்கிறேன்" என்றாள்.

"நல்ல புத்தி வந்தால் சந்தோஷம் தான். ஜோதியோட குணத்தால நீ ஏதாவது பிரச்சனையில் மாட்டிப்பியோன்னு, ஒரு பயம் எனக்குள்ள இருந்துட்டேதான் இருந்துச்சி. அதனால் தான் நீ அவளுக்கு ஏதாவது காஸ்ட்லி கிஃப்ட் வாங்கிட்டு வரும் போதெல்லாம் நான் உன்னைத் திட்டுவது."

"உக்கும்! நல்லா திட்டுனீங்க. எப்போ பார் சிடுசிடுன்னு சிடுமூஞ்சி மாதிரி. பார்க்கும் பார்வை அதுக்கு மேல; நாலடி தள்ளி நில்லுன்னு சொல்றது போல" என்று உதட்டைச் சுழித்துப் பழிப்பு காட்டினாள்.

"பல விஷயங்களில் அவ உன்னை டாமினேட் செய்தாலும், சில விஷயங்களில் உன்னிடம் அவளுக்கு ஒரு பயம் இருக்கத்தான் செய்யுது" என்றான் புன்னகையுடன்.

"நான் ஃப்ரெண்ட்ஷிப்புக்கு மதிப்பு கொடுக்கறவ தான். அதுக்காக கண்ணை மூடிகிட்டு அவ சொல்றதுக்கெல்லாம் தலையாட்டும் ஆள் நான் கிடையாது. தப்புன்னா தப்புன்னு சொல்லும் தைரியம் எங்களுக்கும் இருக்கு. தெரிஞ்சிக்கோங்க" என்றாள் வீராப்புடன்.

“அது மட்டும்தான் தெரிஞ்சிக்கணுமா… இல்லை வேற ஏதாவது…?” என்றபடி அவளது இடுப்பை வளைத்து தன்னருகில் இழுத்தான்.

வேகமாக அவனைத் தள்ளிவிட்டவள், “இன்னும் ரெண்டு நாளைக்கு இந்த வேலையெல்லாம் வேணாம் புரிஞ்சிதா. வீட்டுக்கு உறவுக்காரங்க வருவாங்க; அதனால் அடக்க ஒடுக்கமா இருங்க” என்றாள்.

அவள் தள்ளிய வேகத்தில் கட்டிலில் விழுந்தவன், “ரெண்டு நாளைக்குப் பிறகு, நீ இந்த ரூமுக்குத் தான் வரணும்” என்றான்.

“அதை அப்போ பார்த்துக்கலாம்” என்றவள் கண்ணைச் சிமிட்டிவிட்டுக் கீழே இறங்கி ஓட, சிரித்தபடி தலையைக் கோதிக்கொண்டான் ராகவ்.

“வைஷும்மா! வர்ற வழியில் கமர்கட் வித்துட்டு இருந்தான் உனக்குப் பிடிக்குமேன்னு வாங்கிட்டு வந்தேன்” என்று மணிகண்டன் சிறு பொட்டலத்தைக் கொடுத்தார்.

“ஹய்! தேங்க்யூ மாமா. நீங்க ரெண்டு எடுத்துக்கோங்க” என்றாள்.

“இருக்கட்டும்மா. நீ சாப்பிடு. நான் கொஞ்சம் எதிர்வீடு வரைக்கும் போய்ட்டு பத்து நிமிஷத்தில் வந்திடுறேன்” என்றவர் அங்கிருந்து செல்ல, ஒன்றை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு, மாடிக்குச் சென்றாள்.

குளித்துவிட்டு வந்து உடை மாற்றிக்கொண்டிருந்த ராகவ், “என்ன சாப்பிடுற?” என்று கேட்டான்.

“கமர்கட்.”

“நீ மட்டும் சாப்பிடுற? எனக்கு எங்கே?” என்றான்.

“நீங்க சாப்பிட வரும் போது கொடுக்கலாமுன்னு கீழேயே வச்சிட்டு வந்துட்டேங்க” என்றாள்.

“எனக்கு இப்போவே வேணும். கொடு” என்றான்.

“சரி கொண்டு வரேன் என்றவளை இழுத்து சுவற்றில் சாய்த்து நிறுத்தியவன், “கொடு” என்றான்.

“விளையாடாதீங்க ராகவ்! யாராவது வரப்போறாங்க...” என்று அவனிடமிருந்து விலக முயன்றாள்.

“அப்பா இல்லை. வாசல் கதவு மூடியிருக்கு. அப்புறம் யார் வருவாங்க?” என்றவனது உதடுகள், அவளது கன்னத்தில் கோலமிட்டது.

இதழ் ஒற்றலில் அவள் மயங்கி நின்றதை, தனக்குச் சாதகமாக்கிக் கொண்டான். அவன் அவளை விட்டு விலகிய போது கமர்கட் அவனது வாயிலிருந்தது. வசீகரப் புன்னகையுடன் அவளைப் பார்த்தான்.

மெல்லக் கண்களைத் திறந்தவள் வாய்க்குள்ளேயே ஏதோ முணுமுணுத்தாள்.

“தைரியம் இருந்தா சத்தமா சொல்லு. எதுக்கு முனகற?” என்றான்.

“இரு இரு எங்க அம்மாகிட்ட சொல்றேன்...” என்று சொல்லிவிட்டு

நமட்டுச் சிரிப்பு சிரித்தவளை, உர்ரெனப் பார்த்தான்.

“நான் சொல்லாமல் விடப்போறதில்லை. அன்னைக்கு குடுத்தாங்க இல்ல சுருக்க உன் முதுகில் ரெண்டு. அதைப் போலப் போடச் சொல்றேன். பத்து வயசில் வாங்கினது மறந்து போச்சாம். இப்போ குடுங்கன்னு சொல்றேன்” என்றாள்.

“காக்கா கடி கடிச்சி கொடுத்ததும் இதுவும் ஒண்ணா?” என்றான்.

“எல்லாம் எச்சில் தானே…”

“அப்படியா! அப்போ இதையும் சேர்த்துச் சொல்லு” என்றவன், ஓட முயன்றவளைப் பிடித்து இழுக்க, இருவரும் சேர்ந்து கட்டிலில் விழுந்தனர்.

“ப்ளீஸ், ப்ளீஸ் ராகவ் சாரி” என்ற எதையும் அவன் காதில் வாங்காதவன், தனது காரியத்தைச் சாதித்துக் கொண்டே விலகினான்.

அருகிலிருந்த தலையணையை எடுத்து நாலு போடு போட்டாள்.

சிரித்துக்கொண்டே வாங்கிக் கொண்டவன், “இது தான் உன் கோபமா?” என்று கிண்டலாகச் சிரிக்க, தனது பொய்க் கோபத்தைத் தொடர முடியாமல் அவளும் சிரிப்புடன் அவனது தோளில் சாய்ந்துகொண்டாள்.

அழைப்பு மணி இரண்டு தரம் ஒலிக்க, தலையை ஒதுக்கி, முகத்தை ஒரு முறை கண்ணாடியில் பார்த்துச் சரி செய்து கொண்டு கதவைத் திறக்க ஓடினாள்.

****

காரிலிருந்து இறங்கிய தேவிகா, அந்த வீட்டைப் பார்த்து அசந்து நின்றார். கடைசியாக லஷ்மி இறந்த போது வந்தது. கிட்டதட்ட பத்து வருடங்கள் ஆகிறது. வேலி இருந்த வீடு இப்போது மதில் சுவர் கட்டப்பட்டு, வீட்டைச் சுற்றியிருந்த இடத்தில் அழகாக காய்கறித் தோட்டமும், பூந்தோட்டமும் அழகாக பராமரிக்கப்பட்டிருந்தது.

அப்போது ராகவின் வீடு ஒற்றைப் படுக்கை அறை, சமையலறை, சிறிய ஹால் என்று இருந்தது. இப்போது கீழேயே இரண்டு படுக்கை அறை, மாடிக்குச் செல்ல உள்ளேயே படிக்கட்டு, மாடியில் இரண்டு படுக்கையறை, என்று வீடு பிரமாதமாக இருந்தது. சமையலறைகூட நவீன வசதிகளுடன் இருந்தது.

வீட்டைச் சுற்றிக் காட்டிய மகளைச் சந்தோஷத்துடன் பார்த்தார். மருமகனை நினைத்துப் பெருமையாகக் கூட இருந்தது.

“எப்படிம்மா இருக்கு வீடு?” ஆசையுடன் அன்னையின் கழுத்தைக் கட்டிக்கொண்டு கேட்டாள்.

“ரொம்ப நல்லாயிருக்குடா. நீ எப்படி இருக்க? சந்தோஷமா இருக்கியா? உனக்கு இங்கே எல்லாம் வசதியா இருக்கா?”

“அம்மா! நான் இங்கே வந்து முழுசா இருபத்தி நாலு மணி நேரம் தான் ஆகுது. நீங்க என்னவோ வருஷக்கணக்கா பார்க்காத மாதிரி விசாரிக்கிறீங்க?” என்றாள்.

“நான் சந்தோஷமா இருக்கேன்னு சொல்ற ஒரு வார்த்தையில்தாம்மா

ஒவ்வொரு அம்மாக்களோட சந்தோஷமும் இருக்கு" என்றபடி சங்கரன் அறைக்குள் நுழைந்தார்.

"நான் ரொம்ப ரொம்பச் சந்தோஷமா இருக்கேன்" என்று குழந்தையின் குதூகலத்துடன் சொன்னாள்.

"ஆமாம், சமையல் இன்னும் மாப்பிள்ளை தான் செய்யறாரா?"

"அப்பா! என்னை என்னன்னு நினைச்சிட்டு இருக்கீங்க? எனக்குப் பிரமாதமா சமைக்கத் தெரியலைனாலும், ஓரளவுக்குச் சமைக்கத் தெரியும். நான் எது செய்தாலும், மாமாவும், உங்க மாப்பிள்ளையும் எதுவும் சொல்லாமல் சாப்பிடுவாங்க. தெரியுமா?" என்றாள்.

"அட, முழுசா ஒருநாள் தானேடா ஆகியிருக்கு…" என்று சிரித்த தந்தையைச் செல்லமாக முறைத்தாள்.

"என்னடா என் மருமகளை கிண்டல் பண்ற? அவளோட சமையலை சாப்பிட்டுட்டு அப்புறம் சொல்லு" என்றார் மணிகண்டன்.

"சாப்பிட்டதால் தானேடா சொல்றேன்" என்று சங்கரன் சொன்னதும், அனைவரும் கலகலப்பு தொற்றிக்கொண்டது.

அத்தியாயம் - 29

வளைகாப்பு முடிந்து ஜோதியை வீட்டிற்கு அழைத்து அழைத்து வந்துவிட்டனர். இத்தனை நாட்களாகக் கீழ் அறையில் இருந்தவள், தான் மாடியிலிருக்கும் இன்னொரு அறையிலேயே தங்கிக் கொள்வதாகக் கூற, மணிகண்டனும் சம்மதித்துவிட்டார்.

“ஏன் ஜோ? உனக்குப் படி ஏறியிறங்க கஷ்டமா இருக்குமே” என்ற வைஷாலிக்கு, “நீ இருக்கியேப்பா… உன்னோடு பேசிட்டு இருக்கலாம்; ஈவ்னிங்ல அப்படியே மொட்டை மாடியில் நடக்கலாம். அதோட, படியேறி இறங்கினா எக்ஸர்சைஸ் தானே” என்று அவள் சொன்ன பதில் ஏற்றுக்கொள்வதாகத் தான் இருந்தது.

“சரி, ஆனா, பத்திரமா இரு” என்றதோடு ராகவும் முடித்துக் கொண்டான்.

முதல் இரண்டு நாட்கள் தோழிகளுக்குள் பேசிப் பகிர்ந்துகொள்ள நிறைய விஷயங்கள் இருந்தன. வீடே சிரிப்பும் பேச்சுமாகத் தான் இருந்தது.

இரவு வேலைகளை முடித்துவிட்டு அறைக்குள் நுழைந்தாள். ராகவ் லேப்டாப்பில் ஏதோ செய்து கொண்டிருந்தான்.

“தூங்கலையா இன்னும்?”

“ம், நாளைக்கு முக்கியமான மீட்டிங் இருக்குடா. காலையில் ஏழு மணிக்கெல்லாம் கிளம்பணும்”

“ஓ! சரி” என்றவள் படுத்துக் கொண்டாள்.

வேலையை முடித்துவிட்டு, விளக்கை அணைத்துவிட்டு வந்து படுத்தான் ராகவ்.

“இன்னைக்கு ஜோதிக்குக் கொஞ்சம் முடியலை பாவம். உடம்பெல்லாம்

வலிக்குதுன்னு கொஞ்சம் அவஸ்தை பட்டுட்டா. ரொம்பப் பாவமா இருந்தது."

"ம், பிரக்னன்சில இதெல்லாம் சகஜம்ப்பா" என்றான்.

அவன் பக்கமாகத் திரும்பியவள், "ஏன் ராகவ்! பிரக்னன்சி டைம்ல எல்லோருக்கும் இப்படித்தான் இருக்குமா?" அவனது டீ ஷர்ட்டின் பட்டனைத் திருகியபடியே கேட்டாள்.

கண்களைத் திறந்து பார்த்தவன், செல்லமாக அவள் நெற்றியில் முட்டி, "ஏன் பயமாயிருக்கா?" என்று ரகசியக் குரலில் கேட்டான்.

மேலும் அவனை ஒன்றிக்கொண்டவள், "ரொம்ப இல்ல கொஞ்சம்" என்றாள்.

அவளது கன்னத்தில் விரலால் கோடு வரைந்தவன், "நான் உன் கூடவே இருக்கும் போது உனக்கென்ன பயம்?" என்றபடி தன்னுடன் சேர்த்து இறுக அணைத்துக்கொண்டான்.

விழிகளை மூடி அவன் நெஞ்சில் முத்தமிட்டவள், தங்கள் அறைக் கதவு தட்டப்படும் ஓசை கேட்டு, அவனிடமிருந்து விலகி எழுந்தாள்.

"நீ இரு" என்றவன் சென்று கதவைத் திறக்க, ஜோதி நின்றிருந்தாள்.

"என்ன ஜோதி? தூங்கலையா? உடம்பை ஏதாவது செய்யுதா?" அவனது கேள்வியில் பாசமும், பரிவும் கொட்டிக் கிடந்தது.

"இல்லண்ணா தூக்கம் வரலை. அதான் வைஷூகூட கொஞ்ச நேரம்

பேசிட்டு இருக்கலாம்னு வந்தேன். முழிச்சிட்டுத் தானே இருக்கா?"

உள்ளுக்குள் எரிச்சல் மண்டியது அவனுக்கு. "வைஷு... தூங்..." என ஆரம்பிக்கும் போதே, "முழிச்சிட்டுத் தான் இருக்கேன் ஜோ. நாம உன் ரூமுக்குப் போயிடலாம். உங்க அண்ணன் தூங்கட்டும்" என்றாள்.

சரி என்ற ஜோதி அங்கிருந்து செல்ல, "நீங்க தூங்குங்க ராகவ். நான் கொஞ்ச நேரம் அவளோட பேசிட்டிருந்துட்டு வரேன்" என்றவள், அவனது முகபாவத்தைப் பார்த்துவிட்டு, "ப்ளீஸ் ராகவ்! நம்ம ஜோதிக்காக" என்று கெஞ்சலாகப் பார்த்தாள்.

நீண்ட பெருமூச்சை வெளியிட்டவன், சம்மதமாக லேசாக தலையசைக்க, "தேங்க்யூ" என்று அவன் கன்னத்தில் தனது இதழ்களைப் பதித்துவிட்டுச் செல்ல, ராகவ் புன்னகைத்துக் கொண்டான்.

பதினோரு மணிக்குப் பேச ஆரம்பித்த ஜோதி, அதிகாலை மூன்று மணி வரை அவளை விடவில்லை. வைஷாலிக்கோ தூக்கம் கண்களைச் சுழற்றிய போதும், கை மறைவில் கொட்டாவியை வெளியற்றி சமாளித்துக் கொண்டு, கதை பேசிக்கொண்டிருந்தாள். ஒரு வழியாகத் தூக்கம் வருகிறது என்று ஜோதி படுத்துவிட, வைஷாலி தங்கள் அறைக்கு வந்தாள்.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த கணவனை நேசத்துடன் பார்த்தாள். குனிந்து அவனது நெற்றியில் முத்தமிட்டாள்.

காலை நேர இரைச்சலில் கண் விழித்தவள், பளிச்சென்று வெயில் அடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துப் பதறி எழுந்தாள். மணி பத்து.

‘இன்னைக்கு மீட்டிங் இருக்குன்னு சொன்னாரே’ என்று வேகமாக மறுபக்கம் திரும்பியவள் ராகவ் இல்லாததைக் கண்டதும் வேகமாகக் கட்டிலிலிருந்து இறங்கினாள்.

அங்கிருந்த டேபிள் மீது அவன் எழுதி வைத்துவிட்டுச் சென்ற குறிப்பு கண்ணில் பட்டது.

‘ஹாய் கும்பகர்ணி, நான் ஷார்ப்பா ஏழு மணிக்குக் கிளம்பிட்டேன். இட்லி ஊத்தி, காரச் சட்னி அரைச்சி வச்சிருக்கேன். ஜாலியா சாப்பிடு. நடுவில் நேரம் கிடைத்தால் போன் செய்றேன்.’

படித்து முடித்தவள் சிரித்துக் கொண்டாள். சந்தோஷமாக இருந்த போதும், சிறு வருத்தமும் இருந்தது.

****

”ஹலோ!”

“வைஷூ எப்படிம்மா இருக்க?”

“அத்தை! நல்லாயிருக்கேன் நீங்க எப்படியிருக்கீங்க? மாமா, சீமாக்கா எல்லோரும் எப்படியிருக்காங்க?”

“எல்லாரும் சௌக்கியம். வீட்டில் எல்லாப் பொறுப்பும் உன்னோடது தானாமே. என் பொண்ணு இத்தனைப் பொறுப்பா இருப்பான்னு நினைக்கவேயில்லை அண்ணின்னு உன் அம்மா பெருமையா சொல்லிகிட்டாங்க. கேட்கவே ரொம்பச் சந்தோஷமா இருக்கு” என்றார் செந்தளிர்.

சிரித்துக் கொண்டவள், “அய்யோ அத்தை! எல்லாமே இன்னும் அவர் தான் பார்த்துக்கறார். நான் மேலோட்டமா எல்லாத்தையும் சரி பார்த்துக்குவேன்” என்றவள், “அன்னைக்கு அம்மா உங்களுக்கு போன் செய்து பேசச் சொன்னாங்க அத்தை எனக்குத் தான் இருந்த வேலையில் மறந்து போச்சு” என்றாள் சிறு குரலில்.

“பரவாயில்லம்மா. அதனால் என்ன? உனக்கு எப்போ ஃப்ரீயா இருக்கியோ அப்பப் பேசு…” என்றவருடன் சிறிது நேரம் பேசிவிட்டு, போனை வைத்தாள் வைஷாலி.

“வைஷூ! அம்மா போனா?” என்றபடி அறைக்குள் வந்தாள் ஜோதி.

“அம்மா இல்ல செந்தளிர் அத்தை” என்றாள்.

“ஓ! என்னவாம் அவங்களுக்கு?” அலட்சிய பாவத்துடன் கேட்டாள்.

“சும்மா விசாரிச்சாங்க. உன்னைப் பத்தியும் கேட்டாங்க. ஹெல்த்தை பார்த்துக்கச் சொன்னாங்க.”

“இதுல ஒண்ணும் குறைச்சல் இல்லை. சொல்றேன்னு தப்பா நினைக்காதே அந்தக் குடும்பத்தைப் பார்த்தா எனக்குச் சுத்தமா பிடிக்கறதில்லை. உனக்கும் சொல்றேஎன் கேட்டுக்க, இனிக்க இனிக்க பேசினாலும் சரியான அழுகுணி குடும்பம். அப்பா அம்மா, பிள்ள மூணு பேரும் இனிக்க இனிக்க பேசுவாங்க. ஆனால், மனசுல அவ்வளவும் அழுக்கு. அதுவும் அருமை பிள்ள விக்ரம் குமார் இருக்காரே ஹப்பா!” என்றாள்.

பேசும் போதே அவள் முகத்தில் அத்தனை வெறுப்பு. வைஷாலிக்கு சங்கடமாக இருந்தது. ஆனால், பேசி அவள் வெறுப்பை அதிகமாக்க வேண்டாம் என்று அமைதியாக இருந்தாள்.

“அவனுக்கு மனசுல பெரிய ஹீரோன்னு நினைப்பு. என் வாழ்க்கையில் வந்த அத்தனைப் பிரச்சனைகளுக்கும் அவன்தான் காரணம். பொண்ணுங்கன்னா அவனுக்கு கிள்ளு கீரைன்னு நினைப்பு” என்று சொல்லிவிட்டு வைஷாலியின் முகத்தைப் பார்த்தாள்.

சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் இழுத்துப் பிடித்தப் பொறுமையுடன் அமர்ந்திருந்தாள்.

“நல்ல வேலை வைஷூ! நீ தப்பிச்ச. அதுக்குத் தான் நான் ஆரம்பத்திலிருந்தே அவன் கூடப் பழகினதை வேண்டாம்ன்னு சொன்னேன். அப்போவே இதையெல்லாம் சொல்லியிருந்தா நீ பயந்திருப்ப. அதான் முழுசா சொல்லாமல் மறைமுகமா எச்சரிக்கை செய்தேன்… இன்னும்…” என்று பேசிக்கொண்டிருந்தவளை இடைமறித்தாள் வைஷாலி.

“போதும் ஜோ. நாம வேற ஏதாவது பேசலாமா?” என்றாள் கோபத்துடன்.

“ஓ! உன் உறவுக்காரங்களைப் பேசிட்டேன்னு கோபமா?” என்றாள் கிண்டலாக.

“அவங்க உறவுக்காரங்களா இல்லாமல் இருந்தாலும் நான் இதைத் தான் சொல்லியிருப்பேன். ஒருத்தரைப் பத்தி முழுசா தெரியாமல் பேசக்கூடாது. அவங்க பெர்சனல் லைஃப்ல யார் எப்படி இருந்தால் நமக்கென்ன? அதோடு, நான் விக்ரமோட கொஞ்சநாள் தான்

பழகியிருக்கேன். என்னோட பழகுபவரை எடைபோடத் தெரியாத முட்டாள் இல்லை. இன்னைக்கு வரைக்கும் அவர் உங்க அண்ணனுக்கும், உனக்கும் ஒரு நல்ல வெல்விஷராகத் தான் இருக்கார்; இருப்பார். அவரைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும்" கோபத்துடன் சொல்லி முடித்தாள்.

ஜோதிக்கு உள்ளுக்குள் கொதித்தது.

“அப்போ நான் சொல்றது பொய்யா?”

”அதை நான் வேற சொல்லணுமா? ஜோதி நீ அவர் உன் வாழ்க்கையில் தலையிட்டது பிடிக்காமல் வெறுக்கற. ஆனால், அவர் உனக்கு நல்லது தான் செய்திருக்கார். ஒரு நாள் இல்லைனாலும் ஒரு நாள் இதை நீ புரிஞ்சிக்குவ. உன் வாழ்க்கையில் வந்த ஒவ்வொரு பிரச்சனைக்கும் நீதான் காரணம். உங்க அண்ணன் எல்லாத்தையும் என்னிடம் சொல்லிட்டார்” என்று சொல்லி அவளது கோபத்தை அதிகரித்தாள் வைஷாலி.

“சரிம்மா, நான்தான் தப்பா புரிஞ்சிகிட்டேன். உனக்கு அந்த விக்ரமை பத்தி நல்லா தெரியுமே, அப்போ நான் சொல்ற விஷயம் உண்மையா பொய்யான்னு சொல்லேன்” என்றாள்.

“என்ன?”

“விக்ரம் ஒரு பொண்ணை உயிருக்கு உயிராய் காதலிக்கிறான் அது தெரியுமா?”

வைஷாலிக்கு ஆச்சரியமும், அதிசயமுமாக இருந்தது. “தெரியாது. அது

யாருன்னு தெரிஞ்சிக்க வேண்டிய அவசியமும் இல்லை” என்றாள்.

“அதெப்படி, நீ அவசியம் தெரிஞ்சிக்கணும்... அப்போ தானே நீ அவனை எந்த அளவுக்கு சரியா எடை போட்டிருக்கன்னு உனக்குத் தெரியும். அந்தப் பொண்ணு பேரு...” என்றபோது, “ஜோதி!” என்ற அதட்டலுடன் ராகவ் கோபமாக அங்கே வந்தான்.

அதுவரை கோபமும், வன்மமுமாக பேசிக்கொண்டிருந்த ஜோதி, ராகவை கண்டதும் அடங்கிவிட்டாள்.

“இப்போ இது ரொம்ப முக்கியமா? அது யாரா இருந்தா என்ன? உனக்குத் தேவையில்லாத விஷயத்தில் நீ எதுக்கு தலையிடுற?” என்று அதட்டியவன்,
“வைஷாலி! தலை வலிக்குது, கொஞ்சம் ஸ்ட்ராங்கா கா.ஃபி கொண்டுவா” என்றான்.

அவள் வெளியே சென்றதும், “ஏய்! இப்போ எதுக்கு தேவை இல்லாமல் இந்தக் கதையை இழுக்கற? என்ன தெரியும் உனக்கு விக்ரம் சார் பத்தி?”

“எல்லாம் தெரியும். அன்னைக்கு கோயில்ல அவங்க பேசினதை நீ மட்டும் கேட்கல நானும்தான் கேட்டேன்” என்றாள் அலட்சியமான குரலில்.

அவன் பார்த்தப் பார்வையில் எங்கே அடித்துவிடுவானோ என்று உள்ளுக்குள் பயம் இருந்த போதும் அழுத்தமாக நின்றிருந்தாள்.

“அதுக்கு என்ன இப்போ? இது எங்க ரெண்டு பேர் சம்மந்தப்பட்ட

விஷயம். அம்மா வீட்டுக்கு வந்தியா; வந்த வேலை முடிந்ததா; உன் வீட்டுக்குக் கிளம்பிட்டேயிரு. இந்த மாதிரி குட்டிக் கலாட்ட செய்யும் வேலையெல்லாம் வச்சிக்காதே. நான் எல்லா நேரமும் அமைதியாக இருக்கமாட்டேன். வைஷாலிக்கு இந்த விஷயம் தெரிய வந்து அவ சங்கடப்பட்டா நான் பொல்லாதவனாகிடுவேன். உன்னைத் தவிர இந்த மாதிரி லூசுத்தனமான வேலையை யாரும் செய்யமாட்டாங்க. ஜாக்கிரதையா இருந்துக்கோ" என்று எச்சரித்தான்.

அவனது குரலில் இருந்த உறுதியே இவன் செய்வான் என்று உணர்த்த, அமைதியாக நின்றிருந்தாள்.

கா்ஃபியுடன் வந்த வைஷாலியிடம், "ஜோதிக்கு கா்ஃபி கொண்டு வரலையா?" என்று கேட்டான்.

"அவளுக்கு ஹார்லிக்ஸ் கலந்து கொண்டு வரேன். நீங்க தலைவலின்னு சொன்னதால உங்களுக்கு முதல்ல கொண்டு வந்துட்டேன். உங்க மீட்டிங் நல்லபடியா முடிந்ததா?" என்றாள் புன்னகையுடன்.

"ம், முடிந்தது..." என்று இருவரும் பேசிக்கொண்டிருக்கும் போதே அறையிலிருந்து வெளியேறிய ஜோதியின் மனத்தில் கோபம் எரிமலையாக கனன்று கொண்டிருந்தது.

அத்தியாயம் - 30

ராகவிற்கு ஜோதியை நினைத்துக் கவலை அதிகரித்துக் கொண்டே இருந்தது. வாழ்வின் இருளைப் போக்கும் ஒளியைப் போல, அனைவருக்கும் உபயோகமாக இருக்க வேண்டுமென்று லஷ்மியும்,

மணிகண்டனும் யோசித்து மகளுக்கு, ‘ஜோதி’ என்று பெயர் வைத்தனர். ஆனால், அவளோ பெயருக்கும், தனக்கும் சம்மந்தமில்லை என்று, தனது ஒவ்வொரு செயலிலும் பெற்றவர்களுக்கும், மற்றவர்களுக்கும் புரியவைத்துக் கொண்டிருந்தாள்.

எதிர்வீட்டிலிருந்த சங்கரனும் தமிழ்நாட்டுக்காரர் என்பதோடு, இருவரும் ஒரே கம்பெனியில் பணிபுரிந்து கொண்டிருந்ததால், அவரைத் தங்கள் வீட்டில் ஒருவராகவே நினைத்தனர். சங்கரன் திருமணமாகி, குழந்தை பிறந்து இரண்டு வருடம் கழித்தே, தனது குடும்பத்தை பூனேவிற்கு அழைத்து வந்தார்.

லஷ்மியும், மணிகண்டனும் அவர்களிடம் பாசத்துடன் இருந்த போதும், தேவிகாவிற்கு அவர்களைக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அதை அவர்களும் உணர்ந்தே இருந்தனர். வசதி வாய்ப்போடு வளர்ந்தவர் போகப் போகப் புரிந்து கொள்வார் என்று எண்ணிக்கொண்டார் மணிகண்டன்.
ஆனாலும், பார்த்த முதல்நாளே பெண்கள் இருவரின் மனத்திலும் திரை விழுந்துவிட்டது. ஆண்கள் இருவரும் எப்போதும் போல இயல்பாகவே இருந்தனர். ராகவும், ஜோதியும் இருந்ததால் வைஷாலிக்கு பெரும்பாலான நேரம் அவர்களது வீட்டிலேயே கழிந்தது.

சிறு வயது முதலே தேவையில்லாத குணங்களோடு வளர்ந்த ஜோதிக்கு, வைஷுவிடம் இருப்பதைப் போல உடைகள் இல்லை; விளையாட்டுச் சாமான் இல்லை; சைக்கிள் இல்லை என்று எந்த நேரமும் சலிப்புடனும், அழுகையுடனும் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தாள்.

இவை அனைத்தையும், கேட்காமலேயே தன்னுடன் பகிர்ந்து

கொள்ளும் வைஷாலியை, தன் விருப்பத்திற்கேற்ப ஆட்டுவித்தாள். வளர வளர ஜோதிக்கு, வைஷாலி மீது பொறாமையும் சேர்ந்தே வளர்ந்தது. செல்வ மகளாக வளர்ந்தவள் மீது எப்போதும் ஒரு காழ்ப்புணர்ச்சியுடனே இருந்தாள்.

இது எதையும் அறியாத வைஷாலி, தோழியின் மீது அளவு கடந்த அன்பைப் பொழிந்தாள். வைஷாலி, ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது, ஜுரம் என்று படுத்த லஷ்மி, பத்தே நாட்களில் நிரந்தரமாகக் கண்ணை மூடிவிட்டார். லஷ்மியின் இழப்பு அந்தக் குடும்பத்தை மட்டுமல்ல, வைஷாலிக்கும் பெருத்த துயரத்தைக் கொடுத்தது.

பதினேழு வயது மகனும், பன்னிரெண்டு வயது மகளுடனும் மணிகண்டன் வாழ்க்கையை எதிர்கொள்ளும் வழி தெரியாது மலைத்து நின்றார். சங்கரனின் நட்பும், ராகவின் முயற்சியும் இல்லாமல் போயிருந்தால் எப்போதோ தொலைந்து போயிருப்பார்.

தோளுக்கு மிஞ்சினால் தோழன் என்பதற்கேற்ப, தந்தைக்கு எல்லா வகையிலும் தோள் கொடுத்தான் ராகவ். கோபமும், ஆங்காரமும் கொண்ட ஜோதியை, ராகவ் ஒருவனால் மட்டுமே சமாளிக்க முடிந்தது. தாயில்லாத ஜோதியின் மீது பரிதாபம் கொண்ட வைஷாலி, முடிந்தவரை விட்டுக்கொடுக்க ஆரம்பித்தாள். அவ்வப்போது இருவருக்குள்ளும் ஏற்படும் சண்டைகள் கூட நின்று போனது.

தனக்காக ஒவ்வொருவரும் பார்த்துப் பார்த்துச் செய்வதை, தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டாள் ஜோதி. இந்நிலையில் சங்கரனுக்கு பதவி உயர்வுடன் மாற்றல் வர, துயரத்துடனேயே அவர்களைப் பிரிந்து சென்றாள் வைஷாலி.

ஆனாலும், இருவரும் பன்னிரெண்டாம் வகுப்பு வரை ஒரே பள்ளியில் படித்தனர். தனக்குப் பண்டிகைகளுக்கு உடுப்பு வாங்கும் போதெல்லாம் ஜோதிக்கும் சேர்த்தே வாங்குவாள். தேவிகாவிற்கு இது பிடிக்காத போதும், அம்மா இல்லாத பெண் என்று எதுவும் சொல்லாமல் விட்டுவிடுவார்.

தேவிகாவிற்கு மட்டுமல்ல, ராகவிற்கும் இது பிடிக்கவில்லை. சங்கரனிடம் ஜாடைமாடையாக சொல்லிப் பார்த்தும் பலன் இல்லாமல் போனது. தேவிகாவிற்கு தங்களைப் பிடிக்கவில்லை என்று எப்போது உணர்ந்தானோ அன்றிலிருந்தே வைஷாலியிடம் பேசுவதைத் தவிர்த்துவிட்டான்.

வலிய வந்து பேசும் அவளைத் தவிர்ப்பது, ஆரம்பத்தில் அவனுக்குப் பெரும்பாடாக இருந்தது. ஆனாலும், சமாளித்துக் கொண்டான். வைஷாலியும் என்ன உணர்ந்தாலோ அவனிடம் பேசுவதை நிறுத்திக் கொண்டாள். இருவரும் எதிரெதிரே பார்த்துக்கொள்ள நேர்ந்தாலும், சிறு புன்னகைக்குக் கூடப் பஞ்சமாகிப் போனது.

அன்று கல்லூரி விரைவாக முடிந்துவிட, வைஷாலி பேருந்து நிறுத்தத்தில் தனியாக நின்றுகொண்டிருந்தாள். வானில் திரண்ட கருமேகங்களைப் பார்த்தவள், சலிப்புடன் கையிலிருந்த மொபைலில் யாருக்கோ முயன்று கொண்டிருந்தாள்.

“ஹாய்! என்ன இங்கே நின்னுட்டு இருக்க?” என்ற குரலைக் கேட்டுப் பார்வையை உயர்த்தியவள், எதிரில் நின்றிருந்தவனைப் பார்த்தாள். வில்லென வளைந்திருந்த அவளது புருவங்கள் வியப்பில் உயர்ந்து தாழ்ந்தது.

“எக்ஸ்கியூஸ் மீ… நீங்க யாரோன்னு நினைச்சி என்கிட்ட பேச்சிட்டு இருக்கீங்கன்னு நினைக்கிறேன்” என்றாள் தீவிர முகபாவத்துடன்.

இறுக்கமான முகத்துடன் உதடுகளை மடித்துக் கடித்தபடி, பின்னந்தலையைத் தடவியவன், “நீ வைஷாலின்னு தெரிஞ்சிதா பேசறேன்” என்றான்.

“பரவாயில்லையே… என் பேரை இன்னும் ஞாபகம் வச்சிருக்கீங்களா? எங்ககிட்டல்லாம் நீங்க பேசமாட்டீங்களே என்ன திடீர்ன்னு…?”

“கொஞ்சம் பேசணும்…”

வீணாக அலட்டுவாள் என்று நினைத்தான். ஆனால், “சரி” என்று பதிலளித்து அவனை நிம்மதியடையச் செய்தாள்.

“அந்த கா.ஃபி ஷாப்பில் உட்கார்ந்து பேசலாமா?”
“ஓசியில் கா.ஃபி வாங்கித் தருவீங்களே கட்டாயம் வரேன்” என்று சிரித்தவளுடன் இணைந்து நகைத்தான்.

ஆளுக்கொரு கா.ஃபியை வாங்கிக்கொண்டு ஒரு பக்கமாக இருந்த டேபிளில் அமர்ந்தனர்.

“மாமா எப்படி இருக்காங்க?”

“நல்லாயிருக்காங்க. உன்னைப் பத்தி அடிக்கடி ஜோதிகிட்ட கேட்டுட்டு இருப்பாங்க. நீ ஏன் இப்போல்லாம் வீட்டுக்கு வர்றதில்ல?”

சட்டென விழிகளை உயர்த்திப் பார்த்தாள். கேட்ட பின்பே, 'தேவையில்லாமல் எதற்கு இதைக் கேட்டோம்?' என்று அவனுக்குத் தோன்றியது.

இதழோரம் புன்னகை மலர, "ஃபைனல் இயர் இல்லையா, கொஞ்சம் பாடமெல்லாம் அதிகம். அதான் மாசத்துல ரெண்டு முறை அப்பா வர்றாங்களே! உங்களைப் பற்றியெல்லாம் அப்பா நிறைய சொல்வாங்க" என்றாள்.

"ஓ!" என்றவன் மௌனமானான்.

"என்னமோ பேசணும்னு சொன்னீங்களே…"

"ஜோதியைப் பத்தித் தான்" என்றவன் மேற்கொண்டு சொல்ல சற்றுத் தயங்கினான். "வைஷூ! ஜோதி, உன்னை எக்ஸ்பிளாய்ட் பண்றா. உன்னோட நல்ல நட்பை, தன்னோட சுயநலத்துக்காக பயன்படுத்திக்கறா. சோ…"

"சோ…" நெற்றியைச் சுருக்கிக் கேட்டாள்.

"தப்பா நினைக்காதே வைஷூ, உன் நல்லதுக்குச் சொல்றேன். நீ அவளை விட்டுக் கொஞ்சம் விலகி இரு."

"விலகி இருன்னா… எப்படி? நீங்க என்னிடம் விலகி இருக்கீங்களே இப்படியா?"

திடுக்கிட்டுப் போனான் ராகவ். 'இதற்கு என்ன பதில் சொல்வது?' புரியாமல் தவித்தான்.

“என்னால உங்களை மாதிரி இருக்கமுடியாது. ஒருத்தர் நம்மை காரணமில்லாமல் தள்ளிவைக்கிறாங்கன்னா அதோட வலி என்னன்னு அனுபவிக்கிறவங்களுக்குத் தான் தெரியும் மிஸ்டர்.ராகவ்” என்றவளது கண்கள் கலங்கியது.

“ஜோதி கூடவே கிட்டத்தட்ட பத்து வருஷம் ஒண்ணா வளர்ந்திருக்கேன். பதினெட்டு வருஷம் அவளோடு பழகியிருக்கேன். அவளுக்கு இருக்கும் கோபம்; ஆத்திரம்; அவ்வளவு ஏன் அவளுக்கு என் மேல இருக்கும் பொறாமைகூட எனக்குத் தெரியும்.

அவளுக்கு ஏன் என் மேல் மட்டும் இந்த ஆத்திரம்? இது எல்லாமே தன்னிடம் இல்லாதது; என்னிடம் இருக்கு என்ற ஒரே மனோபாவம் தான்.
ரெண்டு பேருக்கும் ஒரே வயசு, பக்கத்துப் பக்கத்தில் இருக்கோம். எனக்குக் கிடைப்பதெல்லாம் அவளுக்கு கிடைக்கலையேங்கற எண்ணம் அவளுக்குப் பொறாமையா மாறுது. அவளோட எண்ணமும் செயலும் வேணா தவறாக இருக்கலாம். ஆனால் ஜோதி தப்பானவள் இல்லை.

அவ விரும்பும் பொருளை நான் வாங்கிக் கொடுத்தா சந்தோஷப்படுறா. என்கிட்ட அவளுக்குப் அன்பு பெருகுது. அடுத்தது அவளுக்கு எதிராக நடக்கும் போது அது மறைஞ்சி போகுது. இன்னைக்கு அவளோட பிடிவாதம் அவ செய்வதை சரின்னு நியாயப்படுத்தலாம். ஆனால், கட்டாயம் ஒரு நாளைக்கு எல்லாத்தையும் புரிஞ்சிக்குவா.

ஜோதி செய்வது தப்புன்னு உங்களுக்குத் தெரியுது அதுக்காக நீங்க அவளை விலக்கி வச்சிருவீங்களா? முடியாது. ஏன்னா அவ உங்க கூடப் பிறந்தவ. ஆனால், நான்… யாரோ ஒருத்தித்தானே. என்னை

விலக்கி வைக்கிறது உங்களுக்குக் கஷ்டமா இருந்திருக்காது” என்று ஒரே மூச்சாக பேசியவளுக்குத் தொண்டை அடைத்தது.

கண்களை மூடி தலையைப் பிடித்தபடி அமர்ந்திருந்தவளைப் பார்த்த ராகவின் பார்வையில் பிரமிப்பு தோன்றியது. ‘இவளுக்கும், ஜோதிக்கும் ஒரே வயது தானே! இவளுக்கு இருக்கும் பக்குவம் ஏன் அவளுக்கு இல்லாமல் போனது?’ என்று நினைத்துக் கொண்டவனுக்கு, ‘கடைசியில் தன்னையே அல்லவா குற்றவாளியாக நினைக்க வைத்து விட்டாள்’ என்று எண்ணி மனத்திற்குள் சிரித்துக் கொண்டான்.

முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டு நிமிர்ந்தவள், “எனிவே, உங்க கா∴பிக்கு ரொம்ப தேங்க்ஸ்” சொன்ன வேகத்துடனேயே கா∴பி ஷாப்பின் வாசலை நோக்கி நடந்தாள்.

“வைஷூ! ப்ளீஸ் நில்லு” என்று அவள் பின்னாலேயே ஓடிவந்தான். தவிப்புடன், “நான்…” என்றவனைக் கைகாட்டித் தடுத்தாள்.

“எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பார்க்காதது தான் உண்மையான ∴ப்ரெண்ட்ஷிப். நான் உண்மையான ஒரு ∴ப்ரெண்டா இருக்கணும்னு ஆசைப்படுறேன். கடைசி வரைக்கும் அப்படியே இருப்பேன். உங்களோட ∴பேவருக்கு என்னால் உடன்படமுடியாது. சாரி” என்றாள்.

“அதில்லை வைஷூ! ஐயம் சாரி…”

“இட்ஸ் ஓகே. ஆனால், அதை உங்ககிட்ட நான் எதிர்பார்க்கலை. என்னை மனசுல வச்சி என்னிடம் பேச வந்ததுக்கு ரொம்ப தேங்க்ஸ்” என்றபடி நடக்க ஆரம்பித்தாள்.

“ஜோதி மட்டும்தான் உன்கூடவே வளர்ந்தாளா? நான் இல்லையா? நீ தேங்க்ஸ் சொல்ற அளவுக்கு நான் அந்நியமாகிட்டேனா உனக்கு?” ஆற்றாமையுடன் கேட்டான்.

அவனது கண்களை நேராகச் சந்தித்தவள், “ஒரு நாளும் நான் அப்படி நினைச்சதில்ல. நீங்க அப்படி நினைச்சதால்தான், இத்தனை நாளா என்னை ஒதுக்கி வச்சிருந்தீங்க.”

“அதுக்குத் தான் சாரி சொல்லிட்டேனே. நீ நினைக்கிறா மாதிரி நான் உன்னை அந்நியமா நினைக்கலை வைஷூ. அதுக்குக் காரணம்…”

“எங்க அம்மா…” என்று அவன் ஆரம்பித்ததை முடித்து வைத்தாள். ஆமாம் என்பது போல தலையசைத்தான்.

“அதுக்கு நீங்க என் அம்மாவிடம் பேசாமல் இருந்திருக்கணும். நான் என்ன செய்தேன்?” அத்தனை நாள் அடக்கி வைத்திருந்த ஆத்திரமெல்லாம் சீறிப் பாய்ந்து வந்தது.

“ஏதோ அறிவுக் கெட்டதனமா பண்ணிட்டேன். உன்னை மாதிரி எடுத்துச் சொல்லிப் புரிய வைக்க நல்ல ப்ரெண்ட் இல்லை” என்று பரிதாபமாக முகத்தை
வைத்துக் கொண்டுச் சொன்னவனைப் பார்த்து கலகலவென நகைத்தாள்.

அவள் மீதிருந்த பிரமிப்பு, அந்த நொடி அவனுக்குள் காதலாக மலர்ந்தது. இத்தனை ஆண்டுகளாக மனத்திற்குள் மொட்டுவிட்டிருந்த நேசம்தான், இப்போது காதலாக மலர்ந்திருக்கிறது என்று புரிந்து கொண்டான்.

அதை சற்றும் உணராதவளாக, “சரி ராகவ். கிளம்பறேன். அப்பாவுக்கு போன் டிரை பண்ணேன் கிடைக்கலை. ஆட்டோ பிடிச்சிக்கிறேன். அம்மாவுக்கு போன் பண்ணா டென்ஷன் ஆகிடுவாங்க. அதனால் வீட்டுக்குப் போய்த் தான் ஆட்டோவில் வந்த கதையை சொல்லணும்” என்றாள்.

“உங்க வீட்டுத் தெருவில் பைக் நுழையாதா?”

“இதென்ன கேள்வி? ஆட்டோ நுழையும் போது பைக் போகாதா?”

“அப்போ என்கூட பைக்கிலேயே வரலாமே...”

“ஹப்பா! நூறு ரூபா... என் பாக்கெட் மணி தப்பிச்சிது” என்று சிரித்தவள் அவனுடன் கிளம்பினாள்.

அவனுடன் பைக்கில் சென்று இறங்கியதால், தேவிகாவிற்கு ஏற்பட்ட பயம், அந்தப் பயத்தால் தனக்குள் ஏற்பட்ட காதலைப் பற்றி ராகவிடம் சொன்னாள். அவனோ! அவள் மீதிருந்த நேசத்தை அவளிடமே மறைத்தான். தன்னால் ஜோதியின் வாழ்க்கைத் தடம் மாறக்கூடாது என்றான். ஆனால், ஏற்கெனவே தங்கையின் வாழ்க்கையை அவளே தீர்மானித்துக் கொண்டது, அப்போது அவனுக்குத் தெரியவில்லை.

போதாதற்கு ராகவை சந்தித்த தேவிகா கேட்ட கேள்விகளுக்கு அவனால் பதில் சொல்ல முடியவில்லை. இதனாலேயே தனது காதலை அவளிடமிருந்து தொடர்ந்து மறைத்து வந்தான். ஆனால், இதிலெல்லாம் நான் உனக்குக் குரு என்பது போல, அவனுக்கு ஒவ்வொரு இடத்திலும் செக் வைத்தாள் வைஷாலி.

அடிக்கடி வீட்டிற்கு வர ஆரம்பித்தாள். ஆயினும் சமயமும், சந்தர்ப்பமும் அவனுக்கு வாகாக அமையவில்லை. ஜோதியால் நேர்ந்த தொடர் பிரச்சனைகளில் அவன் துவண்டு போன நேரமெல்லாம் தோழியாக அவனுக்குத் தோள் கொடுத்தாள்.

‘தனக்காக ஒருத்தி உருகுகிறாள்’ என்று நினைத்தவனுக்கு, அவள் மீது காதல் பொங்கி வழிந்தது. ஒரு கட்டத்திற்கு மேல் தன் காதலைச் சொன்னவன், அதை மறைத்ததற்கான காரணத்தையும் சொன்னான்.

“பிரச்சனைகள் முடிந்து நீயாக என்னைத் தேடி வரும் வரை உன்னைத் தொந்தரவு செய்யமாட்டேன்” என்றவள் அதைப் பின்பற்றவும் செய்தாள்.

கல்லூரிப் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டுமென்று அலுவலகத்திற்கே அவள் வருவாள் என்பதை, அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

அதன் பிறகு நடந்த ஒவ்வொன்றையும் நினைத்தவனுக்குச் சிரிப்பாக வந்தது. அவளைப் பற்றிப் பெருமையாகவும் இருந்தது. வைஷாலியால் நிச்சயமாக ஜோதி மாறிவிடுவாள் என்று நம்பினான்.

அத்தியாயம் - 31

அடுத்து வந்த நாட்களில் அனைவரது வாழ்க்கையும் சீராக ஓடிக்கொண்டிருந்தது. அன்று பத்து மணியாகியும் எழுந்து வராத ஜோதியைத் தேடி அவளது அறைக்குச் சென்றாள் வைசாலி.

“ஆ..அம்மா!” என்று முனகிக் கொண்டிருந்தவளைக் கண்ட

வைஷாலிக்கு பயமாகிப் போனது.

“ஜோ! என்னப்பா ஆச்சு? இடுப்பு வலிக்குதா?” பதட்டத்துடன் விசாரித்தாள்.

“காலெல்லாம் குடையுது வைஷூ. இடுப்பு இழுத்துப் பிடிச்சா மாதிரி இருக்கு” என்று வலியில் கண்கலங்கினாள் ஜோதி.

“கொஞ்சம் இரு இதோ வந்திடுறேன்” என்றவள் ஹீட்டரை போட்டுவிட்டு, கீழே இறங்கி ஓடினாள்.

கஷாயத்துடன் வந்தவள், “இதைக் குடிச்சிட்டு வந்து குளி. சூட்டு வலியாக இருந்தால் சரியாகிடும். இடுப்பு வலியாக இருந்தால் அதிகமாகும்.”

அவள் சொன்னதைக் கேட்ட ஜோதிக்கு வியர்த்து வழிந்தது.

“பயப்படாதே. இதைக் குடி முதல்ல” என்று குடிக்கவைத்தாள்.

குளித்துவிட்டு வந்த ஜோதிக்கு வலி விட்டு விட்டு வர ஆரம்பிக்க, வைஷாலி, மாமனாரிடம் சொல்லிவிட்டு, கால் டாக்சியை அழைத்தாள். ராகவை ஹாஸ்பிட்டலுக்கு வரச் சொல்லிவிட்டாள்.

ஒருநாள் முழுதாக வேதனையை அனுபவித்த ஜோதிக்கு, கடைசியில் ஆபரேஷன் செய்தே குழந்தையை எடுக்க வேண்டியதாகியது. ரோஜா மொட்டைப் போல, தொட்டால் சிலிர்க்கும் குழந்தையைப் பார்த்த வைஷாலிக்கு சந்தோஷம் தாங்கவில்லை.

“ராகவ்! நான் அத்தை ஆகிட்டேன்” என்று குதூகலத்துடன் சிரித்தவள் கரத்தில், குழந்தையைக் கொடுத்தார் நர்ஸ்.

பயத்துடன் கை நீட்டி வாங்கியவளை, தனது பிஞ்சுக் கால்களால் தட்டி ஸ்பரிசிக்க, அதன் மென்மையில் பூரித்துப் போனாள். வைஷாலியின் தோளை அணைத்தபடி பக்கவாட்டில் நின்றிருந்த ராகவ், குழந்தையின் முகத்திற்கு நேராக சொடக்கிட, விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தது அந்தச் சின்னஞ்சிறு சிசு.

“ஹய்யோ! பார்த்தீங்களா இப்போ குழந்தைங்கள்ளாம் ரொம்ப அட்வான்ஸா இருக்காங்க இல்ல?” என்று நெக்குருகிப் போன மனைவியைப் பார்த்து புன்னகைத்தான்.

அப்படி இப்படியென முழுதாகப் பன்னிரெண்டு நாட்கள் மருத்துவமனையில் இருந்துவிட்டு வீடு திரும்பினாள் ஜோதி. பகலெல்லாம் உறங்கும் குழந்தை, இரவெல்லாம் விழித்திருந்தது. வைஷாலியின் பெரும்பாலான நேரமெல்லாம் குழந்தையுடனேயே கழிந்தது.

குழந்தையைப் பார்க்க வந்த தேவிகா, “வைஷூ! நீ கல்யாணம் ஆகி வந்து ஒரு மாசம் ஆகுது. அம்மா வீடுன்னு ஒண்ணு இருப்பதை மறந்தே போயிட்டியா? போன் கூட பேசறதில்லை” என்று ஆற்றாமையுடன் கேட்டுவிட்டார்.

“எப்படிம்மா மறப்பேன்? இந்தக் குட்டிப் பொண்ணு கூட இருந்தால், நேரம் போறதே தெரியறதில்லை” என்றாள் சிரித்துக் கொண்டே.

“சரி, நீயும், மாப்பிள்ளையும் ரெண்டு மூணு நாள் சேர்ந்து தங்குவது

போல வாங்க” என்றழைத்தார்.

“கட்டாயம் வரேன்மா. ஜோதியையும், குழந்தையையும் பத்திரமா அவங்க வீட்டுக்கு அனுப்பி வச்சிட்டு வர்றேன். நீங்க என்னைக் கிளம்புன்னு துரத்தி விடும் அளவுக்கு நான் இருக்கேன் போதுமா” என்று அன்னையின் தோளில் சாய்ந்து கொண்டு, சமாதானம் செய்தாள்.

****

அன்று அலுவலகத்திலிருந்து வைஷாலியை போனில் அழைத்த ராகவ், “வைஷு டியர்! இன்னைக்கு ஈவ்னிங் ரெடியாக இரு. நாம சினிமாவுக்குப் போயிட்டு, அப்படியே வெளியே டின்னர் முடிச்சிட்டு வரோம். ஓகேவா” என்றான் ஆசையுடன்.

“என்ன ராகவ் திடீர்ன்னு சொல்றீங்க? நான் இப்போ எங்கேயும் வரும் ஐடியாவில் இல்லை.”

“என்ன வைஷு இப்படிச் சொல்ற? இன்னைக்கு நமக்குக் கல்யாணம் ஆகி ஐம்பதாவது நாள். இதை செலிபரேட் பண்ண வேணாமா?”

“புரியாமல் பேசாதீங்க. ஜோதி குழந்தையோடு இருக்கா. மாமா இருக்காங்க இவங்களை விட்டுட்டு நாம தனியாகப் போய் இதைக் கொண்டாடணுமா? இந்த ஐம்பதாவது நாளை விட்டா எழுபத்தைந்தாவது, நூறாவது நாள் எல்லாம் வரப்போகுது அப்போ வெளியே போகலாம்” என்று சுலபமாக முடித்துவிட்டாள்.

ராகவிற்கு மனத்திற்குள் ஏமாற்றமாக இருந்தது. “நான் எவ்வளவு

எதிர்பார்ப்போடு இருந்தேன் தெரியுமா?" என்றான் சலிப்புடன்.

"ப்ளீஸ் ராகவ். புரிஞ்சிக்கோங்க. நீங்க முதலிலேயே என்னிடம் கேட்டிருந்தா நான் சொல்லியிருப்பேன். ஜோதி அவளோட வீட்டுக்கு நல்லபடியா போகட்டும். அப்புறம் நீங்க சொல்லும் இடத்துக்கெல்லாம் வரேன் போதுமா" என்றாள்.

"ஆனால், இதுக்கெல்லாம் இருக்கு உனக்கு ஒரு நாளைக்கு" மிரட்டும் தொனியில் சொன்னான்.

"காத்திருக்கேன்" என்றவள் சிரிப்புடன் போனை வைத்தாள்.

ஹும் என்ற பெருமூச்சுடன், தனது உணர்வுகளையும் சேர்த்துப் புதைத்துக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தான் ராகவ்.

வழக்கத்தை விட நேரம் கழித்து வீட்டிற்குள் நுழைந்தவனது முகம் சோர்வுடன் இருந்தது.

"என்னப்பா டல்லா இருக்க?" என்ற தந்தைக்கு, "வேலை அதிகம்" என்றவன் தனக்கு இரவு உணவு வேண்டாம் என்று சொல்லிவிட்டு அறைக்குச் சென்றுவிட்டான்.

ஜோதி என்ன நினைத்தாளோ குழந்தை எழுந்தால் தான் பார்த்துக்கொள்வதாகச் சொல்லி வைஷாலியை அனுப்பி வைத்தாள். ஜோதியிடம், 'என்ன சொல்லிச் சமாளித்துவிட்டுச் செல்வது' என்று யோசித்துக்கொண்டிருந்தவளுக்கு நிம்மதியாக இருக்க, வேகமாக தங்கள் அறைக்குச் சென்றாள்.

பால்கனியில் நின்று வெளியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த ராகவை பின்னாலிருந்து அணைத்தாள். தன்னைச் சுற்றிப் படர்ந்திருந்த கரத்தை விலக்கி அவளை முன்னால் இழுத்தவன், அமைதியாக அவளைப் பார்த்தான்.

ராகவ் எப்போதுமே அமைதியானவன் தான். தனது கோபத்தைக் கூடக் கடுமையாக காட்டத் தெரியாதவன் தான். ஆனாலும், இன்றைய அவனது நிதானம், அவளைப் பரிதவிக்க வைத்தது.

“ராகவ்! என் மேல் கோபமா?” அவளது மனம் பதைபதைத்தது.

“சேச்சே! கோபமெல்லாம் இல்லை. ஆனால், சின்ன வருத்தம்.”

“நான் என்ன பண்ணட்டும் ராகவ்? இருக்கறதை தானே சொன்னேன். நீங்க கூப்பிட்டதும் வந்திருந்தா, ஜோதி வெளியே சொல்லலைனாலும் மனசுக்குள்ள தப்பா நினைக்க சான்ஸ் இருக்கு” என்றாள் தாங்க முடியாமல்.

“நான் உன்னை ஒண்ணுமே கேட்கலையே வைஷூ.”

“அதான் ஏன் கேட்கலை? இங்கே பாரு உனக்கு வருத்தமா இருந்தா என்னை ரெண்டு திட்டுத் திட்டு; வாங்கிக்கிறேன். இப்படி அமைதியா இருக்காதே எனக்குக் கஷ்டமா இருக்கு. உன்னைப் பார்த்தா எனக்கு எங்க அப்பா நினைவு தான் வருது. அவரும் இப்படித்தான் அம்மா சொன்னா எதுக்கும் பெரிசா ரியாக்ட் பண்ண மாட்டார். மனசுக்குள்ளயே வச்சிப்பார். இப்போ நீயும் அப்படியேதான் இருக்க. எனக்கு அழுகை அழுகையா வருது” என்றாள் குரல் கரகரக்க.

“இதெல்லாம் ஓவர் வைஷூ. நான்தான் இதைப் பெரிசா எடுத்துக்கலைன்னு சொல்லிட்டேனே, அப்புறம் எதுக்கு இந்த அழுகை?” என்று புன்னகைத்தான்.

“நிஜமா கோபம் இல்லை இல்ல...”

“இல்லை” என்றான்.

“அப்போ ப்ரூவ் பண்ணு”

“எப்படி?”

“அதையும் நானே சொல்லணுமா?”

“அப்படி என்ன தான் புதுசா சொல்றேன்னு பார்க்கிறேன்.”

“உன் மேல கோபம் இல்லைன்னு சொல்லு.”

“உன் மேல எனக்குத் துளி கூடக் கோபம் இல்லை.”

“உன்னை, எனக்கு ரொம்பப் பிடிக்கும்.”

“உன்னை, எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும்.”

“அப்போ என்னைச் சேர்த்துப் பிடிச்சிக்கோ” என்றவள், கூச்சத்துடன் மறுபக்கம் திரும்பிக் கொண்டாள்.

சிரித்துக் கொண்டவன், அவள் கரத்தைப் பற்றி இழுத்துத் தன்னோடு

சேர்த்து இறுக அணைத்துக் கொண்டான்.

“இப்போ உன் சந்தேகம் போச்சா?”

“இன்னும் இல்லை.”

“இன்னும் என்ன செய்து உன் சந்தேகத்தை தீர்க்கணும்?”

“மாங்கா மாங்கா… சரியான மாங்கா. இன்னும் விளக்கமா சொல்வாங்களாக்கும்” என்று சப்தமாக முணுமுணுத்தவள், “ஒண்ணும் செய்யவேணாம் நான் கீழே போறேன். நீ இப்படியே வானத்தை முறைச்சிட்டு நில்லு” என்று அவன் கரத்தை விலக்க முயல, ராகவின் கரங்கள் அவளை அள்ளிக் கொண்டது.

தனது உதடுகளைப் பேனாவாக்கி, அவள் கன்னத்தில் முத்தத்தால் கவிதை வரைந்தான். அவளது கூந்தல் மலர்களைச் சுவாசம் பிடித்தவன், தன் இதயத்து ஆசைகளையெல்லாம் பார்வையில் தேக்கி தன்னவளைப் பார்த்தான். இருவரின் பார்வையும் சங்கமிக்க, அவள் உருகிப் போனாள்.

அவர்களது உள்ளத்து எண்ணங்களைப் புரிந்து கொள்ள அங்கே மொழி தேவைப்படவில்லை. இருவரின் காதலும் கரை கடக்க, ஒருவரில் ஒருவர் கரைந்து போயினர்.

****

குழந்தைக்கு முப்பதாம் நாள் வீட்டிலேயே பெயர் சூட்டும் வைபவத்தைப் பிரமாதமாக நடத்தி முடித்தான் ராகவ். விக்ரம் கூட வந்து தலை காட்டினான். ஆர்வமாக தன்னிடம் பேசிய வைஷாலியை, உணர்ச்சியற்ற பார்வை பார்த்தான்.

அவனது பார்வையிலிருந்த வெறுமையை, அவனது வேலையினால் வந்த சோர்வு என்று நினைத்துக்கொண்டாள். ராகவிடம் அதைப் பகிர்ந்து கொண்ட போது அவன் எதுவும் சொல்லாமல் மௌனமாக விக்ரமை பார்த்தான். குழந்தைக்கு செயின் ஒன்றை பரிசளித்த விக்ரம் பத்தே நிமிடங்களில் விடைபெற்றுக் கிளம்பிவிட்டான்.

இதைக் கண்ட தேவிகாவிற்கு எதுவும் சொல்லமுடியாத நிலை. தன்னிடம் விடை பெற வந்தவனிடம், “ரத்னகிரிக்கு வந்துட்டு போ விக்ரம். உன் அம்மா நீ இப்போல்லாம் வர்றதில்லை, வந்தாலும் எதிலுமே ஈடுபாடு காட்டுறதில்லைன்னு ரொம்ப வருத்தப்பட்டாங்க” என்றதற்கு, மெல்லிய தலையசைப்பை மட்டும் பதிலாக்கிவிட்டுக் கிளம்பினான்.

உறவினர்கள் அனைவரும் கிளம்பிவிட, தேவிகாவும், சங்கரனும் கூடக் கிளம்பிவிட்டனர்.

“நீங்களாவது இருந்து போகலாமே” என்ற மகளுக்கு, “அப்பாவுக்கு மீட்டிங் நாளைக்கு போயே ஆகணும்” என்றார் சங்கரன்.

“அம்மாவையாவது விட்டுட்டுப் போகலாமே” என்றதற்கு, “நிறைய வேலை இருக்குடா. நீயும், மாப்பிள்ளையும் வீட்டுக்கு வாங்க” என்ற சங்கரன், மனைவியைக் கையோடு அழைத்துக் கொண்டு கிளம்பிவிட்டார்.

மாலை மனைவி, குழந்தையை அழைத்துக்கொண்ட குணாலுடன், மணிகண்டனும் கிளம்பினார்.

“என்ன மாமா நீங்களும் கிளம்பறீங்க?” அதிர்ச்சியுடன் கேட்டாள்.

“ஆமாம்மா பேத்தி கூட ரெண்டு நாள் இருந்துட்டு வரலாம் வாங்கன்னு மாப்பிள்ளை கூப்பிட்டார் கிளம்பிட்டேன். ரெண்டு நாள்ள வந்திடுறேன்மா” என்றார்.

“எனக்குத் தான் யாரும் இல்லாம போர் அடிக்கும். இந்தச் சின்னக்குட்டி கூட அத்தையை விட்டுட்டுப் போறா” என்று புலம்பிக்கொண்டாள் வைஷாலி.

அனைத்தையும் பார்த்துக்கொண்டு அமைதியாக நின்றிருந்த ராகவின் காதில், குணால் ஏதோ கிசுகிசுக்க, இருவரும் ரகசியமாக புன்னகைத்துக் கொண்டனர்.

“இத்தனைப் பேர் இருக்கும் இடத்தில் உங்களுக்கென்ன ரகசியம்?” என்று கடுகடுத்தாள்.

“அதுதான் ரகசியமாச்சே சிஸ்டர். அப்புறம் எதுக்கு அதைக் கேட்கறீங்க?” என்று சமயசந்தர்ப்பம் தெரியாமல் குணால் சிரிக்க, வைஷாலிக்கு ஏரிச்சலாக வந்தது.

அனைவரும் கிளம்பிச் சென்றுவிட, ராகவ் அறைக்குச் சென்றுவிட்டான். வீடே வெறிச்சோடியிருந்தது. இத்தனைப் பெரிய வீட்டில் மொட்டுமொட்டென்று இரெண்டு நாளைக்கு அமர்ந்திருக்க வேண்டும் என்று நினைத்தவளுக்கு, கடுகடுவென இருந்தது.

அத்தியாயம் - 32

யாருமில்லாத ஹாலை வெறித்துக் கொண்டு அமர்ந்திருந்தவளுக்கு, தூக்கம் கண்களைச் சுழற்றியது. திருமணமாகி வந்த நாள் முதலாக வேலை வேலை வேலைதான். பழக்கமில்லாத வீட்டு வேலைகளைச் செய்வதில் ஆரம்பத்தில் சற்று மூச்சு முட்டினாலும், எதையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கொண்டவளுக்கு அது பெரிதாக தெரியவில்லை.

பத்தே நாட்களில் வேலைகள் பிடிபட்டுவிட்டன. வைஷாலிக்கு உதவியாக வேலைக்கு ஆளை ஏற்பாடு செய்தான் ராகவ். ஆனாலும், ஜோதிக்குக் குழந்தை பிறந்த பிறகு, வேலைகள் இருமடங்காகி விட்டன. இரவில் உறக்கமும் குறைந்து போனது. இன்றும் வேலை இடுப்பை முறித்துவிட்டது. படுத்து உறங்கினால் போதும் என்பது போல இருக்க, மெல்ல எழுந்தாள்.

அப்போதுதான் நினைவுக்கு வந்தவளாக, ‘இந்த ராகவிற்கு என்ன ஆயிற்று? மூச்சுக்கு முன்னூறு முறை, “வைஷூ! வைஷூ!” என்று தன்னையே சுற்றி வருவான்… மேலே போய் கிட்டத்தட்ட அரைமணி நேரம் ஆகியிருக்கு, என்னைத் தேடியும் வரலை, கூப்பிடவும் இல்லை. அப்படி என்ன செய்றான்?’ என்று வேகமாக அறையை நோக்கி நடந்தாள்.

அறைக்குள் நுழைந்தவள், அவன் மும்முரமாக தனது உடைகளை ஒரு ஏர்பேகில் அடுக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

“ராகவ்! என்ன துணியை பேக் பண்ணிட்டு இருக்கீங்க?” புரியாமல் கேட்டாள்.

“ஊருக்குப் போகத்தான்” என்றான் சாதாரணமாக.

“ஓ! எத்தனை நாளுக்கு?” திகைப்புடன் கேட்டாள்.

“ரெண்டு நாளைக்கு. காலம்பற ஐந்து மணிக்குக் கார் வந்திடும்.”

“எந்த ஊருக்கு…? கார்லயே போகணுமா?”

“பக்கத்துலதான். ஆனால், எங்கேங்கறது சஸ்பென்ஸ். சொல்லக்கூடாதுன்னு ஆர்டர்.”

“ஆர்டரா? யாரோட ஆர்டர்?”

“விக்ரம் சார்” என்றான்.

“விக்ரமா…?”

“ஆமாம்” என்று புன்னகைத்தவன், “உன் பின்னால இருக்கும் அந்த டவலை எடு. மறந்திடப் போறேன்” என்றான்.

அவன் கேட்டதை எடுத்துக் கொடுத்துவிட்டு, அமைதியாகக் கட்டிலில் அமர்ந்தாள். “ரெண்டு நாளில் வந்திடுவீங்க இல்ல…”

அவள் குரலிலிருந்த வேறுபாட்டை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தான். அவன் பார்ப்பதைக் கண்டதும், அவசரமாகக் கண்களைத் துடைத்துக்கொண்டு, அங்கிருந்து செல்ல முயன்றவளது இடுப்பை வளைத்து அணைத்தான். அவனது அருகாமை அவளை உணர்ச்சிவசப்பட செய்ய, கண்ணீருடன் அவன் நெஞ்சில் சாய்ந்தாள்.

அவளது முகத்தைப் பற்றி நிமிர்த்தியவன், காதலுடன் அவள் கண்களில் முத்தமிட்டான். “நான் உனக்கு ஸ்வீட் சர்ப்ரைஸ் கொடுக்கலாம்ன்னு நினைத்தால், நீ என்னைக் கதிகலங்க வைக்கிற!”

புரியாமல் பார்த்த வைஷாலியின் கன்னத்தைத் தட்டியவன், பாக்கெட்டிலிருந்து இரண்டு கவர்களை எடுத்து நீட்டினான். வாங்கிப் படித்தவள் முகத்தில் குப்பெனச் சந்தோஷ ரேகைகள் பரவ, பேச்சு வராமல் திக்குமுக்காடினாள்.

ஒன்று விக்ரம், தனது புதிய அலுவலகத்தில் ராகவை மேனேஜிங் டைரக்டராக அறிவித்து ஒப்புதல் உத்தரவு. மற்றொன்று அவர்களது திருமணப் பரிசாக மூன்று நாட்களுக்கு இருவரும் கோவா சென்று வர, அவன் ஏற்பாடு செய்து கொடுத்திருந்த ஹனிமூன் டிராவல் பாக்கேஜ்.

சிரிப்புடன் புருவம் உயர்த்தியவனை, ஆசையுடன் கட்டிக்கொண்டாள். அவன் முகமெங்கும் முத்தமிட்டவள், “கங்கிராட்ஸ்” என்றாள் பூரிப்புடன்.

”தேங்க்யூ” ரகசியக் குரலில் பகன்றவன், அவளது மூக்குடன் மூக்கை உரசினான்.

“என்கிட்ட ஏன் முதலிலேயே சொல்லலை?” குற்றம்சாட்டும் குரலில் கேட்டாள்.

“சும்மா…” என்று தோளைக் குலுக்கினான்.

“இப்போ என் டிரஸ்செல்லாம் பேக் பண்ணனும்…”

“எதுக்கு...?”

“கோவா போகத்தான்...”

“அதான் எதுக்கு?” என்று குறும்பு மிளிரக் கேட்டான்.

“வெளி...” என்று ஆரம்பித்தவள், அவனது பார்வையில் தெரிந்த மாற்றத்தைக் கண்டதும், கேள்விக்கான அர்த்தம் புரிய, “சீ” என்றாள் வெட்கத்துடன்.

கோவாவில் மூன்று நாட்கள் தேனிலவை முடித்துக் கொண்டு, ரத்னகிரிக்கு வந்து சேர்ந்தனர் இருவரும். மறுவீடு முடிந்து முதன்முறையாக வீட்டிற்கு வந்திருக்கும் மருமகனுக்காக பார்த்துப் பார்த்துச் சமைத்துப் பரிமாறினார் தேவிகா.

“இன்னும் கொஞ்சம் வச்சிக்கோங்க மாப்பிள்ளை” என்ற தேவிகாவை நிமிர்ந்து பார்த்தான். ‘எப்படி இருந்தவர், இப்படி ஆகிவிட்டார்’ என்று நினைத்து மனத்திற்குள் சிரித்துக் கொண்டான்.

“என்னை எப்பவும் போல ராகவ்ன்னு பேர் சொல்லியே கூப்பிடுங்க அத்தை. மாப்பிள்ளைனா, என்னமோ ரொம்ப மரியாதை கொடுத்துத் தள்ளி வைக்கிறது மாதிரி இருக்கு” என்றான் இலகுவாக.

தட்டில் வைத்த சன்னா மசாலாவைச் சுவைத்தவன், “வாவ் அத்தை! நீங்க இவ்வளவு பிரமாதமா சமைக்கறீங்க; வைஷூக்கு, ஏன் சுடு தண்ணி கூடச் சுடவைக்கத் தெரியமாட்டேன்னுது” அவள் அங்கே இல்லை என்ற தைரியத்தில், மாமியார் புகழ் பாட்டினான் ராகவ்.

மருமகனின் பாராட்டில் உச்சி குளிர்ந்து போன தேவிகா, “எந்நேரமும் புக்கும், கையுமா இருந்தா என்ன செய்வது? தானா கத்துக்கணுங்கற ஆர்வம் இருக்கணும்” என்றார் தேவிகா.

“டெலீஷியஸ். மாமா நீங்க கொடுத்து வச்சவங்க” என்று சங்கரனைப் பார்த்துச் சொன்னவன், “இந்தச் சாப்பாட்டு ருசியை மறக்கவே மாட்டேன்” என்று நாக்கைச் சப்பு கொட்டினான்.

எதேச்சையாக திரும்பியவன் மாடிப்படியில் தன்னையே முறைத்தபடி நின்றிருந்த மனைவியைப் பார்த்தான். “நீ இங்கே தான் இருக்கியா வைஷூ?” என்று அசட்டுப் புன்னகைப் புரிந்தான் ராகவ்.

“இதே வீட்டுக்குள்ள தான் இருக்கேன். வேற எங்கே போவேன்? சீக்கிரம் சாப்பிட்டுட்டு ரூமுக்கு வாங்க, உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்” என்று கை வளையளை இழுத்து விட்டுக்கொண்டு அவனைப் பார்த்தாள்.

அவன் தட்டு காலியாக இருப்பதைப் பார்த்த தேவிகா, இன்னும் கொஞ்சம் பயத்தம் பருப்புப் புட்டை வைக்க, “அய்யோ! அத்தை இதுக்கு மேல சாப்பிடவே முடியாது…” என்று அலறினான் ராகவ்,

“சாப்பிடுப்பா, ரூமுக்குப் போனா வாங்கிக் காட்டிக்க தெம்பு வேணுமில்ல” மகளுக்கு ஆதரவாக பேசுவது போல, அவன் காலை வாரினார் சங்கரன்.

“யூ டூ மாமா” என்றவன் பின்னால் திரும்பிப் பார்க்க, இடுப்பில் கைவைத்து அவனை முறைத்துக் கொண்டு நின்றவள் அனல்கக்கும் பார்வையை அவன் மீது வீசி விட்டுத் தன் அறைக்குச் சென்றாள்.

‘இன்னைக்கு என்னை அந்தக் கடவுள் தான் காப்பாத்தணும்’ என்று நினைத்துக் கொண்டே எழுந்து கைக்கழுவச் சென்றான்.

மாமனாரிடம் பேசிக்கொண்டிருந்து விட்டுத் தங்கள் அறைக்கு வந்தவன், “வைஷூ! என் குர்தா எங்கே?” என்று இயல்பாக கேட்டவனைப் பார்த்துக் கொண்டே, ஏர்பேகிலிருந்த குர்தாவை எடுத்து, அவன் மீது வீசினாள்.

“ஏய்! வைஷு… என்ன கொஞ்சம் கூட மரியாதை இல்லாம?” மிரட்டுவது போல இருந்தாலும் அதில் மருந்துக்குக் கூடக் கோபம் இல்லை.

“எனக்குச் சமைக்கத் தெரியாதது இன்னைக்கு தான் தெரியுமா?” என்று கத்தினாள்.

“மாமியாரை கூலாக்க ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா?”

“அதுக்கு என்னைத் தான் கிண்டல் பண்ணணுமா? என்னைப் பார்த்தா உனக்கு எப்படி இருக்கு? கேனச்சி மாதிரி இருக்கா?” கடுப்புடன் கேட்டாள்.

‘என்னடா இது’ என்று ஒற்றை விரலால் நெற்றியைச் சொறிந்தவன், சில வினாடிகள் அவளை உற்றுப் பார்த்தான். திடீரெனக் கண்கள் விரிய எதையோ கண்டுபிடித்துவிட்டவன் போல, “வைஷூ! இத்தனை நாளா இது எனக்குத் தெரியாமலேயே இருந்திருக்குப் பாரேன். நீ சொன்னதும் தான் கவனிச்சேன். அப்படியே அச்சுஅசல் கேனச்சி மாதிரித்தான் நீ இருக்க” என்றது தான் தாமதம்.

“ராகவ்! என்று கோபத்தில் பல்லைக் கடித்தவள், அவனைத் துரத்த,

அவள் கைகளுக்கு அகப்படாமல், கட்டிலைச் சுற்றி ஓடினான்.

சிறிது நேரத்தில் அவள் துரத்தியது மாறி, இவன் துரத்த, இலகுவாக அவனிடம் மாட்டிக்கொண்டாள். வலிமையான கரங்களின் அணைப்பில் நெகிழ்ந்தாலும், “ராகவ்! என்னால் முடியாது. நான் ரொம்ப டயர்டா இருக்கேன்” என்றவளது குரல் குழைந்தது.

“நோ பிராப்ளம். என்கிட்ட சொல்லிட்ட இல்ல… நான் அதைப் பார்த்துக்கறேன்” என்றவனது மூச்சுக் காற்று அவளது கன்னத்தில் உரச, “ஐ லவ் யூ வைஷூ!” என்றான் தாபத்துடன்.

“ப்ளீஸ் ராகவ்!” செல்லமாக சிணுங்கியவளை, தனது கைகளில் ஏந்திக் கொள்ள, தனது கரத்தை அவன் கழுத்தைச் சுற்றி மாலையாக்கி, அவனது நெஞ்சில் வாகாக சாய்ந்து கொண்டாள்.

ஏசியின் குளிரும், மெல்லிய இரவு விளக்கின் ஒளியும், அவர்களுக்கான அந்த ஏகாந்த இரவை, மேலும் ரம்யமாக்கியது.

****

மறுநாள் காலைலேயே மணிகண்டன், ரத்னகிரி வந்துவிட, தந்தையிடமும், மாமனாரிடமும் ஆசிவாதம் வாங்கிக்கொண்டவன், அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அலுவலகக் காரிலேயே கிளம்பினான். ரத்னகிரியிலிருந்து இருபது நிமிடப் பயணத்தில், ‘கணேஷ்குலே’ என்ற அமைதியான, இயற்கை எழில் கொஞ்சும் கடற்கரைச் சாலையிலிருந்த மூன்று மாடிக் கட்டிடத்தின் முன்பாக இறங்கினான்.

அவனுக்கு முன்பாகவே வந்திருந்த விக்ரமும், ரவீந்தரும் புன்னகையுடன் அவனை வரவேற்றனர். கம்பெனியின் முக்கிய அதிகாரிகள், ஆடிட்டர், அலுவலர்கள் முன்னிலையில் அறிமுகப்படுத்தப்பட்டு, நிர்வாக அதிகாரியாக பொறுப்பேற்றுக் கொண்டான்.

ஃபைலில் கையெழுத்திட்டு விட்டு நிமிர்ந்தவன் முன்பாக மொபைலை நீட்டி, “பேசுங்க சார் உங்களுக்குத் தான் போன்” என்று கொடுத்த விக்ரம், அங்கிருந்து புன்னகையுடன் விலகினான்.

தொழில் விஷயமாக ஏதோ போன் என நினைத்து “ஹலோ!” என்றவன், மறுமுனையில் கேட்ட முத்தச் சத்தத்தில் ஆச்சரியமாகிப் போனான்.

“ஹே வைஷூ! நீயா?” என்றான் ஆச்சரியத்துடன்.

“எம்.டி. சார் வாழ்த்துக்கள்” என்று புன்னகைத்தாள்.

“தேங்க்யூ டியர். நீ என் போனுக்கு செய்திருக்கக் கூடாதா?” என்று தலையைக் கோதிக்கொண்டு புன்னகைத்தான்.

“நான் எங்கேப்பா போன் செய்தேன்? உங்க விக்ரம் சார்தான், நான் ரொம்ப ஆவலா காத்திட்டு இருப்பேன்னு எனக்குப் போன் செய்து, உங்ககிட்ட கொடுத்தார். ரொம்ப லவ்வபுல் பெர்சன் இல்லயா ராகவ்!” என்றாள் நெகிழ்ச்சியுடன்.

“நிச்சயமா வைஷும்மா” என்றவன், “சரிடா நான் ஈவ்னிங் வந்து பேசறேன் பை” என்று போனை வைத்தான்.

விக்ரமை நினைத்து அவனுக்குப் பெருமையாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. தான் காதலித்த பெண்ணை மணந்து கொண்டவனுக்கு, இத்தனைத் தூரம் உதவ யாருக்கு மனம் வரும்? விரைவிலேயே அவனது மனம் மாறி அவனுக்கேற்ற ஒருத்தியைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று அவனுக்காகக் கடவுளை வேண்டிக் கொண்டான்.

மதியம் விக்ரம் கிளம்பும் நேரம், “ராகவ்! நான் கிளம்பறேன். இன்னைக்கு நைட் நம்ம வீட்டிலேயே அம்மா டின்னர் பார்ட்டி ஒண்ணு அரேன்ஞ் பண்ணியிருக்காங்க. வைஷாலிக்கும், அத்தைக்கும் அம்மா சொல்லியிருப்பாங்க. தவறாம எல்லோரும் வந்திடுங்க” என்றவன், புன்னகையுடன் கிளம்பிச் செல்வதை, ஆழ்ந்து பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

அத்தியாயம் - 33

எப்போதும் ஏதாவது பேசிச் சிரித்துக்கொண்டு வரும் வைஷாலி, அமைதியாக வெளியே வேடிக்கைப் பார்த்துக்கொண்டும், முன்னால் அமர்ந்திருந்த ராகவ் யோசனையுடன் அமர்ந்திருப்பதையும் பார்த்த தேவிகாவிற்கு கவலையாக இருந்தது.

“நைட் பார்ட்டிக்கு நம்மை இன்வைட் பண்ணிட்டு, விக்ரம் ஏன் திடீன்னு புனே கிளம்பிட்டாராம்? அத்தைகிட்ட கேட்டீங்களாம்மா?” அங்கிருந்த அமைதியைக் கிழித்துக்கொண்டு வந்தது வைஷாலியின் குரல்.

“ஆஃபீஸ்ல அவசர வேலை வந்துடுச்சாம்” என்றார் தேவிகா.

“பாவம் செந்தளிர் அத்தை! அவரைப் பத்தி ரொம்ப கவலைப்பட்டாங்க. எப்பப் பாரு வேலை வேலைன்னு ஓடுறான். இங்கே வர்றதை கூட குறைச்சிகிட்டான். இந்த புது ஆஃபிஸ் வேலையைக்கூட மாமாதான் பார்த்துகிட்டாங்களாம். கல்யாணப் பேச்சை எடுத்தால் பிடிகொடுத்து பேசமாட்டேங்கறாராம். நீயும், ராகவும் கொஞ்சம் அவனுக்கு எடுத்துச் சொல்லும்மான்னு சொன்னாங்க. நானும் கொஞ்ச நாளா பார்க்கிறேன் அவர் ஆளே சரியில்ல” என்றாள் அழுத்தம் திருத்தமாக.

மருமகன் லேசாகத் துணுக்குற்றுத் திரும்பி வைஷாலியை பார்த்ததைக் கவனித்த தேவிகாவிற்கு ஏதோ புரிவது போல இருந்தது.

ராகவிடம், “இங்கே பாருங்க, நீங்க அடுத்தமுறை அவரை நேரில் பார்க்கும் போது இதைப் பற்றி பேசறீங்க” என்றாள் கண்டிப்புடன்.

“ஹே! அவர் என்னோட பாஸ். நான் எப்படி அவரோட கல்யாணத்தைப் பத்திப் பேசமுடியும்?” என்றான்.
“உங்க ரெண்டு பேரைப் பத்தி எனக்குத் தெரியாதா? அவரென்ன உங்களை செக்கரட்டரி மாதிரியா நடத்தினார்! ஆஃபிஸ் நேரத்தில் தான் நீங்க ரெண்டு பேரும் பாஸ், செக்கரட்டரி. மத்த நேரத்தில் ஃப்ரெண்ட் மாதிரி எல்லாத்தையும் பேசுவீங்க தானே.”

“அதுக்காக… என்னை ஓவர் அட்வான்டேஜ் எடுத்துக்கச் சொல்றியா?” எரிச்சலுடன் கேட்டான்.

“அதுக்கு பேர் அட்வான்டேஜ் இல்லை, அக்கறை. அவர் என்னை ஒரு தம்பி மாதிரி பார்த்துப்பார். எங்க குடும்பத்தில் ஒருத்தர்ன்னு நீங்களும் சொல்லியிருக்கீங்க; அவரும் சொல்லியிருக்கார். அப்புறம் என்ன? பேசினா என்ன சொல்வார்? என் விஷயத்தில் தலையிடாதேன்னு

சொல்வாரா? சொன்னா சொல்லிட்டுப் போகட்டும். நமக்காகவும், நம்ம ஜோதிக்காகவும் அவர் எவ்வளவு செய்திருக்கார்?" என்றவள் முன் இருக்கையில் அமர்ந்திருந்த மாமனாரைத் தனக்கு ஆதரவாக பேச அழைத்தாள்.

"வைஷு, சொல்றது சரிதானே தம்பி. நாம நல்லாயிருக்கணும்னு நினைக்கறவங்களுக்கு, நாமளும் நல்லது நடக்கணும்னு நினைக்கறது தப்பில்லையே" என்றார் மணிகண்டன்.

"அவதான் புரியாம பேசறான்னா, நீங்களுமாப்பா?" என்று எரிச்சலுடன் சொன்னவன், "சே" என்றபடி வெளியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

வைஷாலிக்கு உள்ளுக்குள் கோபம் பொங்கிவர உதட்டைக் கடித்துக் கொண்டு அமைதியாக அமர்ந்திருக்க, மூவரின் உரையாடலையும் கேட்டபடி சங்கரனும், தேவிகாவும் அமைதியாக வந்தனர்.

காரிலிருந்து இறங்கி விறுவிறுவெனத் தன் அறையை நோக்கிச் சென்றவளை அழைத்த தேவிகா, "வைஷூ! கையோடு பாலை எடுத்துட்டுப் போ" என்றார்.

கடுகடுவென்ற முகத்துடன் நின்றிருந்தவளை, "இந்தா கொண்டு போ. அங்கே போய் உன் வீட்டுக்காரர்கிட்ட மல்லுக்கு நிக்காதே. அவர் சொன்னா ஏதாவது விஷயம் இருக்கும்" என்று மகளுக்கு எடுத்துச் சென்னார்.

"எல்லோரும் என்னையே சொல்லுங்க" என்று முணுமுணுத்தபடி அறைக்குச் சென்றாள்.

பாலை அவனிடம் கொடுத்துவிட்டு, உடைமாற்றிக் கொண்டு வந்தவள், அமைதியாக படுத்துக் கொண்டாள்.

“வைஷு!”

“ம்ம் சொல்லுங்க.”

“பால் குடிக்கலையா? ஆறிப்போகுது.”

“எனக்கு வேணாம்” என்றவள் தோளைப் பற்றி தன் பக்கமாக திருப்பினான்.

“இப்போ எதுக்கு உனக்கு இவ்வளவு கோபம்?” கேள்விக்குப் பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தாள்.

“சரி, விக்ரம் சாரிடம் இதைப் பத்தி பேசறேன்” என்றான் சமாதானமாக.

புன்னகையுடன், “ரொம்ப தேங்க்ஸ். அத்தைக்காகத் தான் கேட்டேன். அவங்களை பார்க்க ரொம்பக் கஷ்டமா இருந்தது ராகவ்” என்றாள்.

“ம், புரியுது. இந்தா பாலைக் குடிச்சிட்டுப் படு” என்று டம்ளரை எடுத்துக் கையில் கொடுத்தான்.

கட்டிலில் சாய்ந்து அமர்ந்து, நிச்சலனமான முகத்துடன் உறங்கும் மனைவியைப் பார்த்து நீண்ட நெடிய மூச்சை வெளியேற்றினான்.

****

ரவீந்தர் கம்பெனியின் சார்பாக ராகவிற்கு அழகான டியூயல் ஃப்ளாட்

ஒன்றை ஏற்பாடு செய்தார். கணேஷ்குலே பீச்சை ஒட்டி, வெண்ணிற மணற்பரப்பில் அழகாக எழும்பியிருந்த அந்த வீட்டை, வைஷாலிக்கு மிகவும் பிடித்துவிட்டது.

ஒரு நல்ல நாளில் அங்கு குடிவரலாம் என்ற முடிவுடன், தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை எடுத்துக்கொண்டும், சில வேலைகளை முடித்துக்கொண்டும் வரலாமென, ராகவும், வைஷாலியும் புனேவிற்கு கிளம்பினர். முதல் இரண்டு நாட்கள் பேங்க், காஸ் நிறுவனம், என்று அலையவே நேரம் சரியாக இருந்தது.

அதிகாலை ஐந்து மணி. ராகவ் ஆழ்ந்த உறக்கத்திலிருக்க, வைஷாலியின் தூக்கம் கலைந்தாள். இடுப்பைச் சுற்றி இறுக்கி அணைத்திருந்த ராகவின் கரத்தை மெல்ல விலக்கிவிட்டு, படுக்கையிலிருந்து எழுந்தாள்.

முன்தின இரவுதான், அவளிடம் ஒரு டீல் பேசி முடித்திருந்தான். “நாளைக்கு நமக்குக் கல்யாணமாகி, எழுபத்தைந்து நாள் ஆகுது. நீ ஏற்கெனவே சொன்னபடி, நாளைக்கு நான் சொல்வதை எல்லாம் கேட்கணும். கூப்பிடும் இடத்துக்கெல்லாம் வரணும்” என்று.

அது இப்போது நினைவு வரப் புன்னகையுடன் அவனருகில் சென்றாள். அவன் மீதான காதல் கரைபுரண்டு ஓட, கவிழ்ந்து படுத்திருந்தவனது முதுகில் தலைசாய்த்து அவனை அணைத்தபடி படுத்துக் கொண்டாள்.

மெல்லக் கண்விழித்தவன், “குட் மார்னிங்” என்றான்.

“குட் மார்னிங்” என்று அவன் கன்னத்தில் முத்தவிட்டவளது குரலில், காதல் பொங்கி வழிந்தது.

“என்ன இன்னைக்கு கேட்காமலேயே கிடைக்குது?”

“ஏன்னா நமக்கு இன்னைக்கு ஸ்பெஷல் டே இல்லையா?” என்று குழைந்தாள்.

“மேடம் இன்னைக்கு ரொம்ப ரொம்ப நல்ல மூடில் இருக்கீங்க போல...?” என்றபடி திரும்பினான்.

அவளோ அவனது முகம் பார்க்க வெட்கி, வேகமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

சிரித்தபடி எழுந்தவன், “சீக்கிரம் குளிச்சிட்டு கிளம்பு வைஷூ. டிஃபன் முடிச்சிகிட்டு முதல்ல சதுர்ஷிரிங்கி கோவில் போறோம். மதியம் நல்ல ஹோட்டல்ல லஞ்ச். அப்புறம் ஒரு நல்ல சினிமா. ஈவ்னிங் ஷாப்பிங் உனக்கு ஒரு டைமண்ட் ரிங், உனக்குப் பிடிச்ச மாதிரி நல்ல சாரி ஒண்ணு. நைட் டின்னர் நமக்கு பிடிச்ச டிஷ்ஷசோட...” என்று அடுக்கிக்கொண்டு போனான்.

****

“ராகவ்! உங்க அமர்க்களம் தாங்கலை. இவ்வளவு திங்க்ஸ் இப்போ வாங்கணுமா. உங்க சந்தோஷத்தை இப்படிச் செலவு பண்ணி காட்டணுமா? இவ்வளவு பெரிய ஹோட்டலுக்கு வரணுமா?” என்றாள் தாங்கலுடன்.

ரூஃப் கார்டனிங் அழகை ரசித்துக் கொண்டே, “வைஷூ! நான் ரொம்ப ரொம்பச் சந்தோஷமா இருக்கேன். இந்த பௌர்ணமி ராத்திரியில்,

மாடியில் இப்படி இயற்கையை ரசிச்சிகிட்டே சாப்பிடுவதை அனுபவி" என்று, அவள் வாயை அடைத்தான்.

இருவரும் பேசிக்கொண்டும் ஒருவரை ஒருவர் வம்பிழுத்துக் கொண்டும் சாப்பிட்டு முடித்தனர். ஐஸ்கிரீம் சுவைத்தபடி திரும்பியவள், இரண்டு டேபிள் தள்ளி விக்ரம் யாருடனோ பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

அவனைப் பார்த்ததுமே, செந்தளிரின் சோர்ந்த முகம்தான் அவள் நினைவுக்கு வந்தது. ராகவ், விக்ரமிடம் பேசுகிறேன் என்று சொல்லியே நான்கைந்து நாட்கள் ஆகிவிட்டது. இன்றுவரை அவன் பேசவில்லை என்பது தெரியும். அதனால் தானே இதைப் பற்றிப் பேசிவிடுவது என்று முடிவெடுத்தாள்.

அதற்குள் விக்ரமிடம் பேசிக்கொண்டிருந்தவர் விடை பெற்றுச் சென்றிருக்க, விக்ரம் தனது கார்டை எடுத்துக் வாலட்டில் வைத்தபடி அங்கிருந்து நகர்வதைக் கவனித்தவள், "விக்ரம்!" என்றழைத்தாள்.

அப்போது தான் அவனைக் கவனித்த ராகவ், "சார்!" என்று வேகமாக எழுந்தான்.

"ஹே! சர்ப்ரைஸ். ரெண்டு பேரையும் இங்கே எதிர்பார்க்கவேயில்லை" என்றான் ஆச்சரியத்துடன்.

"உட்காருங்க சார்" என்று இருக்கையைக் காட்டியவன், பேரரை அழைத்தான்.

"நோ ஃபார்மாலிட்டீஸ். இப்போதான் பிசினஸ் பேசிட்டே டின்னரை

முடிச்சேன். நீங்க கண்டின்யூ பண்ணுங்க. நான் கிளம்பறேன்” என்றான் விக்ரம்.

“நல்லாயிருக்கு. எங்களுக்காகக் கொஞ்சமே கொஞ்சம் ஐஸ்கிரீம் சாப்பிடுங்க” என்று அவனுக்கும் ஒன்றை வரவழைத்தாள் வைஷாலி.

“தேங்க்யூ மேடம்” என்று புன்னகைத்தவனிடம், “வெல்கம். ஆனால், நான் உங்க மேல ரொம்பக் கோபமா இருக்கேன்” உரிமையுடன் அவனிடம் பேசினாள் வைஷாலி.

“நான் என்ன செய்தேன் உன்னை? என் மேல எதுக்குக் கோபம்?” என்று இலகுவாக சிரித்தான்.

ராகவிற்கு அவள் என்ன பேசப்போகிறாள் என்று புரிந்துவிட, “அவளுக்கு யாரிடமாவது ஏதாவது வம்பு பண்ணணும் சார்” என்று சமாளித்தான் ராகவ்.

“இந்தச் சமாளிப்பெல்லாம் வேண்டாம். நான் கேட்பதற்குச் சரியா பதில் சொல்லணும்” என்று விக்ரமை பார்த்துச் சொன்னவள், ”அன்னைக்கு டின்னர் பார்ட்டியில் நீங்க ஏன் கலந்துக்கல?” தீவிர முகபாவனையுடன் கேட்டாள்.

“முக்கியமான…” என்று ஆரம்பித்தவனைக் கைநீட்டித் தடுத்து, “எனக்குத் தேவை உண்மையான பதில்” என்றாள் அழுத்தமாக.

“வைஷாலி! ஜஸ்ட் ஷட்-அப்” என்று குரலை உயர்த்தாமல் அழுத்தமாகச் சொன்னான் ராகவ்.

அந்தநேரம் விக்ரமிற்குள் ஒரு கோபம் எழுந்தது. ‘உன்னைப் பார்க்க முடியாமல் தான் போனேன். இப்போது உன் மேல எனக்குக் காதல் இல்லையென்றாலும், உன்னை முழுதாக மறக்க வேண்டும்; உன்னால என் மனத்திற்குள்ள வந்த வலியை மறக்க வேண்டும். அதற்காகத் தான் ஒரு கோழையை போல ஓடுகிறேன்’ என்று சொல்லி, கத்த வேண்டும் போலிருந்தது அவனுக்கு. தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள உள்ளுக்குள் போராடினான்.

கையிலிருந்த ஐஸ்கிரீம் கோப்பையை இறுக பிடித்திருந்ததிலிருந்தே, அவனது மனத்திலிருந்ததை துல்லியமாக உணர்ந்து கொண்ட ராகவ், “சார் ப்ளீஸ். அவ பேசினதுக்கு நான் சாரி கேட்டுக்கறேன்” என்று விக்ரமின் கரத்தைப் பிடித்தான்.

”வைஷு! நீ பேசாமல் இருக்க மாட்ட?” என்று தன்னை முறைத்த கணவனை, எரிச்சலுடன் பார்த்தாள்.

அதற்குள் தன்னைக் கட்டுக்குள் கொண்டு வந்த விக்ரம், “சாரி, உங்க நல்ல மூடை நான் ஸ்பாயில் பண்ணிட்டேன். கிளம்பறேன்” என்று எழுந்தான்.

“வைஷு! நீ கேஷ் பே பண்ணிட்டு வெளியே வா” என்று சொல்லிவிட்டு, விக்ரமுடன் சேர்ந்து நடந்தான்.

****

அவன் சொன்னது போலவே செய்து விட்டு ஹோட்டலின் வெளியே வந்து நின்றாள். சற்று தூரத்தில் இருவரும் நின்றிருப்பதைப் பார்த்தாள். ராகவ் ஏதோ சொல்வது மட்டுமே அவளுக்குத் தெரிந்தது.

இருவரையும் நோட்டம் விட்டபடி நின்றிருந்தவளை யாரோ உலுக்க,

நினைவுலகுக்கு வந்தவள் திரும்பிப் பார்த்தாள். “ஜனனி!” தோழியைக் கண்டதும் உற்சாகம் பொங்க அழைத்தாள்.

“வைஷு! உனக்குக் கல்யாணம் ஆகிடுச்சா? எங்களையெல்லாம் மறந்துட்ட இல்ல?” கவலையுடன் கேட்டாள்.

“அது பெரிய கதை. அப்புறம் சொல்றேன். நீ எப்படி இருக்க? நம்ம ஃப்ரெண்ட்ஸ் கூட காண்டாக்ட்ல இருக்கியா?”

“எல்லோரும் நல்லா இருக்கோம். அதை விடு பெரிய கதைனா என்ன லவ்வா?” என்று கண்ணடித்தாள்.

வைஷாலியின் சிரிப்பைப் பார்த்ததுமே, “அடிப்பாவி, நீயா…? யாரை நம்பறதுன்னே புரியலை” என்று மயங்கி விழுபவளைப் போல நடித்தவள், “உன்னைக் கண்டு மயங்கின, அந்த அப்பாவி யாரோ?” என்றாள்.

“உனக்குத் தெரிஞ்சவர் தான். உனக்குப் பின்னால் பார்” என்றதும் அவள் வேகமாக திரும்பினாள்.

அதேநேரம் ராகவ் அவர்களை நோக்கி வரவும், விக்ரம் அங்கிருந்து அப்படியே செல்லவும் சரியாக இருந்தது. இருவரையும் பார்த்த ஜனனி குழம்பிப் போனாள்.

“வைஷு! இவர் விக்ரம் சாரோட…” முடிக்க முடியாமல் திணறலுடன் அவளைப் பார்த்தாள்.

“இவர் தான் என் வீட்டுக்காரர்.”

“அப்போ விக்… நாங்க என்னென்னவோ நினைச்சோம்…” என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே, சாலையில் விரைந்த வாகனங்களின் சடன் பிரேக்கால் கீறிச்சிட்டு நிற்கும் சப்தமும், மக்களின் அச்சமூட்டும் கூச்சலும் எழ, வைஷாலி தன் கண் முன்னே நடந்ததை நம்பமுடியாமல் நின்றாள்.

அத்தியாயம் - 34

முழுதாகப் பதினெட்டு மணிநேரம் ஆகிவிட்டது. இந்தப் பூவுலகை விட்டு, தனது வைஷுவை விட்டு, அவளது மொத்தச் சந்தோஷத்தையும் துடைத்தெடுத்துக் கொண்டு, தனது காதலைத் துறந்து காலனின் பின்னால் சென்று விட்டான் அவளது ராகவ்.

ஐஸ்பாக்சில் கிடத்தப்பட்டிருந்தவனது முகத்திலிருந்து பார்வையை அகற்றாமல், உணர்ச்சிகளைக் களைந்த முகத்துடன், உயிருள்ள ஜடமாக அமர்ந்திருந்தாள் வைஷாலி. அதிர்ச்சியில் அவளுக்கு அழுகைகூட வரவில்லை. சுற்றமும், உறவுகளும் அவளைப் பரிதாபத்துடன் பார்த்தது.

ஜனனியுடன் பேசிக்கொண்டிருந்தவள், வாகனங்களின் பேரொலியில் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த போது, அவளது ராகவ் ஒரு பொம்மையை போல வீசியெறியப்பட்டு சாலையில் விழுந்தான். நடந்தது புரியாமல் அதிர்ச்சியுடன் நின்றிருந்தவளை, ஜனனிதான் பிடித்து இழுத்துக்கொண்டு அங்கே ஓடினாள்.

விக்ரமின் கையைப் பிடித்தபடி, அவனது பார்வை அவள் மீது நிலைத்த போது, அவனது கண்களில் தெரிந்த பார்வையின் அர்த்தம், அவளுக்கு

விளங்கவில்லை. “வைஷூ!” என்று அவளது பெயரை அவன் உச்சரித்ததை, உதட்டசைவில் மட்டுமே புரிந்து கொள்ள முடிந்தது.

“ஹே… ரா..கவ்!” விக்ரம் அதட்டலுடன் அழைக்க, அவன் கரத்தை அழுத்த, அவனது இமைகள் தானாக மூடிக்கொண்டன.

இமைகளை அழுந்த மூடித்திறந்த வைஷாலி, அங்கு நிலவிய சலசலப்பில் தனது நினைவுலகிற்கு வந்தாள். “நேரமாகிவிட்டது, எடுத்திடலாம்” என்று யாரோ குரல் கொடுக்க, மூன்று மணி நேரமாக வறண்டு போன உணர்வுகளுடன் அமர்ந்திருந்தவள், சுய உணர்வு பெற்று வேகமாக எழுந்தாள்.

ஐஸ் பாக்சின் மீதிருந்த மாலைகளை ஒதுக்கிவிட்டு, அவனது முகத்தைப் பார்த்தாள். மீளா உறக்கத்தில் இருந்தவன், தனது நினைவுகளால் அவளை இம்சித்தான். கைகள் அவனைத் தொட பரபரத்தது.

தனது மொத்தத் துக்கத்தையும் உள்ளுக்குள் விழுங்கிவிட்டு, மணிகண்டனை தேற்றியபடி அமர்ந்திருந்த சங்கரன், மகளது செய்கையைக் கண்டதும் “வைஷூம்மா! என்னடா?” என்று ஓடிவந்து, தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டார்.

“அப்பா! எ..என் ரா..கவ்… அவரை….” சொல்ல முடியாமல் திணறியவள், “ப்ளீஸ்ப்பா… எனக்கு அவரைத் தொட்டுப் பார்க்கணும்ப்பா” என்று பிடிவாதக் குழந்தையைப் போலத் திரும்பத் திரும்ப சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கும் மகளை, கண்ணீருடன் பார்த்தார்.

ஐஸ்பாக்சை திறந்ததும், அவனருகில் முழங்காலிட்டு அமர்ந்தவள்,

கைகள் தடுமாறியது. அவனது உடலை அலைபாய்ந்த விழிகளால் ஆராய்ந்தாள். முகம் மட்டுமே தெரிய, உடல் முழுவதும் வெள்ளைத் துணியால் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. நிர்மலமான அவனது முகத்தை நடுங்கும் கைகளில் தொட்டாள்.

சில்லிட்டிருந்த முகத்தைத் தொட்டதும், சுரீரென இதயத்தில் ஒரு வலி எழுந்தது. ‘ராகவ்! நீ எப்போ வருவ? எப்போ என்கிட்ட சிரிச்சி பேசுவ? உன்னோட சிரிப்பை பார்க்கணும் போலயிருக்கு. உன் பேச்சைக் கேட்கணும். உன்னோட குறும்பால என்னை வம்பிழுக்கணும். இனி எப்போ என்னைப் பார்த்து ஐ லவ் யூ வைஷூன்னு உன் காதல்ல மூழ்கடிப்ப? எனக்கு உன்னோட நெஞ்சில சாஞ்சிகிட்டு பேசணும். உன்கிட்ட செல்லமா சண்டை போடணும். நீ எதுகாகவும், வருத்தப்படக்கூடாது, உனக்கு என்ன வேணுமோ என்கிட்ட கேளுன்னு சொல்வியே. இப்போ கேட்கறேன்.

எனக்கு நீ தான் வேணும். நீ மட்டும் போதும்; வேற எதுவுமே வேணாம் ராகவ். எல்லாத்தையும் இப்படி ஆரம்பிச்ச வேகத்திலேயே விட்டுட்டுப் போயிட்டியே! இனி உன்னோட வைஷூ என்ன செய்வா? இது எல்லாமே விளையாட்டுன்னு சொல்லி எழுந்து வா ராகவ். ப்ளீஸ் ராகவ்’ மனத்தில் போராட்டத்துடனும், அலைபாய்ந்த விழிகளுடனும், கண்கள் கலங்க, உதடுகள் துடிக்க, அவன் நெற்றியில் இதழ்களைப் பதித்தவள், ”ராகவ்!” என்று கதறியழுதாள்.

அருமை பெருமையாய் சீராட்டி, செல்வ மகளாய் வளர்ந்தவள், தன் வாழ்க்கையை இழந்து, கதறித் துடிப்பதைக் காணச் சகிக்காமல், புடவைத் தலைப்பால் வாய்ப் பொத்தி அழுதார் தேவிகா. தான் வணங்கிய அத்தனைத் தெய்வங்களையெல்லாம் சபித்தார்.

”வைஷூ!” எனக் கதறிய ஜோதி, அவளை கட்டியணைத்துக் கொள்ள, மணிகண்டன் சப்தம் வராமல் குலுங்கி அழுதார்.

“ஜோதி! பார்த்தியா உங்க அண்ணனை. என்னைக் கடைசி வரை பத்திரமா பார்த்துப்பேன்னு சொன்னவர், இப்படி நிராதரவா விட்டுட்டுப் போயிட்டார். எனக்காக பார்த்துப் பார்த்துச் செய்தவருக்கு, நான் எதையுமே செய்யலையே… அவரோட சின்னச் சின்னச் சந்தோஷங்களைக் கூட நிறைவேத்தலையே. இனி நினைச்சாலும் அதையெல்லாம் செய்ய முடியாதே! அவர் இல்லாத இந்த வாழ்க்கையை எப்படி ஏத்துக்கப் போறேன். இனி எனக்காக யார் இருக்கா?” என்று கதறியவளைப் பார்த்து அத்தனைச் சுற்றமும் ஊமையாகக் கண்ணீர் விட்டது.

****

“சார்! வைஷுக்காக நான் மன்னிப்பு கேட்டுக்கறேன். உங்க மனசை என்னால் புரிஞ்சிக்க முடியுது. ஆனால், அன்னைக்கு அம்மா அவகிட்ட பேசினதிலிருந்தே உங்ககிட்ட உங்க கல்யாணத்தைப் பத்திப் பேசச் சொன்னா. நானும் அவளைச் சமாதானப்படுத்த சரின்னு சொன்னேன். பட் சாரி சார்” என்றான் சங்கடத்துடன்.

தலையை அழுந்தக் கோதிக்கொண்டவன், “ஹும்! பரவாயில்லை” என்றான்.

“என் அப்பா அம்மா எனக்கு எப்பவும் பெஸ்டாகதான் கொடுத்திருக்காங்க. கேட்காமலேயே கிடைச்சிருக்கு. இப்படி ஒரு பேரண்ட்ஸ் கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணும். அவங்களுக்கு நான் என்னைக்குமே நன்றிக் கடன் பட்டிருக்கேன்னு சொல்வீங்க. நீங்க

கல்யாணம் செய்தகொள்வது தான் அவங்களுக்குப் பெரிய சந்தோஷம்னா, அதை ஏன் நீங்க செய்யக்கூடாது?"

விக்ரம் ஏனோ அமைதியாக நின்றிருந்தான்.

"எல்லாக் காதலும், கல்யாணத்தில் முடியறதில்ல. காதலிக்கும் பெண்ணோட சந்தோஷத்திற்காக, உங்க காதலை மறைச்சிட்டு, அவ விரும்பியவனோட சேர்த்து வைக்க, ரொம்பப் பெரிய மனசு வேணும். அப்படி எங்களைச் சேர்த்து வச்ச நீங்க நல்லாயிருக்கணும் சார்" மனத்திலிருந்த அனைத்தையும் கொட்டிவிட்டு, விக்ரமை பார்த்தான்.

அதிர்ச்சியில் சிலையென உறைந்து நின்றிருந்தான் விக்ரம். ராகவிடம் எதுவும் பேசாமலேயே அங்கிருந்து நகர்ந்தவனது செவிகளில், அவன் பேசிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் எதிரொலிக்க, கவனமில்லாமல் சாலையைக் கடந்தான்.

திடீரென, தான் ஒரு பக்கமாக இழுத்துத் தள்ளப்பட, அடுத்த நொடி யார் மீதோ எதுவோ மோதும் சப்தம் கேட்டுத் திரும்பினான். நான்கடி தூரத்தில் சாலையைப் பிரிக்கும் பேரிகேட்டர் மீது பின்னந்தலை மோத ராகவ் விழுந்து கிடப்பதைப் பார்த்தான்.

"சா...ர்...!" என்று தன்னை நோக்கிக் கையை நீட்டியவனது பார்வை, தங்களை நோக்கி ஓடிவந்த வைஷாலியின் மீது படிந்தது.

தன் கரத்தைப் பிடித்தபடி, "வைஷூ!" என்று உதட்டை அசைத்தவனது பார்வை, மீண்டும் தன்னைப் பார்ப்பதைக் கண்டதும், "ஹே ரா...கவ்!" அதட்டலுடன் ஒலித்த தனது குரல், அவன் காதில் விழும் முன்பே, அவனது இமைகள் மூடிக்கொள்ள, தனது பிடியிலிருந்த கரம் நழுவி

விழுந்தது.

உயிர் பிரிந்துவிட்டது என்று தெரிந்தும் நம்பமுடியாமல், தன் காரிலேயே அவனை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றது, வைஷாலியை ஜனனியின் பொறுப்பில் விட்டது, ஏற்கெனவே அவன் உடல் உறுப்புகளைத் தானம் செய்திருந்ததால் அதற்கான வேலைகள், வைஷாலியின் பெற்றோருக்கும் தனது பெற்றோருக்கும் தகவல் தெரிவித்தது, ராகவின் உடலை மீண்டும் வீட்டிற்குக் கொண்டு வரும் வரை, அனைத்தையும் ஒர் இயந்திரகதியுடனே முடித்தான்.

சுவரோரமாக சாய்ந்து நின்றிருந்தவன் மனத்தில் அனைத்தும் ஓடிக்கொண்டிருக்க, வைஷாலியின் கதறலில் நினைவுலகிற்கு வந்தான்.

எல்லாம் முடிந்து இடுகாட்டிலிருந்து நேராக வீட்டிற்கு வந்துவிட்டான். ரவீந்தரும், செந்தளிரும் வைஷாலியுடன் சிறிது நேரம் இருந்துவிட்டு வருவதாகக் கூறிவிட்டனர்.

வெகு நேரம் ஷவரின் அடியில் நின்றிருந்தான். மனமும், உடலும் ஒருசேர வலித்தது. நிலையாக ஓரிடத்தில் அமரமுடியவில்லை. முதன்முதலாக தன்னெதிரில் அவன் வந்து நின்ற போதே அவன் மீது தனிப் பிரியம் வந்ததை நினைத்துக் கொண்டான். அவனது பேச்சும், செய்கையும் எதையும் நிதானமாக செய்யும் பாங்கும் கண்முன்னே நின்றது.

‘அவனது குணம் தான், யாரையும் பேச்சிலேயே ஒதுக்கி வைக்கும் தன்னையே கவர்ந்ததோ!’ என அடிக்கடி நினைத்துக் கொள்வான். அவனை ஒரு சகோதரனாக நினைக்கத் துவங்கினான். அழைக்கும்

நேரமெல்லாம் ஓடிவந்து தன் முன் நிற்பவன். தனது கண் அசைவிலேயே விஷயத்தைப் புரிந்து கொண்டு காரியத்தைக் கச்சிதமாக முடிப்பவன்.

'இனி இப்படி ஒருவனை எங்கே பார்க்கப் போகிறோம்?' நெஞ்சு குமுறியது. கண்களை மூடினால் அழகாக, புன்னகைக்கும் அவனது முகமே வந்தது.

அறைக்குள் அடைந்துகிடக்க முடியாமல் தோட்டத்தில் உலவினான். அங்கும் ராகவின் நினைவுகள் அவனை நிழலாகத் தொடர்ந்தது.

அறைக்குள் வந்து கதவை மூடிக்கொண்டான். மனத்திற்கும் இப்படி ஒரு கதவிருந்தால், அவனது நினைவுகளை மொத்தமாக பூட்டிவைத்து விடலாமே என்று நினைத்தான்.

எதையும் இயல்பாக ஏற்றுக்கொள்ளும் தன்னாலேயே இதை மறக்கமுடியாத போது, அவனைக் காதலித்து, கைப்பிடித்தவளது நிலை!

எப்போதும் மலர்ந்த முகத்துடன், புதுமலரைப் போல இருக்கும் வைஷாலி கண் முன்னால் வந்தாள். மணக்கோலத்தில் ராகவின் அருகில் வந்து அமர்ந்த போது அவள் முகம் எத்தனைப் பூரிப்பில் இருந்தது?

அந்தச் சந்தோஷத்தை அவள் முகத்தில் என்றைக்குமே நிலைத்திருக்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காகத் தானே என்னோட காதலை மனசுக்குள்ளே புதைச்சிகிட்டேன். ஆனால் எல்லாமே விழலுக்கு இறைச்ச நீராக போச்சே.

ராகவ் இல்லாத வாழ்க்கையை நீ எப்படி தாங்கிக்கப் போற? நான் என்ன செய்வேன் வைஷாலி? உன் கல்யாணத்துக்காக பேசினது போல ராகவை திருப்பிக் கொண்டு வர முடிஞ்சா கொண்டு வந்திடுவேனே! உன்னோட முகத்தில் திரும்பவும் சந்தோஷம் வரும்னா, என் உயிரைக் கொடுத்து அவன் உயிரை மீட்டு, கொண்டுவர முடிஞ்சா அதையும் செய்வேனே… என்னால் முடியலையே வைஷாலி!

நான் ஏன் அங்கே வரணும்? உங்களைப் பார்க்கணும்? நீ எதுக்காக கல்யாணப் பேச்சை ஆரம்பிக்கணும்? ராகவ் ஏன் என்னிடம் தனியாக பேசணும்? அதற்கு நான் ஏன் பிரமை பிடிச்சது போல ரோட்டைக் கடக்கணும்? என்னைக் காப்பாற்ற ராகவ் ஏன் வரணும்?' முகத்தை மூடிக்கொண்டு பதில் தெரியாமல் தவித்தான்.

அவனது அத்தனை 'ஏன்' என்ற கேள்விகளும், தன்னை நோக்கி, 'நீ தான். உன்னால்தான்' என்று குற்றம் சாட்டும்படி நிற்க, விக்ரம் உறைந்து போனான்.

முகத்திலிருந்து கைகளை மெல்ல விலக்கினான். "ஆமாம் என்னால்தான். ராகவ் மட்டும் என்னைக் காப்பாற்ற வராவிட்டால் அவனுடைய வைஷாலியுடன் சந்தோஷமாக இருந்திருப்பான். அவனைக் கொன்ற கொலைக்காரன் நான்.
வைஷாலியோட சந்தோஷம், ஒரு தந்தையோட பாசம், ஒரு சகோதரியோட அன்பு அத்தனையும் போய் அவங்களோட கண்ணீருக்குக் காரணமானவன் நான் தான். நான்தான் குற்றவாளி.

"ஐ அம் எ கில்லர். நான் ஒரு கொலைக்காரன்" சப்தம் போட்டு வெறிப் பிடித்தவன் போல மீண்டும் மீண்டும் கத்தினான்.

வீட்டிற்குத் திரும்பி வந்த ரவீந்தர் மனது அலறலைக் கேட்டு அவனது அறைக்கு ஓடிவந்தார்.

“விக்ரம்! ரிலாக்ஸ். என்ன ஆச்சு உனக்கு?”

தந்தையின் முகத்தை அவனால் பார்க்க முடியவில்லை. தவித்தான். “நான் கொலைகாரன்ப்பா… ராகவை கொன்னுட்டேன். வைஷாலியோட வாழ்க்கையைக் குழித் தோண்டி புதைச்சிட்டேன்ப்பா…” என்றான் குற்றவுணர்ச்சியுடன்.

சக்கரநாற்காலியில் அங்கு வந்த செந்தளிரின் மடியில் முகம் புதைத்துக் கொண்டான். ஆதரவுடன் மகனைத் தட்டிக் கொடுத்த அந்தப் பாசமிகு அன்னையின் புடவை, அவனது கண்ணீரால் ஈரமானது.

அத்தியாயம் - 35

ராகவின் இழப்பு சிதைந்த ஓவியத்தைப் போல, அவளை உருக்குலைய வைத்திருந்தது. மனத்தின் ஆழத்திலிருந்த அவனது நினைவுகள், அவளைத் துயரத்திலும், வேதனையிலும் மூழ்கடித்தது. தன்னைச் சூழ்ந்திருந்த வெளிச்சம் மறைந்து, இருள் ஆக்ரமித்துக் கொண்டதைப் போல, அவனில்லாத எதிர்காலம் அவளை வெகுவாக மருட்டியது.

இரண்டரை மாத குடும்ப வாழ்வில், தங்களுக்குள் நேர்ந்த இனிமையான நேரத்தை நினைத்து நினைத்து மருகினாள். வீட்டின் ஒவ்வொரு இடத்திலும் அவன் நிற்பது போலவும், தன்னைப் பார்த்துச் சிரிப்பது போலவும், தோன்ற துடித்துப் போனாள். ஒவ்வொரு நொடியையும் அவனது நினைவுகளிலேயே மூழ்கி, உருகிக் கரைந்தாள்.

அவன் தன்னருகில் இல்லை என்ற நிதர்சனம் புரிந்தாலும், நேசம் கொண்ட நெஞ்சம் அதை ஏற்க மறுத்தது. விழிகள் உறக்கம் மறந்தது. பசியுணர்வு மந்தித்துப் போனது. ஆனாலும், மனத்தின் எண்ணங்கள் மட்டும் மீண்டும் மீண்டும் அவனையே சுற்றிச் சுற்றி வந்தது.

ராகவின் இழப்பை ஓரளவு ஏற்றுக்கொண்ட குடும்பத்தினருக்கு, வைஷாலியை நினைத்துக் கவலையும், பயமும் ஏற்பட்டது. வெறித்த பார்வையுடன் எப்போதும் அறைக்குள்ளேயே அடைந்து கிடப்பவளை, இதிலிருந்து எப்படி வெளியே கொண்டு வரப் போகிறோம் என்று யாருக்குமே புரியவில்லை.

****

அறையின் மூலையில் சுருண்டு படுத்திருந்தவளைக் காண சீமாவிற்கு, ஆயாசமாக இருந்தது. அவளது திருமணத்தன்று பார்த்தது. அதன்பிறகு இப்போது தான் பார்க்கிறாள். இத்தனை நாள் அவளிடம் போனில் பேசவேண்டும் என்று கூடத் தனக்குத் தோன்றாமல் போயிருந்ததே.

அவளாக ஒருமுறை போன் செய்து, ராகவ் மேனேஜிங் டைரக்டராக பதவியேற்றிருப்பதைச் சொன்னாள். அதற்கும் தான் பெரிதாக எந்த உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தாமல், தனது வாழ்த்தை மட்டும் தெரிவித்துவிட்டு, பிறகு பேசுவதாகக் கூறி போனை அணைத்துவிட்டது நினைவுக்கு வர, இப்போது தர்மசங்கடமாக இருந்தது.

“வைஷாலி!” மெல்லிய குரலில் வந்த அழைப்பைக் கேட்டு, மெல்ல எழுந்தமர்ந்தாள்.

‘பதினைந்தே நாளில் ஒருத்தி இத்தனை உருக்குலைந்து போகமுடியுமா?’ சீமாவால், வைஷாலியை கண்கொண்டு பார்க்கமுடியவில்லை. ‘பட்டாம்பூச்சி போல எப்போதும் துறுதுறுவெனச் சுற்றிக் கொண்டிருந்தவளா இவள்?’ என்று தோன்றியது. கண்கள் சோர்ந்து, கன்னங்கள் ஒட்டி, எழுந்து அமரக்கூட தெம்பில்லாமல் எழுந்து அமர்ந்தவளைப் பார்க்கப் பார்க்க, வேதனை இதயத்தைப் பிசைந்தது.

தாளமுடியாமல், “வைஷாலி!” என்று சீமா அவளது தோளைப் பற்றினாள்.

கண்கள் உடைப்பெடுக்க, உதட்டைக் கடித்து அழுகையை அடக்க முயன்றவளை, ஆதரவுடன் தனது தோளில், சாய்த்துக் கொண்டாள் சீமா.

“தைரியமா இருடா. உன்னை இப்படிப் பார்த்தா, எல்லோரும் இன்னும் துவண்டு போயிடுவாங்க” என்று ஆறுதலுடன் தட்டிக்கொடுத்தாள்.

“தைரியமா இருந்துதானே ஆகணும். என் எதிர்ல தெரியற வாழ்க்கையை நான் கடந்து போகணுமே. அதுக்கு நிச்சயம் தைரியமா வேணுமே சீமாக்கா. ஆனால், என்னால முடியலயே. நான் என்ன செய்வேன்?” என்று உடைந்து போய் அழுதவளை அவளால் பார்க்க முடியவில்லை.

எங்கே தானும் அழுது, அவளை மேலும் துக்கத்தில் தள்ளிவிடுவோமோ என்று சுதாரித்துக் கொண்டாள் சீமா.

தேவிகா கொண்டுவந்து கொடுத்த உணவை, வற்புறுத்தி அவளைச்

சாப்பிடவைத்தாள் சீமா. அரைகுறையாக விழுங்கிவிட்டு, மீண்டும் படுத்துக் கொண்ட வைஷாலி உறங்கும் வரை அருகிலேயே அமர்ந்திருந்தாள்.

“தூங்கிட்டாளா?” என்றபடி வந்தார் தேவிகா.

“ம், தூங்கிட்டா” என்று சீமா சொல்லி முடித்தது தான் தாமதம், தேவிகா தன்னை மறந்து அழுதார்.

“சித்தி!” என்று அவரைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

மெல்ல ஆறுதலடைந்தவர், கண்களைத் துடைத்துக் கொண்டு, “இப்படியே அழுதுட்டு, எதுவும் சாப்பிடாம, தூங்காம ரூமுக்குள்ளயே அடைந்து இருக்கா. நேத்து மயக்கம் போட்டு வேற விழுந்துட்டா. டாக்டர்கிட்ட தூக்க மாத்திரை வாங்கி, சாப்பாட்டில் கலந்து கொடுக்கறேன் சீமா. இவளை இப்படிப் பார்க்கவா அப்படிப் பாசத்தைக் கொட்டி வளர்த்தோம். இவளைப் பார்த்துப் பார்த்து, அவங்க அப்பா உள்ளுக்குள்ளேயே உருகிப் போறார்.

இரண்டு பேரையும் பார்க்கவே எனக்குப் பயமாயிருக்கு. நான் ஒருத்தி என்ன செய்ய முடியும்? எனக்கு மட்டும் கவலை இல்லையா? அதுக்காக அப்படியே இடிந்து போய் உட்கார்ந்தா முடியுமா? யாருக்கு ஆறுதல் சொல்றதுன்னு தெரியாம தவிக்கிறேன்” அவரது ஆற்றாமையும், துயரத்தில் நேர்ந்த ஆதங்கமும் ஒருசேர வெளிவந்தது.

சிறிது நேரம் சமாதானமாக பேசிக்கொண்டிருந்தவள், “வைஷாலியை உங்ககூட வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறீங்களா? இல்லை…?”

“இங்கே இருந்தா இவளும் எங்களுக்கு இல்லாமல் போயிடுவா. நிச்சயமா கூட்டிட்டுப் போயிடுவேன். இன்னும் அதைப் பத்திப் பேசலை. ஆனால், விட்டுட்டுப் போற ஐடியா எனக்குச் சுத்தமா இல்லை” என்று தனது முடிவில் உறுதியாக இருந்தார்.

எதையோ கேட்க நினைத்தவள், அதற்கான நேரமில்லை என்று உணர்ந்து அமைதியாக இருந்தாள்.

****

கண்ணாடிக் கோப்பையில், கைநடுக்கத்திற்கு ஏற்றார் போல அசைந்து கொண்டிருந்த, சிகப்பு நிறப் போதை வஸ்துவையே இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான் விக்ரம்.

ராகவின் மறைவிற்குப் பிறகு இடைப்பட்ட நாட்களில் ஒருமுறை கூட, அங்கு செல்லவில்லை. வைஷாலியை பார்க்கவே அவனுக்குப் பயமாக இருந்தது. முதலில் தன்னைத் தேற்றிக்கொண்டால் ஒழிய, அவனால் அங்கே செல்லவோ அவர்களின் முகம் பார்த்துப் பேசவோ முடியாதென்பதே காரணமாக இருந்தது.

அவனுக்குப் பதிலாக, ரவீந்தர் இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை சென்று வந்தார். செந்தளிரின் உடல்நிலையில் இத்தனைத் தூரம் பிரயாணம் செய்து வந்ததே பெரிய விஷயமாயிருக்க, நடுவில் ஒருமுறை சென்று வந்ததோடு சரி.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு அன்றுதான் சீமாவையும் அழைத்துக் கொண்டு சென்றான். முற்றுப் பெறாத ஓவியம் போல, அமர்ந்திருந்தவளைப் பார்த்தவனுக்கு, நெஞ்சைப் பிசைந்தது. கனத்த

இதயத்துடன் ஆண்கள் இருந்த அறைக்குள் சென்று அமர்ந்தான்.

சடங்கு, சம்பிரதாயம் என்று அங்கு நடந்த நிகழ்வுகளைப் பார்த்தவனுக்கு ஏன் வந்தோம் என்றாகிவிட்டது. ஆத்திரத்துடன் அங்கிருந்தவர்களிடம் அவன் பேசிய பேச்சுக்குப் பலன் இருக்கவே செய்தது. அவனது பேச்சு பெரியவர்கள் மூவருக்கும் ஆறுதலாக கூட இருந்ததோ என்னவோ! தேவிகாவின் பார்வை நன்றியுடன் அவன் மீது படிந்தது.

இப்போது அதையெல்லாம் நினைத்துக் கொண்டவனுக்கு, கோபத்தில் மூச்சு வாங்கியது. தனது கோபத்திற்கு வடிகால் வேண்டி, கையிலிருந்த கோப்பையைத் தூக்கித் தூர எறிந்தான்.

அவ்வளவு நேரமும் அவனையே பார்த்துக்கொண்டிருந்த சீமா, “இன்னொரு கண்ணாடி டம்ளர் நஷ்டம்” என்றாள் கிண்டலாக.

“ஒண்ணு போனா இது மாதிரி நூறு வாங்குவேன்…” என்றான் எரிச்சலுடன்.

“பணத்திமிருடா உனக்கு” என்றாள் பட்டென்று.

“நான் கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறேன். யாரையும் ஏமாத்திப் பிழைக்கல. அதனால் திமிர் இருக்கத்தான் செய்யும்” என்றான் கோபமாக.

“சரி சரண்டர். உன்னைக் கொஞ்சம் கூல் பண்ண நினைச்சிதான் பேசினேன். அது சீரியசாக போகுது. உன்கிட்ட கொஞ்சம் பேசணும் இப்படி உட்கார்” என்றாள்.

அவனும் அமைதியாக வந்து அமர்ந்தான்.

“காலைல ஏன் அப்படிப் பேசின எல்லோரிடமும்?”

“யாரிடம்?”

“வைஷாலி வீட்டுப் பெரியவங்ககிட்ட.”

“உண்மையைத் தானே பேசினேன். சடங்கு, சம்பிரதாயம் என்ற பேரில் ஏற்கெனவே நொந்து போயிருப்பவளை, இன்னும் இம்சை பண்றா மாதிரி இருக்கு. இந்தச் சடங்கெல்லாம் செய்தாதான் ராகவோட ஆன்மா சாந்தி அடையும்னு நினைச்சா நிச்சயமா அது தப்பு. அவளை வருத்தினா, அவனோட ஆன்மாவும் சேர்ந்துதான் வருத்தப்படும். அவங்க இரண்டு பேரும் எவ்வளவு அன்னியோன்யமா இருந்தாங்கன்னு எனக்குத் தெரியும். அவன் அவ மேல உயிரையே வச்சிருந்தான் சீமா” என்றவனுக்குத் தொண்டை அடைத்தது.

“விக்ரம்!” என்று அவன் தோளைத் தொட்டாள்.

கரகரத்த தொண்டையைச் செருமிக் கொண்டான். “அதனால் தான் எல்லோருக்கும் கேட்கறா மாதிரிச் சொன்னேன். என் இறப்புக்குப் பின் என் மனைவி அமங்கலியா இருக்கறது தான் எனக்குச் சந்தோஷம்னு, எந்தக் கணவன் சொல்வான்? உண்மையான அன்பு வச்சிருக்க யாரும், இப்படி நினைக்க மாட்டாங்க. அப்படி நினைச்சா, அவனைப் போல வக்கிரம் பிடிச்சவன் யாரும் இருக்கமுடியாது.

சாஸ்திரம், சம்பிரதாயமெல்லாம் நாம உருவாக்கினது. நல்லதுன்னு நினைத்துச் செய்யும் எல்லா விஷயமும் நல்லதுதான். இன்னைக்கு

வைஷாலியை நேரா பார்க்கவே முடியல. அவளா இதுன்னு இருந்தது. முதல்ல எல்லோரும் சேர்ந்து அழுது, அவளை இன்னும் பயமுறுத்தாதீங்க. அவளுக்கு இப்போதைக்குத் தேவை பரிதாபம் இல்ல. தைரியம்” என்றான்.

அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்த சீமா, “பரவாயில்லையே… நிச்சயம் பாராட்டியே ஆகணும்” என்றாள்.

“எதுக்கு? யாரை?”

“உன்னைத் தான். பதினைந்து நாள்ள அவளுக்குத் தேவை தைரியம்ன்னு ஆராய்ந்து கண்டு பிடிக்கும் அளவுக்கு, நீ தேறி இருக்கியே அதுக்குத் தான்” என்றாள் சிரிப்புடன்.

அவளது சிரிப்பிற்கான அர்த்தத்தைப் புரிந்து கொண்டவனாக, ‘என்னோட வருத்தம் என்னோடு. முதலில் வைஷாலியை இதிலிருந்து வெளியே கொண்டு வரணும். அதுக்காக என்ன வேணும்னாலும் செய்வேன்’ என மனத்தில் நினைத்துக் கொண்டவன், “ஆமா, உனக்கு யார் இதையெல்லாம் சொன்னது? அப்பாவா?” என்றான் கடுப்புடன்.

“சாட்சாத் அவரேதான்” என்று புன்னகைத்தவள், “உண்மையிலேயே சந்தோஷப்படுறேன் விக்ரம். நடந்ததுக்கெல்லாம் நீதான் காரணம்னு மனசைப் போட்டுக் குழப்பிக்காதே. அவனோட தலைவிதி முடிந்து போச்சு. வைஷாலியை நினைத்தால் கஷ்டமாகத் தான் இருக்கு. ஆனா, நாமல்லாம் இருக்கோமே அவளை பார்த்துக்கலாம்” என்றவளது பார்வை, அவன் மீது அர்த்தமுடன் படிந்தது.

“ம்” என்ற தலையசைப்புடன், சீமாவை ஒருவிதப் பாவனையுடன்

பார்த்தவன், சொல்ல வந்த வார்த்தைகளைச் சொல்லாமல் மறைத்து, “நிச்சயமா. அவளால் இதை அத்தனைச் சீக்கிரம் மறக்கமுடியாது. இருந்தாலும், அவளை இதிலிருந்து வெளியே கொண்டுவர முடியும்” என்றவன், “சரி, நீ நாளைக்கு காலைல கிளம்பணுமே போய்த் தூங்கு” என்றபடி, எழுந்து உள்ளே சென்றான்.

‘தான் எந்த அர்த்தத்தில் சொன்னோம் என்பதை இவன் சுத்தமாகப் புரிந்து கொள்ளவில்லையே’ என்ற ஆயாசத்துடன் பெருமூச்சு விட்டாள்.

அறையிலிருந்தபடி, இருவரின் பேச்சையும் முழுதாக கேட்ட ரவீந்தர், யோசனையுடன் தாடையைத் தடவிக் கொண்டார்.

அத்தியாயம் - 36

“அம்மாடி, வைஷாலி!” மருமகளை கனிவுடன் அழைத்தார் மணிகண்டன்.

“ஏதாவது வேணுமா மாமா?” என்று வந்து நின்றவளைப் பார்த்து அவரது இதயம் ஒரு கணம் நின்று துடித்தது.

‘இனி இது தான் வாழ்க்கை’ என்ற நிதர்சனத்தைப் புரிந்து கொண்டாளோ என்னவோ! காலையிலிருந்து எழுந்து நடமாடிக்கொண்டிருந்தாள். வீட்டுப் பெரியவர்களுக்கு அதுவே பெரிய ஆறுதலாக இருந்தது.

முன்தினம் இரவுதான் சங்கரன், தாங்கள் வைஷாலியை அழைத்துக் கொண்டு, இன்னும் இருதினங்களில் ரத்னகிரி புறப்படலாமென்று

இருப்பதை மெல்ல, தயங்கிக் கொண்டே சொன்னார்.

மருமகளையும் அழைத்துச் செல்ல இருப்பதைக் கேட்ட மணிகண்டன், நிமிர்ந்து சங்கரனின் முகத்தைப் பார்த்தார். “நானே சொல்லலாமுன்னு இருந்தேன் சங்கரா. வைஷூ, இங்கேயே இருந்தா அவனையே தான் நினைச்சிட்டு இருப்பா. நல்ல முடிவுதான்” என்றவர் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

“மணி! தப்பா நினைக்காதேப்பா” என்று அவர் கையைப் பிடித்துக்கொண்டார் சங்கரன்.

“ஏன்டா அப்படிச் சொல்ற? வைஷாலி, நான் தூக்கி வளர்த்த குழந்தைடா.
எனக்கு மருமகளா வந்தாலும், எனக்கு அவளும் மகள்தானே. அதோடு, அவளை இப்படியே விட்டுடாதே சங்கரா! அவள் வாழவேண்டிய குருத்து. என் பிள்ளைதான்…” என்றவர் பேசமுடியாமல் குலுங்கிக் குலுங்கி அழ, அவரைச் சேர்த்து அணைத்துக்கொண்ட சங்கரனும் அழுதார்.

திடீரென ஆவேசம் வந்தவர் போல, “இதோ, படத்துல இருக்காளே மகராசி, தினம் இவளைக் கும்பிட்டுட்டுத்தானே, என் பிள்ளை வீட்டை விட்டே கிளம்புவான். சாமியா இருந்து என் குழந்தைங்களை பார்த்துக்குவான்னு நினைச்சிட்டு இருந்தேனே. ஆனா, பாவி என் ஒரு பிள்ளையைக் கூட்டிட்டு, இன்னொரு குழந்தையை இப்படி மூலையில் உட்காரவச்சிட்டாளே… அவ தூக்கி வளர்த்த குழந்தைதானே அது. அந்த இரக்கம் கூட அவளுக்கு இல்லாம போச்சே சங்கரா…” என்று பெருங்குரலெடுத்து அழுதவரைச் சமாளிக்க முடியாமல் திணறினார் சங்கரன்.

கண்ணீர் வழிய, தனது அறையில் படுத்திருந்த வைஷாலி, மாமனாரின் குரலைக் கேட்டு, வேகமாக மாடியிலிருந்து எட்டிப் பார்த்தாள். கண்களை இறுக மூடி சுவற்றில் சரிந்து அமர்ந்தாள். முடிய இமைகளைத் தாண்டி அருவியென பொங்கியது கண்ணீர்.

முதலில் சுதாரித்துக்கொண்ட வைஷாலி, “மாமா!” என்றாள்.

தன் நினைவைக் கலைந்து எழுந்த மணிகண்டன், “ஒண்ணுமில்லடா, உன்கிட்ட கொஞ்சம் பேசணும்” என்று தன்னெதிரில் அமரவைத்துக் கொண்டார்.

பெரியவர்கள் மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ள, அவளை ரத்னகிரி அழைத்துச் செல்லப்போவதை மெல்லச் சொன்னார் மணிகண்டன்.

அதிர்ச்சியுடன் பெற்றோரைப் பார்த்தவள், “இதுதான் என் வீடு. நான் எங்கேயும் வரமாட்டேன். இப்போ மாமாவைப் பத்திரமா பார்த்துக்கவேண்டிய பெரிய பொறுப்பு எனக்கு இருக்கு” என்று திடமாக மறுத்தாள்.

அவளுக்குப் பலவகையில் எடுத்துச் சொல்லி, புரியவைக்க முயன்ற போது, “அவர் இல்லை என்றதும் எனக்கும், இந்தக் குடும்பத்துக்கும் சம்மந்தமே இல்லைன்னு சொல்றீங்களா?” என்று அழுதவளை, செய்வதறியாமல் பார்த்தனர்.

”அம்மாடி! மாமா சொல்றேன்னு தப்பா நினைக்காதே. இது உன் வீடு தான். உன் விருப்பப்படி நீ எப்போ வேணும்னாலும் வரலாம்,

போகலாம். உன்னை யாரும் கேள்வி கேட்க முடியாது. நீ கொஞ்ச நாளைக்கு உன் அப்பா, அம்மாகூட போய் இருடா. அவங்களுக்கும் கொஞ்சம் ஆறுதலா இருக்கும். நானும் எங்கேயாவது கோயில், குளம்ன்னு போய் வரலாம்னு இருக்கேன். உன்னைப் பார்க்கணும்னு தோணினா, நேரா ரத்னகிரி வந்திடப் போறேன்" என்று விதவிதமாகச் சொல்லி, அரைமனத்துடன் அவளைச் சம்மதிக்க வைத்துவிட்டார் மணிகண்டன்.

****

வீட்டிற்குள் நுழைந்தவள், பழைய நினைவுகளின் தாக்கத்தில் அப்படியே படிக்கட்டில் அமர்ந்து, கைப்பிடி கம்பியில் தலைசாய்த்துக் கொண்டாள். அழக்கூடாது என்ற வைராக்கியம் மனத்தில் எழ, வந்த கண்ணீரை சிரமப்பட்டு அடக்கினாள்.

"தீதீ!" என்றபடி அவளை அணைத்துக்கொண்டு அழுத ருத்ராவை, அமைதியாக தட்டிக்கொடுத்தாள்.

அவளது இந்த திடீர் மாற்றம், தேவிகாவிற்கு கவலையை அளித்தது. 'எல்லாவற்றையும் மனத்திற்குள் வைத்துக்கொண்டு, மன அழுத்தத்தில் விழுந்து விடுவாளோ!' என்ற பயமிருந்தது.

ஆனால், நிதர்சனத்தைப் புரிந்து கொண்ட வைஷாலி, ராகவ், இல்லாத வாழ்க்கையை, தைரியத்துடன் எதிர்கொள்ளத் தயாரானாள். ருத்ராவிற்கும் இப்போதெல்லாம் அடிக்கடி பாடத்தில் சந்தேகம் வர ஆரம்பித்திருந்தது. அந்தச் சிறு பெண்ணிற்கு, தன் மீதிருக்கும் பாசத்தை நினைத்து, மனத்திற்குள் சிரித்துக் கொண்டாள்.

சங்கரனும், தனது அலுவல்களைக் கவனம் செலுத்த ஆரம்பித்தார். தேவிகா இப்போதெல்லாம் மகளது பேச்சிற்கு மறுபேச்சு பேசுவதில்லை. மணிகண்டனும், தினமும் போன் செய்து அவளிடம் சிறிது நேரம் பேசலானார். இத்தனைப் பேரின் மன ஆறுதலுக்காக, தன்னை வெகுவாக மாற்றிக் கொண்டாள் வைஷாலி.

தனியாக இருக்கும் நேரத்தை முடிந்த அளவிற்குக் குறைத்துக் கொண்டாள். அன்னையுடன் சமையல், வீட்டு வேலை என்று உதவி செய்ய ஆரம்பித்தாள். அவ்வப்போது கோயிலுக்குச் செல்வது, ருத்ராவுடன் மார்க்கெட் சென்று வருவது என்று வெளி வேலைகளில் ஈடுபடலானாள்.

கண்மூடிக் கண் திறப்பதற்குள், அவள் ரத்னகிரி வந்து ஒன்றரை மாதம் ஓடிவிட்டது. ருத்ராவுடன் கோயிலுக்குச் சென்றுவிட்டு வீட்டிற்கு வந்த வைஷாலியின் காதில் அன்னையின் சற்று உற்சாகமான பேச்சும், மெல்லிய சிரிப்பொலியும், கேட்டது.

இந்த இரண்டு மாதங்களாக, தனது பேச்சையே குறைத்துக் கொண்டிருந்தவர், இன்று மனம் விட்டுச் சிரிப்பதைப் பார்த்ததும், அவளுக்கு உள்ளம் நெகிழ்ந்து போனது. புன்னகையுடன் வீட்டினுள் நுழைந்தவள் அங்கு அமர்ந்திருந்த விக்ரமை கண்டாள்.

“ஹாய் வைஷாலி!” என்றவனுக்கு, “ஹாய்!” என ஒற்றை வார்த்தையில் பதிலளித்துவிட்டு, உள்ளே செல்ல, அவளுக்குப் பின்னால் வந்த ருத்ராவிடம் படிப்பைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தான்.

முகத்தைக் கழுவிக்கொண்டு வந்தவள், அவனுக்கு எதிரிலிருந்த சோஃபாவில் அமர்ந்தாள். “எப்படியிருக்கீங்க? பிஸ்னஸ் எப்படி

போகுது?” என்று சம்பிரதாயத்திற்கு விசாரித்தாள்.

“எல்லாம் நல்லா போயிட்டு இருக்கு” என்று புன்னகைத்தான்.

“நீங்க பேசிட்டு இருங்க, நான் இதோ வரேன்” என்று எழுந்தார் தேவிகா.

“டீ தானேம்மா நானே எடுத்துக்கறேன். நீங்க உட்காருங்க” என்றவள் எழுந்து சமையலறைக்குச் சென்றாள்.

ருத்ராவிற்கு ஒரு கப்பைக் கொடுத்துவிட்டு, தனக்கு ஒரு கப்பை எடுத்துக்கொண்டு ஹாலுக்கு வந்தாள்.

“பிஸ்கட்!” என்று தட்டை எடுத்து அவள்புறமாக நீட்டினான் விக்ரம்.

“தேங்க்ஸ்” என்று ஒரு பிஸ்கட்டை எடுத்துக் கடித்தவள், டீயைச் சுவைக்கலானாள்.

தேவிகா, விக்ரமிடம் கண்களாலேயே ஜாடை செய்து அவளிடம் பேசும்படிச் சொன்னார்.

லேசாகத் தொண்டையைச் செருமிக் கொண்டவன், “அத்தை! இஃப் யூ டோண்ட் மைண்ட், வைஷாலிகிட்ட கொஞ்சம் பேசணும்” என்றான்.

“பின்னால தோட்டத்தில் உட்கார்ந்து பேசுங்களேன். வைஷூ கூட்டிட்டுப் போடா” என்றார்.

இருவரின் ஜாடைப் பேச்சையும் கண்டும் காணாமல் அமர்ந்திருந்தவள், எழுந்து தோட்டத்திற்குச் சென்றாள். இருவரும் அங்கிருந்த

இருக்கையில் எதிரெதிரே அமர்ந்தனர்.

சற்று நேரம் எதுவுமே பேசாமல், வானத்தில் தெரிந்த மேகக் கூட்டத்தை பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தாள். அவனோ கள்ளம்கபடமில்லாத அவளது முகத்தைப் பார்த்தான். வானில் தெரிந்த மேகக் கூட்டத்தைப் பார்த்தான்.
“உலகத்திலேயே ரொம்ப திறமையான ஓவியன் யார் தெரியுமா? கடவுள்!” என்றான்.

திரும்பி அவனைப் பார்த்து முறுவலித்தவள், “இரக்கமே இல்லாதவன் கூட அதே கடவுள் தான்” என்றாள் வேதனையுடன்.

நாசுக்காக கண்களைத் துடைத்துக் கொண்டவளை அவளை இமைக்காமல் பார்த்தான்.

“வைஷாலி! கொஞ்சம் மனம் விட்டுப் பேசுவோமா?” என்று ஆழ்ந்த குரலில் கேட்டான்.

அவன் எதைப் பற்றிப் பேசப்போகிறான் என்று உணர்ந்திருந்தால், இதழ்களை இறுக மூடி அமைதியாக அமர்ந்திருந்தாள்.

“வாழ்க்கையில் உனக்கு நடந்திருப்பது பெரிய இழப்புதான். ஆனால், அதையே நினைச்சிட்டு இருப்பதில் என்ன பிரயோஜனம். உன்னையும் கஷ்டப்படுத்திட்டு மத்தவங்களையும் வருத்தப்பட வைக்கிற. மாற்றம் தானா வராது. நாமதான் கொஞ்சம் கொஞ்சமா மாத்திக்க முயற்சி செய்யணும்” குரலில் எந்த உணர்ச்சியையும் காட்டாது பேசினான்.

கழுத்திலிருந்த செயினை வருடியபடி, எதையோ மெல்லவும்

முடியாமல் விழுங்கவும் முடியாமல் இருக்கும் பாவத்துடன் அமர்ந்திருந்தாள்.

‘கோபத்தை அடக்குகிறாள்’ என்று அவனுக்கு நன்றாகவே புரிந்தது. ‘ஆனாலும், அவளிடம் ஆறுதலாகப் பேசி, எந்த விஷயத்தையும் சாதிக்க முடியாது’ என்று உணர்ந்திருந்ததால், தனது நிலைப்பாட்டிலிருந்து சிறிதும் மாறவில்லை. ‘அவள் வாயைத் திறந்து பேச வேண்டும்; சண்டையிட்டாலும் பரவாயில்லை’ என்ற எண்ணம் தான் அவனுக்கு.

ஆனால், அவளோ இப்படியே இருந்தாலும் இருப்பேனே தவிர, வாயைத் திறக்கமாட்டேன் என்ற உறுதியுடன் இருப்பவளைப் போல அமர்ந்திருந்தாள்.

“என்னோட பர்சனல் லைஃப் பத்தி நீ பேசாதேன்னு சொல்லலாம்னு பார்க்காதே. இது உன்னோட வாழ்க்கை மட்டும் இல்லை. உன்னைச் சுத்தி இருக்கவங்க அத்தனைப் பேரோட, நிம்மதியும், சந்தோஷமும் இதில் அடங்கியிருக்கு” என்றவனை லேசாக முகத்தை உயர்த்திப் பார்த்தாள்.

‘மனத்தில் நினைத்ததை அப்படியே சொல்லிவிட்டானே’ என்ற வியப்பில் தான் நிமிர்ந்து பார்த்தாள்.

“வாழ்க்கையை அர்த்தமுள்ளதா ஆக்கிகறதும், அனர்த்தமாக மாத்திக்கறது நாமதான்” என்றான் சற்றுக் கோபமாக.

உதட்டைக் கடித்துக்கொண்டு, நீர் திரண்ட விழிகளை உருட்டி, கண்ணீர் வெளிவராதிருக்க, பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தவளைப் பார்த்தவன்,

தனது உணர்வுகளை அடக்க பெரும் பாடுபட வேண்டியிருந்தது.

‘எடுத்தவுடனேயே இத்தனை வேகமாக அவளை மட்டுமே குறை சொல்லிப் பேசியிருக்க வேண்டாமோ!’ என்று தோன்ற மௌனமானான்.

தான் வந்த வேலை நினைவுக்கு வர, “எக்ஸாம் ரிசல்ட் வந்திடுச்சி இல்ல… மேற்கொண்டு என்ன செய்வதாக உத்தேசம்?” சற்று இறங்கிய குரலில் கேட்டான்.

“இது வரைக்கும் எதுவும் இல்லை” என்றாள் மென்குரலில்.

“இத்தனை நல்ல மார்க்கோட பாஸ் பண்ணி, ரெண்டு டிகிரியை கையில் வச்சிட்டு இருக்க. வேலைக்குப் போகும் ஐடியா இல்லையா?”

“ம், முதலில் இருந்தது…”

“இப்போ என்ன ஆச்சு?” என்றவனுக்குப் பதில் சொல்லாமல் கை விரல்களை ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

‘தான் இத்தனைப் பேச்சு பேசியதற்கு சரிதான் போடா என்று எழுந்து போகாமல் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்வதே பெரிது’ என்று எண்ணிக்கொண்டான்.

“நீ டிஸ்டிங்ஷன்ல பாஸானதுக்கு என்னுடைய பரிசு” என்று தன் பாக்கெட்டிலிருந்து, இரண்டாக மடித்த காகித உறையை எடுத்து அவளிடம் நீட்டினான்.

பிரித்துப் படித்தவள், “இதுக்கு என்ன அவசியம்?” என்று கேட்டாள்.

“எனக்கு செய்யணும்னு தோணுச்சி. அவ்வளவு தான்.”

“இதுக்கு நான் அவசியம் சரின்னு சொல்லணுமா?”

“அது உன் விருப்பம். நான் உன்னை வற்புறுத்தலை. சம்மதிக்கணும்னு எந்த அவசியமும் இல்லை” என்று தோளைக் குலுக்கினான்.

கடிதத்தை மீண்டும் யோசனையுடன் பார்த்தாள்.

“கண்டிப்பாக நீ இந்த வேலைக்குப் போகணும்னு நான் சொல்லலை. போனால், உனக்கு ஒரு மாற்றமா இருக்கும். வீட்டிலேயே இருப்பதைவிட, வெளியில் நாலு பேரோடு பழகும் வாய்ப்பு கிடைக்கும்.”

யோசனையுடன் மீண்டும் கடிதத்தைப் பார்த்தவள், “எனக்காக இந்த முயற்சி எடுத்ததுக்கு ரொம்ப தேங்க்ஸ். ஆனால், இதைப் பற்றி நான் யோசிக்கலை. அப்பாவிடமும், மாமாவிடம் பேசிட்டுச் சொல்றேனே” தன்மையாகவே பதிலளித்தாள்.

“ஓகே. உன் திருப்திக்காக பேசு. எனக்குத் தெரிந்து, இதை யாரும் ஆட்சேபிக்க மாட்டாங்க. நான் கிளம்பறேன்; டேக் கேர்” என்றபடி எழுந்தான்.

அவனையே பார்த்தவள், “அடுத்தவங்களுக்கு அட்வைஸ் பண்றது ரொம்பச் சுலபம். தனக்குன்னு வந்தால் தான் எல்லாம் தெரியும்” என்று முணுமுணுத்தாள்.

எழுந்த வேகத்தில் திரும்பி அமர்ந்தவன், “எதுவாக இருந்தாலும் தைரியமாக ஃபேஸ் பண்ணுவேன். மனசுல வச்சி மருக மாட்டேன். வாழ்க்கையில் மனுஷனுக்கு சாதிக்கணும் என்ற வெறி இருக்கணும். இல்லைனா, நாம நிதானமா திரும்பிப் பார்க்கும் போது, எல்லோருக்கும் பின்னால் இருப்போம்.

நான் உன்னை பழைய வைஷாலியா, தன்னம்பிக்கையோட எதையும் எதிர்த்துப் போராடும் வைஷாலியை திரும்ப பார்க்கணும்னு ஆசைப்படுறேன். கண்டிப்பாகப் பார்ப்பேன்” என்றவன், “உன் போனுக்காக எதிர்பார்த்துட்டு இருப்பேன்” என்றவன் புன்னகையுடன் கிளம்பினான்.

அத்தியாயம் - 37

“ஹாய் விக்ரம்! வா, வா” தனது இருக்கையிலிருந்து எழுந்து வந்து கை குலுக்கினான் ரோஹித்.

“ஹாய்டா! இவங்க தான் வைஷாலி” என்றவன், “வைஷாலி என் க்ளோஸ் ஃப்ரெண்ட் ரோஹித்” என்று இருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தான்.

மரியாதை நிமித்தமாக கை குலுக்கியவள், ‘இவனை எங்கோ பார்த்திருக்கிறோமே எங்கே?’ என்று சிந்திக்கலானாள்.

“உட்காருங்க...” என்ற ரோஹித்தின் குரல், அவளது கவனத்தை சிதறடித்தது.

அவளது ஃபைலை வாங்கிப் புரட்டிக்கொண்டே, “இதெல்லாம்

ஃபார்மாலிட்டீஸ் தான். விக்ரம், சொன்னதுக்குப் பிறகு, இதுக்கெல்லாம் அவசியமேயில்லை” என்று புன்னகைத்தவன், போனில் யாரையோ அழைத்தான்.

ஃப்ரெஷ் லைம் ஜூஸை மூவரும் நாசுக்காக அருந்திக்கொண்டிருக்க, அறைக்கதவைத் தட்டி அனுமதிப் பெற்று உள்ளே வந்தவனைப் பார்த்ததும், அவளுக்கு ‘ரோஹித்’ யாரென்று புரிந்து போனது.

இருவரையும் பார்த்து, “ஹாய்!” என்ற அக்*ஷய், ரோஹித்தின் பக்கமாகத் திரும்பினான்.

“அக்ஷய்! வைஷாலியை, உன்னோட அசிஸ்டெண்ட்டாக அப்பாயிண்ட் பண்ணியிருக்கேன். பார்த்துக்கோ” என்றவன், “வைஷாலி! நீங்க வேலையில் ஜாயின் பண்ணிக்கோங்க. அக்ஷய் உங்களுக்குக் கைட் பண்ணுவார்” என்றான்.

“தேங்க்யூ சார்!” என்று எழுந்தவள், விக்ரமிடம் பார்வையாலேயே விடைபெற்று அக்ஷயுடன் சென்றாள்.

அவள் செல்வதையே பார்த்துக்கொண்டிருந்த விக்ரமை, ரோஹித்தின் விழிகள் ஆராய்ந்து கொண்டிருந்தது.

தனது நிச்சயதார்த்த விழாவிலேயே அவன் விக்ரமை கவனித்திருந்தான். அவனது மனத்தைப் படிக்க, வெகுநேரம் பிடிக்கவில்லை.

கல்லூரி நாட்களில் நண்பர்களோடு கலகலவென பேசுவான். மற்றவர்கள் பெண்களைப் பற்றி சுவாரசியமாகப் பேசும் போது

சிரித்துக்கொள்வானே தவிர, பெரிதாக எந்த ஈடுபாடும் காட்டமாட்டான்.

கேட்டாலும், “ரோஹித்! பெண்கள் ரொம்ப சுவாரசியமானவர்கள்; பழகுவதற்கு இனிமையானவர்கள், நம்முடைய எல்லை எது என்று அறிந்து அவர்களிடம் பழகும் வரை” என்று தத்துவம் சொல்வான்.

நிதானமாக அவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டாலும், ரோஹித்திற்கு அது புரியவில்லை. ஆனால், வைஷாலியிடம், விக்ரம் பழகுவதைப் பார்த்த பிறகே, அதற்கான முழு அர்த்தத்தை உணர்ந்து கொண்டான்.

சீமா மூலமாக, விஷயம் வேறு விதமானதை அறிந்த போது, நண்பனுக்காக மிகவும் வருத்தப்பட்டான். விரைவிலேயே இதிலிருந்து மீண்டு வருவான் என்பதில் திடமாக இருந்தான். ஆனால், மீண்டும் தொடங்கிய இடத்திற்கே வந்திருப்பதைக் கண்டு அவனுக்குத் திகைப்புத் தான்.

இன்று வரை விக்ரம், வைஷாலியைப் பற்றி யாரிடமும் எதுவும் சொன்னதில்லை. ரோஹித்திற்கே சீமா மூலமாக அறிந்தது தான்.

வைஷாலிக்கு வேலைக் கேட்டு போன் செய்த போது கூட, தனது உறவுக்காரப் பெண், ராகவின் மனைவி என்று தான் சொன்னான்.

பத்து வருட நட்பில், விக்ரமைப் பற்றி நன்கு அறிந்திருந்தவனுக்கு, ‘விக்ரமின் அடிமனத்தில் புதைந்திருக்கும் காதல், வெளிவர இன்னும் சரியான நேரம் வரவில்லை. கூடிய விரைவில் அது நடக்கும்’ என்றும் நம்பினான்.

வைஷாலி, அறையிலிருந்து வெளியேறியதும் பெருமூச்சுடன்

திரும்பிய விக்ரம், “ரோஹித்! உன்னை நம்பித்தான் வைஷாலியை அழைச்சிட்டு வந்திருக்கேன். அவளைப் பற்றிய விஷயம் எதுவும் வெளியே தெரிய வேண்டாம். ப்ளீஸ்!” என்றான் வேண்டுதலாக.

“இதையெல்லாம் நீ சொல்லணுமா? கவலைப்படாதே… எந்த விஷயமும் வெளியேஎ வராது. அதனால்தான் அவங்களை செக்ஷனில் போடாமல், அக்ஷைக்கு உதவியாளரா போட்டுட்டேன்.”

“ரொம்ப தேங்க்ஸ்டா! அடுத்தவங்களோட அனுதாபப் பார்வை, அவளை நிச்சயம் தெளிய வைக்காது. முடக்கிப் போட்டுடும்” என்றவன், வைஷாலிக்கு ஒரு குறுஞ்செய்தியை அனுப்பிவிட்டு, ரோஹித்திடம் விடைபெற்றுக் கிளம்பினான்.

****

கண்மூடிக் கண் திறப்பதற்குள், நான்கு மாதங்கள் ஓடிவிட்டது. வேலைக்குச் சென்று பலரோடு பழகும் வாய்ப்பு கிடைத்ததில், அவளது வேதனை முழுதுமாக மறைந்து விடாத போதும், முகத்தில் ஒரு தெளிவு வந்திருந்தது.

பெரியவர்கள் சொன்ன ஒரே காரணத்திற்காக, விக்ரம் சொன்ன வேலையை ஏற்றுக்கொண்டாளே தவிர, விருப்பத்துடன் செல்லவில்லை.

அதுவும், அக்ஷயை அலுவலகத்தில் கண்டதும் உள்ளுக்குள் சற்று அதிருப்தி எழத்தான் செய்தது. ஆனால், முன்வைத்த காலை பின்வைக்க விருப்பமில்லாமலும், அதேநேரம் தனக்காக முயற்சி எடுத்த விக்ரமிற்கும் சங்கடம் என்று எண்ணியே, வேலைக்குச்

சேர்ந்தாள்.

ஆனால், இந்த நான்கு மாதங்களில், அக்ஷய் அலுவலக விஷயம் தவிர மற்ற எதைப் பற்றியும் ஒரு வார்த்தை அதிகப்படியாக பேசாததே அவளுக்கு அதிசயமும், ஆச்சரியமுமாக இருந்தது. ‘ஒருவேளை தங்கை கணவரது அலுவலகம், அதோடு அவர் மீதிருக்கும் பயம் கலந்த மரியாதைகூட காரணமாக இருக்கலாம்’ என்று நினைத்துக் கொண்டாள்.

அவன் மட்டுமல்ல, அலுவலகத்தில் அனைவருமே அவளிடம் இயல்பாகப் பேசுவதைப் போலத் தோன்றினாலும், சற்று மரியாதையோடு பழகுவதைக் கண்டிருந்தாள்.

‘யதேச்சையாக ஒருநாள் டைப்பிஸ்ட் ஆருஷியிடம் இதைப் பற்றிக் கேட்ட போது, “மேடம் நீங்க விக்ரம் சாரோட கசினாமே… எம்.டி.யும் அவரும் ரொம்ப திக் ஃப்ரெண்ட்ஸ். நீங்க ஜாயின் பண்ணின அன்னைக்கு, செக்ஷன் ஆஃபிசரிடம், வைஷாலி என் சிஸ்டர் மாதிரி. வேலையில் ஏதாவது ஹெல்ப் கேட்டால் செய்து கொடுங்க. நீங்க லேடிங்கறதால உங்ககிட்ட சகஜமா பேசலாம் அதுக்காகத் தான் சொன்னேன்னு, நடுஹால்ல நின்னு எல்லோருக்கும் கேட்பது போலச் சொன்னாரே” என்றாள்.

எம்.டி.யின் இந்த ஏற்பாட்டிற்கான காரணம் அவளுக்கு நன்றாகவே புரிந்தது. ‘தன்னிடம் அனைவரும் பழகினாலும், அளவுக்கு அதிகமாக நெருங்கிப் பழகித் தன்னைக் காயப்படுத்தி விடக்கூடாது என்றே ரோஹித் பேசியிருக்கிறான்’ என்று அவனை நன்றியுடன் நினைத்துக் கொண்டாள்.

நிச்சயம் இதற்குப் பின்னால் விக்ரம் இருக்கிறான் என்று புரிய, புன்னகையுடன் தனது வேலையைப் பார்க்கலானாள்.

****

வெகுநாட்களுக்குப் பிறகு, அன்று வீடே சற்றுக் கலகலத்துக் கொண்டிருந்தது. ஜோதியின் ஏழுமாதக் குழந்தை அபி தான் அத்தனை உற்சாகத்திற்கும் காரணம்.

முந்தினம் இரவே மணிகண்டனும், ஜோதி தனது கணவன், குழந்தையுடன் வந்திருந்தனர். வந்ததிலிருந்து அந்தக் குட்டி இளவரசிக்கு, அத்தையின் மடியே சிம்மாசனமாகியிருந்தது. குழந்தையின் கள்ளமில்லா சிரிப்பில் தன்னையே மறந்திருந்தாள் வைஷாலி.

எதிர்பாராத விதமாக ரவீந்தரும், செந்தளிரும் கூட வந்தனர்.

அனைவரையும் ஒட்டுமொத்தமாக பார்த்ததில், செந்தளிருக்கு மிகவும் சந்தோஷமாகிவிட்டது. அவர்களைப் பார்த்தால் முகம் திருப்பிக்கொள்ளும், ஜோதிகூட, அவர்களிடம் சகஜமாக பேசியது, வைஷாலிக்கே ஆச்சரியம். அந்த ஆச்சரியம் அவளுக்குப் பிடித்தும் இருந்தது.

வந்தவர்களை ஆர்வத்துடன் வரவேற்றார் தேஏவிகா. அவருக்குமே வீட்டில் பழைய கலகலப்பு இல்லாவிட்டாலும், இப்படி அனைவரும் ஒன்றுகூடியிருப்பது, மனத்திற்குச் சற்று ஆறுதலாக இருந்தது.

“வாங்க அண்ணி! என்று செந்தளிரின் கரத்தைப் பற்றிக்கொண்டார்.

“நீதான் இப்போல்லாம் வீட்டுக்கே வர்றதில்லையே, அதான் நானே வந்துட்டேன்” என்றார்.

“எங்கே அண்ணி? இவரும் வேலை வேலைன்னு இருக்கார். வைஷூவும் ஆ்ஃபிஸ், போறது வர்றதுன்னு இருக்கா. எனக்கு நேரம் கிடைச்சா, அக்கடான்னு உட்கார்ந்திருக்கலாமான்னு இருக்கு. மனசு ரொம்ப ஓய்ந்து போனது போல இருக்கு” என்றார் கவலையுடன்.

ஆறுதலுடன் அவரது கையைப் பற்றிய செந்தளிர் குழந்தையின் சிரிப்புச் சத்தத்தில் திரும்பிப் பார்த்தார்.

வாயில் காற்றை இழுத்து, குழந்தையின் வயிற்றில் வைத்து ஊத, கிளுக்கிக் கிளுக்கிச் சிரித்த குழந்தை, ஆசையுடன் வைஷாலியின் கன்னத்தைப் பிடித்துச் சிரித்தது.

அவள் வயிற்றின் அருகில் முகத்தைக் கொண்டுவந்தால் சிரித்தபடித் தள்ளிவிடுவதும், அவள் விலகினால், “ஆ…ங்க்…” என்று மழலை மொழியில் அழைப்பதுமாக அவளிடம் விளையாடிக் கொண்டிருந்தது.

தனது கவலைகளையெல்லாம் மறந்து குழந்தைக்குச் சமமாக சிரித்து விளையாடும் மகளைப் பார்த்தார் தேவிகா. வருத்தமும், சந்தோஷமும் கலந்த கலவையான உணர்வுகளுடன், இதயம் கனக்க கண்கள் கலங்கியது அவருக்கு.

ஆனால், வைஷாலியோ இது எதையும் அறியாமல், குழந்தையுடன் தனி உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்.

கண்கள் கலங்க அமர்ந்திருந்த தேவிகாவை, ஆறுதலுடன் தனது தோளில் சாய்த்துக் கொண்டார் செந்தளிர்.

சமாளித்துக்கொண்ட தேவிகா, “விக்ரம் எப்படியிருக்கான் அண்ணி?” என்று விசாரித்தார்.

“நல்லாயிருக்கான். நேத்துதான் வந்தான். அவனையும் வரச்சொல்லியிருக்கேன். ஏதோ மீட்டிங் இருக்காம் முடிச்சிட்டு வரேன்னு சொல்லியிருக்கான்” என்றார்.

மதிய உணவு நேரத்தில் வைஷாலி, குழந்தைக்கு அரிசிக் கஞ்சியை சற்றுத் திடமாகக் கிளறி ஊட்டிக்கொண்டிருக்க, கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான் விக்ரம்.

அவளை நலம் விசாரித்தவன், குழந்தையை அடையாளம் கண்டுகொண்டான். அவன் கை நீட்டியதும், தாவி வந்த மழலையை ஆசையுடன் தூக்கிக் கொண்டான்.

உணவு பரிமாறிக் கொண்டிருந்த தேவிகா, குழந்தையுடன் உள்ளே வந்த விக்ரமையும், பின்னாலேயே வந்த மகளையும் சேர்ந்து பார்த்தவர், ஒருநொடி திகைத்து நின்றார்.

“அடடே, வாப்பா விக்ரம்!” என்ற சங்கரனின் குரலில் அவரது கனவு கலைய சுதாரித்துக் கொண்டார்.

உணவுக்குப் பிறகு, தனது அறையில் அமர்ந்திருந்த வைஷாலி, மடியில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தையின் தலையைப் பரிவுடன் தடவிக் கொடுத்தாள்.

ஜோதி சற்று நேரத்திற்கு முன்பு பார்த்த காட்சியையும், தேவிகாவின் நெகிழ்ச்சியையும் மனத்தில் அசைபோட்டபடி, வைஷாலியை பார்த்துக் கொண்டிருந்தாள்.

குணால், விக்ரமிடம் பேசிக்கொண்டிருக்க, பெரியவர்கள் ஐவரும் ஹாலில் அமர்ந்திருந்தனர்.

ரவீந்தர் மெல்ல வைஷாலியின் எதிர்காலத்தைப் பற்றிப் பேச ஆரம்பிக்க, மணிகண்டன் அதைப் பின் தொடர ஆரம்பித்தார். மகளுக்கு ஒரு வாழ்க்கை அமைய வேண்டும் என்று நினைத்தாலும், பெற்றவர்களுக்கு சங்கடமுன், கவலையும் இருந்தது. வைஷாலியிடம் எப்படிப் பேசுவது என்ற தயக்கமும் அவர்களிடம் இருந்தது.

“இதை அண்ணனும், தேவியும் பேசுவதை விட, சீமாவும், ஜோதியும் ஆரம்பிக்கட்டும். ஒரே வயசு இருக்கவங்க, பேசறதுக்கு அத்தனைத் தயக்கம் இருக்காது. நம்மகிட்ட பேசறதை விட அவங்கக்ட்ட வைஷூ மனசு விட்டுப் பேசலாம்” என்றார்.

அனைவருக்கும் அது சரியென்றே பட்டது.

தேவிகா அமைதியாக அமர்ந்திருப்பதைப் பார்த்த செந்தளிர், “தேவி! நீ எதுக்கும் கவலைப்படாதே. எல்லாம் நல்லபடி நடக்கும். விக்ரம்கிட்ட சொல்லி நல்ல மாப்பிள்ளையா நான் பார்க்கச் சொல்றேன்” என்றார் அழுத்தமாக.

தேவிகா ஒருவித அதிர்ச்சியுடன் அவரைப் பார்க்க, அவர் தீர்க்கமான பார்வையை தேவிகாவிடம் செலுத்தினார்.

அத்தியாயம் - 38

கண்களை மூடி அமர்ந்திருந்த வைஷாலியின் மனம் முழுவதும் வெறுமை சூழ்ந்திருந்தது. இரண்டு நாட்கள் குழந்தையுடன் கழித்த நேரங்கள் நினைவுக்கு வந்தது. வீட்டின் ஒவ்வொரு மூலையிலும், குழந்தையின் சிரிப்பொலியே செவிகளில் எதிரொலித்தது. நெஞ்சில் ஏக்கப் பெருமூச்சு எழ, ஒருவித தவிப்புடன், உறக்கம் வராமல் அமர்ந்திருந்தாள்.

ஏனோ, இன்று ராகவின் நினைவுகள் அவளை முழுவதுமாக ஆக்கிரமித்தன. அவனது புகைப்படத்தை நெஞ்சோடு அணைத்துக்கொள்ள, உள்ளத்தில் எழுந்த வேதனை, விழிகளை நிறைத்தது.

இரவு சரியாக சாப்பிடாத மகளுக்காக, பாலுடன் அவளது அறைக்குள் நுழைந்த தேவிகா, அவளிருந்த நிலைக் கண்டு துடித்துப் போனார்.

“வைஷூ!” என்றபடி பதட்டத்துடன் அவளது தோளைத் தொட்டார். அடுத்த நொடி, “அம்மா!” என்ற கதறலுடன், அன்னையின் இடுப்பைக் கட்டிக் கொண்டு, அழுது கரைந்தாள்.

‘சிலநாட்களாக தனது துக்கத்திலிருந்து சிறிது சிறிதாக வெளிவந்து கொண்டிருப்பவள், விரைவில் தனது இயல்புக்கு மாறிவிடுவாள்’ என்று நினைத்து ஆறுதல் பட்டுக்கொண்டிருந்த தேவிகாவின் நிலையைச் சொல்லவே வேண்டாம்.
மகளுக்கு ஆறுதல் சொல்லவும் முடியாமல், தனது அழுகையைக் கட்டுப்படுத்தவும் முடியாமல், துவண்டு போனார். வைஷாலியின் கதறலைக் கேட்டு ஓடிவந்த சங்கரன், அவளது வேதனையைக் காணச்

சகிக்காமல், மாடி வராண்டாவில் அமர்ந்துகொண்டார்.

வைஷாலிக்குத் தெரியாமல், தூக்க மாத்திரை ஒன்றை பாலில் கலந்தார் தேவிகா. இன்னும் எத்தனை நாட்களுக்குத் தான் இந்த நிலைமை என்று அவரது மனம் ஊமையாக அழுதது. வேண்டாம் என்று மறுத்தவளை வற்புறுத்திக் குடிக்க வைத்தார்.

மகளை மடியில் படுக்கவைத்துத் தட்டிக்கொடுத்து, ஆசுவாசப்படுத்தி, உறங்க வைப்பதற்குள், தேவிகாவிற்கு போதும் போதுமென்றாகி விட்டது. தூக்கத்திலும் ராகவின் பெயரைச் சொல்லி அரற்றிக் கொண்டிருந்தவளை விட்டு நகரவும், பயமாக இருந்தது அவருக்கு.

அவளது கரத்தைப் பிடித்துக் கொண்டே பக்கத்தில் அமர்ந்திருக்க, அழுது ஓய்ந்து உறங்கும் மகளைப் பார்த்தபடியே அங்கிருந்த இருக்கையில் அமர்ந்திருந்தார் சங்கரன்.

அவர்களின் இதயம் சுமந்த வேதனையின் கனம், அவர்களது இமைகளை மூட விடாமல் செய்தது.
****
காலை உணவை டைனிங் டேபிளின் மீது அடுக்கிக் கொண்டிருந்த தேவிகா, அலுவலகத்திற்குச் செல்லத் தயாராகி வந்து கொண்டிருந்த வைஷாலியைப் பார்த்தார்.

“குட் மார்னிங்ம்மா!” என்று புன்னகைத்துவிட்டு சமையலறைக்குள் நுழைந்தாள் வைஷு.

அடுப்பில் சாம்பார் கொதித்துக் கொண்டிருக்க, “ம்ஹூம், ஏற்கெனவே லேட்டாகிடுச்சி இன்னும் சமையல் முடியலையே…” என்று

முணுமுணுத்தவள், “அம்மா! நன் மதியத்துக்கு கேண்டீன்ல சாப்பிட்டுக்கறேன்” என்றபடியே காலை உணவை டிபன்பாக்சில் அடைத்தாள்.

“ஆ்ஃபிஸ் கிளம்பிட்டியா வைஷூ!” என்று அதிசயமாக கேட்டார்.

“அதைத்தானே சொல்லிட்டு இருக்கேன்” என்று புன்னகைத்தவள், “ம், நேரமாகிடுச்சி, இன்னைக்கு ஆட்டோதான் பிடிக்கணும். அப்பா ஆ்ஃபிஸ் கிளாம்பிட்டாங்க இல்ல. சரி, நான் ஈவ்னிங் வந்து பேசறேன். வரேம்மா” என்றபடி வாசலில் இறங்கி விரைந்தாள்.

தேவிகா அவள் செல்வதையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தார்.

தடித்த இமைகளும், சிவந்த கண்களும் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால், இரவு ஏதோ கனவு கண்டிருக்கிறோம் என்று நம்பியிருப்பார். இரவு வெகுநேரம் அரற்றிக்கொண்டே இருந்தவள், ஆழ்ந்த உறக்கத்திற்குச் செல்ல, வெகு நேரமாகியிருந்தது.

‘தூங்கும் நேரமாவது அவள் சற்று நிம்மதியுடன் இருக்கட்டும்’ என்று நினைத்து காலை எட்டரை மணிவரை அவளை எழுப்பவில்லை தேவிகா. ஆனால், திடீரென அலுவலகம் செல்லத் தயாராகி வருவாள் என்று நினைக்கவில்லை.

வீட்டிலிருந்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து வேதனை அடைவதை விட அவள் அலுவலகம் செல்வதே நல்லது என்று எண்ணிக் கொண்டார்.

****

வாசலில் நின்றிருந்த காரைப் பார்த்துக்கொண்டே வீட்டினுள் நுழைந்த, வைஷாலியை, மம்தாவின் குரல் வரவேற்றது.

புன்னகையுடன் அவரை நலம் விசாரித்தவள், அருகில் அமர்ந்திருந்த அவரது மகளும், தனது எம்.டி.யின் மனைவியுமான கல்பனாவை பார்த்து வரவேற்பாக புன்னகைத்துத் தலையாட்டினாள்.

சிறிதுநேரம் சாதாரணமாக பேசிக்கொண்டிருந்த மம்தா, “வைஷாலி! நீ என் மாப்பிள்ளை ஆஃபிஸில் தான் வேலை செய்றியாமே; அக்ஷய் சொன்னான், நீ அவனிடம் அசிஸ்டெண்டா இருக்கேன்னு” என்று சிரித்தார்.

வைஷாலியும், “ஆமாம்” என்றாள் மெல்ல.

“இத்தனை நாளா இதை நீ சொல்லவேயில்லையே தேவிகா! என்று அவரிடம் பொய்க் கோபம் காட்டினார்.

சமாளிப்பாக புன்னகைத்த தேவிகா, “நான் இதைப் பத்தி ஏற்கெனவே உன்னிடம் போனில் பேசும் போது சொல்லியிருக்கேன் மம்தா” என்றார்.

“ஓ! எத்தனை விஷயத்தை நினைவு வச்சிக்க முடியுது சொல்லு. என் மாப்பிள்ளை ஒரு கம்பெனி வச்சிருக்கார் இல்லையா… நிறைய சொந்தகாரங்க வேலை கேட்க சொல்றாங்க… அதெல்லாம் நடக்கற காரியமா சொல்லு…” என்று தனது மாப்பிள்ளை ஒரு கம்பெனியின் சொந்தக்காரன் என்ற பீற்றலை எடுத்து விட்டார்.

“இப்போ உன் பொண்ணுக்குக் கூட விக்ரமோட ரெக்கமண்டேஷன்

இருந்ததால கிடைச்சிது... ஆனா, எனக்கு ஒண்ணு மட்டும் புரியலை. விக்ரமுக்கு இல்லாத பிஸ்னஸா? அவன் நினைச்சிருந்த அவனோட ஆ்ஃபீஸிலேயே வேலைப் போட்டுக் கொடுத்திருக்கலாம்" அக்கறையுடன் சொல்வது போல தேவிகாவை மட்டம் தட்டினார்.

தேவிகாவிற்கு போராட்டமாக இருந்தது. வைஷாலியோ கீழ் உதட்டைக் கடித்தபடி, தனது எரிச்சலை அடக்கிக்கொண்டு தன்னைப் பார்ப்பதைப் பார்த்தார். கெஞ்சலான பார்வை ஒன்றை மகளிடம் வீசினார்.

"ம்ஹும்! சரி, அவன் மனசுல என்ன இருக்கோ" என்று நீண்ட பெருமூச்சை வெளிவிட்டார் மம்தா.

அங்கு நிலவிய கனத்த மௌனத்தைக் கலைக்க, மீண்டும் மம்தாவே ஏதோ சொல்ல ஆரம்பிக்க, "அம்மா! நேரமாகுது... இன்னும் நிறைய பேரை அழைக்கணும். சொல்லிட்டுக் கிளம்பலாம்" என்றாள் கல்பனா நாசுக்காக.

"ம், அதுவும் சரிதான். என் பொண்ணுக்கு கல்யாணமாகி முதல் கர்வா சௌத் விரதம் இருக்கா. அதனால் ரொம்ப விசேஷமா செய்யலாமுன்னு இருக்கோம் தேவிகா. வழக்கம் போல இந்த வருஷமும் அவசியம் வந்து கலந்துக்க. வீட்டுக்காரருக்கு ஆயுள் பலம் கூடும்" என்றவர் ஓரக்கண்ணால், வைஷாலியின் முகம் சுருங்குவதைத் திருப்தியுடன் பார்த்துக்கொண்டார்.

கல்பனாவிற்கு அவளைப் பார்க்கவே பாவமாக இருந்தது. அவளது கையைப் பற்றி, "வைஷாலி நீங்களும் அவசியம் வாங்க. நீங்க வந்தால் நான் ரொம்ப சந்தோஷப்படுவேன்" என்று அன்புடன் அழைத்தாள்.

சரி என்பது போலத் தலையை ஆட்டினாள்.

மனக்குமுறலை அடக்கியபடி அவர்களை வழியனுப்ப வாசல் வரை சென்றார் தேவிகா.

“சொல்றேன்னு தப்பா நினைக்காத. பூஜைக்கு நீ மட்டும் வா. என் பொண்ணு ஒரு மரியாதைக்குத் தான் உன் பொண்ணை கூப்பிட்டா. புரிஞ்சிக்குவேன்னு நினைக்கிறேன்” என்றவர், அவர் மனத்தில் நெருப்பை அள்ளிக் கொட்டிவிட்டுச் சென்றார்.

தேவிகாவிற்கு உடலே தீப்பற்றி எரிவது போல இருந்தது. ஏற்கெனவே நொந்து போயிருக்கும் மகளை இப்படித் தன் வீட்டிற்கே வந்து பேசிவிட்டுச் செல்பவரை, தான் ஏன் பொறுத்துக் கொண்டோம்? என்ற கோபம் தன் மீதே எழுந்தது. உள்ளமும், உடலும் சோர்ந்து போக, வராண்டா இருக்கையிலேயே அமர்ந்துவிட்டார்.

காரில் ஏறிய மம்தாவை பிலுபிலுவெனப் பிடித்துக்கொண்டாள் கல்பனா. “ஏம்மா இப்படியிருக்க? பாவம் அவங்க இப்போதான் கொஞ்சம் கொஞ்சமா நடந்ததை மறந்துட்டு வராங்க. இதுல நீ எல்லாத்தையும் கிளறி விட்டுட்டு. வைஷாலி பாவம் அவளோட முகத்தைப் பார்க்கவே கஷ்டமா இருந்தது. நடந்ததுக்கு அவ என்ன செய்வா? மகளோட வாழ்க்கை இப்படி ஆகிடுச்சேன்னு அந்தம்மா எவ்வளவு வருத்தத்தில் இருக்காங்க. அவங்களைப் போய்...” என்று வெறுப்புடன் நிறுத்தினாள்.

“உனக்கு விஷயம் தெரியாது. அந்த விக்ரம் இவ வீட்டுக்கு மாப்பிள்ளையாகப் போறான்னு என்ன ஆட்டம் போட்டா தெரியுமா?

அவளோட பொண்ணே அவளுக்கு வேட்டு வச்சாளே. அதைச் சொல்லிக்காட்டாமல் விட்டா அவளோட மண்டையில் எப்படி உறைக்கும்? இன்னைக்கு இத்தனைப் பேசினேனே திரும்பிப் பேச அவளுக்கு வாய் வந்ததா?” என்றார் எக்காளச் சிரிப்புடன்.

“ஏன் தான் இப்படி இருக்கியோம்மா? என் வீட்டுக்காரர் முன்னால இப்படி ஏதாவது பேசி வைக்காதே. அப்புறம் உன் வீட்டுக்காரர் அதைச் சொன்னார் இதைச் சொன்னாருன்னு என்னிடம் வந்து நிக்காதே” என்று கறாராக சொன்னவள், “ஆனா, ஒண்ணும்மா… விக்ரம், அந்த வீட்டு மாப்பிள்ளையாக நிறைய வாய்ப்பு இருக்கு. இன்னும் கொஞ்ச நாளில் அந்த நியூஸ் உன் காதுக்கு வரும். அப்போ நீ என்ன பேச்சுவ?” என்று சிரித்தாள்.

“உன் வீட்டுக்காரை சொன்னாரா? நீங்க யாரும் என்னை இன்னும் புரிஞ்சிக்கவே இல்லடீ. இப்போ நாம எங்கே போறோம்?”

“விக்ரமோட அம்மாவை பார்க்க.”

“எதுக்குப் போறோம்?”

“பெரிய அதிசயமா? கர்வா சௌத் விரதத்துக்கு அழைக்க…”

“அதான் இல்லை. இங்கே பாரு” என்றவர், தனது கைப்பையிலிருந்து ஒரு புகைப்படத்தையும், ஜாதகத்தையும் எடுத்துக் காட்டினார்.

“அம்மா! நீ தேவை இல்லாத வேலை பார்க்கற…” என்று எச்சரித்தாள் கல்பனா.

“தேவை இருக்கறதால தான் பார்க்கறேன். அத்தனைச் சீக்கிரம் இதை நடக்க விட்டுடுவேனா? விக்ரம் எப்போ அந்த வைஷாலியை கொண்டு வந்து வேலையில் சேர்த்தானோ, அப்போவே எனக்குச் சந்தேகம்தான். ஆனால், இது எதுவும் நடக்கக்கூடாது. அதுக்குத் தான் அவங்க அம்மாவை போய்ப் பார்க்கப் போறேன்.”

சிரித்தவள், “அம்மா! வைஷாலி அவங்க உறவுக்காரப் பொண்ணு. நீ மூக்கை உடைச்சிக்கப் போற” என்றாள்.

“பைத்தியம், அந்த செந்தளிர் நாலும் யோசித்துச் செய்யும் ஆளாக இருந்தாலும், விக்ரமுக்கு அம்மா தானே…” என்றார் குரூரத்துடன்.

கல்பனாவிற்கு, ‘சே’ என்றாகிவிட்டது.

‘இதென்ன இப்படி ஒரு குணம் இந்த அம்மாவிற்கு! என்னதான் தேவிகா ஆன்ட்டி மீது இவருக்குக் கோபமும், பொறாமையும் இருந்தாலும், இத்தனை நாள் குடும்பத்தில் ஒருவராகப் பழகிய தோழியின் நிம்மதியை அழிக்கத் தோன்றுமா? இப்படி உறவாடிக் கெடுப்பதால் யாருக்கு என்ன பலன்? இதனால் இவங்க மனம் நிம்மதி அடைந்துவிடுமா?’ அவளுக்கு வெறுத்துப் போனது.

‘தேவிகா ஆன்ட்டி, கொஞ்சம் பெருமையாக அலட்டிக்கொண்டு பேசுபவர் தான். ஆனால், தன் அன்னையைப் போல அடுத்தவர் குடும்பத்தைக் கெடுக்கும் குணம் கொண்டவரல்ல. வைஷாலி அப்படிபட்டவள் அல்ல; மிகவும் நல்ல குணங்கள் கொண்ட அரிதான பெண். அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைய வேண்டும்’ என்று இறைவனிடம் மானசீகமாக வேண்டிக் கொண்டாள்.

அத்தியாயம் -39

“ஹாய் விக்ரம்! எப்படியிருக்க?” உற்சாகத்துடன் கேட்டாள் சீமா.

“ஃபைன். ஆமாம் என்ன திடீர்ன்னு வாய்ஸ் சாட்ல கூப்பிட்ட?”

“உன் முகத்தைப் பார்த்துட்டே பேசணும் போல ஆசையா இருந்தது அதான்” என்று சிரித்தாள்.

“ஏய்! கிண்டலா?” என்று குரலை உயர்த்தினான்.

“உண்மையைச் சொன்னா நம்பணும். கடுப்படிக்கக் கூடாது” என்றாள்.

“சரிம்மா, நம்பிட்டேன். சொல்ல வந்ததைச் சொல்லிட்டு இடத்தைக் காலி பண்ணு. எனக்கு நிறைய வேலை இருக்கு.”

“என்ன பெரிய்ய்...ய வேலை? மூட்டைக் கட்டும் வேலை தானே?” என்றாள் அலட்சிய பாவத்துடன்.

“ஏன் அது வேலை இல்லையா?”

“ம், வேலைதான்” என்றவள், “ஏண்டா இப்போ திடீர்ன்னு மூர்ரை முடிச்சைக் கட்டிட்டு ரத்னகிரிக்கு ஓடுற?” குரலில் தீவிர பாவம் இருந்தாலும், அவளது கண்களில் ஒரு குறும்பு தெறித்தது.

“அப்பாவுக்காகத் தான்...”

“ஓ! அப்பா பேச்சைத் தட்டாத பிள்ளையா நீ? ஆறு மாசத்துக்கு

முன்னால கெஞ்சோ கெஞ்சுன்னு கெஞ்சி அந்தப் பெரியவங்க ரெண்டு பேரும் வரச்சொல்லி கூப்பிட்டப்போலாம் போகாத துரை இப்போ போறீங்களா?” என்றாள்.

“அப்போ வரச் சொன்னது சும்மா. இப்போ வரச் சொல்லி இருக்கறது பிசினஸைப் பார்க்க. ராகவ் பொறுப்பில் விட்ட புதுக் கம்பெனியை, பார்க்க அப்பாவால் முடியலை. அதான் திரும்ப ஒரு திறமையான ஆளைக் கொண்டு வரும் வரை கம்பெனியை என்னோட பொறுப்பில், எடுத்துக்கச் சொல்லிட்டாங்க. இங்கே நம்ம கம்பெனியைப் பொறுத்த வரை எந்தப் பிரச்சனையும் இல்லை. நான் இல்லைனாலும் வேலை தன்னால நடக்கும். அதான் சரின்னு கிளம்பிட்டேன்” என்றான்.

“ஏன்? ஆறு மாசத்தில் மாமாவுக்குத் தடி ஊன்றி நடக்கும் அளவுக்கு வயசாகிடுச்சாமா? உங்களுக்கெல்லாம்… காரணம் கிடைக்குது பாரு! இதையும் கேட்டுட்டு உட்கார்ந்திருக்க என்னைச் சொல்லணும்” என்று தலையிலடித்துக் கொண்டாள்.

அவளைப் பார்த்து உல்லாசமாகச் சிரித்தான்.

‘நீ ஒரு ஃபார்முக்கு வந்துட்ட மகனே. இல்லைனா இப்படித் துள்ளிட்டு ரத்னகிரிக்கு ஓடுவியா? இந்த அயர்ன் மேனை கவர்ந்து இழுக்கும் மேக்னட் யாருன்னு எங்களுக்குத் தெரியாதாக்கும்?’ என்று மனத்திற்குள் நினைத்துச் சிரித்துக் கொண்டாள்.

“வைஷாலிட்ட பேசினியா விக்ரம்?”

“நான் பேசி ஒருவாரம் இருக்கும். நீ பேசலையா?” என்று கேட்டான்.

“ரெண்டு நாளைக்கு முன்னால் பேசினேன். வாய்ஸ் சாட்டில்…”

“ஓ! எப்படியிருக்கா?” அவனது குரல் குழைந்தது.

“நல்லாயிருக்கா… முன்ன அளவுக்கு இல்லைனாலும், ஓரளவு சகஜமா பேசினா. உன்னைப் பத்திக் கேட்டா.”

விக்ரமின் விழிகள் மின்ன, முகத்தில் மகிழ்ச்சி ரேகை உயிர்த்தெழுந்தது.

“என்ன கேட்டா?” குறுகுறுப்புடன் கேட்டான்.

“உனக்கு ரொம்ப தேங்க்ஸ் சொல்லணும்னு சொல்லிட்டு இருந்தா.”

“தேங்க்ஸா எதுக்கு?”

“இந்த வேலை ரொம்ப பிடிச்சிருக்காம். கொஞ்சம் ரிலாக்ஸ்டா ஃபீல் பண்றா விக்ரம். ஒரு கட்டாயத்துக்காகத் தான் போனேன். ஆனா, இப்போ விருப்பப் பட்டுப் போறேன். எல்லோருமே ரொம்ப நல்லா பழகறாங்க. புது ஃப்ரெண்ட்ஸ் மட்டும் இல்ல, எனக்கு ஒரு நல்ல அண்ணனும் கிடைச்சிருக்காங்கன்னு ரோஹித் பத்திச் சொன்னா. என் வீட்டில் நான் எப்படிப் பாதுகாப்பா உணருவேனோ, அதே போல் ஆஃபிஸிலும் ஃபீல் பண்றேன். இப்படி ஒரு பாதுகாப்பை எனக்குக் கொடுத்தது விக்ரம் தான்னு சொன்னா” என்றாள்.

சீமா சொன்னதை ஆழ்ந்து கேட்டுக் கொண்டான். முகத்தில் ஒரு சிறு முறுவல் பூக்க, தலையைக் கோதிக்கொண்டான்.

உணர்ச்சிகளின் தாக்கத்தில் மிதப்பவனை, குறுஞ்சிரிப்புடன் பார்த்தாள் சீமா.

“என்னடா, எதுவும் சொல்லாமல் மர்மமா சிரிக்கிற?” என்றாள்.

தன் நினைவுக்கு வந்தவன், “ம், நாம முயற்சி தான் எடுக்க முடியும். வெளியே வரணும்னு வைஷாலி நினைச்சதால் தான் முடிந்தது. அப்படிப் பார்த்தால், நாமதான் அவளுக்குத் தேங்க்ஸ் சொல்லணும்” என்றான்.

”சொல்லு சொல்லு. நாளைக்கு ரத்னகிரிக்குப் போய், நேரிலேயே சொல்லு” என்றாள்.

அழகாக புன்னகைத்தவனை, மனம் குளிரப் பார்த்தாள். “விக்ரம்! ஒரு நிமிஷம் அப்படியே கண்ணாடி முன்னால் நின்னு பாரு. எங்களோட பழைய விக்ரம் திரும்பி வந்தது போல இருக்கு” என்றவளுக்குக் கண்கள் பனித்தன.

“ஹே! ஜோக்கடிக்காதேம்மா” என்று மனம் விட்டுச் சிரித்தான்.

“எதுக்கு திடீர்னு வாய்ஸ் சாட்டில் கூப்பிட்டன்னு கேட்ட இல்ல. உன்னோட ரியாக்ஷனைப் பார்க்கத்தான். நான் இப்போ அங்கே நேரில் இல்லையேன்னு இருக்கு விக்ரம். உன்னைக் கலாய்க்க எவ்வளவு நல்ல சந்தர்ப்பம்” என்றாள்.

“போதும் போதும். நீ எப்போ வர்ற?”

“இன்னும் நாலைந்து நாளில்… இந்த முறை அஃபிஷியல் டிரிப்.”

“ஓ! வெல்கம். அட்வான்ஸ் வாழ்த்துக்கள்.”

“தேங்க்யூ. சரிசரி நீ போய் மூட்டை முடிச்சைக் கட்டு. நான் கிளம்பறேன். பை!” என்றவள், புன்னகையுடன் சாட்டை அணைத்தாள்.

சீமா சொன்னது போலவே, எழுந்து சென்று கண்ணாடியைப் பார்த்தவன், தனது செயலை நினைத்துச் சிரித்தபடி, சந்தோஷத்துடன் படுக்கையில் விழுந்தான்.

அனைத்து வேலைகளையும் அவனது நினைவிலிருந்து பின்னுக்குத் தள்ளி, மனக்கண்ணின் முன்னால் வந்து நின்றாள், ‘அவனுடைய’ ஷாலு.

****

விக்ரமின் மனத்தில், மீண்டும் காதல் பூக்கள் அரும்பத் தொடங்கிய அதே நேரத்தில், அவனது அன்னை செந்தளிர், மம்தா கொடுத்துவிட்டுச் சென்ற சோனாலியின் புகைப்படத்தை, மகனது படத்துடன் இணைத்து, அவர்களின் ஜோடிப் பொருத்தத்தை ரசித்துக்கொண்டிருந்தார்.

அத்தியாயம் - 40

ஜோடிப் பொருத்தம் பிரமாதமா இருக்குல்ல? உயரம் தான் கொஞ்சம் கம்மி. மத்தபடி, குறை சொல்வது போல எதுவும் இல்லை. எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. உங்க அபிப்ராயம் என்ன?” என்று ரவீந்தரைப் பார்த்துக் கேட்டார் செந்தளிர்.

பெண்ணின் புகைப்படத்தை வாங்கிப் பார்த்த ரவீந்தருக்கு, என்னவோ போலிருந்தது. உடலை இறுக்கிப் பிடித்த உடையும், அதிகப்படியான அலங்காரமும் அவர் மனத்திற்கு ஒப்பவேயில்லை.

ரவீந்தர், செந்தளிரிடம் காதல் கொள்ள காரணமாக இருந்தது, அவரது அடக்கமான அழகும், அலட்டல் இல்லாத குணமும் தான். குடும்பத்துடன் ஒத்துப் போகும் அவரது பாங்கைப் பார்த்தே வந்த அத்தனை எதிர்ப்பையும் சமாளித்து அவரை மணந்தார்.

‘விக்ரம், வைஷாலியை விரும்புகிறான்’ என்று அறிந்த போது, அவளும், செந்தளிரைப் போலவே அத்தனைக் குணங்களும் கொண்டிருந்ததே காரணமாக இருந்தது. அதோடு எதையும் துணிச்சலாக முடிவெடுத்து, நேர்மையாக நடந்து கொள்ளும் அவளது இயல்பு, அவரை மிகவும் கவர்ந்தது.

மகனுக்கு நல்ல மனைவியாக, குடும்பத்தை அனுசரித்துப் போகும் மருமகளாக இருப்பாள் என்று மிகவும் சந்தோஷப்பட்டார். ஆனால், அது எதுவும் நடக்காத போதும், வைஷாலி என்ற பெண்ணை அவருக்கு மிகவும் பிடித்தே இருந்தது.

அன்று சீமாவும், விக்ரமும் தோட்டத்தில் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்ட பின் வெகுவாக யோசித்தார். ‘அவள் மீது தனக்கு இப்போது காதல் இல்லை’ என்று அவன் சொல்லிக் கொண்டாலும், அவனது அடிமனத்தில் மறைந்திருந்த உணர்வுகளை, அவர் புரிந்து கொள்ளாமல் இல்லை.

அவளுக்காக உருகியது, அவளுடைய வேதனையை தனது வலியாக ஏற்றுக்கொண்டதும், அவளை வெளிக்கொண்டுவர அவன்

பாடுபடுவதையும் கண்டும்காணாமல் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்.

எத்தனையோ விஷயங்களில் முன்னேறிக்கொண்டிருக்கும் உலகில் விதவைத் திருமணம் ஒன்றும் பெரிதாக அவருக்குத் தோன்றவில்லை. மனைவியை இழந்த கணவன்மார்கள், இரண்டாம் திருமணம் செய்யும் போது; கணவனை இழந்த ஒரு பெண், ஏன் இரண்டாம் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று கேட்பவர் தான் ரவீந்தர்.

அப்படிப்பட்ட பெண்களை மனமுவந்து திருமணம் செய்து கொண்ட இளைஞர்களை, பாராட்டியும் இருக்கிறார். ஆனால், தன் மகனே அப்படி ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள விரும்புவான்' என்று அவர் நினைத்தும் பார்த்ததில்லை. மகனது முடிவும் அவருக்குப் பிடித்தே இருந்தது.

அவருக்கு இருந்த ஒரே கவலை வைஷாலியை எப்படிச் சம்மதிக்க வைப்பது என்பது தான். ஆனால், இப்போது அதைவிடப் பெரிய கவலையை, ஆரம்பித்து வைத்திருக்கும் மனைவியை, எப்படி மனம் நோகாமல் சம்மதிக்க வைப்பது என்று புரியாமல் தடுமாறினார்.

எதுவும் சொல்லாமல் மௌனமாகப் போட்டோவைக் கொடுத்த, கணவரை வித்தியாசமாக பார்த்தார் செந்தளிர்.

“என்ன ஒண்ணும் சொல்ல மாட்டேங்கறீங்க? பொண்ணு எப்படி இருக்கா?” கணவரின் கருத்திற்காக ஆவலுடன் காத்திருந்தார்.

“நல்லாத்தான் இருக்கா. இருந்தாலும், கல்யாணம் செய்துக்கப் போறது விக்ரம். அவனுக்குப் பிடிச்சிருக்கணும் இல்லையா?” என்றார்

பொறுமையாக.

“அவ்வளவு தானா உங்க முகத்தைப் பார்த்து நான் பயந்துட்டேன். பிடிக்காமல் போக என்ன இருக்கு? படிச்சிருக்கா, வீட்டுக்கு ஒரே பொண்ணு; வசதியிலும் குறைச்சல் இல்லை இதுக்கு மேலே என்ன வேணும்? நாளைக்கு விரதத்தை முடிச்சிட்டு, அப்படியே அவங்க கூப்பிட்ட மரியாதைக்குப் போய்த் தலையைக் காட்டிட்டு, பொண்ணையும் பார்த்துப் பேசிடலாம். என்ன சொல்றீங்க?” என்றார் ஆவலுடன்.

“எதுக்கு இப்படி அவசரப்படுற தளிர்? நாளைக்கு விக்ரம் வரான். ரெண்டு நாள் பொறு அவன் கொஞ்சம் நிதானிக்கட்டும். அப்புறம் அவனிடம் பேசு. போட்டோவைக் காட்டு. அவனுக்குப் பிடிச்சிருந்து சரின்னு சொன்னால் நான் என்ன வேண்டாமுன்னா சொல்லப் போறேன்” நிதானமாக சொன்னாலும், கடைசியில் அவரது பேச்சில் லேசாக எரிச்சல் வெளிப்படத்தான் செய்தது.

செந்தளிர் இருந்த மனநிலையில் அவரது எரிச்சலைக் கவனிக்கவில்லை.
இந்தத் திருமணத்தை உடனே நடத்திவிடவேண்டும் என்ற எண்ணம் மட்டுமே அவருக்கு இருந்தது. “உங்களுக்கு எல்லாத்திலேயும் நிதானம்” என்று கழுத்தை நொடித்துக் கொண்டார்.

புன்னகைத்தவர், “பதறாத காரியம் சிதறாது” என்றார்.

ஏறயிறங்க கணவரைப் பார்த்தவருக்கு விஷயம் புரிவது போல இருந்தது. “நீங்க பேசுவதைப் பார்த்தா, எதையோ பக்காவா பிளான் பண்ணிச் செய்வது போல இருக்கு” என்று முகத்தைக் காட்டினார்.

அதுவரை இருந்த பொறுமை பறந்து போக, “பிளான் பண்றது நான் இல்ல; நீ. நான் நேரடியாவே கேட்கறேன்… இந்த மம்தாவை உனக்கு எத்தனை நாளாக தெரியும்? இத்தனை அக்கறையோடு நம்ம மகனுக்கு பொண்ணு பார்க்க வேண்டிய அவசியம் என்ன வந்தது?”

“மமதாவை எனக்கு ரொம்பப் பழக்கமில்லைனாலும், நிறைய பார்ட்டி, ஃபங்ஷனில் பார்த்துப் பேசியிருக்கேன். நம்ம ரோஹித்தோட மாமியார். அதோடு, கல்யாண வயதில் இருக்கும் பையனுக்கு அவங்களுக்குத் தெரிந்த பொண்ணை சொல்லியிருக்காங்க. இதிலென்ன இருக்கு?”

“நிறைய இருக்கு…”

“அப்படியென்ன கண்டுபிடிச்சீங்க?”

“நானும் ஆரம்பத்தில் பெரிசா எதுவும் நினைக்கலை. ஆனால், எல்லாம் பேசிமுடிச்சிட்டு கடைசியில் வைஷாலியை விட நம்ம விக்ரமுக்கு தகுதியான, பொறுத்தமான பொண்ணுன்னு சொன்னாங்க பார்.. அங்கே தான் எனக்குப் பொறி தட்டுச்சு” என்றார் கோபத்துடன்.

“குற்றம் கண்டுபிடிக்கும் நோக்கத்தோடு பார்த்தால் எல்லாமே குற்றமாகத் தான் தெரியும்.”

“எல்லாத்தையும் உன்னைப் போல நல்லவிதமாகவே பார்த்தால் ஏமாந்து தான் போகணும். அதுக்காக அடுத்தவங்ககிட்ட குற்றம் கண்டுபிடிக்க சொல்லலை. முன்னெச்சரிக்கையாக இருக்கச் சொல்றேன்” என்றார்.

“கடைசியா என்னதான் சொல்ல வர்றீங்க?” சலிப்புடன் கேட்டார் செந்தளிர்.

“விக்ரம் வரட்டும் பேசலாம். அவசரப்பட்டு நீ அவங்ககிட்ட எதுவும் பேசி வைக்காதே. பின்னால் வருத்தப்பட்டுப் பிரயோஜனம் இல்லை” என்றார்.

“நீங்க எதை மனசுல வச்சிட்டு பேசறீங்கன்னு எனக்குத் தெரியும். ஆனால், அது நிச்சயம் நடக்கப் போறது இல்லை” என்றார் ஆத்திரத்துடன்.

“ஏதாவது உளறாதே தளிர். விக்ரம் முடிவை கேட்டுட்டு மேற்கொண்டு பேசலாம்னு சொல்றேன்” என்றார்.

“அவன் மட்டும் என்ன புதுசா சொல்லப் போறான்? நீங்க மறைமுகமா சொன்னதை அவன் நேரடியாக சொல்வான்…”

மனைவியை ஆராய்ச்சியுடன் பார்த்தார். “அப்போ அவன் மனசுல என்ன இருக்குன்னு தெரிஞ்சே தான் செய்றியா?”

“பிள்ளையோட மனசைப் புரிஞ்சிக்கத் தெரியாதவ இல்லை நான். அதே நேரம் அவனோட முடிவு தப்பாக இருந்தா அதை எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கும் கடமையும் எனக்கு இருக்கு.”

“அப்போ அவனோட நினைப்பு தப்புன்னு சொல்றியா?”

“நிச்சயமா. பிள்ளையை வளர்ப்பதோட, அம்மாக்களோட கடமை முடிஞ்சி போறதில்லை. அவனோட இன்பதுன்பத்தை யோசித்துத் தான்

எந்த முடிவையும் எடுப்பா. ஒரு அம்மாவா நான் செய்வது தான் சரி” அழுத்தம் திருத்தமாக தனது முடிவைச் சொன்னார்.

“அப்போ, உன் பிள்ளையோட சந்தோஷம் உனக்கு முக்கியமில்லை?”

சலிப்புடன் கணவரைப் பார்த்தார். “இங்கே பாருங்க… நான் சொல்றதை கொஞ்சம் புரிஞ்சிக்கோங்க… வைஷாலி, இந்த வீட்டுக்கு மருமகளா வரணும்னு உங்களை விட, அதிகமாக ஆசைப்பட்டது நான்தான். ஆனால், நானே இன்னைக்கு வேணாம்னு சொல்றேன்னா அதில் இருக்கும் உண்மையை நீங்களே புரிஞ்சிக்கலைனா எப்படி?

நீங்க சொல்வது போலவே வைஷாலி, விக்ரம் கல்யாணம் நடந்தால் என்ன ஆகும் தெரியுமா…? வைஷாலியால் விக்ரமோட இயல்பா குடும்பம் நடத்த முடியும்னு நினைக்கறீங்களா? ஏதாவது பிரச்சனைன்னா, பழைய விஷயத்தோடு இப்போ இருப்பதை ஒப்பிட்டுப் பார்க்கச் சொல்லும். இருந்தது, இல்லாததுன்னு குழப்பம் தான் தோணும். இதுக்கெல்லாம் மேலே என் பிள்ளைக்கு என்ன குறை. அவனுக்கு எதுக்கு இப்படி இரண்டாவதாக…” என்று சொல்லிக்கொண்டிருக்க, “செந்தளிர்!” என்று அதட்டலாக குரல் கொடுத்தார் ரவீந்தர்.

“இத்தனை நேரம் நீ பேசினதிலேயே கடைசியாக சொன்ன பாரு அது தான் உண்மை. இதே போல ஒரு பிரச்சனை கொஞ்ச வருஷங்களுக்கு முன்னால் நம்ம வீட்டில் வந்த போது, இரெண்டாவது கல்யாணத்தை ஆதரிச்சிப் பேசினது நீ தான்.

உனக்கு ஒரு நியாயம் ஊருக்கு ஒரு நியாயமா? நீ நல்லவளா இருந்தால், அன்னைக்குப் பேசிய அதே பேச்சை, இன்னைக்கும் பேசி

இருக்கணும். உன்னை நான் இப்படி எதிர்பார்க்கலை.

வைஷாலி வீட்டுக்குப் போய் வந்த அன்னைக்கு நைட் நீ ஒரு வார்த்தை சொன்ன நினைவிருக்கா… விகரமும், வைஷாலியும் குழந்தையோடு உள்ளே வந்த போது, தேவிகா அவங்களை ஒரு பார்வை பார்த்தா பாருங்க, என்னால் ஜீரணிச்சிக்கவே முடியலைன்னு… அன்னைக்கே உன்னைப் பத்தி புரிஞ்சிட்டு இருந்திருக்கணும்.

ஒரு அம்மாவாக நான் செய்தது சரின்னு வாதாடுறியே… இதையே தானே அந்த தாயுள்ளமும் நினைக்கும். எல்லாம் தெரிந்தும் தெரியாத மாதிரி இருக்க உன்னிடம் இதுக்கு மேல பேசிப் பிரயோஜனமே இல்லை" என்றவர், வேகமாக அங்கிருந்து வெளியேறினார்.

செந்தளிரின் முகம் இறுகியது. முதன்முறையாக தேவிகாவின் மீதும் அவரது குடும்பத்தின் மீதும் ஒருவிதக் கோபம் உருவானது.

அத்தியாயம் - 41

'சீக்கிரமே என் மகளுக்கு நல்ல வழியைக் காட்டுக் கடவுளே!' என்று உருக்கமாக வேண்டிக் கொண்டிருந்த தேவிகா, அழைப்பு மணியின் ஓசை கேட்டு வாசலுக்கு விரைந்தார்.

கைநிறைய ஸ்வீட்டும், பழங்களும் நிறைந்த கவர்களுடன் நின்றிருந்த விக்ரமை கண்ட தேவிகா, ஒரு நொடி திகைத்துப் போனார்.

"என்ன அத்தை அப்படியே வாசலோடு அனுப்பிட உத்தேசமா?" என்று சிரித்தான்.

“ஸ், வா விக்ரம்! உன்னை எதிர்பார்க்கவேயில்லையா அதான்…” என்று சமாளித்தார்.

“எதிர்பாராத நேரத்தில் சர்ப்ப்ரைஸ் கொடுப்பது தான் இந்த விக்ரம் ஸ்டைல்” இரு கைகளையும் விரித்து, தோளைக் குலுக்கியவனைப் பார்த்துச் சிரித்தார் தேவிகா.

“ம், என்று சிரித்த தேவிகா, “அம்மா, அப்பா சௌக்கியமா இருக்காங்களா? அன்னைக்கு வீட்டுக்கு வந்து போனதுக்குப் பிறகு, நான் அம்மாவிடம் போன் கூட பேசலை” என்றார்.

“நல்லாயிருக்காங்க அத்தை!” என்றவன், “மாமாவுக்கு ஆ·பிஸ் லீவ் தானே?”

“உங்க மாமா ஆ·பிஸ் விஷயமா வெளியூர் போய் ரெண்டு நாள் ஆகுது.”

“ம், வைஷாலி…!”

“காய்ந்த துணிகளை மடிச்சி எடுத்துட்டு வரேன்னு மொட்டை மாடிக்குப் போய் அரைமணி நேரம் ஆகுது. இன்னும் வரலை. ஏதாவது யோசனையில் இருப்பா. நானும் அவளை ரொம்பவும் எதுவும் சொல்லிகிறது இல்லை” என்றார் கவலையுடன்.

“இப்போ எப்படியிருக்கா அத்தை?”

“பரவாயில்லை விக்ரம். ஆனா, அவளே எல்லாத்தையும் மறந்து கொஞ்சம் வெளியே வரணும்னு நினைத்தாலும், மத்தவங்க

வரவிடமாட்டாங்க போல…” என்றவரது இமைகள் நனைந்தன.

“ஏன், ஷாலுவை யாராவது ஏதாவது சொன்னாங்களா?” இயல்பை மீறிய வேகம் அவனது பேச்சில் தென்பட்டது.

“நேத்து மம்தா, அதான் உன் ஃப்ரெண்ட் ரோஹித்தோட மாமியார் வந்திருந்தா” என்று அவர் பேசியதையெல்லாம் ஒன்றுவிடாமல் சொன்னார்.

“ஏற்கெனவே நொந்து போயிருக்கும் எங்களை வார்த்தையால் குத்தி ரணமாக்கணுமா? அவ என்னைப் பத்தி ஏதாவது சொல்லியிருந்தாலும் பரவாயில்லை. வைஷூ, அவ என்னப்பா தப்பு செய்தா? என்னிடம் சொன்ன விஷயங்களை அவ எதிரில் சொல்லியிருந்தா என் குழந்தை எப்படி துடிச்சிப் போயிருப்பா. எங்களுக்கு யாரும் ஆறுதலும், அனுசரணையும் காட்ட வேணாம். அமைதியாக இருக்கும் எங்களைக் காயப்படுத்தாமல் இருக்கலாமில்ல.

வைஷுவோட கல்யாணத்தைக் கூட, நான் மனநிறைவோட நடத்தல விக்ரம். அவளும், கல்யாணச் சந்தோஷம் எதையும் நிறைவா அனுபவிக்கலை. சமயத்தில் என்னுடைய அந்தச் செயலோட விளைவுதான், இன்னைக்கு என் தங்கம் அனுபவிக்கிற வேதனைக்குக் காரணாமோன்னு உள்ளுக்குள்ள புழுங்கிட்டு இருக்கேன்.

எங்கே தன்னைப் பார்த்து அப்பா, அம்மா கஷ்டப்படுவாங்களோன்னு, தன்னுடைய மொத்தத் துக்கத்தையும் மறைச்சுட்டு, எங்க முன்னாடி சாதாரணமா நடமாடிட்டு இருக்கா. நாங்களே இப்போல்லாம் பேசும் போது, இந்த வார்த்தை அவ மனசை பாதிச்சிடுமோன்னு ரொம்ப யோசிச்சி யோசிச்சித் தான் பேசறோம். ஆனா, வந்த மகராசி

பட்டுபட்டுன்னு முகத்திலடிச்சது போலச் சொல்லிட்டுப் போயிட்டா.

யாரையும் சொல்லிப் பிரயோஜனம் இல்லை. நான் எந்த ஜென்மத்தில் செய்த பாவமோ, என் மகளைப் பிடிச்சி வாட்டுது. அவளோட முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் பெத்த வயிறு பத்தி எரியுது விக்ரம். சின்ன வயசுல இருந்தே அவளுக்கு எல்லாமே கேட்காமலேயே கிடைச்சது. அவளா ஆசைப்பட்டு கேட்டது தன்னோட கல்யாணம் மட்டும் தான். ஆனா, அது காலத்துக்கும் நிக்காமல் போச்சே. அவளுக்குத் தேவையில்லாததை கொடுத்துட்டு, தேவையானதை பிடுங்கிகிட்டானே அந்தக் கடவுள்!"

உடைந்து போய் அழுத தேவிகாவை தேற்றாமல், மௌனமாக அமர்ந்திருந்தான். ஒரு தாயின் வேதனையை அவ்வனால் புரிந்து கொள்ள முடிந்தது. அழட்டும், மனத்தில் தங்கி ரணமாக்கிக்கொண்டிருக்கு அத்தனைச் சோக முட்களும், அவரது அழுகையில் கரைந்து வெளியேறட்டும் என்று மௌனம் காத்தான்.

தனது மனம் கவர்ந்த தேவதைக்காக, அவனது இதயம் ரத்தக் கண்ணீர் வடித்தது. 'பெண்ணுக்குப் பெண்ணே எதிரி' என்ற கூற்று எத்தனை உண்மையானது. அடுத்தவர் வேதனையில் சந்தோஷம் காணும் ஜென்மங்களை, என்ன சொல்வது?

மனிதர்கள் மீதிருக்கும் அதிப்பும், மரியாதையும் அவர்களது நடத்தையைப் பார்த்துத் தான் வரும். அடுத்தவரைப் பற்றிப் புறம் பேசும் இவர்களுக்கு, தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொள்கிறோம் என்று ஏன் புரிவதில்லை.

மம்தாவைப் பற்றி அவன் அறிந்திருந்த போதும், இப்படி வெந்த

புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல, நெஞ்சில் வார்த்தைகளை அமிலமாக்கிக் கொட்டுவார் என்று அவன் நினைத்ததேயில்லை.

உலகம் வேகமாக முன்னேறினாலும், மனிதன் மிகக் கேவலமாகிக் கொண்டு வருகிறான். நவநாகரீக ஆடையும், நுனிநாக்கு ஆங்கிலமும் மனிதனை மேம்படுத்தி விடுவதில்லை. நமது பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், பழகும் விதத்தையும் கட்டிப் பேணி காப்பது தான் மனிதனுக்கு உயர்வு.

அடுத்தவரைக் குத்திக் குதறித்தான் சந்தோஷம் அடைவது என்றால், மனிதனுக்கு எதற்கு ஆறாம் அறிவு? தெருவில் இருக்கும் நாய்க்குக் கூட, நன்றி, நட்பு என்ற மூன்றெழுத்து வார்த்தைகளுக்கு அர்த்தம் தெரியும் போது, மனிதர்களுக்கு அதன் அருமை தெரியவில்லையே!' என்று சலிப்புத் தான் தோன்றியது அவனுக்கு.

மெல்ல அழுகை அடங்க, முகத்தைக் கழுவிக்கொண்டு வந்த தேவிகா, "சாரி விக்ரம்! வீட்டுக்கு வந்த உன்னை உபசரிக்காமல், என்னுடைய சோகத்தைச் சொல்லி, உன்னையும் மூட்அவுட் பண்ணிட்டேன்" என்றார்.

"எதுக்கு சாரின்னு பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க? உங்க மனசை அழுத்திட்டு இருந்த விஷயத்தை என்னிடம் பகிர்ந்துகிட்டீங்களே, அப்போ என்னை மூணாவது மனுஷனா நினைக்காமல், இந்த வீட்டில் ஒருத்தனா நினைத்ததால் தானே சொன்னீங்க."

"உனக்கென்ன சந்தேகம்? நீயும் இந்த வீட்டில் ஒருத்தன் தான்."

“நிச்சயமா…”

“அட, எதுக்கு இவ்வளவு டவுட் உனக்கு?” என்று சிரித்தார்.

“அப்புறம் பேச்சு மாறமாட்டீங்களே?” என்று குறும்பாகச் சிரித்தான்.

“விக்ரம்…!” என்று இழுத்த தேவிகாவிற்கு அவனது சிரிப்பைப் பார்த்ததும் ஏதோ புரிவது போல இருந்தது.

சற்று படபடப்பாகி விட்டார். ஆனால், மறுநொடியே அதிலிருக்கும் சிக்கல்களை, மனம் ஆராயத் துவங்கிவிட்டது. ‘செந்தளிரின் பார்வை சொன்ன பதிலை அவரால் அத்தனைச் சீக்கிரம் மறக்க முடியுமா? ஆனால், தன் நிலை என்னவென்று அவர் உணராமலில்லை.

அன்று இருவரையும் சேர்த்துப் பார்த்த போது, பேசியபடி இப்படி நடந்திருந்தால் எத்தனைச் சந்தோஷமாக இருந்திருக்கும் என்று தான் நினைத்தாரே தவிர, மீண்டும் விக்ரமை மாப்பிள்ளையாக்கிக் கொள்ள வேண்டும், என்று அவர் ஒரு போதும் நினைக்கவில்லை.

இப்போது இவனது முகமும், பேச்சும் குறிப்பாக உணர்த்துவது என்ன? சாதாரணமாக அவன் பேசும் பேச்சு, தனக்குத் தான் இப்படித் தோன்றுகிறதோ? இல்லை நிஜமா?’ என்று புரியாமல் குழம்பினார்.

அவரது குழம்பிய முகத்தைப் பார்த்தவன், அவர் தெளிந்து ஏதாவது கேள்வியைக் கேட்டுத் தன்னைக் கண்டு கொள்வதற்குள் வேகமாக எழுந்தான்.

“அத்தை! சூப்பரா ஒரு டீ போட்டு வைங்க… நான் ஷா… வைஷாலியை

கூட்டிட்டு வந்திடுறேன்” என்று மொட்டை மாடியை நோக்கி விரைந்தான்.

தேவிகாவிற்கு கொஞ்சம் பரபரப்பாக இருந்தது. ‘இது உண்மையாக இருக்கும் பட்சத்தில், நிச்சயம் சிக்கல் வரும். ‘வந்தாலும், அதை விக்ரம் சமாளிப்பான்’ என்று அவரது மனமே, இரு பிரிவாகப் பிரிந்து வாதாடியது.

தேவிகாவிற்கே தன் மனத்தைப் புரியவில்லை. ‘தன் அடிமனத்தில், இன்னும் இப்படி ஒரு ஆசை இருக்கிறதோ?’ என்று தன்னையே கேள்வி கேட்டுக்கொண்டார்.

என்றாலும், இப்போதைக்கு இது எதையும் நினைக்கவேண்டாம் நடப்பது நடந்தே தீரும். காலமே இதற்குப் பதில் சொல்லட்டும் என்று சமாதானம் சொல்லிக்கொண்டு எழுந்து சமையலறைக்குச் சென்றார்.

****

துணிகளை மடித்துவைத்துக் கொண்டிருந்த வைஷாலி, சற்றுத் தள்ளியிருந்த பக்கத்து வீட்டைக் கவனித்தாள். சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கையில் மெஹந்தியும், சராராவும் சரசரக்க, திருமணமான பெண்கள் எல்லாம் புதுப்பெண்ணைப் போல அலங்கரித்துக்கொண்டு, சந்திரோதயத்திற்காக காத்திருந்தனர்.

“என்னம்மா இன்னும் நிலா வரல?” சோகமாகக் கேட்டாள் ஒரு குட்டிப் பெண்.

“தினமும் நாலு மணிக்கே கண்ணுக்குத் தெரியும். ஆனா, இந்த கர்வா

சௌத் அன்னைக்கு மட்டும், அப்படி எங்கே போய் ஒளிஞ்சிக்குமோ. போதாதுக்கு இந்த மேகம் வேற… மணி ஏழு ஆகிடுச்சி..” என்று அக்குழந்தையின் அன்னை சலித்துக் கொள்வதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டாள்.

‘இப்படித் தானே நானும், ஜோதியும் கர்வா சௌத் விரதத்தன்று விதவிதமாக அலங்காரம் செய்து கொண்டு கோயிலுக்குச் சென்று வருவோம்’ என்று நினைத்தவள் சிறிது நேரம் அந்தச் சந்தோஷத்தில் மூழ்கினாள்.

திருமணமான புதிதில் ராகவுடன் பேசிக்கொண்டிருந்த ஒரு விஷயம் அவளது நினைவிற்கு வரச் சோர்வுடன் அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தாள்.

சப்பாத்திக்கு மாவைச் சலித்துக் கொண்டிருந்தவள், கையிலிருந்த ஜல்லடையை நன்றாக தட்டிவிட்டு, முகத்துக்கு நேராக உயர்த்து பிடித்து, சமையலறை கூரையைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

“ஹே! என்ன செய்ற நீ?” சிரித்தபடி சமையலறை வாசலில் வந்து நின்றான் ராகவ்.

“ம், ரிகர்சல்…” என்றாள்.

“ரிகர்சலா.. ஏதாவது டிராமால நடிக்கப் போறியா?”

“அது ஒண்ணுதான் குறை. இது நிஜத்துக்கான ரிகர்சல். கர்வா சௌத் வரும் இல்ல. அப்போ இந்த ஜல்லடையால நிலாவை பார்த்துட்டு அப்படியே உன் முகத்தைப் பார்ப்பேன்…” என்று சொல்லிக்கொண்டே

அதே போலச் செய்தவள், வாசலில் நின்றிருந்தவனைக் காணாமல் வெளியே எட்டிப் பார்த்தாள்.

அவனோ தீவிரமாக யாருடனோ போனில் பேசிக்கொண்டே, ஒரு நிமிடம் என்பது போலச் சைகை செய்தான்.

“ம்ஹூம், சின்ன வயசில இருந்து இப்படி செய்யணும்னு எத்தனை ஆசையா இருந்தேன். நான் சொல்வதைக் கேட்கக் கூட இவனுக்கு நேரமில்லை” என்று செல்லமாக அவனைக் கோபித்துக் கொண்டாள்.

“சாரிடா, ஆஃபிஸிலிருந்து முக்கியமான போன்…”

“நீ உன் ஆஃபிஸையே கட்டிகிட்டு அழு” என்றாள் எரிச்சலுடன்.

“இப்படியெல்லாம் கோவிச்சிகிட்டா, கர்வாசௌத் அன்னைக்கு உன் கண் முன்னாலேயே வரமாட்டேன்…” என்று மிரட்டுவது போலச் சொன்னான்.

“வரமாட்டியா…? உன்னை…” என்றவள், சலித்துக் கொண்டிருந்த மாவை அள்ளி அவன் மீது வீசினாள்.

அதெல்லாம் இப்போது நினைவுக்கு வர, ‘சொன்னது போலவே என் கண் முன்னால வராமல் காணாமல் போயிட்ட இல்ல ராகவ்’ என்று மானசீகமாக அவனுடன் பேசியவளது கண்களிலிருந்து கரகரவென கண்ணீர் வழிந்தது.
கண்களைத் திறக்காமலேயே கண்ணீரைத் துடைத்துக்கொண்டு இருக்கையில் தலை சாய்த்து அமர்ந்திருந்தாள்.

சிலுசிலுவென காற்றடிக்க, கலந்திருந்த கூந்தல் அவளது கன்னத்தை வருட, கொடியிலிருந்த துப்பட்டா ஒன்று பறந்து வந்து, அவளது முகத்தில் விழுந்தது. அதன் ஸ்பரிசத்தில் திடுக்கிட்டுக் கண்விழித்தவள், மேகத்திற்கு இடையிலிருந்து வெளியே வந்து, முகம் காட்டிய நிலவைப் பார்த்தாள்.

“ஹே! நிலா வந்திடுச்சி…” சுற்றுப்புறம் எங்கிலும் அதே ஆரவாரம்.

தன்னயும் அறியாமல் எழுந்து நின்றவள், முகத்தின் மீது விழுந்திருந்த துப்பட்டாவை இரு கைகளாலும் எடுத்து முகத்திற்கு நேராக உயர்த்திப் பிடித்தவள், மெல்ல கீழிறக்கினாள். அவளையே பார்த்தபடி படியருகில் நின்றிருந்த விக்ரமின் முகத்தில், அவளது பார்வை நிலைத்தது.

அங்கே அவனைச் சற்றும் எதிர்பாராதவள் விதிவிதிர்த்துப் போனாள். கைகள் அனிச்சையய்யாக கீழிறக்கியது. ‘சே! என்ன காரியம் இது. அவன் தன்னைப் பற்றி என்ன நினைப்பான்?’ மனம் அவளைச் சாட, சட்டெனத் திரும்பி நின்றுகொண்டாள்.

விக்ரமோ, தனது ஜென்மபலனை அடைந்துவிட்டதைப் போல முகம் கொள்ளா பூரிப்புடன், தலையை அழுந்த கோதிக்கொண்டான். ஒரு கையை பாக்கெட்டில் நுழைத்தபடி, அவளருகில் வந்தான்.

மொத்தக் காதலையும் கண்களில் தேக்கி, குரலில் தாபத்தைக் கலந்து, “ஷாலு…!” என்றழைத்தான்.

வைஷாலி இருந்த மனநிலையில், அவனது உச்சரிப்பும், வெகு நாட்களுக்குப் பிறகு, அவன் அழைக்கும் பெயரின் சுருக்கமோ, அவளது கருத்தில் பதியவில்லை.

“எ..ப்போ வந்தீங்க?” அவன் முகத்தை நிமிர்ந்தே பார்க்கவில்லை.

“அரை மணி நேரம் ஆகுது. கீழே அத்தை கூடப் பேசிட்டு இருந்தேன்” என்றான். பார்வை மட்டும் அவளது முகத்திலிருந்து விலகவில்லை.

“ஓ!” என்றவளுக்கு, என்ன பேசுவதென்றே தெரியவில்லை. அதைவிட அவனது அருகாமை ஏனோ படபடப்பைக் கொடுத்தது. ‘தன்னைப் பற்றி அவன் என்ன நினைப்பான்?’ என்ற எண்ணமே அவளுக்கு அவஸ்தையாக இருந்தது.
அவளைக் காப்பாற்றுவது போல தேவிகா அவளை அழைக்கும் சப்தம் கேட்டது.

“அ..ம்மா கூப்பிடுறாங்க.. வாங்க போகலாம்” என்றவள் தப்பித்தால் போதும் என்பது போல மடித்து வைத்திருந்த துணி பாஸ்கெட்டை எடுத்துக்கொண்டு விடுவிடுவென நடந்தாள்.

“ஹுஃப்!” என்று ஒரு பெருமூச்சை வெளியேற்றினான்.

தேவிகாவின் குரலால், கனவிலிருந்து விடுபட்டவன் போல உணர்ந்தான் விக்ரம்.

‘நல்லவேளை, அத்தை குரல் கொடுத்தாங்க. இல்லைனா, என் காதலை இன்னைக்கு அவளுக்குத் தெரியப்படுத்தி இருப்பேன். அதை மட்டும் நான் செய்திருந்தால், என்ன ஆகியிருக்கும்? என் முகத்திலேயே விழிக்காதேன்னு ஓங்கி ஒரு அறை விட்டிருப்பா. தப்பிச்சேன்.

பொறு மனமே பொறு. இன்னும் சரியான சந்தர்ப்ப அமையவில்லை.

அவளே நடந்த விஷயத்தில் கொஞ்சம் தடுமாறிப் போயிருக்கிறாள். அவளிடம் பேசிக் கோபத்தையோ, அல்லது பயத்தையோ உண்டு பண்ணிவிடாதே' என்று தன்னையே சமாதானம் செய்து கொண்டு புன்னகையுடன் கீழே சென்றான்.

அத்தியாயம் - 42

அலுவலக சம்மந்தமாக அக்ஷய் சொல்லிக்கொண்டிருந்ததை, கம்ப்யூட்டரில் பதிவு செய்து கொண்டிருந்தாள் வைஷாலி.

அவனது டேபிள் மீதிருந்த தொலைபேசி அழைக்கவும், “வைஷாலி! இதை கன்டினியூ பண்ணுங்க” என்று சொல்லிவிட்டுச் சென்று போனை எடுத்தான்.

“ஹாங் ஜீஜூ! ஓகே, சரி!” என்று மூன்று நிமிடம் அந்தப் பக்கம் சொன்னதற்கெல்லாம், சரி சரியெனத் தலையாட்டிக் கொண்டான்.

அவன் கொடுத்துவிட்டுச் சென்ற வேலையை முடித்துவிட்டு, அதை பிரிண்ட் எடுத்தவள், பத்து நிமிடமாகியும் அவனது குரலும் கேட்கவில்லை, ஆளும் வரவில்லை என்றதும், தனது தடுப்பறையிலிருந்து வெளியே வந்தாள்.

சுழல் நாற்காலியில் தலையைப் பிடித்தபடி அவன் அமர்ந்திருப்பதைக் கண்டவள், “சார்! ஏதாவது பிரச்சனையா?” என்று கேட்டாள் மெலிதாக.

“ம்!” என்று நிமிர்ந்து பார்த்தவன், “ஓ! வேலையைப் பாதியில் விட்டுட்டு வந்துட்டேன் இல்ல... ரெண்டு நிமிஷம்... வந்திடுறேன்” என்றான்.

“அதை நான் முடிச்சி, பிரிண்ட்டும் எடுத்துட்டேன் சார். நீங்க ஏன் இப்படி உட்கார்ந்திருக்கீங்க? சொல்லலாம்னா, சொல்லுங்க சார்.”

“பெரிசா ஒண்ணுமில்லை வைஷாலி. அந்த கோத்தாரி கார்மெண்ட்ஸ் எக்ஸ்போர்ட் விஷயமா, அவங்களோட மார்க்கெட்டிங் மேனேஜரைப் பார்த்துப் பேசணும். ரோஹித், அதை என்னிடம் கொடுத்துட்டார்.”

“அவ்வளவு தானே சார். நான், என்னவோன்னு பயந்துட்டேன்” என்று இலகுவாகப் புன்னகைத்தாள்.

“இருங்க. நான் இன்னும் முழுசா முடிக்கலை. இந்த டீலை பேசப்போறது நீங்க. உங்களைக் கூட்டிட்டுப் போய் வரும் டிரைவர் வேலை தான் எனக்கு” என்றான் பாவமாக.

வைஷாலிக்குச் சந்தோஷமாக இருந்தது. தன்னை நம்பி இத்தனைப் பெரிய பொறுப்பை ஒப்படைத்திருக்கும் எம்.டிக்கு, மனதார நன்றி சொல்லிக்கொண்டாள்.

அதே உற்சாகத்துடன், “எத்தனை மணிக்கு சார் கிளம்பணும்?” என்று கேட்டாள்.

“ஹலோ! என்ன இது? இதைச் சாதாரண விஷயம்னு நினைச்சிட்டு இருக்கீங்களா? எத்தனைக் கோடி இன்வஸ்மென்ட் தெரியுமா? விளையாட்டு இல்லை. நீங்க எப்படி இதை ஹாண்டில் பண்ணப்போறீங்கன்னு, நான் கவலைல இருக்கேன்; நீங்க என்னடான்னா, இத்தனைக் கூலா கேட்கறீங்க?” என்றான் தீவிரமான முகபாவத்துடன்.

“நான் அவங்க ஃபைலைத் தரோவா படிச்சிருக்கேன் சார். அப்படியே எனக்கு ஏதாவது கொஞ்சம் தெரியாமல் போனால், நீங்க இருக்கீங்க இல்ல… சமாளிக்க.”

“ம்ம்! இது வேறயா?” என்று சிரித்தவன், “ஓகே, ஈவ்னிங் நாலு மணிக்கு கிளம்பணும். நைட் டின்னர் நமக்கு அங்கேதான்” என்றான்.

“சரிங்க சார். நான் அம்மாவுக்குப் போன் செய்து சொல்லிடுறேன்.”

“ம், கோ அஹெட்!” என்றவன், புன்னகைத்தான்.

****

மாலை நான்கு மணிக்கு அகைஷயின் காரிலேயே கிளம்பினர் இருவரும்.

முதன்முதலாக ஒரு பிஸினஸ் மீட்டில் பேசப்போகிறோம் என்ற பரபரப்பும், பதட்டமுமான கலவையான உணர்வுகள் அவளை ஆட்கொண்டிருந்தன.

கடற்கரைச் சாலையில், ஊருக்குச் சற்று வெளியே இருந்த கெஸ்ட் ஹவுஸினுள் கார் நுழைந்தது. இருமருங்கிலும் மாமரங்களும், தென்னை மரங்களும் அடர்த்தியாக வளர்ந்திருந்தன. முன்பனிக் காலம் ஆதலால், அப்போதே லேசாக இருள் கவிழ ஆரம்பித்திருக்க, அந்த இடம் இன்னும் அச்சமூட்டுவதாக இருந்தது அவளுக்கு. மீட்டிங் என்றதும், ஏதேனும் ஹோட்டல், அல்லது கான்ஃப்ரன்ஸ் ஹாலில் இருக்குமென்று நினைத்தவள், இப்படியோர் இடத்தைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

“இது ரோஹித்தும், அவர் ஃப்ரெண்டும் சேர்ந்து புதுசா வாங்கியிருக்கும் வில்லா. இங்கேயே சமையல்காரன், தோட்டக்காரன்னு எல்லோரும் இருக்காங்க. அவங்களோட வீடும், வில்லாவுக்குப் பின்னாலேயே இருக்கு.”

“ஓ!” என்று கேட்டுக் கொண்டாள்.
“இறங்கு வைஷூ!” என்றவன், காரைப் பூட்டிக்கொண்டே, “எப்படியிருக்கு கெஸ்ட் ஹவுஸ்?” என்றான்.

வைஷூ! இத்தனை நாட்களாக, அவன் அவளை மறந்தும் அப்படி அழைத்ததில்லை. இன்று அவனது நடவடிக்கையும், அழைப்பும் அவளை மருட்டியது. தான் உள்ளுக்குள் பயந்திருப்பதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், “ம்” என்றபடி தலையாட்டினாள்.

“உள்ளே போகலாம், வா” என்றான்.

அவன் உள்ளே செல்லத் திரும்பியதும், ‘இப்படியே ஓடிவிடலாமா?’ என்று தோன்றிய எண்ணத்தை, உடனே மாற்றிக்கொண்டாள். ‘இது தேவையில்லாத பயமாகக் கூட இருக்கலாம் என்று சமாதானம் செய்து கொண்டு, எதற்கும் இருக்கட்டும் என்று மொபைல் போனைக் கையிலேயே வைத்துக் கொண்டாள்.

உள்ளேயிருந்த சமையல்காரனை அழைத்து ஏதோ சொல்ல, அவன் வைஷாலியை மேலிருந்து கீழ்வரை பார்த்துவிட்டு, உடனே அங்கிருந்து நகர்ந்தான்.

“என்ன சார்? ஐந்து மணிக்கெல்லாம் மீட்டிங்ன்னு சொல்லியும்,

இன்னும் யாரும் வரலை?” தனது படபடப்பை மறைத்துக்கொண்டு கேட்டாள்.

“நானும் அதான் பார்க்கிறேன்; இரு, போன் பண்ணியே கேட்டுடறேன்” என்றவன் அங்கிருந்து நகர்ந்து சென்றான். அந்த இடைப்பட்ட நேரத்தில் வைஷாலி மளமளவென்று தான் இருக்கும் இடத்தின் சரியான முகவரி தெரியாத போதும், எம்.டீ’ஸ் நியூ கெஸ்ட் ஹவுஸ், பீச் ரோட்... என்று தேவிகாவின் மொபைலுக்கு மெசேஜ் செய்யவும், அக்ஷய் திரும்பி வரவும் சரியாக இருந்தது.

போனை இடது கையில் வைத்து, வெளியே தெரியாதபடிக்கு துப்பட்டாவை உள்ளங்கையில் சுற்றிக்கொண்டாள்.

வேலையாள் கொண்டுவந்து கொடுத்த ஜூஸை எடுத்து, “சாப்பிடு வைஷூ! உனக்கு கூல்டிரிங்க்ஸ் பிடிக்காது இல்ல; அதான், நினைவு வச்சி ஃப்ரெஷ் ஜூஸ் கொண்டுவரச் சொன்னேன்” என்றவன், டம்ளரை அவளது கையில் திணித்தான்.
அதை வாங்கிக் கொண்டவள், “போன் செய்தீங்களா... என்ன சொன்னாங்க? அவங்க வரமுடியலைனா, இன்னொரு நாள் பார்த்துக்கலாமா?” என வேகமாகக் கேட்டாள்.

நிமிர்ந்து அவளது முகத்தைப் பார்த்தவன், “ஏன் ரொம்ப டென்ஷனா இருக்க? எனி பிராப்ளம்?” என்றான் அக்*ஷய்.

“அதெல்லாம் ஒண்ணுமில்ல. நீங்க போன் செய்தீங்களே, அவங்க என்ன சொன்னாங்க?” எனக் கேட்டதையே மீண்டும் கேட்டாள். இம்முறை பதட்டம் அவளது முகத்தில் தெள்ளத் தெளிவாக தெரிந்தது.

“நத்திங் டு வொர்ரி. இன்னும் அரைமணி நேரத்தில் வந்திடுவாங்க” என்றான்.

‘அவன் சொல்வதை நம்புவதா, இல்லையா’ என்று குழப்பமாக இருந்தது. பேசாமல் ரோஹித்தின் மொபைலுக்கு ஒரு மிஸ்ட் கால் கொடுத்து விடுவோமா?’ என்ற யோசனை எழுந்தது. ஆனால், அக்ஷய் அங்கிருந்து நகர்ந்தால் தானே அது முடியும்? கால் மேல் கால் போட்டு சட்டமாக எதிரில் அமர்ந்து கொண்டிருந்தவனை, என்ன சொல்லி இங்கிருந்து அனுப்பமுடியும்?’ என்று யோசித்தாள்.

மனம் ஏனோ தவியாய்த் தவித்தது. தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள, கையிலிருந்த ஜூஸைப் பருக ஆரம்பித்தாள். ஜூஸ் மெல்ல மெல்ல அவளது தொண்டையில் இறங்கியது. அக்ஷய், அவளைப் பார்வையாலேயே ஆராய ஆரம்பித்தான்.

திடீரென வைஷாலிக்கு என்னவோ போலிருக்க, கண்ணைத் துடைத்துக் கொண்டு, தலையை உலுக்கினாள். அத்தனை நேரம் ஏதோ சந்தேகத்திலேயே இருந்தவளுக்கு, இப்போது எல்லாம் தெள்ளத் தெளிவாக விளங்கியது. வெளிறிய முகத்துடன், அக்ஷயைத் திரும்பிப் பார்த்தாள்.

பிரிட்ஜைத் திறந்து பியர் டின்னை எடுத்தவன், அவளைப் பார்த்துச் சிரித்தபடியே அதைப் பருகினான்.

“அக்ஷய்! இதில் என்ன கலந்த?” என்று கேட்டபடி எழுந்தவளுக்கு, தலை சுற்ற ஆரம்பித்தது. கண்கள் மசமசவென, பிம்பங்கள் தெளிவில்லாமல் தெரிய, அருகிலிருந்த மேஜையைப் பிடித்துக்கொண்டு நின்றாள்.

“அது எதுக்கு உனக்கு வைஷூ டியர்?” என்றபடி, வக்கிரமான சிரிப்புடன் அவளை நெருங்கினான்.

****

“ஹலோ அத்தை!” என வாய் நிறைய அழைத்தாலும், வழக்கமான சிரிப்பைத் தொலைத்த விக்ரமின் முகத்தைப் பார்த்தார் தேவிகா.

“வாப்பா. என்ன டல்லாத் தெரியற?”

“ம்! சொல்றேன். வைஷாலி எப்போ வருவா?”

“இன்னைக்கு ஏதோ மீட்டிங்காம். டின்னரும் முடிச்சிட்டுத் தான் வருவாளாம்.”

“மீட்டிங்கா? என்ன மீட்டிங்?”

“தெரியலைப்பா, திடீர்னு மூணு மணிக்குத் தான் போன் பண்ணிச் சொன்னா.”

“ஓ! அவளும் இருந்திருந்தா, பேச வசதியாக இருந்திருக்கும். மாமா நாளைக்குத் தானே வராங்க?”

“ஆமாம்!” என்ற தேவிகாவிற்கு, ‘அப்படி என்ன அவசரமான விஷயம்?’ என்ற குறுகுறுவென ஒர் உணர்வு இதயத்தைத் துளைத்தது. ஆனாலும், அவனது முகத்திலிருந்த இறுக்கத்தைக் கவனித்து, பிரச்சனை என்னவாக இருக்கும் என்பதை அவரால் ஓரளவு யூகிக்க முடிந்தது.

யோசனையுடன் மேஜையில் விரல்களால் தட்டியபடி அமர்ந்திருந்தவனைப் பார்த்தார். “இன்னைக்கு நீ ஆளே சரியில்லை. இரு டீ கொண்டு வரேன். குடிச்சிட்டு, நிதானமாகப் பேசலாம்” என்றவர் எழுந்து சமையலறைக்குச் சென்றார்.

அவன் எழுந்து, இப்படியும் அப்படியும் நடந்தான். கையை மூடி சுவற்றில் லேசாகக் குத்தினான். தனது முடிவில் திடமாக இருந்தாலும், பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்று அவனுக்குப் புரியவில்லை.

‘கர்வா சௌத்’ அன்று வைஷாலி வீட்டிலிருந்து கிளம்பி தன் வீட்டிற்குச் சென்றவனை, ‘பூஜையன்று கூட வீட்டில் இல்லாமல், அப்படி எங்கே சென்றாய்?’ என்று செந்தளிர் அவனைப் பிடித்துக் கொண்டார்.

இரண்டு நாட்கள் எந்தப் பிரச்சனையும் இல்லாமல் நகர்ந்தது. ஆனால், இன்று காலையில் தன் திருமணத்தைப் பற்றி அவர் பேச்சை எடுத்த போது, அவன் சாதாரணமாகத் தான் இருந்தான். ஆனால், மணப்பெண் யாரோ சோனாலி என்றதும், தனது மனத்தில் இருந்ததை அன்னையிடம் தெளிவாகச் சொல்லிவிட்டான்.

ஆனால், அவர் சிறிதும் யோசிக்காமல், வைஷாலியைத் தன்னால் மருமகளாக ஏற்றுக்கொள்ள முடியாது’ என்று திட்டவட்டமாகச் சொன்னதைக் கேட்டு, கொஞ்சம் ஆடித்தான் போனான்.

இன்றுவரை வைஷாலியை சம்மதிக்க வைப்பது தான் சற்றுச் சிரமமான விஷயமாக இருக்கும் என்று நினைத்தானே தவிர, இப்படி ஒரு திருப்பம் வரும் என்று எதிர்பார்க்கவேயில்லை.

எவ்வளவோ பொறுமையாக எடுத்துச் சொல்லியும் செந்தளிர் கொஞ்சமும் தணிந்து வரவில்லை. நான் வருவதாக உறுதி கொடுத்துவிட்டேன். எனக்காக நீ வந்து பெண்ணைப் பார். மற்றதை பிறகு பேசிக்கொள்ளலாம் என்று முடிவாகச் சொல்லிவிட்டார்.

'அவள் தேவலோக ரம்பையாக இருந்தாலும், வைஷாலியைத் தவிர, தன் மனத்தில் வேறொருத்திக்கு இடமில்லை' என்று அவனும் உறுதியாகச் சொல்லிவிட்டான்.

அதுவரை அவனுமே மிகவும் பொறுமையாகத் தான் பேசிக்கொண்டிருந்தான். ஆனால், அதன் பிறகு செந்தளிர் சொன்ன வார்த்தைகள் தான் அவனைக் கோபத்தில் தள்ளியது. இப்போது நினைத்தாலும், 'தன் அன்னையா இப்படி செண்டிமெண்ட் பிளாக்மெயில் செய்வது?' என்று அவனுக்கு எரிச்சலாக வந்தது.

வீட்டிலேயே இருக்கப் பிடிக்காமல், வெளியே கிளம்பி விட்டான். நீண்ட யோசனைக்குப் பிறகு, 'முதலில் வைஷாலியிடம் பேசவேண்டும். அவள் எப்படியும் மறுப்பாள். ஆனாலும், புரிய வைக்கவேண்டும், புரிய வைக்க முடியும்' என்ற எண்ணத்துடன் கிளம்பி வந்துவிட்டான்.

வைஷாலியின் நினைவுகளில் இருந்தவனை, அவனது கைப்பேசியின் ஒலி மீட்டது. 'மை லைஃப்' என்ற எழுத்துக்கள் ஒளிர, "ஷாலு!" என்று ஆச்சரியத்துடன் போனை உயிர்ப்பித்தான்.

அவன் போனை காதில் வைக்கும் முன்பே, "வி..க்..ரம்...!" என்ற வைஷாலியின் குரல், அவனது இதயத்தை உலுக்கியது.

“ஷாலு…!” என்றவன் அங்கிருந்து நகர்ந்து, ஹாலுக்கு வந்தான்.

“விக்..ரம்! ப்ளீஸ் என்னைக் காப்பாத்துங்க… இந்த அக்ஷய்… அம்மா மொபைலுக்கு… மெசேஜ்…” திக்கித் திணறி வார்த்தைகள் கோர்வையாக இல்லாமல் வர, போனும் கட்டாகிவிட்டது.

விக்ரமின் ஒவ்வொரு செல்லும் பரபரத்தது. ஷாலுவிற்கு இந்த அக்ஷயால் பிரச்சனை. அவள் இப்போது எங்கே இருக்கிறாள்?’ மீண்டும் அவனது போனுக்கு முயற்சிக்க, ரிங் போய்க் கொண்டே இருந்தது.

‘அம்மா மொபைல் மெசேஜ்’ என்றது நினைவு வர, “அத்தை! என் போனில் சிக்னல் இல்லை உங்க போன் கொஞ்சம் கொடுங்களேன்” என்றான்.

“ஹால் ஷெல்ஃபில் இருக்குப்பா… எடுத்துக்கோ” என்றார்.

வேகமாக மெசேஜை வாசித்தவன், “அத்தை! எனக்கொரு முக்கியமான வேலை இருக்கு, வந்து பேசறேன்” ஷூவை மாட்டிக்கொண்டே சொன்னவன், அவரது பதிலுக்குக் காத்திராமல் காரை நோக்கி ஓடினான்.

“இந்த டீயை குடிச்சிட்டுப் போகலாமே… அப்படியென்ன அவசரம்…” என்று முணுமுணுத்தவர், புரியாமல் பார்த்தார்.

அசுர வேகத்தில் காரைச் செலுத்தினான். அவன் மனம் முழுவதும் வைஷாலியின் மீதே இருந்தது. கண்டவுனேயே அந்த அக்ஷயை கொல்லவேண்டும் என்ற வெறி நிமிடத்திற்கு நிமிடம்

ஏறிக்கொண்டிருந்தது.
‘விக்ரம்’ என்று பரிதவிக்கும் குழந்தையாக அவள் அழைத்த அழைப்பு அவனது காதில் எதிரொலிக்க, ‘ஷாலு! நான் வந்துட்டே இருக்கேன்… இன்னும் கொஞ்ச நேரம் சமாளி…’ என்று மனத்திற்குள் புலம்பினான்.

****

“ஏய் வைஷாலி! கதவைத் திற. இல்லைனா உடைச்சிட்டு உள்ளே வருவேன். என்கிட்ட தப்பிக்கலாம்னு மட்டும் நினைக்காதே” என்று வெளியிலிருந்து மிரட்டிக்கொண்டிருந்தான் அக்ஷய்.

ஷெல்பை தலை சாய்த்து நின்றபடி, இருந்தவளது உடல், அவன் கதவை இடித்த ஒவ்வொரு இடிக்கும், பயத்தில் அதிர்ந்தது. கண்கள் சொருக, முகத்தில் தண்ணீரை அடித்துக் கழுவினாள். ‘விக்ரம் வருவான், அதுவரை மயக்கமாகி விடாதே’ என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள். ஆனாலும், கால்கள் தள்ளாட மனம் சோர்ந்தது.

படாரென பெட்ரூமின் கதவு திறக்கும் ஓசை கேட்டதும், தோள்பட்டையில் கிழிந்த உடையை ஒரு கையால் பிடித்தபடி செய்வதறியாமல், கண்களை மூடிக்கொண்டு மௌனமாக அழுதாள்.

‘விக்ரம்… வந்திடுங்க விக்ரம்… என்னைக் காப்பாத்துங்க’ என்று மீண்டும் மீண்டும் மனத்தில் உருப்போட்டுக் கொண்டிருந்தாள்.

“வைஷாலி!” என்று பாத்ரூமின் கதவை உதைத்தவன், “ஆ… ஐயோ” என்று அலறும் ஓசை கேட்க, வைஷாலி மெல்லக் கண்களைத் திறந்தாள்.

”வைஷாலி எங்கேடா?” என்று உறுமிய குரலை, அடையாளம்

கண்டுகொண்டவளுக்கு உடலில் புது சக்தி பாய, தட்டுத் தடுமாறிக் கதவைத் திறந்தாள்.

சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்த விக்ரம், அவளது கோலத்தைக் கண்டு ஒரு நொடிக் கலங்கிப் போனான். அவனது உயிரை அவனிடமிருந்து யாரோ பிடிங்கி எறிந்தது போலத் துடித்தான். ‘இவளை இப்படி ஒரு நிலையில் என்னைப் பார்க்க வைத்துவிட்டாயே’ என்று அந்தக் கடவுளை மனதாரத் திட்டித் தீர்த்தான்.

கன்னத்தில் பதிந்திருந்த விரல் தடங்களும், நகக் கீறல்களும் அவனை மூர்க்கமாக்க, கண்மண் தெரியாமல் அகைஷயை துவைத்தெடுத்தான்.

தன்னைக் காக்க வந்த தேவதூதனாக அவன் அவளுக்குக் காட்சியளிக்க, “விக்ரம்…! என்ற கதறலுடன் அவனை நோக்கி வர முயன்றவள், அப்படியே வாடிய கொடியாக துவண்டு கீழே விழ, “ஷாலு…!” என்றபடி ஓடிச் சென்று அவளைத் தாங்கிக்கொண்டான்.

அவள் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் அவன் இதயத்தைச் சுட்டது. கட்டில் மீதிருந்த துப்பட்டாவை எடுத்து, அவள் கழுத்தைச் சுற்றிப் போர்த்தினான்.

வலியில் சுருண்டு துடித்துக்கொண்டிருந்த அகைஷயின் மொபைல் ஒலிக்க, திரும்பிப் பார்த்தவன் ரோஹித் என்று தெரிய, போனை எடுத்து, “ஹலோ!” என்றான்.

“வி.க்ரம்…! என்னடா அகைஷ போனை நீ எடுக்கற? அவன் எங்கே” ஆச்சரியத்துடன் கேட்டான்.

“இங்கேதான் இருக்கான். வந்து அவனை ஹாஸ்பிட்டலுக்கு அள்ளிட்டுப் போ. உயிரோட இருந்தா கெட்வெல் சூன்-னு பொக்கே அனுப்பறேன்; போய்ச் சேர்ந்துட்டா சொல்லியனுப்பு, மலர்வளையத்தோடு வந்து மரியாதை பண்ணிட்டுப் போறேன்” என்றவன், போனை அணைத்துத் தூக்கிப் போட்டான்.

வைஷாலியை கைகளில் ஏந்தியவன், திரும்பி, “இன்னைக்கு உனக்கு நல்ல நேரம்னு நினைச்சிக்க, இன்னொரு முறை என் கண்ணில் பட்டுடாதே, பட்டால்…” என்று அவனை எச்சரித்துவிட்டு, காரை நோக்கி நடந்தான்.

அத்தியாயம் - 43

விக்ரம், காரை போர்ட்டிகோவில் நிறுத்தும் சப்தம் கேட்டு, அவன் முன்பே போனில் சொன்னபடி, வீட்டின் விளக்குகள், வராண்டாவின் விளக்கு அனைத்தையும் அணைத்துவிட்டு, கதவைத் திறந்தார் தேவிகா.

காரிலிருந்து இறங்கி சுற்றும் முற்றும் பார்வையைச் செலுத்தியவன், பின்தவைத் திறந்து வைஷாலியைத் தூக்கிக் கொண்டு வீட்டினுள் சென்றான்.

‘எதற்காக விளக்கையெல்லாம் அணைத்துவிட்டுத் தன்னை வீட்டினுள்ளேயே இருக்கச் சொன்னான் என்று புரியாமல், அவன் சொன்னதைச் செய்துவிட்டு காத்திருந்தார் தேவிகா.

கைகளில் யாரையோ ஏந்தியபடி வருபவனைக் கண்ட தேவிகாவிற்கு, வயிற்றைப் பிசைந்தது. நெஞ்சிக்குள் இனம் புரியா பயம் ஏற்பட,

வயிற்றைப் பிடித்துக் கொண்டார். ஏனென்று தெரியாமலேயே, “வைஷூ!” என்று முணுமுணுத்தார்.

விக்ரம் உள்ளே வந்ததும் கதவை பூட்டிவிட்டு, விளக்கைப் போட்டவர் திவானில் கிடத்தப்பட்டிருந்த மகளைக் கண்டதும் அதிர்ந்து போனார்.

“வைஷூ...!” என்று அலறிய தேவிகாவின் தோள்களைப் பற்றி நிறுத்தி, “அத்தை! ப்ளீஸ், அவளுக்கு ஒண்ணுமில்லை. ரிலாக்ஸ். சத்தம் போட்டுப் பிரச்சனையை வெளியே தெரிய வச்சிடாதீங்க” என்று அழுத்தமாகச் சொன்னான்.

அவனது பேச்சுக்கு மதிப்பு கொடுத்த போதும், “ஐயோ விக்ரம்! என் குழந்தைக்கு என்னப்பா ஆச்சு?” என்று கதறியவரை, அவனால் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

“அது...” என்று அவன் ஆரம்பிக்கும் போதே, வைஷாலியிடம் அசைவு தெரிய, “விக்..ரம்! என்..னைக் காப்..பாத்..து.ங்க...” என்று திணறலுடன் வார்த்தைகளை உதிர்த்தாள்.

மகளருகில் முழங்காலிட்டு அமர்ந்து, “வைஷூ கண்ணா! அம்மா கூட நீ பத்திரமா இருக்கடா” என்று தலையைக் கோதிக் கொடுத்தார்.

கண்களைத் திறக்காமலேயே, “அம்..மா!” என்று அவரது கரத்தைப் பற்ற, அவளது கைகளைக் காற்றில் துழாவினாள்.

“தங்கம்... என்னடா?” என்று மகளை அணைத்துக்கொண்டு கண்ணீர் வடித்தார்.

மெல்லக் கண்களைத் திறந்தவள் அன்னையைக் கண்டதும், தான் பத்திரமாக இருக்கிறோம் என்ற நிம்மதியிலும், சுயபச்சாதாபத்தில் அவளது விழிகள் மடைதிறந்தது.

“அத்தை! அவளுக்கு முதல்ல குடிக்க ஏதாவது கொண்டு வாங்க” என்றான் விக்ரம்.

அப்போதுதான் அவன் அங்கிருப்பதைப் பார்த்த வைஷாலியின் பார்வையில் வேதனை பொங்க, முகத்தைத் திரும்பிக் கொண்டு குலுங்குக் குலுங்கி அழுதாள்.

இருவரையும் பார்த்த தேவிகா கண்களைத் துடைத்துக் கொண்டு, அங்கிருந்து நகர, அவளெதிரில் அமர்ந்தவன், “வைஷாலி!” என்று ஆறுதலாக அவளது கையைப் பிடித்தான்.

எழுந்து அமர முயன்றவளை, “ரிலாக்ஸ் வைஷாலி! அப்படியே படு. கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக்கோ. நடந்ததை நினைத்து வருத்தப்படாதே. உன்னுடைய புத்திசாலித்தனம் தான் உன்னைக் காப்பாத்தியிருக்கு. எல்லாம் சரியாகிடும்” என்று தேற்றினான்.

கொஞ்சம் சிரமத்துடன் எழுந்து சாய்ச்து அமர்ந்தவள், “என்ன பெரிய புத்திசாலித்தனம்? என்னுடைய முட்டாள்தனத்தால் தான் இப்படி ஆச்சு” என்று, நடந்த அனைத்தையும் சொன்னவள், “மனசுக்குள்ள ஒரு சந்தேகம் வந்தவுடனேயே, நான் அந்த ஜூஸைக் குடிக்காமல் இருந்திருக்கணும்” என்று தன்னையே நொந்து கொண்டாள்.

“இட்ஸ் ஓகே. சமயோஜிதமா அத்தையோட மொபைலுக்கு மெசேஜ் அனுப்பியிருக்கியே… அதுவே பாராட்டப்படவேண்டியது தான்” என்றான்.

அனைத்தையும் கேட்ட தேவிகாவிற்கு, தாங்க முடியாத கோபம் எழுந்தது. நேராக டெலிபோனை நோக்கிச் சென்றவர், “இந்த மம்தாவை நாக்கைப் பிடுங்கிக்கிறது போல நாலு கேள்வி கேட்டால் தான் என் மனசு ஆறும்” என்றபடி ரிசீவரை எடுக்க, விக்ரம் வேகமாகச் சென்று அவரைத் தடுத்தான்.

“அத்தை! விஷயத்தைப் பெரிசாக்காதீங்க” என்றான்.

“எப்படி விக்ரம்? அன்னைக்கு அத்தனைப் பேசினா இல்ல... இன்னைக்கு என் பொண்ணோட நிலைக்கு, அவளோட பிள்ளைதானே காரணம். இதை இப்படியே விடச் சொல்றியா?” என்றார் கண்ணீருடன்.

“அம்மா! ப்ளீஸ் வேண்டாம். அவன் செய்த தப்புக்கு அவனே அனுபவிப்பான். நீங்க ஏதாவது கேட்கப் போய், என்னைத் தாம்மா அசிங்கப்படுத்துவாங்க” என்ற மகளை, பார்த்தபடி உறைந்து நின்றார்.

மகளின் கூற்றில் இருக்கும் நியாயத்தை உணர்ந்து, போனை வைத்துவிட்டு அப்படியே அமர்ந்தார்.

அதேநேரம் விக்ரமின் செல்போன் ஒலிக்க, எடுத்தவன், “யா, நான் வாசலுக்கு வரேன்” என்றவன் பேசிக்கொண்டே, வாசலுக்கு விரைந்தான்.

வரும்போது அவனது வயதையொத்த ஒரு பெண்ணையும் உடன் அழைத்து வந்தான்.

“அத்தை! இவங்க டாக்டர்.சந்தியா. சீமாவோட ஃப்ரெண்ட். வரும்போது

அவங்களுக்கு போன் செய்து வரச்சொல்லியிருந்தேன்” என்றவன், வைஷாலியின் பக்கமாகக் கையைக் காட்டினான்.

தேவிகாவிடம் வெந்நீர் கொண்டுவரச் சொல்லிவிட்டு, “உங்க ரூம்...?” என்று இழுத்தார்.

“மாடியில் இருக்கு டாக்டர் வாங்க” என்றவளை, கைத்தாங்கலாக எழுப்பிவிட்டார் சந்தியா.

“நானே மேனேஜ் பண்ணிக்குவேன் டாக்டர். தேங்க்ஸ்” என்றவள், அவர் உதவ வந்ததை மறுத்துவிட்டு, மெல்ல நடந்து படியேற, சந்தியா அவளைப் பின் தொடர்ந்தாள்.

அவளது மனத்தைரியத்தைப் பாராட்டி புன்னகைத்துக் கொண்டான் விக்ரம்.

“நத்திங் டு வொர்ரி. ரெண்டு நாளைக்கு டேப்லெட்ஸ் கன்டினியூ பண்ணுங்க. டிடி போட்டிருக்கேன்” என்று சிறு விளக்கம் சொல்லிவிட்டுக் கீழே வந்தவள், விக்ரமிடமும் வைஷாலியைப் பற்றிப் பேசிவிட்டு, விடைபெற்றுக் கிளம்பினாள்.

வைஷாலியின் அறைக்கதவைத் தட்டி, தேவிகாவை அழைத்து, தான் கிளம்புவதாகச் சொன்னான். அவரும் தயக்கத்துடன் சரி என்றார்.

அவரது தயக்கம் புரிந்த போதும், அவனுக்கு வேறு வழியில்லாமல் கிளம்பியவனை, “விக்ரம்!” என்று அழைத்தாள் வைஷாலி.

அறைக்குள் எட்டிப் பார்த்தவனிடம், “ரொம்ப தேங்க்ஸ்” என்று

புன்னகைக்க, அவனும் தலையசைத்து புன்னகைத்தான்.

“எதுவாக இருந்தாலும், எந்த நேரமாக இருந்தாலும், எனக்குப் போன் பண்ணுங்க” என்று தேவிகாவிடம் விடைபெற்றான்.

சற்றுத் தள்ளி வந்து காரை நிறுத்தியவன், முதல் வேலையாக போனை சைலட் மோடில் போட்டான். சீட்டை சற்றுப் பின்னால் தள்ளிச் சாய்ந்து அமர்ந்தபடி, வைஷாலியின் வீட்டையே பார்த்துக் கொண்டிருந்தான்.

****

களைத்த முகத்துடன் வீட்டினுள் நுழைந்தவனை, “நில்லுடா!” என்று அதட்டலுடன் குரல் கொடுத்தார் செந்தளிர்.

எஜமானியம்மாவின் குரலில் வேலைச் செய்து கொண்டிருந்த வேலையாட்கள் நின்று திரும்பிப் பார்க்க, அங்கே விக்ரமைக் கண்டதும் அனைவரும் அங்கிருந்து செல்ல, ரவீந்தர் மாடியிலிருந்து எட்டிப் பார்த்தார்.

“அம்மா ப்ளீஸ்! ரொம்ப ஓய்ந்து போய் வந்திருக்கேன். நான் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கணும். மத்ததை அப்புறம் பேசலாம்” என்றான் கெஞ்சலான பார்வையுடன்.

”உன்னைக் கேட்க ஆள் இல்லைன்னு நினைப்பா. இது வீடு; நீ உன் இஷ்டத்துக்குப் போக வர ஹோட்டல் இல்லை. நைட்டெல்லாம் எத்தனை முறை போன் செய்வது? எங்கே இருக்க ஏதுன்னு ஒரு தகவலும் இல்ல” கோபத்தில் அவருக்கு மூச்சிரைத்தது.

தான் எங்கிருக்கிறோம் என்று சொல்லாதது தவறு தான் என்று புரிந்த போதும், அன்னையின் இந்தச் செயல் அவனுக்கு எரிச்சலைக் கிளப்பியது.

“நான் என்ன எலிமெண்ட்ரி ஸ்கூல் பையனா? நீங்க நிற்க வச்சி கேள்வி கேட்க? இதுக்கு முன் எத்தனையோ நாள் ராத்திரி வீட்டுக்கே வராமல் இருந்திருக்கேன். அப்போல்லாம் ஒரு சின்னக் கேள்வி கூடக் கேட்காத நீங்க இன்னைக்கு எதுக்கு வரிசையாகக் கேள்வி கேட்கறீங்க?” என்று கேட்டான்.

“அப்படி ஒரு கட்டாயத்திற்கு என்னைக் கொண்டு வந்து நிறுத்தி இருப்பது நீ தான். நேத்தே படிச்சி படிச்சி சொன்னேன். நாளைக்கு சோனாலி வீட்டுக்கு வர்றதா சொல்லியிருக்கேன், பத்து மணிக்கு அங்கே இருக்கணும்னு. நீ என்னடான்னா, நிதானமா பதினோரு மணிக்கு வீட்டுக்கு வர்ற… போன் மேல போன். அவங்களுக்குச் சொல்லி சமாளிக்கறதுக்குள்ள அப்பப்பா” என்றார் கடுப்புடன்.

“எதுக்குச் சமாளிக்கணும்? நான் சொன்ன பதிலை நேராக சொல்லவேண்டியது தானே.”

“விக்ரம்! நீ ஆசைப்படும் இந்த விஷயத்துக்கு என்னிடமிருந்து என்னைக்குமே சம்மதம் கிடைக்காது நினைவில் வச்சிக்க. அப்படியும் இது நடக்கும்ன்னு நினைச்சா… நான்…” என்றவரைக் கைநீட்டி, “போதும்” என்று தடுத்தான்.

“சும்மா இந்த மிரட்டும் வேலையெல்லாம் வேண்டாம். உங்களுக்கு மட்டும் தான் மிரட்டத் தெரியுமா? இதுக்கு மேல் எனக்கும் மிரட்டத்

தெரியும். கல்யாணம்னு ஒண்ணு நடந்தால் வைஷாலியோடு தான். இல்லைனா எனக்குக் கல்யாணமே இல்லை. இப்படியே இருந்துட்டுப் போறேன். இது உங்க மிரட்டலைப் போல இல்லை... என்னுடைய பிடிவாதம் பற்றித் தெரியும் இல்ல.

இன்னொரு முறை என் கல்யாணப் பேச்சை யாரும் பேசக்கூடாது. பேசினால் நான் இருக்கேனா இல்லையானே உங்களுக்கெல்லாம் தெரியாமல் போயிடும்" என்றவன் வேக நடையுடன் தன் அறையை நோக்கி நடந்தான்.

செந்தளிர் உறைந்த சிலையாக அமர்ந்திருந்தார். 'மகனது குணம் தெரிந்தும் தான் அவசரப்பட்டுவிட்டோம். சற்று விட்டுப் பிடித்திருக்க வேண்டும்' என்ற காலம் கடந்த எண்ணம் தோன்ற அடுத்து என்ன செய்வது என்று அவருக்குப் புரியவேயில்லை.

மாடியிலிருந்து அனைத்தையும் பார்த்துக்கொண்டிருந்த ரவீந்தர், மகனது அறைக்குச் சென்றார். தலையைக் கைகளில் தாங்கியபடி அமர்ந்திருந்தவனைப் பார்க்கவே அவருக்குப் பரிதாபமாக இருந்தது. ஆறுதலுடன் முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

"அப்பா!" என்றவனது குரல், பெரிதும் ஓய்ந்து போயிருந்தது.

"வைஷாலியிடம் பேசியாச்சா? முடியாதுன்னு மறுத்துட்டாளா? மனசைத் தளர விட்டுடாதே. எறும்பு ஊரக் கல்லும் தேயும்" என்றார்.

"ம்ச்சு!" என்று சலித்துக்கொண்டவன், "விஷயமே வேறப்பா" என்று அனைத்தையும் சொல்லி முடித்தான்.
"கடவுளே! அடுத்தடுத்து இன்னும் எத்தனைச் சோதனையைத் தான்

அவள் தாங்குவா?' என்று அவளுக்காக வருத்தப்பட்டவர், அந்த நாய்களை சும்மாவா விட்ட?" அதுவும் அந்தச் சமையல்காரனை..." என்று கோபத்துடன் பொங்கினார்.

"அதெப்படிப்பா விடுவேன். காலையில் நேராக அங்கே போய் அவனைக் கவனிச்சிட்டுத்தான் வரேன். மூட்டைமுடிச்சைக் கட்டி அவனோட ஊருக்கே துரத்தி விட்டுட்டேன். ஷாலு, கொஞ்சம் சுதாரிச்சதால எதுவும் நடக்காமல் தப்பிச்சா. இல்லைனா... நினைச்சிப் பார்க்கவே முடியலைப்பா..." என்று வேதனையில் தவித்தான்.

விடுப்பா முடிந்தது, முடிஞ்சாச்சு. எல்லாக் கெட்டதும் தூரப்போச்சுன்னு நினைச்சிக்கலாம். இனி நல்லதே நடக்கும்" மகனுக்கு ஆறுதல் சொல்வது போலத் தனக்கும் சேர்த்துச் சொல்லிக்கொண்டார் ரவீந்தர்.

****

ஊரிலிருந்து திரும்பி வந்த சங்கரனிடம், தேவிகா நடந்தவற்றை மெதுவாகச் சொல்ல, இடிந்து போனார் சங்கரன். மகளின் நிலையை நினைத்துக் கண்ணீர் வடித்தார்.

மருந்தின் வீரியத்தில் உறங்கிக்கொண்டிருந்த மகளின் தலையைப் பரிவுடன் தடவி கொடுத்தவர், அவளருகிலேயே அமர்ந்துவிட்டார். அவளது வாழ்க்கையில் சில முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டிய கடமையை உணர்ந்து, அதை விரைந்து முடிக்க ஆயத்தமானார்.

மனைவி சொன்ன தகவல்களைக் கேட்டுக்கொண்டவர், அதைப் பற்றி சிந்திக்கலானார். கேட்பதற்கும் நினைப்பதற்கும் நன்றாக இருந்த

போதும், அதிலிருக்கும் சிக்கல்களையும் அவர் யோசிக்காமல் இல்லை.

முடிவில் எதிலும் அவசரப்பட வேண்டாம் நிதானமாகப் பேசி முடிவெடுப்போம். இப்போதைக்கு வைஷாலியை மீட்டெடுப்பது முதல் வேலை என்றார்.

ஆனால், அவர்கள் நினைத்ததற்கு மாறாக, வைஷாலி மாறினாள். வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகளும், அவமானங்களும், வலிகளும் வேதனைகளும் சிலரை சுயபச்சாதாபத்தில் தள்ளி, வாழ்க்கையில் எதற்கும் உபயோகமில்லாமல் ஆக்கிவிடும். ஆனால், அதுவே சிலரது வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி உயர்த்தி விடும்.

இப்போது வைஷாலியும் தன்னைச் செம்மைப் படுத்திக் கொள்ள ஆரம்பித்துவிட்டாள். தான் கடக்க வேண்டிய பாதையிலிருக்கும் முட்களைக் காயப்படாமல் ஒதுக்கித் தள்ளும் உத்வேகத்தைப் பெற்றுவிட்டாள்.

நடந்ததையே நினைத்துக்கொண்டு தன்னையும் மற்றவர்களையும் வருத்தியது போதும். வாழ்க்கை என்பது, இத்துடன் முடிந்துவிடுவதில்லை. தனக்கெதிரில் அது நீண்டு கிடக்கிறது என்ற நிதர்சனத்தைப் புரிந்து கொண்டாள்.

குட்டக் குட்டக் குனியும் கோழைத்தனத்தை விட்டு, நிமிர்ந்து நிற்க தன்னைத் தயார் படுத்திக் கொண்டாள். இருளுக்கும், வெளிச்சத்துக்கும் இடைப்பட்ட அஸ்தமனத்தின் மங்கலிலிருந்து தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முடிவெடுத்தாள்.

அத்தியாயம் - 44

“வாங்க உள்ளே வாங்க” என்ற வைஷாலியின் குரலைக் கேட்டு, யாரை இப்படி வரவேற்கிறாள் என்று வாசலுக்கு விரைந்த தேவிகா, அங்கே நின்றிருந்தவர்களைக் கண்டதும் ஆத்திரத்தில் பல்லைக் கடித்தார்.

தேவிகாவின் கோப முகம், கல்பனாவிற்கு சங்கடத்தைக் கொடுக்க, தவிப்புடன் ரோஹித்தைப் பார்த்தாள்.

வைஷாலி கெஞ்சுதலாக அன்னையைப் பார்க்க, “வாங்க” என்று பட்டும்படாமல் அழைத்தார்.

ரோஹித் சங்கடத்துடன், “சாரி வைஷாலி! எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை. உன்னிடம் மன்னிப்பு கேட்கக் கூட எனக்கு வெட்கமா இருக்கு. என்னை நம்பி தான் விக்ரம் உன்னை நம்ம கம்பெனியில் வேலைக்குச் சேர்த்தான். ஆனால்…” தவிப்புடன் நிறுத்தினான்.

“யாரோ செய்த தப்புக்கு நீங்க எதுக்கு மன்னிப்பு கேட்கணும்? அதை நான் எதிர்பார்க்கவும் இல்லை” என்றாள்.

“உனக்கு ரொம்பப் பெரிய மனசும்மா” கல்பனா நன்றியுடன் அவள் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

“அச்சச்சோ! என்னைப் பெரிய மனுஷி ஆக்கிடாதீங்க. வாழ்க்கையில் அனுபவங்கள் தான் நம்மைப் பக்குவப்படுத்துது. நான் கொஞ்சம் பக்குவம் அடைஞ்சிட்டேன்னு வேணும்னா சொல்லலாம்” என்றாள்.

சிறிது நேரம் பொதுவாகப் பேசிகொண்டிருந்துவிட்டு இருவரும் விடைபெற்றுக் கிளம்பினர். தேவிகாவிடம் சொல்லிக்கொள்ள, தலையை மட்டும் ஆட்டிக் கொண்டார்.

“ரோஹித் சார்!” என்று அவனை அழைக்க, கதவு வரை சென்றவன் திரும்பிப் பார்த்தான். “எனக்கு இன்னும் ரெண்டு நாளைக்கு லீவ் வேணும். புதன்கிழமையிலிருந்து வேலைக்கு வரேன்” என்று சொல்ல, சந்தோஷத்துடன் சம்மதித்தான் அவன்.

தேவிகா பிலுபிலுவெனப் பிடித்துக் கொண்டார். அலுவலகத்திலிருந்து வந்த சங்கரனிடம் சொல்ல, அவர் யோசனையுடன் மகளைப் பார்த்தார். அவளது முகத்தில் தெரிந்த தெளிவு, அவரைப் புன்னகையுடன் சம்மதம் சொல்ல வைத்தது.

தேவிகா தான், போகும் போதும் வரும் போதும் புலம்பிக்கொண்டே இருந்தார். தந்தையும், மகளும் கூட ஜாடையாக சிரித்துக் கொண்டனர். சங்கரனுக்கு பழைய வைஷூ திரும்பி வந்தது போல ஒரு எண்ணம் ஏற்பட, மௌனமாக புன்னகைத்துக் கொண்டார்.

****

ரோஹித்தும், கல்பனாவும் வருவதைக் கண்ட செந்தளிர், பெண் பார்க்க வருவதாகச் சொல்லிவிட்டு வராததைக் கேட்க வந்திருப்பதாக எண்ணிக்கொண்டார்.

இருவரும் கொஞ்சம் தயங்குவதைக் கண்டதும், விக்ரமின் மனத்தில் இருப்பதை அவர்களிடம் முழுவதுமாகச் சொல்லிவிட்டார். ரோஹித் மனைவியை அழுத்தமாகப் பார்த்தான்.

அவனது பார்வைக்கான அர்த்தத்தை உணர்ந்து கொண்டவளாக, “இதை நான் அன்னைக்கே சொல்லியிருக்கணும். அம்மா, இருந்ததால் என்னால் எதுவும் பேசமுடியலை. விக்ரம் அண்ணாவுக்கு இந்த இடம் வேண்டாம் ஆன்ட்டி. இது முடியக் கூடாதுன்னு தான் நானும் வேண்டிகிட்டேன். நல்லவேளை விக்ரம் அண்ணா நல்ல முடிவு தான் எடுத்திருக்காங்க” என்றாள்.

பேசும் போதே, கல்பனாவின் முகம் போன போக்கைப் பார்த்த செந்தளிர், திகைத்துப் போனார். ‘இந்த மம்தாவிற்கு ஏன் தன் குடும்பத்தின் மேல் இத்தனை ஆத்திரம்?’ என்று குழப்பமாக இருந்தது. ஆனால், இந்தக் கோபம் தங்கள் மீதல்ல, தேவிகாவின் மீது என்பது, கல்பனா சொன்ன விஷயங்களிலிருந்து புரிந்தது.

அன்று தேவிகாவின் வீட்டில் அவர் பேசிய பேச்சுக்களையும் சொன்னாள். செந்தளிர் வெறுத்துப் போனார். ரோஹித்தும் இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த விஷயங்களை மெல்ல அவரிடம் சொல்லிவிட்டான். விக்கித்து போனார் அவர்.

அதனால்தான் விக்ரம் அன்று வீட்டுக்கு வரவில்லையா? அவனைப் போட்டு பாடாய்படுத்திவிட்டோமே. எப்படியும் நடந்த விஷயங்களை அவன் அப்பாவிடம் சொல்லாமல் இருந்திருக்கமாட்டான். அவரும் என்னிடம் சொல்லவில்லையே’ என்ற சிறு கோபம் மனத்தில் எழ, திரும்பிக் கணவரைப் பார்த்தார்.

அவரோ இதற்கும் தனக்கும் சிறிதும் சம்மந்தமில்லை என்பது போல ரோஹித்துடன் பேசிக்கொண்டிருந்தார்.

செந்தளிருக்கு ஒன்று மட்டும் தெரியாது. ‘இதையெல்லாம் அம்மாவிடம் சொல்ல வேண்டாம்’ என்று விக்ரம் சொல்லியும், ரோஹித் மூலமாக விஷயத்தைத் தன் மனைவிக்குத் தெரியும்படிச் செய்தவரே அவர்தான் என்று.

அதன் பிறகு மற்ற மூவருமே பேசிக்கொண்டிருக்க, செந்தளிர் பலத்த யோசனையில் இருந்தார். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு இருவரும் கிளம்பும் நேரம், அலுவலகத்திலிருந்து திரும்பி வந்த விக்ரம், இருவரையும் வரவேற்றான். பார்வை மட்டும் அன்னையின் மீதே இருந்தது. செந்தளிரும் தளாராத பார்வையை மகன் மீது வீசினார்.

கடந்த இரண்டு நாட்களாக இருவருமே ஒருவரிடம் ஒருவர் மௌனவிரதம் காத்தனர். அவன்கூட நடந்ததை ஒதுக்கிவிட்டு அன்னையிடம் பேசினான். ஆனால், செந்தளிர் அவனிடம் முகம் கொடுத்தே பேசவுமில்லை; அவன் இருக்கும் இடத்திற்கும் வருவதில்லை. அவனாக வந்தாலும், எதுவும் பேசுவதில்லை என்பதால் விக்ரமும் ஒதுங்கிக்கொண்டான்.

“என்னடா திடீர்ன்னு உன் காத்து இந்தப் பக்கம் அடிக்குது?” கிண்டலாகக் கேட்டான் விக்ரம்.

“வைஷாலியைப் பார்க்க வந்தோம். அப்படியே இங்கே வந்தோம்” என்றான்.

“ம்” என்றவன் அதற்கு மேல் எதுவும் கேட்டுக்கொள்ளவில்லை.

“திரும்பவும் வேலைக்கு வரேன்னு சொல்லிட்டா விக்ரம்” என்றவனை

ஆச்சரியத்துடன் பார்த்தான்.

“ரியலி! வெரி குட்… எனக்குத் தெரியும்டா அவளுக்குள்ள ஒரு போராட்டக் குணம் இருக்கு. எதையும் சமாளிக்கும் திறமை இருக்குடா” மலர்ந்த முகத்துடன் மகன் பேசுவதைப் பார்த்துக் கொண்டிருந்த செந்தளிருக்கு, மனத்தை என்னவோ செய்தது.

“எனக்கு நேத்துதான் அண்ணா இவர் விஷயத்தைச் சொன்னார். உண்மையிலேயே பாராட்டப்படவேண்டிய விஷயம். காதலித்த பெண்ணாக இருக்கட்டும், இல்லை யாரோ முன்பின் தெரியாத பெண்ணாக இருக்கட்டும்… கணவனை இழந்தவங்களுக்கு மறுவாழ்வு கொடுப்பது என்பது அத்தனைச் சுலபமான விஷயமில்லை. ரொம்பப் பெரிய மனசு வேணும்.

“மறுவாழ்வு அது இதுன்னு சொல்லி என்னைத் தியாகி ரேஞ்சுக்கு ஆக்கிடாதேம்மா. வைஷாலி என்பதால் கூட எனக்கு இந்த நினைப்பு வந்திருக்கலாம். வேறொருவராக இருந்தால் நானே இப்படி ஆசைப்பட்டிருப்பேனான்னு தெரியாது” என்றான் அடக்கத்துடன்.

“உண்மையிலேயே நீங்க கிரேட் அண்ணா! மனசுல இருப்பதை மறைக்காமல் சொல்லவும், தைரியம் வேணும். என்ன? எனக்கு இப்படி ஒரு அண்ணன் இல்லாமல் போயிட்டாரேன்னு, கொஞ்சம் வருத்தமாயிருக்கு” நெகிழ்ந்து போயிருந்த கல்பனாவிற்கு கண்கள் ஈரமானது.

“ஹே! கூடப் பிறந்தால் தான் தங்கையா? ஜோதி மாதிரியே, நீயும் எனக்கு தங்கைதான்” என்றான் கனிவுடன்.

கிளம்புகிறேன் என்ற ரோஹித்தை சாப்பிட்டுவிட்டுத் தான் போக வேண்டும் என்றவன், “அம்மா! நீங்க சொல்லுங்க இவனுக்கு” என்றான்.

“அதுக்கென்ன, வந்தவங்க சாப்பிடாமல் வெளியே அனுப்பவே போறதில்லை” என்றவர், வேலையாளை அழைத்து மெனுவைச் சொன்னார்.

அம்மாவும், மகனும் ஒருவரை ஒருவர் ஓரப்பார்வை பார்த்துக்கொண்டதை மற்றவர்கள் ரகசியமாக கவனித்துப் புன்னகைத்துக் கொண்டனர்.

அனைவரின் மனத்திலுமிருந்த இறுக்கம் தளர்ந்திருந்ததாலோ என்னவோ அனைவரும் சற்றுக் கலகலப்பாகவே பேசிக்கொண்டிருந்தனர். அதைக் கெடுப்பது போலத் தொலைபேசி அலறியது.

போனை எடுத்த ரவீந்தர், “தளிர் கல்பனாவோட அம்மா” என்றபடி கார்ட்லெஸ்ஸை கொண்டுவந்து மனைவியிடம் கொடுத்தார்.

அவரிடம் பேசவே விருப்பமில்லாத போதும், பொறுத்துக்கொண்டு, “சொல்லுங்க மம்தா” என்றார்.

அவ்வளவுதான் மடைதிறந்த வெள்ளமாக பேச ஆரம்பித்தவர், அங்கே சுற்றி இங்கே சுற்றித் தங்களது பேச்சில் வைஷாலியைக் கொண்டு வந்து நுழைத்தார். அவளைப் பற்றித் தேவையில்லாமல் பேசினார்.

ஒரு கட்டத்திற்கு மேல் அதைப் பொறுக்க முடியாத செந்தளிர், “நிறுத்து மம்தா! வைஷாலியைப் பற்றி எதுக்குத் தேவையில்லாமல் என்னிடம்

சொல்ற?” என்றதற்கு மம்தாவால் எந்தப் பதிலும் சொல்ல முடியவில்லை.

“நீ என்னிடம் பேச வேண்டியது கல்யாண விஷயம் மட்டும் தான். இப்போ அதுக்கும் அவசியம் இல்லை. இன்னொன்னு சொல்றேன் நல்லா கேட்டுக்கோ… வைஷாலியைப் பற்றி உன்னைவிட எனக்கு நல்லாத் தெரியும். முதல்ல உன் பிள்ளைக்கு நல்ல புத்தி சொல்லித் திருத்தப் பாரு. அடுத்தவங்க குடும்பத்தைப் பத்தி நீ கவலைப்படத் தேவையில்லை.

அதோடு இனி நீ இந்த வீட்டுப் பக்கம் வந்திடாதே. தேவிகா மாதிரி நீ பேசுவதையெல்லாம் கேட்டுக்கணும்னு எனக்குத் தலையெழுத்தில்லை. உன் மரியாதையை நீ தான் காப்பாத்திக்கணும். இதுக்கு மேல பளிச்சுன்னு யாராலயும் சொல்லமுடியாது வை போனை” என்று பட்டென ரிசீவரை வைத்தார்.

செந்தளிரின் முகம் கோபத்தில் செந்தணலாக சிவந்தது.

கல்பனாவிற்குச் சற்றுச் சங்கடமாக இருந்த போதும், ‘தன் அம்மாவின் குணத்திற்கு இது தேவைதான்’ என்று எண்ணிக் கொண்டாள்.

தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்ட செந்தளிர், நிமிர்ந்து மகனைப் பார்த்தார். ‘எனக்கும் இதற்கும் சம்மந்தமில்லை’ என்பது போல அமர்ந்திருந்தாலும், அவனது செவிகள், அவர் சொல்லப் போகும் வார்த்தைக்காக காத்திருப்பதைப் புரிந்து கொண்டார்.

வியப்புடன் தன்னைப் பார்த்துப் புருவம் உயர்த்திய கணவரிடம், “வைஷாலி மேல எனக்கு தனிப்பட்ட கோபமோ வெறுப்போ எதுவும்

இல்லை. அவள் நல்ல பொண்ணுதான். அவளோட கேரக்டரைப் பற்றி அடுத்தவங்க சர்ட்டி்ஃபிகேட் கொடுக்கணும்னு இல்லை. மம்தா சொன்னது அபாண்டம். அதுக்குத் தான் திருப்பிக் கேட்டேன்" என்றார் மிடுக்காக.

'ம்' என்று புருவம் உயர்த்தியவர், மகனிடம் ரகசியமாக, "கீழே விழுந்தாலும் மீசையில் மண்ணு ஒட்டலையாம்" என்று சிரித்தவர், "உன் அம்மாவைப் பொறுத்தவரை ஃபிஃப்டி பர்சன்ட் ரூட் கிளியர். இனி நீ சம்மதிக்க வைக்க வேண்டியது, என் மருமகளைத் தான். இனி எல்லாமே உன் கையில் தான் இருக்கு. மகனே! உன் சமர்த்து" என்றார் கிசுகிசுப்பாக.

"சொல்லிட்டீங்க இல்ல… இனி இந்த விக்ரமோட பெர்ஃபார்மென்ஸை பாருங்க" என்று காலரை தூக்கிவிட்டுக் கொண்டு அழகாக புன்னகைத்தான்.

அத்தியாயம் - 45

"அவ்வளவு தானே-ப்பா வேற விஷயமில்லையே? அப்போ, நான் என் ரூமுக்குப் போறேன்" என்று எழுந்த மகளை, கோபத்துடன் பார்த்தார் தேவிகா.

"வைஷூ! அப்பா எவ்வளவு முக்கியமான விஷயம் சொல்லிட்டு இருக்காங்க; கொஞ்சம் கூட மரியாதை இல்லாமல், எழுந்து போற?" என்று அதட்டினார்.

"எல்லோருக்கும், எல்லா விஷயமும் முக்கியமானதா இருக்கறதில்லம்மா. சொல்லப்போனா, எனக்கு இது தேவையில்லாத

விஷயம்!” என்றாள் அழுத்தமாக.

“வைஷூ! என்னப் பேசுறோம்னு, புரிஞ்சி பேசு!” -குரலை உயர்த்தினார் தேவிகா.

“தேவி! இரும்மா. அவ சொல்வதிலும் தப்பில்லையே!” எனப் பொறுமையாக மனைவியைச் சமாதானம் செய்தார் சங்கரன்.

“என்னங்க நீங்க? சின்னக் குழந்தைக்குச் சொல்றாமாதிரி, இத்தனை பொறுமையா சொல்லிட்டு இருக்கோம்; அவ என்னடான்னா, யாருக்கோ சொல்வது போல... அவ்வளவுதானேன்னு கேட்டுட்டு எழுந்து போறா. இதுக்கு மேல, என்னால் பொறுமையா இருக்க முடியாதுங்க.”

ஒவ்வொரு நாளும், இன்னைக்கு என்ன பிரச்சனை வரும்? யாராவது ஏதாவது சொல்லிடுவாங்களோன்னு நான் தவிக்கணுமா? எங்கேயாவது வெளியே போனவ, வரக் கொஞ்சம் நேரமானா கூட, இவளுக்கு என்ன ஆச்சோ, ஏதாச்சோன்னு வயத்துல நெருப்பைக் கட்டிட்டு அலைய, என்னால் முடியாது.

ஒண்ணு சரின்னு சொல்லணும். இல்லை... முடியாதுன்னா, ஏன் முடியாதுன்னும் எனக்கு ரெண்டுல ஒண்ணு பதில் தெரிஞ்சே ஆகணும்!” தேவிகா தனது முடிவில் தீர்மானமாக நின்றார்.

“ஏம்மா கண்டதையும் பேசறீங்க? உங்க ரெண்டு பேரையும் நான் ரொம்ப மதிக்கிறேன். அதுக்காக, எனக்கு விருப்பமில்லாத விஷயத்தைச் செய்யச் சொல்லாதீங்க. நிச்சயமா, நீங்க சொல்லும் விஷயத்தில் எனக்கு உடன்பாடு இல்ல.

இந்தப் பத்து மாசத்தில், நீங்க எல்லோரும் ராகவை மறந்திருக்கலாம். ஆனால், நான் எப்படிம்மா? மூணு மாசமே வாழ்ந்திருந்தாலும், ஒரு

நிறைவான வாழ்க்கையை அவர் கூட வாழ்ந்துட்டேன். ராகவோட இடத்தில் இன்னொருத்தரை வச்சிப் பார்க்க, உங்களால எப்படி முடியுது? வேணும்னா வச்சிக்கவும், வேணான்னா தூக்கிப் போடவும், இது உயிரில்லாத பொருளில்லம்மா... மனசும்மா மனசு!

இன்னும் இந்த மனசுல, அவர் மேல இருக்கும் காதலும், அவரோட நினைவுகளும் அழியாமல் அப்படியே தான் இருக்கு. என் மனசுல கல்வெட்டா பதிந்து போன அவரையும், அவரோட நினைவுகளையும் தூக்கி எறிஞ்சிட்டு, இன்னொருவரோடு என்னால் எப்படிம்மா குடும்பம் நடத்த முடியும்? இந்த மனசு, ராகவுக்கு மட்டும் தான் சொந்தம். எந்த நிலையிலும் அவரோட இடத்தை... யாராலும், எப்போதும் நிரப்பவே முடியாது" என மனத்திலிருந்ததை அழுத்தம் திருத்தமாக்கச் சொல்லிவிட்டு, அங்கிருந்து வெளியேறினாள்.

கலங்கிய விழிகளும், தழுதழுத்த குரலும் அவளது நிலையைப் பெற்றோருக்கு தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தது. 'இன்னமும் அவள், அவனைத் துளிகூட மறக்கவில்லை. தங்களுக்காக, இயல்பாக இருப்பதைப் போல, தனக்கு ஒரு முகமூடி இட்டுக்கொண்டு நடமாடுகிறாள்' என்ற உண்மை புரிந்த போது, பெற்றவர்களது இதயம் நைந்து போனது.

'மகளுக்கு ஒரு நல்வாழ்வு அமையப் போகிறது' என்ற பூரிப்பிலிருந்த தேவிகாவின் நினைப்பெல்லாம் சிதைந்து போனது. ரவீந்தர் வந்து பேசிச் சென்ற பின்னர், வெகுவான யோசனைக்குப் பிறகே, சங்கரன் அவளிடம் நிதானமாகத் திருமணப் பேச்சை எடுத்தார்.

'வைஷாலி சுலபத்தில் சம்மதிக்கமாட்டாள் என்று தெரிந்த போதும், அதை அவள் வாய்மொழியாக கேட்கும் போது, மிகுந்த வருத்தமும்,

வேதனையுமாக இருந்தது. இவளை, என்ன சொல்லி தேற்றப்போகிறோம்?' என்ற கவலை ஒருபுறமிருக்க, விக்ரமை நினைத்து மறுபுறம் பெரும் கவலை உண்டானது.

ஏற்கெனவே ஒருமுறை திருமணப் பேச்சு முறிந்து போன நிலையில், மீண்டும் அதேபோல் நடந்தால், அவனது நிலை என்னவாக இருக்கும்? தேவிகாவால் அதைக் கற்பனை கூடச் செய்ய முடியவில்லை.

****

வைஷாலியின் மனதில் ஏதேதோ எண்ண அலைகள் பறந்தன. பெற்றோர் தன் மனத்தைப் புரிந்து கொள்ளவில்லையே என்ற ஆதங்கத்தில், கோபம் எழுந்தது. 'அவர்களது ஆசையையும் குற்றமென்று சொல்ல முடியாது. ஒரு பெற்றோராக, அவர்கள் தன்னைப் பற்றி யோசிப்பது, நியாயமும் கூட.

அதற்காக, அவர்கள் சொல்வதையெல்லாம் மறுபேச்சில்லாமல் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, தன்னை வற்புறுத்துவது எந்த விதத்தில் நியாயம்? என்னுடைய உணர்வுகளுக்கும், அவர்கள், மதிப்புக் கொடுக்க வேண்டும் அல்லவா? அதுவும், ராகவின் இடத்தில், இன்னொருவனா?' என்று நினைத்ததுமே, அதுவரை அடக்கி வைத்திருந்த உணர்வுகளெல்லாம் கட்டுடைக்க, கண்ணீரெல்லாம் வறண்டு போகுமளவிற்கு குமுறிக் குமுறி அழுதாள்.
ராகவின் முகம் அவளது மனக்கண்ணில் தோன்றி இம்சை செய்தது. பூட்டி வைத்திருந்த அவனது நினைவுகளின் ஆதிக்கம் மேலோங்க, மனம் கட்டுக்கடங்காமல் சண்டித்தனம் செய்தது.

உட்கார முடியவில்லை; நிற்க முடியவில்லை; எதையும் யோசிக்க

முடியவில்லை; மனம் முழுவதும் போராட்டம். அவளது மனம் களைத்துப் போனாலும், நினைவுகளின் ஓட்டம் முடிவுக்கு வராமல், அவளைத் தடுமாறச் செய்தது. மனத்தில் ஆத்திரம் எழ, என்ன செய்ய வேண்டும் என்பது கூட, அவளுக்குப் புரியவில்லை.

கையில் கிடைப்பதையெல்லாம் தூக்கியெறிய வேண்டும் போல இருந்தது. எனக்கு அமைதி வேண்டும்; நிம்மதி வேண்டும்… என்று கூக்குரலிட்ட உள்ளத்தை அடக்க வழி தெரியாமல் திண்டாடினாள். ஒரு முடிவுக்கு வந்தவளாக, முகத்தைத் துடைத்துக்கொண்டு வேகமாக வாசலை நோக்கி நடந்தாள்.

சமையலறையிலிருந்த தேவிகாவும், கண்களை மூடி ஈஸி சேரில் சாய்ந்து அமர்ந்திருந்த சங்கரனும், அவளைக் கவனிக்கவில்லை. 'தீதீ!' என்றழைத்த ருத்ராவின் குரலும், அவளது செவியை எட்டவேயில்லை.

நடந்தாள்; நடந்தாள்; கால்கள் ஓயும் வரை நடந்தாள். இலக்கில்லாமல் நடந்து கொண்டிருந்தவள், கோயில் மணியோசை கேட்டு, நின்று நிதானித்து, மெல்லத் திரும்பிப் பார்த்தாள். வேழமுகத்தோன் கருணை பொங்கும் கண்களால் அவளை அழைப்பது போலிருக்க, கால்கள் தானாக அவனது சன்னதியை நோக்கி இட்டுச் சென்றது.

அனிச்சையாக வாசலிலிருந்த மணியை ஒலிக்க வைத்தவள், கண்களை மூடி, இருகரங்களையும் கூப்பி வணங்கினாள். நெஞ்சு விம்ம, உதடு துடிக்க, கண்களில் கண்ணீருடன் நிற்பவளை, கனிவுடன் பார்த்தான் வினை தீர்க்கும் விக்ன விநாயகன்.

திடீரென யாரோ தோளைத் தொடும் உணர்வு ஏற்பட, திரும்பிப் பார்த்தாள்.

“வைஷாலி! நீ எங்கே இங்கே? தனியாகவா வந்திருக்க?” நெற்றி சுருங்க, விழிகளில் ஆராய்ச்சியுடன் கேட்டாள் சீமா.

அப்போது தான், தானிருக்கும் இடத்தைச் சுற்றும் முற்றும் பார்வைகளால் ஆராய்ந்தவள், ‘இத்தனைத் தூரமா வந்திருக்கிறோம்!’ என்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.

சிவந்திருந்த கண்களும், சோர்ந்திருந்த அவளது முகமும், கேள்விக்குப் பதில் சொல்லாமல் மலங்க மலங்க விழிப்பவளையும், பார்த்தவளுக்குப் பாவமாக இருந்தது.

“வைஷாலி! ஆர் யூ ஆல்ரைட்?” என்று கேட்டதும், “ஆஹ்! ஐயம் ஆல் ரைட்!” என்றாள்.

“சரி, வீட்டுக்குத் தானே? வா போகலாம்.”

அப்போது தான், ‘யாரிடமும் சொல்லாமல் வந்துவிட்டோம்’ என்பது புரிய, “ம்! ஆமாம்” என்றாள்.

“ரெண்டு நிமிஷம் இரு. ஆட்டோ பிடிச்சிட்டு வரேன்” என்ற சீமா, வைஷாலியை பிரகாரத்திலேயே அமர வைத்துவிட்டு, வெளியே சென்றாள்.

வராண்டாவிலேயே பரிதவிப்புடன் நின்றிருந்த தேவிகா, ஆட்டோவில் வந்து இறங்கியவர்களைப் பார்த்ததும் வாயிலை நோக்கி ஓடினார்.

“வைஷூ! எங்கேம்மா சொல்லாமல் போயிட்ட?” என்று தவிப்புடன் கேட்டவரை, அழுத்தமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, எதுவும்

பேசாமல் உள்ளே சென்றாள்.

ஸ்தம்பித்து நின்ற தேவிகாவை, “சித்தி! நீங்க வாங்க. அவளுக்கு ஒண்ணுமில்லை” என்றவள், ‘என்ன நடந்தது?’ என்று விசாரித்தாள்.

தேவிகா சொல்லச் சொல்ல, சீமாவிற்கு ஆயாசமாக இருந்தது.

அங்கே மாமா வீட்டில், அத்தையைத் தவிர மற்ற இருவரும் என்னவோ இவள் தான் மருமகள் என்று முடிவாகிவிட்டதைப் போல பேசிக்கொண்டிருக்க, இங்கே இவள் இப்படி ஒரு இடியைத் தலையில் இறக்குகிறாளே!’ என்று கலவரமானாள்.

****

“நாங்க மூணு பேரும் கோவில்ல இருந்து வெளியே வரோம், எதிரிலேயே வந்தவ எங்களைக் கவ்வனிக்காமல் நேரே உள்ளே போறா…” சீமா விளக்கமாக சொல்லிக்கொண்டிருக்க, சட்டையின் முழங்கை பட்டனைப் போட்டபடி, “ம்” என்றான் விக்ரம்.

“இவ என்ன இப்படி இருக்காளேன்னு? நினைச்சி பக்கத்தில் போய்ப் பார்த்தா, அழுதுட்டு இருக்கா. சரி, வீட்டில் கல்யாணப் பேச்சை எடுத்துட்டாங்க போலன்னு நினைச்சேன், கடைசியில் அப்படித்தான் நடந்திருக்கு” என்றாள்.

கழுத்தில் டையை முடிச்சிட்டபடி, “ஓ” என்றான் சதாரணமாக.

“மாமாவும், அத்தையும் என்னோடு வந்ததே அவளுக்குத் தெரியலை. அத்தைதான் நாங்க வந்திருப்பதைச் சொல்லாத, நீ மட்டும் கூட

போய்வான்னு என்னை அனுப்பிட்டு, அவங்க வீட்டுக்குக் கிளம்பி வந்துட்டாங்க. நான் இவளைக் கூட்டிட்டு வீட்டுக்குக் போனா, அவங்க அம்மாவைப் பார்த்தும் ஒரு ரியாக்ஷனும் இல்லாமல் அவளோட ரூமுக்குப் போய்ட்டா. ஆட்டோவில் கூட என்னிடம் வாயைத் திறக்கலன்னா பாரேன்.

இவளைத் தேடி, இவங்க அப்பா எங்கேயெல்லாம் அலைஞ்சாரோ பாவம்! சித்தி போன் செய்து விஷயத்தைச் சொல்லி வரச் சொல்லிட்டு, நடந்ததை என்னிடம் சொன்னாங்க. இதையெல்லாம் கேட்டதும், எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை விக்ரம்" என்று சோகமாகச் சொன்னாள்.

"அதுக்கு நீ ஏன் இத்தனைச் சோகமா முகத்தை வச்சிருக்க?" டையின் முடிச்சைச் சரி செய்தபடியே கேட்டான்.

"பின்னே, உன்னை நினைச்சா கவலையா இருக்கு; அவளை நினைச்சா பாவமா இருக்கு" முன் பாதியை எரிச்சலுடனும், பின் பாதியை வருத்தத்துடனும் சொன்னாள்.

"அப்படியா...!" என்றான் இலகுவாக.

"டேய்! நான் எவ்வளவு முக்கியமான விஷயத்தைச் சொல்லிட்டு இருக்கேன். நீ என்னமோ, டையை கட்டுறதும், தலையை வாருறதுமா இருக்க. உன் வாழ்க்கையைப் பத்தித் தானேடா பேசிட்டு இருக்கேன்..." என்று கடுப்புடன் கத்தினாள்.

சீப்பை டிரஸ்ஸிங் டேபிள் மீது வைத்தவன், "எதுக்கு இப்படிக் காட்டுக்கத்தல் கத்தற? கத்தினதால எல்லாம் சரியா போச்சா? உனக்கு

அவளைப் பத்தித் தெரியும் தானே! கல்யாணம் செய்துக்கோன்னு சொன்னதும், சரின்னு தலையை ஆட்டிட்டு, மணமேடையில் வந்து உட்காருவாளா? இதெல்லாம் ஒண்ணுமேயில்லைன்னு நீங்க நினைக்கறா மாதிரி, இன்னும் அவள் என்னவெல்லாம் செய்யப் போறான்னு பாரு" என்றான் சிரிப்புடன்.

"அடப்பாவி! நீ என்னடா இப்படிச் சிரிக்கிற? இந்தக் கல்யாணம் முடியறதுக்குள்ள, இன்னும் என்னல்லாம் நடக்குமோன்னு நான் பயத்தில் இருக்கேன். நீ இத்தனைக் கூலா இருக்க!" என்றாள் வியப்புடன்.

"எதிர்பார்க்காத விஷயம் நடந்தால் தான் அதிர்ச்சி, ஆத்திரம், கோபமெல்லாம் வரும். எதிர்பார்த்தது நடந்தா இப்படித் தான்."

"என்னமோ போ" என்றவள், "ஆமா! நீ எங்கே கிளம்பிட்ட?" சோஃபாவிலிருந்து எழுந்து கொண்டே கேட்டாள்.

"ஒரு கிளையண்டை மீட் பண்ணணும். அதை முடிச்சிட்டு, அப்படியே போய் ஷாலுவை பார்த்துட்டு வரலாம்ன்னு இருக்கேன்" என்றான் கூலாக.

"அங்கே ஒரு எரிமலையே பொங்கிட்டு இருக்குடா. மாப்பிள்ளை யாருன்னு தெரியாத வரைக்கும் நல்லது. அது நீதான்னு தெரிஞ்சா அவ்வளவு தான்."

"நடப்பது நடந்தே தீரும். வரட்டுமா" என்றவன், கார்ச் சாவியைத் தூக்கிப் போட்டுப் பிடித்தபடிச் செல்வதை, 'இது எங்கே போய் முடியுமோ?' என்று, ஒருவிதப் பயத்துடன் பார்த்தாள்.

அத்தியாயம் - 46

“வாப்பா விக்ரம்!” - அழைத்த தேவிகாவின் குரல் தளர்ந்து போயிருந்தது.

முறுவலித்தவன், “எப்படியிருக்கீங்க மாமா?” சோஃபாவில் அமர்ந்திருந்த சங்கரனை விசாரித்தான்.

“ம்ம், இருக்கோம்ப்பா. அதான் பார்க்கறியே...” என்றார்.

“விஷயம் கேள்விப்பட்டேன். ஆனால் இதுக்காக நீங்க மனசைத் தளர விடாதீங்க மாமா” என்றான் ஆறுதலாக.

“ம், எங்களுக்கு இருக்கறது இவ ஒருத்திதானே. அவ நல்லா இருக்கணும்னு தானே இத்தனையும் செய்றோம். இப்படி புரிஞ்சிக்காமல் இருந்தா எப்படி? காலைல இருந்து எதுவும் சாப்பிடலை, யாரிடமும் பேசவும் இல்லை. அவளோட நிலையைப் பார்த்தா எனக்கு ரொம்பப் பயமா இருக்கு விக்ரம். அவளோட வாழ்க்கை, எங்க கண்ணு முன்னாடியே கொஞ்சம் கொஞ்சமா உருக்குலையறதைப் பார்க்கவா நாங்க உயிரோடு இருக்கோம்!” ஆற்றாமையுடன் புலம்பியபடி, கண்ணீர் விட்ட தேவிகாவின் கரத்தை ஆறுதலுடன் பற்றிக்கொண்டான்.

“அத்தை! எல்லாம் சரியாகிடும். நீங்க தைரியமா இருங்க. இப்போ வைஷாலி எங்கே இருக்கா?”

“அவளோட ரூமில் இருக்கா.”

“நா..ன் போய்ப் பார்க்கட்டுமா…?” சற்றுத் தயக்கத்துடன் கேட்டான்.

நிமிர்ந்து அவனது முகத்தைப் பார்த்தவர், “எங்களையே பக்கத்தில் சேர்க்க மாட்டேன்றா. ஏதாவது ஒரு கேள்வியை, ஒரு முறைக்கு ரெண்டு முறை கேட்டால் எரிஞ்சி விழறா. இதுல…” என்றபடி, கணவரின் பக்கமாக விழிகளைத் திருப்பினார்.

அவர் வாக்கியத்தை முடிக்கும் முன்பே, “நான் பார்த்துக்கறேன் அத்தை எனக்குத் தேவை, உங்க ரெண்டு பேரோட அனுமதி” வேகமாகவும், உறுதியாகவும் விக்ரமின் குரல், அவரை இடைமறித்தது.

“அது இல்ல விக்ரம்…” என ஆரம்பித்த, மனைவியின் தோளைப் பற்றிய சங்கரன், “நீங்க போய்ப் பாருங்க மாப்பிள்ளை” என்று, அவனுக்கான உரிமையைக் கொடுக்க, புன்னகையுடன், “தேங்க்ஸ் மாமா” என்றவன், வேகமாக படியேறினான்.

திகைப்புடன் பார்த்த தேவிகாவிடம், அர்த்தபுஷ்டியான ஒரு பார்வையைச் செலுத்தியவர், “வேப்பிலை கசப்பாக இருந்தாலும், நிறைய நல்ல தன்மை அதிலிருக்கு. அதுபோல, ஆரம்பத்தில் அவளுக்கு இது கசப்பாக இருந்தாலும், புரிஞ்சிக்குவா. நாம பேசுவதை விட, விக்ரமே நேரடியாக பேசட்டுமே” என்றார் அழுத்தமாக.

‘கடவுளே எல்லாம் நல்லபடியாக முடியணும்’ பயத்துடனும், பரிதவிப்புடனும் வேண்டிக் கொண்டார் தேவிகா.

****

இரண்டு முறை அறைக் கதவைத் தட்டியும், உள்ளேயிருந்து எந்தப்

பதிலும் வராமல் போக, சற்று பலத்தைக் கூட்டித் தட்டினான்.

“என்னம்மா வேணும் உங்களுக்கு? நான் கொஞ்ச நேரம் நிம்மதியாக இருப்பது கூட உங்களுக்குப் பொறுக்கலையா?” எரிந்து விழுந்தபடி கதவைத் திறந்தவள், அங்கே குறுஞ்சிரிப்புடன் நின்றிருந்த விக்ரமைக் கண்டதும், திகைத்தாள்.

“அடேங்கப்பா! வைஷாலிக்கு இவ்வளவுக் கோபம் வருமா?” என்று புன்னகையுடன் கேட்டான்.

“சாரி, நான் அம்மான்னு…” என்று திணறினாள்.

“ஓகே ஓகே. நோ இஷ்யூஸ்” என்று கைகளை உயர்த்தியவன், “உன்னிடம் கொஞ்சம் பேசணுமே. இங்கேயே பேசினால் நல்லாயிருக்காது. ம், மொட்டைமாடிக்குப் போகலாமா? கொஞ்சம் காத்தாட நின்னு பேசலாம்” மளமளவென அவனே கேள்வியும் கேட்டு, பதிலையும் சொன்னவன், “உனக்கு எதுவும் ஆட்சேபணை இல்லையே?” என்று நெற்றியைச் சுருக்கி அவளைப் பார்த்தான்.

“அ..அதெல்லாம் ஒண்ணுமில்லை. பேசலாம்” என்றாள்.

“அப்போ போகலாமா?” என்று படிக்கட்டின் பக்கம் கைகாட்ட, அவள் முன்னால் செல்ல, இவன் அவளைப் பின்தொடர்ந்தான்.

குளுகுளுவென வீசிய குளிர்க் காற்றும், அதற்கு இதமாக அஸ்தமன ஆதவனின் இளம் சூடும், மேனியை வருட, உடலில் ஒரு புத்தணர்ச்சி பாய்வது போல இருந்தது.

மாடி கைப்பிடிச் சுவரைச் சுற்றிலும் அமைக்கப்பட்டிருந்த அழகழகான பூச்செடிகளும், நான்கடி உயரத்திற்கு வளர்ந்திருந்த குரோட்டன்ஸ் செடிகளும் கண்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்தது.

நான்கு பக்கமும் மூன்று பேர் அமரக்கூடிய அளவிற்குக் கல் பெஞ்சுகள் அமைக்கப்பட்டிருக்க, அவற்றில் ஒன்றில் வாகாக சாய்ந்து அமர்ந்து இரு கைகளையும் உயர்த்தித் தலைக்குப் பின்னால் கோர்த்தபடி அமர்ந்தான் விக்ரம்.
“வாவ்! இத்தனை நாளா இந்த இடத்தை மிஸ் பண்ணியிருக்கேன். அன்னைக்கு நைட் வந்ததால், இந்த அழகு கண்ணுக்குத் தெரியாமலேயே போச்சு” என்று ரூப் கார்டனைப் பற்றிப் புகழ்ந்தான்.

அவன் சொன்ன அன்றைய தினம் தான் செய்த காரியம் நினைவுக்கு வர, வைஷாலி அமைதியாக இருந்தாள்.

அவளது அமைதிக்கான காரணம் புரிய, “உனக்கு என்ன பிராப்ளம் வைஷாலி?” - பரிவுடன் கேட்டான்.

“ம்” என்று நிமிர்ந்து பார்த்தவளது கண்கள் கலங்கின. தளும்பிய கண்களை மறைக்க, விரிந்த இமைகளைக் குடையாகக் கவிழ்த்தாள்.

அவளது முகத்தில் தெரிந்த உணர்வுகளை சற்றும் பிறழாமல் படித்தவனாக, “வைஷாலி!” என்றழைத்தான்.

உதட்டை அழுந்த கடித்து, கண்களை இறுக மூடி ஆழமூச்செடுத்து, கண்ணீரை அடக்கியபடி, “சீமாக்கா எல்லாத்தையும் சொல்லியிருப்பாங்க… அப்புறம் ஏன் என்னைக் கேக்கறீங்க?” என்றவளது குரல் தழுதழுத்தது.

இமைக்காமல் அவளைக் கண்ணோடு கண் நோக்க, அவனது பார்வையின் ஆளுமையைத் தாள இயலாமல், விழிகளை அகற்றினாள். இதயம் படபடவெனத் துடிக்க, அவனது அருகாமையைத் தவிர்த்து விலகி நடந்தாள்.

அவள் பின்னாலேயே எழுந்தவன், “நடந்தது நடந்து போச்சு. நீ இப்படியே ஏனோதானோன்னு இருப்பது நல்லாவா இருக்கு? உன் அப்பா அம்மாவை கொஞ்சம் நினைச்சிப் பாரு. சில விஷயங்களில் நாம நம்மை கன்வின்ஸ் பண்ணிக்கறது தப்பில்லை” என்றான்.

”இது வியாபாரம் இல்லை கன்வின்ஸ் பண்ணிக்க; வாழ்க்கை. இதுக்குத் தேவை கமிட்மெண்ட்” என்றாள் எரிச்சலுடன்.

“நிச்சயமா உன்னோட வார்த்தையை ஒத்துக்கறேன். ஆனால், சில விஷயங்களில் வளைந்து கொடுத்துத் தான் போகணும். நடந்து முடிந்ததை நினைச்சிட்டு இருக்கறதால என்ன பிரயோஜனம்?”

“இதே கேள்வியை நானும் உங்களைக் கேட்கலாமில்ல” என்றாள் பட்டென்று.

“அதுக்கான அவசியம்...?”

“இதே கல்யாண விஷயம்தான். உங்க அம்மா எத்தனை நாளா சொல்லிட்டு இருக்காங்க... நீங்க ஏன் சம்மதிக்கலை? ஆம்பளைக்கு ஒரு நியாயம்; பொண்ணுக்கு ஒரு நியாயமா? நீங்க சொன்ன அதே கன்வின்ஸிங் இங்கே ஏன் செல்லுபடி ஆகலை?” என்று கிண்டலாகக் கேட்டாள்.

அவளது எதிர்க் கேள்வியே அவளுக்கு எதிராகத் திரும்பப்போவதை அறியாமல் படபடத்தவளைப் புன்னகையுடன் பார்த்தான்.

“என்ன எதிர் விவாதமா?” அதே கிண்டல் அவனது கேள்வியிலும் ஒலித்தது.

“அப்படின்னு நீங்கதான் சொல்றீங்க.”

“சரி, இத்தனை நாளா கல்யாணத்தைத் தள்ளிப் போட்டேனே தவிர, அதை வேண்டாமுன்னு ஒதுக்கல. உனக்கு ஒண்ணு தெரியுமா? நான் கல்யாணம் செய்துக்க சம்மதிச்சு ரொம்ப நாள் ஆச்சு. ஆனால், பொண்ணு எனக்குப் பிடிச்ச பொண்ணுதான்னு சொல்லி, ரெண்டு வீட்டுப் பெரியவங்களிடமும் சம்மதம் வாங்கியாச்சு. இப்போ நான் சம்மதம் வாங்க வேண்டியது, பொண்ணுகிட்ட மட்டும் தான்” என்று அவளை இமைக்காமல் பார்த்தான்.

அவனது பதிலில் திகைத்தவள், நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவனது பார்வை தெரிவித்த செய்தி, அவளது மனத்திற்கு உவப்பானதாக இல்லை.

“ஷாலு!” என்று அருகில் வந்தவனிடமிருந்து, தடுமாற்றத்துடன் பின்னால் நகர்ந்தாள்.

அவனது பார்வைக் கூர்மையுடன் அவள் மீது படிய, அவன் முகத்தில் தெரிந்த உணர்ச்சிக் கொந்தளிப்பில் தடுமாறினாள்.

“விக்ரம்! நீங்க என்னிடம் விளையாடுறீங்க. நான் இதை நம்பமாட்டேன்”

அவளது பேச்சிற்கும், முகத்தில் தெரிந்த மிரட்சிக்கும் சற்றும் சம்மந்தமில்லை.
பேசியபடியே தன்னிடமிருந்து விலகி நடந்தவளது மணிக்கட்டை இறுகப் பற்றி தன்னருகில் இழுத்தான்.

தடுமாறி அவன் மீது மோதாமல் நின்றவள், அவனது கரத்திலிருந்து கையை விலக்க முயற்சித்தபடி, “விக்ரம்! என்ன இது? நான் போகணும்…” - அவளது விழிகள் பயத்தில் விரிந்தது. பயமும், கோபமும் ஒன்று சேர அவளது உடல் நடுங்கியது.

அவளது விலகலைக் கண்டதும், அத்தனை நேரம் அவனிடமிருந்த கனிவு மறைய, “என் கேள்விக்குப் பதில் சொல்லிட்டுப் போ வைஷாலி. என்னைப் பிடிச்சிருக்கா? இல்லையா?” கடினமான முகத்துடன் கேட்டான்.

“நீங்க பேசுவது எதுவும் சரியில்லை. நான் ஏற்கெனவே கல்யாணம் ஆனவள்” - கண்ணீர் முட்டிக்கொண்டு வந்தது.

“ராகவ் உயிரோடு இருந்து, இதை உன்னிடம் நான் பேசியிருந்தால் தான் தப்பு” என்றான்.

“போதும். உங்க பேச்சு எனக்கு அருவருப்பா இருக்கு. உங்க வார்த்தையை மதிச்சி நான் இங்கே வந்ததே தப்பு” என்றவள் வேகமாக அவனது கரத்தை உதறினாள்.

அவளது உதாசீனம் அவனது கோபத்தைக் கிளறியது. “ஆமாம், நீ வந்தது தப்புதான். ஏண்டி வந்த? துடிச்சிட்டு இருக்கற என் இதயத்தோடு, துடிப்பாக கலந்து போன உன்னை, மறக்க முடியாமல்

சித்ரவதை அனுபவிகிற என்னை ஏண்டி சோதிக்கிற…” ஆவேசமாக உரக்கப் பேசியவன், அவளது புஜத்தைப் பற்றினான்.

அடுத்த நொடியே அவனது குரல் தழைந்து, “ஷாலு! உனக்கு ஏன் என்னைப் பிடிக்கல? என் காதல் உண்மைன்னு உனக்குப் புரியலையா? இல்ல புரியாத மாதிரி நடந்துக்கறியா? என் மனசுல கரைபுரளும் நேசத்தை, என் கண்கள்ல உன்னால் பார்க்க முடியலையா? சொல்லு ஷாலு, என் காதலை நிரூபிக்க நான் என்ன செய்யணும்?” என்று அவளைப் பற்றினான்.

வைஷாலி விக்கித்து நின்றாள்.

இமைகள் இமைக்க மறந்து, விழியகலாமல் திகைத்த பார்வையுடன் நின்றிருந்தாள் வைஷாலி. அவனது ஒவ்வொரு வார்த்தையும், கத்தியைப் போல அவளது இதயத்தில் இறங்கியது. அவளால் எதையுமே நம்ப முடியவில்லை. விழிகளில் நீ திரையிட்டது.

அதிர்ச்சி விலகாமல் நின்றிருந்தவளை, “ஷாலு!” என்று உலுக்கினான்.

அவனது கரத்தைத் தள்ளிவிட்டவள், “கூப்பிடாதீங்க. என்னை அப்படிக் கூப்பிட உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. ஒரு பொண்ணோட சோகத்தைத் தனக்குச் சாதகமாக்கிக்க துடிக்கிற, குரூரமான எண்ணம் கொண்ட சாடிஸ்ட் நீங்க. ராகவ்! போல ஒரு நல்லவர் இருந்த மனசுல, உங்களைப் போல ஒருத்தருக்கு நிச்சயம் இடம் கிடையாது. உங்களுக்கும், அந்த அகஷய்க்கும் என்ன வித்தியாசம்?” என்று ஆத்திரத்துடன் பேசியவள், வேகமாகப் படியை நோக்கி நடந்தாள்.

“நில்லு வைஷாலி!” என்றவன், நிதானமான நடையுடன் அவளருகில்

வந்தான். கடினமான அவனது முகத்தில், உதடுகள் மட்டும் கேலியாக புன்னகைத்தது.

வைஷாலிக்கு பயத்தில் இதயம் தாறுமாறாக துடித்தது. அதேநேரம் அவனது செய்கை, அவளது கோபத்தைக் கிளறியது. இருவருமே ஒருவரையொருவர் முறைத்துக் கொண்டு நின்றனர்.

“மங்கம்மா சபதம் போல இது வைஷாலி சபதமா!” என்று கிண்டலாகச் சிரித்தான். “நான் ஜெயித்தே பழக்கப்பட்டவன். என்னோட தோல்வியை வெற்றியாக்கிக்க எனக்குத் தெரியும். நானா விட்டுக்கொடுத்தால் தவிர, என்னோட இடத்தை யாராலும் தட்டிப் பறிக்கமுடியாது. இன்னைக்கு முடியாதுன்னு சொல்லிட்டுப் போகும் நீயே, என்னைக் கல்யாணம் செய்துக்க சம்மதம்ன்னு சொல்ல வைப்பேன். இது விக்ரம் குமார் சௌத்ரியோட சேலஞ்ச்” என்றான்.

“ஒரு நாளும் உங்களை ஜெயிக்க விடமாட்டேன் மிஸ்டர். விக்ரம் குமார் சௌத்ரி” என்று கோபத்துடன் அறையிலிருந்து வெளியேறினாள் வைஷாலி.

அத்தியாயம் - 47

வேலையை முடித்துவிட்டு லெப்டாப்பை அணைத்தவள், கைகளை உயர்த்திச் சோம்பல் முறித்தாள். உறக்கம் கண்களைத் தழுவ, பின்னங்கழுத்தைத் தடவியபடி கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஒன்று.

‘ஓ! கடவுளே இந்த வேலை இப்படி இழுத்துடுச்சே’ என்று சலித்துக்கொண்டே விளக்கை அணைத்தவள், ஜன்னலை இழுத்து மூடப் போக, தோட்டத்தில் யாரோ நடந்துகொண்டிருப்பது தெரிந்தது.

‘இந்த நேரத்தில் யார்?’ என்று நிதானித்துப் பார்த்தாள்.

‘விக்ரம்! இவன் எப்போ வந்தான்? வந்தவன் தூங்காமல், தோட்டத்தில் என்ன பண்ணிட்டு இருக்கான்?’ என்று இப்படியும், அப்படியுமாக நடந்து கொண்டிருந்தவனைப் பார்த்தாள். ஒரு முடிவுடன், இரவு உடையின் மீது கோட்டை மாட்டிக் கொண்டு தோட்டத்திற்குச் சென்றாள்.

‘உனக்கும் அந்த அக்ஷய்க்கும் என்ன வித்தியாசம்?’ வைஷாலி கேட்ட கேள்வியே அவனது காதுக்குள் எதிரொலித்தது. ஆயிரம் ஊசிகளைக் கொண்டு அவனது இதயத்தைக் குத்தியது போல வலித்தது. போயும் போயும் அவனுடன் தன்னை ஒப்பிட்டுவிட்டாளே! என் காதலை இப்படி உதாசீனப்படுத்தி, அசிங்கப்படுத்தி விட்டாளே’ என்ற ஆத்திரம் உள்ளுக்குள் கனன்று கொண்டே இருந்தது.

அத்தனைக் கோபத்தையும் எப்படிக் கட்டுப்படுத்திக்கொண்டு அங்கிருந்து வந்தோம் என்பதே அவனுக்கு ஆச்சரியம் தான். ‘எங்கே வீட்டிற்கு வந்தால், இருக்கு கோபத்தில் யாரையாவது வார்த்தைகளால் குதறிவிடுவோமோ’ என்று அஞ்சியே, அனைவரும் உறங்கிய பிறகு வீட்டிற்கு வந்தான். அறைக்குக் கூடச் செல்லாமல், சீறும் வேங்கையைப் போல, உள்ளுக்குள் சினந்தபடி தோட்டத்தில் உலவிக்கொண்டிருந்தான்.

இத்தனை நேரத்தில் அவனது ஆத்திரம் சற்றுக் குறைந்திருந்த போதும், கோபம் கொஞ்சமும் குறையவில்லை. தலையை அழுந்த கோதிக்கொண்டு, கண்களை மூடி ஆழ மூச்செடுத்தவன், நிதானமாக மூச்சை வெளியேறியபடி கண்களைத் திறந்தான்.

கைகளைக் கட்டியபடி தன்னையே பார்த்துக்கொண்டிருந்த சீமாவை, சற்றும் எதிர்பாராதவன், திடுக்கிட்டுப் போனான். சுதாரித்துக் கொண்டு, "ஹே! நீயா? தூங்கலையா இன்னும்?" என்றான்.

"கொஞ்சம் வேலையிருந்தது. நீ என்ன செய்யற இந்த நேரத்துக்கு?"

"நீ போ. நான் கொஞ்ச நேரம் பொறுத்து வரேன்" என்றான்.

தயங்கியவள், "விக்ரம் ஏதாவது பிராப்ளமா? வைஷாலி.. ஏதாவது..." என்று இழுக்க, "சொன்னா கேட்கமாட்ட? ஏன் என் உயிரை எடுக்கற?" என்று கத்தினான்.

"ஹே! மெதுவா... அத்தை மாமா முழிச்சிக்கப் போறாங்க" என்றவள், அவனது முக வாட்டத்தைக் கவனித்து, "இல்லடா அவள் எது சொல்லியிருந்தாலும், கோபத்தில் சொல்லியிருப்பா.." என்று வைஷாலிக்கு ஆதரவாகப் பேசினாள்.

"ஏய்! பேசாமல் போ. என்னை மிருகமாக்காத" என்று உறுமினான்.

அவனது மிரட்டலில் சற்று மிரண்டவள் அமைதியாகிவிட, அவனுக்கே அவளைப் பார்க்க பாவமாக இருந்தது. 'தனக்காக இவள் என்னவெல்லாம் செய்திருக்கிறாள். இவளைப் போய் உதாசீனப்படுத்திவிட்டேனே' என்று தன் மீதே கோபம் வந்தது அவனுக்கு.

அமைதியாக திரும்பி நடந்தவளை, "சீமா!" என்றவன், வேகமாக அவளது கையைப் பற்றி, அங்கிருந்த இருக்கையில் அமரவைத்தான்.

தலையைக் கோதினான்; நெற்றியைத் தடவினான்; ஆனால், எப்படி

அவளிடம் சொல்வதென புரியவில்லை. சீமா, பரிதாபமாக அவனைப் பார்த்தாள்.

“விக்ரம்! வேண்டாம் விட்டுடு. நான் உன்னை எதுவும் கேட்கல. உனக்கா எப்போ சொல்லணும்னு தோணுதோ அப்பச் சொல்லு” என்றாள் ஆறுதலாக.

தலையை உலுக்கிக் கொண்டு, “நான் அவளை எந்த அளவுக்கு நேசிக்கிறேன்; எவ்வளவு மதிக்கிறேன்; அவளோட உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்துத் தானே இத்தனையும் செய்தேன். ஆனா, அவ என்னை அந்த அக்ஷயோடு கம்பேர் பண்ணிப் பேசி… என்னோட காதலையே கொச்சைப்படுத்திட்டா சீமா…” என்றவனது குரல் உடைந்து போயிருந்தது.

அவள் சொன்ன வார்த்தைகளை அவன் சொன்ன போது, அவனது முகத்தில் எழுந்த துயரத்தை வார்த்தைகளாள் வடிக்க முடியாது. எப்போதும் அவனைக் கம்பீரமாகவே பார்த்துப் பழகியிருந்தவளுக்கு, இந்நிலையில் அவனைக் காணச் சகிக்கவில்லை. அந்த நிமிடம் வைஷாலி மீது அளவு கடந்த கோபம் ஏற்பட்டது.

“உன் அருமை தெரியாதவளுக்காக, நீ ஏன்டா உருகிட்டு இருக்க? கைல இருக்கும் வரைக்கும் அது பொக்கிஷமாகவே இருந்தாலும், அதோட அருமை தெரியாது. இவளும் அப்படித் தான். யாருடைய பேச்சையும் பெரிசா எடுத்துக்காத நீ, எதுக்கு இவளோட வார்த்தைக்காக உடைஞ்சி போற? தூக்கிப் போடு” என்றாள் கோபத்துடன்.

“முடியலை சீமா… மத்தவங்க பேச்சை பெரிசா நினைக்கலைன்னா, அவங்கல்லாம் யாரோ! ஆனா, வைஷாலி! அவ என்னோட உயிர்;

என்னோட வாழ்க்கை…” என்றவனைத் தளர்ந்து போய்ப் பார்த்தாள்.

****

அலுவலகத்திற்குக் கிளம்பிக்கொண்டிருந்த வைஷாலி, திறந்திருந்த அறைக்கதவு தட்டப்படும் ஓசை கேட்டு, திரும்பிப் பார்த்தாள். வாசலில் நின்றிருந்த சீமாவை உள்ளே அழைக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்த போதும், அவளது மனம் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

மெல்ல நிமிர்ந்தவள், “ஓ! நீங்களா? என்னடா இன்னும் யாரும் வந்து அட்டெண்டன்ஸ் போடலையேன்னு நினைச்சேன்… வந்துட்டீங்க. சொல்லுங்க என்ன விஷயம்?” அலட்சிய பாவத்துடன் கேட்டாள்.

சீமாவிற்கு உள்ளுக்குள் ஆத்திரம் வந்தாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல், “வைஷாலி, நான் சுத்தி வளைக்காமல் விஷயத்துக்கு வரேன். நீ சொன்ன வார்த்தையால விக்ரம் ரொம்ப நொந்து போயிருக்கான். அவன் ரொம்ப நல்லவன் வைஷாலி. உன் மேல உயிரையே வச்சிருக்கான். உனக்காக என்னவெல்லாம் செய்திருக்கான் தெரியுமா? அவனைக் கொஞ்சம் புரிஞ்சிக்க ட்ரை பண்ணு” என்றாள் கெஞ்சலாக.

“ஸ்… ஹப்பா!” என்று பெருமூச்சு விட்டவள், “நான் ஒண்ணு சொல்லட்டுமா?” என்றவளைக் கேள்வியுடன் பார்த்தாள் சீமா.

“உங்களுக்கும் அவரைப் பிடிக்கும், அவருக்கும் உங்களைப் பிடிக்கும். அப்படியிருக்கும் போது, இனிமேல் நான் அவரை புரிஞ்சிகிட்டு, அவரோட காதலை கன்சிடர் பண்றதுக்கு பதிலா… அவரைப் பத்தி எல்லாம் தெரிஞ்ச, புரிஞ்ச நீங்களே அவரைக் கல்யாணம்

செய்துகோங்களேன். பிராப்ளம் சால்வுட்” என்று தோள்களைக் குலுக்க, “வைஷாலி!” என்று அறையே அதிர கத்தினாள் சீமா.

”எதுக்கு கத்தறீங்க? உங்களைப் பற்றி ஒண்ணு சொன்னா, உங்களுக்கு எப்படி இருக்கு? நான் உண்டு; என் வேலை உண்டுன்னு இருக்கும் என்னை, எதுக்கு நீங்க வற்புறுத்தறீங்க? என் வாழ்க்கையை முடிவு செய்ய என்னைத் தவிர யாருக்கும் உரிமை கிடையாது. இதுக்கும் மேல என்னை விக்ரம் வற்புறுத்தினால் என்ன செய்வேன்னு எனக்குத் தெரியாது” என்றாள் ஆத்திரத்துடன்.

“போதும் வைஷாலி, உனக்குத் தான் பேசத் தெரியும்னு பேசாதே. விக்ரமை பத்தி உனக்கு என்ன தெரியும்? அவன் உனக்குச் செய்த நல்லது எல்லாமே மறந்து போச்சு இல்ல?”

“மறக்கலை அந்த உதவிக்கு நன்றின்னு சொல்ல முடியுமே தவிர, அவரைக் கல்யாணமா செய்துக்க முடியும்?”

“உனக்குத் தெரிந்த விஷயம் அது மட்டும் தான். அவனைப் போய், கேவலம் எவனோ ஒருத்தனோட கம்பேர் பண்ணி பேசற? உன் சந்தோஷத்துக்காக, உன் ஆசைக்காக அவன் செய்த எந்த விஷயமும் உனக்குத் தெரியாது. அவன் எவ்வளவு பெரிய மனுஷத்தனத்தோடு நடந்துட்டு இருக்கான்னு தெரியுமா உனக்கு?” சீமாவின் வார்த்தைகளில் நிதானம் தவற ஆரம்பித்தது.

அடுத்த வார்த்தையை அவள் பேச ஆரம்பிக்கும் முன், “சீமா! உன்னை இங்கே வரக்கூடாது, வைஷாலியோடு பேசக்கூடாதுன்னு சொன்னேன் இல்ல? எதுக்கு இங்கே வந்த?” என்றபடி அறைக்குள் நுழைந்த விக்ரம், சீமாவின் கரத்தைப் பற்றி வெளியில் இழுத்துச் சென்றான்.

அவனது கரத்தை உதறிய சீமா, “நீ சொன்னா… நான் கேட்கணுமா? நேத்து நீ இருந்த நிலையை என்னால மறக்கவே முடியலை விக்ரம். அவளோட வார்த்தை எந்த அளவுக்கு உன்னைக் காயப்படுத்தி இருந்தா, நீ அப்படி உடைஞ்சி போயிருப்ப. உன் நல்ல மனசு புரியாம, இவ இன்னும் உன்னை ஏதாவது பேசக்கூடாதுன்னு தான், நீ அவ்வளவு சொல்லியும் மீறி வந்தேன். நீ என்னடா சொல்றது என்னை? வராதா பேசாதேன்னு. உனக்காக வருவேன்; பேசுவேன். அதைக் கேட்க யாருக்கும் உரிமை இல்லை?” என்றவள் தாளமுடியாமல் அழுதாள்.

அவளது கண்ணீரைக் கண்ட விக்ரமிற்கு என்னவோ போலிருந்தது. தேவிகாவும், சங்கரனும் அவர்களது பேச்சிலிருந்து விஷயம் பாதி புரிந்தும், பாதி புரியாமலும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கைதட்டியபடி, படியில் இறங்கி வந்து கொண்டிருந்த வைஷாலியை, நால்வரும் திரும்பிப் பார்த்தனர்.

சீமாவின் அருகில் வந்து நின்றவள், “என்ன பெர்ஃபார்மன்ஸ்? என்ன டயலாக்? நிச்சயமா ஆஸ்கர் இல்லைனாலும், நேஷனல் அவார்ட் கிடைக்கும். பேசாமல் நீங்க சினிமாவில் டிரை பண்ணுங்களேன்” என்று கிண்டலாகச் சொன்னவள், விக்ரமின் முறைப்பை அசட்டையுடன் ஒதுக்கித் தள்ளினாள்.

“எங்களுக்கெல்லாம் வேலை வெட்டி இல்லைன்னு நினைச்சிட்டு இருக்கீங்களா? காலங்கார்த்தால் வந்து என் உயிரை எடுக்கறீங்க. உங்களுக்கு ஒருமுறை சொன்னால் தெரியாதா? எங்க அப்பா சின்ன வயசில் அடிக்கடி ஒர் வார்த்தை சொல்வார். நல்ல மாட்டுக்கு ஒரு சூடு; நல்ல மனுஷனுக்கு ஒரு சொல்லு…” என்றவள், விக்ரமின்

பார்வையில் சொல்ல வந்ததை பாதியில் நிறுத்தினாள்.

சீமாவின் கரத்தைப் பற்றி விலக்கி நிறுத்தியவன், வைஷாலியின் அருகில் செல்ல, அவளுக்கு திக்திக்கென மனம் அடித்துக் கொண்டது. பயத்தில் எச்சிலைக் கூட்டி விழுங்கினாள்.

“இங்கே பார் வைஷாலி, நீ ஏன் இப்படியெல்லாம் பேசறேன்னு புரிஞ்சிக்க முடியாத முட்டாள் இல்லை நான். உன்னோட பழகினது கொஞ்ச நாளாக இருந்தாலும், உன்னை எனக்கு நல்லாவே தெரியும். இப்படியெல்லாம் பேசி மத்தவங்க முன்னாடி, உன்னை நீயே தாழ்த்திக்காதே.

நீ என்ன பேசினாலும் என் முடிவில் நான் உறுதியா இருக்கேன். ராகவுக்கும், உனக்கும் இருந்தது உண்மையான காதல்னா; என்னுடையது அதைவிட உயர்ந்த காதல்தான். நீ நம்பினாலும், நம்பாவிட்டாலும் உண்மை அதுதான்.

காதல்ங்கறது புரியவைக்கறது இல்லை. தானாக உணரணும். ஒருநாள் என்னுடைய காதலை நீயும் உணருவ. அன்னைக்கு, என் காதலும் ஜெயிக்கும். அதுக்காக எத்தனைக் காலமானாலும் காத்திருப்பேன்” அவளது கண்களைக் பார்த்து மென்குரலில் அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டு, “வா சீமா” என்று அவளை அழைத்துக்கொண்டு சென்றான்.

கீழுதட்டைக் கடித்துக் கொண்டு நின்றவள், அன்னையும், தந்தையும் எதுவும் சொல்லாமல், ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு, அங்கிருந்து செல்வதைக் கண்டாள். விக்ரமின் பேச்சால், அவளுக்கு அவமானத்தில் உடலெல்லாம் எரிந்தது.

அத்தியாயம் - 48

“நான் உள்ளே வரலாமா மாமா?”

சொல்லாமல், கொள்ளாமல் இந்த இரவு நேரத்தில் வாசலில் வந்து நிற்கும் வைஷாலியை சற்றும் எதிர்பார்க்காத மணிகண்டன், என்னவோ ஏதோவெனப் பதறிப்போனார்.

அவளது கேள்வியில் சுதாரித்து, “வாம்மா! என்னைக் கேட்கணுமா?” என்று வழியை விட்டார்.

ஒரு கைப்பையை மட்டும் எடுத்து வந்திருந்தவளை, கூர்ந்து பார்த்தார். இதுவரை நடந்த எதுவும் அவருக்குத் தெரியாத போதும், ஏதோ விஷயமிருப்பதை உணர்ந்துகொண்டார்.

“நீ வரேன்னு ஒரு வார்த்தை கூடச் சொல்லையே வைஷும்மா!”

“இதுதானே மாமா என் வீடு. நீங்க தானே கொஞ்ச நாளைக்கு அம்மா வீட்டுக்குப் போய் வரச் சொன்னீங்க. அங்கே இருந்ததும் போதும்னு தோணுச்சி; அதான் நம்ம வீட்டுக்கு வந்துட்டேன்” என்றாள்.

இவள் வாயையும், மனத்தையும் திறந்து எதுவும் சொல்லப்போவதில்லை என்று புரிந்து கொண்டவர், எதுவும் சொல்லாமல் மௌனமாக புன்னகைத்துக் கொண்டார்.

“நான் கொஞ்சம் ரி்ஃப்ரெஷ் ஆகி வரேன் மாமா” என்று அறைக்குச் சென்றாள்.

கதவை மூடிவிட்டு, அதன் மீதே சாய்ந்து நின்றவளுக்கு நெஞ்சை அடைப்பது போல இருந்தது. அறையின் ஒவ்வொரு இடத்திலும் ராகவ் இருப்பது போன்ற பிரமை. கண்களை மூடி, சரிந்து அமர்ந்தாள். சிரித்தபடி அவளை நெருங்கிய ராகவ், தனது ஈர உதடுகளால், அவளது கன்னத்தில் மென்மையாக முத்தமிட, பட்டெனக் கண்களைத் திறந்தாள்.

எல்லாம் பிரமை. கன்னத்தைத் தொட்டுப் பார்த்தவளது கை மீது மீண்டும் ஈரம் பட, சட்டெனத் திரும்பிப் பார்த்தாள். ஜன்னல் வழியாக வந்த மழைச்சாரல், இப்போது சற்று வலுக்கத் துவங்கியது. ஏக்கப் பெருமூச்சுடன், எழுந்து ஜன்னல்களை மூடினாள். பயண அலுப்புப் போகக் குளித்துவிட்டு, கீழே இறங்கி வந்தாள்.

வைஷாலி, அறைக்குச் சென்றதுமே, அவள் இங்கே வந்திருக்கும் விஷயத்தை சங்கரனுக்குத் தெரிவித்தார் மணிகண்டன். மறுமுனையில் அவளைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்த இருவரும், சற்று நிம்மதியடைந்தது அவர்களது பேச்சிலேயே தெரிந்தது.

அலுவலகம் சென்றவள் இன்னும் வரவில்லையே என்று பதறிய தேவிகா, விக்ரமை தொடர்பு கொண்டார்.

சீறலாக மூச்சுவிட்டவன் பொறுமையாக, அத்தை! நீங்க ராகவ் வீட்டுக்குப் பேசுங்க; நிச்சயமா அங்கே தான் போயிருப்பா. நான் முக்கியமான மீட்டிங்கில் இருக்கேன். முடிச்சிட்டு வீட்டுக்கு வரேன். பயப்படாதீங்க' என்று பேச்சை முடித்துக் கொண்டான்.

அவனது பதிலைக் கேட்ட தேவிகா மாய்ந்து போனார். “இப்படிப் பட்டும்

படாமல் பேசறானே! எனக்கென்னவோ பயமா இருக்குங்க. திரும்ப அவளுக்கு ஏதாவது பிரச்சனை இருந்தால்…” பயத்தில் நடுங்கிய மனைவியை, சங்கரன் சமாதானம் செய்தார்.

“இல்லமா. எனக்கும், விக்ரம் சொன்னது தான் நடந்திருக்கும்னு தோணுது” என்றபடி மொபைலை எடுத்த அதேநேரம், மணிகண்டனும் போன் செய்தார்.

வைஷாலி பூனே வந்திருப்பதைச் சொல்ல, பெற்றவர்கள் இருவரும் பெருத்த நிம்மதி அடைந்தனர். மெல்ல நடந்த விஷயங்களை மணிகண்டனிடம் சொல்ல, அவர் அமைதியாக கேட்டுக் கொண்டார். வைஷாலி மாடியிலிருந்து இறங்கி வருவது தெரிய, தான் பிறகு பேசுவதாக போனை அணைத்தார் மணி.

இரவு உணவு தயார் செய்வதாகக் கூறி, சமையலறைக்குச் சென்றாள். சமைத்தாள்; மாமனாருடன் பேசியபடியே உணவருந்தினாள். நீண்ட நாட்களுக்குப் பிறகு, தான் இயல்பாக இருப்பதைப் போல உணர்ந்தாள். சிறிது நேரம் ஜோதியைப் பற்றியும், குழந்தையைப் பற்றியும் பேசினாள். உறக்கம் கண்களைத் தழுவ, தன் அறைக்கு வந்து படுக்கையில் விழுந்தாள்.

‘அப்பாவும், அம்மாவும் இப்போது என்ன செய்து கொண்டிருப்பார்கள்? என்னைக் காணாமல் தேடியிருப்பாங்க. ஆனால், நான் இங்கே வந்திருப்பதை மாமா நிச்சயம் அவர்களிடம் தெரிவித்திருப்பார். அதனால் தான் என்னிடம் எதையும் கேட்கவில்லை’ என்று நினைத்துக் கொண்டே தனது மொபைலை உயிர்பித்தாள்.

‘எப்போது விக்ரமை பேசவிட்டு, வேடிக்கைப் பார்த்தார்களோ!

அப்போதே இனியும் தான் அங்கிருப்பது முடியாத காரியம்' என்று நினைத்துக் கொண்டாள். ஆனாலும் அவர்களிடம் சொல்லாமல் வந்தது, அவர்களை எந்த அளவு வேதனைப்படுத்தும், தன்னைக் காணாமல் பரிதவிப்பார்கள் என்று தெரிந்த போதும், மனத்தைக் கல்லாக்கிக் கொண்டாள்.

பெற்றவர்களை நினைத்துக்கொண்ட மனத்தில் மெல்ல விக்ரமின் நினைவுகள் எழுந்தன. 'என்ன இருந்தாலும் தான் அவனை அப்படி எடுத்தெறிந்து பேசியிருக்கக் கூடாது. அந்த அகைஷயோடு, விக்ரமை ஒப்பிட்டுக் கண்டபடி பேசி, அவனது மனத்தைப் புண்படுத்திவிட்டோம். இரவெல்லாம் தூங்க வில்லையாமே… மனத்திற்குள் எவ்வளவு தவித்திருப்பான். சே, சொல்ல வந்ததைச் சாதாரணமாகவே சொல்லியிருக்கலாம். எனக்கு ஏன் அப்படிக் கோபம் வந்தது? யோசிக்காமல் பேசிவிட்டு எதற்கு இந்தத் தவிப்பு?' தன்னை நினைத்தே சலிப்பாக இருந்தது அவளுக்கு.

மனத்தில் பலவிதமான எண்ணங்கள் ஓட, புரண்டு புரண்டு படுத்தாள்; உறக்கம் வரவில்லை. சற்று முன்பு வரை இயல்பாக இருப்பதைப் போல உணர்ந்தவளுக்கு, சொல்ல முடியாத ஏதோ ஒரு உணர்வு ஆட்கொண்டது. 'தான் என்ன நினைக்கிறோம்' என்று அவளுக்கே புரியவில்லை. 'ஓ'வென கதறி அழவேண்டும் போல இருந்தது; ஆனால், அதுவும் முடியவில்லை. தன் நிலையைக் குறித்து அவளுக்கே பரிதாபமாக இருந்தது. தலையணையை அணைத்துக் கொண்டு கவிழ்ந்து படுத்தாள்.

எப்போது எப்படித் தூங்கினாள் என்றே தெரியவில்லை. திடீரென மூச்சு முட்டுவது போல இருக்க, பதறித் துடித்து எழுந்தவளுக்கு உடல் தெப்பலாக நனைந்திருந்தது.

‘கனவா…! இல்லை இது கனவல்ல. அன்று, ராகவ் தன்னைப் பார்த்து ஏதோ சொல்ல நினைத்தான்; ஆனால், முடியவில்லை. என் பெயரை உச்சரித்தான். பிறகு வலி தாங்காமல் விக்ரமின் கரத்தைப் அழுத்திப் பிடித்தான். அவனது பார்வை சொன்ன செய்தி என்ன? ஏன் இப்போது அதெல்லாம் நினைவிற்கு வரவேண்டும்?’ குழப்பத்துடன் இரவைக் கடத்தினாள்.

****

சமையலறையில் மும்முரமாக இருந்தவள், வீட்டுத் தொலைபேசி ஒலிக்க, சென்று எடுத்தாள். மறுபுறம் தேவிகாவின் இடைவிடாத பேச்சைப் பொறுமையாக கேட்டாள்.

முடிவில், “அம்மா! நான் சொல்லிட்டு வராதது தப்புத்தான். சொல்லிட்டு வர நீங்க அனுமதிச்சிருக்க மாட்டீங்க. அதோடு, என் வீட்டுக்கு வர நான் யாரிடமும் அனுமதி கேட்கணும்னு தோணலை” என்றாள் திடமாக.

மறுபுறம் சற்று அமைதியாக இருந்து, பின்னர் தொலைபேசியை வைக்கும் சப்தம் கேட்டது. பேசிய பேச்சு அதிகம் தான் என்றாலும், அவளுக்கு வேறு வழி தெரியவில்லை.

மூன்று நாட்கள் போன வேகம் தெரியாமல் ஓடிவிட்டது. வீட்டைத் துடைத்துச் சுத்தம் செய்வது, தோட்டத்தைப் பராமரிப்பது என்று அவளுக்கு ஏகப்பட்ட வேலைகள் இருந்தன. சோம்பிக் கிடக்கும் மனம் சாத்தானின் உலைக்கலம்’ என்பதை அறிந்தவளாக, எப்போதும் தன்னை ஏதாவது ஒரு வேலையில் ஈடுபடுத்திக் கொண்டாள்.

‘மூன்று நாட்கள் நிம்மதியாக இருந்துவிட்டாயே, அது போதும்’ என்பது போல, அவளது அமைதியைக் குலைக்க, வந்து இறங்கினாள் ஜோதி.

“ஹே… தியா குட்டி!” என்ற குதூகலக் குரலுடன், கைநீட்டிய வைஷாலியிடம், பார்த்து வெகு நாட்கள் ஆகியிருந்த போதும், அத்தையை அடையாளம் கண்டு, தாவிக்கொண்டு வந்தாள் அந்தக் குட்டி இளவரசி.

“அங்.. ஆஊ” என்று சந்தோஷக் கூச்சலுடன், இரு கைகளாலும் அவளது முகத்தைப் பற்றி, ஆசையுடன் முகத்துடன் முகம் மோதியது அந்த மலர்க் கொத்து.

ஆசையுடன் விளையாடிய குழந்தை திடீரென, அவள் மூக்கைப் பிடித்துக் கடித்து, தலை முடியைப் பிடித்து இழுத்து, இத்தனை நாள் ஏன் என்னைப் பார்க்க வரவில்லை என்பது போல தனது கோபத்தை அழகாக வெளிப்படுத்தியது.

“ஆ! என்னடா அம்மூ…?” என்றபடி, தலைமுடியைச் சிரமத்துடன் விடுவித்துக் கொண்டாள்.

“அவளைப் பார்க்க நீ வரலைன்னு கோபம் வைஷூ!” என்று சிரித்துவிட்டு உள்ளே சென்றான் குணால்.

அந்தச் சிசுவின் அன்பில் கரைந்தவளாக, பனித்த கண்களும், நிறைந்த மனமுமாக, குழந்தையை நெஞ்சோடு அணைத்துக் கொண்ட வைஷாலி, தன்னையே பார்த்தபடி நின்றிருந்த ஜோதியைப் பார்த்தாள்.

“என்னடி இப்படி பார்க்கற? உள்ளே வா” என்று அழைத்துச் சென்றாள்.

இன்னும் ஒரு வாரத்தில் வரப்போகும் குழந்தையின் முதல் பிறந்தநாளை இங்கேயே கொண்டாடப் போவதாகவும், அதனால் ஜோதியை இங்கேயே விட்டுச் சென்றால், ஏற்பாடுகளைக் கவனிக்க சரியாக இருக்கும் என்றவன், மதிய உணவை முடித்துக் கொண்டு கிளம்பிவிட்டான்.

மணிகண்டன் தனது அறையிலிருக்க, வைஷாலி, குழந்தையை மடியில் படுக்கவைத்து உறங்க வைத்தபடி ஜோதியுடன் பேசிக்கொண்டிருந்தாள். ஜோதி தனது கணவனுடன் சுமுகமாக இருப்பதைக் கேட்கவே அவளுக்குச் சந்தோஷமாக இருந்தது. கடைசியில் பேச்சு பிறந்தநாள் விழாவில் வந்து நின்றது.

யாரையெல்லாம் அழைக்கவேண்டும் என்று பெரிய பட்டியலே இட்ட ஜோதி, “என் பெரிய மாமியார் அப்போவே சொன்னாங்க. இவ்வளாவு பேரைக் கூப்பிடணும், நம்ம வீட்டிலேயே வச்சா இடம் வசதியாக இருக்கும்னு; குணால் தான் கேட்கல. எனக்குக் கூட இங்கே வைக்கப் பிடிக்கலை. அதோட நான் தேவையில்லைன்னு நினைக்கிற சில பேரும் இந்த லிஸ்டில் இருக்காங்க. அதை நினைச்சா தான் எரிச்சலா இருக்கு” என்று முகத்தைச் சுளித்தாள்.

அவள் ‘தேவையில்லை’ என்றபோது, தன்னை ஊன்றிப் பார்த்தது போல வைஷாலிக்குத் தோன்றியது. ஆனால், மறுநொடியே, ‘சேச்சே இருக்காது’ என்று தன்னையே சமாதானம் செய்து கொண்டாள்.

கைகளை உயர்த்திச் சோம்பல் முறித்த ஜோதி, “வைஷூ! நீ உன் ரூமுக்குப் போ. நான் கொஞ்ச நேரம் தூங்கணும்” என்று,

வைஷாலியை அனுப்பிவிட்டுக் கதவை மூடித் தாளிட்டாள்.

வைஷாலிக்கு ஒருமாதிரிச் சங்கடமாகிவிட, அமைதியாகத் தன் அறைக்குச் சென்று அடைந்து கொண்டாள்.

அதன்பிறகு வந்த ஒவ்வொரு நாளும், ஜோதி சில விஷயங்களில் ஜாடைமாடையாகவும், சிலவற்றை நேரடியாகவும் வைஷாலியை பேச ஆரம்பித்தாள். எல்லாவற்றுக்கும் மேலாக, ஜோதி, குணாலுடன் மொட்டை மாடியில் அமர்ந்து பேசிக்கொண்டிருக்க, எதேச்சையாக அங்கு வந்த வைஷாலியை, கண்டதும் ஜோதி முகம் போன போக்கைப் பார்த்து, அவளுக்கு வெறுத்துப் போனது.

அன்றிலிருந்து முடிந்த மட்டும் வேலை நேரம் தவிர வைஷாலி தனது அறையை விட்டு வெளியே வரவேயில்லை. எந்நேரமும் தனிமையிலேயே அவளது நேரம் செல்லச் செல்ல, மனம் தேவையில்லாத விஷயங்களை நினைத்துக் கவலைப்பட ஆரம்பித்தது.

பிறந்தநாளும் வந்துவிட்டது. வைஷாலி சந்தோஷமாக கலந்து கொண்டாலும் எதிலும் முன்னால் வரவில்லை. சமையலறையோடு நின்று கொண்டாள். மணிகண்டன் கூட அவளை அழைத்துப் பார்த்தார்; அவள் வரவேயில்லை. விழாவிற்கு வந்திருந்த சங்கரன், மகளைப் பார்த்துப் பெருமூச்சு விட்டதோடு சரி. அவளிடம் நின்று ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

எதிலும் பட்டும் படாமலும் இருக்கும் மகளைப் பார்த்த தேவிகா, பெயருக்கு அவளை நலம் விசாரித்துவிட்டு, ‘இது உனக்குத் தேவையா?’ என்பது போல ஒரு பார்வை பார்த்தார்.

எதுவும் சொல்லாமல் தலையைக் குனிந்து கொண்ட வைஷாலி, உள்ளுக்குள் வெகுவாக நொறுங்கிப் போனாள். தன்னுடைய அசட்டுத்தனத்தால் பெற்றவர்களுக்கு ஏற்படுத்திய வேதனை, இப்போது தான் அவளுக்கு முழுதாகப் புரிந்தது.

'தன் வீடு' என்று நினைத்து, பெற்றவர்களை உதாசீனப்படுத்திவிட்டு வந்த அந்த வீடே, இப்போது அவளுக்கு அன்னியமாகி விட்டதாகத் தோன்றியது.

விழா முடிந்து கூட்டமெல்லாம் கிளம்பிவிட்டது. குணால் குடும்பத்தினர் மட்டும் இருக்க, சங்கரனும், தேவிகாவும் கூடக் கிளம்பிவிட்டனர். மணிகண்டன் கூட சங்கரனிடம், அவள் சொல்லாமல் வந்தது தப்புத்தான். அதுக்காக ரெண்டு பேரும் இப்படி அந்தப் பொண்ணை கஷ்டப்படுத்துவீங்களா?" என்று இருவரையும் கண்டித்தார்.

"அவளா தானே நாங்க தேவையில்லைன்னு வந்தா. அவளா திரும்பி வரட்டும். அதுவரைக்கும் நான் இப்படித்தான் இருப்பேன். தேவி நீ வேணும்னா போய்ப் பேசு" என்றார் மனைவியிடம்.

ஹாலின் ஒரு பக்கம் அழுத்தமாக நின்றிருந்தவளைப் பார்த்த தேவிகா, "நேரமாகுது நாம கிளம்பலாம்" என்று சொல்லிவிட்டு முன்னால் செல்ல, சங்கரன், "வரேன் மணி" என்று காரை நோக்கி நடந்தார்.

கிளம்பும் நேரமாவது தன்னிடம் பேசுவார்கள், இல்லை தானாவது பேசலாம் என்று நினைத்து வேகமாக வாசலுக்கு வந்தவளிடம் எதுவும் சொல்லாமலே இருவரும் கிளம்பிவிட, மொத்தமாக உடைந்து போனாள்.

தான் என்ன தவறு செய்துவிட்டோம்? இப்படி முகம் திருப்பிச் செல்ல? ரெண்டு திட்டு திட்டியிருக்கலாமில்ல… இப்படிக் கடைசி வரைக்கும் பேசாமலேயே கிளம்பிட்டாங்களே என்று மாய்ந்து போனாள்.

குணாலின் குடும்பத்தினர் அனைவரும் தன்னைப் பார்ப்பது புரிய வேகமாக சமையலறைக்குள் சென்று புகுந்து கொண்டாள். அடக்கிவைத்த அழுகை கட்டுக்கடங்காமல் போக, பொங்கிப் பொங்கி அழுதாள். யாரோ வரும் சப்தம் கேட்டதும், அருகிலிருந்த ஸிங்கில் முகத்தைக் கழுவினாள்.

வேலையாள் கொண்டு வந்து கொடுத்த மீதியான உணவுப் பொருட்களை, ப்ரிட்ஜில் வைத்துவிட்டுத் திரும்பியவள், அவளுக்குப் பின்னால் வந்து நின்ற குழந்தையைக் கவனிக்காமல் மோதிவிட, குழந்தை கீழே விழுந்து பின்னந்தலை தரையில் மோதியது.

பதறித் துடித்து அவள் தூக்கும் முன்பே, குணாலின் பெரியம்மா ஓடிவந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டார். “அம்மா! இருங்க தலையை தேய்க்காதீங்க, ஐஸ் க்யூப்ஸ் வைக்கலாம்” என்றாள் வைஷாலி.

“குழந்தையை செய்யறதையும் செய்துட்டு பேச்சு என்ன வேண்டி கிடக்கு? போ அப்படி” என்று அவளது கரத்தை தள்ளிவிட்டுச் செல்ல வைஷாலி பதறிப் போனாள்.

ஜோதி, குழந்தையை வாங்கிச் சமாதானப்படுத்த, சுதாரித்துக் கொண்ட வைஷாலி, ஐஸ் க்யூப்களை எடுத்துக்கொண்டு ஜோதியின் அறைக்குச் சென்றாள்.

“நான் அப்போவே சொன்னேன், அங்கே உன் அண்ணன் பொண்டாட்டி இருக்கா. அவளோட கண்ணு பட்டால் பிள்ளைக்கு ஆகாதுன்னு. கேட்டீங்களா ரெண்டு பேரும்…” அந்தப் பெரியம்மா பேசிய பேச்சைக் கேட்டு அறை வாசலிலேயே நின்று விட்டாள் வைஷாலி.

அனைவருமே அங்கிருந்தும் ஒருவர் கூட அவர் வார்த்தைகளை மறுத்துக் கூறவில்லையே என்ற ஏமாற்றம் மனத்தில் எழ அப்படியே வந்த வழியே திரும்பினாள்.

இதெ பெரியம்மா, ஜோதியின் வளைகாப்பு முடிந்ததும், அதே மணையில் தன்னை அமர்த்தி கைநிறைய வளையளை அடுக்கி, “ராஜாத்தி! அடுத்த வருஷம், உன் மடியிலும் ஒரு குழந்தை தவழணும்” என்று நெட்டி முறித்ததை எண்ணி எண்ணி விரக்தி அடைந்தாள்.

எது தன் வீடு என்று வந்தாளோ; எங்கே தனக்கு, நிம்மதி கிடைக்கும் என்று நினைத்தாளோ; அங்கே தன் அத்தனை நிம்மதியையும், தைரியத்தையும் ஒருங்கே தொலைத்தாள்.

அத்தியாயம் - 49

இரண்டு நாட்களாக கொட்டித் தீர்த்த மழை, இன்று விடுமுறை எடுத்துக் கொண்டு விட்டது. கலைந்து சென்றுகொண்டிருந்த கருமேகங்களுக்கு இடையிலிருந்து, அவ்வப்போது தலைகாட்டி ஒளிந்து விளையாடிக் கொண்டிருந்தான் ஆதவன்.

வேலைகளை முடித்துவிட்டு சமையலறையிலிருந்து வந்த வைஷாலி, வெளியே வானத்தை வெறித்துக்கொண்டிருந்த மாமனாரைப் பார்த்தாள்.

தியாவின் பிறந்தநாளன்று முதலே இப்படித்தான் இருக்கிறார்.

இன்னும் இரண்டு நாட்களில் ராகவின் முதலாமாண்டு நினைவு நாள். தன்னாலேயே அவனது மறைவை தாங்கிக் கொள்ள முடியாத போது, அவரால் எப்படி முடியும்? புத்திரசோகம் அவரை ஒரே வருடத்தில் அவரது தோற்றத்தை ஐந்து வயது அதிகமாக்கிக் காட்டியிருந்தது. இன்றுவரை தன்னிடம் பிரியமாக இருக்கும் ஒரே ஜீவன். அவரது கவலை தோய்ந்த முகத்தைக் காண அவளுக்கு வேதனையாக இருந்தது.

“மாமா!” - அவரது தோள்களைப் பற்றி உலுக்கினாள்.

“ஆ…ஹ்! என்னம்மா” - திடுக்கிட்டு சுய உணர்வு பெற்றார்.

“எங்கேயோ வெளியே போகணும்னு சொல்லிட்டு இருந்தீங்களே… கிளம்பலையா?”

“ம், போகணும்மா” என்றவர் வேகமாக சட்டையை மாட்டிக்கொண்டு வர, குடை ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

“வண்டில வேண்டாம் மாமா. ஆட்டோல போய்ட்டு வாங்க…” அக்கறையுடன் சொன்னாள்.
“சரிம்மா” என்றவர் தளர்ந்த நடையுடன் செல்பவரை கனத்த இதயத்துடன் பார்த்தாள்.

கதவை மூடிவிட்டு டைனிங் டேபிள் மீது கைகளைக் மடித்து வைத்து தலைசாய்த்துக் கொண்டாள். மனத்தளவில் ஓய்ந்து போயிருந்தாள்.

‘மதியம் ஜோதி குடும்பத்துடன் வந்துவிடுவாள். நாளை, அப்பா அம்மா வந்துவிடுவார்கள். இத்தனைச் சொந்தங்கள் இதே இடத்தில் இருக்கும். ஆனால், என்னிடம் யாரும் பேசமாட்டார்கள். இன்னும் இரண்டு நாளைக்கு இதையெல்லாம் பல்லைக் கடித்து, பொறுத்துக்கொள்ள வேண்டும்.
நினைக்க நினைக்க வைஷாலிக்கு ஆயாசமாக இருந்தது.

கணவன், மனைவி, பிள்ளை, குடும்பம் என்று வாழும் போது பிற்காலத்தைப் பற்றி சிந்திப்பதேயில்லை. அதுவே ஒரு பெண் கணவனை இழந்துவிட்டால், அவளுக்கென்று சில வரையறைகளை இந்தச் சமூகம் நிர்ணயித்துவிடுகிறது. எதிர்காலம் அவளுக்குக் கேள்விக் குறியாகி விடுகிறது. திருமணம் தான் ஒரு பெண்ணுக்குப் பாதுகாப்பென்றால் எல்லோருக்கும் அது சாத்தியமா?’

வைஷாலியின் மனம் முழுதும் அமைதியின்றி தவித்தது. தன்னையும் மீறி வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். இப்போதெல்லாம் வற்றாத ஜீவநதியைப் போல அவளது விழிகளும் மாறிவிட்டது. பலவித யோசனைகளில் உழன்று கொண்டிருந்தவள் அழைப்பு மணி ஓசை கேட்டு, எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

அங்கே விக்ரம்! வைஷாலியின் இதயம் தறிகெட்டுத் துடித்தது.

அவளது அதிர்ந்த முகத்தை நொடிப்பொழுதில் கண்டுகொண்டான்.
“உள்ளே வரலாமா?”

“வாங்க…” அழைத்தவள், இருக்கையைக் காட்டி, “உட்காருங்க” என்றாள்.

“வீட்டுல பெரியவர்…?”

“வெளியே போயிருக்காங்க.”

“ஓ! கொஞ்சம் தண்ணி கிடைக்குமா?” என்றான்.

“ஸ்” என்று தலையில் தட்டிக்கொண்டவள், தண்ணீரைக் கொண்டுவந்து கொடுத்தாள்.
குடித்துவிட்டு டீபாய் மீது கிளாஸை வைத்தவன், நிமிர்ந்து அவளது முகத்தைப் பார்த்தான். சிவந்திருந்த விழிகள் அவளது நிலையைப் பறைசாற்றின. மனத்திற்குள் இனம்புரியாத உணர்வு எழுந்தது.

“எப்படியிருக்க வைஷாலி?” என்றான் மென்மையாக.

அவளது மாமாவிற்குப் பிறாகு இத்தனை ஆறுதலுடன் ஒரு குரல் நலம் விசாரித்ததில் தழுதழுத்துப் போனாள். பதில் சொல்ல முடியாமல் சுயபச்சாதாபத்தில் தொண்டை அடைக்க, “ம்” என்று தலை குனிந்த படியே தலையை ஆட்டினாள்.

சில நொடிகள் அழுத்தமான அவனது பார்வையால் அவளை ஸ்பரிசித்துவிட்டு, “நான் வரேன்…’ என்று விடுவிடுவெனக் கதவை நோக்கி நடந்தான்.

சட்டென அவன் கிளம்பிவிட, வைஷாலி ஒரு வேகத்தில், “விக்ரம்!” என்றழைத்தாள்.

வியப்புடன் அவளைப் பார்த்தான்.

அவனது கூர்மையான பார்வையைக் கண்டதும், தைரியத்தைத் திரட்டி,

“கொஞ்சம் பேசணும்” என்றாள்.

நெஞ்சின் குறுக்காகக் கைகளைக் கட்டிக்கொண்டு, சற்று பின்னால் சாய்ந்தபடி அவளருகில் வந்து அமைதியாக நின்றான்.

வைஷாலி தடுமாறினாள். வார்த்தைகள் வெளிவர மறுத்தன. “வந்து… நான்… சாரி. அன்னைக்கு… உங்களை அப்படிப் பேசியிருக்கக் கூடாது. என்னால ராகவோட இடத்தில், யாரையும் நினைக்கவே முடியல. அதனால தான் ஒரு கோபத்தில் உங்களை அப்படி…” என்று இழுத்தாள்.

நெற்றிச் சுருங்க, அவனது முகம் இறுகியது. கைகளின் அழுத்தத்தில் நரம்புகள் புடைத்தன.

ஆனால், வைஷாலி இது எதையும் கவனிக்கவில்லை. மறுபக்கம் திரும்பி நின்றவள், “அதோடு உங்களுக்கு என் மேல் இருப்பது பரிதாபம். இந்தப் பரிதாபம் தான் அன்பாக மாறியிருக்கு. அதை நீங்க காதல்ன்னு தப்பா நினைச்சிட்டு இருக்கீங்க” நிறுத்தி நிதானமாகப் பேசினாள்.

அவனது இறுகிய முகம் பாறை போல மேலும் இறுக, பேசிக்கொண்டே போன வைஷாலியின் கரத்தைப் பற்றி, தன் பக்கமாக வேகமாகத் திருப்பினான். அவளது தோள்களை இறுகப் பற்றினான். இதைச் சற்றும் எதிர்பார்க்காத வைஷாலி நடுங்கினாள். அவனது முகத்தைப் பார்த்து பயந்து போனாள்.

“இது ஒண்ணும் விடலைக் காதல் இல்ல… நீ சொல்வது நடக்க. உனக்கு அப்படி ஒரு எண்ணமிருந்தா, அதுக்கு நான் பொறுப்பாக முடியாது. நான் முட்டாள் இல்ல. இருப்பதை இல்லைன்னும்; இல்லாததை

இருக்குன்னும் சொல்ல. என் முடிவில் நான் உறுதியா இருக்கேன். புரிஞ்சிதா" என்றான் கடுமையான குரலில்.

அவள் வெலவெலத்துப் போனாள். அவனது முறுகிய முகமும், பளபளத்த கண்களும், அடக்கப்பட்ட கோபத்துடன் நிதானமாக வந்த வார்த்தைகளும் அவளை அச்சுறுத்தின.

"யோசி. என் மனசுல இருப்பது, உனக்கும் புரியும்" என்று அவளை உதறிவிட்டு வேகமாக வெளியேறினான்.

ஓயாத இறைச்சலுடன் கரையைத் தொட்டுச் செல்லும் அலைகளைப் போல, விக்ரமின் வார்த்தைகள் விடாமல் அவளைத் தாக்கின.

****

சந்தன நிறச் சேலையில், துடைத்து வைத்த குத்துவிளக்கைப் போல வீட்டின் ஒரு பக்கமாக நின்றிருந்த ரவீந்தருக்கு, துக்கம் நெஞ்சை அடைத்தது. அன்று கோவிலில் அழுதபடி நின்றிருந்தவளைக் கண்ட கணவன், மனைவி இருவருமே அவளது சோகத்தைக் கண்டு தாள முடியாமல் தான் சீமாவை மட்டும் அவளிடம் பேச அனுப்பி வைத்தனர்.

அதன்பிறகு வந்த நாட்களில் செந்தளிருக்கு அவளது நினைவே வாட்டி எடுத்தது. அடுக்கடுக்காக எத்தனைத் துயரத்தைத் தாங்கிக்கொண்டு நிற்கிறாள் என்று அவளது தைரியத்தைக் கண்டு வியந்து கொண்டார். மகனது முடிவுக்குத் தான் ஏன் குறுக்கே நிற்கவேண்டும் என்ற எண்ணம் தீவிரமடைய, தனது சம்மதத்தைக் கணவரிடம் தெரியப்படுத்தினார்.

“வாங்க மாமா சாப்பிடலாம்” அழைத்த வைஷாலியின் குரலில் நினைவுக்கு வந்தவர், “ம், வரேம்மா” என்று எழுந்தார்.

அவருக்கு அருகில் அமர்ந்திருந்த விக்ரமை நிமிர்ந்து பார்த்தாள். அவளையும் அறியாமல், அவளது உடல் அதிர்ந்தது. எழுந்தவன், அவளை தனது கூர்மையான பார்வையில் ஆராய, அங்கிருந்து விலகினாள் அவள். இருவரையும் ஆரம்பத்திலிருந்தே கவனித்துக் கொண்டிருந்த ஜோதி வாய்க்குள் என்னவோ முணுமுணுத்துக் கொண்டாள்.

சாப்பிட்டு முடித்து வந்தவர்கள் கிளம்பிவிட, குணாலும், வைஷாலியின் பெற்றோரும் மட்டுமே இருந்தனர்.

எல்லோரும் ஹாலில் அமர்ந்து ஏதேதோ பேசிக்கொண்டிருக்க, தட்டில் கொஞ்சம் சாதத்தையும், ரசத்தையும் ஊற்றிக்கொண்டு சமையலறையில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் வைஷாலி.

“ஏம்மா இங்கே உட்கார்ந்து சாப்பிடுற? எதுவும் காய் போட்டுக்காமல் இப்படிச் சாப்பிட்டா தொண்டையை அடைக்கப் போகுது” என்றவர், உருளைக் கிழங்கு வறுவலை அவளது தட்டில் வைத்தார்.

“இல்ல மாமா பசிக்குது ஆனா, சாப்பிட முடியலை…” என்றாள் பரிதாபமாக.

சமையலறையை ஒட்டிய சோஃபாவில் அமர்ந்திருந்த தேவிகாவிற்கு மகளைக் கட்டிக்கொண்டு அழவேண்டும் போல இருந்தது. அவளுக்கு ஆதரவாக இருக்க வேண்டிய நேரத்தில் இப்படி ஒதுங்கி நின்று

அவளைத் துன்புறுத்துகிறோமே என்று வருத்தமாக இருந்தது. ஆனால் இதெல்லாம் அவளது நன்மைக்காகத் தானே என்று தன்னையே தேற்றிக்கொண்டு, நாசுக்காகக் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

மணிகண்டன் எதுவும் சொல்லாமல் எழுந்து நிற்கவும், “என்னப்பா இதெல்லாம்...?” என்ற கத்தலுடன் ஜோதி வீசியடித்த பத்திரங்கள் எல்லாம் அவரது காலடியில் வந்து விழுந்தது.

கோபாவேசமான அவளது முகத்தைப் பார்த்த வைஷாலி, பாதிச் சாப்பாட்டில் எழுந்து நின்றாள்.

குனிந்து பத்திரங்களை எடுத்த மணிகண்டன், “ஜோதி! எல்லாம் நியாயமா செய்ய வேண்டியதைத் தான் செய்திருக்கு” என்றார் எரிச்சலுடன்.

“என்னத்த நியாயமா செய்துட்டீங்க? இந்த வீட்டில் பாதியையும் அம்மாவோட நகையைப் பாதியும் இவளுக்கு எப்படிக் கொடுக்கலாம். அண்ணனே இல்லைன்னு ஆனதுக்குப் பிறகு, இதெல்லாம் அவசியமா? நான் ஒரு பொண்ணைப் பெத்து வச்சிருக்கேன். ஆனா, அவளுக்கென்ன குழந்தையா, குட்டியா? அதோட அவளுக்கு என்ன சொத்தா இல்லை? வீட்டுக்கு ஒரே பொண்ணு. எல்லாமே அவளுக்குத் தானே.

எங்க அண்ணன் செத்து ஒரு வருஷம் முடியறதுக்குள்ளேயே அவளுக்குக் கல்யாணம் செயணும்னு, வீட்டில் எல்லா ஏற்பாடும் செய்ய ஆரம்பிச்சிட்டாங்க. இன்னொரு வீட்டுக்குப் போகப் போறவளுக்கு, எதுக்கு இந்த வீட்டில் பாதியைக் கொடுக்கணும்? போகப் போற இடம் என்ன சாமானியப்பட்டதா? ஹும்! கொடுத்துவச்ச மகராசி” என்று பெருமூச்சு விட்ட ஜோதியின் வார்த்தைகளில் துடிதுடித்துப்

போனாள் வைஷாலி.

”என்ன மாமா? இவ என்னென்னவோ சொல்றா?” தவிப்புடன் கேட்டாள்.

“ஆஹா! உனக்கு இது எதுவுமே தெரியாது இல்ல. இதை நாங்க நம்பணும். இந்தப் பூனையும், பால் குடிக்குமான்னு இருந்துகிட்டு எல்லாத்தையும் சாமர்த்தியமா நடத்திக்கிட்ட இல்ல” என்றாள் ஆத்திரத்துடன்.

”ஜோதி! அநாவசியமா வார்த்தையை விடாதே. எனக்கு இதைப் பத்தி எதுவுமே தெரியாது. இதைப்பத்தி முதல்லயே தெரிஞ்சிருந்தா, உயில் எழுத விட்டிருக்கமாட்டேன்.”

“போதும்டீ உன் நடிப்பு. இதோ சுத்தி நிக்கிற அத்தனைப் பேரும் உன்னை நம்பலாம். ஆனா, நான் நம்பமாட்டேன். ஏமாளி மாமனார் இருக்கார். கொஞ்ச நாள் கூட இருந்தா லட்சக்கணக்கான சொத்தை எழுதி வாங்கிடலாம்னு பிளான் போட்டுத் தானே உன் வீட்டை விட்டுட்டு இங்கே வந்து உட்கார்ந்திருக்க. இதைக் கூட புரிஞ்சிக்க முடியாத முட்டாளா நான்?” என்றாள் எகத்தாளத்துடன்.

“முட்டாள்தான்டி நீ அடி முட்டாள்தான். கேவலம் அழிந்து போற சொத்துக்காக, உங்க மேல உண்மையான பாசம் வச்சிருக்கும் என்னை இப்படியெல்லாம் பேசுவ? உன் அண்ணன் சொன்ன போது கூட நான் நம்பலை. ஆனா நீ சுயநலவாதிதான். உன் குடும்பம் என் குடும்பம்னு இன்னைக்கு வரைக்கும் நான் பிரிச்சி பார்த்திருப்பேனா? எந்தச் சூழ்நிலையிலும் உன்னை உங்க அண்ணன் உட்பட யாரிடமும், விட்டுக்கொடுக்காம தானே இருந்தேன்.

பணத்துக்காக இத்தனை வருஷ நட்பை கேவலப்படுத்துவியா நீ. ஒரு வசதியான வீட்டில் பிறந்து வளர்ந்தது மட்டும் தான் எனக்குக் கிடைத்த சந்தோஷம். உன் அண்ணனை, கல்யாணம் செய்து கொண்டு வரும் போது எத்தனைச் சந்தோஷத்தோடு வந்தேன் தெரியுமா? ஆனா, மூணே மாசத்தில் எல்லாமே முடிஞ்சி போச்சு" என்றவள் கதறி அழுதாள்.

"என்னோட எதிர்காலம் கேள்விக்குறியா மாறினது தான் எனக்குக் கிடைத்த பலன். ஆனா, உனக்கு நல்ல வாழ்க்கை, அன்பைக் கொட்டக் கணவன், பாசத்தைக் காட்ட குழந்தை, இதுக்கு மேல ஒரு பெண்ணுக்குக் கிடைக்க வேண்டிய கௌரவம், அந்தஸ்து எல்லாமே இருக்கு. எனக்கு மறுக்கப்பட்ட எல்லாம் உனக்கு நிறைவா கிடைச்சிருக்கு. இதுக்காக நான் உன் மேல் என்னைக்காவது பொறாமை பட்டிருப்பேனா?

நான் ஆசைப்பட்ட வாழ்க்கைதான் எனக்கு நிலைக்கல, இருப்பவங்களை என் சொந்தமா ஏத்துகிட்டு கடைசி வரைக்கும் உங்க எல்லோர் கூடவும் இருக்கணும்னு மட்டும் தானே பிரியப்பட்டேன். அதுக்காக என்னைப் பெத்தவங்களோட மனசை கூட உடைச்சிட்டு உங்களையெல்லாம் தேடி வந்தேன். உனக்கு இவ்வளவுப் பேராசையா? அதுக்கும் உனக்குத் தகுதி இல்லைன்னு என்னை பிரிச்சி வச்சிட்டீங்க இல்ல?" அழுகையோடு கேட்டவள் கண்களைத் துடைத்துக் கொண்டு, தன் அறைக்குச் சென்றாள்.

பத்து நிமிடங்களில் கையில் ஒரு பையுடன் திரும்பி வந்தாள். "அன்பும், அக்கறையும் தானாக கிடைக்கணும். பிச்சை கேட்டு வாங்கக் கூடாது. இனியும் அப்படிப்பட்ட இடத்தில் இருந்தால், எனக்கு மரியாதை இருக்காது. அதனால் இனி நான் கிளம்பறேன்.

மாமா! நீங்க என் மேல உண்மையான பாசம் காட்டினீங்க; அதனால் தான் இத்தனையும் செய்தீங்க. ஆனா, எனக்கு உங்க பாசம் மட்டும் போதும் மாமா. அடுத்தவங்களோட உதாசீனமும், மனசு நோக பேசுவது எந்த அளவுக்கு வலிக்கும்னு புரிஞ்சிகிட்டேன். என்னைக்காவது உங்களுக்கு என் நினைவு வந்தா, ஒரு போன் பண்ணுங்க மாமா” என்று அவரது கைகளைப் பிடித்துக் கொண்டு கதறினாள்.

ஒரு வார்த்தை கூடப் பேசாத மணிகண்டன், மௌனமாகக் கண்ணீர் வடித்தார். சங்கரன் தலை குனிந்து, கண்களை மூடி அமர்ந்திருக்க, தேவிகா தவிப்புடன் கரைகட்டிய கண்ணீருடன் மகளைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

சமாதானமாகி நிமிர்ந்தவள், “மாமா! இது அத்தையோட நகை; கல்யாணமாகி நான் வந்தபோது நீங்க எனக்குக் கொடுத்தது. இனி இதை நான் எடுத்துட்டுப் போக முடியாது. அதனால்” என்று அவரது கையில் வைத்தாள்.

ஒரு பேப்பரை அவரிடம் கொடுத்து, “இந்த சொத்துக்களை என்னுடைய நாத்தனார் பெயருக்கே சுயநினைவுடன் எழுதிக் கொடுக்கறேன்னு எழுதிக் கையெழுத்துப் போட்டிருக்கேன். இதுவே போதும்னாலும் சரி, இல்லை பத்திரத்தில் எழுதிக் கையெழுத்துப் போட்டுக்கொடுத்தால் தான் செல்லுபடியாகும்னு சொன்னா, அதையும் செய்து கொடுக்கறேன்” என்றவள் ஜோதியின் அருகில் வந்து நின்றாள்.

அலட்சிய பாவத்துடன் வைஷாலியைப் பார்த்தாள் அவள்.

“ஜோதி! நீ எப்படி இருந்தாலும் கடைசி வரைக்கும் நான் உனக்கு ஒரு

நல்ல தோழியாதான் இருந்திருக்கேன். நீயா கேட்கலைனாலும், நானா இதை கட்டாயம் செய்திருப்பேன். பணத்துக்காக ஒரு நல்ல நட்பை நீ இழந்துட்ட. இன்னைக்கு இல்லைனாலும், என்னைக்காவது உனக்கு இது புரியும்” என்றாள் அழுத்தமாக.

பெற்றோரின் அருகில் தயக்கத்துடன் சென்றவள், பையை கீழே வைத்துவிட்டு, இரு கைகளையும் கூப்பினாள். “என் தப்பை நான் உணர்ந்துட்டேன். என்னை மன்னிச்சிடுங்க” என்று அழுகையில் குலுங்கியவள், “என்னை உங்களோடு கூட்டிட்டுப் போறீங்களா? எனக்குன்னு யாருமே இல்லை” என்றவளை, “வைஷூ! என்று கதறலுடன் அணைத்துக்கொண்டார் தேவிகா.

வைஷாலியும், தேவிகாவும் காரில் அமர்ந்திருக்க, தங்களது உடைமைகளை எடுத்து வர உள்ளே வந்த சங்கரன், அழுது கொண்டிருந்த ஜோதியிடம், “ரொம்ப நன்றிம்மா” என்று தழுதழுதார்.

“வைஷூ, ரொம்ப நல்லவ மாமா. அவளோட வாழ்க்கை இப்படியே இருக்கக்கூடாது. அவ சௌக்கியமா இருக்கணும். அவ இருக்கும் சூழ்நிலை அவளை எதையும் யோசிக்க விடல. காலம் வரும் போது எல்லாத்தையும் புரிஞ்சிக்குவா. சீக்கிரமா நல்ல தகவலை சொல்ல்லுங்க மாமா. எங்க அண்ணனோட ஆத்மாவும் அதைத் தான் ஆவலோட எதிர்பார்க்கும்” என்றவளுக்கு நன்றியைச் சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

மணிகண்டன் ஒரு பக்கம் கவலையும், மறுபக்கம் சந்தோஷத்துடனும் அறைக்குச் சென்றார்.

குணால் மனைவியின் கண்ணீரைத் துடைத்து, அவளை ஆறுதலுடன் அணைத்துக் கொண்டான்.

அத்தியாயம் - 50

அநாவசிய பேச்சுகள் இன்றி, தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்கும் மகளைப் பார்க்கப் பார்க்கப் பெற்றோரின் வேதனை அதிகரித்தது. அவளது மனமாற்றத்திற்காக என்று செய்த அத்தனைச் செயல்களும் அவளை வெகுவாகப் பாதித்துவிட்டதை, காலம் கடந்தே அறிந்துகொண்டனர்.

அவளிடம் சிரிப்புதான் இல்லையென்றால், இப்போதெல்லாம் அழுவது கூட இல்லை. அவளிடம் சிறிதுச் சிறிதாகப் பேசிப் புரியவைத்திருக்க வேண்டும். எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செய்து, இன்று இப்படி எதிலும் பிடிப்பில்லாமல் இருப்பதைப் பார்க்க அவர்களுக்குப் பயமாக இருந்தது.

பேச்சிலும், விவாதத்திலும் எல்லாவற்றிற்கும் ஒரு தீர்வைச் சொல்லிவிட முடியாது. சில விஷயங்களில் உணர்வுகளின் மூலமாகத் தான் செயல்பட்டாக வேண்டும் என்று புரியாமல் இல்லை. ஆனால், 'இவள் இப்படியேயிருந்தால் கடுமையான மன அழுத்தமாக மாறி, அவளைத் தாழ்வு மனப்பான்மையில் தள்ளிவிடுமோ' என்று அஞ்சினர்.

தேவிகா செந்தளிரிடம் இதைப் பகிர்ந்து கொண்ட போது, "யோசிக்காதே, நீ கல்யாணப் பேச்சை ஆரம்பி. அவ தனக்கு யாருமில்லைன்னு மனசால நொந்து போயிருக்கா. இப்போ தான் அவளுக்கு ஒரு துணை வேணும். தைரியமா பேசு; மத்ததை அப்புறம் பார்த்துக்கலாம்" என்று தேவிகாவிற்கு தைரியம் சொன்னார்.

குனிந்து என்னவோ எழுதிக்கொண்டிருந்தவள், அன்னையின் குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள். தேவிகாவிற்கு உள்ளூரப் பயம். ஆனால், பதட்டத்தை மறைத்துக்கொண்டு, “முக்கியமா ஏதாவது வேலையில் இருக்கியாம்மா?” என்று கேட்டார்.

“இல்லம்மா, சொல்லுங்க” என்றவள், அங்கே வந்த தந்தையைப் பார்த்தாள். விஷயம் மெல்லப் புரிய ஆரம்பித்தது. சொல்லமுடியாத வேதனை மனத்தைத் துளைக்க, உதட்டை அழுந்த கடித்தபடி அமர்ந்திருந்தாள்.

மெல்லக் கல்யாணப் பேச்சை ஆரம்பித்தார் சங்கரன். வைஷாலியின் உடல் நடுங்கியது. அங்கிருந்து எழுந்தவள் உள்ளுக்குள் கனன்ற எரிமலையைப் பொங்கிப் பெருக விடாமல், ஜன்னல் கம்பிகளை அழுந்த பற்றிக்கொண்டாள். சிரமத்துடன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவளுக்கு, மூச்சு வாங்கியது.

“வைஷும்மா!” தேவிகா தழுதழுத்த குரலில் மகளை அழைத்தார்.

ஆனால், அதற்கான பிரதிபலிப்பு எதுவும் அவளிடம் இல்லை. ஜன்னல் கம்பியில் தலை சாய்த்து அமைதியாக நின்றாள்.

“உனக்காகத் தாம்மா இத்தனையும் செய்யறோம். புரிஞ்சிக்க முயற்சி செய்டா…” என்றவர், மேலும் பேசி அவளைச் சமாதானம் செய்ய முயன்றார். “என்னடா எதுவும் சொல்லமாட்டேன்ற? எங்களுக்குக் கல்யாணத்தில் சம்மதம்ன்னு விக்ரம் வீட்டுக்குத் தகவல் சொல்லிடட்டுமா?” தேவிகாவின் குரலில் அளவுக்கதிகமான எதிர்பார்ப்பு தெரிந்தது.

‘மகள், எங்கே முடியாது என்று கூறிவிடுவாளோ!’ என்ற பயம், அவரது தவிப்பில் தெரிந்தது.

இருவரும் அமைதியாக அவளையே பார்த்துக்கொண்டிருக்க, கதவு வரை சென்றவள், தயக்கத்துடன் நின்றாள். அவளது மனம் இருதலைக் கொள்ளியாக தவித்தது. மகளது பதிலை ஆவலுடன் எதிர்பார்த்தது அந்தத் தாயுள்ளம்.

பெற்றோர்களுக்காகச் சம்மதம் என்று சொல்ல நினைத்தாலும், ராகவின் மீது காதல் கொண்டிருந்த அவளது மனம் அதை ஏற்க முடியாமல் தவித்தது. பெற்றவர்களின் சந்தோஷத்திற்காக, திருமணத்திற்குச் சம்மதித்து தனது காதலைத் துறந்தால், அது ராகவிற்கு செய்யும் துரோகம் என்று மனசாட்சி அவளைச் சாடியது.

‘பெற்றவர்களா, காதலா?’ என்று மனம் இராண்டாக பிரிந்து வாதிட, ‘இது அவர்களுக்காக மட்டுமல்ல உன் எதிர்காலத்துக்காகவும் தான்’ என்று மூளை எடுத்துரைத்த கருத்தை, அவளால் ஒதுக்கித் தள்ளவும் முடியவில்லை.
மெல்ல நிமிர்ந்தவள், திரும்பி இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். இறுதியாக உணர்ச்சிகளற்ற ஒரு பார்வையை அன்னையிடம் செலுத்தியவள், “உங்க விருப்பப்படியே செய்ங்க” என்றவளுக்குக் கண்கள் உடைப்பெடுக்க, வேகமாக அங்கிருந்து அகன்றாள்.

தேவிகாவிற்கு அவள் சொன்னது புரியவே சில நொடிகளாயின. புரிந்ததும் அவரது சந்தோஷத்திற்கு அளவேயில்லை. சிரிப்புடன், கண்கள் கலங்க கணவரைப் பார்த்தார். அவரோ முறுவலுடன், நாசுக்காகக் கணகளைத் துடைத்துக்கொண்டு கண்ணாடியை

அணிந்தபடி, ரவீந்தருக்கு போன் செய்தார்.

அதன்பிறகு எல்லாமே மளமளவென நடந்தேறியது.

ஒரு நல்ல நாளில் ரோக்கா என்றழைக்கப்படும் இருவீட்டினர் கலப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. வைஷாலி வீட்டினர், விக்ரம் வீட்டிற்குச் செல்ல, கணபதி பூஜையுடன், திருமணப் பேச்சைத் துவங்கினர். தங்கள் மகளை விக்ரமிற்கு திருமணம் செய்து கொடுக்க, பெண்ணின் பெற்றோர் மனப்பூர்வமாக சம்மதிக்க, இரு குடும்பத்தினரும் பரிசுப் பொருட்களைப் பரிமாறிக்கொண்டனர்.

ரவீந்தர் குமார், அடுத்த பதினைந்து நாளில் திருமணம் என்றும், பெண்ணை மட்டும் அழைத்து வந்தால் போதும், மற்றதெல்லாம் எங்கள் பொறுப்பு என்று தீர்மானமாக சொல்லிவிட, தேவிகாவும், சங்கரனும் சந்தோஷத்துடன் சம்மதித்தனர். ஆனாலும், தங்கள் மகளுக்குச் செய்ய வேண்டிய அனைத்தையும், நிறைவாகவே செய்தனர்.

****

“விக்ரம்! வைஷாலிக்கு போன் பண்ணச் சொன்னேனே பண்ணியா?” திருமண வேலைகளுக்கு நடுவே கடமையாக வந்து கேட்டாள் சீமா.

ஆஃப்டர் ஷேவ் லோஷனை முகத்தில் தடவியபடி, “எதுக்கு?” என்றவனை, ஓங்கி அறைய வேண்டும் போல இருந்தது சீமாவிற்கு.

“நேத்து அவங்க வீட்டுக்குப் போன போது என்னைக் கூப்பிட்டு, சாரி மேல சாரி கேட்டா. எனக்கே பாவமா போச்சு. உன்கிட்ட பேசணும்னு

மூணு நாளா டிரை பண்றாளாம், நீ போனே எடுக்கலையாமே…”

“ஆமாம். வேணும்னு தான் எடுக்கல” என்றான் அழுத்தமாக.

“அறிவு இருக்காடா உனக்கு? பாவம் அவளுக்கு உன்னிடம் என்ன பேசணுமோ, என்னவோ! அட்லீஸ்ட், நீங்களாவது அவர்கிட்ட சொல்லி, என்னிடம் கொஞ்சம் பேசச் சொல்லுங்கன்னு கெஞ்சினாடா” என்றாள் பரிதாபமாக.

“இங்க பார், அவளுக்காக ரொம்ப ஃபீல் பண்ணாதே. அவ என்னென்ன டயலாக் பேசுவான்னு எனக்குத் தெரியும். உனக்கு இருக்கறது பரிதாபம். அதை காதல்னு தப்பா நினைச்சிகிட்டீங்க. இப்போ கடைசியில் என் வாழ்க்கையோடு சேர்த்து, உங்க வாழ்க்கையும் வீணாகிப் போச்சு. என்னோட மனசு என்னைக்கும் மாறாதுன்னு, அவ பேசறதை கைகட்டி நின்னு கேட்கச் சொல்றியா? நம்மால ஆகாது. அவளை என் வழிக்கு எப்படிக் கொண்டு வரணும்னு எனக்குத் தெரியும்” என்றான் திடமாக.

அவனையே முறைத்துக் கொண்டு நின்றிருந்தாள் சீமா.

“கல்யாணம் முடிந்ததும் உங்களுக்கெல்லாம் அப்பாடான்னு இருக்கும். ஆனா, அதுக்குப் பிறகு தான் எனக்குத் தலைவலி ஆரம்பிக்கும். எல்லாத்துக்கும் முரண்டு பிடிப்பா; நான் சமாளிக்கணும். ஆரம்பத்திலேயே கொஞ்சம் இழுத்துப் பிடிச்சாதான் சரிபடும்” என்றவனை அதிருப்தியுடன் பார்த்தாள்.

“கடைசியில் எல்லா ஆம்பிள்ளைகளும் ஒரே மாதிரிதான் இருக்கீங்க” எரிச்சலுடன் சொன்னவள், “தலைவலின்னு தெரியுது இல்ல,அப்புறம்

ஏன் அவதான் வேணும்னு இப்படிப் பிடிவாதமா இருந்த? வேற எவளாவது உனக்குக் கிடைக்காமலா போயிடுவா” என்றாள் கடுப்புடன்.

அறைக் கதவருகில் சென்றவன், “என்ன செய்யறது? இது எனக்குப் பிடிச்ச, அழகான தலைவலியாச்சே. அதனால் தான்” என்றவன், “காரணத்தை தெரிஞ்சிகிட்ட இல்ல, கிளம்பு” என்று முதுகில் கைவைத்து அவளை அறைக்கு வெளியே தள்ளினான்.

“எப்படியாவது போய்த் தொலை. எனக்கென்ன? கல்யாணம் முடியட்டும் இருக்கு மகனே உனக்கு வைஷாலிகிட்ட” என்றவளது வார்த்தைகள், காற்றோடு போனது.

****

வட இந்திய திருமணம் என்பதாலேயே குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை குதூகலத்துடன் இருந்தனர். முதல் நாள் மெஹந்தி .சகுன் என்ற இரு நிகழ்சிகளுடன் திருமணம் ஆரம்பித்தது. உறவுக் கூட்டம் வீட்டில் கூடிவிட, அதுவும் இரு பக்கமும் உறவு முறையாகிப் போக, விட்டுப் போன சொந்தங்கள் அனைத்தும் இந்தத் திருமணத்தில் சேர்ந்திருந்ததால் ஆரவாரத்திற்கும், சிரிப்புக்கும் பஞ்சமில்லாமல் இருந்தது.

நடக்கும் ஆரவாரங்களை, தனது அறையிலிருந்து மௌனமாக பார்த்துக் கொண்டிருந்தாள் வைஷாலி. சிரித்த முகத்துடன் பழையபடி வளைய வரும் தந்தையைப் பார்த்து மனம் ஆறுதலடைந்தாலும், ‘எல்லாவற்றையும் அத்தனைச் சீக்கிரத்தில் மறந்துவிட்டார்களா?’ என்ற எண்ணம் வர, மனத்தில் வலி எழாமல் இல்லை.

தேவிகா முழுமூச்சுடன் எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்க, வைஷாலிக்கு, ஏனோ இரண்டு திருமண ஏற்பாடுகளையும், ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. உள்ளுக்குள் மனது கசந்து போனது.
எதுவுமே பிடிக்காதது போலத் தோன்ற, கதவை மூடிவிட்டு அறைக்குள்ளேயே அடைந்து கொண்டாள்.

திடீரெனக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த தேவிகாவின் சித்திப் பெண், “என்ன கல்யாணப் பொண்ணு, இப்படிச் சுருண்டு படுத்துட்டு இருக்க, எழுந்து முகத்தைக் கழுவிட்டுத் தயாராகு. அரை மணிநேரத்தில் மெஹந்தி போட வந்திடுவாங்கன்னு இப்போ தான் போன் வந்தது. எழுந்திரு, எழுந்திரு” என்று அவசரப்படுத்திய சித்தியை, எரிச்சலுடன் பார்த்தாள்.

தலைவிதியை நொந்தபடி, முகத்தைக் கழுவிக்கொண்டு வந்தவளை அமரவைத்து, தலைவாரி, பொட்டு வைத்து, பூவைச் சூட்டும் போது பொங்கி வந்த அழுகையை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. அவளது உணர்வுகளைச் சரியாகப் படித்த பெரியவள் தன் வயிற்றோடு அவளை அணைத்து ஆறுதலாக தட்டிக்கொடுத்தார்.

மெல்ல அவளைத் தேற்றி, தயார் செய்து அழைத்துவந்த போது, பெற்றவர்கள் இருவரும் மனம் நிறைய மகளைக் கண்டு மகிழ்ந்து போயினர். வைஷாலியை ஒரு இருக்கையில் அமரவைக்க, இரு பெண்கள் கைகளிலும், இருவர் கால்களிலும் அவளுக்கு மருதாணி வைக்க ஆரம்பிக்க, விழாக் களைகட்ட ஆரம்பித்தது.

இரவு, அழகாகச் சிவந்திருந்த கரத்தைப் பார்த்தபடியே படுத்திருந்தவள், உடற் சோர்விலும், மனச்சோர்விலும் ஆட்பட்டு, தன்னை மறந்து

உறங்க ஆரம்பித்தாள். அவளது அறைக்கு வந்த தேவிகா, மகளைக் கண் நிறைய பார்த்துக்கொண்டார

****

மசாலாவின் மணம் மூக்கைத் துளைக்க, சோம்பலுடன் கண்களைத் திறந்த வைஷாலி, மணி எட்டு எனக் காட்டிய கடிகாரத்தைப் பார்த்தது, பதறி எழுந்தாள்.

"கல்யாணப் பொண்ணு எழுந்தாச்சா? சீக்கிரம் ஓடிப் போய் குளிச்சிட்டு வா. ரெண்டு மணி நேரத்தில் மாப்பிள்ள வந்திடுவார். பியூட்டி பார்லர் வேற போகணும். சீக்கிரம்" என்றார்.

"முதல்லயே எழுப்பக்கூடாதா சித்தி. பியூட்டி பார்லர் போகலைன்னு யார் அழுதா?" என்று முணுமுணுத்துக்கொண்டே, குளியலறைக்குள் நுழைந்தாள் வைஷாலி.

அதேநேரம் அறைக்குள் நுழைந்த தேவிகா, "மாலதி! மாப்பிள்ள இப்போ தான் போன் செய்தார். வைஷுவை பியூட்டி பார்லர்லாம் கூட்டிட்டுப் போக வேணாமாம். நீயே அலங்காரம் பண்ணிடு" என்றார்.

"அது சரி, இப்போவே வரப்போற பொண்டாட்டிக்கு சப்போட்டாக்கும்" என்று சிரித்த மாலதி, வைஷாலியை பார்க்கும் போதெல்லாம் சிரித்துக் கொண்டார்.

வைஷாலிக்கு தலைவிதியே என்றிருந்தது.

பத்து மணிக்கு வெளியே கேட்ட சலசலப்பிலிருந்தே விக்ரம்

வந்துவிட்டதை அறிந்து கொண்ட வைஷாலிக்கு, கைக்காலெல்லாம் நடுங்க ஆரம்பித்தது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருக்க, இரு கைகளையும் கோர்த்தபடி, தலை குனிந்து அமர்ந்திருந்தாள். வடஇந்திய திருமணத்தைப் பார்க்க வேண்டுமென்றே வந்திருந்த உறவுக்கூட்டம் மொத்தமும் வெளியில் இருக்க, அதுவே அவளுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

“வைஷூ! வாம்மா” என்று மாலதி அழைக்க, கால்கள் நகர மறுத்தது.

இருக்கையிலிருந்து எழ முடியாமல் தவித்தவளை, “வைஷூ! இந்தா தண்ணியைக் குடிச்சிட்டு வா” என்றவர், தன்னோடு வந்திருந்த பெண்களைப் பார்த்துச் சிரித்து வைத்தார்.

தண்ணீரைக் குடித்தவள், மெல்ல எழுந்தாள். வேரோடியிருந்த கால்களைச் சிரமத்துடன் நகர்த்தினாள். வீட்டின் பக்கவாட்டில் பெரிய பந்தல் போடப்பட்டிருக்க, அப்போது தான் அதைக் கவனித்தாள்.

கூடியிருந்த அத்தனைப் பேரின் பார்வையும் விக்ரமின் வருங்கால மனைவியைப் பார்க்கும் ஆவலுடன் காத்திருக்க, வைஷாலி அங்கே நுழையவும், கைத்தட்டலும், அவளை வரவேற்பது போலப் பாடலும், என்று அந்த இடமே கூச்சலும், ஆரவாரமுமாக களைக் கட்டியது.

குனிந்த தலையுடன் மேடையை நோக்கி நடந்தவள், தனக்கு முன்னால் நீண்ட கரத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். ஆழ்ந்த நீலநிற கோர்ட் சூட்டில், உதடுகளில் தேங்கிய புன்னகையுடன், அவள் மேடையில் ஏற உதவுவதைப் போலக் கை நீட்டியிருக்க, வைஷாலி அவளையும் அறியாமல் தனது கரத்தை அவனது கரத்தில் வைத்தாள்.

விக்ரம் கைகொடுத்து மேடையில் அவளை ஏற்றிய பிறகும், அவளது கரத்தை விடாமல் பற்றியிருக்க, வைஷாலி அவஸ்தையில் நெளிந்தாள். அவனது கண்கள் தன்னைப் பார்ப்பதை உணர்ந்தாள். அடுத்த நொடி, அவளது கரத்தை லேசாக அழுத்திக் கொடுத்தவன், தனது கரத்தை விலக்கிக் கொள்ள, வைஷாலி சற்று இலகுவாக மூச்சுவிட்டாள்.

நல்ல நேரத்தில், இருவரும் மோதிரம் மாற்றிக்கொள்ள, பரிசுப் பொருட்களும், நகைகளும் பரிமாறிக்கொள்ளப்பட, நிச்சயதார்த்தம் இனிதாக நடந்து முடிந்தது.

அவனது அழைப்பு வரும் என்று அத்தனை நாட்கள் காத்திருந்தவள், வராமல் போக, இப்போதாவது அவனிடம் பேசவேண்டும் என்று எண்ணி அவனைப் பார்க்கும் போதெல்லாம், அவன் கவனமாக அவளைத் தவிர்த்தான். கடைசி வரை அவனிடம் எதுவுமே பேசமுடியாமலே போனது.

அவளுக்குள் இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் தகர்ந்து போனது. ஒவ்வொரு நிமிடமும் யுகமாக கழிந்தது. ஆனால், மற்றவர்களுக்கோ நேரம் ஓட்டமாக ஓடியது.

இதோ வாசலில் வாத்திய முழக்கங்களுடன் பராத் வந்துவிட்டது. விக்ரம் ஷெஹராவுடன் (மல்லிகைப் பூச்சரத்தினால் மூடப்பட்டு) குதிரை மீது வந்து இறங்கிவிட்டான். மண்டப வாசலில், பெண் வீட்டினரும், மாப்பிள்ளை வீட்டினரும் ஒருவருக்கொருவர் மாலை மரியாதை செய்து உள்ளே அழைத்துவரப்பட்டு, விருந்து பரிமாறப்பட்டது.

குடும்பனரும், நண்பர்களும் மட்டும் இருக்க, ஹோமம் வளர்க்கப்பட்டு, மந்திரங்கள் ஒலிக்க ஆரம்பித்தது. முழுவதும் சரிகையால் இசைக்கப்பட்ட சிவப்பு நிற ' லெஹெங்கா' சோளி அணிந்து, முகத்தை மூடியபடித் துப்பட்டா அணிந்து வைஷாலி அமர்ந்திருக்க, சந்தன நிற ஷெர்வாணியில் தலைப்பாகையுடன் ஷெஹ்ராவால் முகம் மறைக்கப்பட்டு அவளருகில் அமர்ந்திருந்தான் விக்ரம்.

பெரியவர்களின் ஆசியுடன், வைஷாலியின் கழுத்தில் கருகமணி மாலையை (மங்கல சூத்ரா) அணிவித்து, அக்கினியை வலம் வந்து, அவளைத் தன்னில் சரிபாதியாக்கிக் கொண்டான் விக்ரம்.

திருமணம் முடிந்ததும் வழக்கம் போல, மாலதியின் பெண்கள் இருவரும் விக்ரமின் ஷூவை மறைத்து வைத்து வேடிக்கை செய்ய, அவனும் அவர்களுக்குச் சமமாக விளையாட்டாகப் பேசிக்கொண்டிருந்தான். கடைசியில் ஆளுக்கு ஐயாயிரம் ரூபாய் கொடுத்து தனது ஷூவை வெற்றிகரமாக வீட்டுக் கொண்டான்.

கடைசியாக வைஷாலி, புகுந்தவீடு செல்லவேண்டிய நேரம் வந்தது. அத்தனை நேரம் கலகலப்பும், உற்சாகமுமாக இருந்த சங்கரனும், தேவிகாவும் மகளைப் பிரிவதை எண்ணி, கவலையில் ஆழ்ந்தனர்.

வாசற்படியை தாண்டி வந்தவளிடம், முறத்தில், அரிசிப் பொரியும், சில்லரை காசுகளும் நீட்டப்பட்டது. காசு பிறந்த வீட்டின் வளமையும், அரிசிப் பொரி அவர்களின் நலத்தையும் என்று காக்க வேண்டும் என்று கடவுளை வேண்டிக்கொண்டு, பெண் பெற்றவர்களுக்குச் செய்யும் நன்றிக் கடன் தீர்ப்பதாக ஐதீகம். அதன்படி, பொரியையும், காசுகளையும் கை நிறைய அள்ளியவள், தலைக்கு மேல் பின்நோக்கி வீச, தேவிகா, தனது முந்தானையில் அவற்றைப் பிடித்துக் கொண்டார்.

விக்ரமின் கரத்தில் மகளின் கரத்தை ஒப்படைத்த சங்கரன், பேச்சு வராமல், தழுதழுக்க மகளைத் தோளோடு அணைத்துக் கொண்டார். சுற்றி இருந்த அனைவருக்குமே நெகிழ்ச்சியான தருணமாக அமைந்திருந்த நேரத்தில் வைஷாலி மட்டும் இறுக்கமான முகத்துடன், அமைதியாக நின்றிருந்தாள்.

கூட்டத்தில் யாரோ, “பொண்ணு அழணும்…” என்று சப்தமாகச் சொல்ல, பல்லைக் கடித்தவள், அழுத்தமாக நின்றிருந்தாள்.

தேவிகா வைஷாலியின் நெற்றியில் முத்தமிட, “எல்லோரும் சேர்ந்து என்னை ஏமாத்தி, நீங்க நினைச்சதை சாதிச்சிட்டீங்க இல்ல” என்று மெல்லிய குரலில் சொன்னவளை, திகைப்புடன் பார்த்தார் தேவிகா.

அன்னையின் முகத்தை ஆழப் பார்த்தவள், எதுவும் சொல்லாமல் விலகி, காரை நோக்கி நடந்தாள்.
அவளுக்குள் இருந்த ஆத்திரம் கட்டுக்கடங்காமல் போக, அருகில் அமர்ந்திருந்த விக்ரமை ஓரப்பார்வை பார்த்தாள்.

அவனோ, அவளை இமைக்காமல் நேராக பார்த்துக் கொண்டிருந்தான்.

அத்தியாயம் - 51

“பையா! பாபிஜி பேசவே மாட்டாங்களா? எது சொன்னாலும் அமைதியாவே இருக்காங்க?” இருவரையும் சுற்றியிருந்த கூட்டத்திலிருந்த, விக்ரமின் சித்தப்பா பெண் கேட்டாள்.

“உங்க பாபி ரொம்ப ரொம்ப சா∴ப்ட். கோபம் வந்தால், ரொம்ப ரொம்ப

ஹாட். சந்தோஷமா இருந்தாலும், கோபமா இருந்தாலும் இப்படித் தான் அமைதியா இருப்பாங்க" என்று கிண்டலாகப் பதிலளித்தான் விக்ரம்.

"எதுக்குமே ரியாக்ஷன் கொடுக்காமல் இருந்தால், அவங்க எந்த மூடில் இருக்காங்கன்னு எப்படிக் கண்டுபிடிப்பீங்க?" ஆர்வத்துடன் கேட்டாள் அந்தப் பெண்.

"இப்போ உங்க அண்ணி பயங்கரக் கோபத்தில் இருக்காங்க. அந்தநேரம் நீ என்ன சொன்னாலும், வாயே திறக்கமாட்டாங்க" என்று சிரித்தான்.

குனிந்தபடி அமர்ந்திருந்த வைஷாலி, கையை ஆத்திரத்துடன் மூடித் திறப்பதை, பார்த்து உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

"பின்ன உங்களைச் சமாளிக்க வேணாமா?" என்று பதிலளித்தான் கூட்டத்தில் ஒருவன்.

"போதும் பசங்களா அவங்களைக் கொஞ்சம் தனியா விடுங்க" என்றபடி அங்கு வந்தார் செந்தளிர். வைஷூ! கொஞ்ச நேரம் படுத்து எழுந்திரு. பதினோரு மணிக்குக் கல்யாணத்தை ரெஜிஸ்டர் பண்ண வருவாங்க. உறவுக்காரங்க வந்தால் ரெஸ்ட் எடுக்க நேரம் இருக்காது. நைட் ஊருக்கு வேற கிளம்பணும்" என்றவர், "சீமா! வைஷாலியை உன் ரூமுக்கு கூட்டிட்டுப் போ" என்றார்.

சீமாவுடன் செல்லும் மனைவியையே பார்த்துக்கொண்டிருந்த மகனிடம், "விக்ரம்! நீயும் கொஞ்ச நேரம் போய் ரெஸ்ட் எடு" என்று அனுப்பி வைத்தார்.

உடையை மாற்றிக்கொண்டு படுத்தவன், வைஷாலியைப் பற்றி

யோசித்துக்கொண்டே உடல் அசதியில் உறங்க ஆரம்பித்தான். வைஷாலி உடை மாற்றிக்கொண்டு வர, ஜன்னலின் திரைச்சீலைகள இழுத்து மூடிக்கொண்டிருந்தாள் சீமா.

“வைஷாலி! தூங்கி எழுந்து குளிச்சிட்டு இந்தப் புடவையையும், நகையையும் போட்டுக்க” என்று ட்ரெஸ்சிங் டேபிள் மீது வைத்திருந்தவற்றைச் சுட்டிக் காட்டிவிட்டு, கதவை மூடிக்கொண்டு வெளியேறினாள்.

வைஷாலிக்கோ உறக்கம் வரவில்லை. மனம் மீண்டும் மீண்டும் தான் கேட்ட வார்த்தைகளிலேயே உழன்றுகொண்டிருந்தது. திருமணம் முடிந்து சற்று ஓய்வாக அமர்ந்திருந்த நேரம், தியாவின் குரலைக் கேட்டு, சட்டென நிமிர்ந்து பார்த்தாள்.

அத்தனை நேரம் இறுக்கத்துடன் அமர்ந்திருந்தவளது முகம், குழந்தையை கண்டதும் மலர்ந்து விகசித்தது. அவள் எழுந்து கைநீட்ட, “அத்த...!” என்றபடி அவளிடம் தாவி ஓடிவர, தூக்கி கன்னத்தில் முத்தமிட்டு தன்னுடன் அணைத்துக் கொண்டாள்.

சிலநொடிகள் அசையாமல் நின்றவள், ‘அப்போ ஜோதி வந்திருக்காளா?’ என்று விழிகளைச் சுழற்றி அவளைத் தேடினாள். தூரத்தில் மணிகண்டன் அவளது பெற்றோருடன் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தவளுக்குக் குழப்பம் ஏற்பட்டது.

மூன்று நாள் கல்யாணக் களைப்பில் ஆங்காங்கே எல்லோரும் சாவதானமாக அமர்ந்திருக்க, சிலர் உறக்கக் கலக்கத்தில் இருந்தனர். குழந்தையுடன் வீட்டிற்குள் நுழைந்தவளை, “என்ன வைஷூ அதுக்குள்ள கையில் குழந்தை” என்று நேரம் தெரியாமல்

கிண்டலடித்தார் மாலதி.

“ம்ச்! இது ஜோதியோட குழந்தை, சித்தி” என்றாள்.

அதற்குள் அங்கு வந்த மாலதியின் பெண் குழந்தையை வாங்கிக்கொண்டு கொஞ்ச ஆரம்பிக்க, வைஷாலி ஜோதியைத் தேடினாள். டைனிங் ஹாலை எட்டிப் பார்த்தவள், தோட்டத்துப் பக்கமிருந்து ஜோதியின் குரல் கேட்க, சற்று நிதானித்தாள்.

‘இங்கே யாருடன் பேசிக்கொண்டிருக்கிறாள்?’ என்று பார்த்தவள், அங்கே விக்ரமையும், குணாலையும் கண்டதும் அதிர்ந்து போனாள். ‘இவள் எப்படி விக்ரமுடன்?’ குழப்பத்துடன் பார்த்தாள். அவள் கண்ணைக் கசக்க, விக்ரம் ஆறுதலுடன் அவள் தோளில் தட்டிக்கொடுத்துக் கொண்டிருந்தான்.

அதன்பின் இருவரும் பேசியது அவளது காதில் தெளிவாக விழுந்தது. வைஷாலிக்கு, கோபத்தில் என்ன செய்வது என்று புரியவில்லை. ‘தான் எந்த அளவிற்கு ஏமாற்றப்பட்டிருக்கிறோம்’ என்று நினைத்தவளுக்கு ஆத்திரத்தில் உடல் நடுங்கியது. ஒட்டுமொத்தமாக அனைவரையும் அந்த நேரத்தில் வெறுத்தாள். நம்பிய அத்தனைப் பேரும் தன்னை மோசம் செய்துவிட்டதாக மருகினாள்.

அத்தனைக் கோபமும் விக்ரமின் மீது பாய்ந்தது. அத்தனைக்கு அவனையே காரணகர்த்தாவாக ஆக்கினாள். வேதனை அனைத்தையும் நெஞ்சுக்குள்ளே வைத்துக்கொண்டவள், விடைபெறும் நேரம், அன்னையிடம் மட்டும் அனல் கக்கும் வார்த்தைகளைக் கூறிவிட்டு வந்து விட்டாள்.

மனத்திற்குள் பொருமியபடியே இருந்தவள், சீமா வந்து எழுப்பும் வரை, தன்னை மறந்து உறங்கிக் கொண்டிருந்தாள். குளித்துவிட்டு, வைலட் நிற ஜார்ஜெட் புடவையும், அதற்குத் தோதான நகைகளையும் அணிந்து, கூந்தலை தளர பின்னிக்கொண்டு வந்தவளை, இமைக்க மறந்து பார்த்தான் விக்ரம்.

பதிவுத் திருமணம் முடிந்து, மதிய உணவும் முடிய மாலை நான்கு மணியாகிவிட்டது. அவரவர் ஊருக்குக் கிளம்ப தயாராக, ஆரம்பித்தனர். வைஷாலி, சீமாவின் அறைக்குச் சென்றாள். சிறிது நேரம் ஜன்னல் வழியாகத் தோட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தவள், பெரு மூச்சுடன் எழுந்து தனது பெட்டியைச் சரிபார்த்துக் கொண்டிருந்தாள்.

கதவைத் தட்டும் சப்தம் கேட்டதும், “வாங்க” என்றவள், உள்ளே வரும் அரவம் கேட்டு, ‘வேலையாள் டீ கொண்டு வந்திருக்கிறார்’ என நினைத்து, “அங்கே டீபாய் மேல வச்சிட்டுப் போங்க” என்று திரும்பாமலேயே சொன்னாள்.

ஆனால், கதவை அழுந்த மூடி தாளிடும் சப்தம் கேட்டுத் திரும்பியவள், கதவின் மீது சாய்ந்து நின்றிருந்த விக்ரமைக் கண்டதும், அவளது இதயம் ஒரு நொடி நின்று துடிக்க ஆரம்பித்தது.

கதவில் சாய்ந்து நின்றிருந்தவனது விழிகள் ரசனையுடன் அவளைத் தழுவியது. அதுவரை இருந்த தைரியமெல்லாம் போய், விரல்கள் தந்தியடிக்க ஆரம்பிக்க, பெட்டியை மூடிவிட்டு, செய்வதறியாமல் நின்றாள்.

அவனது காலடியின் ஓசை அவளது காதுகளில் ஒலிக்க, இதயம் முரசாக ஓங்கி ஒலித்தது. அவனது மூச்சுக் காற்றின் ஸ்பரிசம் அவளது

கழுத்தில் உரச, பயத்தில் மேல்மூச்சு வாங்க கண்களை மூடி நின்றாள்.

“ஹப்பா! உன்னை உரிமையோடு இந்த வீட்டுக்குக் கூட்டிட்டு வர எவ்வளவு பாடுபட வேண்டி இருந்தது” என்றபடி அங்கிருந்த டிரெஸ்சிங் டேபிளின் ஸ்டூலை இழுத்துப் போட்டு அவளெதிரில் அமர்ந்தான்.

அவளது மனத்திலிருந்த கோபம் பயத்தை விலக்க, நிதானமாக அவனைப் பார்த்தாள். “பின்ன, சோலோ பெர்ஃபார்மென்ஸை கூடப் பண்ணிடலாம். ஒரு கும்பலையே நடிக்க வைக்கறதுன்னா... கஷ்டம்தான். அதையே வெற்றிகரமா முடிச்சிருக்கீங்களே நிச்சயமா பாராட்டணும்” என்று கேலியாக சொல்லிக் கொண்டே கை தட்டினாள்.

நெற்றி சுருக்கிப் பார்த்தவன், அவள் சற்றும் எதிர்பாராத நேரத்தில் கையைப் பற்றி, கட்டிலில் அமரவைத்து, “என்ன கொழுப்பா?” தகிப்புடன் வந்தன அவனது வார்த்தைகள்.

அவன் அமரவைத்த வேகத்தில் கொஞ்சம் தடுமாறியவள், சமாளித்துக் கொண்டு, “உங்களுக்கு இருக்கறதை விடக் கம்மிதான்” என்றாள் அதே அழுத்தத்துடன்.

“ச்சே!” என்று அவளது கரத்தை விடுவித்தவன், “நீயும் சம்மதிச்சி தான் இந்தக் கல்யாணம் நடந்திருக்கு. இன்னும் என்ன உனக்கு? என்னமோ ஏதோ கட்டாயத்துக்கு நடந்தா மாதிரியே பேசுற?” என்றான் கடுப்புடன்.

அவனது ஏமாற்றத்தைச் சந்தோஷத்துடன் பார்த்தாள். இதென்ன அடுத்த டிராமாவுக்கு ரிகர்சலா?” என்றாள் கிண்டலாக.

அவன் உணர்ச்சிகளைத் துடைத்த முகத்துடன் அவளைப் பார்த்தான்.

“ஜோதி மூலமா நாடகம் நடத்தி, உங்க இஷ்டப்படி கல்யாணத்தை முடிச்சிட்டோம்ன்னு சந்தோஷப்படாதீங்க. உங்களை அந்தச் சந்தோஷத்தை அனுபவிக்க என்னைக்கும் விடமாட்டேன்” என்றாள் சவால் விடுவதைப் போல.

மெல்லக் கழுத்தைத் தடவிக்கொண்டவன், “முடிச்சிட்டியா? நாடகம் நடத்தி உன்னைக் கல்யாணம் செய்துக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்ல. உன் ஃப்ரெண்டும் ஒண்ணும் தெரியாத ஆளில்ல” என்றவன் எழுந்து அவளது கையைப் பற்றித் தூக்கினான்.

“என் சந்தோஷத்தை என்னிடமிருந்து யாராலயும் தடுக்கவோ, பறிக்கவோ முடியாது. அதை எப்படி தக்க வச்சிக்கணும்னு எனக்குத் தெரியும். நீ வேணும்னா, அதை அனுபவிக்க விடாமல் தடுக்க என்ன பண்ணணும்னு யோசி” என்று ஒருமாதிரி சிரித்தபடி அவளது கரத்தை விடுவித்தான்.

வைஷாலியின் முகம் ஆத்திரத்தில் சிவந்து போனது. அதைப் பார்த்துச் சிரித்தபடியே இரண்டடி நடந்தவன், நின்று திரும்பிப் பார்த்தான்.

“யோசிச்சாலும் ஒண்ணும் பிரயோஜனம் இல்லை… இருந்தாலும், உன் ஆசையை ஏன் கெடுப்பானேன்? ஆல் த பெஸ்ட்” என்றவன் அவளருகில் வந்தான்.

“என்னடா! போனவன் திரும்பி வரான்னு பார்க்கறியா? என்னுடைய வாழ்த்தை நீ மறந்திடக் கூடாது இல்ல… அதுக்கு நீ எப்பவும் நினைவு வச்சிக்க என்ன பண்ணலாம்?” என்றவனது பார்வை அவளை அணுஅணுவாக துளைத்தது.

அதுவரை தைரியமாக இருப்பதைப் போலக் காட்டிக்கொண்ட வைஷாலி அவனது உரிமையான பார்வையில் படபடத்துப் போனாள்.

சட்டெனக் குனிந்து அவளது வலது உள்ளங் கையில் முத்தமிட, வைஷாலி உடல் வெடவெடக்க, பட்டெனக் கையை இழுத்துக் கொண்டாள். முகமெல்லாம் முத்துமுத்தாக வியர்வை அரும்ப, பயத்தில் தொண்டைக் குழி உலர்ந்து போனது.

அவனது முகத்தில் ஒரு வெற்றிப் புன்னகை தோன்ற, மென்குரலில், “முதல் முறைங்கறதால கைல கொடுத்தேன். அடுத்த முறை நீ சேலஞ்ஜ் பண்ணும் போது வேற… இடம். வேணா அதையும் நீயே யோசிச்சி வை” என்றவன், “வரட்டுமா ஷாலு! சீக்கிரம் ரெடியாகு டைம் ஆகுது” என்றான்.

அவன் நிதானமான நடையுடன் வெளியேற, வைஷாலி குறுகுறுத்த தனது வலது கரத்தையே, வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அத்தியாயம் - 52

மாலை ஆறு மணியளவில், சீமா, அவளது அன்னையும், புதுமணத் தம்பதிகளும், ரவீந்தர் குமாரின் சொந்த ஊரான பத்திண்டாவிற்குப் புறப்பட்டனர். செந்தளிரால் வெகுதூரம் பிரயாணம் செய்ய முடியாத காரணத்தால், அவரது வேண்டுகோளுக்குச் சம்மதித்து, வைஷாலியின் பெற்றோர் அவர்களுடன் சென்றனர்.

ரத்னகிரியிலிருந்து மும்பைக்கு காரிலும், அங்கிருந்து சண்டிகருக்கு விமானத்திலும், மீண்டும் பத்திண்டாவிற்கு காரிலும் பிரயாணம் செய்து

வந்து சேர்ந்த போது ஏறக்குறைய விடியும் நேரமாகிவிட்டது.

பிரயாணம் முழுக்கவே வைஷாலி, யாரிடமும் எதுவும் பேசாமல், கேட்பதற்கு மட்டும் பதிலளித்தபடி அமைதியாக வந்தாள். விக்ரமும் அவளிடம் எந்தப் பேச்சும் வைத்துக் கொள்ளவில்லை.

காரிலிருந்து இறங்கிய வைஷாலி, குட்டி அரண்மனை போன்றிருந்த வீட்டைப் பிரமிப்புடன் பார்த்தாள். வாசல் வரை தோரணமும், வண்ண விளக்குகளும் ஒளிர்ந்து கொண்டு இருந்தன.

அவர்களது வருகைக்காகவே காத்திருந்த வேலையாட்கள் ஓடிவந்தனர். விக்ரமைக் கண்டதும் மரியாதையுடன் வணங்கி, பவ்யமாக அவனிடம் பேசுவதைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

இருவரையும் நிற்க வைத்து ஆரத்தி எடுத்து வீட்டிற்குள் அழைத்துச் சென்றனர். பெரியவர்கள் முன்னே செல்ல, வைஷாலி வீட்டின் பிரம்மாண்டத்தைப் பார்த்தபடி மெல்ல நடந்து கொண்டிருந்தாள்.

“வைஷாலி! நீ இந்த ரூமில் தங்கிக்க” என்ற சீமாவிற்கு புன்னகையுடன் தலையாட்டினாள்.

சீமாவும் அங்கிருந்து சென்றுவிட, வைஷாலி வீட்டின் உத்திரத்தில் தெரிந்த சித்திரங்களையும், தூண்களையும் ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

“இது தான் அப்பா பிறந்த வீடு” என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். அத்தனைப் பெரிய ஹாலில் அவளையும், விக்ரமையும் தவிர வேறு யாரையுமே இல்லை.

விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள். பிறந்து வளார்ந்த வீட்டை ஆசையுடன் அவனது கண்கள் தழுவியது. “தாத்தா, பாட்டி இருந்த வரை வருஷா வருஷம் நாங்க, சித்தப்பா, அத்தை எல்லோரும் குடும்பத்தோடு இங்கே வந்திடுவோம். வீடே திருவிழா மாதிரி இருக்கும்” என்றவன் கண்களில் அந்த நாளைய நினைவுகளின் தாக்கம், சில நொடி வந்து சென்றது.

பெருமூச்சை வெளியிட்டவன், “தாத்தா, பாட்டி ரெண்டும் பேரும் ஒருத்தர் பின்னால் ஒருத்தரா போயிட்டாங்க. அதோடு அம்மாவுக்கும் இப்படி ஆன பிறகு, நாங்க சேர்ந்து இங்கே வருவதே நின்னுபோச்சு. ரொம்ப முக்கியமான வேலை தவிர, அப்பா, அம்மாவை விட்டுட்டு ஒருநாள் கூட எங்கேயும் வரமாட்டாங்க. எப்போதாவது நான் மட்டும் வருவேன்.

இந்த மூணு நாலு வருஷமா அதுவும் இல்லை. எல்லோருக்கும் வேலை, படிப்புன்னு ஆயிரம் பிரச்சனைகள் நினைச்சபடி வர முடியலை. சித்தப்பா பாரின்ல செட்டில் ஆகிட்டாங்க. சீமாவும், அத்தையும் மட்டும் நம்ம வீட்டுக்கு அடிக்கடி வருவா.

எத்தனை நாள் ஆகிடுச்சி இங்கே வந்து. இந்த மண்ணோட வாசம், இந்த மக்கள், இந்த இயற்கை, பசுமை, இந்த வீடு எல்லாத்தையும் ரொம்ப மிஸ் பண்ணிட்டேன்” மெல்லிய குரலில் சொன்னான்.

திடீரென அவனது முதுகில் தட்டி, “ரூமுக்கு போகாம, தூணை கட்டிப்பிடிச்சிட்டு கனவு காணுறியா என்ன?” என்றாள் சீமா.

“ஆஹ்!” என்று அவள் பக்கமாக்கத் திரும்பியவன், “ஷாலு!” என்றபடி மனைவியைத் தேடினான்.

“அவ அவளோட ரூமில் இருக்கா. நீ போய்ப் படு கொஞ்ச நேரம்” என்றவள் சமையலறையை நோக்கி நடந்தாள்.

‘தன்னை இப்படி தனியாகப் புலம்பவைத்து விட்டுச் சென்றுவிட்டாளே’ என்ற ஆத்திரத்துடன் தனது அறைக்குச் சென்றான்.

****

தலையைத் துவட்டியபடி குளியலறையிலிருந்து வெளியே வந்த வைஷாலி, ஹாய் ஷாலு டியர்! குட்மார்னிங்” என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

கட்டிலில் ஒய்யாரமாக சயனித்திருந்தவனை இமைக்காமல் பார்த்தாள்.

“நீங்...க எப்படி? கதவை லாக் பண்ணிட்டுத் தானே போனேன்” என சொல்லிக்கொண்டே கதவைப் பார்த்தாள்.

தாளிட்ட கதவு அப்படியே இருந்தது.

“ஹலோ மேடம்! இது என் வீடு. இங்கிருக்கும் எல்லா ரூமுக்குமே ரெண்டு வழி உண்டு. இது தெரிஞ்சிருக்க உங்களுக்கு வாய்ப்பில்லை” என்று இரு கைகளையும் விரித்தான்.

முகத்தில் விழுந்த கூந்தலை, காதுக்குப் பின்னால் தள்ளியபடி, “ஓ! சரி இப்போ என்ன விஷயமா வந்தீங்க?” என்றாள் காட்டமாக.

”என்ன என்னை வெளியே போகச் சொல்றியா?” என்று முறைப்புடன்

கேட்டான்.

சலிப்புடன், “ச்சு” என்றவள், “எப்போ பாரு விதண்டாவாதம்…” ஏன்று முணுமுணுத்தபடி, கண்ணாடியின் எதிரில் சென்று நின்றவள், குங்குமத்தை எடுத்து உச்சியில் வைத்தாள்.

எழுந்து அவள் பின்னால் வந்து நின்றவன், “கேள்வி கேட்டா என்னவோ வாய்க்குள்ளேயே முனகற? என்ன?” என்றான் பிடிவாதமாக.

“ஒண்ணுமில்ல” என்றபடி அங்கிருந்து நகர முயன்றவள் புஜத்தை இறுகப் பற்றினான்.

“என்ன காலங்கார்த்தால் வம்பு பண்றீங்களா? விடுங்க…” என்று கடுகடுத்தாள்.

அழுத்தமான பார்வையை அவள் மீது செலுத்தியவன், “நேத்து நான் பேசிட்டு இருக்கும் போது நடுவில் ஓடின இல்ல… இப்போ ஓடு பார்ர்ப்போம்” என்றான்.

“சும்மா இந்த மிரட்டற வேலையெல்லாம் வேணாம். முதல்ல விடுங்க என்னை…” அவள் என்னவோ கடுகடுவெனத் தான் சொல்ல முயன்றாள். ஆனால், இருக்க இருக்க குரல் உள்ளே சென்றது.

“மிரட்டுறேனா? அப்படின்னா என்னன்னு தெரியுமா உனக்கு? சரி, அதை உனக்கு இன்னொரு நாள் சொல்லித் தரேன் இன்னைக்கு உனக்கு வேற பாடம். நான் பேசிட்டு இருக்கும் போது எழுந்து போனாலோ, சொல்ல வர்றதை காது கொடுத்து கேட்காட்டாலும் என்ன நடக்கும்னு நீ தெரிஞ்சிக்க வேணாம்” என்றவன், இரு கைகளாலும் அவளைச் சுற்றி

வளைத்துத் தன்னோடு சேர்த்து அணைத்தான்.

அவன் ஏதோ செயப்போகிறான் என்று உணர்ந்து சுதாரிக்கும் முன், விக்ரம் அவளை அணைக்க, தடுமாறிப்போனாள் வைஷாலி.

“வி..க்ரம்...” என்று திணறியவள், அவனது நெஞ்சில் கைவைத்துத் தள்ளினாள்.

உடல் நடுங்க, கண்களை இறுக மூடி உதடு துடிக்க நின்றிருந்தவளை அத்தனை அருகில் பார்த்தவனுக்கு, மனத்தில் காதல் தீ கொழுந்து விட்டு எரியத் துவங்கியது. ஈரக்கூந்தலின் வாசமும், பூசியிருந்த மஞ்சளின் வாசமும் அவனது உணர்வுகளைச் சுண்டி இழுத்தது. அவளது கூந்தலில் முகம் புதைத்து, ஆழ நுகர்ந்தவன், அவளது கன்னத்தை நோக்கி முன்னேறினான்.

தன் பலம் முழுவதையும் திரட்டி, அவள் தன்னிடமிருந்து விக்ரமை தள்ளிவிடவும், சீமா பின் வாசல் வழியாக உள்ளே வரவும் சரியாக இருந்தது.

திகைப்பும், வியப்புமாக இருவரையும் பார்த்த சீமா, வந்த வேகத்திலேயே அறையிலிருந்து வெளியேறிவிட்டாள். ஆனால், வைஷாலிக்கு அழுகையே வந்துவிட்டது. விளையாட்டிற்கு ஆரம்பித்து வினையாகிப் போனதை நினைத்து, தன்னையே நொந்து கொண்டான் விக்ரம்.

தாடையைத் தடவியபடி, “வைஷாலி!” என்று அவளது தோளைத் தொட்டான்.

“என் முகத்திலேயே விழிக்காதீங்க. வெளியே போங்க” என்றவள் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

தன்னையே திட்டிக்கொண்டு வந்த வழியே திரும்பியவனை வெளியே சீமா பிலுபிலுவெனப் பிடித்துக் கொண்டாள்.

பின்னந்தலையைத் தடவியபடி, அவள் திட்டியதையெல்லாம் வாங்கிக் கொண்டு, நான் வேணுமே எதுவும் செய்யலை” என்று பிடிவாதக்காரக் குழந்தையைப் போலச் சொன்னவனைப் பார்க்க அவளுக்கே பாவமாக இருந்தது.

“சரி, உன் ரூமுக்குப் போ. பின் பக்கமாவே போ” என்றாள்.

“ஏன் முன்பக்கம் போனால் என்ன?” என்றான் வீம்பாக.

”கடவுளே! தலையெழுத்து” என்று தலையிலடித்துக் கொண்டவள், “உன் சட்டையைப் பாருடா” என்றாள்.

குனிந்து இடது பக்கம் ஒட்டியிருந்த குங்குமத்தைப் பார்த்தவன், அசட்டுப் புன்னகை ஒன்றை அவளிடம் சிந்திவிட்டு, கையால் மறைத்தபடி வேகமாகத் தன் அறை நோக்கி நடந்தான்.“

அனைவரும் விக்ரமின், தாத்தா - பாட்டி நினைவிடத்திற்குச் செல்லத் தயாராகி, வைஷாலியின் வரவிற்காக்க காத்திருந்தனர்.

“டேய் நான் அவளைச் சமாதானப்படுத்தி வச்சிருக்கேன். ஏதாவது செய்து அவளை உசுப்பேத்தி விடாதே சொல்லிட்டேன்” - விக்ரமின் காதைக் கடித்தாள் சீமா.

அவள் சொன்னதற்கெல்லாம் தலையாட்டிக் கொண்டவனது மனம், அவளது ஓரப் பார்வைக்காக ஏங்கியது. அவள் அவன் பக்கமாக திரும்பினால் தானே. கவனமாக அவன் பக்கமாக திரும்புவதைத் தவிர்த்தாள்.

பெரியவர்களின் நினைவிடட்த்தில் சிறு பூஜையும், அஞ்சலியும் செலுத்திவிட்டு வீட்டிற்குத் திரும்பினர்.

காரிலிருந்து இறங்கிய சீமாவிடம், வேலைக்காரப் பெண் ஓடி வந்து ஏதோ சொல்ல, புடவை முந்தானையைத் தலையில் இழுத்து மூடிக்கொண்டு வீட்டினுள் வேகமாகச் சென்றாள்.

வைஷாலி உள்ளே சென்ற போது, ஹாலில் அமர்ந்திருந்த பெரியவர்கள் இருவரின் காலையும் தொட்டு வணங்கிக்கொண்டிருந்தாள் சீமா.

சீமாவின் அம்மா அவர்களை மரியாதையுடன் வணங்கி, சங்கரனையும், தேவிகாவையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். வைஷாலியை அழைத்த விக்ரம் சேர்ந்து பெரியவர்களை வணங்கி எழுந்தனர். அந்தப் பெரியவர் விக்ரமை நெஞ்சோடு அணைத்துக் கொண்டார்.

”உனக்கு ஒரு நல்ல கணவன் கிடைச்சிருக்கான். அவனை நல்லபடியா பார்த்துக்கம்மா” என்றார் அந்தப் பெரியம்மா.

வைஷாலியும், பெரியவர் சொன்னதற்காக தலையசைத்தாள்.

அவளையே புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்த விக்ரம், “ஷாலு!

இவங்க யாருன்னு உனக்குத் தெரியாதே இவங்க தான் நம்ம சீமாவோட மாமனார் மாமியார்” என்றான்.

அவனது வார்த்தைகளை உள்வாங்கி அர்த்தம் புரிந்து கொள்ள, அவளுக்குச் சிறிது நேரம் பிடித்தது. திகைத்த பார்வையைக் கணவனிடம் செலுத்தியவள், லஸ்ஸி டம்ளர்களை ஏதிந்யபடி வந்த சீமாவை கண்கொட்டாமல் பார்த்தாள்.

அத்தியாயம் - 53

சீமாவின் மாமனார் - மாமியார் புறப்படும் வரை, வைஷாலிக்கு இருப்பே கொள்ளவில்லை. சீமாவிற்குத் திருமணமாகிவிட்டது என்ற விஷயமே அவளுக்குப் புதிது. சீமாவின் கணவன் எங்கே? இருக்கிறானா! இல்லையா!

‘ச்சே’ என்று தன் நினைப்பு போகும் போக்கை நினைத்து தலையிலடித்துக் கொண்டாள்.

அவளது குழம்பிய முகமும், தவிப்பான பார்வையும், அவளது நிலையை தெள்ளத் தெளிவாகச் எடுத்துச் சொல்ல, அவளையே பார்த்தான். விஷய்ம் தெரிந்த போதும், என்ன வென்று ஆறுதலாகக் கேட்கக் கூட அவனுக்குப் பயமாக இருந்தது. பெரியவர்கள் முன்னால் ஏதாவது பேசிவிடுவாளோ என்று மௌனமாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவர்கள் கிளம்பிச் சென்ற பிறகும் சீமா எங்கோ வெளியில் சென்றுவிட, அவளிடம் பேசுவதற்கான சந்தர்ப்பம் அமையவில்லை. சீமாவிடம் கேட்கவேண்டிய கேள்விகள் நிறைய இருந்தன அவளுக்கு.

நேரம் செல்லச் செல்ல இழுத்துப் பிடித்தப் பொறுமையுடன் காத்திருந்தாள்.

தேவிகா என்னவென்று விசாரிக்க, தலைவலி என்றவள், அறைக்குள் வந்து முடங்கிக் கொண்டாள். சீமாவின் அன்னையிடம் கேட்கலாமா என்ற எண்ணத்தையும் மாற்றிக்கொண்டு, சீமாவிற்காக காத்திருந்தாள்.

ஊரே அடங்கிப் போன நேரத்தில் சீமாவின் கார் போர்ட்டிகோவில் வந்து நின்றது. தூங்காமல் விழித்திருந்த வைஷாலி வாசலை நோக்கிச் சென்றாள்.

“வைஷாலி! இன்னும் தூங்கலையா?” வியப்புடன் கேட்டாள் சீமா.

“உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்க்கா” கெஞ்சலும், தவிப்புமாக ஒலித்தது அவளது குரல்.

விரக்தியாக புன்னகைத்தவள், “அது என்ன காவியமா, சந்தோஷமா சொல்ல? ஆனா, கண்டிப்பா நீ இதை தெரிஞ்சிக்கணும். ஒரு பத்து நிமிஷம் வந்திடுறேன்” என்றவள் தன் அறைக்குச் சென்றாள்.

உடைமாற்றிக்கொண்டு சொன்னபடியே திரும்பி வந்தவள், அவளது அறைக்கு அழைத்துச் சென்றாள்.

“எங்க இருந்து ஆரம்பிக்கிறது? என் காதல்ல இருந்தா? கல்யாணத்தில் இருந்தா? இல்ல… என்னோட ஆரம்பக் காலத்திலிருந்து ஆரம்பிச்சா தான் உனக்குப் புரியும்” என்றவள் நீண்ட பெருமூச்சை இழுத்து, ஒரு கணம் கண்களை மூடித் திறந்தாள்.

அந்த ஒரு கணம் அவளது முகத்தில் தெரிந்த வேதனையை, வைஷாலி இது வரை அவளிடம் கண்டதில்லை.

“இந்த ஊரிலேயே தாத்தா தான் பெரிய ஜமீன். விக்ரம் மூத்த ஆண் வாரிசு. நான் மூத்த பெண் வாரிசுங்கறதால, எல்லோருக்குமே நாங்க ரொம்பச் செல்லக் குழந்தைகள். எங்க தாத்தா பாட்டிக்கு, எங்களை வாழ்க்கையிலும் இணைச்சி பார்க்கணும்னு ஆசை இருந்தது.

ஆனால், ஒண்ணாவே ஒரே வீட்டிலேயே வளர்ந்த எங்களுக்குள்ள சகோதர பாசம் தான் இருந்ததே தவிர, வேற எந்த உணர்வும் வரவேயில்லை. போகப் போக அவங்களும் அதைப் புரிஞ்சிகிட்டாங்க.

சொன்னா நம்ப மாட்ட வைஷாலி... பத்து வருஷத்துக்கு முன்னால் வரைக்கும், நானும், விக்ரமும் எப்போதும் எலியும் பூனையுமா தான் இருப்போம். நாங்க வீட்டில் இருந்தா, எந்த நேரமும் வீடு போர்க்களமா தான் இருக்கும். இந்தியா - பாக்கிஸ்தான் பிரச்சனை தீர்ந்தாலும், உங்க பிரச்சனை ஓயாது போல இருக்கேன்னு எல்லோரும் சிரிப்பாங்க.

ஆனா, அதே விக்ரம் தான் என்னோட பிரச்சனைகள் எல்லாம் தீர்ந்து நான் இன்னைக்கு இந்த அளவுக்கு இருக்கக் காரணம். நான் பிளஸ் டூ படிக்கும் போதே எங்க அப்பா ஃபாக்ரில நடந்த ஒரு ஆக்சிடெண்டில் இறந்துட்டார். அதுக்கப்புறம் நானும், அம்மாவும் இங்கே தாத்தா வீட்டோடு வந்துட்டோம்.

நான் காலேஜ் ஃபைனல் இயர் படிச்சிட்டு இருந்தேன். அன்னைக்கு ஹோலி, விக்ரம் தன்னோட ஃப்ரெண்டை வீட்டுக்குக் கூட்டிட்டு வந்தான். அவன்தான் சந்தீப். விக்ரம் ஊரிலிருந்து வந்திருக்கான்னு தெரிஞ்சதும், அவனுக்கு நான் தான் முதலில் ஹோலி கலர்

பூசணும்னு, வேகமா அவனோட ரூமுக்கு ஓடிப்போய்க் கதவைத் தட்டினேன்.

கதவைத் திறந்ததும், கையில் மறைத்து வச்சிருந்த பவுடரை அவன் மேல வீசினேன். ஆனால், அது சந்தீப். விக்ரம் சிரிக்க, நான் அவனிடம் மன்னிப்பு கேட்கன்னு ஆரம்பிச்சது. ரெண்டு பேரும் இங்கே இருந்த ஒரு வாரத்தில், நான் சந்தீப்புக்கு ரொம்ப நெருக்கமானவளாக ஆகிட்டேன்.

எங்க பேச்சு, போனிலும் தொடர்ந்துச்சு. விக்ரம் வரும் போதெல்லாம், சந்தீப்பும் வருவான். அடுத்த கொஞ்ச நாள்ள, அவன் மட்டும் தனியாக வர ஆரம்பிச்சான். ஆரம்பத்தில் யாருக்கும் எந்த சந்தேகமும் வரலை. விக்ரம் ஃப்ரெண்ட் என்பதால் அவனுக்கு பலமான உபசரணை நடக்கும். ஆனால், ஆறு மாதத்தில் மெல்ல வீட்டிலிருப்பவங்களுக்கு கொஞ்சம் சந்தேகம் வர ஆரம்பிச்சது. ஒரு கட்டத்தில் விஷயம் தெரிய ஆரம்பிச்சதும், நான் எல்லா உண்மையையும் சொல்லிட்டேன்.

விக்ரம் அப்போ தான் ரத்னகிரியில் மாமாவுக்கு ஹெல்ப்பா பிஸ்னசில் ஈடுபட ஆரம்பித்த நேரம். தாத்தா அவனைக் கூப்பிட்டு, சந்தீப்பைப் பற்றி விசாரித்தார். கொஞ்சம் நடுத்தரக் குடும்பம். திறமையானவன். கைதூக்கிவிட்டா முன்னுக்கு வந்திடுவான்னு சொன்னான்.

தாத்தாவும் அங்கங்கே விசாரித்தார். எல்லாம் நல்லதாகவே இருக்க, எங்க கல்யாணம் எந்தச் சிக்கலும், சிரமமும் இல்லாமல் பிரமாதமா நடந்தது. கல்யாணம், ஹனிமூன்னு வாழ்க்கையே சொர்க்கமா தெரிந்தது.

மெல்ல இயல்பு வாழ்க்கைக்கு வர ஆரம்பிச்சோம். ஆடம்பர

வாழ்க்கையும், கையில் புரண்ட பணமும், கொஞ்சம் கொஞ்சமா சந்தீப்போட சுயரூபத்தை வெளியே கொண்டுவர ஆரம்பிச்சது. அதுவரைக்கும் இல்லாத ஒரு புது சந்தீப்பை பார்த்தேன். தேவையில்லாத எல்லாப் பழக்கமும் அவனுக்கு இருந்திருக்கு. இதில் அதிசயம் என்னன்னா… அத்தனைத் தூரம் பழகின விக்ரமுக்கே இதெல்லாம் தெரியாது. அவ்வளவு சாமர்த்தியமா அவனிடம் நடந்திட்டு இருந்திருக்கான்.

அவன் எங்க வீட்டுக்கே திட்டம் போட்டுத் தான் வந்திருக்கான்னு பின்னால் தான் தெரிந்தது. ஒவ்வொரு நாளும் அடி, சித்ரவதை. தடுக்க வந்தா மாமனார், மாமியாருக்கும் சேர்த்து விழும். இந்த விஷயத்தை வீட்டில் யாருக்குமே நான் சொல்லலை. மகள் சந்தோஷமா இருக்கறதா நினைச்சிட்டு இருப்பவங்க நிம்மதியை, கெடுக்க விரும்பல. ஒரு வகையில் இதுக்கு முழுக்க முழுக்க காரணம் நான் தானே. அதனால் எல்லாம் என்னோடு போகட்டும்னு நினைத்து மறைச்சிட்டேன்.

அந்த நிலைமையில் தான் நான் கர்ப்பமா இருப்பது தெரியவந்தது. ரொம்ப சந்தோஷப்பட்டேன் வைஷாலி. என்னோட கஷ்டத்தைத் தீர்க்க எனக்கொரு பொக்கிஷத்தை கடவுள் கொடுத்திருக்கார்ன்னு ரொம்ப சந்தோஷப்பட்டேன். ஆனால், அதையும் அந்தப் பாவி நாசமாக்கிட்டான். அதைவிடக் கொடுமை அந்தக் குழந்தைக்கு அப்பான்னு, அவன் விக்ரமை கைகாட்டி விட்டது தான்” என்றவள் தாள முடியாமல் அழுதாள்.
வைஷாலி திக்பிரமை பிடித்தவள் போல அமர்ந்திருந்தாள்.

“குழந்தையைக் கலைக்கச் சொன்னான். நான் முடியாதுன்னு பிடிவாதமா மறுத்துட்டேன். இதுக்கு மேல என்னைத் தொல்லை

செய்தா எல்லாத்தையும் என் வீட்டில் சொல்லிடுவேன்; உனக்கு வரும் இந்தப் பணம், அந்தஸ்து எதுவும் இல்லாமல் போயிடும்னு மிரட்டினேன். கோபத்தோடு வெளியே போனான்.

சரி, கொஞ்சம் பயந்து போயிருக்கான்னு நினைத்தேன். ஆனால், அவன் ஒரு திருந்தாத ஜென்மம்னு எனக்குப் புரியாமலே இருந்தது. கண்மண் தெரியாம குடிச்சிட்டு வந்து, சண்டை போட்டான். என்னையும், விக்ரமையும் சேர்த்து வச்சி கேவலமா பேசினான்.

இதுக்கு மேல தாங்க முடியாதுன்னு அவனை ஓங்கி ஒரு அறை விட்டேன். தள்ளாடிக் கீழே விழுந்தான். என் கோபம் கொஞ்சம் கூட குறையல… ஆனாலும் என்னைக் கட்டுப்படுத்திகிட்டேன். இதுக்கு மேல பொறுக்க முடியாதுன்னு வீட்டை விட்டுக் கிளம்பி வெளியே வந்த என்னை பின்னாலிருந்து எட்டி உதைச்சான்.

அந்த நிமிஷத்தோடு எல்லாமே முடிஞ்சி போச்சு. என் குழந்தை, என் வாழ்க்கைக்கு ஆதாரம்னு நான் நினைச்ச என் குழந்தை… என்னால காப்பாத்த முடியாமல் போச்சு வைஷாலி… என் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் கொடுக்கும்னு நான் நினைச்ச என் குழந்தை… போச்சு… எல்லாமே போச்சு” என்றவள், வயிற்றைப் பிடித்துக்கொண்டு தாள முடியாமல் அழுதாள்.

வைஷாலி கண்களில் கண்ணீர் வழிய, “அக்கா!” என்று அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

மெல்ல சமாதானமடைந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள். “பாசத்துக்கும், காதலுக்கும் வித்தியாசம் தெரியாத அந்த மிருகத்தோட ஆத்திரம், என்னை அந்தக் கதிக்கு ஆளாக்கியும் அடங்கல. விக்ரமுக்கு

போன் செய்து கண்டதையும் பேசி, உன் குழந்தையை இல்லாமல் பண்ணிட்டேன்னு வாய்க்கு வந்ததையெல்லாம் பேசினான்.

அவன் என்னவோ ஏதோன்னு எங்க வீட்டுக்குத் தகவல் சொல்ல, எல்லோரும் வந்து பார்த்த போது, எங்க ப்ளாட்டில் இருப்பவங்க உதவியோட, நான் ஹாஸ்பிட்டல்ல இருந்தேன். என்ன நினைச்சானோ இவங்க வரும் போது அவன் எங்கேயோ தலைமறைவா போய்ட்டான்.

ஊருக்குப் போயிருந்த மாமனார், மாமியார் திரும்பி வந்து எங்க தாத்தா காலில் விழாத குறையா மன்னிப்பு கேட்டாங்க. அதுவும், எனக்கு வயத்துல அடிபட்டதால் இனி குழந்தை பிறக்க வாய்ப்பில்லைன்னு சொன்னதில், எங்க தாத்தா ரொம்பவே உடைஞ்சி போயிட்டார். ஆசை ஆசையா வளர்த்த பேத்தியோட நிலைமை இப்படி ஆகிடுச்சேன்னு உள்ளுக்குள்ள மருகிப் போனார்.

இதுக்கு நடுவில் விக்ரம், சந்தீப்பை தேடிக் கண்டுபிடிச்சி அவனைப் பின்னி எடுத்திட்டான். ரொம்ப நல்லவன் மாதிரி என்னிடம் வந்து மன்னிப்பு கேட்டான் சந்தீப். அப்போவே இனி இவனோடு வாழக்கூடாதுன்னு முடிவு பண்ணிட்டேன். வீட்டுக்கு வந்ததும் முதல் வேலையா அவனுக்கு டைவர்ஸ் நோட்டீஸ் அனுப்பினேன்.

எல்லோருமே என்னைக் கொஞ்சம் பொறுமையா யோசிக்க சொன்னாங்க. என் வாழ்க்கைதான் இப்படி முடமாகிப் போச்சு என் மகளோட வாழ்க்கையும் இப்படி அழியனுமான்னு எவ்வளவோ சொன்னாங்க. ஆனால், நான் அங்கே போனால் திரும்ப நீங்கள்ளாம் என்னைப் பார்ப்பீங்களான்னு சந்தேகம் தான் அதுக்கு உங்களுக்கெல்லாம் சம்மதம்னா நான் அவனோடு வாழ தயார்னு சொன்னேன்.

அதுக்குப் பிறகு யாரும் எதுவுமே பேசலை. ஒரு வருஷம் முடிந்ததும் டைவர்ஸ் கிடைச்சது. விக்ரம் என்னை வற்புறுத்தி ரத்னகிரி கூட்டிட்டுப் போனான். பிஸினஸ் கத்து கொடுத்தான். என்னை போஸ்டல்ல எம்.பி.ஏ. படிக்கச் சொன்னான். கவுன்சலிங் கூட்டிட்டுப் போவான். எனக்காக யோகா க்ளாஸ் ஏற்பாடு செய்தான்.

எனக்காக அவனோட நேரத்தை பெருமளவு செலவழிச்சான். அவனால் தானே சந்தீப் எனக்கு அறிமுகமானான்னு அவனுக்குள்ள ஒரு குற்றவுணர்ச்சி இருந்திருக்கு. இது என் தலைவிதி, உன்னால் எதுவும் இல்லைன்னு அவனிடம் சொன்னேன். ஆனாலும் அவன் சமாதானமாகலை. அவனுக்காகவே நான் போராடி இதிலிருந்து மீண்டு வந்தேன்.

அப்பாவோட ஃபாக்டரி, ரிசார்ட்னு என்னோட கவனத்தைத் திருப்ப ஆரம்பிச்சேன். என்னோட சந்தோஷம் தான் தங்களோட சந்தோஷம்னு நினைச்ச என் குடும்பத்துக்காக மாறினேன். தாத்தா, பாட்டி ரெண்டு பேரும் ஒருத்தர் பின்னால் ஒருத்தர் போனதற்கு அப்புறம், நானும் அம்மாவும் சந்தீப் இருக்கும் அதே கேம்பசில் அவனுக்கு எதிர் ப்ளாட்டில் இப்போ இருக்கேன்.

வைஷாலி அவளை அதிசயமாக பார்த்தாள்.

சிறு முறுவலுடன், “விக்ரம் தான் காரணம். தப்பு செய்த அவனே தைரியமாக இருக்கும் போது நீ ஏன் பயப்படுற? அவன் உன்னிடம் வாலாட்ட மாட்டான். அதுக்கு நான் கேரண்டின்னு தைரியம் கொடுத்தான். ஒரு குருட்டுத் தைரியத்தில் தான் அந்த வீட்டுக்குப் போனேன்.

ஆரம்பத்தில் அவனைப் பார்க்கும் போதும் அந்த மாடிப்படியைப் பார்க்கும் போதும் விக்ரமை ஆயிரம் முறை திட்டியிருக்கேன். ஆனால், எல்லாத்தையும் ஒதுக்கி வச்சிட்டு பார்க்கும் போது, அவனிடம் நான் பட்ட அவமானங்களும், பேச்சுக்களும் நினைவு வரும் போது, உள்ளுக்குள் ஒரு எரிமலையே பொங்கும்.

நம்மை அத்தனைக் கேவலமாக நடத்தினானே, இவன் எதிரில் நாம நிச்சயம் வாழ்ந்து காட்டணும் என்ற வைராக்கியம் வரும். உழைச்சேன், என் ஆழ்மனத்திற்குள் புதைந்திருக்கும் அத்தனைக் கசடுகளையும் தூக்கி எறிஞ்சேன். இன்னைக்கு அந்த சந்தீப் நிமிர்ந்து பார்க்கும் உயரத்தில் இருக்கேன்.

இப்போல்லாம் அவன் என் கண்ணில் பட்டாலும் எனக்கு அவன் யாரோ ஒரு மூணாவது மனுஷனா தான் தெரியறான். அவனை மன்னிக்கும் பக்குவம் வரலைனாலும், மறக்கும் மனசு வந்தாச்சு” என்று ஆழ மூச்செடுத்தாள்.

சீமாவின் விஸ்வரூபத்தைக் கண்டு சற்று நெகிழ்ந்து தான் போயிருந்தாள் வைஷாலி.

“என்ன வைஷாலி? ரொம்ப ஹெவியா இருந்ததா?” என்று அத்தனை நேரம் பார்த்த சீமா வேறு யாரோ என்பது போலப் புன்னகைத்தபடி நின்றிருந்தாள்.

இத்தனைச் சோகத்தையும் தன்னுள் மறைத்துக்கொண்டு, எப்போதும் மலர்ந்த முகத்துடன் வளையவரும் இவளுக்கு முன் தான் எம்மாத்திரம்’ என்று எண்ணியவள் வியப்புடன் அவளைப் பார்த்தாள்.

“எல்லாத்தையும் மறந்துட்டேன்னு சொல்றீங்க... ஆனா, ஏன்... நீங்க...” தயங்கியபடி நிறுத்தினாள்.

“ஏன் இன்னொரு கல்யாணம் செய்துக்கலைன்னு கேட்கறியா...? நிச்சயமா செய்துப்பேன். என்னைப் புரிஞ்சிகிட்டு, என்னைப் பரிபூரணமா நேசிக்கும் ஒருவன் வந்தால் நிச்சயம் கல்யாணம் செய்துப்பேன். இதுவரைக்கும் தனக்குன்னு எதுவுமே கேட்காத என்னோட அம்மாவுக்காக நிச்சயம் செய்துப்பேன்.

தெரியுமா, தளிர் அத்தை தான் எனக்கு ரெண்டாவது கல்யாணம் செய்வதில் ரொம்பத் தீவிரமா இருந்தாங்க. விக்ரம் மட்டும் இல்லைனா, இதில் எதுவுமே நடந்திருக்காது. எனக்கு எல்லா விதத்திலும் உதவியாக இருந்தது அவன்தான். பாசம் காட்டுவதில் ஒரு அண்ணனா, அறிவுரை சொல்வதில் நல்ல நண்பனா எனக்கு நல்ல வழிகாட்டியா இருந்தது அவன் தான் வைஷாலி. எல்லாத்துக்கும் மேல அவன் நல்ல மனிதன்.

அவனை நம்பினா அவங்களுக்காக உயிரையும் கொடுப்பான்; ஏமாத்தினா நிச்சயம் அவங்களை மன்னிக்கவே மாட்டான். உன்மேல அவன் உயிரையே வச்சிருக்கான் வைஷாலி. அவனைப் புரிஞ்சிக்குவன்னு நம்பறேன்” என்றவள் தீர்க்கமான பார்வையை அவள் மீது செலுத்தினாள்.

கண்கள் தளும்ப, “அக்கா!” என்று அவளது தோளில் சாய்ந்து கொண்டாள் வைஷூ.

மெல்ல புன்னகைத்தபடி அவளது தலையை வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தாள் சீமா.

அத்தியாயம் - 54

“வாங்க… வாங்க! பிரயாணமெல்லாம் சௌகர்யமா இருந்ததா?” பதிண்டாவிலிருந்து திரும்பி வந்த சம்மந்தியிடம் விசாரித்தார் ரவீந்தர்.

“ரொம்பப் பிரமாதம் சம்மந்தி” மனநிறைவுடன் சொன்னார் சங்கரன்.

அமைதியாக நின்றிருந்த வைஷாலியிடம், “என்னம்மா நம்ம வீடு எப்படியிருக்கு? உனக்குப் பிடிச்சிருந்ததா?” வாஞ்சையுடன் கேட்டார் ரவீந்தர்.

“ரொம்ப பிடிச்சிருந்தது மாமா. சுத்தமான காத்து, இயற்கை சூழலோட இருக்கும் வீடு, பாசத்தை பொழியற ஜனங்க. எனக்கு அங்கேயே இருக்கணும் போல இருந்தது” என்றாள் புன்னகையுடன்.

அன்னையின் கரத்தைப் பிடித்தபடி, அவரருகில் அமர்ந்திருந்த விக்ரம், ஒரு கேள்விக்கு ஒன்பது பதிலைச் சொல்லும் மனைவியை, ஆழப்பார்த்துக் கொண்டிருந்தான்.

சங்கரனும், தேவிகாவும் கூட ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ‘ஆக அவளது கோபமெல்லாம் தங்கள் மீது தான். புகுந்த வீட்டில் பெரியவர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுக்கிறாளே, அதுவே உத்தமம்’ என்று நிம்மதியடைந்தனர்.

காலை உணவை முடித்துக்கொண்டு அனைவரும் வந்து அமர, விக்ரம்

மெல்லப் பேச்சை ஆரம்பித்தான். இங்கிருக்கும் கம்பெனிக்குத் தகுதியான ஆளை அமர்த்திவிட்டதாகவும், தந்தை மேற்பார்வையில் இனி கம்பெனி இருக்கும் என்பதால், தான் மறுநாள் வைஷாலியுடன் பூனா செல்ல முடிவெடுத்திருப்பதாக சொன்னான்.

”என்ன மாப்பிள்ள திடீர்னு இப்படிச் சொல்லிட்டீங்க? நீங்க ரெண்டு பெரும் இங்கே இருப்பீங்கன்னு இல்ல நினைச்சோம்... அதுவுமில்லாமல், கல்யாணமாகி...” என்ற தேவிகா, செந்தளிரை எப்படிச் சொல்வதென தெரியாமல் பார்க்க, சங்கரன் இடைபுகுந்தார்.

“மாப்பிள்ள எது செய்தாலும் விஷயமிருக்கும்” மென்குரலில் மனைவியிடம் சொன்னவர், “முதல்லயே தெரிஞ்சிருந்தா நாங்க யாராவது கூட வந்திருப்போம்... ஏற்கெனவே போட்டது போட்டபடி, ஊருக்கு வந்தாச்சு... அதனால தான்” என்றார் சமாளிப்பாக.

“விக்ரம் முதலிலேயே என்னிடம் சொன்னான் சம்மந்தி. நான் தான் சொல்ல மறந்துட்டேன்” என்றார் ரவீந்தர்.

“இந்த ஃபார்மாலிட்டீஸ் எல்லாம் வேண்டாம் மாமா. நீங்களெல்லாம் எப்போ முடியுமோ வாங்க. நானும் மாசத்துக்கு ஒரு முறை வந்துட்டுதானே இருக்கேன்” என்றான்.

சற்றுத் தயங்கிய சங்கரன், “அதுவும் சரிதான் மாப்பிள்ளை. அப்போ நாங்க கிளம்பறோம். ஊருக்குக் கிளம்பும் முன்ன, ரெண்டு பேரும் வீட்டுக்கு வந்துட்டுப் போங்க” என்றார்.

நடப்பதையெல்லாம் வேடிக்கை பார்த்தபடி, அமைதியாக அமர்ந்திருந்தாள் வைஷாலி.

“வைஷு! நீ வேணா, உன் அம்மா அப்பாவோடு ஒரு நாள் இரேன்” என்றார் செந்தளிர்.

ஓரக்கண்ணால் விக்ரமை பார்த்தாள். அவனும், அவளது பதிலுக்காக அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“இல்லத்தை… நான் நம்ம வீட்டிலேயே இருக்கேன்” என்றாள்.

தேவிகாவின் முகம் சற்று வாடினாலும், ‘நம்ம வீடு’ என்ற மகளது விளிப்பில், அகம் மகிழ்ந்து தான் போனார். செந்தளிரும் உள்ளுக்குள் இருந்த சிறு சஞ்சலமும் விலகிட, மனம் நிறைவுடன் பார்த்தார்.

“உன் வீட்டுக்காரன் என்ன சொல்வான்னு யோசிக்கிறியா?” என்று சிரித்தார் செந்தளிர்.

மனைவியின் பதிலில் புளங்காகிதமடைந்த விக்ரம், “பரவாயில்லை ஷாலு! கிளம்பு. உனக்கு வேணுங்கற திங்க்ஸையும் எடுத்துக்கணும் இல்ல. நான் நாளைக்கு வந்து உன்னை அழைச்சிக்கிறேன். விட்டுட்டுல்லாம் போக மாட்டேன் பயப்படாதே” என்றான்.

அனைவரும் சிரித்துவிட, வைஷாலி கீழ் உதட்டை அழுந்த கடித்தாள். விக்ரமின் பார்வை லேசாகச் சிவந்திருந்த, அவளது கன்னக் கதுப்பினில் நின்றது.

****

அலுவலகத்திற்கு போனில் உத்தரவு பிறப்பித்துக் கொண்டும், திருமணத்திற்கு வாழ்த்துத் தெரிவித்துக் குவிந்திருந்த

மின்னஞ்சல்களுக்கு பதிலளித்தபடியும், இருந்த விக்ரமின் நடவடிக்கைகளை, கவனித்தபடியே அமர்ந்திருந்தாள் வைஷாலி.

இந்த ஐந்து நாட்களாகத் தான் கண்ட விக்ரமிற்கும், தற்போது இருப்பவனுக்கும் எத்தனை வேறுபாடு? அலுவலக நேரத்தில், அவன் எப்படியிருப்பான் என்று அறிந்திருந்த போதும், இப்போது தான் பார்க்கிறாள்.

இதற்கு முன்பே அவனை அலுவலகத்திலும், கல்லூரியிலும் பார்த்திருந்தாலும், இத்தனை உன்னிப்பாக கவனிப்பது இதுவே முதன்முறை.

‘இவனது நறுக்குத் தெறித்தார் போன்ற பேச்சின் தோரணையிலேயே, எதிரிலிருப்பவர் வாயைத் திறக்கக் கூடப் பயப்படுவான் போலும்’ என்று எண்ணிக்கொண்டாள்.

‘இனி நாளெல்லாம் இவனது அருகாமையையும், பேச்சையும் ஏற்கப் பழகிக் கொள்ள வேண்டும். அதுவும் தனிமையில்…’ எண்ணம் தோன்ற உடலில் லேசான பயம் தோன்றியது.

ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தாள். தனது லேப்டாப்பில் பிசியாக இருந்தான். திடீரென இதயம் படபடவென அடித்துக் கொள்ள, சற்று அசௌகர்யமாக உணர்ந்தாள். ஏசி காரிலும் புழுக்கமாக்க இருப்பதைப் போல, முத்து முத்தாக வியர்வை அரும்பியது.

நெற்றியைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தவளை, “ஷாலு! ஆர் யூ ஓகே!” என்று அவளது வலது கரத்தைப் பற்றினான்.

“ஆங்…!” என்றபடி நிமிர்ந்தவளை, வியப்புடன் பார்த்தான்.

“ஹே! என்னாச்சு உனக்கு? இப்படி வியர்க்குது… உடம்பை ஏதாவது செய்யுதா?” ஆதூரத்துடன் கேட்டான்.

“இ..ல்ல… தலைவலிக்குது. தூங்கினா சரியாகிடும்” என்றாள் சமாளிப்பாக.

“வேற ஒண்ணுமில்லையே…!” என்று அவளைக் கூர்ந்து பார்த்தான்.

இல்லை என மெல்ல தலையசைத்தாள்.

“ஓகே!” என்று பிடித்திருந்த கையைத் தட்டிக்கொடுத்தவன், “நீ இந்தப் பக்கம் வந்திடு. அந்தப் பக்கம் கொஞ்சம் வெயில் வருது” என்றவன், காரை நிறுத்தி மறுபுறத்திற்கு மாறி அமர்ந்தான்.

அவனது கரிசனம், வைஷாலிக்கு ஆறுதலாவும், அதேநேரம் அவஸ்தையாகவும் இருந்தது.

“தேங்க்யூ” என்றாள் உள்ளடங்கிய குரலில்.

புன்னகைத்தவன், “இந்த டேப்ளட்டை போட்டுட்டுத் தூங்கு” என்று ஃபர்ஸ்ட் எய்ட் பாக்ஸிலிருந்து, மாத்திரையை எடுத்துக் கொடுத்தான்.

அமைதியாக வாங்கிப் போட்டுக்கொண்டாள். ‘நேரங்கெட்ட நேரத்தில், இந்த அழுகை வந்து தொலைக்கப் போகிறது’ என்று ஒரு பக்கமாக திரும்பி அமர்ந்து, கண்களை மூடிக்கொண்டாள்.

‘உன்மேல, அவன் உயிரையே வச்சிருக்கான் வைஷாலி. அவனைப் புரிஞ்சிக்க முயற்சி பண்ணு...’ என்ற சீமாவின் குரல், இப்போதும் அவளது காதில் ஒலித்தது.

****

தனது மனத்தில் மறைத்து வைத்திருந்த உண்மையையெல்லாம் வைஷாலியிடம் மனம்விட்டுப் பேசிவிட்டுச் சென்ற பின்னர், உறக்கம் அவளை விட்டுத் தூர விலகிப் போனது.

பெரும் மலை போன்ற துயரமான கடந்த காலத்தை, தைரியமாகக் கடந்து வந்த சீமாவின் கதையைக் கேட்ட வைஷாலுக்கு, அதன்முன்பு, தனது துயரமெல்லாம் சிறு கடுகைப் போலவே தோன்றியது.

வாழ்க்கைத் துணையை இழப்பது கொடுமைதான். ஆனால், கணவன் இருந்தும் இல்லாமல் போன பிறகு, எல்லாவற்றுக்கும் காரணமானவனுக்கு எதிரிலேயே, ஒருத்தி ஜெயித்து வர வேண்டுமென்றால், அதற்கு எத்தனை வைராக்கியமும், உத்வேகமும் வேண்டும்!

அதுமட்டுமா? அதற்குத் தேவையான ஆறுதலும், அரவணைப்பும் அந்தப் பெண்ணுக்கு எத்தனை அவசியம். சீமா துவண்ட போதெல்லாம், தேற்றி வெளிக் கொணர, விக்ரம் என்ன பாடுபட்டிருப்பான்?

சீமாவுக்கு மட்டுமா...? விக்ரம் உனக்காகப் பாடுபடவில்லையா?’ என்று கேட்ட மனசாட்சிக்குப் பதில் சொல்ல முடியாமல் தடுமாறினாள் வைஷாலி.

விடியவிடிய உறக்கம் வராமல் அறைக்குள்ளேயே உலாவிக் கொண்டிருந்தாள். சீமாவிடம் மனம் விட்டுப் பேசவேண்டும் போல இருந்தது. என்னவோ, அவளிடம் பேசினால், தனது அத்தனைப் பிரச்சனைகளுக்கும் தெளிவு பிறக்கும் என்ற நம்பிக்கை, அவளது மனத்தில் துளிர்விட்டது.

விடிந்தும் விடியாததுமாகக் குளித்துவிட்டு, சீமாவின் அறைக்கு ஓடினாள்.

யாரது இந்த நேரத்தில் கதவைத் தட்டுவது என்று எழுந்து வந்தவள், வைஷாலியைக் கண்அதுமே விஷயத்தைப் புரிந்துகொண்டாள்.

"வைஷாலி! உள்ளே வா" என அழைத்தாள்.

தயங்கிக் கொண்டே சோஃபாவில் அமர்ந்தவள், "அக்கா! சாரி... உங்க தூக்கத்தை டிஸ்டர்ப் பண்ணிட்டேன்" என்றாள்.
சிறு புன்முறுவலுடன், "ஒரு அரைமணி நேரம் வெயிட் பண்றியா? வந்திடுறேன்!"

'ம்' என்று தலையை ஆட்டினாள் வைஷாலி.

காஃபியை ருசித்தபடி, "சொல்லு! என்ன விஷயம்?"

"அது..." பேசவேண்டும் என்று வந்துவிட்ட வைஷாலியால், ஏனோ பேசவே முடியவில்லை. தயக்கமும், தவிப்புமாக இருந்தாள்.

"ஐ கேன் அண்டர்ஸ்டேண்ட் வைஷாலி! கொஞ்சம் சிரமமாக விஷயம்தான். பட்... நீ அதை ஃபேஸ் பண்ணித் தான் ஆகணும்.

ரியாலிட்டி இதுதான். நடந்ததையே நினைத்து வருத்தப்படுறதில் என்ன இருக்கு சொல்லு? மாற்றம் உடனே வராது. ஆனால், மாற்ற முடியாதது எதுவுமே இல்ல.

அதுக்குத் தேவை, கொஞ்சம் பொறுமை; அன்பு; இதுக்கும் மேல, உங்க ரெண்டு பேரோட மனசையும் புரிஞ்சிக்கிற சக்தி. எனக்கொரு பதில் சொல்லு. அன்னைக்கு ஒரு நாள், விக்ரமை உனக்குப் பிடிக்குமான்னு... உன்கிட்ட கேட்டேன். நினைவிருக்கா!"

நிமிர்ந்து பார்த்தவள், கலங்கிய விழிகளுடன், "ம்" என்றாள்.

"நீயும் ரொம்பப் பிடிக்கும்னு சொன்ன..."

"ஆமாம்..." என்றாள் மென்குரலில்.

"அப்போ... இப்பவும் அவனைப் பிடிச்சிருக்கா...?

"அது..." என்று மென்று விழுங்கியவள், மெல்ல, "பிடிக்கும்..." என்றாள்.

"ஹப்பா! பிராப்ளம் சால்வ்ட்" என்றவள் உற்சாகமாக.

புரியாமல் சீமாவைப் பார்த்தாள் வைஷாலி.

"எனக்கும் விக்ரமை பிடிக்கும். ஆனா, அதுக்குப் பேர் பாசம். உனக்கு அவன் மேஎல இருக்கறது அன்பு. விருப்புக்கும், வெறுப்புக்கும் நடுவில் எப்படி நூலிழை அளவு வித்தியாசமோ... அன்புக்கும், காதலுக்கும் கூட அதே நூலிழை அளவு வித்தியாசம் தான். நான் ஒரு கேள்வி கேட்கிறேன்... என்னைத் தப்பா நினைக்காதே"

“கேளுங்க…”

“சப்போஸ்… ராகவை நீ காதலிக்காமல், விக்ரமை சந்திச்சு… அவன் உன்னிடம் பிரபோஸ் பண்ணியிருந்தா… உன்னோட பதில் என்னவாக இருக்கும்?” என்று கேட்டாள்.

வைஷாலியின் முகம் லேசாகச் சுருங்கியது.

“வைஷாலி! நான் உன்னோட மனசை உனக்குப் புரியவைக்கத் தான் சொல்றேன். இதில் இரெண்டு பேரையும் கம்பேர் பண்ணனும்ற எண்ணம் எனக்குச் சுத்தமாக இல்லை. கமான் சொல்லு…” என்றாள் விடப்பிடியாக.

வைஷாலிக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது. பட்டென எழுந்தவள், “வேண்டாங்க்கா… நாம இன்னொரு நாளைக்குப் பேசலாம்” என்று அங்கிருந்து செல்ல முயன்றவளை இழுத்து அமரவைத்தாள் சீமா.

“பேச வந்தாச்சு எல்லாத்தையும் பேசிடலாம். மனசுக்குள்ளே வச்சி அதையே யோசித்து நேரத்தையும், வாழ்க்கையையும் வீணாக்கறது தான் மிச்சம். பேசு வைஷாலி…” என்றாள் அழுத்தமாக.

பேசாமல் அழுதுகொண்டிருந்தவளை முறைத்துப் பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தாள் சீமா.

“நான் சொல்லட்டுமா? அந்தச் சந்தர்ப்பத்தில் விக்ரமை கொஞ்சமும் தயங்காமல் நீ ஏத்துட்டு இருந்திருப்ப…” என்ற சீமாவை திகைப்புடன்

பார்த்தாள்.

“நிச்சயமா இதுதான் உன் மனசுல இருக்கு. அப்படி இல்லைனா, நான் கேட்ட கேள்விக்கு இல்லைன்னு யோசிக்காமல் ஒரு பதிலைச் சொல்லிட்டுப் போயிருக்கலாமே…”

வறண்ட இதழ்களை நாவால் ஈரப்படுத்திக் கொண்டாள் வைஷாலி.

“உண்மை என்னைக்கும்மே கசக்கத்தான் செய்யும். உன்னைக் காயப்படுத்தனும்னோ, வருத்தப்பட வைக்கனும்னோ இதைச் சொல்லல. நிதர்சனத்தை நீ புரிஞ்சிக்கன்னு சொல்றேன்.

விதியை நம்ம புத்தியால கொஞ்சம் வளைச்சிக்கலாமே தவிர, மாத்தி எழுத முடியாது. சில விஷயங்கள் ஏன் நடக்குது? எதுக்கு நடக்குதுன்னு காரணம் சொல்ல முடியாது. நடக்கறதெல்லாம் நல்லதுக்குன்னு நினைச்சிக்க வேண்டியது தான்.

நீ நல்லா இருக்கணும்னு தான் உன்னைச் சுத்தி இருக்கும் எல்லோருமே ஆசைப்படுறோம். அதுக்காக உன்னைச் சில விஷயங்களில் போர்ஸ் பண்ணவ்வும் வேண்டி இருந்தது. இதுமாதிரி அக்கறையான சொந்தங்களும். நட்பும் எல்லோருக்கும் கிடைக்காது வைஷாலி. அந்த வகையில் நாம ரெண்டு பேருமே அதிர்ஷ்டசாலிகள்.

எனக்காக இவ்வளவு யோசித்துச் செய்த விக்ரம், விருப்பப்பட்டு கல்யாணம் செய்துகிட்ட உனக்காக யோசிக்க மாட்டானா… சொல்லு? நீயும் அவனிடம் கொஞ்சம் மனம்விட்டுப் பேசு. தப்பில்லை.

கல்யாணத்துக்குச் சம்மதம்னு சொன்ன போதே நீ நாலையும்

யோசித்துத் தானே சொல்லியிருப்ப. அன்னைக்கு இருந்த தைரியம், இன்னைக்கு அதை நேரடியாக சந்திக்கும் போது இருக்கணுமில்ல... இதுக்கு மேல சொல்ல எதுவும் இல்லை. உன்னை நீயே சுய பரிசோதனை செய்து புரிஞ்சிக்கப் பார். இப்போ உன்கிட்ட சில விஷயங்களை நான் ஓப்பனா சொல்ல முடியாது. நேரமும், காலமும் வரும் போது, உனக்கே தெரியும்."

அவளது மனத்தை அவளுக்கே புரியவைக்க எடுத்துச் சொன்ன சீமா, கூர்மையாக வைஷாலியைப் பார்த்தாள். 'குழம்பிட்டா, இனி யோசிப்பாள்' என்று நினைத்து, அங்கிருந்து வெளியேறினாள்.

சீமா சொன்னதை யோசிக்கும் போது, சில விஷயங்களை ஏற்றுக்கொள்ள மனம் சங்கடப்பட்டாலும், எல்லாமே சரி என்பதாகத் தான் தெரிந்தது வைஷாலிக்கு.

அதன் முதல் படிதான் மாமனார் மாமியாரிடம் சுமுகமாக அவள் பேச முயன்றது. பூனே கிளம்பும் நேரம் அன்னையின் மடியிலும், தந்தையின் தோளிலும் சாய்ந்து அழ முடிந்தது.

ஆனால், விக்ரமிடம் மட்டும் நேராகப் பேச இன்னமும் தடுமாற்றம் தான்.
இதில் இவனிடம் மனம் விட்டுப் பேசுவது எப்படி? மிகப்பெரிய கேள்விக்குறி அவளது கண் முன்னே தோன்றியது. எல்லாவற்றையும் நினைத்து, பெருமூச்சு எழ, நிமிர்ந்து நேராக அமர்ந்தாள்.

அத்தியாயம் - 55

விக்ரமின் டியூப்ளெக்ஸ் அப்பார்ட்மெண்டை அடையும் போதே,

அவர்களுக்காக அவனது உறவினர்கள் சிலர், அவர்களை வரவேற்க காத்திருந்தனர்.

காரிலிருந்து இறங்கிய வைஷாலிக்கு அவர்களைப் பார்த்தது நினைவிலிருந்தும், என்ன உறவென்று தெரியவில்லை. “வாம்மா!” என்றவர்களைப் பார்த்து, ஒப்புக்குச் சிரித்து வைத்தாள்.

ஐந்தாவது ஃப்ளோரில் இருந்த அவர்களது பிளாட்டின் முன்பாக நிற்கவைத்து ஆரத்தி எடுத்து உள்ளே அழைத்துச் சென்றனர்.

வைஷாலி பூஜையறையில் விளக்கேற்றிவிட்டு வர, சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்த உறவினர்கள், இருவருக்கும் தனிமை கொடுத்து, இன்னொரு நாள் வருவதாகக் கூறிக் கிளம்பினர்.

விக்ரம் அவர்களை வழியனுப்பி வைக்கச் சென்றுவிட, வைஷாலி கலைநயத்துடன் இருந்த வீட்டை விழிகளால் அளந்தாள். சாதாரணமாகவே அழகாக இருந்த வீட்டை; பூந்தோரணங்களும், அலங்காரங்களும் மேலும் அழகாக்கிக் காட்டியது.

விசாலமான ஹால், டைனிங்குடன் கூடிய கிச்சன், கச்சிதமான பூஜையறை, ஒரு படுக்கையறை, இன்னொன்று மினி ஹோம் தியேட்டர் அறை’ எனக் கீழ் தளத்தில் அமைந்திருந்தது.

ஹாலை ஒட்டியிருந்த நீண்ட பால்கனியில் நின்றாள். படபடவென அவளது புடவைத் தலைப்பைப் பறக்கவிட்டு, அவளை உரசிச் சென்றது காற்று. வாகன இறைச்சல் இல்லாமல் அமைதியாக இருக்க, அதை அனுபவித்தபடி அமைதியாக நின்றிருந்தாள்.

கதவைத் திறந்து மூடும் சப்தம் கேட்டு, ஹாலுக்கு வந்தாள்.

“ஓ! இங்கே இருக்கியா? வீடு எப்படி இருக்கு? உனக்குப் பிடிச்சிருக்கா?” என்று அவளருகில் வந்து நின்றான்.

“ம், பிடிச்சிருக்கு” என்றாள் சிறு முறுவலுடன்.
அவளது மலர்ந்த முகத்தைப் பார்த்தே அகம் மகிழ்ந்து போனான்.

“உனக்கு முக்கியமான ரெண்டு பேரை இண்ட்ரடியூஸ் பண்ணணும்” என்றவன், “மனீஷ் பாய்...! இதர் ஆயியே” என்று அழைத்தான்.

ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவரும், அவரைவிட நான்கைந்து வயது மூத்தவராகத் தோன்றிய ஒரு பெண்மணியும் வந்தனர்.

“இவர்தான் மனீஷ்! நம்ம வீட்டுப் பொறுப்பு, வெளி வேலை எல்லாத்தையும் இதுவரைக்கும் இவர்தான் பார்த்துட்டு இருக்கார். இனி உன்னோட மேற்பார்வையில் பார்த்துப்பார். இவங்க சுனிதா தீதீ! மனீஷோட அக்கா. நம்ம வீட்டில் சமையல் டிபார்ட்மெண்ட் இவங்கதான்” என்றவன், “இவங்க தான் என்னோட மனைவி, வைஷாலி” என்று ஒருவருக்கொருவரை அறிமுகப்படுத்தி வைத்தான்.

“ரெண்டு பேருமே ரொம்ப ரிலையபுள். மொத்த வீட்டையும் இவங்க பொறுப்பில் விட்டுட்டுப் போறேன்னா பார்த்துக்கோ. நம்ம அனுமதி இல்லாமல் மேலே வரமாட்டாங்க” என்றான்.

அவன் சொல்வதையெல்லாம் காது கொடுத்து, கவனமாக கேட்டுக் கொண்டாள் வைஷாலி.

“சார்! டின்னர் ரெடியா இருக்கு. வந்தா சாப்பிடலாம்” என்றார் சுனிதா.

“இதோ ஒரு பத்து நிமிஷம்” என்றவனது மொபைல் ஒலிக்க, “ஷாலு! மேலே ரைட் சைட் மூணாவது ரூம். உன்னோட திங்க்ஸ் அங்கே இருக்கு” என்று சொல்லிவிட்டு, போனை எடுத்தான்.

பேசிமுடித்துவிட்டு, நிதானமாக அறைக்குள் வந்தவன், திடுக்கிட்டுப் போனான். சட்டெனத் திரும்பி வைஷாலியை பார்க்க, அவள் கலவரமான முகபாவத்துடன் நின்றிருந்தாள்.

“மனீஷ்!” என்று உரக்கக் குரல் கொடுத்தான்.

“சார்!” என்று பவ்யமாக வந்து நின்றார் அவர்.

“என்ன இதெல்லாம்?” என்று பாதியில் நின்றிருந்த அறையின் அலங்காரத்தையும், பூக்கூடைகளையும் சுட்டிக் காட்டிக் கேட்டான்.

“அம்மா போன் பண்ணாங்க சார். நீங்க வர்றதுக்குள்ள முடிக்கணும்னு நினைச்சேன்… நீங்க சாப்பிட்டுட்டு வர்றந்துக்குள்ள முடிச்சிடுறேன்” என்று கடமையாகப் பதில் சொன்னார்.

தான் ஒன்றை நினைத்துச் சொல்ல அவன் ஒருவாறாகப் புரிந்து கொண்டு பதிலளிப்பதைப் பார்த்து, கோபப்படுவதா, சிரிப்பதா என்று புரியாமல் நின்றான் விக்ரம்.

“முதல்ல இதையெல்லாம் இங்கேயிருந்து கிளியர் பண்ணுங்க” என்று கத்தினான்.

அடுத்த இரண்டு நிமிடங்களில் அங்கிருந்த பூக்கூடைகள் அகற்றப்பட, அறையில் சற்று மறைவாக இருந்த தடுப்பின் பின்னால் நின்றிருந்த வைஷாலியின் அருகில் சென்றான். அவளது முகத்திலிருந்து எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை அவனால்.

“சாரி ஷாலு! எனக்கு எதுவும்… ரியலி சாரி. உன்னோட ஃபீலிங்க்ஸ் எனக்குப் புரியுது…” என்று இறங்கிய குரலில் பேசினான்.

“பரவாயில்ல…” என்றவளது குரலும் இணக்கமாகவே இருக்க, விக்ரம் சற்று நிம்மதியானான்.

“நீ ரிஃப்ரெஷ் ஆகு… இதோ வரேன்” என்று போனுடன் வெளியேறினான்.

அவன் செல்லும் வேகத்தைப் பார்த்தே, இன்று மாமியாருக்கு மண்டகப்படி என்று புரிய, தனது வேலையைப் பார்க்கலானாள்.

ஐந்து நிமிடத்திற்குப் பிறகு, கதவு தட்டப்படும் ஓசை கேட்டு, கதவைத் திறந்தாள்.

“அஞ்சு நிமிஷம்…” என்றவன் குளியலறையை நோக்கி நடந்தான்.

“ஒரு நிமிஷம்… இங்கே என்னோட அறை எது?” என்றாள்

கால்களை எட்டிப் போட்டு நடந்தவன், சட்டென நின்று திரும்பிப் பார்த்து, “என்ன?” என்றான் கண்கள் இடுங்க.

அவனுக்குச் சரியாக கேட்கவில்லையோ என்றெண்ணி, “என்னோட அறை எதுன்னு கேட்டேன்” என்று சற்றுச் சப்தமாகச் சொன்னாள்.

உதடுகளை உள்ளாக மடக்கி, முறைத்தவன், “எதுக்கு கேட்கற?” என்றான்.

“என் டிரஸ்ஸை அடுக்கணுன்னு வார்ட்ரோபை திறந்தேன். அப்போதான் இது உங்க அறைன்னு தெரிஞ்சது. என் திங்க்ஸ் எல்லாம் இங்கே இருக்கவும், இது என்னோட அறைன்னு நினைச்சிட்டேன்” என்று புன்னகைத்தாள்.

இரு கைகளையும் இடுப்பில் வைத்துக்கொண்டு, அவளை மேலிருந்து கீழ்வரை பார்த்தவன், “நிறையக் கதை புக்ஸ், சினிமா பார்க்கும் பழக்கம் இருக்கா…?” என்றான் கிண்டலாக.

‘இதென்ன சம்மந்தா சம்மந்தம் இல்லாமல் ஒரு கேள்வி’ என்று நினைத்தவள், “கதை புக்ஸ் நிறையப் படிப்பேன்” என்றாள் இலகுவான குரலில்.

“அதான் இப்படி ஒரு கேள்வி கேட்கற” என்று கடுகடுத்தவன், “கஷ்டப்பட்டு உன்னைச் சம்மதிக்க வச்சி, கல்யாணம் பண்ணிட்டு வந்தது, நீ ஒரு அறையிலும், நான் ஒரு அறைலும் உட்கார்ந்து சுத்தி இருக்கும் நாலு சுவத்தையும் பார்க்கவா?” என்றான் கடுப்புடன்.

விரிந்த இமைகளை சற்றும் அசைக்காமல் அவனைப் பார்த்தாள்.

“இது என் அறை. இனி உன்னோட அறையும். அதாவது நம்ம ரெண்டு பேரோட அறையும் இதான் புரிஞ்சதா?” என்று உறுதியான குரலில் சொன்னான்.

செய்வதறியாமல், பாவமாக நின்றாள்.

“லெ.்.ப்ட் சைட்ல் இருக்கும் வார்ட்ரோபை நீ யூஸ் பண்ணிக்க. இப்போ கீழே போ… நாளைக்கு அந்த வேலையைச் செய்யலாம். நான் வந்திடுறேன்..” என்றவன், குளியலறைக்குள் புகுந்து கொண்டான்.

வைஷாலிக்கு எங்கேயாவது போய் முட்டிக் கொள்ளலாம் என்று இருந்தது. ‘தேவையா உனக்கு?’ என்று தன்னையே கேட்டுக்கொண்டாள். சற்று நேரத்திற்கு முன்பு தனக்காக யோசித்தவன், நிமிடத்தில் மாறிய அதிசயத்தை, ஜீரணிக்க முடியாமல் தவித்தாள்.

‘என்னோட அறை எது? என்று கேட்டதற்கே, இப்படி உருட்டி மிரட்டுபவன், இன்னும் நான் சொல்ல நினைப்பதைச் சொன்னால் என்ன செய்வான்? செய்வது பிறகு இருக்கட்டும். முதலில் விஷயத்தைக் காது கொடுத்துக் கேட்பானா?’ என்பதே அவளுக்குச் சந்தேகமாக இருந்தது.

சுவையான இரவு உணவு கூட அவளுக்கு ருசிக்காமல் போனது. சுனிதாவை பாராட்டியபடியே சாப்பிட்டுக் கொண்டிருந்த விக்ரமின் கவனமெல்லாம், மனைவியின் மீதே இருந்தது.

உணவை முடித்துக் கொண்டு அறைக்கு வந்தவன், “நீ தூங்கு எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு முடிச்சிட்டு வரேன்” என்று லேப்டாப்பை எடுத்துக் கொண்டு, தனது அறையோடு ஒட்டியிருந்த மற்றொரு அறைக்குள் சென்றான்.

விட்டால் போதுமென்று நினைத்தவளாக, படுக்கையில் விழுந்த வைஷாலி, உடல் அசதியில் விரைவாகவே தூங்கிப் போனாள்.

வேலைகளை முடித்துவிட்டு வந்தவன், விளக்கைக் கூட அணைக்காமல், குளிரால் தன்னைக் குறுக்கிக் கொண்டு அசந்து தூங்கும் மனைவியை இமைக்காமல் புன்னகையுடன் பார்த்தான்.

காலருகிலிருந்த பிளாங்க்கெட்டை இழுத்துக் கழுத்து வரை மூடிவிட, அந்தக் கதகதப்பை உணர்ந்தவளாக, கம்பளியைக் கைகளோடு சேர்த்துச் சுருட்டி கழுத்துக்கடியில் வைத்தபடி, மீண்டும் உறக்கத்தில் ஆழ்ந்தாள்.

‘தனி ரூம் வேணுமா? ஆனாலும், உனக்கு இத்தனை ஏத்தம் ஆகாதுடி’ என்று நினைத்துச் சிரித்துக் கொண்டே, விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தான். இப்போதைக்கு அவளது அருகாமையே அவனுக்கு பெரும் ஆறுதலாக இருக்க, வெகுநாட்களுக்குப் பிறகு நிம்மதியாக உறங்கினான்.

அத்தியாயம் - 56

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த வைஷாலிக்கு, எங்கேயோ மணியடிப்பது போல உணர்வு. ஹப்பா! போனை யாராவது எடுங்களேன்’ என்று நினைத்தவளுக்கு, விடாமல் ஒலிக்கும் தொலைபேசியைத் தூக்கிப் போட்டு உடைக்க வேண்டும் போலயிருந்தது.

சிரமத்துடன் போர்வையை விலக்கியவள், கண்களைத் திறக்காமலேயே கைகளால் துழாவி, ரிசீவரை எடுத்து, “ஹலோ!” என்றாள் சோம்பலுடன்.

”மேடம்! மணி பதினொன்னு. இன்னும் துயில் கலையலையா உங்களுக்கு?” - கிண்டலாகக் கேட்டான் விக்ரம்.

“என்னது?” என்று அலறியடித்துக் கொண்டு எழுந்தவள், விக்ரமை தேடினாள். அவன் இல்லை என்றதும், அடுத்து கடிகாரத்தைத் தேடினாள்.

“நான் காலைல ஏழு மணிக்கே ஆஃபிஸ் வந்துட்டேன். இப்போ உனக்கு டைம் என்னன்னு பார்க்கணுமா? அப்படியே திரும்பிப் பின்னால் பார்” என்றான்.

திரும்பியவள், அப்போது தான் மணி எட்டை நெருங்கிக் கொண்டிருப்பதைக் கண்டதும், “ஹும்!” என்று பெருமூச்சு விட்டாள்.

“நேரத்தை தெரிஞ்சுகிட்டியா? அப்படியே போய் வேலையை முடிச்சிகிட்டு, சாப்டுட்டு வந்து தூங்கு. அதுக்குத் தான் எழுப்பினேன். ஈவ்னிங் சீக்கிரம் வரப் பார்க்கிறேன்.”

“சரி” என்றாள் மெதுவாக.

“ம், பை” என்று போனை வைத்தான்.

‘இன்னைக்கு ஆஃபிஸ் போறேன்னு சொல்லவேயில்லையே…’ என்று நினைத்தபடி, ரிசீவரை வைத்துவிட்டு, சலிப்புடன் கட்டிலிலிருந்து இறங்கினாள்.

குளித்து முடித்துச் சாப்பிட்டுவிட்டு அறைக்கு வந்தவள் சிறிது நேரம் பால்கனியில் அமர்ந்திருந்தாள். தேவிகாவும், செந்தளிரும் ஒருவர் பின் ஒருவராக போன் செய்ய, அவர்களிடம் பேசி முடித்த போது மணி பதினொன்றாகி விட்டது.

பெட்டியிலிருந்த துணிகளை அடுக்க, வார்ட்ரோபைத் திறந்தவள், மலைத்து நின்றாள். மேலிருந்து கீழ்வரை ஒரு பக்கம் முழுவதும் கண்களை உறுத்தாத பல நிறங்களில், அழகழகான டிசைன்களில் புடவைகள், சுடிதார்கள் எனப் பிரித்து அடுக்கப்பட்டிருந்தது.

சற்று நேரம் அவற்றையே பார்த்தாள். பின்பு, காலியாக இருந்த மற்றொரு பக்கத்தில் கொண்டு வந்திருந்த உடைகளை அடுக்கி முடித்தாள். நேரம் ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்க, வேறு என்ன செய்வதென தெரியவில்லை.

சமைக்கவாவது செய்யலாமென்று நினைத்து, சென்ற போது சுனிதா எல்லா வேலைகளையும் முடித்து, பாத்திரங்களைத் சுத்தம் செய்து கொண்டிருந்தார். வைஷாலிக்கு சப்பென்றாகிவிட, மெல்ல அவரிடம் பேச்சுக் கொடுத்தாள். அவரும், தனது குடும்பத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டே வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சுனிதா, தனது கதைகளைச் சொல்லி முடித்த நேரம், அழைப்பு மணி ஒலிக்க, “நீங்க இருங்க தீதீ, நான் பார்க்கிறேன்” என்றபடி, கதவைத் திறக்கச் சென்றாள் வைஷாலி.

வாசலில் நின்றிருந்த விக்ரமைக் கண்டதும், அனிச்சை செயலாக அவளது முகம் மலர, “ஈவ்னிங் தான் வருவேன்னு சொன்னீங்க?” என்றாள் சிரிப்புடன்.

“அப்படிச் சொன்னதால தானே, இப்படி ஒரு ரியாக்ஷனை உன் முகத்தில் பார்க்க முடியுது” என்றவன், அவளது மூக்கை நிமிண்டிவிட்டுச் சென்றான்.

சட்டென பின்னால் திரும்பிப் பார்த்தபடி, மூக்கைத் தடவிவிட்டுக் கொண்டாள்.

“இங்கே இருக்கவங்களுக்கு இங்கிதம் தெரியும்…” அவளது காதருகில் சொல்லிவிட்டு, தங்கள் அறை நோக்கிச் செல்பவனைப் பார்த்தாள்.

நிலைகொள்ளாமல் ஹாலுக்கும், சமையலறைக்கும் நடந்தவளை, சுனிதா கண்டுகொள்ளாமல் தனது காரியத்தில் கண்ணாக இருந்தார். ‘அறைக்குச் சென்றவன் அவனாகக் கீழே வருவான்’ என அவள் நினைத்துக் கொண்டிருக்க, அவன் வருவது போலத் தெரியவில்லை.

இருப்புக் கொள்ளாமல், எழுந்து அறை நோக்கி நடந்தாள். கதவைத் தட்ட, “வா ஷாலு!” அவனது அனுமதி கிடைக்க, உள்ளே நுழைந்தாள்.

கட்டிலில் தலையணையை நிமிர்த்தி வைத்துச் சாய்ந்து அமர்ந்திருந்தான். உடலை இருக்கிப் பிடித்த பனியனுடன் அமர்ந்திருந்தவனைக் கண்டதும், அவளுக்குச் சற்றுப் படபடப்பாக இருந்தது.

அவனை நேராகப் பார்க்காமல், “சாப்பிட வரீங்களா?” என்றாள்.

கைக் கடிகாரத்தைப் பார்த்தவன், “டைம் ஆகலையே… அதோட, இன்னைக்கு நம்ம வீட்டுக்கு லஞ்சுக்கு சிலரை கூப்பிட்டிருக்கேன்” என்றான்.

“அப்படியா… முதல்லயே சொல்லியிருந்தா ஸ்பெஷலா ஏதாவது செய்திருக்கலாமே… சரி நான் போய் பார்க்கறேன்” என்றாள்.

“அதெல்லாம் தீதீகிட்ட சொல்லிட்டேன்” என்று, டீவி சேனல்களை மாற்றிக் கொண்டே அவளிடம் பேசினான்.

வைஷாலிக்கு உள்ளுக்குள் கடுகடுவென வந்தது. ‘வீட்டில் வேலை செய்பவரிடம் சொல்வதை, என்னிடம் சொல்லக் கூடாதா?’ மனத்திற்குள் ஆற்றாமை வர, விறுவிறுவென அறையிலிருந்து வெளியேறினாள்.

கையிலிருந்த ரிமோட்டை கீழே வைத்துவிட்டு, புன்னகையுடன் கைகளை உயர்த்திச் சோம்பல் முறித்தான் விக்ரம்.

காலிங்பெல் சப்தம் கேட்டும் வைஷாலி, சமையலறைக்குள் அசையாமல் நின்றிருந்தாள். சிறிதுநேர இடைவெளியில் மீண்டும் ஒலிக்க, வேறுவழியில்லாமல் சென்று கதவைத் திறந்தாள்.

வெளியே மணிகண்டனையும், தியாவையும் கண்டதும், வியப்பிலும், ஆச்சரியத்திலும், விழிகள் விரிய, “வாங்க மாமா!” என்றவள், “தியா குட்டி!” என்று குழந்தையை அள்ளி எடுத்துக் கொண்டாள்.

மணிகண்டன் உள்ளே வர, அப்போது தான் அவருக்குப் பின்னால் நின்றிருந்த ஜோதியைக் கவனித்தாள். முகத்தை லேசாகச் சுருக்கியவள், “வா ஜோதி!” என்று அழைத்துவிட்டு, குழந்தையுடன் உள்ளே சென்றாள்.

குழந்தையுடன் சிரித்த முகமாக நின்றிருந்த மனைவியைப் பார்த்தபடி வந்தான் விக்ரம். பரஸ்பர நல விசாரிப்பு நிகழ, குழந்தையுடன் சமையலறைக்குள் சென்றாள் வைஷாலி. பிஸ்கட் ஒன்றைக் கையில் கொடுத்துவிட்டு, ஸ்வீட்டை தட்டில் அடுக்கிக் கொண்டிருந்தாள்.

“அத்தை தியாக்கு…!” என்று தனக்கொரு ஸ்வீட்டை கேட்ட குழந்தையிடம், ”என் தங்கத்துக்கு இல்லாததா…” என ஒரு துண்டைக் கொடுத்து விட்டு, கன்னத்தில் முத்தமிட்டு நிமிர்ந்தவள், அங்கே ஜோதியைக் கண்டதும் தன் வேலையில் கவனமானாள்.

“நீ இன்னும் என் மேல் கோபமா இருக்கேன்னு தெரியும். ப்ளீஸ்டீ… எனக்கு நீ மட்டும் தான் ஃப்ரெண்ட். உன்னோட மனசை நான் காயப்படுத்தி இருக்கேன். ஆனால், அது எல்லாம் உன் மேல இருக்கும் அக்கறையில் தான் வைஷூ!” கண்ணீருடன் தோழியின் தோளைப் பற்றி, அவள் மீதே சாய்ந்து கொண்டாள்.

தோழியின் பாசத்தின் முன்னால், தனது கோபத்தை தொடரமுடியாத வைஷாலி, “ஜோ…!” என்ற அழைப்புடன், அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

அதன்பிறகு தோழிகளின் அளாவலும், கிண்டலுமாக ஒருவரையொருவர் வம்பிழுத்துக் கொண்டனர். குழந்தையின் மழலையில் சிறிதுநேரம் அனைவரும் தங்களை மறந்தனர்.

பின்னர், மதிய உணவும் முடிய, சாவதானமாக அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். மணிகண்டனுக்கு பகலில் சற்று ஓய்வெடுப்பது வழக்கமென்பதால், அவருக்கு கீழேயிருந்த விருந்தினர் அறை ஒன்றை ஒதுக்கிக் கொடுத்தாள் வைஷாலி.

வைஷூ, ஜோதியுடன் பேசிக்கொண்டிருக்க, அவர்களைத் தொந்தரவு செய்யாமல் விக்ரமிடம் விளையாடிக் கொண்டிருந்தாள் தியா குட்டி. ஜோதியுடன் பேசிக்கொண்டிருந்தாலும், அவ்வப்போது தியாவின்

சிரிப்பொலியில் ஈர்க்கப்பட்டு, குழந்தையைப் பார்த்தாள் வைஷூ.

ஜோதிக்கு இது பழக்கமான ஒன்று என்பதால் அவள் சாதாரணமாக பார்த்துக்கொண்டிருக்க, வைஷாலிக்கு அக்குழந்தையின் செயல்கள் அனைத்துமே பார்க்க அதிசயமும், ஆச்சரியமுமாக இருந்தது அவளுக்கு.

அதிலும், விரல் நுனியில் தன்னிடம் வேலை செய்பவர்களை ஆட்டி வைத்தபடி, கோட்டு சூட்டுடன் கம்பீரமாக உலா வரும் விக்ரம், தானும் குழந்தையுடன் குழந்தையாக மாறி விளையாடுவதைச் சுவாரஸ்யமாக பார்த்துக் கொண்டிருந்தாள்.

தனது பேச்சுக்கு எந்தவிதமான பதிலும் வைஷாலியிடமிருந்து வராததை உணர்ந்து, திரும்பி அவளைப் பார்த்தாள் ஜோதி. அவளது கவனமெல்லாம், விக்ரமின் மீதே இருப்பதை அறிந்தது, மெல்லப் புன்னகைத்துக் கொண்டாள். வைஷாலி, விக்ரமையும், தியாவையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

சிறிதுநேரம் அவளையே கண்காணித்துக் கொண்டிருந்த ஜோதி, “இதோ வரேன் வைஷூ!” என்றவள் தனது மொபைலை எடுத்துக் கொண்டு, அவர்களுக்குத் தனிமை கொடுத்து விலகிச் சென்றாள்.

தியாவுடன் பேசிக்கொண்டே திரும்பிய விக்ரம், தங்களையே பார்த்துக்கொண்டிருந்த வைஷாலியைப் பார்த்து, ‘என்ன’ என்பது போல, புருவத்தை உயர்த்திக் கேட்டான். அவளுக்குப் படபடவென வர, வேகமாக ‘ஒன்றுமில்லை’ என்று தலையாட்டினாள்.

முறுவலுடன், தோளில் அமர்ந்திருந்த குழந்தையுடன், அவளருகில்

நெருங்கி அமர்ந்தான். சட்டென விலகி அமர முயன்றாள். ஆனால், விக்ரமின் தோளில் அமர்ந்தபடி, வைஷாலியின் கழுத்தை வளைத்து இழுத்து ஆசையுடன் அவளது தலை மீது, தனது தலையைச் சாய்த்துக் கொண்டாள் தியா குட்டி.

முகத்துடன் முகம் உரசும் அளவிற்கு அத்தனை நெருக்கத்தில், அவனது முகத்தைப் பார்க்கும் துணிவில்லாமல் நெஞ்சம் படபடவென அடித்துக் கொண்டது.

அவளது அவஸ்தையைப் பார்த்தவன், “கொஞ்ச நேரம் இப்படி வந்து உட்காருங்க” என்று குழந்தையை இறக்கி மடியில் இருத்திக் கொண்டான்.

“ம், மேடம் இத்தனை நேரம் விளையாடுறீங்களே தூக்கம் வரலையா?” என்று கன்னத்தைப் பிடித்து ஆட்டினான்.

“ம்ஹும்!” இருபுறமும் தலையை வேகமாக ஆட்டினாள் குட்டிப் பெண்.

“மாமா…! தியா மே…ல தொடணும்….” தலைக்கு மேல் தூக்கச் சொல்லி வற்புறுத்தினாள்.

“ஓஹ் மாமா ரொம்ப டயர்ட்…” என்றான் கவலையுடன்.

தியா, “ம்ம்….” என்று அவனது நெஞ்சில் அடிக்க, “ஹா வலிக்குதே…!” என்று அவன் போலியாக அலற, தியாவிற்கு உற்சாகம் பொங்கியது.

அந்த விளையாட்டும், தன்னுடன் சளைக்காமல் விளையாடும் மாமாவையும் அவளுக்குப் பிடித்து விட, “மாமா! மாமா!” என்று

அவனைக் கொஞ்சித் தீர்த்தாள்.

ஆரம்பத்தில் அனைத்தையும் புன்னகையுடன் பார்த்துக்கொண்டிருந்த வைஷாலிக்கு, குழந்தையின் ‘மாமா’ என்ற அழைப்பு, அவளது அடிமனத்தை அசைத்தது. அவளையும் அறியாமல் ராகவின் நினைவில் தொண்டைக் குழி அடைக்க, விழிகளில் கண்ணீர் பெருகியது.

கணவன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்து, அவனை நேருக்கு நேர் பார்க்கும் தைரியமில்லாமல், வேகமாக எழுந்து தங்கள் அறையை நோக்கி ஓடினாள்.

மீண்டும் அவள் கீழே இறங்கி வரும் போது, மணிகண்டன் எழுந்து வந்திருந்தார். வெளியே சாதாரணமாக காட்டிக்கொண்டாலும், உள்ளுக்குள் குற்றவுணர்வுடனேயே நடமாடினாள். அவர்கள் கிளம்பிச் சென்ற பின்னர் விக்ரம் அலுவலக வேலையில் அமர்ந்துவிட, வைஷாலி, சுனிதாவுடன் சேர்ந்து இரவு உணவு தயாரித்துக் கொண்டிருந்தாள்.

அத்தியாயம் - 57

அலுவலக அறையில், விக்ரம் லாப்டாப்பை மூடிவிட்டு, கழுத்தை தடவியபடி அமர்ந்திருக்க, வைஷாலி கதவைத் தட்டினாள்.

“சாப்பிட வரீங்களா…?” என்றாள்.

“ம்” என்றவன், “வைஷாலி!” என்றழைத்தான்.

“என்னங்க…?” என்றாள்.

“கொஞ்சம் இரு. உன்கூடப் பேசணும்” என்றவன், எழுந்து வந்து அவளது கரத்தைப் பற்றி தங்கள் அறைக்கு அழைத்துச் சென்றான்.

வைஷாலியை சோஃபாவில் அமரவைத்து விட்டு, இன்னொரு சோஃபாவை இழுத்துப் போட்டு அவளெதிரில் அமர்ந்தான். அவளது கைகளை தனது கரங்களுக்குள் பிடித்துக் கொண்டவன், பரிவுடன் அவளைப் பார்த்தான்.

“ஷாலு!” ஆழ்ந்த குரலில் அழைத்தவன், “உனக்கு என்ன குழப்பம்? ரெண்டு நாளா என்கிட்ட என்னவோ பேசணும்னு நினைக்கிற. ஆனா, சொல்ல முடியாம தவிக்கிற. சொல்லுடா…” என்றான்.

வைஷாலி துடிப்பும், தவிப்புமாக அமர்ந்திருந்தாள். இத்தனை நாட்களாக பேச வேண்டும் என்று மனத்தில் உருப்போட்ட வார்த்தைகளுக்கு உயிர் கொடுக்க முடியாமல் தடுமாறினாள்.

பேச வாய்ப்பில்லாத போதெல்லாம் அவன் மீது கோபப்பட்டதும்; இப்போது அவனே கேட்கும் போதும், எப்படிச் சொல்வதெனப் புரியாமல் குழம்பினாள்.

‘என்னவென்று சொல்வது? இன்னும் தன் மனத்திலிருந்து ராகவின் நினைவுகள் முழுமையாக மறையவில்லை என்றா? என் வாழ்வில் உனக்கான இடத்தை இதுவரை துரும்பளவும் கொடுக்கவில்லை என்றா?’

நிமிர்ந்து அவனது முகத்தைப் பார்த்தாள். கனிவு பொங்கும் கண்களுடன், ஆதரவாக பற்றிய கரங்களுமாக தன்னை இமைக்காமல்

பார்த்துக் கொண்டிருந்தவனது பார்வை, அவளது மனத்தை கலங்க வைத்தது.

“விக்ரம்…!” நடுக்கத்துடன் ஒலித்த அவளது குரல்.

அவள் மனத்திலிருப்பதை அவளாக சொல்ல வேண்டும் என்று அழுத்தமான பார்வையுடன் அமைதி காத்தான்.

“என் மனசுல இருக்கும் விஷயத்தை உங்ககிட்ட சொல்லணும்னுதான் நினைச்சேன். ஆனா, இப்போ அதை உங்க முகத்தைப் பார்த்து சொல்லும் தைரியம் எனக்கு இல்ல. என் வாயாலேயே சொல்லணும்னு தான் நீங்க எதுவும் தெரியாத மாதிரி இருக்கீங்கன்னு எனக்கும் புரியுது. ப்ளீஸ் விக்ரம்… எனக்குக் கொஞ்சம் டைம் வேணும். எல்லாத்துக்குமே…” என்றாள் அழுகையோடு.

சலனமே இல்லாமல் அவளைப் பார்த்தான்.

“எனக்கிருந்த இன்செக்யூரிட்டி ஃபீலிங்கோட தான் கல்யாணத்துக்குச் சம்மதிச்சேன். அப்புறம் தான் கொஞ்சம் அவசரப்பட்டு ஒத்துக்கிட்டோமோன்னு மனசுக்குள்ள ஒரு பயம் வந்துச்சு. அதனால் தான் உங்ககிட்ட கல்யாணத்துக்கு முன்னாலேயே பேசணும்னு சொன்னேன். ஆனா, நீங்க பேசவேயில்லை.

அதுக்கு அப்புறம், கல்யாணத்தன்னைக்கு, ஜோதி உங்ககூட பேசிட்டு இருந்ததை கேட்டேன். எல்லோரும் சேர்ந்து என்னை ஏமாத்திட்டாங்கன்னு கோபம் வந்துச்சு. அதுக்குக் காரணம் நீங்க இல்லைன்னு தெரிந்தாலும், உங்களால் தானே இதெல்லாம் நடந்ததுன்னு மனசுக்குள்ள பயம் வந்துச்சு.

ஆனா, எல்லாமே சீமாக்கா பத்தி தெரியும் வரைக்கும் தான். அவங்ககிட்ட மனசுவிட்டு பேசினதுக்குப் பிறகு, எல்லோருமே என்னோட நல்லதுக்காக யோசிச்சிருக்காங்கன்னு புரிஞ்சிது. நடக்கறது ஏத்துக்க தயாரானேன். அப்பவும் உங்...ககிட்...ட மட்டும் கொஞ்சம்...” என்று தயக்கத்துடன் அவனது முகம் பார்த்தாள்.

அதுவரை அவளது முகத்தைப் பார்த்தபடி அமைதியாக அமர்ந்திருந்தவன், பக்கென சிரித்தான்.

“ஹேே! நானும் மனுஷன் தான். அடுத்தவங்களோட உணர்வுகளை புரிஞ்சிக்கத் தெரியாதவன் இல்லை. ஓகே...” என்றான்.

அவனது இலகுவான பேச்சில் சற்று தெம்பு வர, “என்னைக் கிண்டல் பண்றீங்க...” என்றாள் குற்றம்சாட்டும் குரலில்.

“இல்லடா...” என்றவன், அவளது முகத்தை தன் இருகைகளிலும் தாங்கி, அவளது கண்களை ஊடுருவினான். “ஐ லவ் யூ ஷாலு!” மொத்தக் காதலையும் குரலில் தேக்கி, அவளிடம் சொன்னான்.

வைஷாலியின் கணகளில் வழிந்த கண்ணீரை, இரு பெருவிரல்களாலும் நாசுக்காக துடைத்தான்.

“உன் நிலைமை புரியாமல் இல்லை. எனக்கும் உன்னிடம் நிறைய பேசணும். ஆனா, அதுக்கான நேரமும், காலமும் எனக்கு இருக்கு. முதல்ல நீ உன் மனசை புரிஞ்சிட்டு வா. காத்துட்டு இருப்பேன். ‘காமமில்லாத காதல் இல்ல; ஆனா, கட்டுப்படுத்த முடியாத காமத்தில் காதலே இல்ல’ இந்த வார்த்தைகளை நீயும் கேள்விப்பட்டிருப்ப.

இப்போ உனக்கு அதை நினைவு படுத்தறேன். என்னோட முதல் தேவை உன்னோட மனசு, மனசு மட்டுமே. போதுமா.”

ஆத்மார்த்தமாக அவன் பேசிய வார்த்தைகள், அவளது உயிர் வரைத் தாக்க, “விக்ரம்!” என்ற அழைப்புடன், அவனது தோளில் சாய்ந்தாள் கண்ணீருடன்.

“என்னடா, சாப்பிட கூப்பிட வந்தோம்… பேசணும்னு சொன்னான், பேசினோம். அதோடு முடிஞ்சிதுன்னு எழுந்து போய், வீட்டுக்காரனுக்குப் பசிக்குமேன்னு டின்னரை எடுத்து வைக்காம, ஹாயா அவன் தோளில் சாஞ்சிட்டு கொஞ்சிட்டு இருக்க…” என்று அதட்டும் குரலில் சொல்ல, படக்கென நிமிர்ந்து அமர்ந்தாள்.

ஒலித்த குரலுக்கும், முகத்தில் தெரிந்த குறும்பு புன்னகைக்கும் சம்மந்தமில்லாமல் அமர்ந்திருந்தவனை விழியகல பார்த்தாள்.

“என்ன லுக்கு…?” என்றான் கேலியாக.

“அது…” என இழுத்தவள், அவனிடமிருந்து விலகி நின்றாள்.

“போய் டிஃபன் எடுத்து வச்சிட்ட்டு என்னைக் கூப்பிடு” என்று அதிகாரமாகச் சொன்னான்.

“ம்” என்று அப்பாவியாக முகத்தை வைத்துக்கொண்டு தலையாட்டியவள், “உங்க மிரட்டல்ல நான் ரொம்பவே பயந்துட்டேன்…” என்று நடுங்குவது போலச் சொல்லிவிட்டு, “வெவ்வவே…” என்று அவனைக் கிண்டல் செய்தாள்.

“உன்ன…” என்று வேகமாக அவன் எழ, அருகிலிருந்த குஷனை எடுத்து அவன் மீது வீசி விட்டு, கீழே ஓடினாள். சிரிப்புடன் தலையை கோதிக் கொண்டான் விக்ரம்.

விக்ரமின் அணுகுமுறையும், ஆதரவான அவனது செயல்களும், வைஷாலியின் மனத்தில் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றங்களை ஏற்படுத்தத் தான் செய்தது. ஆனாலும் அவளால் எல்லா நேரத்திலும் அப்படியே இருக்க முடியவில்லை.

சமயங்களில் அவனது அருகாமை அவளுக்கு சங்கடத்தையும், அவஸ்தையையும் கொடுத்தாலும், பல நேரங்களில் அவற்றை மனப்பூர்வமாக ரசித்தாள்.

அன்னையின் வற்புறுத்தலுக்காக எப்போதாவது கோயிலுக்குச் செல்பவன், அவளுக்காக வெள்ளிக்கிழமைகளில் கோயிலுக்குச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டான்.

மஞ்சள் பூசிய முகத்துடன், தளர பின்னிய கூந்தலில் மல்லிகைச் சரத்தைச் சூட்டிக் கொண்டு பட்டுப்புடவை சரசரக்க வருபவளை பார்வையாலேயே மனத்தில் நிரப்பிக் கொள்வான். அவளுடன் செலவழிக்கும் அந்தச் சிறிதுநேர இன்பத்தை இழக்க மனதில்லாமலேயே, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையையும் ஆவலுடன் எதிபார்க்கத் துவங்கினான்.

அவளும் இப்போதெல்லாம் அவனுடன் ஏட்டிக்குப் போட்டியாக பேசுவது, அலுவலக வேலையில் அவனுக்கு உதவுவது என்று, கொஞ்சம் கொஞ்சமாக அவனுடன் செலவழிக்கும் நேரத்தை அதிகரித்துக் கொண்டாள். அவனுக்காக பார்த்துப் பார்த்துச் சமைப்பதும்,

உடனிருந்து பரிமாறுவதுமாக அவனுடன் இயல்பாக பழக ஆரம்பித்தாள்.

ஒரு மாத காலம் ஓடிய வேகமே தெரியவில்லை. தங்கள் மணவாழ்க்கை எதிர்பார்த்த அளவிற்கு அத்தனைக் கடினமானதாக இல்லையென்று இருவருமே எண்ணிக் கொண்டனர்.

நடுவில் ஒருமுறை சங்கரனும், தேவிகாவும் வந்து இரண்டு நாட்கள் தங்கிச் சென்றனர். மகளது நடவடிக்கைகள் அனைத்தும் திருப்தியாக இருக்க, பெற்றவர்களுக்கு அதுவே போதுமானதாக இருக்க, மனநிறைவுடன் கிளம்பினர். இருவருமாக ஒரு முறை ரத்னகிரி சென்று வந்தனர். சீமாவுடன் அடிக்கடி போனில் பேசிக்கொண்டாள்.

அன்று அலுவலகத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்தவன், “ஷாலு!” என்று அவளை நான்கு முறை அழைத்துவிட்டான்.

“தீதீ! இதைக் கொஞ்சம் அடிபிடிச்சிடாம கிளறிட்டு இருங்க, வந்திடுறேன்” என்றவள் வேகமாக அறைக்கு ஓடினாள்.

போனில் யாரிடமோ பேசிக்கொண்டிருந்தவன், அவள் வருவதைக் கண்டதும், போனை ஒரு கையால் மூடியபடி, “எத்தனை தடவை கூப்பிடுறது? இந்த ஷர்ட் பட்டன் பிஞ்சி வந்திடுச்சி, வேற தைத்து விடு” என்றான் தமிழில்.

“கொடுங்க, நீங்க வேற ஷர்ட் போடுங்க” என்று ஊசி, நூலுடன் வந்தாள்.

“மாத்த நேரமிருந்தா மாத்தியிருக்க மாட்டேனா? இப்படியே தை”

என்றவன் போனில் பேச ஆரம்பிக்க, பட்டனுடன் அவனருகில் சென்றாள்.

என்னதான் அவனுடன் சகஜமாக பேச முடிந்தாலும், இன்னும் அவனது அருகாமை அவளது கவனத்தை அலைகழிக்கத் தான் செய்தது. ஒரு நிமிடத்தில் முடியவேண்டிய வேலை அவளது தடுமாற்றத்தால் மூன்று நிமிடங்களுக்கு இழுத்தது.

அவசரம் அவசரம் என்று கத்தியவன் கூட அவளைத் துரிதப்படுத்தாமல் அமைதியாக இருந்தான். வாய்க்குள்ளேயே என்னவோ முனகிக்கொண்டே வேலையை முடித்தாள்.

கத்தரியால் நூலை கத்தரித்துவிட்டு நகர்ந்தவளை, “ஏய்! எதுக்கு இப்படி வாய்க்குள்ளேயே முனகுற? தைரியம் இருந்தா நேரா சொல்லு” என்றான்.

“ம்க்கும், எனக்கென்ன பயம்?” என்றவள், “இந்த சட்டை எப்போ எடுத்தது? நீங்க பிளஸ் டூ படிக்கும் போதா! இத்தனை இறுக்கிப் பிடிச்சா பட்டன் பிய்யாமல் என்ன ஆகும்?” என்றாள்.

“ஆமாம் ரொம்ப அவசியமான கேள்வி? கோட்டுக்குள்ள போடும் சட்டையை தொளாதொளான்னா போட்டுட்டுப் போவாங்க?” என்றபடி கோட்டை மாட்டிக்கொண்டு, பிரீஃப்கேசுடன் கிளம்பினான்.

அறுந்து விழுந்த பட்டனைத் தேடிப்பார்த்து கிடைக்காமல் கீழே இறங்கிச் சென்றாள். ஆனால் மறுநாள் அவனது பேண்ட் பாக்கெட்டிலேயே அது கிடைத்த போது அவன்மீது செல்லக் கோபம் வர, அவனது செயலை நினைத்துச் சிரித்தபடி, பட்டனைத் தூக்கிப்

போட்டாள்.

மாலை அலுவலகத்திலிருந்து வந்தவன், “ஷாலு!” என்றழைத்தான்.

“என்ன இப்போ க்ஃப் பட்டன் அறுந்துப் போச்சா...?” என்று கிண்டலாகக் கேட்டாள்.

போலியாக அவளை முறைத்தவன், கோட் பாக்கெட்டிலிருந்து இரண்டு ஃப்ளைட் டிக்கட்டை எடுத்து நீட்டினான்.

கேள்வியுடன் வாங்கிப் பார்த்தவள், “ஹய்யோ! மால்தீவ்ஸ்...” என்று ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தாள்.

இரண்டு நாட்களுக்கு முன்னால் அவளுக்கு மால்தீவ்ஸ் சென்று வரவேண்டும் என்ற ஆசை இருந்ததாகவும், ஆனால் கடைசி நேரட்த்தில் அந்தப் பயணம் போக முடியாமல் போனதாகவும் சொன்னதை நினைவு வைத்து இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தான்.

சந்தோஷத்துடன், “தேங்க்யூ” என்றாள்.

அவளது சந்தோஷப் பூ முகத்தை புன்னகையுடன் பார்த்தான்.

அத்தியாயம் - 58

மனத்தை மயக்கும் பச்சை வண்ணக் கடலில், மிதக்கும் கப்பல்களைப் போன்று ஆங்காங்கே சிதறியிருந்த நீல நிறத் தீவுகளை, வெண்ணிற மணல் நுரை ததும்பி அணைத்திருப்பதைப் போல, பார்க்கவே அழகாக இருந்தது.

ஜன்னலோர இருக்கையில் அமர்ந்திருந்த வைஷாலி, குதூகலத்துடன் பார்த்துக்கொண்டிருக்க, சிறிது சிறிதாக விமானம் தரையிறங்க ஆரம்பித்தது.

விமானத்திலிருந்து இறங்கும் போதே சிறுதூறலாக பன்னீர் தூவி வருணன் அவர்களை ஆனந்தத்துடன் வரவேற்றான்.

"நல்ல வெயில் இருக்கும்னு சொன்னீங்க இல்ல. பாருங்க, நாம வரோம்ன்னு வருண பகவான் வரவேற்க வந்துட்டார்" என்றாள்.

"ம், அவர் இப்போ மட்டுமா வரார்? அடிக்கடி சொல்லாம கொள்ளாம இங்கே வருவார். வா அவர் வேகமா வர்றதுக்குள்ள, அப்படி ஏர்போர்ட் உள்ளே போவோம்" என்று அவளுடம் விமான நிலையத்திற்குள் நுழைந்தான்.

தங்கள் செக்கிங்கை முடித்துக் கொண்டு உடைமைகளுடன் வெளியே வந்தால் இருபதடி தூரத்தில் பரந்து விரிந்து, கண்களுக்கு இதமாக காட்சியளித்துக் கொண்டிருந்தாள் கடல் அன்னை. விமான நிலையமே ஒரு குட்டித் தீவுதான். அங்கிருந்து தலைநகர் மாலிக்கு சிறிய கப்பல் மூலமாக பத்துநிமிட பயணத்தில் வந்து சேர்ந்தனர்.

மொத்தமே நான்கு கிலோ மிட்டர் சுற்றளவில் அமைந்திருந்தது மாலித் தீவு. சாலைகள் சற்றுக் குறுகலாக, கான்கிரீட்டால் அமைந்திருந்தது. பார்க்க ஏதோ மினியேச்சர் நகரம் போலத் தோன்றியது அவளுக்கு.

"இங்கே எங்கேயுமே மொட்டை மாடியே இல்ல பாருங்களேன். ஃபுல்லா ஓடு போட்டுத் தான் இருக்கு" என்றாள் ஆச்சரியத்துடன்.

“ம், அதே போல இங்கே போர் வெல்லெல்லாம் கிடையாது. அரசாங்கம் கொடுக்குற தண்ணி தான்” என்று மேலும் ஒரு விவரத்தைச் சொன்னான்.

அவ்வப்போது மழை வருவதும், சட்டென வானிலை மாறி வெயில் வருவதுமாக இருந்தது. மதியம் வரை அங்கேயே சுற்றிப் பார்த்துவிட்டு, ஏற்கெனவே முன்பதிவு செய்திருந்த, அனந்தரா தீவிற்கு அழைத்துச் சென்றான்.

தீவில் இறங்கியதுமே அவர்களது பாரம்பரிய இசைக்கருவியை வாசித்தும், பாட்டுப் பாடியும் வந்தவர்களை வரவேற்றனர். இது அனைத்தையும் தனது ஹாண்டி கேமில் பதிவு செய்துகொண்டாள் வைஷாலி.

வழக்கமான வேலைகள் முடிய, “ஷாலு! போகலாம்” என்று அவளை அழைத்துக் கொண்டு, அங்கு நின்றிருந்த பாட்டரி கார் ஒன்றை நோக்கி நடந்தான்.

முதலில் குதூகலத்துடன் அமர்ந்திருந்தவள், எதிரில் தெரிந்த பாலத்தைக் கண்டதும், “கடவுளே!” என்று உரக்கச் சொன்னாள். “இந்தப் பிரிட்ஜ் மேல இந்தக் காரிலேயே போகணுமா?” என்றாள் விக்ரமிடம்.

“ஆமாம்” என்றான் நிதானமாக.

அந்தப் பாலம் மொத்தமே ஐந்தடி அகலம் மட்டுமே இருக்க, பயத்தில் சற்று அவனை நெருங்கி அமர்ந்து கொண்டாள். “முருகா…! முருகா…!” என்று முணுமுணுத்தாள்.

“நியாயமா நீ விக்ரம், விக்ரம்ன்னு என்னைத் தான் கூப்பிடணும். கண்ணுக்கே தெரியாத கடவுளை நம்பற; உன் பக்கத்திலேயே இருக்கும் என்னை நம்பமாட்டேன்ற. ஹூம்!” என்று பெருமூச்சு விட்டான்.

அதற்குள் அவர்கள் தங்கவேண்டிய ரிசார்ட் வந்துவிட, வேகமாக இறங்கினாள்.

“விட்டா நீங்களே தள்ளிவிட்டுட்டு, அப்புறம் தூக்கிட்டு வருவீங்க போல…” என்று பல்லைக் கடித்துக் கொண்டாள்.

“உன்னைத் தூக்கிட்டு வரணும்னு நினைச்சிட்டா, அதைச் செய்தாலும் செய்வேன் நீ ஜாக்கிரதையா இருந்துக்கோ…” என்றான்.

அவளது முகம் போன போக்கைப் பார்த்து, “எவ்வளவு ரொமாண்டிக்கா ஒரு சிச்சுவேஷன் சொல்றேன். அதுக்கு இப்படி விளக்கெண்ணெய் குடித்தது போல ஒரு ரியாக்*ஷன் கொடுக்கற” என்றான் விளையாட்டாக.

வைஷாலி என்ன சொல்வதெனத் தெரியாமல் அவனைப் பார்ப்பதைத் தவிர்த்தாள்.

“ஹேய்! பயந்துட்டியா? சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். வா” என்று அவளை உள்ளே அழைத்துச் சென்றான்.

முன்னால் பெரிய ஹால், அதையடுத்து விசாலமான படுக்கை அறை, அங்கிருந்தே கடலைப் பார்க்கும் வண்ணம் கண்ணாடிச் சுவர் அமைத்திருந்தனர். அதையடுத்து சிறு நீச்சல் குளமும், அதனருகே அமர்ந்திருக்க, நிழற் குடையுடன் கூடிய மேஜைகளும் அமைந்திருக்க,

அங்கிருந்து கடலில் இறங்கிச் செல்லப் படிக்கட்டும் இருந்தது.

அறையைச் சுற்றிப் பார்த்தவளது முகம் திருப்தியை வெளிப்படுத்த, அவனைப் பார்த்து மென்மையாகப் புன்னகைத்தாள்.

“ஷாலு! முகத்தைக் கழுவிட்டுத் தயாராகு. டீ கொண்டுவரச் சொல்லியிருக்கேன். வந்ததும் சாப்பிட்டுட்டு ஒரு ரவுண்ட் போய் வருவோம்” என்றான்.

இருவரும் முகத்தைக் கழுவிக்கொண்டு பின்னாலிருந்த சிட்டவுட்டில் அமர்ந்து கடலை ரசித்தபடி, டீயை ருசித்துக் கொண்டிருந்தனர். குளுகுளுவென்ற காற்று மேனியை வருட, அந்த இதமான சூழல் மனத்திற்கு மிகவும் தெம்பைக் கொடுப்பது போல இருந்தது. இயற்கையை ரசித்தபடி இருந்த இருவரின் மீதும், பன்னீர் தூவலாக விழுந்த மழை சில நொடிகளில் படபடவெனப் பொழிய ஆரம்பிக்க, அறைக்குள் ஓடி வந்தனர்.

“என்ன ஷாலு? மழை இப்படி நம்ம பிளானை சொதப்பிடுச்சு” என்றான் விக்ரம்.

“ஹூம், வெளியே போய் மழையில் மாட்டிக்காமல் இருந்தோமே அதுவரைக்கும் சந்தோஷம். இன்னைக்கு ரெஸ்ட் எடுத்துக்க வேண்டியது தான்” என்றாள்.

“ஓகே. நீ கொஞ்ச நேரம் டி.வி. பாரு. கொஞ்சம் வேலை இருக்கு முடிச்சிட்டு வரேன்” என்றவன், லேப்டாப்பில் மூழ்கிவிட்டான்.

வைஷாலிக்கு டி.வி. பார்க்கப் பிடிக்கவில்லை. சிறிது நேரம் மழையை

வேடிக்கைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். சிறிது சிறிதாக இருள் கவிழ ஆரம்பிக்க, மழையும் வலுக்க ஆரம்பித்தது. அவர்கள் இருக்கும் இடத்தைத் தவிர கண்ணுக்கெட்டிய தூரம் வரை இருள் சூழ்ந்திருக்க, பகலில் கண்களைக் கவர்ந்த அழகு, இப்போது லேசான அச்சத்தையும், புதுவித அனுபவத்தையும் தந்தது.

காற்றின் வேகத்தில் அதுவரை நிமலமாக இருந்த கடல், மெல்ல ஆர்ப்பரிக்க துவங்கியது. அலைகள் எழுந்து வேகமாக அவர்களது சிட்டவுட்டில் விழுந்து, தண்ணீர் வடிந்து ஓட, வேகமாக எழுந்து உள்ளே வந்து கதவை மூடினாள்.

முன்னறையில் வீடியோ சாட்டிங்கில் இருந்தவனை எட்டிப் பார்த்தாள். அவன் தீவிரமாக ஏதோ பேசிக்கொண்டிருந்தான். மணி எட்டை நெருங்கியிருந்தது. அவளே போன் செய்து இரவு உணவை அறைக்கு வரவழைத்தாள். சாட்டிங்கை முடித்த பின்பும், லேப்டாப்பில் எதையோ ஆராய்ந்து கொண்டிருந்தான்.

“விக்ரம்! இப்போ எழுந்து வரப்போறீங்களா? இல்லையா?” என்றாள் கோபத்துடன்.

“ம்” என்று திரும்பியவன், “சாரிம்மா… டைம் ஆகிடுச்சி இல்ல… இதோ வரேன்” என்று எழுந்து வந்தான்.

மழை விட்டிருந்த போதும் தூறல் விடவில்லை. காற்றும் வேகமாக வீசிக்கொண்டிருந்தது. உணவை முடித்துக் கொண்டு மீண்டும் லேப்டாப்பின் முன்னால் சென்று அமர்ந்தான்.

அதைக் கண்ட வைஷாலி, வேகமாக சென்று லேப்டாப்பை எடுத்துக்

கொள்ள,
‘என்ன?’ என்பது போல அவளைப் பார்த்தான்.

“எனக்கு வர்ற கோபத்துக்கு… இதை அப்படியே தூக்கி கடல்ல போட்டுடுவேன்” என்றாள் மிரட்டலாக.

கால் மேல் கால் போட்டு நன்கு சாய்ந்து அமர்ந்தவன், எதுவும் சொல்லாமல் அவளையே பார்த்தான்.

“எதுக்கு இப்படிப் பார்க்கறீங்க? செய்ய மாட்டேன்னு நினைக்கிறீங்களா? செய்வேன். இதுக்கா இவ்வளவு செலவு பண்ணி இங்கே கூட்டிட்டு வந்தீங்க? இதை வீட்டிலிருந்தே செய்ய வேண்டியது தானே” என்றாள்.

புன்னகைத்தவன், “இப்போ என்ன செய்யணும்?” என்று கேட்டான்.

“எனக்கு வெட்டுவெட்டுன்னு இருக்கு. என்கிட்ட பேசுங்க” என்றபடி அவனருகில் அமர்ந்தாள்.
“பேசணும் அவ்வளவு தானே… நான் பேசிடுவேன். ஆனா, அது உனக்குப் பிடிக்குமோ… பிடிக்காதோ…!” என்று இழுத்தபடி, அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

அவனது பார்வையில் லேசாக முகம் சிவந்தவள், “அப்படிப் பிடிக்கலைனா… சொல்றேன்” என்றாள் நாணத்துடன்.

“நிச்சயமா சொல்லமாட்ட. ஏன்னா, உனக்குப் பிடிக்காததை நான் பேசப் போறதில்லையே” என்றபடி அவளது கரத்தை தனது கரத்துடன் பிணைத்துக் கொண்டான்.

கைகள் பிணைந்திருக்க, தோளோடு தோள் உரச, அவனது நெருக்கமான அருகாமையால் அவளுக்குப் படபடவென வந்தது. வெட்கத்தில் இமைகள் தாழ, உதட்டை அழுந்த கடித்தாள்.

விக்ரமின் மனத்தில் சந்தோஷச் சாரலடித்தது. “பிடிச்சிருக்கா…?” மென்மையாக அவளது காதருகில் பேசினான்.

“எ…து?” கேட்பதற்குள் நா வரண்டு போனது.

“இந்த ஊர்தான். ஏன் நீ என்ன நினைச்ச? என்றான் கேலியாக.

சட்டென விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள். குறும்புச் சிரிப்பில் கண்கள் மின்ன, “ம்…” என்று புருவம் உயர்த்தி, கண்களைச் சிமிட்டினான்.

அந்தச் சிரிப்பில் கொஞ்சம் மயங்கித் தான் போனாள். அதே உணர்வுடன், “பிடிச்சிருக்கு” என்றபடு இமை மூடினாள்.

அவனும், “எதை?” என்று அவளை மேலும் சீண்டினான்.

“ம், நீங்க சொன்ன இதே ஊரைத் தான்” என்று கடுப்புடன் சொன்னவள், அவனிடமிருந்து விலக முயன்றாள்.

அவள் விலகாதபடி இழுத்துப் பிடித்து, “இன்னைக்கு என்னாச்சு மகாராணிக்கு இப்படி டக்குடக்குன்னு எல்லாத்துக்கும் கோபம் வருது?” என்றான் அப்பாவியாக.

“நீங்க பண்ற அழும்புக்குக் கோபம் வராம…? உங்களை அப்படியே…”

என்றவள், வார்த்தைகளின் அர்த்தம் வேறுவிதமாக போவதை நினைத்து அப்படியே நிறுத்திவிட்டு, தயக்கத்துடன் அவனைப் பார்த்தாள்.

“பிடிச்சி…” என்றபடி காதலுடன் பார்த்தவன், அவளது கரத்தை உயர்த்தி மென்மையாக முத்தமிட, வைஷாலி திகைத்துப் போனாள்.

வைஷாலி, அவனிடமிருந்து கரத்தை இழுத்துக் கொள்ள முயல, அவனோ வேண்டுமென்றே இறுக்கிப் பிடித்து விளையாடினான். அவளது முகம் மெல்ல மாற ஆரம்பித்தது. மற்றொரு கையால் அவளது தோளை வளைத்து தன்னருகில் அவன் இழுத்த அதேநேரம் அவனது மொபைல் ஒலித்தது.

“உ….ங்க போ…ன்…” என்றாள் திணறலாக.

“கேட்குது…” என்றபடியே அவளது முகத்தை நெருங்க முயன்றவன், அவளது கைகளில் நடுக்கத்தை உணர்ந்து அவளைக் கூர்ந்து பார்த்தான்.

அழுந்த மூடியிருந்த அவளது இமைகள் அலைப்புறுதலுடன் அசைந்து கொண்டிருக்க, மெதுவாக அவளிடமிருந்து விலகினான்.

போனை எடுத்துக் கொண்டு அறையிலிருந்து வெளியேறியவன், தன்னைச் சற்று ஆசுவாசப்படுத்திக் கொள்ளப் போராடினான். அதற்குள் அவனுக்கு வந்த அழைப்பும் நின்று போயிருந்தது. ஆழ மூச்செடுத்து தலையைக் கோதிக் கொண்டான். ‘அவசரப்படாதே’ என்று மீண்டும் மீண்டும் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

அறைவாசலில் நின்று அவனைப் பார்த்த வைஷாலிக்கு ஆயாசமாக இருந்தது. ‘எல்லாம் புரிந்தும் நான் ஏன் இப்படி நடந்து கொள்கிறேன்? விக்ரமின் உணர்ச்சிகளோடு விளையாடிக் கொண்டிருக்கிறேனே... என் நிலையுணர்ந்து எத்தனைக் கண்ணியமாக விலகிவிட்டான்’ என்று கலங்கினாள்.

மீண்டும் அவனது மொபைல் ஒலிக்க, யாருடனோ பேசிக்கொண்டிருந்தான். அவன் முடிக்கும் வரை காத்திருந்தவள், அவன் பேசி முடித்ததும், “விக்ரம்!” என்று மெல்ல அழைத்தாள்.

“என்ன ஷாலு? என்று புன்னகையுடன் தன்னைத் திரும்பிப் பார்த்தவனைக் கட்டிக்கொண்டு ஓவென அழவேண்டும் போல இருந்தது அவளுக்கு.

ஆனாலும் ஏதோ ஒன்று அவளைத் தடுக்க, “சாரி” என்றாள் இறங்கிய குரலில்.
“ஹேய்! மை ஸ்வீட் ஹார்ட். சாரி நாந்தான் சொல்லணும். உனக்கான டைம் கொடுக்கறேன்னு சொன்னதை மீறிட்டேன். வெரி வெரி சாரி... இனி என்னிடமிருந்து நெத டிஸ்டர்பன்ஸும் உனக்கு வராது. ஓகே” என்றான்.

ம் என்று தலையசைத்தவள், அவன் மீது பொங்கிய நேசத்தை அவளது உள்ளப் போராட்டம் உணரவிடாமல் தடுத்துவிட்டது. தனது தவிப்பைத் தவறாக எண்ணாமல், புரிந்து கொண்டானே என்ற எண்ணத்துடன், “தேங்க்யூ” என்று ஆத்மார்த்தமாகப் புன்னகைத்தாள்.

“தட்ஸ் குட்!” என்று அழகாக புன்னகைக்க, அவளும் அதில் இணைந்து கொண்டாள்.

மீண்டும் அவனது மொபைல் விடாமல் ஒலிக்க, “சீமா!” என்று அவளிடம் சொல்லிவிட்டு, “ஹலோ!” என்றபடி ஸ்பீக்கர் மோடை ஆன் செய்தான்.

“என்னைக் கரடின்னு திட்டினதானே...” சிரிப்புடனே ஆரம்பித்தாள் சீமா.

“பரவாயில்லையே... கரெக்டா சொல்லிட்டியே கரடி....” என்று கேலியாகச் சொன்னவன், வைஷாலியைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டினான்.

பதிலுக்குப் புன்னகைத்தவள், அங்கிருந்த இருக்கையில் அமர, சிறிதுநேரம் பேசிய விக்ரம், போனை வைஷாலியிடம் கொடுத்தான்.

அவள் ‘ஹலோ’ என்றதுதான் தாமதம்; “ஹனிமூன் போகுமளவுக்கு வந்திருக்கு என்னிடம் சொல்லவேயில்ல நீ” என்று குற்றப்பத்திரிகை வாசித்தவள், வைஷாலியை இடையே பேசவிடவேயில்லை.

அவள் எதுவும் சொல்லமுடியாமல் தவிப்புடன் கணவனைப் பார்த்தாள். அவளது நிலையை உணர்ந்தவனாக, போனை வாங்கிக் கொண்டான்.

“அம்மா தெய்வமே நாங்க தூங்கணும்... போனை வைக்கிறியா?” என்றான்.

“உனக்குத் தூக்கம் வருதா விக்ரம்?” என்று எதையுமறியாமல் சீமா கிண்டலில் இறங்க, அவன் வைஷாலியைப் பார்த்தான்.

அவளது நிலை இருதலைக் கொள்ளி எறும்பைப் போல இருந்தது.

“ஏய்! முதல்ல போனை வை. குட்நைட்” என்று போனை அணைத்தான்.

அவள் அமைதியாக அமர்ந்திருக்க, “வைஷாலி! நேரமாகுது போய்ப் படு. காலையில் நேரத்தோடு கிளம்பணும்” என்றான்.

“சரி” என்றவள், “நீ..ங்க?” என்றாள்.

“கொஞ்ச நேரத்தில் வரேன்” என்று ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு அமர்ந்தான்.

அவன் உறக்கம் வராமல் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருக்க, அவளோ, அவனது நினைவுகளுடன் மனத்துக்குள் போராடியபடி, படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள்.

அத்தியாயம் - 59

இரவெல்லாம் விடுவேனா என்பது போல இடைவிடாமல் பொழிந்த மழை பொய்யோ! என்பது போல, தெளிவான வானமும், அமைதியான கடலுமாக காட்சியளித்தது.

நிமிடத்திற்கு நிமிடம் நிறம் மாறும் கடலும், மென் துகள்களாய்ச் சிதறிக் கிடக்கும் வெண்ணிற மணலும், அவளது உற்சாகத்தைப் பன்மடங்காக கூட்டியது.

கடலும், வானும் தெரியாவண்ணம் நீலநிறமாகக் காட்சியளித்த இயற்கையின் அழகை இரசித்துக் கொண்டிருந்த வைஷாலி, விக்ரமின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

“ஷாலு! ரெடியா? கையில் கடிகாரத்தைக் கட்டிக் கொண்டே அறைக்குள் வந்தவன், அவளைப் பார்த்து அசந்து நின்றான்.

கடல் நீலநிற சல்வாரில், அவற்றுக்குத் தோதாகக் கழுத்தை ஒட்டி அணிந்திருந்த முத்துமாலையும் அவளது எழிலுக்கு எழில் சேர்த்தது.

அசாத்திய உயரத்தில் சாம்பல் வண்ண பேண்ட்டும், ஆழ்ந்த நீலநிற முழுக்கைச் சட்டையும் அவனது வசீகரத்தை இன்னும் உயர்த்திக் காட்ட, அவளறிய முதன்முறையாக அவனை ரசித்தாள்.

அவளது பார்வை மாற்றத்தை நொடியில் கண்டுகொண்டாலும், முகத்தில் எவ்வித உணர்ச்சிகளையும் வெளிக்காட்டாமல், “கிளம்பலாமா?” என்றான்.

“ம்” என்றவள், வேகமாக வந்து அவனுடன் இணைந்து நடந்தாள்.

ஏர் டாக்ஸி என்றழைக்கப்படும் சிறியரக விமானம் ஒன்றில், அவளை அழைத்துச் சென்றான். விமானத்தில் யாருமில்லாமல் இருக்க, விக்ரமை அர்த்தம் பொதிந்த பார்வைப் பார்த்தாள்.

புன்னகைத்தவன், “உனக்காக…” என்றான்.

வைஷாலிக்கு உருகிப் போயிற்று. அவள் ஏதோ சொல்ல வாயெடுக்க, “உட்கார் ஷாலு!” என்றான்.

தன்னைக் கட்டுப்படுத்திக் அவன் சுட்டிக் காட்டிய ஜன்னலோர இருக்கையில் அமர்ந்தாள். ஆரம்பத்தில் இருந்த தயக்கம், சற்று நேரத்தில் முற்றிலுமாக மாறிப் போனது. மினியேச்சர்களாகத் தெரிந்த

தீவுகளையும், கப்பல்களையும் வியப்பும், சிரிப்புமாக பார்த்துக் கொண்டும், இடையிடையே விக்ரமிடம் சகஜமாக பேசிக்கொண்டும் வந்தாள்.
அநாவசியமாக எந்த உணர்ச்சிகளுக்கும் அடிபணியக் கூடாது என்பதில் திடமாக இருந்தாலும், அவனைச் சோதிப்பது போலவே அவளது செயல்கள் இருந்தன.

திடீரென ஆளரவமற்ற ஒரு தீவைச் சுட்டிக்காட்டி, “அங்கே போகலாமா!” என்றாள்.

“போகலாமே என்றவன், பைலட்டிடம் சொல்ல, விமானம் தண்ணீரில் இறங்கி கரையோரமாக நின்றது.
வேகமாக குதித்து இறங்கியவள், சற்று தூரம் கரையோரமாகவே நடக்க, விக்ரம் அவளைப் பின்தொடர்ந்தான்.
பளிங்கு போன்ற நீரில் பாதம் நனையும் அளவு நீரில் நின்றாள்.
அவளது கால்களைச் சுற்றி விசிறி போன்ற அகன்ற தோற்றம் கொண்ட மீன்கள் இரண்டு சுற்றிவர, ஆசையுடன் குனிந்தபடி, அதன் பின்னாலேயே நடந்தாள்.

“ஷாலு! வேணாம் பின்னால் வா”என்றான் எச்சரிக்கும் குரலில்.

“இருங்க விக்ரம்! பாருங்களேன், எவ்வளவு அழகா நீந்துது” தனது பாதத்தை உரசிவிட்டுச் சென்ற மீனைப் பார்த்து உற்சாகமாக குரலெழுப்பினாள்.

அந்த மீன்கள் அவளை இரண்டு சுற்று சுற்றிவர, குதூகலமானவள் அவற்றை தொட்டுப் பார்க்க முனைந்த நேரம், விக்ரம் அவளது இடையைப் பற்றி முழு வேகத்துடன் பின்னால் இழுக்க, இருவரும்

தடுமாறி மணலில் விழுந்தனர்.
அதேநேரம் அந்த மீன்கள், தன்னை எதிரி தாக்க வருவதாக நினைத்ததோ என்னவோ? தன்னைக் காத்துக் கொள்ள அதன் வாலைச் சுழற்றிச் சுழற்றி அடித்துவிட்டு, நீருக்குள் சென்றுவிட்டது.

‘விக்ரம் தன்னை இழுத்து வராவிட்டால் என்னவாகியிருக்கும்?’ - நினைத்ததுமே அவளது உடல் மெல்ல நடுங்க, அவனது தோளில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

“ஷாலு! ரிலாக்ஸ் ஒண்ணுமில்லை. ஓகே.”

“ம், நான் இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கலை” என்றாள் பயத்துடன்.

“அது, தனக்கு ஆபத்துன்னு நினைச்சிருக்கும். அதான் வாலால் தாக்கியிருக்கு. அதோட பலமே அந்த வால்தான். அதில் பற்சக்கரம் மாதிரி முள்ளுமுள்ளாக இருக்கும். தாக்கினா வலி உயிர் போயிடும். சதை பிச்சிகிட்டு வந்திடும்.”
அவன் விவரத்தைத் தான் சொன்னான். ஆனால், அவளுக்கு இன்னும் பயமாகிவிட்டது.

“போதும் நாம கிளம்பலாம்” என்றவள், அவனது கரத்தை விடாமல் பற்றிக்கொண்டே நடந்தாள்.

அடுத்த சிலநொடிகளில் அவள் சகஜநிலைக்கு திரும்பிவிட்டாள். விக்ரம் அவளைப் பாரா கிளைடிங்கிற்கு அழைத்துச் சென்று, அவள் மறுக்க மறுக்க, வற்புறுத்தி கிளைடரில் ஏற்றிவிட்டான். மேலெழும்பும் போது அவளுக்கிருந்த பயம் நீங்கி, கடல் மேல் பறக்கும் போது தானும் ஒரு பறவையைப் போல உணர்ந்தாள்.

இறங்கி வந்ததும் எப்படியிருந்தது என்று கேட்டவனிடம் இன்னொரு ரவுண்ட் போகணும்" என்று சொல்லி மீண்டும் சென்று வர, விக்ரம் அவளது குழந்தைத்தனத்தை எண்ணிப் புன்னகைத்துக் கொண்டான்.

மதிய உணவிற்குப் பிறகு, அவளை மீன் பிடிக்கும் படகிற்கு அழைத்துச் சென்றான். கடலில் சிறிது தூரம் சென்ற பிறகு பக்கெட்டிலிருந்த சிறு சிறு மீன்களைத் தூக்கிக் கடலில் வீசினர்.

"மீன் பிடிப்பாங்கன்னு பார்த்தா கைல இருக்கறதை தூக்கித் திரும்ப கடல்ல போடுறாங்க?" என்றாள்.

"அது தான் சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடிக்கிறது" என்றான்.

"அப்போ இது பொறியா...?" என்றாள்.

"சந்தேகமே வேணாம்" என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, தூண்டிலில் வரிசையாக மீன்கள் மாட்ட ஆரம்பித்தது.

"ஹய்யோ! எனக்கும் மீன் பிடிக்கணும் போல இருக்கு" என்று அவள் சொல்லி முடிக்கும் முன்பே, ஒரு தூண்டிலை வாங்கிக் கொடுத்தான்.

"நாம ரெண்டு பேரும் சேர்ந்து பிடிக்கலாம்" என்று அவனையும் பிடிக்கச் சொன்னாள்.

இருவரும் சேர்ந்து தூண்டிலை வீச, பெரிய அளவு ருணா மீன் ஒன்று மாட்டிக் கொள்ள, வைஷாலிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

“இந்த மீன் இங்கே அதிக அளவுல எக்ஸ்போர்ட் ஆகுது. கொஞ்சம் காஸ்ட்லியான மீன்” என்று மனைவிக்கு விளக்கினான் விக்ரம்.

இரவு நிலவு வானத்தில் வலம் வரும் நேரம், இருவரும் தீவிற்குத் திரும்பி வந்தனர். தங்களது அறைக்குச் செல்லாமல், கடற்கரை மணலிலேயே காள்களை நீட்டி அமர்ந்துவிட்டனர்.

குளிர்ந்த நிலவெளி, தனிமை, அருகில் மனத்திற்குப் பிடித்தவள், அதிலும் சில நாட்களாக தெரியும் அவளது மனமாற்றம்… வாழ்க்கையே சொர்க்கமாகத் தோன்றியது அவனுக்கு.

அவளும் அதே நிலையில் தான் இருந்தாள். காலையிலிருந்து நடந்த ஒவ்வொன்றையும் நினைத்துப் பார்த்தாள். முன்தின இரவுக்குப் பின், அவன் தன்னிடம் இயல்பாகவே இருந்தாலும், பேச்சிலும், செயலிலும் நெருக்கத்தைக் காட்ட முயலாதது, சற்று ஏமாற்றத்தைக் கொடுத்தது.

ஆனாலும், அந்தக் கண்ணியம் தான், அவனிடம் தன் மனத்தைச் சிறிதுச் சிறிதாக இழக்கக் காரணம் என்று உணரவும் செய்தாள். இருந்தும் அதைப் பரிபூரணமாக அவனிடம் வெளிப்படுத்த இயலாதபடி, சிறு குழப்பம் ஒன்றும் அவளை ஆட்கொண்டிருந்தது.

கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் மௌனமாகவே அமர்ந்திருந்தனர். இருவருமே மற்றவரது அருகாமையை மனப்பூர்வமாக விரும்பினர். அவனது தோளில் சாய்ந்து கதை பேச அவளுக்கும்; அவள் கூந்தலை வருடி, நெற்றியில் முத்தமிட்டு, தனது காதலைச் சொல்ல அவனுக்கும் ஆசைதான். ஆனால், எதையோ எண்ணி இருவருமே தயக்கத்துடன், தவித்துக் கொண்டிருந்தனர்.

நேரமாவதை உணர்ந்து, அவளை அழைத்துக் கொண்டு, கடலுக்கு அடியில் கட்டப்பட்டிருந்த ரெஸ்டாரெண்ட் ஒன்றிற்கு அழைத்துச் சென்றான். உணவருந்தியபடியே கடலில் நீந்திச் செல்லும் மீன் இனங்களையும், கடல்வாழ் உயிரினங்களையும் காண முடியும்.

“வாவ் லவ்லி!” என்ற வைஷாலிக்கு மேற்கொண்டு பேச வார்த்தைகளே வரவில்லை. ‘தனக்காக என்னவெல்லாம் செய்கிறான்!’ என்று எண்ணியவளுக்கு, கண்களில் கண்ணீர் தளும்பியது.

அவன் பார்த்துவிடாமலிருக்க, மீன்களைப் பார்ப்பது போலக் கண்களைச் சுழற்ற ஆரம்பித்தாள்.

சப்தமில்லாமல் உணவருந்திக் கொண்டிருக்க, “ஷாலு! ஒரு ரகசியம்” என்றவன், கண்களால் அருகில் வா என்பது போல தலையசைத்து அழைத்தான்.

என்னவோ ஏதோவென்று சற்று முன்னோக்கி வந்தாள்.

“இதே ரெஸ்டாரண்ட்டை ஹனிமூன் சூட்டாக கன்வர்ட் பண்ணி கொடுக்கறாங்களாம். தங்கிடுவோமா…?” ரகசியக் குரலில் ஆரம்பித்து, சிரிப்புடன் முடித்தான்.

அவள் எதுவும் சொல்லாமல், அவனிடமிருந்து கண்களை விலக்கி விரல்களால் தட்டை அளைந்தாள்.

“உனக்கும் இந்த இடம் ரொம்பவே பிடிச்சிருக்குன்னு நினைக்கிறேன். ரூம்ல ஆளுக்கொரு பக்கமா சுவத்தை பார்க்காமல் இங்கிருந்து கடலைப் பார்க்கலாமில்ல” என்றான் கிண்டலாக.

அவன் விளையாட்டாகத் தான் சொன்னான். ஆனால் அவளுக்கு அந்த வார்த்தைகள் சுருக்கென இதயத்தில் தைத்து, வேதனையைக் கொடுத்தது. அதுவரை இருந்த இதமான உணர்வு தொலைய, சட்டென நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

கண்கள் கலங்க, “எனக்குப் போதும்” என்றவள், அவன் ஏதும் சொல்லும் முன்
பாதி உணவிலேயே எழுந்துவிட்டாள்.

”ஷாலு!” என்றழைத்ததை அவள் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

யதார்த்தமாகச் சொல்லப் போய், அவளது மனத்தை நோகடித்து விட்டேனே!’ என்று கவலை கொண்டான்.

முகத்தைத் துடைத்தபடி திரும்பி வந்தவளை கூர்ந்து பார்த்தான். அழுதிருக்கிறாள் என்று புரிய, அன்றைய தினத்தின் உற்சாகமெல்லாம் மொத்தமாக வடிந்துவிட்டது போலாயிற்று அவனுக்கு.

அத்தியாயம் - 60

“குட்மார்னிங்!” வைஷாலியின் குரல் கேட்டு, மெல்லக் கண்விழித்தான் விக்ரம்.

அவன், உறக்கம் கலைந்து கண்விழிப்பதைப் பார்த்ததும், அவனைப் போலவே புருவத்தை உயர்த்தி, கண்களைச் சிமிட்டினாள்.

அதிகாலையில் மொட்டுவிட்ட புதுமலராக, தன்னருகில் நிற்பவளைப் பார்த்து, “குட்மார்னிங்!” என்றான் பதிலுக்கு.

இரவு நடந்த நிகழ்வுகளின் தாக்கம் சிறிதும் இல்லாமல், சிரிப்புடன் நின்றவளை கண்கொட்டாமல் பார்த்தான்.

“எக்ஸ்கியூஸ்மீ! இன்னும் எத்தனை நேரம் இப்படியே பார்க்கறதா உத்தேசம்?” - கேட்டவளது குரல் குழைந்தது.

‘காலங்கார்த்தால இப்படி அப்சரஸ் மாதிரி வந்து நின்னுட்டு கேள்வியா கேட்கற? உன்னை… இருடி இருக்கு உனக்கு’ வாய் வரை வந்த வார்த்தைகளை மனத்திற்குள் புதைத்துக் கொண்டு, சோம்பல் முறித்தபடி எழுந்தவன், “நாள் முழுக்கக் கூடப் பார்ப்பேன். என்னைவிட யாருக்கு அந்த உரிமை இருக்கு?” - அவள் மீதான பார்வையை விலக்காமல் சொன்னான்.

வெட்கத்தில் முகம் சிவக்க, “போதுமே. போய் முகத்தைக் கழுவிட்டு வாங்க” என்று, கையிலிருந்த துண்டைத் தன் தோளில் போட்டுக்கொண்டு, அவன் முதுகில் கைவைத்து குளியலறை பக்கமாக தள்ளினாள்.

அவன் வேண்டுமென்றே நகராமல் பின்னால் அவள் மீது சாய முயல; அவளோ, தனது முழுத் திறனையும் பயன்படுத்தி அவனை முன்னே தள்ளினாள். அவன் அசைந்து கொடுத்தால் தானே இப்படியே மாற்றி மாற்றிச் செய்ய, வைஷாலியால் முடியாமல், “விக்ரம்…!” என்று செல்லமாகச் சிணுங்கினாள்.

சிரிப்புடன் அவள் தோளிலிருந்த துண்டை எடுத்துக் கொண்டு

குளியலறைக்குள் நுழைந்தான்.

உள்ளத்தில் உற்சாகம் கரைபுரள, பாடல் ஒன்றை முணுமுணுத்தபடி கண்ணாடியைப் பார்த்தாள். வெகு நாட்களுக்குப் பிறகு தனது முகம் அழகாக இருப்பது போல தோன்றியது. கூடவே உள்ளுக்குள் எழுந்த நினைவுகளைத்
தலையை உலுக்கி துடைத்தெறிய முயன்றாள்.

‘இப்போ நடப்பது தான் நிஜம். இனி இதுதான் என்னுடைய வாழ்க்கை. விக்ரமை நான் நேசிக்கிறேன்… விக்ரமை நான் நேசிக்கிறேன்’…’ கடைசி வாக்கியத்தை மட்டும், கண்களை மூடி பலமுறை தனக்குள் உச்சரித்துக் கொண்டாள்.

மெல்ல இமைகளை விரித்தவளுக்கு, மீண்டும் கண்ணாடியில் தனது முகத்தைப் பார்க்க தைரியமில்லை. ஆழ்ந்த மூச்செடுத்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, வெளியே கிளம்ப ஆயத்தமானாள்.

அதேநேரம் தலையைத் துவட்டியபடி வந்தான் விக்ரம்.

“குளிச்சிட்டே வந்தாச்சா?” என்றவள், “இந்த கிரீன் டீயைக் குடிச்சிட்டு கிளம்புங்க. அப்படியே ஒரு வாக் போய் வரலாம்” என்றாள்.

“டன் மேடம்!” என்றான்.

கடலும், வானும் இணைந்த புள்ளியிலிருந்து, தகதகவென மின்னியபடி சிறிதுச் சிறிதாக மேலெழும்பி, தன் பிரதிபலிப்பை மடிதாங்கிய கடலன்னையை, பொன்னிறமாக்கி அழகுக்கு அழகு சேர்த்தான் ஆதவன்.

அதன் அழகில் லயித்திருந்தவனிடம், “ரொம்ப அழகா இருக்கு இல்ல?” என்றபடி அவனை நெருங்கி நின்றாள்.

திரும்பிப் பார்த்தவன், துறுதுறுவென்ற அவளது விழிகளில் தொலைந்தவனாக, “ஆமாம். உன்னை மாதிரியே…” என்றவனது கண்களில் காதல் பொங்கியது.

வெட்கத்தில் முகம் சிவக்க, தயக்கத்துடன் அவனது கரத்தைப் பிடித்தவள், மெல்ல இரண்டு கைகளாலும் அவனது கரத்தைச் சேர்த்துப் பிடித்தபடி, “நம்மள மாதிரி” என்றாள்.

சொல்லிவிட்டாலும், மனம் படபடவென அடித்துக் கொண்டது. ‘இரண்டு நாட்களாக அவனைச் சோதிப்பதையே வேலையாக, தான் செய்து கொண்டிருக்க, இந்த நேரத்தில் அவன் இதை எப்படி எடுத்துக் கொள்வானோ?’ என்ற பயம் இருந்தது. அவளது முகமும் அதைக் காட்டிக் கொடுத்தது.

இருமனதாக போராடிக்கொண்டிருக்கும் அவளது உணர்வுகளைப் படித்தவனாக, மென்மையாகப் புன்னகைத்தான். இத்தனை விரைவில் தன் கூட்டை விட்டு அவள் வெளிவரத் துவங்கியிருப்பதே அவனுக்குப் பெரும் வியப்பையும், ஆச்சரியத்தையும் கொடுத்தது. ஆனாலும், அவளது விழிகளில் தெரிந்த எதிர்பார்ப்பை, அவன் பொய்யாக்க விரும்பவில்லை.

“ஷாலு!” என்றவன், அவளது முகத்தைக் கைகளில் ஏந்திக் கண்களை ஊடுருவினான்.

“ப்ளீஸ் விக்ரம்! அப்படிப் பார்க்காதீங்க…” குரல் கரகரத்தது அவளுக்கு.

புன்னகையுடன் அவளைத் தனது தோளோடு சேர்த்தணைத்தான். ஒரு மோன நிலையிலேயே இருவரும் ரிசார்ட்டிற்குத் திரும்பினர்.

அறைக்குள் வந்தவள் கணவனின் முகம் பார்க்க முடியாமல், தயங்கித் தயங்கி நின்றாள். அவனுக்குமே அவளது நிலைப் புரிந்தது; தன்னையும் நிதானப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்ததால் முன்னறையிலேயே அமர்ந்து கொண்டான்.

ஆனால், தனது உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டுவருவது தான் அவனுக்குப் பெரும் பாடாக இருந்தது. இதற்கு மேலும் ஒரு பெண் எப்படித் தனது காதலை வெளிப்படுத்துவாள்? இத்தனை நாள் காத்து வந்த கண்ணியம், நாகரீகம் என்ற, அத்தனை முகமூடிகளையும் கழற்றி, தூக்கியெறிந்து விடும் வேகம் வந்தது.

இருந்தும், அவள் நெகிழ்ந்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள, அவனது இயல்பு தடுக்க, தனது உணர்ச்சிகளை அடக்கினான். ‘இது இன்னும் எத்தனை நேரத்திற்கு இருக்குமோ? கொஞ்சம் பொறு மனமே! ஆக்கப் பொறுத்தாச்சு, ஆறப் பொறுக்க முடியாதா?’ என்று, தலைதூக்கிய ஆசைகளைத் தட்டி அடக்கினான்.

கைக்கடிகாரத்தைப் பார்த்தான். ஒன்றரை மணி நேரமாகியிருந்தது. இத்தனை நேரமா உணர்வுச் சூழலில் சிக்கித் தவித்திருக்கிறோம்…’ என்று சிரித்துக் கொண்டான்.

“ஷாலு!” என்றபடி அறைக்கதவைத் திறந்தவன், தான் அழைத்தது கூடத் தெரியாமல், காதல் உணர்வில் கட்டுண்டு கிடந்தவளை

ஆழப்பார்த்தான்.

கண்களை மூடி உடலை மடக்கிக் கொண்டு இருக்கையில் அமர்ந்திருந்த கோலத்தில், அவனது உள்ளம் தடுமாறியது. தலையை அழுந்த கோதி, நெஞ்சை நீவிட்டுக் கொண்டான்.

வேகமாக மூச்சை இழுத்துவிட்டவன், “ஷாலு!” என்று அவளது தோளில் கைவைத்தான்.

அவனது ஸ்பரிசத்தில் கனவு கலைந்தவளாக, சட்டென விழித்தாள். தன்னருகில் நின்றிருந்தவனைக் கண்டதும், எழுந்து நின்றாள். இருவரின் பார்வையும் சிலநொடிகள் தழுவி விலகின.

“கிளம்பலாமா…? சாப்டுட்டு, போகச் சரியா இருக்கும்” என்றான்.

அவள் அமைதியாக தலையசைத்தாள்.

அவளை ஒரு படகு குழாமிற்கு அழைத்துச் சென்றான். அங்கிருந்து ஒரு படகில் சற்றுத் தூரம் செல்ல, அங்கு கடலில் இரண்டு மிதவைகள் இருக்க அதில் ஒரு மிதவைக்கு மாறினர். வைஷாலி, இரு மிதவைகளுக்கும் நடுவிலிருந்த ஒரு பெரிய பொருளைப் பார்த்தாள். அது ஒரு நீர் மூழ்கிக் கப்பல்.

ஆஹா! நீர்மூழ்கிக் கப்பலில் பயணமா?’ என்று அவள் பிரமிப்புடன் பார்த்துக்கொண்டிருக்க, கப்பலுக்குள் செல்லும்படி அறிவிப்பு செய்தனர். அலைகளுக்கு ஏற்ப கப்பல் ஆட, அதனுள்ளே இறங்குவது சற்றுச் சிரமமாக இருந்தது.

உள்ளே சென்றதும் ஒரு கண்ணாடி ஜன்னலின் அருகில் அமர்ந்தனர். சில நிமிடங்களில் கப்பல் மூழ்கத் தொடங்க, ஆர்வத்துடன் ஒரு பரபரப்பும் இருந்தது. அவள் முகத்தில் தெரிந்த கலவரத்தைக் கண்ட விக்ரம், தோளில் கைப் போட்டு அழுந்தப் பிடித்துக் கொள்ள, அவளுக்குள் சில்லென்ற உணர்வு பரவ, புன்னகைத்துக் கொண்டாள்.

முதலில் கலங்கலான தண்ணீரும், மெல்ல மெல்லப் பளிங்கு போன்ற நீரும் தென்பட, வண்ணவண்ண மீன்கள் இங்குமங்குமாக நீந்திக் கொண்டிருப்பது தெரிந்தது. இன்னும் கொஞ்சம் ஆழம் செல்ல, பவழப் பாறைகளும், அவற்றில் வாழும் பெயர் தெரியாத உயிரினங்களையும் கண்டு களித்தனர்.

நீர்மூழ்கியின் அருகில் மீன்களை வரவைப்பதற்காக, டைவர்கள் அவற்றிற்குத் தேவையான உணவைக் கொண்டுவர, உடனே மீன்கள் அவர்களைச் சுற்றி வர ஆரம்பித்தது.

மீண்டும் மேலே வந்த போது, கடலுக்குள்ளேயே சென்று வந்ததைப் போன்ற சந்தோஷமும், புதுவித அனுபவமும் தனக்கு மிகவும் பிடித்திருந்தது என்று தனது உணர்வுகளைக் கணவனிடம் பகிர்ந்து கொண்டாள்.
“கடலுக்கு உள்ளேயே போய் பார்க்கறியா?” என்றான்.

“அச்சச்சோ, என்னால முடியாது” என்றாள்.

“மால்தீவ்ஸ் பார்க்கணும்னு ஆசை. ஆனால் கடலைக் கண்டால் அவ்வளவு பயம்?” என்றான் கேலியாக.

“அதென்னவோ தெரியலை சின்ன வயசுல இருந்தே அப்படித்தான்.

அப்போ எனக்கு எட்டு வயசு இருக்கும். நீச்சல் கத்துக்க க்ளாஸ்க்கு போனேன். ஆரம்பத்தில் கூடவே இருந்து சொல்லிக்கொடுத்த போது ஓரளவுக்கு கத்துகிட்டேன். திடீர்ன்னு ஒருநாள் நீச்சல்குளத்தில் இறக்கி விட்டதும் சொய்ங்குன்னு உள்ளே போய்ட்டேன்.

“அப்புறம்…”

“அப்புறம் என்ன? என்னைக் காப்பாத்த வந்தவங்க கழுத்தையும் பிடிச்சி உள்ள இழுத்து, கொலை பண்ற அளவுக்குப் போயி…” என்று சிரித்தாள். “ஐயோ! ஏண்டா இந்தப் பொண்ணைக் காப்பாத்த வந்தோம்ங்கற நிலைக்கு அவங்களை ஆளாக்கி… கடைசியில் ஒரு வழியா மேலே வந்துட்டேன்” என்று தான் நீச்சல் பழகிய விதத்தைச் சிரிப்புடன் பகிர்ந்து கொண்டாள்.

அவளது சிரிப்பையே இமைக்காமல் பார்த்தான். “ஐ லவ் யூ ஷாலு!” என்றான் உருக்கமாக.

திகைத்துப் போனாள் வைஷாலி. எதுவும் சொல்லாமல் தலையை குனிந்து கொண்டாள்.

அவனோ அதற்காகச் சிறிதும் சஞ்சலப்படாமல், “போலாமா?” என்று அவள் கரத்தைப் பிடித்து அழைத்துச் சென்றான்.

அடுத்ததாக அவன் அழைத்துச் சென்ற இடத்தைப் பார்த்ததும், ‘ஐயோ’ என்று அலறத் தோன்றியது அவளுக்கு.

அத்தியாயம் - 61

“நோ… நோ… நோ… விக்ரம்! என்னால முடியாது. ப்ளீஸ்!” என்றாள் கெஞ்சலாக.

“ஹேய்! உன்னை எதுக்காகவாவது இதுவரை கம்பெல் பண்ணியிருக்கேனா? ஹூம்…” என்றவனைப் பார்த்து இல்லையென்பது போல தலையசைத்தாள்.

“அப்போ எனக்காக…” கெஞ்சலும் கொஞ்சலுமாகக் கேட்டவனிடம் அவளால் மறுக்க முடியவில்லை. “தேங்க்யூ” ஆத்மார்த்தமாகச் சொன்னான்.

வானில் கருமேகங்கள் சூழ ஆரம்பிக்க, சற்று நேரத்திற்கெல்லாம் சடசடவெனக் கொட்டித் தீர்ந்தது மழை. அந்தச் சிறிய க்ரூஸில் அமர்ந்திருந்தவளுக்கு, கடலைப் போலவே அவளது மனமும் ஆர்ப்பரித்தது.

பத்துநிமிடத்தில் மழை அடங்கிவிட, விக்ரம், டைவிங் உடையை அணிய ஆரம்பித்தான். உள்ளப் பரிதவிப்பை வெளிக்காட்டாமல் தனக்கான உடையைக் கேட்டாள்.

“நீ இங்கேயே இருடா. நான் மட்டும் போய் வரேன்” என்றான்.

அதைக் கேட்டவளது கண்கள் பெரிதாக விரிந்தன. “விளையாடுறீங்களா? கடலைப் பாருங்க எப்படி இருக்கு?” கோபத்துடன் கூறினாள்.

“உனக்குச் சாதாரணமாவே பயம் அதான் அப்படித் தெரியுது. இது சேஃப் தான்டா” என்றான்.

“நான் உங்களைத் தனியா விடமாட்டேன்” கண்கள் கலங்கின அவளுக்கு.

“அப்போ போகாமல் விட்டுடவா? வீணா சீன் கிரியேட் பண்ணாதே” என்றான் லேசான எரிச்சலுடன்.

“நான், உங்களைத் தடுக்கல. ஆனா, தனியா போக விடமாட்டேன். நா…நானும் வரேன்” என்றாள் திக்கித் திணறி.

இப்போது அவளை ஆச்சரியத்துடன் பார்ப்பது அவனது முறையானது. “உனக்குப் பயமாயில்ல!”

“நீங்க இருக்கீங்களே…”

நெகிழ்ந்து போய் நின்றான். தன் மீது அவளுக்கு எவ்வளவு காதலிருந்தால் இப்படியொரு பதிலைச் சொல்லுவாள்! இறக்கை இல்லாமல் பறந்தான். ஆசையும், தாபமும் போட்டி போட, சட்டென அவளை அணைத்து நெற்றியில் முத்தமிட்டான். அவள் இசைந்து கொடுத்தாள். சூழ்நிலை உணர்ந்து இருவரும் அதே வேகத்தில் விலகினர்.

செஞ்சாந்தாய் சிவந்த அவளது கன்னத்தைத் தட்டி, “தேங்க்யூ” என்றான் உள்ளார்ந்த காதலுடன்.

அடுத்து ஸ்கூபா டைவில் என்ன செய்ய வேண்டுமென்று அவன் விளக்கியதை, கவனமாகக் கேட்டுக் கொண்டாள். அப்போது சிலர் கையில் முக்காலி போன்ற இரும்பு ஸ்டூல் ஒன்றைக் கடலுக்குள்

எடுத்துச் செல்ல, அது என்னவென்று அவர்களிடம் விசாரித்தாள்.

அந்த இரும்பு முக்காலியில், துரு பிடிக்காமலிருக்க பெயிண்ட் அடித்து, காய்ந்ததும் உயிருள்ள பவழப் பாறையின் ஒரு சிறு பகுதியை வைத்துக் கட்டி ஆழ்கடலில் கொண்டு சென்று வைத்துவிட்டால், அதில் முழுதுமாக பவழப்பாறை புதிதாக வளருமென்று விவரம் சொன்னார்கள்.

உடனே தாங்களும் அதைப் போலச் செய்யலாமென்று விக்ரமிடம் கூற, அவனும் அதை ஒப்புக் கொண்டான். இருவரும் சேர்ந்து கடலில் ஒரு இடத்தில் அவற்றை வைத்தனர். பல இடங்களில் இதைப் போன்ற முக்காலிகளைப் பார்த்தாள்.

கணவனுடன் கைக் கோர்த்தபடி கடலில் ஆழத்தில் பவழப்பாறைகளை பார்வையிட்டாள். ஜெல்லி மீன்களைக் கண்டாள். மொத்தத்தில் அந்த நேரத்தை முழுதாகச் சந்தோஷத்துடன் அனுபவித்தாள்.

மீண்டும் குரூஸிற்குத் திரும்பி வந்து, மதிய உணவை அங்கேயே முடித்துக் கொண்டனர்.

கரைக்குத் திரும்பியவர்கள் கடலோரமாகவே ரிசார்ட்டை நோக்கி நடந்தனர். ஆள் நடமாட்டமே இல்லாமல் இருந்த தீவில் அலைகளின் பொருமல் சப்தமும் மட்டுமே கேட்டுக் கொண்டிருந்தது.

மழை வருவதற்கான அறிகுறியுடன் சிலுசிலுவென வீசிய குளிர்க் காற்றும் ஒருவிதச் சந்தோஷத்தைக் கொடுக்க அதை அனுபவித்தபடி நடந்தவளை, “ஷாலு! இஃப் யூ டோண்ட் மைண்ட். இதில் போகலாமா?” என்றான்.

கடலுக்கு மேல் நடந்து செல்லும்படி, ஐந்தடி அகலத்தில் பக்கவாட்டுச் சுவரோ, தடுப்போ எதுவும் இல்லாமல் நீண்டிருந்த மரப்பாலத்தைக் காட்டினான்.

கொந்தளிப்பாக இருந்த கடலும், சுழன்றடித்துக் கொண்டிருந்த காற்றும் அவளுக்கு அச்சத்தைக் கொடுத்தாலும், அவன் உடனிருக்கும் தைரியத்தில், “ம்” என்றாள் அரைமனத்துடன்.

அவன் கரத்தைப் பிடித்தபடி, பாலத்தின் மறுமுனை வரை சென்றாள். லேசான அச்சமிருந்தாலும், ஒரு பரபரப்பாகவும் இருந்தது.

திரும்பி அவளாது முகத்தைப் பார்த்தவன், “ஸ்கூபா டைவிங் போனோமே, அந்த எக்ஸ்பீரியன்ஸ் எப்படியிருந்துச்சு? நீ எதுவுமே சொல்லலையே” என்றான்.

“நாட் பேட்” என்றாள் சாதாரணமாக.

“அவ்வளவு தானா?” அவனது குரலில் சிறு ஏமாற்றம்.

“ஆமாம்” - விழிகளில் குறும்புச் சிரிப்பு மின்னியது.

அதைக் கண்டுகொண்டவன், “பொய்” என்றான் அழுத்தமாக.

“சேச்சே, நிஜம்” என்றாள் பார்வையை மாற்றாமல்.

“நிரூபிச்சிட்டா?”

“லை டிடெக்ட்டர் வச்சா?”

அவளைப் போலவே, “சேச்சே” என்றவன், “எக்ஸ்ரே காமெரா” என்றபடி, இருகைகளாலும் அவளது இடையை வளைத்து அருகில் இழுத்தான்.

“விக்ரம்! என்ன இது? பப்ளிக் ப்ளேஸ்ல…” அவனது நெருக்கத்தை விரும்பிய போதும், இயல்பான கூச்சமும், சூழ்நிலையும் அவளைத் தடுத்தது.

“ஹே! சுத்திப்பாரு கண்ணுக்குத் தெரிந்த வரைக்கும் யாருமே இல்லை. அதோட நான் வெறும் எக்ஸ்ரே தானே பண்ணப்போறேன். நீயா ஏன் எதையாவது கற்பனை பண்ணிக்கிற?” என்று அவளது நெற்றியில் முட்டிச் சிரித்தான்.

“ச்சீய்…” என்று ராகம் பாடி விலக முயன்றவளை, அவன் விட்டால்தானே.

அவன் பார்வையில் வெட்கியவளாக, ஒருகையால் அவனது கண்களைப் பொத்தினாள்.

ஒரு கரம் அவளது இடையை வளைத்திருக்க, மறுகரத்தால் தனது கண்களைப் பொத்தியிருந்த அவள் கரத்தை அழுந்தப் பற்றியவன், மெல்ல இறக்கினான்.

கூர்மையான அவனது நாசியைக் கடந்து, ட்ரிம் செய்யப்பட்டிருந்த மீசையில் விரல்கள் பட, குறுகுறுப்பில் சிலிர்த்த அவளது உடல், கடைசியாக அவனது உதடுகளை ஸ்பரிசிக்க, அவஸ்தையில் தவித்தாள். தவிப்பின் வெளிப்பாடாக இதயம் வேகமாகத் துடித்தது.

உதடுகளில் தங்கிவிட்ட அவள் விரல்கள் ஒவ்வொன்றிற்கும் நிதானமாக முத்தமிட்டவன், தனது நெஞ்சில் தலைசாய்த்துக் கொண்டவளை ஆறுதலாக தட்டிக் கொடுத்தான்.

“ஷாலு!” மென்மையாக அழைத்தான்.

“ம்” முகத்தை நிமிர்த்தாமலே குரல் கொடுத்தாள்.

“இது பப்ளிக் ப்ளேஸ்ன்னு யாரோ சொன்னாங்களே… அவங்க இப்போ எங்கேன்னு உனக்குத் தெரியுமா?” என்றான்.

அவ்வளவுதான் சடாரென அவனிடமிருந்து விலகியவள், முகம் சிவக்க கரையை நோக்கி ஓடினாள்.

“ஷாலு! நான் கண்டுபிடிச்ச எக்ஸ்ரே ரிசல்ட்டை இன்னும் சொல்லலையே… உனக்குத் தெரியவேணாமா?” என்று உரக்கச் சொன்னவனது குரல்கூட, அவளை நிறுத்தவில்லை.

அவளது வெட்கத்தை உணர்ந்து உல்லாசமாகச் சிரித்துக் கொண்டான் விக்ரம்.

அத்தியாயம் - 62

ஒரு மரக்கிளையைப் பற்றிக் கொண்டு, மறுபுறமாக திரும்பி நின்றிருந்தவள் அருகில் வந்து நின்றான்.

“இன்னைக்கெல்லாம் இப்படியே நிக்கிறதா உத்தேசமா? ரூமுக்குப்

போனா ஒரு குளியல் போட்டுட்டு படுத்து எழுந்திரிக்கணும். எனக்கு உடம்பெல்லாம் அடிச்சிப் போட்டது போல இருக்கு. அங்க எப்படி?” என்றான்.

எதுவும் சொல்லாமல் திரும்பியவள், நிலம் பார்த்த விழிகளை உயர்த்தவேயில்லை. புன்னகையுடன் அவளது கையோடு கை கோர்த்துக் கொண்டு ரிசார்ட்டை நோக்கி நடந்தான்.

அலுப்பு தீரக் குளித்துவிட்டு வந்த இருவரும் இருந்த அயற்சியில் ஆழ்ந்து உறங்கிவிட்டனர். அவள் உறக்கம் கலைந்து எழுந்த போது, விக்ரம் கண்ணாடி முன்பாக நின்று தலைவாரிக் கொண்டிருந்தான்.

“எழுந்தாச்சா? நானே எழுப்பலாம்ன்னு இருந்தேன். எட்டு மணிக்கு டின்னருக்கு டேபிள் அரேஞ்ச் பண்ணியிருக்கேன். இன்னும் அரைமணி நேரம் இருக்கு அதுக்குள் தயாராகிடுவியா?” என்று கேட்டான்.

“சரி” என்று கட்டிலிலிருந்து இறங்கினாள்.

முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தவளிடம், “ஷாலு! இந்தப் புடவையை கட்டிக்க” என்று ஒரு கவரை அவளிடம் கொடுத்தான்.

ஓரப்பார்வையால் அவனைப் பார்த்துவிட்டு, சரியென தலையை ஆட்டினாள்.

அவன் கதவை மூடிக்கொண்டு அறையிலிருந்து வெளியேறினான். புன்னகையுடன் கவரிலிருந்த உடையை வெளியே எடுத்தாள்.

நாவல்பழ நிறத்திலிருந்த ஆர்ட் சில்க் புடவையும், டிசைனர் சோளியும்

மிக அழகாக இருந்தது. ஆசையுடன் தடவிப் பார்த்துப் புன்னகைத்துக்கொண்டாள்.

பரபரப்பான மனநிலையுடன் அமர்ந்திருந்த விக்ரம் கதவு திறக்கும் சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். கண்கள் மின்ன, அந்தச் சேலை அவளுக்குப் பாந்தமாக இருக்க, உற்சாகத்துடன் விசிலடித்தான்.

“இந்த அழகான மங்கையின் உடலைத் தழுவும் பெரும் பேறு பெற்ற சேலையே! அவள் உடுத்தியிருப்பதால் நீ அழகாகத் தெரிகிறாயா? அல்லது உன்னை உடுத்தியிருப்பதால் அவளது தோற்றப் பொலிவு கூடியிருக்கிறதா?” என்று சங்கத் தமிழைக் கரைத்துக் குடித்தவனைப் போலப் பேசினான்.

ஏற்கெனவே முகம் பார்க்கத் தயங்கிக் கொண்டிருப்பவளுக்கு மேலும் அவஸ்தையாக இருந்தது.

“ஷாலு! நான்கூட நல்லாவே தமிழ் பேசறேன் இல்ல. இதைத் தான் காதல் வந்தா கவிதை தன்னால வரும்னு சொல்றாங்களோ?” என்றவனை ஓரப்பார்வைப் பார்த்துக் கிளுக்கிச் சிரித்தவள், “இது கவிதையா…? என்றாள்.

“ஏன் இல்லயா?” என்றபடி, அவளது பின்னங்கழுத்தில் கைகளைக் கோர்த்து தன்னருகில் இழுக்க, அவனுக்கு வளைந்து கொடுத்து அருகில் வந்தவள், உதட்டைச் சுழித்துச் சிரித்தாள்.

“என்னைப் பார்த்தா உனக்குப் பாவமா இல்லையா ஷாலு?”

இமைகளைத் தட்டி, ‘ஏன்? என்னாச்சு?’ என்பது போலப் பார்த்தாள்.

“நான் சில விஷயங்களை ரொம்ப ஸ்ட்ரிக்டா கடைபிடிக்கிற ஆள். இப்படி வெட்கப்பட்டு சிரிச்சி, ஓரக்கண்ணால் பார்த்து… பேசாமலேயே என்னைக் காதல் மழையில் நனைய வைக்கிறதுன்னு இப்படி அழிசாட்டியம் பண்ணாதே. என்னோட பொறுமையெல்லாம் ஒரு லெவலுக்குத் தான். அப்புறம் நடக்குற விஷயங்களுக்கு நான் பொறுப்பில்ல சொல்லிட்டேன்” என்றான் கொஞ்சலாக.

அவன் சொன்னதைக் கேட்டுத் திகைப்புடன் அவனைப் பார்த்தவள், வெட்கத்துடன் அவனது நெஞ்சில் சாய்ந்துகொண்டாள்.

“உஷ்! ஹப்பா இது வேலைக்காகாது” என்றவன், “நீ முதல்ல கிளம்பு” என்று, அவளை படுக்கையறை நோக்கி அழைத்துச் சென்றான்.

“டின்னருக்கு போகலாம்னு சொல்லிட்டு….” அவள் வாக்கியத்தை முடிக்கும் முன், மூடியிருந்த திரைச்சீலையை விலக்கியவன், டெக்கிற்குச் செல்லும் பின்பக்கக் கதவைத் திறந்தான்.

டெக்கின் இருபுறமுன், விளக்குகளும், நடுவில் புதிதாக முளைத்திருந்த டைனிங் டேபிள். அதன் மீது உணவுப் பொருட்களை அழகாக அடுக்கியிருக்க, பௌர்ணமி வெளிச்சத்தில் ரம்யமாக இருந்தது. புன்னகையுடன் விக்ரமை பார்த்தாள்.

“நான் தான் சொன்னேன் இல்ல… உனக்குக் கற்பனைச் சக்தி அதிகம்” என்று சிரித்தான்.

“ஹய்யோ! தெரியாம சொல்லிட்டேன் சாரி” என்றாள்.

“ஓகே ஓகே வா” என்று அவளது கரம் பற்றி அழைத்துச் சென்று அமரவைத்தான்.

பரிமாற வந்த ஆட்களை அனுப்பிவிட்டு, இருவருமே ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டனர். மனம் நிறைந்திருந்ததாலோ என்னவோ, பசி பெரிதாக இல்லை. அரை வயிற்றுக்கு மட்டுமே உண்டனர்.

கையைக் கழுவிக்கொண்டு, நாசுக்காக டிஷ்யூவால் உதட்டைத் துடைத்தபடி எழுந்தனர். நிமிடத்தில் அங்கிருந்த உணவு மேசை அகற்றப்பட்டு, பழையபடி மாற்றப்பட்டது.

இருவருமே அந்தத் தனிமையை அனுபவித்து மகிழ்ந்தனர். அவனருகில் வந்து நின்றவள், “தேங்க்யூ. அழகான புடவைக்கும், அருமையான கேண்டில் லைட் டின்னருக்கும்” என்றாள்.

“உனக்கு தேங்க்ஸ் கூட ஒழுங்காச் சொல்ல தெரியலையே… இப்படியா சொல்வாங்க?” என்றான்.

“பின்னே எப்படிச் சொல்லுவாங்க?” என்றாள் குழைவுடன்.

சட்டென அவளைத் தன்னருகில் இழுத்தவன், தனது நெஞ்சில் மோதியவளைத் தன்னோடு சேர்த்தணைத்துக் கொண்டான். அவனது முகம் பார்க்கும் துணிவில்லாமல் முகத்தை அவனது நெஞ்சில் புதைத்துக் கொண்டாள்.

“ஷாலு! நான் எவ்வளவு சந்தோஷமா இருக்கேன் தெரியுமா? உனக்கு என்ன வேணும் கேளு…” என்றபடி அவளது முகத்தை உயர்த்தினான்.

“உனக்கு ஒரு நல்ல சான்ஸ். மிஸ் பண்ணிடாதே” என்று கிசுகிசுத்தான்.

“உங்களுக்குப் பிடிச்சது எதுவா இருந்தாலும் ஓகே” என்றாள் மென் குரலில்.

“அப்போ எனக்கு ட்வின்ஸ்” என்றான் குறும்புடன்.

“அப்போ எனக்கும்…” என்றவள் பட்டெனக் கண்களைத் திறந்தாள்.

“அப்போ உனக்கும்… என்ன வேணும்?” என்று புன்னகைத்தான்.

காதல் ததும்பும் அவனது பார்வையால், சில்லென்ற உணர்வு தாக்க, வெட்கத்துடன் விலகி அறைக்குள் ஓடினாள். அவள் பின்னாலேயே விரைந்தவன், வேகமாக அவளது கையைப் பற்றிச் சுவறோடு சாய்த்து நிறுத்தினான்.

மேல்மூச்சு வாங்க, ஒரு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கண்களை மூடி நின்றிருந்தவளது கோலம் அவனுடைய மனத்தில், காதல் தீயைக் கொழுந்து விட்டு எரியச் செய்தது.

மெல்ல அவளது மூக்குடன் மூக்கை உரச, அவளது உடல் சிலிர்த்தது. அவளது கழுத்தில் முத்தமிட, லேசாக நடுங்க ஆரம்பித்தாள். அவனது உதடுகள் முன்னேறி காதுமடலை வருட, அவனது கரங்கள் அவளது வெற்றிடையில் பரவியது. அவனது உதடுகள் அவளது இதழ் தீண்டிய நேரம் அதுவரை தாக்கு பிடித்த வைஷாலி, திமிற ஆரம்பித்தாள்.

காதல் வேகத்திலிருந்தவனுக்கு அவளது மாற்றம் புரிபடவில்லை. இடையிலிருந்த கரத்தை அவள் தள்ளிவிட முயல, அதைக் கூச்சம்

என்று நினைத்து புறந்தள்ளினான்.

ஆனால், வைஷாலி திடீரென ஆவேசம் வந்தவள் போல முழு ஆற்றலையும் திரட்டி அவனைத் தள்ளிவிட, கட்டிலில் விழுந்தான்.

அவன் கையில் அகப்படாமல் ஓட முயன்றவளை, விளையாடுகிறாள் என்று நினைத்து எட்டிப் பிடித்தான்.

“ப்ளீஸ் விக்ரம்! வேண்டாம்” என்ற அவளது கெஞ்சல் கூட, அவனுக்குக் கொஞ்சலாகத் தோன்றியது.

“அதெப்படி... அப்புறம் நீ கேட்ட ட்வின்ஸ் எப்படி வரும்?” என்று அவன் கேலி பேசியவன், தனது இரு கைகளிலும் அவளை ஏந்த, வைஷாலி கலவரமானாள்.

“விக்ரம்! வேண்டாம்...” என்று மீனாகத் துள்ளினாள்.

வைஷாலியின் பேச்சில் எரிச்சலடைந்த விக்ரம், அவளது முகத்தைப் பார்த்தான். அதுவரை அவன்னைப் பீடித்திருந்த காதலெனும் மாயவலை அறுந்துவிழ, அவளது மனநிலையைத் துல்லியமாக உணர்ந்து கொண்டான். அந்த நொடி தனது அத்தனைக் காதலையும் ஒதுக்கி வைத்துவிட்டு, ‘அவளைத் தேற்றுவது தான் இப்போது முக்கியம்’ என்றுணர்ந்து, அவளை நெருங்கினான்.

“ஷாலு! ப்ளீஸ்... இங்கே பார். நான் சொல்றதை கேளு” என்று, அவளது தோள்களைப் பற்றினான்.

அவன் ஆறுதலாகப் பேச வந்ததை சற்றும் உணராமல், அவன்

கைகளைத் தட்டிவிட்டாள். "என்னை ஏன் இப்படி கொல்றீங்க? நான்தான் சொல்றேனே... வேணாம்ன்னு. ஏன் புரிஞ்சிக்க மாட்டேன்றீங்க. அப்போ உன்னோட மனசு தான் எனக்கு முக்கியம்ன்னு சொன்னதெல்லாம் பொய்யா? ஆனால், உங்க மனசுல அப்படி ஒரு நினைப்போட என்கிட்ட வந்தா என்னையே நான்..." என்று உளறிக்கொண்டே போக, "வைஷாலி!" என்று உறுமினான்.

கண்கள் கோபத்தில் துடிக்க, கைகளை இறுக மூடி ஆத்திரத்தைக் கட்டுப்படுத்தினான். கொஞ்சம் கூடத் தன்னுடைய விளக்கத்தைக் கேட்காமல் தனது காதலைச் சந்தேகித்ததை, அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

சுட்டுவிரலை நீட்டியபடி கண்களை அழுந்த மூடித் திறந்தவன், "இன்னொரு வார்த்தை பேசின..." என்றவன் வாக்கியத்தை முடிக்காமல் அவளை உறுத்து விழித்தான்.

அவனது பார்வையில் அடங்கியவளாக, மெல்ல எழுந்தாள்.

தலையை அழுந்தக் கோதியவன், தனது கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல், அருகிலிருந்த ஃப்ளவர் வாஸைத் தூக்கி சுவற்றில் விட்டெறிந்தான். கிரஷ்ட் கிளாஸ் வாஸ் உடைந்து அறையெங்கும் சிதற, அதே கோபத்துடன் அறையிலிருந்து வெளியேறினான்.

அதிர்ந்த முகத்துடன் நின்றிருந்த வைஷாலி, மெல்ல நிதானத்திற்கு வர, "சாரி விக்ரம்!" என்று முணுமுணுத்தவள், முகத்தை மூடிக்கொண்டு கதறினாள்.

நள்ளிரவு வரை பீச் மணலில் வானத்தைப் பார்த்தபடி படுத்திருந்தான்.

லேசான குளிர்க் காற்று உடலை வாட்ட, நைந்த மனத்துடன் ரிசாட்டிற்குத் திரும்பினான்.

அறை முழுதும் சுத்தம் செய்யப்பட்டுச் சிதறியிருந்த கண்ணாடிச் சில்லுகள் ஒரு பேப்பரில் சேர்த்து வைக்கப்பட்டிருந்ததைக் கவனித்தான். கட்டிலுக்கு மறுபக்கமிருந்த சோஃபாவில் தலைசாய்த்தபடி தரையில் அமர்ந்த நிலையிலேயே உறங்கிவிட்டிருந்தாள். அவள் கன்னங்களில் காய்ந்திருந்த கண்ணீர் கறையைக் கண்டதும் அவனது உள்ளம் பரிதவித்தது. இருந்தும் அவளது வார்த்தை தந்த வேதனையுடன், தன்னைத் தேற்றிக்கொண்டு முன்னறைக்கு வந்து சோஃபாவிலேயே படுத்துவிட்டான்.

அத்தியாயம் - 63

“ஆமா, நாளைக்கு காலைல நான் ஆஃபிஸ் வந்ததும் பார்த்துக்கலாம். இப்போ ஒண்ணும் அவசரமில்ல” போனில் யாரிடமோ உரக்கப் பேசியபடி, முன்னறைக்கு நகர்ந்தான்.

அவனுடைய குரலைக் கேட்டே கண்விழித்த வைஷாலி, அவன் குளித்துத் தயாராகி நிற்பதைப் பார்த்த பின்பே அவன் பேசிய பேச்சின் அர்த்தத்தை உணர்ந்தாள். பத்துநாள் என்று வந்தவன் தன்னால் மூன்றே நாளில் கிளம்பும்படி ஆக தான்தானே காரணம் என்ற வேதனையில் கலங்கினாள்.

உள்ளே வந்து கப்போர்டில் எதையோ தேடியவனை, “வி..க்..ரம்!” என்றழைத்தாள்.

“பத்து மணிக்கு ஃபளைட். ப்ரேக் ஃபாஸ்ட் வரும் சாப்டுட்டு கிளம்பு” என்றவன் தனது வேலையில் கவனமானான்.

அழுத்தம் திருத்தமாக அவன் சொன்னதே, 'பேசாமல் வேலையைப் பார்' என்றதைப் போலிருக்க, கண் கலங்க நின்றாள்.

இரவு வீட்டிற்கு வந்து சேரும் வரை அவளிடம் எதையும் அநாவசியமாக பேசாவிட்டாலும், அவளது தேவைகளை ஒரு நல்ல கணவனாக, பொறுப்பாக கவனித்துச் செய்தான்.

மூன்று நாட்கள் யாரையும் தெரியாத அந்நிய மண்ணில், காதல் பறவைகளாக சிறகடித்துப் பறந்து சந்தோஷத்தை அனுபவித்த இருவரும், தங்களது சொந்த வீட்டில் ஒருவரை ஒருவர் அந்நியமாக உணர்ந்தனர்.

உடை மாற்றிக் கொண்டு கீழ்தளத்திற்கு வந்தவன், தனது பெற்றோரின் அறையிலேயே படுத்துவிட்டான். உறக்கம் வராமல் படுத்திருந்த வைஷாலி, அவன் இன்னும் வரவில்லையே என்ற எண்ணத்துடன் கீழே இறங்கி வந்தாள்.

ஹால் இருண்டிருக்க, மாமனாரின் அறையில் ஏசி ஓடும் சப்தம் கேட்டுக் கதவைத் திறந்து பார்த்தவள், விளக்கைக் கூட அணைக்காமல் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்ததும் பொங்கிவந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு விளக்கை அணைத்துவிட்டு அறைக்கு வந்தாள். அன்றைய இரவு, அவளுக்கு உறங்காத நீண்ட இரவானது.

"வைஷு! எப்படிம்மா இருக்க? ரொம்ப நேரமா விக்ரமோட மொபைலுக்கு ட்ரை பண்றேன். அவன் எடுக்கவேயில்லை. நேத்தும்

பேசலையே… அதான் உனக்கு போன் பண்ணினேன். இன்னைக்கு சுத்திப் பார்க்க எங்கே போறீங்க?” ஆர்வத்துடன் மருமகளிடம் விசாரித்தார்.

கலவரமான வைஷாலி, ‘தாங்கள் ஊருக்கு வந்தது இவர்களுக்குத் தெரியாதே… இன்றைக்குப் பிள்ளை போன் செய்யவில்லை என்றதும் அவங்களே போன் செய்துவிட்டார்கள். விக்ரமும் இல்லை. இப்போது என்ன சொல்லிச் சமாளிப்பது?’ - புரியாமல் தவித்தாள்.

“வைஷாலி! லைன்ல இருக்கியா?” என்றார் செந்தளிர்.

“ஹா… இருக்கேன் அத்தை!” என்றவள் தயக்கத்துடன், “அத்தை! நாங்க இப்போ நம்ம வீட்டில் தான் இருக்கோம். ஆ்ஃபிஸ்ல ஏதோ பிராப்ளம்ன்னு போன் வந்ததால, நேத்து நைட்டே திரும்பி வந்துட்டோம். இவர் காலைலயே ஆ்ஃபிஸ் கிளம்பிட்டார். மீட்டிங்ல இருந்திருப்பாங்க… அதான் உங்க போனை எடுத்திருக்கமாட்டாங்க…” மளமளவென நிறுத்தாமல் முழுதாகச் சொல்லி முடித்தாள்.

‘எனக்கு இப்படிக் கொஞ்சம் கூட யோசிக்காமல் பொய் சொல்ல வருமா என்ன?’ என்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.

“ஓ! அப்படியா. சரிம்மா, நான் ஈவ்னிங் பேசறேன்” என்று போனை வைத்தார்.

ஷ் என்று நீண்ட மூச்சை வெளியேற்றித் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டே பொத்தென சோ்ஃபாவில் அமர்ந்தாள் வைஷாலி.

ஏதோ சமாளித்தாகி விட்டதென அவள் நினைத்திருக்க, இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் பாதியிலேயே திரும்பி வந்து விட்ட

மகனையும், மருமகளையும் நினைத்து கவலையுடன் அமர்ந்திருந்தார் செந்தளிர்.

****

அறைக்கதவு தட்டும் ஓசை கேட்டு, “கம் இன்” என்ற விக்ரம் நிமிர்ந்து பார்த்தான்.

கையில் ஹாட் கேஸுடன் நின்றிருந்தாள் வைஷாலி.

வா என்றும் சொல்லாமல், ஏன் வந்தாய் என்றும் கேட்காமல், தன்னையே பார்த்துக் கொண்டிருந்த கணவனது பார்வையை, சற்றும் சளைக்காமல் தாங்கினாள்.

“உங்களுக்கு லஞ்ச் கொண்டு வந்திருக்கேன்” என்றாள்.

அவன் எதுவும் சொல்லாமல், ஃபைலை பார்த்தான்.

“காலைல, அத்தை போன் பண்ணியிருந்தாங்க.”

அவனது விழிகள் ஃபைலில் அசையாமல் நிலைகுத்தி நின்றது.

போனில் அவரிடம் சொன்னதை வார்த்தை மாறாமல் சொன்னவள், “இதைச் சொல்லத்தான் உங்க ஆஃபிஸ் போனுக்கு பண்ணினேன். நீங்கதான் எடுத்துட்டு எதுவும் பேசாமல் வச்சிட்டீங்க” என்றாள் குறையாக.

நிதானமாக இருக்கையில் சாய்ந்து அமர்ந்தவன், “இதைச்

சொல்லத்தான் ஆ்ஃபிஸுக்கு வந்தியா?” என்றான்.

இல்லையென தலையாட்டியவள், “உங்களுக்கு லஞ்ச்சும் எடுத்திட்டு வந்தேன். காலைலயே நீங்க எதுவும் சாப்பிடாம வந்துட்டீங்களே...” என்றாள் அக்கறையுடன்.

கூர்மையான பார்வையை அவள் மீது செலுத்தியவன், “ஓ! நல்ல மனைவியா உங்க கடமையை செய்றீங்க போல!” என்று கேலியாகச் சிரிக்க, வைஷாலி தவித்துப் போனாள்.

“இல்லைங்க...” என்று ஆரம்பித்தவளை, “லஞ்ச் கொண்டு வந்த இல்ல... வச்சிட்டு கிளம்பு” என்றவன், வேலையில் கவனத்தைத் திருப்பினான்.

அவனது கேலியையும், உதாசீனத்தையும், அவளால் தாங்க முடியவில்லை. ‘எல்லாம் என்னால்தானே. எனக்கு இது தேவைதான்!’ என்று மனத்திற்குள் நினைத்தபடி, எதுவும் சொல்லாமல் கிளம்பினாள்.

கலங்கிய விழிகளுடன் அவள் வெளியேறுவதையே, வேதனையுடன் பார்த்தான் விக்ரம்.

மணி இரண்டு. வேலைப் பளுவில், சாப்பிடும் நேரம் தள்ளிப் போனது. காலையிலும் ஒன்றும் சாப்பிடாததால் பசி வயிற்றைக் கிள்ள, கையைக் கழுவிக் கொண்டு வந்தான்.

எல்லாமே அவனுக்குப் பிடித்த உணவு வகைகள். ஆனால், வழக்கத்தைவிட உணவு அளவில் அதிகமாக இருப்பது போலத் தோன்ற, விஷயம் புரிந்து போனது.

பசித்த போதும் சாப்பிடப் பிடிக்காமல் சோஃபாவில் முடங்கிக் கிடந்தவள், அழைப்பு மணி ஓசை கேட்டு, எழுந்து சென்று கதவைத் திறந்தாள். வாசலில் நின்றிருந்த கணவனை சற்றும் எதிர்பாராதவள், அவன் உள்ளே வர வழிவிட்டு ஒதுங்கி நின்றாள்.

சிவந்திருந்த அவளது விழிகளைப் பார்த்தவன், 'செய்யறதையெல்லாம் செய்துட்டு, அப்பப்போ அழுகை வேற…' என்று எரிச்சலானான்.

"காலிங் பெல் அடிச்சா யாரு என்னன்னு பார்க்கமாட்டியா? அப்படியே கதவைத் திறந்து வச்சிட்டு நிக்கிற" என்று கடுகடுத்தான்.

அவனது வருகைக்கான காரணத்தை யூகித்தவளுக்கு, மனத்தில் சந்தோஷ பூ பூத்தது. அவனிடமிருந்த ஹாட் பேக்கை வாங்கிக் கொண்டாள்.

'தான் இங்கே கடுகடுத்துக் கொண்டிருக்க, இவளுக்கென்ன சிரிப்பு?' என்று முறுக்கிக் கொண்டே அறைக்குச் சென்றான்.

அவன் உடைமாற்றிக் கொண்டு வருவதற்குள், தட்டில் உணவைப் பரிமாறினாள். அமைதியாக சாப்பிட்டு முடித்தனர். அவள் டைனிங்கை சுத்தம் செய்துவிட்டு வந்து அமர, அவனும் மொபைலுடன் அவளருகில் வந்தமர்ந்தான்.

அன்னையை அழைத்தவன், "எப்படிம்மா இருக்கீங்க? போன் பண்ணியிருந்தீங்களாம்" என்றான்.

"…………."

“ஆமாம். ஷாலு சொன்னா இல்லயா…”

“…………..”

“அதெல்லாம் ஒண்ணுமில்ல. அவ சரின்னு சொன்னா, அடுத்த மாசமே அவளைக் கூட்டிட்டு சுவிஸ் கிளம்பிடமாட்டேன்” என்று பேசியபடியே திரும்பி அவளைப் பார்த்தான்.

அவனது செயலும், பேச்சுமே தங்களுக்குள் எல்லாம் சரியாகிவிட்டதைப் போலச் சந்தோஷத்தைக் கொடுக்க, ஒரு எதிர்பார்ப்புடன் அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

“…………..”

“உங்களுக்கு அந்தச் சந்தேகமே வேணாம். அவ சந்தோஷமா தான் இருக்கா. வேணும்னா நீங்களே உங்க மருமகளை கேட்டுக்கோங்க” என்று போனை அவளிடம் கொடுத்தான்.

மனநிறைவுடன், “சொல்லுங்க அத்தை!” என்றவள் அவர் கேட்டதற்கெல்லாம், கணவனுக்குச் சாதகமாகவே பதில் சொல்லி முடித்து, போனை அணைத்தாள்.

அதற்குள் அலுவலகத்திற்குச் செல்லத் தயாராகி வந்தவன், “பேசிட்டியா?” என்று கேட்டான்.

“ம்” என்றவள் அவன் தயாராகி நிற்பதைக் கண்டு ஏமாற்றமடைந்தாள்.

“நைட் நான் வர லேட் ஆகும். நீ சாப்பிட்டுட்டு படுத்துக்க” என்றவன்

கிளம்பிவிட்டான்.

மீண்டும் தொடங்கிய இடத்திற்கே வந்து நிற்பதைப் போன்ற உணர்வில் சோர்ந்து போனாள் வைஷாலி.

அத்தியாயம் - 64

இரண்டு நாட்கள் எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் சென்றது. விக்ரமின் வாசம் இப்போதெல்லாம் கீழ் அறையிலேயே நிலைத்துவிட்டது. முக்கியமான வேலை இருந்தாலொழிய அலுவலக அறைக்குக் கூட அவன் செல்லவில்லை. வீட்டிலிருக்கும் போது, விக்ரமிற்கு போன் வரும் போது மட்டுமே அவனது குரலை அவளால் கேட்க முடிந்தது. மற்ற நேரத்தில் ஓரிரு வார்த்தைகள் பேசுவதோடு சரி. அவளெதிரிலேயே அமர்ந்திருந்தாலும் எதுவும் பேச மாட்டான்.

வைஷாலிக்கும், ‘எந்த முகத்துடன் அவனிடம் பேசுவது? என்னவென்று பேசுவது?’ என்ற தயக்கத்திலும், பயத்திலுமே காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தாள்.

அன்று அலுவலகத்திலிருந்து வீட்டிற்குள் நுழைந்தவன், கதவைத் திறந்த சுனிதா தீதீயிடம் என்னவோ சொல்லிவிட்டு, “ஷாலு!” என்று குரல் கொடுத்தான்.

மாடியிலிருந்த பால்கனியில் அமர்ந்திருந்தவள், அவனது அழைப்பைக் கேட்டதும் வேகமாக இறங்கி ஓடிவந்து மூச்சிரைக்க அவன் முன்பாக நின்றாள்.

அவனோ சாதாரணமாக, “யார் வந்திருக்காங்கன்னு பாரு” என்றான்.

அப்போது தான் உள்ளே நுழைந்த சீமாவைக் கண்டதும், “அக்கா!” என்றபடி அவளை எதிர்கொண்டு அழைத்தாள் வைஷாலி.

சுனிதா தயாரித்துக் கொடுத்த டீயுடன் நலவிசாரிப்பு, அரட்டைக் கச்சேரி என்று நீண்ட நாட்களுக்குப் பிறகு வீட்டில் ஒரு இயல்பு தன்மை வந்திருந்தது. ஷாலு, ஷாலு என்று அவன் தன்னிடம் பேசும் போதெல்லாம் அவனைக் கட்டிக்கொண்டு அழவேண்டும் என்ற எண்ணம் தோன்றி, அவளை இம்சித்தது.

தனது கண்ணீரை மறைக்கவே, அடிக்கடி எழுந்து வேலையிருப்பது போல, சமையலறைக்குள் நுழைந்து கொண்டாள்.

“வைஷாலி! நாங்க அங்கே பேசிட்டு இருக்கோம்... நீ இங்கே என்ன பண்ற?” என்றபடி அங்கே சீமா வர, அவசர அவசரமாக அவளுக்கு முகத்தைக் காட்டாமல் ஃப்ரிட்ஜில் எதையோ தேடுவதைப் போலக் குனிந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

“ஸ்வீட் கொண்டு வரேங்க்கா” என்று குரல் கொடுத்தாள்.

“அதெல்லாம் வேணாம் வா” என்று வம்படியாக அவளைப் பிடித்து இழுத்துச் சென்று விக்ரமின் அருகில் அமரவைத்தாள்.

எப்போதும் போல அவள் வளவளத்துக் கொண்டிருக்க, விக்ரமும் சளைக்காமல் அவளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்க, வைஷாலி மௌனமாக அமர்ந்திருந்தாள்.

இரவு உணவும் சற்று தடபுடலாகவே இருந்தது. விக்ரம் வெளியே சென்று சாப்பிடலாம் என்று சொல்லியும், “சுனிதா தீதீ, கையால சாப்பிடணும்னு ஆசையா வந்திருக்கேன். அதைக் கெடுத்துடாதே” என்று தடுத்துவிட்டாள் சீமா.

வைஷாலி, பட்டர் நாணை விக்ரமிற்கு வைக்க, அவன் போதுமென்று எழுந்து கொள்ள அவளது முகம் சுருங்கிவிட்டது.

“வைஷாலி! அவனுக்கு ஏற்கெனவே உடம்பெல்லாம் கொழுப்பு அதிகம். இதில் பட்டர் நாண் இத்தனைச் சாப்பிட்டால் அவ்வளவு தான். சார் இன்னும் ஆறே மாசத்தில் சதுர்ஷிரிங்கி மஹாராஜ் மாதிரி ஆகிடுவார்” என்று கிண்டலடித்தாள்.

வைஷாலி கீற்றாக புன்னகைக்க, விக்ரம் அவளையே ஆழப்பார்த்தான்.

“விக்ரம்! வைஷாலிகிட்ட ரொம்ப மாற்றம் தெரியுதில்லை. கல்யாணத்துக்குப் பின்னால இவ ரொம்பப் பேசறதே இல்லை. போன்லதான் அப்படியிருக்கான்னு பார்த்தா… நேர்லயும் அப்படியேதான் இருக்கா” என்றாள் சீமா யதார்த்தமாக.

“ஆமாமாம். அவளுக்கு இப்பல்லாம் பேசவே வாய் வரமாட்டேன்னுது” என்று கிண்டலாக அவளைப் பார்க்க, வைஷாலிக்கு அவமானமாக இருந்தது. ‘அன்று தான் யோசிக்காமல் பேசிய வார்த்தைகளின் பலன் தான் இதெல்லாம்’ என்று விளங்க, சிரமத்துடன் அதை ஜீரணித்துக் கொண்டாள்.

அவனது அருகாமைக்காக ஏங்கிய மனம், ‘சீமா இருப்பதால், நிச்சயம் இரவு தங்கள் அறைக்குத் தான் உறங்க வருவான்’ என்று நினைத்து,

அத்தருணத்தை ஆவலுடன் எதிர்பார்த்தது. அதைப் பொய்யாக்காமல் வரவும் செய்தான்.

கால்களை நீட்டிக் கட்டிலில் அமர்ந்தவன், "இன்னைக்கு ஒரு நாளைக்கு அட்ஜஸ்ட் பண்ணிக்க. நாளைக்கு ஈவ்னிங் கிளம்பிடுவா.
அதுவரைக்கும் என்னைக் கொஞ்சம் சகிச்சிக்க" என்றான்.

"போதும் விக்ரம்... நானா உங்களை இந்த ரூமில் இருக்கக் கூடாதுன்னு சொன்னேன்?" என்றாள் கோபத்தோடு.

"நேரடியா சொல்லலைனாலும் அர்த்தம் அதுதான். நாளைக்கு நாமளும் அந்த ஃபங்ஷனுக்குக் கட்டாயம் போகணும்னு அம்மா சொல்லியிருக்காங்க. அதனால ஈவ்னிங் தயாரா இரு. ஃபங்ஷன் முடிஞ்சதும் அங்கிருந்து அப்படியே அவ ரத்னகிரி கிளம்பிடுவா. நீயும் அவளோட கிளம்பறதுன்னா கிளம்பு. அம்மா நேத்தே கர்வா சௌத் விரதத்துக்கு வரணும்னு சொன்னாங்க இல்ல" என்றான்.

அவனது பேச்சு வைஷாலிக்கு அலுத்துப் போனது. தனியாகப் போகச் சொன்னது வேறு கோபத்தைக் கிளற, "இல்ல, நான் உங்ககூடவே வரேன்" என்றாள்.

"நான் வரப்போறதில்ல. நீ மட்டும் தான் போகப் போற. தனியா போறதுக்கு இவளோட சேர்ந்து போ" என்றவனது முகம் இறுக்கமாக இருந்தது.

"விளையாடுறீங்களா? விரதத்துக்கு நீங்க கட்டாயம் இருக்கணும். அத்தை சொல்லும் போது சரிசரின்னு தலையாட்டினீங்க இல்ல. இப்போ என்னை மட்டும் போன்னா என்ன அர்த்தம்? நான் மட்டும்

போய் என்ன பண்றது?" என்றாள் எரிச்சலுடன்.

"மிலிட்டரில, ஃபாரின்ல இருக்கவங்க வீட்டுல என்ன செய்வாங்க?" என்று உரக்கச் சொன்னவன், "இங்கே பக்கத்தில் இருந்து மட்டும் என்ன வாழுது?" என்று முணுமுணுத்தான்.

பதில் சொல்ல முடியாமல் திகைப்புடன் அவனைப் பார்த்தாள். "விக்ரம்! நான்..." என்று ஆரம்பித்தவளை, "உன் கதையைக் கேட்க எனக்கு இப்போ நேரமில்ல. நீ வாயை மூடிட்டு இருந்தா, நான் இங்கேயே இருக்கேன். இல்லைனா இப்போவே கிளம்பறேன்" என்றான் கோபத்துடன்.

அவள் பதில் பேசாமல் தன் தலைவிதியை நொந்து கொண்டாள்.

சென்ற வருடம், கர்வா சௌத் அன்று நடந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்த்தவளுக்குப் பெருமூச்சு எழுந்தது. அவனும், அப்போது அதைத் தான் நினைத்தபடி, கண்களை மூடிப் படுத்திருந்தான்.

செந்தளிர் மறுநாளும் போன் செய்து, விழாவிற்குக் கண்டிப்பாகச் சென்று வரவேண்டுமென்று சொல்ல, மூவருமாக கிளம்பினர். ஆனால், அங்கே சென்ற பின்பே, அந்தப் பெண் தான் முதலில் விக்ரமிற்கு பார்த்திருந்த பெண் என்றும், இந்தத் திருமணத்தை முடித்து வைத்ததே விக்ரமின் நண்பன் ரோஹித்தின் மாமியார் மம்தா என்பதும் தெரிய வந்தது.

வைஷாலிக்கு ஏண்டா வந்தோமென்று ஆகிவிட்டது. மாமியார் இப்படிக் காலைவாரி விடுவாரா? அதனால் தான் இருவரையும் சேர்ந்து சென்றுவரச் சொன்னார் போலும்' என்று நினைத்துக் கொண்டாள்.

மம்தா வைஷாலியைப் பார்த்துவிட, அவர் முகம் அஷ்டகோணலாக மாறியது. எதிரில் வந்துவிட்டவரை தெரியாது போலப் போக மனம் வராதவள், அன்னையின் முன்னாள் தோழி வேறு என்ற ஒரே காரணத்திற்காக, நலம் விசாரித்தாள்.

ஆனால், அவரோ தனது மகனது வாழ்க்கையில் மண்ணை அள்ளிப் போட்டவள் என்ற நினைப்பில் ஒரு அருவருப்பான பார்வையை அவள் மீது வீசிவிட்டு நகர்ந்தார்.

பத்தடி கூடச் சென்றிருக்க மாட்டார், எதிரில் விக்ரம் வருவதைக் கண்டதும் வாயெல்லாம் பல்லாக, அவனிடம் நின்று பேச, அவனும் ரோஹித்தின் மாமியார் என்ற காரணத்திற்காக ரெண்டு வார்த்தை நின்று பேசிவிட்டு வந்தான்.

சீமா, வைஷாலியைப் பார்த்து அர்த்தமாகப் புன்னகைத்தாள். “வீட்டைப் பெருக்கும் பொருளா இருந்தாலும், ராஜா வீட்டுதா இருக்கணும் போல. உன்னைக் கண்டால் ஆகலை. உன் வீட்டுக்காரன் மட்டும் உறவாடணுமாம் இப்படியும் சில ஜென்மங்கள் இருக்கே” என்றாள் கசப்புடன்.

வைஷாலி, எதுவும் சொல்லாமல் புன்னகைத்துக் கொண்டாள். மூவரும் சேர்ந்து பேசிக்கொண்டே சாப்பிட்டு முடிக்க, பலரது பார்வை வைஷாலியின் மீதே இருந்தது. எல்லாவற்றையும் கண்டும் காணாமல் இருந்து கொண்டாள். நேரமாகிறதென சீமா விடைபெற்றுக் கிளம்பிவிட, விக்ரம் தங்களுடைய காரை நோக்கி நடந்தான்.

அப்போது செடிகளுக்கு மறுபுறம், இவர்கள் இருப்பதை அறியாத

பெண்கள் கூட்டம் ஒன்று விக்ரம் வைஷாலியைப் பற்றி சுவாரசியமாக பேசிக் கொண்டிருக்க, சட்டென நின்றான் விக்ரம்.

மம்தா அவர்களிடம் வைஷாலியின் வாழ்க்கையை பிட்டுப்பிட்டு வைத்துக் கொண்டிருக்க, அதில் ஒருத்தி, “அப்போ விக்ரமுக்கு எப்பவுமே செக்கண்ட் ஹாண்ட் பொருள் தான் ராசி போல. பிஸினஸிலும் சரி, வாழ்க்கையிலும் சரி” என்று சொல்ல, அங்கே பெரிய சிரிப்பலையே எழுந்தது.

ஆத்திரத்துடன் செடிகளாஇக் கடந்து செல்ல முற்பட, கலங்கிப் போயிருந்த வைஷாலி, “வேண்டாம் விக்ரம். வந்த இடத்தில் எந்தப் பிரச்சனையும் வேணாம். ப்ளீஸ்” என்றாள்.

கலங்கியிருந்த அவளது விழிகளைப் பார்த்தவனுக்குக் கோபம் கட்டுக் கடங்காமல் போனது. அதே கோபத்துடன் காரை எடுத்தான். வைஷாலிக்கு பயமாகிப் போனது.

“விக்ரம்! கொஞ்சம் மெதுவா போங்க” என்றாள் அச்சத்துடன்.

ஆனால், அதைக் காதிலேயே அவன் வாங்கிக் கொள்ளவில்லை. காரை போர்ட்டிக்கோவில் நிறுத்திக் கதவை அறைந்து மூடினான். அவனது வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் பின்னாலேயே ஓட்டமும் நடையுமாக பின்தொடர்ந்தாள் வைஷாலி.

வீட்டிற்குள் வந்த பிறகும் நிலைகொள்ளாஅமல் அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தான். உடை மாற்றிக் கொண்டு வந்த வைஷாலி அவனை அதிசயமாகப் பார்த்தாள். மற்றவர்கள் மூலமாக அவனது கோபத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாளே அன்றி, இதுவரை அதை

நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

அவனை நெருங்கவே அச்சமாகத் தான் இருந்தது. ஆனாலும் இன்னும் எவ்வளவு நேரம் இப்படியே நடந்து கொண்டிருப்பான் என்று நினைத்து அவனருகில் சென்றாள்.

“விக்ரம்! இப்போ என்ன ஆகிடுச்சின்னு இப்படி இருக்கீங்க? அவங்க ஒண்ணும் தப்பா சொல்லலையே. நிஜம் அது தானே. இதை இப்போ யோசிச்சி என்ன பிரயோஜனம்?” என்றாள். அவனைச் சமாதானப்படுத்துவதற்குப் பதிலாக அது அவனது கோபத்தை அதிகப்படுத்தியது.

விக்ரம் அவளை உக்கிரத்துடன் பார்த்தான். “என்ன தெரியும் உனக்கு? என்னைப் பத்தி என்ன தெரியும்? உனக்கே எதுவும் தெரியாத போது யாரோ ஒருத்தருக்கு எப்படித் தெரியும்? நான் ஒண்ணும் பரிதாபப்பட்டோ, இரக்கப்பட்டோ உன்னைக் கல்யாணம் செய்துக்கல.

காதலிச்சேன் மனசார காதலிச்சேன். நான் இன்னொருத்தனை காதலிக்கிறேன்னு, நீ என்னிடம் வந்து சொல்லும் வரைக்கும் இந்த நெஞ்சில, அத்தனை ஆசையையும் வளர்த்துகிட்டேன். நான் காதலிச்சவ எனக்கு இன்னொருத்தனைப் பிடிச்சிருக்கு, நீதான் முன்னால நின்னு கல்யாணத்தை நடத்தி வைக்கணும்னு சொல்லும் போது, என் மனசு என்ன பாடுபட்டிருக்கும்னு தெரியுமா உனக்கு?

காதலிச்ச பொண்ணு கழுத்துல, இன்னொருத்தன் தாலி கட்டுவதைப் பார்க்க முடியாமல் கோழை மாதிரி ஓடிப் போனது தெரியுமா? உன்னை நினைக்கவும் முடியாமல், மறக்கவும் முடியாமல் ஒவ்வொரு நொடியையும், வேதனையோட கழிச்சது தெரியுமா?

எல்லாத்துக்கும் மேல அவளைக் கல்யாணம் செய்துகிட்டவனுக்கு, அவன் மனைவியை நான் காதலிச்சது ஏற்கெனவே தெரியும்னு தெரிய வரும் போது எவ்வளவு அவமானமா இருந்திருக்கும்னு தெரியுமா? உனக்கு எதுவுமே தெரியாது.

இப்போ தெரிஞ்சிகிட்ட இல்ல… என்னோட மனச… அன்னைக்கு என்ன கேட்ட? எனக்கு உன்னோட மனசு தான் முக்கியம்ன்னு நினைச்சது தப்புன்னுதானே. அன்னைக்கு மட்டும் இல்ல, ஆரம்பத்திலிருந்தே உன்னோட சந்தோஷம் தான் என்னோட சந்தோஷம்ன்னு உன்னையே விட்டுக் கொடுத்தவன் நான்.

நீ சொல்வது மாதிரி, உன் அழகுக்கா நான் ஆசைப்பட்டேன்னு இருந்திருந்தா அன்னைக்கே உன்னை எனக்குச் சொந்தமாக்கிக்க எனக்கு எத்தனை நேரமாகியிருக்கும். இல்ல எனக்கு வேற பொண்ணே கிடைக்காமல் போயிருக்குமா?

இப்பவும் சொல்றேன் எனக்கு நீ வேணும். உன் மனசுல எனக்குன்னு ஒரு இடம் வேணும். அதுக்காக இந்த வாழ்க்கை முழுக்கக் காத்திட்டு இருக்கணுமா. நான் தயார். ஏன்னா என் வாழ்க்கையே நீ தான்" என்றவன் விறுவிறுவென வீட்டை விட்டு வெளியேறினான்.

திக்பிரமை பிடித்தவள் போல அமர்ந்திருந்தாள் வைஷாலி. ராகவைப் பற்றி அவனிடம் சொன்னது, அதை வேதவாக்காகக் கொண்டு கல்யாணத்திற்குச் சம்மதம் வாங்கியது. தன்னிடமிருந்து விலகி நின்றது. ஜோதி அவன் யாரையோ காதலிக்கிறான் என்று சொன்ன போது ராகவ் இடை புகுந்தது. விக்ரமிடம் திருமணம் செய்து கொள்ள தான் பேசமாட்டேன் என்றது என இத்தனை நாட்களாக மறந்திருந்த

விஷயங்களெல்லாம் நினைவுக்கு வந்தன.

அப்படியானால் அதற்காகத் தான் அன்று ராகவ், தன்னையும் விக்ரமையும் மாறிமாறிப் பார்த்து ஏதோ சொல்ல முயன்றானா? இத்தனைத் தூரம் நடந்த போதும் அவன் தனக்காக என்னவெல்லாம் செய்தான். இதைத் தான் அன்று சீமா விக்ரமிற்காக என்னிடம் பேசும் போது குறிப்பிட்டாளா?

இப்போதும் உன்னைக் காதலிக்கிறேன். உன் மனம் தான் எனக்கு வேண்டும் என்று பிடிவாதமாக நிற்பவனை என்னவெல்லாம் பேசிவிட்டேன். அவனது உணர்ச்சிகளுடன் விளையாடியது நான். என்னால்தானே அன்று அத்தனைத் தூரம் அவன் தன்னை நெருங்கி வந்தான். அதுவரை வாயளவில் அவன் சீண்டினாலும், தன்னை என்றுமே அவன் எதற்கும் வற்புறுத்தியதில்லையே…

"என்னை மன்னிச்சிடுங்க விக்ரம்! உங்க காதலோட ஆழத்தை நான் நல்லாவே புரிஞ்சிகிட்டேன். வாழ்க்கைக்கு ஆதாரமே ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சி நடந்துக்கறது தான்னு நான் உணர்ந்துட்டேன். நீங்க உங்களை எனக்குப் புரிய வச்சதைப் போல, நானும் என்னை உங்களுக்குப் புரிய வைக்கணும். ப்ளீஸ் விக்ரம்! உங்ககிட்ட பேசணும். எங்கே இருக்கீங்க? திரும்பி வாங்க" என்று வாய்விட்டு புலம்பியவள், அவனது மொபைலுக்கு முயன்றாள்.

ஹால் சோஃபாவிலேயே இருந்தது அவனது மொபைல். இப்போது எங்கே இருப்பான்? துடித்துப் போனாள். மனம் அவனுக்காக பரிதவித்தது. ஒருவேளை அலுவலகத்தில் இருப்பானோ என்ற எண்ணம் தோன்ற, அலுவலகத்திற்கு முயன்றாள்.

மூன்று நான்கு ரிங் போக, மறுபுறம் ரிசீவர் கீழே எடுத்து வைக்கப்பட்டது. அவளுக்கு அழுகை வந்த போதும், அவன் அங்கேதான் இருக்கிறான் என்ற செய்தி நிம்மதியைக் கொடுக்க, அவனிடம் மனம் விட்டுப் பேசவேண்டும் என்ற போதும், இப்போது வேண்டாம் அவன் சற்றுச் சமாதானமாகட்டும். இத்தனை நாள் சேர்த்துவைத்திருந்த பாரத்தையெல்லாம் இறக்கி வைத்திருக்கிறான். தன்னை சற்று ஆசுவாசப்படுத்திக் கொள்ளட்டும்' என்று நினைத்துக் கொண்டாள்.

மனத்தில் உற்சாகம் கரைபுரண்டோடியது. முகத்தைக் கழுவிக்கொண்டு வந்தாள் தூக்கம் வரவில்லை. மனமெல்லாம் அவனது அருகாமையை நாடியது. அதே நேரம் இத்தனை நாட்கள் மறைந்திருந்த அவளது இயல்பான குணம் வெளிப்பட இப்படிச் செய்தால் என்ன என்று நினைத்தவள், அதுதான் சரி என்ற முடிவுடன் எழுந்தாள்.

அத்தியாயம் - 65

அறைக்கதவை சப்தமாக யாரோ தட்டுவது கேட்க, உறக்கம் கலைந்து கண்விழித்தான் விக்ரம்.

'ஓ! நைட் முழுக்க இங்கேயே இருந்துவிட்டோமா? ஷாலுவை தனியா விட்டுட்டு வந்துட்டோமே... அவளோட போன் வந்த போதுகூட பேசாமல் வச்சிட்டோமே... என்னை நினைச்சி தவிச்சிருப்பாளே' என்ற பரிதவிப்புடன், போன் ரீசிவரை சரியாக வைத்துவிட்டு எழ, மீண்டும் கதவு தட்டும் ஓசை கேட்டது.

தொண்டையைச் செருமிக் கொண்டு, “எஸ்” என்றான்.

“சார்! சாய் கொண்டுவரட்டுமா?” - பியூன் கேட்டார்.

முதலாளி அவ்வப்போது இரவு நேரத்தில் வேலை பார்க்க, அலுவலகத்தில் தங்குவது சகஜமென்பதால் எப்போதும் போலச் சாதாரணமாக வந்து கேட்டான்.

“இல்லை நான் வீட்டுக்குக் கிளம்பறேன். அங்கே பார்த்துக்கறேன்” என்றவன் முகத்தைக் கழுவிக்கொண்டு கிளம்பினான்.

அழைப்பு மணியை அடித்தும் யாரும் கதவைத் திறக்கவில்லை. சுனிதா, மனீஷ் இருவரும் நான்கு நாட்கள் விடுமுறையில் சென்றிருந்ததால் வைஷாலியைத் தவிர வீட்டில் யாருமில்லை. ‘அசதியில் தூங்குகிறாளோ!’ என்று நினைத்தபடி, தன்னிடமிருந்த சாவியால் கதவைத் திறந்து உள்ளே சென்றான்.

நேராகத் தங்கள் அறைக்குச் சென்றான். ஆனால் அங்கே வைஷாலி இல்லை. கீழேயும் இல்லை இங்கேயும் இல்லை… எங்கே போயிருப்பாள் என்று யோசித்தவனுக்கு, அன்று வெள்ளிக்கிழமை என்பது நினைவுக்கு வந்தது.

மளமளவெனக் குளித்துவிட்டுக் கீழே வந்தான். அப்போது தான் டைனிங் மீது காசரோலி இருப்பதைப் பார்த்தான். ‘ஓ! டிஃபனையும் செய்துவச்சிட்டுப் போயிருக்காளா?’ என்று புன்னகைத்துக் கொண்டவன், கிரீன் டீ தயாரித்துக் குடித்துவிட்டு, அவளை அழைத்துவர கோயிலுக்குக் கிளம்பினான்.

பயண வழியில் கூட முன்தினம் நடந்த நிகழ்வுதான் அவனது

மனத்தில் உழன்று கொண்டிருந்தது. இப்படித் தான் படாரென அவளைக் காதலித்ததையெல்லாம் போட்டு உடைத்து விட்டோமே… இப்போது அவளது மனநிலை எப்படி இருக்கும். ஏற்கெனவே தனக்குள் புழுங்கிக் கொண்டிருப்பாளை குற்றவாளியாக்கி நிறுத்திவிட்டோமோ' என்று இப்போது அவனுக்குச் சங்கடமாக இருந்தது.

போதாகுறைக்கு இரவெல்லாம் அவளை தவிக்கவிட்டுச் சென்றதை அவள் என்ன நினைத்திருப்பாள். வெகுவாக குழம்பிப் போயிருப்பாள். நான் அவளுடன் இருந்திருக்கவேண்டும். அந்த நேரத்தில் அவளைத் தெளிவுபடுத்தாமல், என்னுடைய வேதனையை நினைத்து நான் விலகியிருக்கக் கூடாது. நான் பெரிய தப்பு பண்ணிட்டேன்.

காலையில் எழுந்து டிஃபனெல்லாம் தயார் செய்து வைத்துவிட்டுக் கோவிலுக்கு வந்திருக்கிறாளென்றால், அவளிடம் தான் சஞ்சலம் கொள்ளும் அளவிற்கு எந்தப் பிரச்சனையும் இல்லை' என்று தனக்குச் சாதகமான பதில் கிடைத்த சந்தோஷத்துடன் பார்க்கிங்கில் காரை நிறுத்திவிட்டு, கோயிலுக்குள் சென்றான்.

வழக்கத்தைவிட அதிகக் கூட்டம் இருந்தது. ஆனாலும், அவனது பார்வை மனைவியைத் தேடி அங்குலம் அங்குலமாக அலசியது. முழுதாக மூன்று முறை கோயிலைச் சுற்றி விட்டான். அவள் கண்களில் படவேயில்லை.

ஒருவேளை நான் இங்கே வந்த நேரம் அவள் வீட்டிற்குச் சென்றிருப்பாளோ என்ற எண்ணம் தோன்ற, அவளது மொபைலுக்கு முயற்சித்தான். ரிங் போய்க் கொண்டே இருந்தது. சலிப்புடன் காரை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு விரைந்தான்.

ஆனால், அவள் வீட்டிலும் இல்லை. ஒருவேளை அவளோட வீட்டுக்குப் போயிருப்பாளோ? என்ற எண்ணம் தோன்றிய அடுத்த நொடியே இருக்காது அப்படி இருந்திருந்தால் நிச்சயம் அத்தை இந்நேரத்திற்கு தெரியப் படுத்தி இருப்பார்களே. ஒருவேளை ராகவ் வீட்டிற்குச் சென்றிருப்பாளோ' என்ற நினைவு வரும் போதே, 'சேச்சே, நிச்சயமா அப்படிச் செய்யமாட்டாள்' என்று நினைத்தாலும் மணிகண்டனுக்கு போன் செய்தான்.

அவர் அவனுடைய நலத்தை விசாரித்ததுடன், வைஷாலியைப் பற்றியும் விசாரிக்க, அங்கேயும் இல்லை' என்ற முடிவுக்கு வந்தவன், குழம்பிப் போனான். முதன்முறையாக விக்ரமிற்கு பயம் வந்தது. நிச்சயம் எந்த விபரீத முடிவிற்குச் சென்றிருக்க மாட்டாள் என்ற நம்பிக்கையிருந்த போதும் எங்கே சென்றிருப்பாள்? என்ற பயம் தொற்றிக் கொண்டது.

அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் சிறிது நேரம் அப்படியே அமர்ந்துவிட்டான்.

'ஷாலு! ப்ளீஸ் என்னிடம் திரும்ப வந்துவிடு. உன்னை இனி எதுவுமே சொல்லமாட்டேன். எதற்குமே வற்புறுத்தமாட்டேன். நீ என் பக்கத்தில் இருந்தால் அதுவே போதும். ப்ளீஸ் ஷாலு!' மனத்திற்குள் அவளது பெயரையே உச்சரித்தபடி அமர்ந்திருந்தான்.

மதிய உணவு வேளை கூடக் கடந்துவிட்டது. பசியுணர்வுகள் கூட மந்தித்துப் போயிருந்தது.

ஒருவேளை அவளது தோழி யார் வீட்டிற்காவது சென்றிருப்பாளா? ஜோதி அவளோட அப்பா கூடத் தான் இருக்கிறாள் அதனால் அங்கு

சென்றிருக்க வாய்ப்பில்லை. கல்லூரித் தோழிகள் யாராவது....? யோசித்தான். ஆனால், திருமணமாகி இத்தனை நாட்களில் யாரிடமும் அவள் போன் செய்ததுமில்லை. அப்படிச் சொன்னதாக அவனுக்கு நினைவுமில்லை.

எதற்கும் விசாரிக்கலாம் என்ற எண்ணத்துடன் அவளது போன் டைரியைத் தேடினான். கப்போர்டில் இல்லை என்றதும் லாக்கரைத் திறந்தவனது கண்களில் நீல நிற ஃபைல் ஒன்று அவனது கவனத்தை ஈர்க்க, எடுத்துப் பிரித்தான். வைஷாலி கவுன்சிலிங் சென்று வந்ததற்கான ரிப்போர்ட் அடங்கிய ஃபைல்.

தாங்கள் மாலத்தீவிலிருந்து திரும்பி வந்த மறுநாள் தேதியும், நேரமும் அதில் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தான். விக்ரமிற்கு வேதனையாக போய்விட்டது. ஃபைலை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு அப்படியே கட்டிலில் அமர்ந்துவிட்டான்.

“ஷாலு!” என்று உணர்ச்சிப் பெருக்கில் உரக்க அழைத்தவனது மனம் பரிதவித்தது.

திடீரென அவனது உள்ளுணர்வு ரத்னகிரிக்குப் போ என்று சொல்ல, முகத்தைக் கழுவிக்கொண்டு வேறு உடைக்கு மாறினான். இனி அவளில்லாமல் இந்த வீட்டிற்குள் நுழைவதில்லை என்ற முடிவுடன், கிளம்பினான்.

அவன் காரை எடுத்த அதேநேரம், அவனது அன்னையிடமிருந்து போன் வர, காரை ஓரமாக நிறுத்தினான்.

“அம்மா!” என்று இயல்பான குரலில் கேட்க முயன்றான்.

“விக்ரம்! வைஷாலி எங்கே?” என்றார் நேரடியாக.

கொஞ்சம் தடுமாறியவன், “ஏம்மா என்ன விஷயம்?” என்றான்.

“உனக்கும் அவளுக்கும் என்ன பிரச்சனை?”

“பிரச்சனையா? அதெல்லாம் ஒண்ணுமில்லையே… உங்ககிட்ட ஏதாவது சொன்னாளா?” ஒருவேளை அவருக்கு அவள் இருக்குமிடம் தெரிந்திருக்குமோ என்ற சந்தேகத்தில் கேட்டான்.

“சமாளிக்காதேடா… எதுவுமே இல்லாம தான் காலங்கார்த்தால அவ இங்கே வந்தாளா?”

“என்னம்மா சொல்றீங்க?” என்றவனுக்கு ஒரு பக்கம் நிம்மதியாகவும், மறுபக்கம் அதிர்ச்சியாகவும் இருந்தது.

“எட்டு மணிக்கு வந்தா. எதுவும் சொல்லலை. எப்பவும் போல பேசினா. சாப்பிட்டா. பத்து மணிக்கா ரூமுக்குப் போய்க் கதவை மூடினவ தான். சாப்பிடவும் வரல. கேட்டாலும் பசிக்கலைன்னு ரூமுக்குள்ளேயே உட்கார்ந்திருக்கா. நீ அவளை என்ன சொன்ன?”

அவள் அங்கிருக்கிறாள் என்றது தெரிந்ததும் சற்று இலகுவானவன், “என்னையே எல்லோரும் டார்கெட் பண்ணுவீங்களா? நான் இப்போ அங்கே வரத் தான் கிளம்பினேன். சீக்கிரம் வந்திடுறேன்” என்று போனை அணைத்தான்.

மின்னல் வேகத்தில் காரைச் செலுத்தினான். வேகமாகவே சென்ற

போதும் கடக்க அதிக தொலைவு இருப்பதைப் போலத் தோன்றியது.

கலைந்த தலையும், சோர்ந்த முகமுமாக வீட்டிற்குள் நுழைந்தவனைக் கண்ட பெரியவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மகன் வந்ததும் நன்றாக கேட்கவேண்டுமென நினைத்திருந்த செந்தளிர், அவனது கோலத்தைக் கண்டு வாயடைத்துப் போனார்.

“விக்ரம்! என்னடா கோலமிது?”

“ஒண்ணுமில்லம்மா” என்று சமாளித்தவன், “எங்கே அவ? மாடியிலிருக்காளா?” என்று அடக்கப்பட்ட கோபத்துடன் கேட்டவன், வேகமாக தனது அறைக்குச் சென்றான்.

பெரிய கண்ணாடிக் கதவிற்கு அப்பால் நின்று ஆர்ப்பரிக்கும் கடலை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கோபமாக உள்ளே வந்தவன் அவளைக் கண்டதும் சில நொடிகள் அவளையே பார்த்தான்.

எல்லாம் சில நொடிகளுக்குத் தான். தன்னை எப்படி ஆட்டிவைத்து விட்டாள் என்ற எண்ணம் எழ, ‘தான் இத்தனைத் தூரம் அல்லல் பட்டு வந்திருக்க, இது எதையும் அறியாதவளாக வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிறாளே’ என்ற ஆத்திரத்துடன் அவளை நோக்கிச் சென்றான்.

தனது நீண்ட கால்களால் அறையைக் கடந்து அவளருகில் சென்றவன் அவளது தோளைப் பற்றி தன்பக்கமாகத் திருப்பினான்.

அவனது எதிர்பாராத செயலில் தடுமாறியவள், கண்களில் கனன்ற

கோபத்துடன் நின்றிருந்தவனைக் கண்டு லேசாகத் திடுக்கிட்ட போதும், ஒன்றும் அறியாதவள் போல, அவனை வெறித்துப் பார்த்தாள்.

“அறிவிருக்காடி உனக்கு? உன்னைக் காணோமேன்னு காலைல இருந்து பைத்தியக்காரன் மாதிரி சுத்திட்டு இருக்தேன். இங்கே வர்றவ சொல்லிட்டு வரவேண்டியது தானே. அட்லீஸ்ட் எழுதி வச்சிட்டாவது வந்திருக்கலாமில்ல. உனக்கு என்ன ஆச்சோ ஏதாச்சோன்னு துடிச்சது எனக்குத் தாண்டி தெரியும். ராட்சசி!” - அவனது உள்ளத்துக் கோபமெல்லாம் வார்த்தைகளாக தெறித்தது.

இமைக்காமல் அவனது முகத்தைப் பார்த்தாள். அவனது ஆவேசட்தையும், கனல் தெறித்த விழிகளையும், அமர்த்தலான பார்வையில் அலட்சியப்படுத்திவிட்டு அறைக்குள் சென்றாள்.

“ஏய் நில்லு! இங்க ஒருத்தன் கேட்டுட்டு இருக்கேன். அதுக்கு பதில் சொல்லாமல் யாரை அலட்சியம் பண்ற?” என்று எரிந்து விழுந்தான்.

நிதானமாக திரும்பிப் பார்த்தவள், “எதுக்கு இப்படி காட்டுக்கத்தலா கத்தறீங்க? ஏன் நான் இங்கே வரக்கூடாதா?” என்றாள்.

“இங்கே பார், பேச்சை மாத்தாதே. வரக்கூடாதுன்னு எப்போ சொன்னேன்? வர்றதுக்கு முன்னால என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டு வந்திருந்தா காலைலயிருந்து உன்னைத் தேடி அலைஞ்சிருக்க மாட்டேன் இல்ல.”

“அதுக்காகத் தான் சொல்லல.”

“என்னது?”

“ஆமாம். நல்லா அவஸ்தைபட்டு அலையட்டுனு தான் சொல்லலை” என்றாள் அழுத்தமாக.

“எவ்வளவு தைரியம் உனக்கு… என்கிட்டயே இதைச் சொல்ற?” என்று பல்லைக் கடித்தான்.

அதேநேரம் கதவு தட்டும் ஓசை கேட்டுத் திறந்தாள்.

“சாரி, ரெண்டு பேருக்கும் டி◌ஃபன் கொண்டு வந்திருக்கேன். எதுவா இருந்தாலும் சாப்டுட்டு பேசுங்க” என்று ட்ரேயை வைஷாலியிடம் கொடுத்துவிட்டுச் சென்றாள் சீமா.

விக்ரம் நின்று பார்த்துக் கொண்டிருக்க, வைஷாலி டீபாய் மீது தட்டை வைத்துவிட்டு, “முதல்ல சாப்பிடுங்க. அப்புறம் பேசலாம்” என்றாள் பொறுமையாக.

“ஆமா, இப்போ அது தான் முக்கியம். விளையாடுறியா நீ?” என்று சிடுசிடுத்தான்.

”எல்லாம்… அவங்க அவங்களுக்குன்னு வந்தாதான் தெரியும்” என்று முணுமுணுத்தாள்.

அவன் திரும்பி அவளைப் பார்க்க, அதைச் சற்றும் எதிர்பாராதவள், இதழ்களில் மலர்ந்த புன்னகையை மறைக்க, சட்டென அவனுக்கு எதிர்புறமாக திரும்பி நின்றுகொண்டாள்.

ஆனால், அவளது அத்தனைச் செய்கைகளையும், எதிரிலிருந்த நிலைக்

கண்ணாடி பிரதிபலிக்க, அதை வெறித்துப் பார்த்தான் விக்ரம்.

“ஷ்...ஷாலு...!” காதல் உணர்வுகள் அத்தனையையும் வார்த்தைகளில் கலந்து மென்மையாக, குழைந்த குரலில் அழைத்தான்.

அவனது குரலிலிருந்த காதலை உணர்ந்து கொண்டவளாக முகத்தை உயர்த்தியவள், கண்ணாடியில் தன் பின்னே வந்து நின்றவனை விழியகலாமல் பார்த்தாள்.

தன்னைச் சுற்றித் தானே பின்னிக்கொண்டிருந்த அத்தனை மாய உணர்வுகளையும் அறுத்தெறிந்தவள், “ஐ லவ் யூ விக்ரம்! ஐ லவ் யூ” என்று அவன் முகமெங்கும் முத்தமிட்டவள், அணைத்தபடி அவன் நெஞ்சில் சாய்ந்து கதறினாள்.

அத்தியாயம் - 66

“உனக்கு ஞாபகம் இருக்கோ இல்லையோ? எனக்கு நல்லா நினைவிருக்கு. நீ முதன்முதல்ல என்னைப் பார்க்க ஆஃபிஸ் வந்த. அதுவரைக்கும் என்கிட்ட கண்ணுல போலி மயக்கத்தோட குழைந்து பேசின பெண்களைத் தான் அதிக அளவில் பார்த்திருந்தேன். எடுத்தவுடனேயே, நான் யாருன்னு தெரிந்தும் கோபமா பேசின நீ, எனக்கு வித்தியாசமா தெரிஞ்ச.

யாருக்குமே கட்டுப்பட்டாத நான், உன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டேன். நான் வரவேண்டிய அவசியம் இல்லாத போதும் உன்னைப் பார்க்கவே அடிக்கடி காலேஜுக்கு வந்தேன். எல்லாப் பிரச்சனைகளும் முடிஞ்சதும், உன்னை எப்படி பார்க்கறதுன்னு நினைச்சிட்டு இருந்தப்போதான் நீ உன் ஃப்ரெண்ட்ஸ் கூடச் சேர்ந்து வர்றேன்னு சொன்னதும் சந்தோஷமா சம்மதிச்சேன்.

உன்கூட அரை நாள் ஸ்பெண்ட் பண்ணனும்னு தான் ட்ரீட் என்ற பேர்ல உன்னைக் கூட்டிட்டுப் போனேன். உனக்காக தேடித் தேடி கிஃப்ட் வாங்கினேன். அப்போல்லாம் கூட உன்னைக் காதலிக்கிறேன்னு நினைக்கல. ஆனா, உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு, அப்படிங்கற நிலைல தான் இருந்தேன்.

என்னையே எனக்குப் புரிய வச்சது அந்த ஆக்ஸிடெண்ட் தான். நமக்குப் பிடிச்சவங்களுக்கு ஏதாவதுன்னா நமக்கு எவ்வளவு வலிக்கும்னு அன்னைக்குப் புரிஞ்சிகிட்டேன். அதுக்குப் பிறகு ஃபாரின் ட்ரிப் உன்னோட எக்ஸாம்ஸ்ன்னு நாள் ஓடினாலும், உன்னை நான் மறக்கவேயில்ல.

ரத்னகிரி வந்து உனக்குப் போன் பண்ணலாம்னு இருந்தேன். ஆனால் ரோஹித் நிச்சயதார்த்தத்தில் சந்திச்சது எனக்கே சர்ப்ரைஸ் தான். அத்தையும், அம்மாவும் ஒரு வகையில் சொந்தம்னு தெரிஞ்ச போது எல்லாமே தானா அமைந்து வருதுன்னு சந்தோஷப்பட்டேன்.

ஆனா, நான் ஆசையோடு என் மனசுல கட்டின காதல் கோட்டை இடிஞ்சி… என்னால…” மேலே பேச முடியாமல் அமைதியாக, கண்களை அழுந்த மூடினான்.

அவனது உணர்வுகளைத் துல்லியமாக உணர்ந்தவளுக்கு தாள முடியவில்லை. “சாரி விக்ரம்… வெரி சாரி” என்று அவனது முகத்தை தனது வயிற்றோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

“நான் எதையுமே ப்ளான் பண்ணி செய்யல. நான் உங்களை ஏமாத்தணும்னு நினைக்கவேயில்ல. ஒரு நல்ல ஃப்ரெண்டா நினைச்சிதான் உங்களோட பழகினேன். ஆனால், என்னோட லிமிட்டைத் தாண்டி நான் பழகினது தான் உங்களை இப்படி நினைக்க வச்சிருக்கு. என்னை மன்னிச்சிடுங்க. என் மனதறிஞ்சி இதைச் செய்யல” என்று கண்ணீர் சிந்தினாள்.

“இதில் யாரையும் தப்பு சொல்ல முடியாது. எல்லாம் விதின்னு நினைச்சிக்க வேண்டியது தான்” என்றான்.

“ம், வேற என்ன சொல்றது” என்று பெருமூச்சு விட்டாள்.

சிறிது நேரம் அமைதியிலேயே கழிய, “உங்க காதலை நீங்க சொல்லிட்டீங்க. எனக்கு எப்போ உங்க மேல காதல் வந்துதுன்னு கேட்க மாட்டீங்களா?” மெல்லிய குரலில், நாணத்துடன் கேட்டாள்.

“ஷாலு! நீ என்னை லவ் பண்றியா என்ன?” என்று வியப்புடன் கேட்டான்.

அவ்வளவுதான் அவளுக்கு வந்ததே கோபம், “உங்களை என்று அருகிலிருந்த தலையணையை எடுத்து அவன் முதுகிலேயே நாலு போட்டாள்.

“ஏய்! தாலி கட்டின இந்த அப்பாவியை அடிக்காதடீ ராட்சஷி” என்று

கத்தினான்.

“நான் ராட்சஷி தானே அப்படித் தான் அடிப்பேன்” என்று இன்னும் இரண்டு போட்டவள், தலையணையைத் தூக்கியெறிந்தவள், “அப்பாவியா நீங்க...” என்றாள் கடுப்புடன். “நீ எக்கேடாவது கெட்டுப் போன்னு விட்டுட்டுப் போன நல்லவர் தானே நீங்க” என்றாள்.

கட்டிலில் கவிழ்ந்து படுத்துச் சிரித்துக் கொண்டிருந்தவன், அவளை வாத்சல்யத்துடன் பார்த்தான்.

“சாரிடா ஷாலு! தப்பு தான். வேணுமா தோப்புக்கரணம் போடட்டுமா... எண்ணிக்கோ” என்றவன் காதைப் பிடித்துக் கொள்ள, அவள் அவனது கரத்தைப் பிடித்தாள்.

“ஒண்ணும் வேணாம்” என்றாள்.

புன்னகையுடன் அவளை அணைத்துக் கொண்டவன், “இப்போ சொல்லு...” என்றான்.

அதுவரை ஒளிந்திருந்த வெட்கம் மீண்டும் தலைகாட்ட, மெல்லிய குரலில், “போன வருஷம் கர்வா சௌத் அன்னைக்குத் தான்னு ஆரம்பிச்சுதுன்னு நினைக்கிறேன்” என்றாள்.

“ஹே! அதை இன்னும் நினைவு வச்சிருக்கியா?” என்றான் ஆச்சரியத்துடன்.

“எப்படி மறக்கமுடியும்?” என்றவள் அந்த நாளை நினைவில் கொணர்ந்தாள். அங்கேதான் ஆரம்பிச்சிருக்கு, அப்புறம் அந்த அக்ஷய்...

அன்னைக்கு நான் உங்களுக்குத் தானே போன் பண்ணேன். அப்பா ஊர்ல இல்லாததால் உங்களைக் கூப்பிட்டேன்னு சமாதானம் சொல்லிகிட்டாலும், அப்பா இருந்திருந்தாலும், உங்களைத் தான் கூப்பிட்டிருப்பேன்னு அப்புறம் புரிஞ்சிகிட்டேன்.

எனக்கு ஒரு பாதுகாப்பு வேணும்னு தான் கல்யாணத்துக்கு சம்மதிச்சேன். ஆனாலும் வேற யாராவதா இருந்திருந்தா நிச்சயம் சம்மதிச்சிருக்க மாட்டேன். கூடவே ரெண்டு வருஷம் ராகவை காதலிச்சிருக்கேன். கல்யாணம் செய்து மூணு மாசம் அவரோட சந்தோஷமா வாழ்ந்திருக்கேன். அப்படியிருக்க, இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிச்சா… அவரைக் காதலிச்சது பொய்ன்னு ஆகிசாதுன்னு என்னையே கேட்டுப்பேன்.

கல்யாணமும் நடந்துச்சு. ஆரம்பத்தில் உங்ககிட்ட நெருங்க எனக்குப் பயம் தான். ஆனா, சீமா அக்காகிட்ட பேசினதுல எனக்கு சில விஷயங்கள் தெளிவாச்சு. உங்ககிட்ட சகஜமா இருக்க நினைச்சேன். ஆனால், உங்களை விரும்பறேன்னு அப்போ தான் புரிஞ்சிகிட்டேன்.

ராகவோட வாழ்ந்தது கடந்த காலம், இப்போ இருப்பது தான் நிஜம்னு புரிஞ்சிகிட்டேன். அடிக்கடி உங்களை காதலிக்கிறேன்னு மனசுக்குள்ள சொல்லிக்குவேன். ஆனா, நீங்க என்கிட்ட நெருங்கி வரும் போதெல்லாம்… என்னை மீறி நடந்தது தான். என்னால…” என்றவள் குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

“ஷாலு! போதும்டா. உன்னை எனக்கு நல்லாவே புரியுது. அன்னைக்கு நீ விலகினதுமே நான் புரிஞ்சிகிட்டேன். ஆனா நீ நான் விலகின பின்னால பேசின பேச்சைத்தான் தாங்கிக்க முடியாமல் அப்படி நடந்துகிட்டேன். நைட்டெல்லாம் யோசிச்சேன்.

எனக்கு நீ முக்கியம். உன் நிம்மதி முக்கியம் அதுக்குத் தான் அவசர அவசரமா ஊருக்குத் திரும்பி வந்தேன். அந்த நேரத்தில் நான் உன்கிட்ட அனுசரணையா நடந்துகிட்டா நீ துடிச்சிப் போவ. ஒரு முடிவுக்கு வரமுடியாம உன்னையே குற்றவாளியா நினைச்சி தவிப்ப. அதனால் தான் அந்தத் தவிப்புக்குப் பதில் இந்தத் தற்காலிக பிரிவு தரும் வலி குறைவுதான்னு தோணுச்சி" என்றான் விளக்கமாக.

கண்ணீருடன் அவன் கன்னத்தில் முத்தமிட, அவன் ஆறுதலாக புன்னகைத்தான்.

"நான் சீக்கிரமே மாறிடுவேன் விக்ரம். அதுக்காக தான் நான்..." என்றவளை இடைமறித்து, "கவுன்சிலிங் போற..." என்றான்.

திகைப்புடன், "உங்களுக்கு எப்படித் தெரியும்...?" என்றாள்.

"இன்னைக்கு தான் தெரியும். அப்படியே நீ என்னை எந்த அளவுக்கு நேசிக்கிறங்கறதையும் இன்னைக்கு புரிஞ்சிகிட்டேன். நமக்கான நேரம் நிறைய இருக்கு. அதுவரைக்கும் நல்ல காதலர்களா இருப்போமே. தாம்பத்தியம்ங்கறது ரெண்டு பேரோட வாழ்க்கையை ஆரம்பத்தில் இணைக்கும் ஒரு பாலம் தானே தவிர, காலம் முழுக்கக் கூட வரப்போறது ஆத்மார்த்தமான அன்பும், புரிதலும் தான்" என்றான்.

தனக்கு இப்படியொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுத்த கடவுளுக்கு மனதார நன்றி சொன்னாள் வைஷாலி.

****

“அத்தை! இன்னும் இந்த நிலாவை காணோமே… மழை வர்றா மாதிரி வேற இருக்கு” என்று அழாத குறையாக பேசினாள் சீமா.

“அக்கா! நிலா வரலைனா நிலா நிலா ஓடிவான்னும், மழை வரக்கூடாதுன்னா ரெயின் ரெயின் கோ அவேன்னும் பாடுங்க” என்று அவளது காலை வாரினாள் வைஷாலி.

“சொல்றாதை நல்லா தெளிவா சொல்லு சீமா… மாத்தி பாடிட்ட, நிலா ஓடிப் போயிடும், மழை ஜோன்னு வந்திடும்” என்று இன்னும் கொஞ்சம் ஸ்ருதியைக் கூட்டிவிட்டான் விக்ரம்.

வைஷாலி, சிரிப்புடன் அவனுக்கு ஹைஃபை கொடுக்க, சீமா கடுகடுவெனப் பார்த்தாள்.

“நேரம்டா எல்லாம். டாம் அண்ட் ஜெர்ரி மாதிரி இருந்தவங்க இப்போ சேர்ந்துட்டீங்கங்கற கொழுப்பு” என்றாள்.

பெரியவர்கள் அனைவரும் சிரிப்புடன் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். சிரிப்பும் பேச்சுமாக நேரம் சென்றுகொண்டிருக்க, தேவிகா, “அண்ணி நிலா வந்திடுச்சி” என்று குரல் கொடுக்க, அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து குளத்தில் தெர்ரிந்த நிலவிற்கு ஆர்த்தி எடுத்தனர்.

நிலவைப் பார்த்துவிட்டு, கையிலிருந்த ஜல்லடை வழியாகக் கணவனின் முகத்தைப் பார்த்தாள் வைஷாலி. காலில் விழுந்து வணங்கி எழ, பூஜை தட்டிலிருந்த பிரசாதத்தை அவளுக்குக் கொடுத்துவிட்டு, கங்கைத் தண்ணீரை அவளுக்குப் புகட்டினான்.

காதலுடன் அவன் அவளைப் பார்க்க, அவளது இமைகள் வெட்கத்துடன் நிலம் பார்த்தது. சுற்றிலும் ஒரு முறை பார்வையை ஓடவிட்டவன், அவள் பின்னால் வந்து நின்றான்.

“ஷாலு! அன்னைக்கு உனக்கு ஒரு ஆப்ஷன் சொன்னேன் ஞாபகமிருக்கா?”

‘என்ன ஆப்ஷன்?’ என்பது போல அவனைப் பார்த்தாள்.

“எனக்கு ட்வின்ஸ் போதும் உனக்கு” என்று கேட்க, அவனுக்குப் பின்னாலிருந்து எங்களுக்கும் ட்வின்ஸ் போதும் என்று கோரஸாக குரல் கேட்க, திகைப்புடன் இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

மொத்தக் குடும்பமும் அவர்களைப் பார்த்துச் சிரித்தபடி நின்றிருந்தனர்.

விக்ரம் சிரிப்புடன் பின்னந்தலையை தடவிக் கொண்டே வைஷாலியைப் பார்க்க, அவள் நாணத்துடன் அவனது தோளில் சாய்ந்தாள்.